ந சுப்பு ரெட்டியார் 100


Centenary Committee Publications

FACE IS A FOUR LETTER WORD,
BUT PREFACE IS A FOREWORD LETTER.

பேராசிரியரின் நூல்களிலுள்ள

அணிந்துரைகள்

தொகுப்பு



பேராசிரியரின் நூல்களிலுள்ள

அணிந்துரைகள் தொகுப்பு

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

இத்தொகுப்பில் போராசிரியர் முனைவர் ந.சுப்பு ரெட்டியார் அவர்களின் 74 சிறந்த நூல்களின் அணிந்துரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. ரெட்டியாரின் படைப்புகளுக்கு புகழ்பெற்ற அறிஞர்கள், கல்வியாளர்கள், சான்றோர்கள் வழங்கிய அணிந்துரைகள் ஈண்டு இடம்பெற்றுள்ளன. இந்த அணிந்துரைகள் தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம் பெற தக்கவை. இதன் வழி பேராசிரியரின் நட்பும், தொடர்பும், அறிவுலக ஏற்பும் இளைய தலைமுறைக்குத் தெரியவரும்.

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

ISBN: 978-81-939835-1-5

eBOOK ~ மின் நூல்

பேராசிரியரின் நூல்களிலுள்ள

அணிந்துரைகள்

தொகுப்பு

தொகுப்பு:

நூற்றாண்டுக் குழு

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

பேராசிரியரின் நூல்களிலுள்ள

அணிந்துரைகள்

தொகுப்பு

முதல் பதிப்பு - பிப்ரவரி 2020

Price: Rs.875.oo

Published by:

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040

ISBN 978-81-939835-1-5

9 788193 983515

Wrapper design: **Centenary Committee**
Printed at: DJ Prints, Chennai – 600 095

அன்புப்படையல்



முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

(24.09.1928 – 06.04.2019)

[பேராசிரியரின் மாணாக்கர்]

பதிப்புரை

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார் அவர்கள் எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று, ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர். திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர். பல பல்கலைக்கழகங்களில் சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி, நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர். பல ஆய்வாளர்களை உருவாக்கியவர். வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர். 136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016) 108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும் மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது. பேராசிரியரின் நூற்றாண்டில் (2015~2016) நூற்றாண்டுக்குழு தமிழகமெங்கும் நடத்திய 108 நிகழ்வுகள் அகில இந்திய சாதனையாக அங்கீகரிக்கப் பெற்றுள்ளன. நூற்றாண்டில் பேராசிரியரின் தமிழ்த்திறத்தையும், அறிவுநுட்பத்தையும் வெளிக்கொணரும் பொருட்டு பன்னிரெண்டு நூட்கள் வெளியிட்டப்பெற்றன. அவரது 100 நூல்கள், இந்திய அரசு நல்கிய ISBN எண்களுடன், மின் நூல்களாக மாற்றப்பெற்று http://tinyurla.com/y7n2z8pe என்ற இணைதளத்தில் அனைவரும் பதிவிறக்கம் செய்யும் வகையில் அமைக்கப்பெற்றுள்ளன.

பேராசிரியரின் படைப்பான "*கவிஞர் வாலியின் இராமாநுஜ காவியம் ~ ஒரு மதிப்பீடு*" எனும் நூலை பேராசிரியரின் நூற்றாண்டிற்குப் பின்பும் (102வது), இராமாநுஜரின் ஆயிரமாண்டிற்குப் பின்பும் (1002வது), நூற்றாண்டுக்குழு 2018ல் வெளியிட்டது.

பேராசிரியரின் நூட்களை அடித்தளமாக்கொண்டு சுமார் 15 முதுகலைப்பட்ட மாணாக்கர்கள், ஆய்வியல் நிறைஞர்கள் மற்றும் முனைவர் பட்ட ஆய்வாளர்கள் பல்வேறு பல்கலைக் கழகங்களில் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாய்வாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில், ந சுப்பு ரெட்டியார் 100 கல்வி அறக்கட்டளை NSR100 Kamatchi Ammal Fellowship மற்றும் NSR100 Research Fellowship வழங்கி வருகின்றது.

பேராசிரியர் ந சுப்பு ரெட்டியார் அவர்களின் அனைத்து நூல்களுக்கும் பல அறிஞர் பெருமக்கள் ~ பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள், நீதியரசர்கள், தமிழ்ச் சான் றோர், ஆளுநர்கள், அமைச்சர் பெருமக்கள், கல்வித்துறை சான்றோர்கள், மற்றும் பிற பல, பிரபல பேரறிஞர்கள் ~ அணிந்துரை வழங்கிச் சிறப்பித்துள்ளனர். அனைத்து அணிந்துரைகளும், அன்னாரது நூல்களின் திறம், உரம், ஆழம், வீச்சு, ஆராய்ச்சித்திறன், நுண்ணிய இலக்கியத் திறனாய்வு மற்றும் பல சிறப்பியல்புகளை கோடிட்டு, குறியிட்டு பாராட்டுகின்றன, பறைசாற்றுகின்றன. மேலும் இவ்வணிந்துரைகள், அன்னாரது நூல்களின் தனிச் சிறப்புகளை ~ இனிமை, எளிமை, தெளிவு ~ தெள்ளதின் காட்டி படிப்போரை அக மகிழ்விக்கின்றன.

இளைய தலைமுறையினர், ஆய்வு மாணாக்கர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் பயன் பெறும் பொருட்டு, இவ்வணிந்துரைகளில் தெரிவுசெய்யப் பெற்ற சில இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

நூற்றாண்டுக்குழு

அணிந்துரை

"தேருக்கு செய்த அலங்காரம்"

பேராசிரியர் முனைவர் ந சுப்புரெட்டியார் எழுதிய 136 நூற்களில் 74 நூற்களை தேர்ந்தெடுத்து அவைகளுக்கு தமிழறிஞர்கள், கல்வியாளர்கள், சமூகசிந்தனையாளர்கள் அளித்த அணிந்துரைகளைத் தொகுத்து ஒரே நூலாகப் பார்க்கும்போது அவரது சிந்தனை வெளியையும், கருத்துக்குவையையும், நூலறிவையும் நாம் அறிவதற்கு, குறிப்பாக இளைய தலைமுறையினர் அறிவதற்கு வழிவகுத்துள்ளது எனலாம். தொல்காப்பியம் முதல் வாலியின் இராமாநுஜ காவியம் வரை பேராசிரியரின் அறிவுப் பயணம் நூற்களாக வெளிப்பட்டது போலவே அணிந்துரை வழங்கியவர்களால் "தேருக்கு செய்த அலங்காரம்" போல மெருகூட்டி உள்ளன.

அடிப்படையில் ஒரு கல்வியாளரான பேராசிரியர் முனைவர் ந சுப்புரெட்டியார் அவர்கள் பள்ளி ஆசிரியராகத் தனது பணியைத் தொடங்கி பேராசிரியர் வரை உயர்வுகளைக் கண்டவர். திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் அதாவது தமிழ்நாட்டுக்கு அப்பால் இன்னொரு மாநிலத்தில் அமைந்த பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை உருவாக்கி அதன் துறைத்தலைவராகப் பொறுப்பு வகித்தவர். பல பல்கலைக்கழகங்களிலும் இதுபோல சிறப்புநிலைப் பேராசிரியராகப் பணிபுரிந்திருக்கிறார்.

இத்தொகுப்பில் கல்விகுறித்து அவர் எழுதிய கல்வி உளவியல், கல்வி உளவியல் கோட்பாடுகள் என்ற நூற்களுடன் தமிழ்க்கல்வி குறித்துப் பேசும் தமிழ்பயிற்றும் முறை என்ற நூலுக்குமான அணிந்துரைகள் இடம் பெற்றுள்ளன. இவை குறித்து அறிஞர்கள் எழுதிய கருத்துக்கள் முனைவர் ந சுப்புரெட்டியாரின் ஆளுமையை மதிப்பிட போதுமானவையாகும். "தமிழ் பயிற்றும் முறை" நூலுக்கு அணிந்துரை எழுதிய முன்னாள் கல்வியமைச்சர் அவினாசிலிங்கம் அவர்கள், தாய்மொழிப்பயிற்சியை மட்டுமல்லாது அத்துடன் இருக்க வேண்டிய நவீனமுறைகள் பற்றிய புறசெய்திகளும் இந்தநூலில் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்கிறார். தமிழை நவீனமாக்கும் சிந்தனை தமிழ்ப்பேராசிரியர்களில் வெகுசிலருக்கே வாய்த்திருக்கிறது. பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்களில் மூத்தவர். "கல்வி உளவியல்" நூலின் அணிந்துரையிலும் ஜி.ஆர்.தாமோதரன் அவர்கள் இதையே தெரிவிக்கிறார். தற்காலக்கல்வியியல் கொள்கைக்கும், நம்முடைய இலக்கியங்களிலிருந்து புலனாகும் பழங்காலக்கொள்கைகளுக்கும் ஒற்றுமை காணும் திறத்தில் சுப்புரெட்டியாரின் உளவியல் நுட்பம் புலனாகிறது என்று அவர் தெரிவிக்கிறார்.

எத்தனைதான் நவீன கோட்பாடுகளை மேலைநாட்டு மரபிலிருந்து அறிமுகம் செய்தாலும் அவற்றை தமிழ்மனம் சார்ந்து உள்வாங்கி வெளிப்படுத்துவதில்தான் நல்ல கல்வியாளரின் திறமை அடங்கி இருக்கிறது. பேராசிரியரின் "கல்வி உளவியல் கோட்பாடுகள்" அணிந்துரையில் கே.ஆர்.மாணிக்கம் அவர்கள், நூலில் கம்பராமாயணம், திருமந்திரம், திருவருட்பா, திருக்குறள், பாரதியார் கவிதைகளை மேற்கோள் காட்டுவதிலிருந்து தமிழில் உளவியல் கற்போருக்குத் தெளிவாகப் புரியவைக்கும் தன்மை அமைந்துள்ளது என்கிறார். மேற்கூறியவற்றிலிருந்து தமிழ்மரபை உள்வாங்கி வெளிப்படுத்தும் ஆற்றல் பேராசிரியர் ந சுப்புரெட்டியாரின் இயல்பாக அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அடுத்ததாக பேராசிரியர் எழுதிய ஆராய்ச்சி நூற்களுக்கான அணிந்துரைகள் பற்றிக் கூறலாம். இத்தொகுப்பில் கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி, குயில்பாட்டு - ஒரு மதிப்பீடு, கண்ணன் பாட்டுத்திறன், தமிழ் இலக்கியங்களில் அறம் - நீதி - முறைமை, புதுமை (மை)க் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் - ஒரு கண்ணோட்டம், இலக்கிய வகையின் வளர்ச்சியும், இக்கால இலக்கியங்களும், கவிஞர் வாலியின் இராமாநுஜ காவியம் என்ற நூற்களுக்கு முறையே வி.ஆர்.எம். செட்டியார், இரா.கு.நாகு, கா.மீனாட்சி சுந்தரம், நீதிபதி எஸ்.நடராஜன், முனைவர் ந.கடிகாசலம், இரா.காந்தி, முனைவர் இரா.காமராசு ஆகியோர் அணிந்துரை வழங்கியுள்ளனர். பேராசிரியரின் ஆங்கில நூலான Religion and Philosophy of Nalayiram with reference to Nammalvar என்பதற்கு முனைவர் அனந்தசயனம் அய்யங்கார் ஆங்கிலத்தில் எழுதிய அணிந்துரையையும் இதனுடன் சேர்த்துக்காணலாம். கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சியில், "கடைத்திறப்பின் உட்பொருள்" என்ற தலைப்பில் பேராசிரியர் காட்டியிருக்கும் கருத்தும், குயில்பாட்டு குறித்த நூலில் குயிலை சீவாத்மாவாகவும், பாரதியாரைப் பரமாத்வாகவும் கூறும் இடமும் இவரது ஆராய்ச்சி நோக்குக் கிடைத்த சான்றிதழ்களாகும்.

பேராசிரியர் எழுதிய "கவிஞர் வாலியின் இராமாநுஜ காவியம்" நூலுக்கு தமிழ்ப்பல்கலைக்கழகப் பேராசிரியர் இரா காமராசு அணிந்துரை எழுதும்போது, "ந சுப்பு ரெட்டியார் பாரதி, பாரதிதாசன், கவிமணி போன்ற தமிழின் ஆசுகவிகளின் அகம் தொட்டு அவர்களின் கவியாற்றலை மக்களுக்கு உணர்த்தியவர். அந்த வரிசையில் அவரின் இறுதிக்காலப் படையல் வாலியின் இராமாநுஜ காவியம் குறித்த மதிப்பீடு" என்கிறார். கவிஞர்களின் கவியாற்றல் குறித்துப் பேராசிரியர் எழுதிய நூல்களுக்கான அணிந்துரைகளும் இத்தொகுப்பில்இடம்பெற்றுள்ளன.

காலமும் கவிஞர்களும், பாட்டுத்திறன், கவிமணியின் தமிழ்ப்பணி, கவிஞன் உள்ளம், கம்பனில் மக்கள் குரல், பாவேந்தரின் பாட்டுத்திறன், பாண்டியன் பரிசு மதிப்பீடு என்ற நூற்களுக்கு முறையே ப.துரைக்கண்ணு முதலியார், க.ப.அறவாணன், இராதா

செல்லப்பன், பி.ஸ்ரீ. ஆசார்யா, சு.இரத்தினவேல் பாண்டியன், மு.கருணாநிதி, பேராசிரியர் க.அன்பழகன் ஆகியோரின் முன்னுரைகள் இடம் பெற்றுள்ளன. இத்துடன் வாழும் கவிஞர்கள் என்ற நூலுக்குப் பொன்னம்பல அடிகளார் எழுதிய அணிந்துரையையும் சேர்த்துக்காணலாம்.

பேராசிரியர் கம்பராமாயணத்தை வாசிக்கும் அரசியல் அதில் ஒலிக்கும் மக்கள் குரலை வெளிப்படுத்துவதுதான் என்பதை அறியலாம். இந்நூலுக்கான அணிந்துரையில் நீதிபதி சு.இரத்தினவேல் பாண்டியன் கூறும்போது, புறநானூற்றுக்காலம் முதல் நடைபெற்று வந்த கோனாட்சி முறைமாறிக் கம்பன் காலத்தில் (பத்தாம் நூற்றாண்டு) குடியாட்சி முறைக்கு வித்திட்ட நயத்தைச் சுட்டுகின்றார் என்கிறார். பாவேந்தரின் பாட்டுத்திறன் நூலுக்கான அணிந்துரையில் மு.கருணாநிதி அவர்கள், பாரதிதாசன் பாடல்கள் பலவற்றில் காணப்படும் சிந்தனைத் திறன்களைத் தொகுத்துரைக்கும் பேராசிரியர் சுப்புரெட்டியாரின் முயற்சி போற்றுதலுக்குரியதாகும் எனப்பாராட்டுகிறார்.

பேராசிரியர் க.அன்பழகன் பாண்டியன் பரிசு நூலுக்கு எழுதும் அணிந்துரையில், நூலாசிரியர் பேராசிரியர் ந சுப்புரெட்டியார் பரந்த நோக்குடையவர். அவரது மதப்பற்று அகவுணர்வாக அமைவது அன்றி புறப்பொருளாக அமைவதில்லை என்பதை அறிந்தவன் நான் என்று குறிப்பிடுகிறார். இந்த நூலில் அவர்குறித்த அணிந்துரைகள் பலவற்றின் சாரம்சமாக இந்த வரிகளை நான் கருதுகிறேன். ஏனென்றால் தமிழில் வெளிப்படும் எந்த புதிய முயற்சிகளையும், முற்போக்கு எண்ணங்களையும் ந சுப்புரெட்டியார் அவர்கள் மறைத்ததில்லை. அவற்றைத் தமிழோடு பொருத்திப் பார்க்க அவர் மறக்கவுமில்லை, மறுத்ததும் இல்லை. இதற்கு ஆதாரமாக பேராசிரியரின் "பாட்டுத்திறன்" நூலுக்கு க.ப.அறவாணன் எழுதிய அணிந்துரை சான்றாக உள்ளது.

தமிழகத்தில் ஈழச்செல்வாக்கின் விளைவாக இலக்கிய ஆராய்ச்சியில் அறிமுகமான மார்க்சிய அடிப்படையிலான ஆய்வுநெறிமுறை அடிப்படையிலும் நூலாசிரியர் கவிதைகளை ஆராய்ந்திருக்கிறார் என்கிறார் அறவாணன். ஈழத்திலிருந்து கைலாசபதி, கனகரத்தினம், கார்த்து கேசு, சிவத்தம்பி போன்றவர்களின் அணுகுமுறையான மார்க்சிய அடிப்படைகளையும் கவிதை ஆராய்ச்சியில் ந சுப்புரெட்டியார் பயன்படுத்தி இருக்கிறார் என்பது இதன் பொருளாகும். மார்க்கிசியம் மட்டுமல்ல, பெரியாரியத்தையும் சரியாக உள்வாங்கியவர் பேராசிரியர் என்பது அவரது "தந்தை பெரியார் சிந்தனைகள்" நூல் வெளிப்படுவதை அதற்கு அணிந்துரை எழுதிய பேராசிரியர் இரா.தாண்டவன் அவர்களின் கூற்றிலிருந்து உணரலாம்.

"மனிதனை இழிவுபடுத்துவதற்கும், பகுத்தறிவற்ற தன்மைக்கும் கடவுள் நம்பிக்கை காரணமாக அமைவதால் அதை ஒழித்துக்கட்டவேண்டும். கடவுள் மேல் எங்களுக்கு எவ்விதகோபமும் இல்லை என்ற வரிகளின் மூலம் பெரியாரின் கடவுள் மறுப்புக்

கொள்கையின் பின்னணியில் மனிதசமுதாயத்தின் உயர்வுதான் அடிப்படையாக அமைந்துள்ளது என நிறுவுகிறார் நூலாசிரியர் சுப்புரெட்டியார் அவர்கள்'' என்கிறார் அவர். இந்நூல் சென்னைப் பல்கலைக்கழக அண்ணா பொதுவாழ்வியல் மையத்தில் உருவாக்கப்பட்ட பேராசிரியர் சி.அ.பெருமாள் அவர்களின் அறக்கட்டளைச் சொற்பொழிவுக்காக ந.சுப்புரெட்டியார் ஆற்றியஉரை என்பது குறிப்பிடத்தக்கது.

இதனை மேலதிகமாக விதந்தோதுவதற்கான காரணத்தையும் சொல்கிறேன். பேராசிரியரின் நூற்களில் பல ஆத்திகம் தொடர்பானவை. சைவம், வைணவம் சார்ந்தவை. ஆனால் சைவத்தைப் பேசும் போது ஊடிழையாகச் சித்தர்களைக் குறிப்பிடுவதையும், வைணவத்தைக் குறிப்பிடும்போது வைணவ அடியார்களின் சாதிகடந்த தொண்டையும் குறிப்பிட அவர் தவறவில்லை. எனவேதான் ஆத்திகம் தாண்டி நாத்திகம் பேசும் பெரியாரிடத்திலும் மார்க்சியம் போன்ற ஆய்வு முறையையும் தனது அணுகுமுறைகளாக எடுத்தாள்வதில் பேராசிரியர் ந சுப்பு ரெட்டியாருக்கு எந்தத் தயக்கமும் ஏற்படவில்லை என்று நாம் அறியலாம். தமிழ் இலக்கியப் பரப்பில் இவ்வாறாக எல்லா துறைகளிலும் மட்டுமல்ல, எல்லா நெறிகளிலும் இயங்கிய ஓர் ஆளுமையைக் காண முடியாது என்பது திண்ணம்.

இந்த அணிந்துரைகளின் தொகுப்பில் பேராசிரியர் ஆன்மீகம் தொடர்பாக மலைநாட்டுத் திருப்பதிகள், தொண்டைநாட்டுத் திருப்பதிகள், பாண்டியநாட்டுத் திருப்பதிகள், வடநாட்டுத் திருப்பதிகள், சோழநாட்டுத் திருப்பதிகள், சைவ சமய விளக்கு, வைணவ உரைவளம், தம்பிரான் தோழர், ஞானசம்பந்தர், ஆழ்வார்களின் ஆராவமுது, மாணிக்கவாசகர், சைவசித்தாந்தம் - ஓர் அறிமுகம், தாயுமானவர், சைவமும் தமிழும், அண்ணல் அநுமன், பட்டினத்தடிகள், இராமலிங்க அடிகள், மூவர்தேவாரம்-புதிய பார்வை, வைணவ புராணங்கள், காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரிய சுவாமிகள் போன்ற பலநூல்களை எழுதி இருக்கிறார். இவற்றிற்கு முறையே நீதிபதி எஸ் மகராஜன், நிதிபதி என்.கிருஷ்ணசாமி ரெட்டி, நீதிபதி ப.ச.கைலாசம், நீதிபதி எஸ்.சூரியமூர்த்தி, நீதிபதி ஜி. இராமாநுஜம், பேராசிரியர் வி.ஏ.தேவசேனாபதி, பெ.இராமாநுஜன், தே.க.சோமசுந்தரம், இரா.சாரங்கபாணி, அ.மா.பரிமணம், புலவர் மு.இராமசாமி, பொன்சௌரிராசன், பெ.கிருஷ்ணன், பழ.பழனியப்பன், எஸ்.தியாகராஜன், சி.எஸ்.குப்புராஜ், பிரமீளா குப்புராஜ், ஜே.பார்த்தசாரதி, வி.கே.என்.எஸ்.இராகவன் ஆகியோர் அணிந்துரை அளித்துள்ளனர்.

இதனுடன் சேர்த்துக்காண வேண்டிய பேராசிரியரின் மற்றொரு நூல் ''அறிவியல் நோக்கில் இலக்கியம், சமயம், தத்துவம்''. அதற்கு அணிந்துரை எழுதிய நீதிபதி என்.கிருஷ்ணசாமி ரெட்டி ஓரிடத்தில், ''அணுவாற்றலே சக்தி தத்துவமாய் உருவெடுத்தது என்றும், அறிவியல் யுகத்தில் தோன்றிய பாரதியார் அறிவியல்

அடிப்படையில் தம் பாடல்ளைப் படைத்துள்ளார் என்றும் பெருமையுடன் சுட்டியுள்ளார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து ஆன்மீகம் உட்பட எதையும் அறிவியல் நோக்கில் ஆய்வதையே தனது அடிப்படையாகக் கொண்டவர் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் என்பதை அறிந்து கொள்ளலாம்.

இங்கு நான் குறிப்பிட்டவை தவிர பேராசிரியர் அவர்கள் மானிட உடல், இல்லறநெறி, நினைவுக்குமிழிகள் போன்ற தலைப்புககளிலும் நூற்களை யாத்துள்ளார். தொல்காப்பியம் தொட்டு நவீன இலக்கியம் வரையிலும் தொடர்ந்த அறிவுப்பயணம் அது தொடர்பான வாழ்வியலின் எல்லா துறைகளைளயும் தொட்டு ஊடுருவிச் செல்கிறது. கடல்போலப் பரந்து கிடக்கும் பேரா.ந.சுப்புரெட்டியாரின் எழுத்துலகில் புகும்போது ஒருவன் எதைத் தொடுவது எதை விடுவதெனத் தெரியாமல் மலைத்து நிற்பான் என்பது நடைமுறை உண்மை. ஆனால் எல்லாவற்றிற்கும் ஓர் அடிப்படையை அவர் வைத்திருப்பதுதான் எழுத்துக்களில் ஆழத்தை விரிவின் அளவுக்குத் தருகிறது.

தமிழில் ஜெயகாந்தன் எழுதிய முன்னுரைகள் நூலாக வந்ததைப் பார்த்திருக்கிறேன். அது அவர் தனது நூற்களுக்குத் தானே எழுதிய முன்னுரைகளாகும். ஆனால் எழுத்தாளர் ஒருவருக்கு இத்தனை அதிகம் நூல்களுக்கு இத்தனைப் பெரிய பரந்துபட்ட பல்துறைசார்ந்த அறிஞர்கள் எழுதிய அணிந்துரைகளின் தொகுப்பு நூலாக வருவதை இப்போதுதான் பார்க்கிறேன்.

அதற்குக் காரணம் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் எழுத்தும், விரிவும், வாழ்ந்த காலத்தில் அவர் இயங்கிய விதமும், ஆழ்ந்த அறிவும் என்றால் இவைதான் அடிப்படை. அந்த ஆணிவேரை, அஸ்திவாரத்தை நூற்றாண்டுகள் தாண்டிய நிலையிலும் வெளியுலகிற்கு மங்கவிடாமல் உயர்த்திப் பிடிக்கும் ந சுப்பு ரெட்டியார்100 கல்வி அறக்கட்டளையின் இடைவிடாத முயற்சிகள் பெருவெற்றிக்காண வாழ்த்திப் போற்றுகிறேன், புகழ்கிறேன், வணங்குகிறேன்.

Dr C Selvakumar
Associate Professor
Nesamani Memorial Christian College
Marthandam – 629 165
Kanyakumari Dist. TN

அணிந்துரைகள்
உள்ளடக்கம்

வ.எண்	வருடம்	நூல்	அணிந்துரை நல்கியோர்
001	1949	கவிஞன் உள்ளம்	பி.ஸ்ரீ.ஆசார்யா
002	1957	தமிழ் பயிற்றும் முறை	தி.சு.அவினாசிலிங்கம் S Thiruvenkatachari
003		கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி	VRM Chettiar இராய. சொ.
004	1958	அணுவின் ஆக்கம்	சி சுப்ரமணியம்
005		காலமும் கவிஞர்களும்	பி துரைக்கண்ணு முதலியார்
006		மானிட உடல்	அ.லெ.நடராஜன்
007	1961	கல்வி உளவியல்	ஜி.ஆர்.தாமோதரன் TA Purushottam வை.நா.சுப்பிரமணியம்
008	1963	தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை	A Srinivasa Ragavan மு வரதராசனார் பு ரா புருடோத்தம நாயுடு
009	1964	இல்லற நெறி	Dr சௌந்திரம் இராமசந்திரன்
010	1971	மலைநாட்டுத் திருப்பதிகள்	ஜஸ்டிஸ் எஸ் மகராஜன்
011	1975	திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்	நெ து சுந்தரவடிவேலு
012	1976	தொண்டைநாட்டுத் திருப்பதிகள்	ஜஸ்டிஸ் என் கிருஷ்ணசாமிரெட்டி
013	1977	பாண்டியநாட்டுத் திருப்பதிகள்	ஜஸ்டிஸ் பா ச கைலாசம்
014		Religion and Philosophy of NALAYIRAM w.r.t. NAMMALVAR	Dr M Ananthasayanam Ayyengar
015	1980	வடநாட்டுத் திருப்பதிகள்	ஜஸ்டிஸ் எஸ் சூரியமூர்த்தி
016	1981	சோழநாட்டுத் திருப்பதிகள் - 1	ஜஸ்டிஸ் ஜி இராமானுஜம்
017		சோழநாட்டுத் திருப்பதிகள் - 2	**பு.ரா.கோகுலகிருஷ்ணன்**
018	1982	குயில் பாட்டு – ஒரு மதிப்பீடு	இரா.கு.நாகு
019		கண்ணன் பாட்டுத்திறன்	கா. மீனாட்சி சுந்தரம்
020	1983	பாரதீயம்	Dr. ஔவை நடராஜன்
021		கம்பனில் மக்கள் குரல்	சு இரத்தினவேல் பாண்டியன்
022	1984	சைவ சமய விளக்கு	Prof VA Devasenapathi
023		வாழையடி வாழை	செ அரங்கநாயகம்
024	1985	வைணவ உரைவளம்	பெ இராமானுஜன்
025		தம்பிரான் தோழர்	தே.க.சோமசுந்தரம்
026		Collected Papers	Prof KR Srinivasa Aiyengar
027		கல்வி உளவியல் கோட்பாடுகள்	கே.ஆர்.மாணிக்கம்
028	1986	ஞானசம்பந்தர்	Dr. இரா சாரங்கபாணி
029		நாவுக்கரசர்	Dr. அ.மா.பரிமணம்
030	1987	ஆழ்வார்களின் ஆரா அமுது	புலவர் மு இராமசாமி
031		விட்டுச்சித்தன் விரித்த தமிழ்	க பத்மநாப ரெட்டியார்
032	1988	தமிழ் இலக்கியங்களில் அறம் - நீதி - முறைமை	ஜஸ்டிஸ் எஸ் நடராஜன்
033		நினைவுக் குமிழிகள் - 1	சிலம்பொலி சு செல்லப்பன்
034		பாட்டுத் திறன்	Dr க.ப.அறவாணன்
035	1989	கலியன் குரல்	Dr ஆறு அழகப்பன்
036		நினைவுக் குமிழிகள் - 2	ஆ பன்னீர்செல்வம்
037		நினைவுக் குமிழிகள் - 3	Dr ச மெய்யப்பன்

038		மாணிக்கவாசகர்	Dr பொன்.சௌரிராசன்
039		சடகோபன் செந்தமிழ்	டாக்டர் தி. வைத்தமாநிதி
040	1990	நினைவுக் குமிழிகள் - 4	Dr தானியேல் தேவசங்கீதம்
041	1991	புதுவை(மை)க்கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் ஒரு கண்ணோட்டம்	Dr ந கடிகாசலம்
042	1992	பரகாலன் பைந்தமிழ்	Dr AV ரங்காசாரி
043	1993	வாய்மொழியும் வாசகமும்	Dr அ.அ.மணவாளன்
044	1994	அர்த்த பஞ்சகம்	Dr இராம மகாதேவன்
045		நவவித சம்பந்தம்	பேராசிரியர் NS ராமாநுஜ தாத்தாசாரிய சுவாமிகள்
046	1997	இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்	திரு இரா காந்தி
047	1998	வாழும் கவிஞர்கள்	பொன்னம்பல அடிகளார்
048	1999	நீங்காத நினைவுகள் - 1	இராம வீரப்பன்
049	2001	பாவேந்தரின் பாட்டுத்திறன்	மு கருணாநிதி
050		தந்தை பெரியார் சிந்தனைகள்	Dr இரா தாண்டவன்
051		சைவசித்தாந்தம் - ஓர் அறிமுகம்	Dr பெ கிருஷ்ணன்
052		தாயுமானவர்	புலவர் த இராமலிங்கம்
053		சைவமும் தமிழும்	பி.ஆர்.கோகுலகிருஷ்ணன்
054		அறிவியல் நோக்கில் இலக்கியம், சமயம், தத்துவம்	NK கிருஷ்ணசாமி ரெட்டி
055	2002	கவிமணியின் தமிழ்ப் பணி ஒரு மதிப்பீடு	Dr இராதா செல்லப்பன்
056		பாண்டவர் பூமி ஒரு மதிப்பீடு	Dr வ ஜெயதேவன்
057		பல்சுவை விருந்து	அரிமாதுரை சுந்தரராஜுலு
058		பாண்டியன் பரிசு ஒரு மதிப்பீடு	க அன்பழகன்
059		தமிழில் அறிவியல் செல்வம்	Dr சு இன்னாசிமுத்து
060	2003	அண்ணல் அநுமன்	பழ பழநியப்பன்
061		பட்டினத்தடிகள்	எஸ் தியாகராஜன்
062		இராமலிங்க அடிகள்	சி எஸ் குப்புராஜ்
063		மூவர் தேவாரம் –புதிய பார்வை	Dr பிரமீளா குருமூர்த்தி
064		வைணவ புராணங்கள்	Dr ஜே பார்த்தசாரதி
065	2004	வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்	பேராசிரியர் க பாஸ்கரன்
066		என் அமெரிக்கப்பயணம்	நா மகாலிங்கம்
067		காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரிய சுவாமிகள்	Dr வி.கே.என்.எஸ். இராகவன்
068	2016	பேராசிரியரின் தலைசிறந்த படைப்புகள் நூற்றாண்டு விழா வெளியீடு [2015-2016]	பேரா. கா. மீர்முஸ்தாபா உசேன்
069		சிறப்புப்பாயிர பாமாலைகள் நூற்றாண்டு விழா வெளியீடு [2015-2016]	முனைவர் ந கடிகாசலம்
070		அன்புப்படையல்கள் நூற்றாண்டு விழா வெளியீடு [2015-2016]	Dr அசு இளங்கோவன்
071		அணிந்துரைகள் நூற்றாண்டு விழா வெளியீடு [2015-2016]	இரா காமராசு
072		சிற்றிலக்கியங்களில் வாழ்வியல் பதிவுகள் நூற்றாண்டு விழா வெளியீடு [2015-2016]	அ அறிவுநம்பி
073		ந சுப்புரெட்டியாரின் படைப்புகள் கலையும் கருத்தியலும் நூற்றாண்டு விழா வெளியீடு [2015-2016]	டாக்டர் சி.ஏ.வாசுகி
074	2018	கவிஞர் வாலியின் இராமாநுஜ காவியம் -ஒரு மதிப்பீடு	முனைவர் இரா காமராசு

கவிஞன் உள்ளம்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

பி. ஸ்ரீ. தன் முன்னுரையில்: (1949ல்)

"புரட்சிகரமான மாறுதல்களிலும் பொற்சரடுபோல் சங்ககாலத் தமிழ்ப் பண்பு ஊடுருவிக்கிடக்கும் என்பதையும் சுட்டிக்காட்டுகிறார்.
இந்த ஆசிரியரின் தமிழ் நடை காலத்திற்கு இசைந்து வளர்ந்து வரும் நடை—டதான். வளரும் தமிழில் மலரும் இலக்கியத்திற்கு உரிய நடை."

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

ISBN: 978-81-939430-4-5

eBOOK ~ மின் நூல்




அணிந்துரை

கவிஞன் உள்ளம் 1949

வழங்கியோர்:

பி.ஸ்ரீ.ஆச்சார்யா







முன்னுரை

இன்று பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் பத்திரிகை வாசித்து வருகிறார்கள். புஸ்தக வாசகர்களும் ஆயிரக் கணக்கில் இருக்கிறார்கள். தமிழர்கள் பரந்த உலகம் தெரிந்து வாழ விரும்புகிறார்கள். தூரத்தைச் சமீபமாக்கிப் பரந்த உலகத்தைச் சுருக்கிக் காட்டும் விஞ்ஞான அதிசயங்களையும், பயமுறுத்தும் விஞ்ஞான விபரீதங்களையும் அறிந்து ஆட்கொண்டு வசதியாக வாழ்க்கை நடத்த விரும்புகிறார்கள். ஆம்; இன்றைய சுதந்திர இந்தியாவின் இன்றியமையாத பகுதியாகத் தமிழ் நாடு தன்பிற்காலக் "கிணற்றுத் தவளை" வாழ்வை விட்டு விடுதலையாகிக் கடல் போன்ற ஒரு புது வாழ்வை நோக்கிச் செல்ல ஆசைப்படுகிறது. இந்தப் புதுமைப் பெருவாழ்வில் காந்தீயம் போன்ற உயர்ந்த லட்சியங்களுக்கு விசேஷ இடம் உண்டு என்பதில் சந்தேகமில்லை. இந்த நம் ஆசைகள், அச்சங்கள், கருத்துக்கள், நம்பிக்கைகள், லட்சியங்கள், பரபரப்புகள், துடிப்புகள், ஆகியவற்றை உள்ளபடியே பிரதிபலித்து நம் மக்களிடையே ஒரு புதுவாழ்வியக்கத்தைத் தோற்றுவிக்கக் கூடிய சக்திகளைப் படைத்து விடும் முறையில் நம் புதுமைத் தமிழிலக்கியம் வளர்ந்தோங்க வேண்டும். இந்த இலக்கியம் ஆழமாக வேரூன்றி வளர்வதற்குச் சங்க காலம் தொட்டுத் தமிழிலே வளர்ந்து வந்திருக்கும் இலக்கியங்களையும் தேவைக்குத் தகுந்த முறையில் பயன் படுத்திக் கொள்ளலாம். அந்தப் பழைய இலக்கியங்களிலுள்ள பண்பாடும் லட்சியங்களும் காந்தீயத்திற்கு அரணாகி நமக்குத் தரும் கவசமாக அமையவும் கூடும்.

நம் புதுமை இலக்கியத்தின் இன்றைய நிலை என்ன? எழுத்தாளர்கள் சிறு கதைகளை எழுதிக் குவித்த வண்ணமாயிருக்கிறார்கள். 'நாவல்'கள் என்ற நீண்ட நவீன கதைகளும் இடையிடையே வெளியாகின்றன. சிறு கதைகளும் பெருங்கதைகளும்

பெரும்பாலும் தழுவலாகவும், மொழி பெயர்ப்பாகவும், நமது வாழ்வோடு ஒட்டாத காதற் கதைகளாகவும் இருந்த போதிலும் இவற்றிற்கெல்லாம் வாசகர் பலர் இருக்கிறார்கள் என்பதில் ஐய மில்லை. கவிதைத் துறையிலும் சிலர் புது முறைகளைக் கையாண்டு பலருக்கும் இன்பமூட்டி வருகிறார்கள். இவர்களில், பழமைக்கும் புதுமைக்கும் ஒரு பாலம் போல் கவிதை இயற்றி வரும் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையையும், தேசீயம், காந்தீயம் என்ற புதிய சக்திகளைப் பாடிப் பரப்பி வரும் நாமக்கல் கவிஞரையும் சமுதா யப் புரட்சிக் கவிஞரான 'பாரதி தாசன்' அவர்களையும் முத்திறப் புதுமைக் கவிகளாய்க் குறிப்பிடலாம். இவர்கள் பாரதியார் தோற்றுவித்த மறுமலர்ச்சி —இலக்கியத்தை,

அரிதாள் அறுத்துவர
மறுதாள் பயிராகும்

என்ற ரீதியில் மறு போகமாகப் பயிர் செய்து வருகிறார்கள்.

'அழகுக் கலையின் ஆணிவேர்' என்று கருதத்தக்க நடனமும் இன்று புத்துயிர் பெற்று வருகிறது. **ஸ்ரீமதி ருக்மணி அருண்டேல்** போன்ற அறிஞர்கள் இத்துறை யில் பிரவேசித்திருப்பதே நமது நாட்டியக் கலையின் மறு மலர்ச்சிக்குத் தக்க சான்று. இசைக் கலையும் பொதுமக்கள் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்து வருகிறது. தமிழிசை-இயக்கத் திற்கும், கர்நாடக சங்கீதத்திற்கும் போட்டியும் பூசலும்-ஏசலுங் கூட — இன்று அதிகமாய் இருந்தபோதிலும், நாளடைவில் இரண்டு இசை இயக்கங்களும் கங்கையும் யமுனையும் (கங்கையும் காவிரியும் என்றே சொல்லலாம்) போலக் கலந்து நம் புது வாழ் வியக்கத்திற்கு வளமும் வனப்பும் அளித்து உதவும் என்று நம்பலாம்.

நம் புதுவாழ்வியக்கத்திற்கும் விஞ்ஞான வளர்ச்சிக்கும் புதிய இலக்கியப் பெருக்கிற்கும் கங்கை காவிரியின் சங்கமம்

தான் போதுமா? தேம்ஸ் நதியையும் நம் காவிரி சந்திக்க வேண்டியதுதான்! 'நயகரா' நீர்வீழ்ச்சியின் பேரிடிகளையும் கேட்கவேண்டியதுதான்! 'ஆஹாவென்றெழுந்தது பார் யுகப் புரட்சி!' என்று பாரதியார் பாடியிருக்கிறாரே, அந்த ரஷ்யப் புரட்சி இடிக்குரலில் பேசி. மின் - எழுத்துக்களில் எழுதிவரும் புத்தம் புதிய இலக்கியத்தையும் நாம் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆனால் தமிழ் வளரும் புதிய புதிய துறைகளில் எல்லாம், தமிழின் உயிர்நாடி பேசவேண்டும்; சங்க இலக்கியங்களில் கொலு விருக்கும் அரசிளங் குமரியின் அதிகார முத்திரை வேண்டும்; அதாவது, தமிழ் தமிழாக வளரவேண்டும்.

நம் இலக்கிய வளர்ச்சிநெறியைச் சிறிதும் தெரிந்து கொள்ளாமல் பிற இலக்கியங்களின் உதவியால் மட்டும் தமிழை வளர்த்துவிட இயலாது. புதிய புதிய கருத்துக்களை வெளியிட லாம்; வெளியிடத்தான் வேண்டும். புரட்சிகரமான கருத்துக் களையும் காரசாரமாக வெளியிடலாம்; பாரதியார் வெளியிட வில்லையா? அவற்றை வெளியிடுவதற்குப் புதிய புதிய சொற்களை யும் சொற்றொடர்களையும் கொண்டு வரலாம். வேறு மொழி களிலிருந்து கருத்துச் செல்வத்துடன், வேறு நாடுகளிலிருந்து கலைச் செல்வங்களுடன், விஞ்ஞானச் செல்வங்களுடன், இன்றியமையாத சொற்செல்வத்தையும் கொண்டு சேர்த்து வீட்டு மொழி யின் பொக்கிஷத்தைப் பெருக்கிக் கொள்ளலாம். ஆனால் பாரதியாரைப்போல், பாரதிதாசனைப்போல், கவிமணியைப் போல் தமிழின் பண்போடு கூடிய ஜீவசக்தியை உணர்ந்து எழுத வேண்டும்; பாடவேண்டும். அப்போதுதான் பழமைக்கும் பழமை யான தமிழ், புதுமைக்கும் புதுமையாக வளர்ந்தோங்க முடியும்.

தமிழ் ஒரு குழந்தைப் பாஷையன்று; சங்ககாலம் தொட்டு — என், அதற்கும் முன்பே — எவ்வளவோ காலம் கண்டு, எத்தனையோ நிகழ்ச்சிகள் கண்டு, கருத்து வேற்றுமை

களும் கொள்கை முரண்பாடுகளும் கண்டு, தொல்காப்பியர், திருவள்ளுவர், கம்பர் போன்ற மேதாவிகளையும் குழந்தைகளாக அணைத்துக் கொண்டு தாய்மைப்பண்பு பெற்று வளர்ந்து வந்திருக்கும் தாய்மொழியல்லவோ நமக்கு வாய்த்திருக்கிறது? காலவகையால் பழையன கழியப் புதியன கண்டு வந்திருக்கிறது. இன்னும் புரட்சிமயமான புதுமைகளையும் காணப் போகிறது. இம்மொழியின் இலக்கிய சரிதமே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தொடங்கியிருக்கவேண்டும் என்பதை ஆராய்ச்சியாளர்கள் ஒருமுகமாய் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்த இருபது நூற்றாண்டு வளர்ச்சி நெறியிலும் மைல் கற்கள் உண்டு — வளர்ச்சி நெறியை இன்னும் நாம் அறியக்காட்டும் மைல்கற்கள்.

இத்தகைய தமிழிலக்கியப் பரப்பிலே ஆதிமைல் கல்லைத்தான் சங்க இலக்கியம் என்று வழங்குகிறோம். ஆதிமைல்கல் அதிமுக்கியமான மைல்கல்லாகவும் இருக்கிறது தமிழ்ப்பண்பையும் தமிழர் பண்பாடுகளையும் உள்ளவாறு உணர்ந்து கொள்வதற்குச் சங்கநூல்களை அறிந்து கொள்ள வேண்டியது இன்றும் அவசியமாகவே இருக்கிறது.

சங்க இலக்கியத்தைப் 'பத்துப் பாட்டு' 'எட்டுத் தொகை' என்று இருபெருங்கூறுகளாகப்பகுத்துப் பேசுகிறார்கள். இவற்றில் எட்டுத் தொகையிலுள்ள நற்றிணை, அகநானூறு, புறநானூறு, கலித்தொகை என்ற நான்கு தொகை நூல்களிலிருந்தும் இந்த ஆசிரியர் பன்னிரண்டு உயிரோவியங்களைத் தேர்ந்தெடுத்துப் 'பாருங்கள் இந்தக் கவிதைச் சித்திரங்களை!' என்று காட்டுகிறார். இது போன்ற நன் முயற்சிகளே சங்க நூல்களின் தனி மேதையையும் சங்கப் புலவர்களின் அறிவுத் திறனையும் புலமை வளப்பத்தையும் இந்நாளில் பத்திரிகைகள் கதைகள் படிக்கத் தெரிந்த தமிழ் வாசகர்களுக்கும் ஒருவாறு அறிவிக்கக் கூடும்.

சங்கம் வளர்த்த தமிழ்க் கடலிலே திரண்டெழுந்த அமுத மாகிய திருக்குறள் இந்த ஆசிரியரின் இரண்டு கட்டுரைகளில் இடம் பெற்றிருக்கிறது: இக்கட்டுரைகள் நேநாயகமாக அமைந் திருப்பது பொருத்த முடையது. இவ்வாசிரியர் 'நாலடியார்' என்ற நீதிச் சுரங்கத்தையும் நினைப்பூட்டிச் செல்கின்றார்.

வழியில் 'சிந்தாமணி'யையும், மணிவாசகப் பெருமானின் இரண்டு மணிகளையும் மறந்து விடவில்லை. சங்க நூல்களில் அரியாசனம் பெற்றிருக்கும் அரசிளங்குமரியை' என்றும் குமரி யாக்கிச் சக்கரவர்த்தினியாகவும் முடிசூட்டி வைத்த கவிச் சக்கர வர்த்தியின் காவிய அரண்மனையிலே, முன் வாசற் பூஞ்சோலையில் சாதாரணமாக மலர்ந்திருக்கும் நான்கு மலர்களைத் தம் புலமைத் திறமையால் மணம் மிக வீசக் காட்டிச் செல்கின்றார் ஆசிரியர்.

திருவிளையாடற் புராணத்தையும் காஞ்சி புராணத்தை யும் நளவெண்பாவையுங்கூட மறந்துவிடாமல் மைல்கற்களாகக் காட்டித் தமிழின் 'ராஜபாதை'யை நீளக்காட்டிவிடுகிறார். நமது இன்றைய புரட்சிக் கவிஞரையும் கண்டுகாட்டி, 'இப்படியே இன் னும் எத்தனையோ மைல்கற்கள்!' என்று உய்த்துணர வைக்கிறார்; புரட்சிகரமான மாறுதல்களிலும் பொற்சரடுபோல் சங்ககாலத் தமிழ்ப் பண்பு ஊடுருவிக் கிடக்கும் என்பதையும் சுட்டிக்காட்டு கிறார்.

இந்த ஆசிரியரின் தமிழ் நடை காலத்திற்கு இசைந்து வளர்ந்து வரும் நடைதான். வளரும் தமிழில் மலரும் இலக்கியத் திற்கு உரியநடை. இத்தகைய நடைதான் 'நல்ல தமிழ்' இக்காலத் திற்கு. சங்கநூற் கட்டுரைகளையும் இத்தகைய வசன நடையில் எழுதினால்தான், சாதாரண உலக இன்பம் முதல் உயர்ந்த கொள்கைகள் வரையில் அறிஞர்கள் சங்க இலக்கியங்களிலே கண்டு களிக்கிறார்களே, அந்தக் கருத்துச் செல்வம் முழுவதும்

சாதாரண மக்களுக்கும் பயன்படுவதாகும். சுதந்திர இந்தியாவில் தமிழர்களின் புதுமைப் பெருவாழ்வியக்கத்திற்கு,

யாதும் ஊரே யாவரும் கேளிர்

என்பது போன்ற பழந்தமிழ்க் கொள்கைகளும் இன்றியமையாதன அல்லவா?

இந்நூலில் அடங்கியிருக்கும் சங்கநூற்கட்டுரைகளிலும், வேறு இலக்கியக் கட்டுரைகளிலும் ஆசிரியர் தாய் தமிழ்க் கடலில் மூழ்கி முத்துக்குளித்துவந்து 'இதோ பாருங்கள் சில ஆணித்தரமான முத்துக்களை!' என்று காட்டுகிறார். தரம் அறிந்து 'முத்தும் முத்தமிழும்' போற்றிய தமிழ் நாட்டின் தற்காலமக்கள் இந்த ஆசிரியர் காட்டும் முத்துக்களையும் தக்க முறையில் மதித்துப் போற்றுவர் என்பது என் நம்பிக்கை.

"அருணோதயம்"
11—1—49

பி. ஸ்ரீ.

தமிழ் பயிற்றும் முறை

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

தாய்மொழிப் பயிற்சியைத்தவிர அத்துடன் தொடர்பாக
இருக்கவேண்டிய நவீன முறைகள் பற்றிய பல செய்திகள்
ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும், ஆசிரியர் பயிற்சிப்
பள்ளிகளிலும் பயிலும் மாணாக்கர்கட்கு பெரிதும்
பயன்படும் வகையில் தமிழில் முதலில்
வெளிவந்த மாபெரும் பயிற்சி நூல்

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939270-6-9

eBOOK ~ மின் நூல்





அணிந்துரை


தமிழ் பயிற்றும் முறை 1957

வழங்கியோர்:

உயர்திரு தி.சு.அவினாசிலிங்கம்
சென்னை மாநில முன்னாள் கல்வியமைச்சர்

Mr S Thiruvenkatachari
Professor of Education
Dr Alagappa Chettiar Training College







சென்னை மாநில முன்னாள் கல்வியமைச்சர்

உயர் திரு. தி. சு. அவினாசிலிங்கம் அவர்கள்

மனமுவந்து அளித்த

அணிந்துரை

ஒரு நாட்டு மக்களின் மேன்மைக்கு அறிகுறியாக இருப்பது அவர்கள் மொழியின் சிறப்பு. பிற மொழிகளின் மூலம் அறிவு பெறலாம். ஆனால் ,மனப் பண்பும் சீரிய சிந்தையும் தம் சொந்த மொழியை ஆழ்ந்து பயிலுவதனால்தான் பெற முடியும். எனவே, நம் நாடு புது வாழ்வு பெற்றுப் பெருவாழ்வை நோக்கிச் செல்லும் இக்காலத்தில் நமது மொழியின் வளர்ச்சியைப்பற்றி அறிஞர்கள் நினைப்பதில் ஆச்சரியம் இல்லை.

மொழியின் வளர்ச்சி என்பது வெறும் வாய்ப்பேச்சால் மட்டிலும் உண்டாவதில்லை. அதற்காக மொழியின்பால் பக்தி தூண்டப்பெற்று மொழியின் சேவையே பயனும் பண்பும் எனக்கருதி உழைப்பவர்களின் முயற்சியினால்தான் அஃது உண்டாகும். எல்லாத் துறைகளிலும் நல்ல தமிழ்ப் புத்தகங்கள் வெளிவரவேண்டும். எந்தத் தமிழனும் தமிழிலேயே படித்து எத்தகைய உயர்ந்த ஞானத்தையும் பெற வேண்டும். தமிழில் வரும் புத்தகங்கள் ஆரம்பத்தில் மொழி பெயர்ப்பாக அமையலாம். ஆனால், மொழி பெயர்ப்பு நூல்கள் முதல்தரமானவையாக இருக்க முடியாது. முதல்தரமான புத்தகங்களாக இருக்க வேண்டுமானால், மக்கள் பிற துறை அறிவைத் தாங்களே பெற்று அவ்வறிவுடன் ஒன்றி அதன் பின்னர் அவ்வறிவு அவர்களின் சொந்த அனுபவமாய் வெளிவர வேண்டும். இத்தகைய புத்தகங்கள் எல்லா அறிவுத் துறைகளிலும் இப்பொழுது மிகமிகத் தேவை.

இந் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகப் பலவிதமான முயற்சிகள் இப்பொழுது மேற்கொள்ளப்பெற்று வருவது

மிகவும் மகிழ்ச்சி தரக்கூடியது. தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிடும் 'கலைக்களஞ்சியம்' இவற்றுள் ஒன்று. 'கலைக் கதிர்' போன்ற மாத வெளியீடுகளும் பிற பத்திரிகைகளும் அறிவுத் துறையில் கட்டுரைகள், விளக்கங்கள் முதலிய-வற்றை வெளியிடுவது மற்றொன்று. இவை தவிர, பல தமிழ் அறிஞர்கள் தாங்கள் பெற்ற ஞானத்தை எளிய தமிழில், அனைவரும் உணரத்தக்க முறையில், எழுதி வருவதும் மிகவும் நம்பிக்கை தரக்கூடிய நிலைமையாகும்.

கல்வித் துறையில் பாட போதனையின் தரம் உயர வேண்டுமென்பது அனைவருடைய விருப்பம். நமது உயர்-நிலைப் பள்ளிகளில் பாடபோதனை தமிழில் அமைந்திருக்-கின்றது. ஆனால், இந்தப் பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர் களுக்குப் பயிற்சியும் பாடமும் ஆங்கிலத்தில் அளிக்கப்-பெறுகின்றன. பின்னர் அவர்கள் பள்ளிகளில் மேற்கொள்ள விருக்கும் பணிகளில் அவர்கள் பெற்ற அறிவும் பயிற்சியும் முற்றிலும் பயன்படாமல் போகின்றன. எனவே, முதலில் ஆசிரியர்க் கல்லூரிகளில் பாடங்கள் தமிழில் சொல்லித் தரப்பட வேண்டியது மிகவும் அவசியம். இதற்குத் தேவையான புத்தகங்கள் தமிழில் இல்லையே என்று சிலர் கூறுகின்றார்கள். இந்தக் குறையை நீக்க திரு. சுப்பு ரெட்டி யார் முன்வந்திருப்பது பாராட்டத் தக்கது.

அவர் எழுதியிருக்கும் 'தமிழ் பயிற்றும் முறை' பெரிய அளவு நூலாக அமைந்திருக்கின்றது. அதை முற்றிலும் பார்க்க எனக்கு நேரமும் ஓய்வும் கிட்டவில்லை. என்றாலும், பார்த்த அளவில் தாய் மொழிப் பயிற்சியைத் தவிர அத்-துடன் தொடர்பாக இருக்கவேண்டிய நவீன முறைகள் பற்றிய பிற செய்திகளும் சேர்க்கப் பெற்றிருப்பதாக அறி-கின்றேன். அவருடைய புத்தகம் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலும் பயிற்சி பெறும் மாணாக்கர்களுக்குப் பெரிதும் பயன்படும் என்று நம்புகின்றேன்.

இன்று நமது உயர்நிலைப் பள்ளிகளில் பாடபோதனை தமிழில் அமைந்திருக்கின்றது. இதன் காரணமாக அவர்-

களுக்கிருக்கும் ஆங்கில மொழியின் ஞானம் சென்ற தலை முறையில் ஆங்கிலம் போதனமொழியாக இருந்த காலத்தில் இருந்தமாதிரி இல்லை என்பது வெளிப்படை. ஆனால், பலதுறைகளிலும் அறிவுத்தரம் மிகவும் உயர்ந்திருக்கின்ற தென்பது பாரபட்சமில்லாமல் பார்ப்பவர்கள் அனைவருக்கும் தெளிவாகத் தெரியும். தாம் படிப்பது, ஆங்கிலத்தைப் படிப்பதுகூட எதற்காக ? பல துறைகளிலும் அறிவு பெறுவ-தற்காக. தாய்மொழிமூலம் கல்வி புகட்டுவதுதான் குறைந்த காலத்தில் அதிக அறிவு பெறுவதற்கேற்ற வழி என்பது உலக முழுவதிலுமுள்ள அறிஞர்களின் அனுபவம். ஆனால், இன்னும் ஏன் கல்லூரிகளிலும் போதன முறை தாய்மொழி மூலம் அமையவில்லை என்ற வினா எழுகின்றது.

இந்தக் காரணங்களை இங்கு ஆராயவேண்டிய அவசி-யம் இல்லை. இன்றில்லையானால், நாளை, அல்லது ஒன்றி-ரண்டு, அல்லது ஐந்தாண்டுகளில் படிப்படியாகத் தமிழ் போதன மொழியாவது உறுதி. புத்தகங்கள் இல்லையென்று சொல்லுகின்றவர்கள், அது போதன முறையானாலும், வெளிவரும் புத்தகங்களைக் கண்டு ஆச்சரியப்படுவார்கள்.

ஆனால், அதற்கு முன்னமேயே இப் புத்தகங்களை எழுத முன்வந்திருப்பவர்கள் மிகவும் பாராட்டுதலுக்குரியவர்கள். திரு. சுப்பு ரெட்டியார் மிகுந்த சிரமத்துடனும் சிரத்தை-யுடனும் பக்தியுடனும் இப் பணியைச் செய்திருக்கின்றார். தமிழ் அன்னையின்பால் தான் கொண்டுள்ள பேரன்பால், தமிழுக்குச் சேவை செய்யவேண்டும் என்ற பேரார்வத்தால் தூண்டப் பெற்று 'தமிழ் பயிற்றும் முறை' என்ற இந்நூலை எழுதியிருக்கின்றார். அவர் பணி அனைவருக்கும் பயன்-படுவதாகுக. அவர் மேற்கொண்டிருக்கும் முயற்சிகளில் ஆண்டவன் துணை நிற்பானாக.

இங்ஙனம்,

தி. சு. அவினாசிலிங்கம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம்,
பெரியநாய்க்கன் பாளையம்,
30—9—57.

FOREWORD

Professor N. Subbu Reddiar has done much more than merely put out one more book on the pedagogy of Tamil. Most of the books on the teaching of Tamil appear to present techniques and procedures ill-suited to the teaching of the mother-tongue, based on ideas appropriate to the teaching of foreign languages. Professor Reddiar has furnished almost the first book on Tamil teaching based on principles most appropriate to it. I know that he has developed many of these principles from his careful studies of Tamil grammar and prosody. It is a pity that most previous writers have ignored the basic material contained in the *Tolkappiam* which, incidentally, is a mine of information on the pedagogy of Tamil. Professor Reddiar has broken new ground by resisting the temptation to which most earlier writers have succumbed, and resuscitated those educational principles and procedures outlined in Classical Tamil Literature that are still valid according to the criteria of what goes by the name of Progressive Education. The Principles handled in the book are illustrated by apt examples from Tamil literature. As Professor Reddiar has given me a *carte blanche* in respect of the length of the Foreword, I am permitting myself to attempt an analysis of the original contribution he has made to the teaching of Tamil, chiefly by way of helping teachers of other Indian languages to perceive the possibility of new dynamic approaches to the teaching of their own languages.

Professor Reddiar has identified the objectives of the learning of the mother-tongue from the mass of general objectives which hold good for all languages. He has rightly emphasised the role of the mother-tongue in providing wholesome emotional sustenance to the growing learners. The distinction between a foreign language and the mother-tongue seems to lie in the possibility of greater emotionalisation through the mother-tongue. The mother-tongue patently serves the functional purpose of communication; but a subtle principle implied in its character, which is often missed is, that it conveys something most intimate to the life and experience of the learner, while the experiences gained through a foreign language are exotic and vicarious, though sensible by the process of comparison and imagination. The art of translation must remain an imperfect art even with the most perfect of multi-linguists because, while words may be translatable for practical purposes, most concepts must remain untranslated. It is not the perfect nature of the translation in any accredited translation of a great work that helps one to see the beauty of the original in the translation. The superior education and imagination of the reader and the circumstances of his being a good student of the original make him see in the translation what does not really exist: viz., the beauty of the original. G. U. Pope's translation of the *Kural*, for instance, can never be as perfect as Tiruvalluvar's Tamil *Kural*. But if Pope is remembered better than any other translator of the *Kural* it is because the translation has literary value *in English*. It seems to be an axiom that to enjoy a work of literature there can be no short-circuiting of the process by reading it in translation. There is as much difference between an original work and its best translation as there is between an actual visit to a place and seeing the place in a three-dimensional picture.

I have said so much about translation only to come back to the position that the study of the mother-tongue is most necessary for the proper building up of the emotions of the children. Psychic imbalance, lack of character, a negative, nihilistic attitude and frustration, result from a wrong approach to the question of the education of the emotions. It seems to be true that character is the product of a good knowledge of the mother-tongue. The foreign language can undoubtedly enlarge the imaginative horizon of the learner, and add to his fund of knowledge; but it can never substitute the mother-tongue as the most nourishing sustenance for emotional development.

Professor Reddiar has developed this theme in the chapter on 'Objectives' by discussing the personality values of the mother-tongue. The mother-tongue is the entrance to the true life of the community which has a direct and permanent influence on the individual. It is a means of enriching one's social usefulness and culture. It is also a means of self-correction and self-education. Language necessarily leads to literature, and also to the whole literary heritage. A thorough grasp of the mother-tongue is a means to participation in the pride and glory of several generations which the heritage mirrors up before the eager participant. A nation of character can be guaranteed if the mother-tongue is given the first place in the educational system, and every citizen is helped to participate in the enjoyment of the literary heritage of the mother-tongue.

Discussing the value of oral work, Professor Reddiar has rightly emphasised the role of questioning as an important technique in the promotion of oral competencies. I remember a teacher of mine in the Columbia

University telling me that the correct measure of the best class-room teaching is the skill to use the question technique. How many teachers use the technique for any other purpose than for killing time ruthlessly? Good questioning is mutual inspring. While the teachers' questions, in the ideal set-up, result in both learning and internalisation of knowledge, the students' questions, whatever they are, result in improved teaching. Questioning is not the prerogative of the teacher. Unfortunately, in the Western pedagogical tradition, questioning is indicated mostly as a weapon in the hands of the teacher. Questioning, in its technical connotation, means mostly the questioning by the teacher. There is very little said about student-questioning. No doubt, in recent times, especially after Dewey codified the scattered bits of the democratic pbilosophy of education and made it the basis of a number of practicable class-room techniques, American teachers have realised the educational value of student-questioning. But it was only in India that the true value of questioning as an educational technique was developed. The concepts of *vina* and *prasna* are at least as old as the earliest books in Tamil and Sanskrit literatures extant. Much in the heritage of Tamil literature has been the inspiration of student-questioning. There is the convention of many books being in the question-answer form; and one would suspect that the convention itself developed from a real practice. Parvati is the questioning student *par excellence*, and Iswara is the answering teacher *par excellence*, be it Astrology, Astronomy, Medicine, Physics or Metaphysics. The author has done very well by giving this technique the pride of place in oral work.

Another aspect of oral work which has come in for detailed attention at the hands of our author relates to the need for speech education as an integral part of language education. Not many, even among Tamilians, may know that the Tamil language is among the first languages of the world to have systematised its phonetics in the manner found in the *Tolkappiam* and later gramatical works. Ignorance of this has led to disastrous consequences. Though, unlike in Sanskrit, the letter symbols of Tamil do not cover all sounds, some of the letters in combination in a word do have sounds other than the basic ones for which they stand in the alphabetical system. Thus, we write in Tamil *Ka, m, pa, n.* In combination as a word unit we do not pronounce it or transliterate it as 'Kampan' but as 'Kamban'. Another instance is *Pa, n, ta, m.* This is not transliterated as 'Pantam' but as 'Pandam'. *Ko, n, tu,* is not to be transliterated as 'Kontu' but as 'Kondu'. *Va, n, t, aa, n* is not 'Vantaan' but 'Vandaan'. We could multiply instances in respect of the multiple sound-purposes of certain letters in combination in words. Professor Reddiar has devoted the requisite length to the importance of the *'Oli Iyal'* in Tamil. I am not aware of any other scholar in Tamil who has emphasised the need for codifying the phonetic principles of Tamil as they are available in the earliest grammatical works; and the day may not be far off when Professor Reddiar's inspiration produces a Daniel Jones for Tamil.

The discussion on oral and silent reading is really scholarly. The author has distinguished three types of reading: developmental, recreational and functional. Language education is, to a large extent, self-education in so far as it relates to the mother-tongue. The role of the teacher will be as much a negative one as it would

be a positive one. The negative aspect of the teaching work will include the undoing of the wrong influences of the home and the community in speech and writing. The mother-tongue, in its spoken form at home and in the community, is not only full of colloquialisms but also regional variations. Before my visit to England I had imagined that in the whole of the British Isles there was one uniform way of speaking the English language. But when I visited the different parts of the country, I discovered there were regional variations. I was left wondering which was *the standard form*. In the United States where English has been accepted as the language of the nation with certain modifications, the variations in speech result from two factors. One is, that the Americans have developed a basic speech pattern with inflections, modulations and pauses, determined more or less uniformly. Another is, that even within this uniformity there is influence of the original mother-tongue of the community. A predominantly Italian community domiciled in an area shows itself up by the way it speaks the national language which has also become the community's mother tongue. There can be no denying the fact that there are regional variations in respect of Tamil speech also. Certain mistakes of speech are perpetuated in each area, and Professor Reddiar has listed these. The function of the teacher is to wean the learner from such incorrect habits as may be inculcated in the home and community environment of the learner. The positive role relates to the inculcation of the right language habits. But even the best teaching by the ablest teacher can only be a beginning. It must be completed by the reading of the three types of reading material suggested by Professor Reddiar. No modern educationist will underrate the value of library reading as integral to the

process of learning. What the teacher initiates, the library completes. The pity of it, however, is that, even in the year of grace 1964, the libarary is considered a luxury in not a small number of high schools in Tamilnad. A year ago I assisted in a survey of libraries, and the revelation shocked me. Only a few schools could boast of anything like a library. Some schools have a few almirahs containing books most of which are of no use either to the teachers or to the students. Even if we should concede that a collection of books, whatever they are, is a library, and apply this definition to defend an unhappy situation in our schools, there can be no escaping the fact that the number of good Tamil books in the libraries of most schools can be counted on the fingers of both hands. The current harvest in the field of Tamil literature is as rich as it should be. Excellent reading material has been put out in recent years in Tamil; but very few schools have bestowed any thought on the question of organising a good Tamil section in the library.

The section on Tamil literature appears to be the best part of the book. I am particularly impressed with the author's treatment of poetry. He rightly emphasises the role of poetry as an instrument of educating the emotions. He warns the pedagogical surgeons among Tamil Pandits against performing purposeless surgery on beautiful poems in the name of grammar and paraphrase. Poetry is not for dissection; it is for enjoyment. It is one of the major ingredients in aesthetic education.

In this connection, I would commend the following books of Professor Reddiar for careful study: *Kavingnan Ullam*, *Kalingathupparani Aaraichi*, *Kaathal Oviyangal*, and *Kavithai Anubhavam*.

The place of grammar, the need to promote expression through the written word and the development of creative writing in Tamil have received really expert treatment at the author's hands. I am fascinated by the section on 'Teacher Planning' in which he advocates the preparation of a blue-print of the whole year's work by the teacher. I should like to congratulate the learned author on his masterly treatment of the concept of Evaluation in its appropriateness to Tamil.

Profesor Reddiar has not, however, discarded whais of essence in the writings of experts in Linguistics. The merit of his work lies in its eclectic approach, coalescing what is still valid in the traditional approach and what Western educational thinking has to furnish as its cream. The bibliography at the end of the book is the key to the way the author's mind must have worked at the time of his writing the book.

The glossary of technical terms, many of which he has coined, must prove the forerunner to more exhaustive glossaries.

I am thankful to Professor Reddiar for the honour he has done me by asking me to write the Foreword to his *magnum opus*. The value of this work is bound to increase with the greater realisation of the new contribution it has made and the new vistas it has opened up to the teachers of Tamil for whom it is primarily intended.

S. THIRUVENKATACHARI
Professor of Education,
Dr. Alagappa Chettiar Training College.

Karaikudi
20-2-1964

கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

கலிங்கத்துப் பரணியை நன்கு ஆராய்ந்து ஆங்காங்குள்ள
நயங்களை எல்லாம் பேராசிரியர் ஈண்டு அழகுபட எடுத்துக்
காட்டியிருக்கிறார். ‘கடை திறப்பின் உட்பொருள்’ என்ற பகுதியில்
பேராசிரியர் காட்டியிருக்கும் கருத்து
மிகவும் பாராட்டுதற்குரியது.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939353-8-5

eBOOK ~ *மின் நூல்*



அணிந்துரை


கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி 1957

வழங்கியோர்:

Mr VRM Chettiar
Publisher
Star Prasuram

உயர்திரு இராய. சொ.
தமிழ்க்கடல், இலக்கியச்செல்வர் – காரைக்குடி







APPRECIATION

By V. R. M. Chettiar, B. A.

Here is a sound delightful critical study of a great Tamil classic Kalingathu Parani (கலிங்கத்துப் பரணி) sung by the poet Jayam Kondan of the 12 th Century A. D.

Our critic Sri. N. Subbu Reddiar, M. A., B. Sc., L. T. has critically summarised within a short campass the central situations of the poetic narrative, psychologically emphasising the inspired poetic excellences of this great classic, and subtly interpreting the hidden poetic splendour of certain glorious passages which reveal, and revel in the glory of the human war and human love wherein demons also enjoy their unique participation by a tumultuous display of their revelrous dance and ceaseless gluttony, when the King's victory is cheerfully celebrated as a great public exhilaration.

Our author Mr. N. Subbu Reddiar, already the author of "கவிஞன் உள்ளம்", has used a very simple effectual prose as a convenient medium for interpreting Jayam Kondan's mighty poetic masterpiece, and has surely succeeded in achieving a lucid exposition of the poetic theme of glorious war and glorious love, without allowing any confusion to creep in.

Kalingathu Parani, as a poetic composition, is a close-knit tangle of heavy human incidents culminating in the overwhelming glory and distinction of the great king Kulothunga and his commander-in-chief Karunakara Thondaiman.

The Thalisai (தாழிசை) Metre has been so very skilfully handled by Jayam Kondan that the poetic movement of the entire poem is easy, natural, rapturous, and enjoyable indeed—, certainly a perpetual delight!

I have enjoyed this entire criticism, and I strongly believe that this book may be safely recommended as a suitable Tamil text for the College and University classes.

Karaikudi

29—3—1957 V. R. M. CHETTIAR

அறிமுகம்

'கலிங்கத்துப் பரணி' சுவைமிக்க ஓர் அரிய நூல். தமிழ்த் தாய் பெற்ற அரிய அணிகளுள் கலிங்கத்துப் பரணி சிறந்த இடம் பெறுகின்றது. வீரச் சுவைக்கு நிலைக்களனை கலிங்கத்துப் பரணி, காதல் சுவையை அதனினும் திறம்பட எடுத்துக் கூறுவது பாராட்டி மகிழ்தற்குரியது. பதின்மூன்று பகுதிகளைக் கொண்ட இப் பரணி நூலில் 'கடை திறப்பு' என்ற ஒரு பகுதி, காதற் சுவையைப் பிற எந்த நூலினும் மேம்பட வாரி வழங்குகிறது.

நடையருப் பெருந்துறவியாகிய . தாயுமான அடிகளும் இப் பரணி நூலின் கடைதிறப்புப் பகுதியில் உள்ளத்தைப் பறிகொடுத்து "உபய தனம் அசையில்" என்ற தாழிசையை எடுத்துத் தமது பாட்டில் நயம்படக் கையாண்ட முறையை இத் திறனய்வு நூலில் எடுத்துக் காட்டியிருக்கிறார் அன்பர் சுப்பு ரெட்டியார்.

கவிஞர் சயங்கொண்டார் சுமார் 800 ஆண்டு கட்கு முன்னர் இருந்தவர் என்று காலக் கணக்கர் கூறுவர். சயங்கொண்டாரின் பாடல்களில் அவருக்கு முன்னே இருந்த சிறந்த புலவர்களின் கருத்துச் செறிவை ஆங்காங்குக் காணலாம்.

காணுக்கால் காணேன் தவருய ; காணுங்கால்
காணேன் தவறல் லவை

என்ற திருக்குறளையும்

மாணார்க் கடந்த மறவெம்போர் மாறனைக்
காணாக்கால் ஆயிரமும் சொல்லுவேன்;-கண்டக்கால்
பூண்ஆகம் தாவென்று புல்லப் பெறுவேனோ
நாணோடு உடன்பிறந்த நான்.

என்ற முத்தொள்ளாயிரப் பாடலையும் உள்ளத்திற் கொண்டே,

பேணுங் கொழுநர் பிழைகளெலாம்
பிரிந்த பொழுது நினைந்துஅவரைக்
காணும் பொழுது மறந்திருப்பீர்
கனப்பொற் கபாடந் திறமினோ

என்று சயங்கொண்டார் பரணியில் பாடியிருத்தல் வேண்டும்.

தரைமகளும் தன்கொழுநன் உடலந் தன்னைத்
தாங்காமல் தன்னுடலால் தாங்கி விண்ணாட்டு
அரமகளிர் அவ்வுயிரைப் புணரா முன்னம்
ஆவிஒக்க விடுவாளைக் காண்மின் காண்மின்

என்ற கலிங்கத்துப் பரணிப் பாடலில் உள்ள வீரச் சுவையும் கருத்து நயமும் ஈடும் எடுப்பும் அற்றவை.

சிற்றரசர்கள் பேரரசர்களின் அடியில் விழும் போது திருவடியில் சூடும் முடிபற்றி, கவிச் சக்கரவர்த்தி கம்பன் உள்ளிட்ட புலவர் பலரும் பாடியுள்ளனர். எனினும்,

முடிசூடும் முடியொன்றே முதல்பயன் எங்கோமான்
அடிசூடும் முடிஎண்ணில் ஆயிரம்நூ றாயிரமே.

என்ற சயங்கொண்டாரின் பாட்டு எல்லாவற்றிற்கும் சிகரமாக விளங்குகின்றது.

ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
மானவ னுக்கு வகுப்பது பரணி

என்ற இலக்கணத்துக்கு

மாவா யிரமும் படக்கலிங்கர்
மடிந்த களப்போர் உரைப்போர்க்கு
நாவா யிரமும் கேட்போர்க்கு
நாளா யிரமும் வேண்டுமால்

என்ற சயங்கொண்டாரின் பாட்டு இலக்கியமாக நயம்பட அமைந்திருக்கின்றது.

எடுத்துக்கொண்ட பாட்டுடைத் தலைவன் கடவுள் அவதாரமே என்று கொண்டு,

தேவரெலாம் குறையிரப்பத் தேவகிதன்
திருவயிற்றில் வசுதே வற்கு
மூவுலகுந் தொழநெடுமால் முன்னொருநாள்
அவதாரஞ் செய்த பின்னை,

அன்றிலங்கை பொருதழித்த அவனேஅப்
பாரதப்போர் முடித்துப் பின்னை
வென்றிலங்கு கதிராழி விசயதரன்
எனஉதித்தான் விளம்பக் கேண்மின் !

என்று ஆசிரியர் பாடியிருக்கும் நயம் பெரிதும் இன்புறத் தக்கது.

அருமறையின் நெறிகாட்ட அயன்பயந்த
நிலமகளை அண்டங் காக்கும்
உரிமையினில் கைப்பிடித்த உபயகுலோத்
தமன்அபயன் வாழ்க்

என்று பாட்டுடைத் தலைவனை ஆசிரியர் வாழ்த்துவது சீரியது.

இந்தக் கலிங்கத்துப் பரணி என்ற அரிய நூலுக்குத் திறவுகோலாக அமைந்திருப்பது 'கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி' என்னும் இந்த நூல். இத் திறனாய்வு நூலை எழுதியவர், என் அரிய நண்பரும் நன்கு கற்றவரும் வள்ளல் அழகப்பனாரின் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவருமாகிய அன்பர் சுப்பு ரெட்டியார் அவர்கள். அன்னார் கலிங்கத்துப் பரணியை நன்கு ஆராய்ந்து ஆங்காங்குள்ள நயங்களை யெல்லாம் இந்நூலில் அழகுபட எடுத்துக் காட்டியிருக்கிறார். கலிங்கத்துப் பரணி கற்பார்க்கு இந்நூல் பேருதவி செய்ய வல்லது.

'கடைதிறப்பின் உட்பொருள்' என்ற பகுதியில் திரு. ரெட்டியார் காட்டியிருக்கும் கருத்தே கொள்ளத்தக்கது. தமிழ் மக்கள் இந்நூலையும் இதற்கு மூலமாகிய கலிங்கத்துப் பரணி நூலின் சிறந்த பாடல்களையும் படித்து உணர்ந்து இன்புற்று உயரத் தமிழ்த் தாய் அருள்வாளாக.

வணக்கம்.

ராய. சொ.

29-3-57

அணுவின் ஆக்கம்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015-2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

அணு அறிவைப்பற்றிய அரிய கருத்துக்களைச்
சாதாரண மக்களும் புரிந்துகொள்ளக்கூடிய
முறையில் இந்நூல் எழுதப்பெற்றுள்ளது.
புதிய புதிய அறிவியல் சொற்களைக்
கையாண்டிருப்பது தமிழுக்குப் புதியதொரு வளத்தைக்
கொடுக்கின்றது.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939430-9-0

eBOOK ~ மின் நூல்




அணிந்துரை

அணுவின் ஆக்கம் 1958

வழங்கியோர்:

உயர்திரு சி. சுப்ரமணியம்
சென்னைமாநில நிதி, கல்வியமைச்சர்







சென்னைமாநில நிதி, கல்வியமைச்சர்
உயர்திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் அளித்த

முன்னுரை

உயரிய விஞ்ஞானக் கருத்துக்களைத் தமிழில் சொல்ல முடியுமா? இதற்கு விடையளிக்கும் முறையில் திரு. சுப்பு ரெட்டியார் "அணுவின் ஆக்கம்" என்ற நூலை எழுதி முடித்திருக்கிறார். அணுவைப்பற்றிய அறிவு இன்றைக்கு விஞ்ஞானத் துறையின் சிகரமாக விளங்குகிறது. இந்த அறிவின் காரணமாக உலகில் பல்வேறுவித புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டு வருவதை நாம் காண்கின்றோம்.

'சடம் வேறு, சக்தி வேறு' என்பது முன்னுளைய விஞ்ஞானத் தத்துவம். பிரபஞ்ச முழுவதும் சக்தி மயம் என்ற வாதம் அறிவுக்கு எட்டாதது மட்டுமல்ல, ஒவ்வாதது என்று விஞ்ஞானப் பேரறிஞர்கள் கருதினர். ஆனால், இன்று சடமும் சக்தியும் ஒன்றே என்பதை விஞ்ஞானமே நிரூபித்துக் காண்பிக்கின்றது.

அத்துடன் அணு சக்தியைக்கொண்டு பல்வேறு துறைகளில்—தொழில்துறை, விவசாயத்துறை, மருத்துவத்துறை—நாம் இதுவரையில் எதிர்பாராத பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுவருவதை இன்று காண்கின்றோம்.

அணு அறிவைப்பற்றிய அரிய கருத்துக்களைச் சாதாரண மக்களும் புரிந்துகொள்ளக்கூடிய முறையில் இந்நூல் எழுதப்பெற்றிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. புதிய புதிய விஞ்ஞானப் பதங்களைக் கையாண்டிருப்பது தமிழுக்குப் புதியதொரு வளத்தைக் கொடுக்கின்றது.

மாணவர்களுக்கும் பெரியோர்களுக்கும் இந்நூல் பெரிதும் பயன்படக்கூடியது.

செயின்ட் ஜார்ஜ் கோட்டை,
சென்னை.
22-7-58

சி. சுப்பிரமணியம்.

காலமும் கவிஞர்களும்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

கட்டுரைகள் யாவும் பழமையையும், புதுமையையும்
இணைத்து வழுவின்றி வருங்காலத்திற்கு
ஏற்ற கருத்துக்களை வழங்குகின்றன. தமிழ்
மாணவர்களும், பொது மக்களும் இவற்றினைப்
படித்துத் தமிழ்க் கலையின் பல
கோணங்களைக் காணலாம்.

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

ISBN: 978-81-939353-7-8



eBOOK ~ மின் நூல்




அணிந்துரை

காலமும் கவிஞர்களும் 1958

வழங்கியோர்:

உயர்திரு பி. துரைக்கண்ணு முதலியார்
முதல்வர், காரைக்குடி அழகப்பா பயிற்சிக் கல்லூரி







காரைக்குடி அழகப்பா பயிற்சிக் கல்லூரி

முதல்வர்

உயர்திரு. ப. துரைக்கண்ணு முதலியார்

அவர்கள் அளித்த

முன்னுரை

கவிஞர்கள் காலத்தையும் வாழ்க்கையையும் சித்திரிக்கும் மேதைகள். அன்னாருடைய கவிதைகள் கற்பனைகளைத் தம்மகத்தே ஏற்று, சொல்லோவியங்களைத் தருகின்றன. இயற்கையோடு இயைபு காண்பவர்களும் கவிஞர்களே. அவர்கள் இயற்கைக் கூத்தினை இறுகப் பிடித்து இடத்திற்கேற்பத் தாம் சித்திரிக்கும் காட்சிகளில் இணக்கத்தையும் காண்பார்கள். அவர்களுடைய சித்திரங்கள் பலபடியாகப் பெருகிவிட்டால் காவிய நிலை எய்துகின்றன. காவியப் பாத்திரங்கள் நிலவும் நாடு பல்வேறுபாடுகளுக்கிடையே எல்லா நாட்டினர்க்கும் எக்காலத்திற்கும் உடன்பாடாக அமைகின்றது. நாட்டு மக்கள் நலம்பெற இறை வழிபாட்டினை மேற்கொண்டு ஆன்ம ஆற்றலுக்கு வழி தேடுகின்றனர்; உள்ளம் தூய்மை எய்தியபிறகு அவர்களது அறிவு ஊற்றுப் பெருக்கடைகின்றது; அதனால் அறிவியல் வளர்ச்சி பெற்று நாட்டுக்கு அப்பாலுள்ள அறிவினைத் தழுவுவதற்கு வேற்று மொழிகளில் அமைந்துள்ள கருத்துக்களையும் அவாவுகின்றனர். அத்தகைய முயற்சியில் தமது மொழியின் அகலத்தையும் ஆழத்தையும் கண்டு வியக்கும் நிலை ஏற்படுகின்றது. பிறநாட்டு நோக்கினோடு ஏற்படும் தொடர்பு காரணமாக வாணிகம் வளர்கின்றது. அங்ஙனம் தொடர்பு கொள்ளும் பொழுது தூய்மை நெறியினை அடிப்படையாகக்கொண்டு உறவினை அறநெறியில் அமைக்கும் முயற்சி உருவாகின்றது. வழிவழியாக அறநெறி தழைக்க வளரும் பயிர்களான வருங்கால மக்களுக்குப் பண்பூட்டும் வழியினைக் காணவும் வேண்டியதாகின்றது.

மேற்கூறிய வகைகளில் பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் எழுதி உதவியுள்ள 'காலமும் கவிஞர்களும்' என்ற முதற் கட்டுரைத் தலைப்பையே மகுடமாகக் கொண்டது இந்நூல். கவிஞர்களின் வழியாக அமைந்து மிளிரும் நந்தமிழ் நாட்டுக் கவிதைகள், காவியங்கள், இறைவழிபாடுகள், அறிவியல் ஆற்றல்கள், வாணிக முறைகள், நமது மொழியின் வரலாற்று இலக்கணங்கள் ஆகிய கருத்துக்களைத் திறனாய்வு முறையில் தெளிந்த நடையில் பன்னிரு கட்டுரைகளாக அடக்கிக்கொண்டு ஒரு கட்டுரைக் கருவூலமாகத் திகழ்கின்றது. சிறப்பாக, பாரதியின் பாஞ்சாலி சபதத்தின் காப்பியப் பெருமைகளும், பண்டைத் தமிழரின் அறிவியல் அறிவுத் துறைகளும், திராவிடமொழி நூலின் தெளிந்த வரலாறும், ஆசிரியரின் ஆராய்ச்சித் திறனைப் புலனாக்குகின்றன. 'தமிழுடன் ஆங்கில உறவு' என்னும் தலைப்புக் கொண்ட கட்டுரை நந்தமிழுக்கு இந்நிலையில் ஆக்கம் காணும் வழிகளை வகுக்கின்றது. அவற்றினைத் தமிழ்கூறு நல்லுலகம் நன்கு சிந்தித்துப் புதிய துறைகளில் தமிழை வளர்க்க முனைதல் வேண்டும். 'புத்தர் காட்டிய நெறி' தமிழ் நெறியாகவே மணிமேகலையிலிருந்து பிழிந்தெடுக்கப்பட்டிருக்கின்றது. 'வளரும் பயிர்' நம் நாட்டு வருங்கால மக்களுக்கு வழுவாது வகுக்கவேண்டிய வகையினை வற்புறுத்துகின்றது.

இந்நூலினைத் தமிழ் மக்கள் நன்முறையில் வரவேற்பார்களென்பது திண்ணம். கட்டுரைகள் யாவும் பழமையையும் புதுமையையும் இணைத்து வழுவின்றி வருங்காலத்திற்குஏற்ற கருத்துக்களை வழங்குகின்றன. தமிழ் மாணவர்களும், பொது மக்களும் இவற்றினைப் படித்துத் தமிழ்க் கலையின் பல கோணங்களைக் காணலாம். இந்நூலினைக் கல்லூரி வகுப்புக்களுக்கும் பாடமாக்கி ஆசிரியரை ஊக்குவிப்பது நமது கடமையாகும்.

சுப்பிரமண்ய புரம்
24—1—58 **ப. துரைக்கண்ணு முதலியார்**

மானிட உடல்

தமிழாக்கம்: பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

இந்த மொழியாக்க நூல், உடலைப்பற்றி உடல்நூல்
வல்லுநர்கள் நவீன காலத்தில் ஆராய்ந்து
தெரிந்து கொண்டுள்ள உண்மைகளை
எல்லாம் ஜனரஞ்சகமான முறையில்
எளிய நடையில் வழங்குகிறது.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939430-8-3

eBOOK ~ மின் நூல்

ந சுப்பு ரெட்டியார் 1916 2016 100 நூற்றாண்டு விழா நிகழ்வுகள்




அணிந்துரை

மானிட உடல் 1958

வழங்கியோர்:

திரு அ. லெ. நடராஜன்
பதிப்பாளர்







பதிப்புரை

ஒரு நாட்டின் முன்னேற்றமும் சுபீட்சமும் அந்த நாட்டின் அரசியல் சுதந்திரத்தை மட்டும் பொறுத்ததாக இல்லை. இருபதாம் நூற்றாண்டின் இன்றையச் சூழ்நிலையில், விஞ்ஞான அறிவையும் அந்த அறிவை அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்துவதையும் பொறுத்தே ஒரு நாட்டின் முன்னேற்றமும் சுபீட்சமும் இருக்கின்றன என்று துணிந்து கூறலாம்.

இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், ருஷ்யா, ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஜப்பான் முதலிய நாடுகள் விஞ்ஞானத் துறையிலும் அதன் பயனாய்த் தொழில் அபிவிருத்தித் துறையிலும் அபரிமிதமான முன்னேற்றம் அடைந்துள்ளன; இந்த நாடுகளில் எல்லாம் விஞ்ஞானக் கல்வியை, உயர் நிலைப் பள்ளியிலிருந்து பல்கலைக் கழகப் படிப்புவரை, அந்தந்த நாட்டின் தாய்மொழி மூலம்தான் சொல்லிக் கொடுக்கிறார்கள். இங்கிலாந்தில் சகலவிதமான போதனைகளும், ஆங்கில மொழிமூலமே போதிக்கப்பெறுகின்றன. ருஷ்யாவிலும் மற்ற நாடுகளிலும் அப்படித்தான். அதனால் அந்த நாடுகளில் எல்லாம் விஞ்ஞானமும் விஞ்ஞானம் பற்றிய அறிவும் விரைவில் வளர்கின்றன; எளிதில் பரவுகின்றன.

நம் நாட்டில், குறிப்பாகத் தமிழ்நாட்டில், நிலைமை அப்படி இல்லை. நாம் அரசியல் சுதந்திரம் பெற்றிருப்பது உண்மைதான்; ஆயினும், அறிவுச் சுதந்திரம் நமக்கு இன்னும் கிட்டிய பாடாக இல்லை. நாம் பெற விரும்புகிற, போதிக்க விரும்புகிற விஞ்ஞான அறிவுகளை எல்லாம், நம் தாய்மொழி மூலமே அல்லாமல், வேற்று மொழியான ஆங்கில மொழி மூலமே பெறவேண்டியதாக இருக்கிறது. ஆங்கிலேயர்களின் அரசியல் பிடிப்பிலிருந்து விடுதலைபெற்றுவிட்ட நாம், அவர்களின் தாய் மொழியான ஆங்கிலத்தின் பிடிப்பிலிருந்து இன்னும் விடுதலை பெற முடியாமல், விடுதலை பெறுவதற்கு வழியும் தெரியாமல் அந்த மொழிக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறோம்; அப்படிக் கிடப்பதை பெருமையாகக் கருதுபவர்களும் நம்மிடையே இருக்கிறார்கள்.

இந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டால்தான், ஆங்கிலத்தின் பிடிப்பிலிருந்து விடுதலை பெற நாம் முயற்சி எடுத்துக் கொண்டால்தான், நம் தாய்மொழியான தமிழ் மொழி வளரும்; நாடும் முன்னேற்றம் அடையும்.

நாளுக்கு நாள் விஞ்ஞானம் வளர்ந்துகொண்டே இருக்கிறது; அதனால் புதிய புதிய விஞ்ஞானச் சொற்களும் தோன்றிய வண்ணம் இருக்கின்றன. உதாரணமாக, கார் என்பது பற்றி ஆங்கிலத்தில் உள்ள சொற்களைப் பார்க்கலாம்.

1. Car	3. Sedan	5 Taxi	7. Truck	9. Van
2. Tourer	4. Baby car	6. Lorry	8. Bus	10. Jeep

இந்தப் பத்துச் சொற்களும் காரைக் குறிப்பிடுகின்ற சொற்கள்தான். இந்த ஆங்கிலச் சொற்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு வகையான உருவ அமைப்பும் வெவ்வேறு வகையான உபயோகமும் உள்ள ஒரு காரைக் குறிக்கிறது என்பதை யாவரும் எளிதில் புரிந்துகொள்ளலாம். லாரி என்பது சரக்குகளை ஏற்றிச் செல்வதற்காக உள்ள கார் என்பதும் பஸ் என்பது ஜனங்களை ஏற்றிச் செல்லும் கார் என்பதும் அனைவரும் அறிந்த விஷயமாகும்.

கார் பற்றிய இந்த வேறுபாடுகளை எல்லாம் குறிப்பதற்குத் தற்பொழுது தமிழில் சொற்கள் இல்லை; நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இந்தச் சொற்கள் எல்லாம் தமிழ்மொழியில் நுழைந்து, தமிழாகவே ஆகிவிட்டன. விஞ்ஞான நூல்கள் தமிழில் அதிகமாக வெளிவர வெளிவர, மக்கள் அதைப் படிக்கப் படிக்க, கலைச் சொற்கள் பற்றியுள்ள இத்தகைய சில்லறைச் சிரமங்கள் நாளடைவில் குறைந்து போகும்.

மானிட உடல் என்னும் இந்த நூல், உடலைப்பற்றி உடல்நூல் வல்லுநர்கள் நவீன காலத்தில் ஆராய்ந்து தெரிந்துகொண்டுள்ள உண்மைகளை எல்லாம் ஜனரஞ்சகமான முறையில் எளிய நடையில் கூறுகிறது.

ஆங்கிலத்தில் உள்ள மூல நூலைத் தமிழில் மொழிபெயர்ந்து வெளியிட அனுமதி வாங்கித் தந்த, யுனைடெட் ஸ்டேட்ஸ் இன்பர்மேஷன் சர்வீசாருக்கு (U. S. I. S.) - ஐக்கிய அமெரிக்க நாடுகளின் செய்தி இலாகாவினருக்கு - எங்கள் நன்றி உரியது.

சென்னை }
20-4-'58 }

அ. லெ. நடராஜன்.

கல்வி உளவியல்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015-2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளுக்கும்
கலைவளர்ச்சியில் நாட்டமுள்ள
பெருமக்களுக்கும் பெரும்பயன்
அளிக்கவல்ல அரிய நூல்

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-936450-9-3

eBOOK ~ மின் நூல்



அணிந்துரை

கல்வி உளவியல் 1961


வழங்கியோர்:

உயர்திரு ஜி.ஆர். தாமோதரன்
Principal, PSG College of Technology, Coimbatore

TA Purushottam
Principal, Sri Venksteswara University College, Tirupathi

திரு வை.நா. சுப்பிரமணியம்
உளவியல் பேராசிரியர்
டாக்டர் அழகப்ப செட்டியார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி







உயர்திரு ஜி. ஆர். தாமோதரன் அவர்கள்

(Principal, P. S. G. College of Technology, Peelamedu)

மனமுவந்து அளித்த

அணிந்துரை

"கல்வி உளவியல்" என்ற இந்நூலின் வாயிலாகப் பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் தமிழுக்குச் சிறந்த தொண்டு ஆற்றியுள்ளார். இந்நூல் மாணவர்களுக்குப் பாடங் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கேயன்றித் தம் குழந்தைகளின் கல்வி வளர்ச்சியில் பெரிதும் நாட்டமுடைய தமிழ்ப் பொது மக்களுக்கும் மிகவும் பயனளிப்பதாகும். இத்தகைய நூல்கள் தற்போது தமிழ்நாட்டிற்கு மிகமிகத் தேவையாகும். இதுவரை கல்வி உளவியலைப்பற்றி வெளிவந்துள்ள தற்கால அரிய கருத்துக்களை மிகச் செம்மையான முறையில் இந்நூலில் அமைத்து விளக்கியுள்ளார் இந்நூலாசிரியர். இவர் தம் வகுப்பறையில் உளவியலைப் பயன்படுத்திப் பாடம் கற்பிப்பவர் என்பது இந்நூலினின்று நன்கு விளங்குகின்றது. தற்காலக் கல்வியியல் கொள்கைக்கும் நம் பழைய இலக்கியங்களிலிருந்து புலனாகும் பழங்காலக் கொள்கைகளுக்கும் ஒற்றுமை காணும் இவர்திறத்திலிருந்து இவர்தம் உளவியல் நுட்பம் புலனாகின்றது.

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும், கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்" என்ற பாரதியாரின் ஆணையை இவர் நிறைவேற்றியுள்ளார் எனலாம்.

அடிக்குறிப்பாகப் பல கலைச்சொற்களுக்கு நேரான ஆங்கிலச் சொற்கள் தரப்பட்டுள்ளன. இவற்றைத் திரட்டி நூலின் இறுதியில் பின்னிணைப்பு-2 என ஆசிரியர் இணைத்துள்ளார். இது மிகவும் பயனளிப்பதாகும். 'கல்லூரித் தமிழ்க் குழுவினர்' வெளியிட்டுள்ள உளவியல் தமிழ்க் கலைச்சொற்களை இவர் தம் நூலில் பெரிதும் பயன்படுத்தியிருப்பது போற்றுதற்குரியது. இந்நூல் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளுக்கும் கலைவளர்ச்சியில் நாட்டமுள்ள பெருமக்களுக்கும் பெரும் பயன் அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

பீளமேடு
9—1—1961

ஜி. ஆர். தாமோதரன்.

AN INTRODUCTION

Sri N. Subbu Reddiar, well-known for his prolific output of publications, has achieved a singular distinction among non-psychologists who have produced a valuable work in Psychology. The work which it is my proud privilege here to introduce,—KALVI ULAVIYAL—, is a competent text-book for teachers in Educational Psychology. The author has taken great pains to draw his material from standard psychological works and has vastly succeeded in presenting it through the medium of Tamil with remarkable effect. In so doing, he has made a noteworthy contribution not only to the National Programme of encouraging the publication of Scientific Works in the regional languages, but also to the wealth of the Tamil literature itself.

Sri Subbu Reddiar's glossary of technical terms in the domain of Psychology would have challenged the ability of the most recondite and inspired scholars for rendering into Tamil. The Tamil equivalents for psychological terms evolved by the author would themselves constitute a rich and enduring contribution to the repertory of scientific words in the language. Any system of Educational Psychology has to reconcile at least three fundamental interests: (a) It should present a body of principles widely acclaimed to be valid as a science; (b) it should be practical of application; and (c) it should not be unduly out of harmony with the conceptions of personality and the system of values reflected in the authentic culture of the region where the educational process is being tried out. I have no doubt that as a writer of impressive achievement and a teacher with varied experience, the author has responded in this work to the challenge of all three difficult demands. As a non-professional student and thinker, Sri Subbu Reddiar is in a happier position to reconcile the first and last objectives than the professionals. He has also the advantage of rare gifts in achieving high standards of exposition.

I commend the work to Teachers and the General Public as a substantial piece of public service by one competent in the special theme he has chosen and gifted in the art of communication of his ideas.

SRI VENKATESWARA
UNIVERSITY COLLEGE,
TIRUPATI.

T. A. PURUSHOTTAM
Principal.

டாக்டர் அழகப்ப செட்டியார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி

உளவியல் பேராசிரியர்

திரு. வை. நா. சுப்பிரமணியம் அவர்கள்

பி.ஏ. (ஆனர்சு).,எல்.டி.

மனமுவந்து அளித்த

முன்னுரை

பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் எழுதிய "கல்வி உளவியல்" என்னும் நூல் இப் பொருள்பற்றித் தமிழில் வெளிவந்துள்ள நூல்களில் சிறந்ததொன்று. இன்றைய சூழ்நிலையில் விஞ்ஞானம் போன்ற துறைகளில் தமிழில் நன்கு எழுதப்பட்ட நூல்களுக்குத் தேவையதிகம். ஆனால், இம்மாதிரி நூல்களை நல்ல தமிழில் எழுதுவது அவ்வளவு எளிதான காரியமல்ல. தமிழ் நன்ருகக் கற்றறிந்தவர்களுக்கு விஞ்ஞானம் போன்ற துறைகளில் போதிய பயிற்சி இருப்பதில்லை ; அவ்வாறே விஞ்ஞானத்தில் தேர்ச்சி மிக்கவர்களுக்குத் தமிழில் போதிய பயிற்சி இருப்பதில்லை. இரண்டுவிதப் பயிற்சியும் ஒருவரிடம் ஒருங்கே அமைவது மிகவும் அரிது.

பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் விஞ்ஞானம், தமிழ் ஆகிய இரண்டு துறைகளிலும் நன்கு தேர்ச்சி பெற்றவர். மேலும், ஏற்கெனவே தமிழில் பல விஞ்ஞான நூல்களை எழுதிய அனுபவத்தின் பயனுக உளவியல் போன்ற துறைகளில் தமிழில் எழுதுவதற்கு மிகவும் தகுதி வாய்ந்தவராகின்ருர். மற்ருெரு விதத்திலும் இந்த நூலை எழுதுவதற்கு அவர் தனித் தகுதி வாய்ந்தவராகின்ருர். அஃது அவருடைய ஆசிரிய அனுபவத்தைமட்டிலும் பொறுத்ததன்று. இதையும்விட மேலாக உளவியலுக்கும் இலக்கியத்திற்கும் உள்ள தொடர்புதான் அந்தத் தகுதியை அவருக்கு அளிக்கின்றது. மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் பெருங்காப்பியங்கள் வாழ்க்கையில் உள்ள போராட்டங்களைச் சித்திரித்துக் காட்டுவதுபோல் தோன்றும். ஆனல், பெட்ரண்ட் ரஸ்ஸல்

கூறுவதுபோல், மனிதர்களுடைய வாழ்க்கைப் போராட்டங்கள் யாவும் தனிமனிதனின் உள்ளத்திலேயே ஆரம்பமாகின்றன. ஆழ்ந்து நோக்கினுல் அவை மனிதர்களின் உள்ளத்தினுள்ளே அமைந்து கிடக்கும் போராட்டங்களையும், அவர்களைப் பற்பல செயல்களில் ஊக்குவிக்கும் விசைகளையும் அவர்களுடைய ஆற்றல்களையுமே காட்டுகின்றன. கதாபாத்திரங்கள் ஒவ்வொருவரும் மனிதர்களிடையேயுள்ள பல்வேறு வேற்றுமைகளை எடுத்துக்காட்டுகின்றன. இவைகளே தற்கால உளவியலின் பொருளாக அமைகின்றன.

மேற்கூறியவாறு இலக்கியத்திற்கும் உளவியலுக்குமுள்ள தொடர்பினுல்தான் ஆங்கிலத்திலுள்ள சிறந்த உளவியல் நூல்களில் (Cyril Burt, Hughes and Hughes, Sir Percy Nunn, Sturt and Oakden போன்ற அறிஞர்கள் எழுதியவை) ஆங்காங்கு சிறந்த இலக்கியங்களினின்றும் எடுக்கப்பெற்ற மேற்கோள்கள் காட்டப்பெறுகின்றன ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டு, ஆங்கில இலக்கியத்தை ஓரளவு நன்கு கற்ற மாணுக்கர்கள் அந்த நூல்களைப் படிக்கும்பொழுது இந்த இலக்கிய மேற்கோள்கள் அவர்கட்கு ஒரு தனி இன்பத்தைக் கொடுக்கின்றன. மேலும், அந்த இலக்கிய மேற்கோள்களின் நயமானது அவற்றுடன் தொடர்பாகப் படித்த உளவியற் கொள்கைகளை மனத்தில் என்றும் நிலைத்து நிற்கச் செய்கின்றது. நமது தமிழ் மாணுக்கர்களுக்கு ஆங்கிலத்திலுள்ள உளவியல் நூல்களைப் படிக்கும்பொழுது இந்த நயத்தினுல் பெறும் நன்மைகள் கிடைக்காமற் போகின்றன.

பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் எழுதியுள்ள இந்நூலின் மூலம் அந்தக் குறையை ஓரளவு நிவர்த்திசெய்துகொள்ள முடிகின்றது. கம்பராமாயணம், திருவருட்பா, திருக்குறள் போன்ற ஒரு சில சிறந்த தமிழ் நூல்களிலிருந்து எடுத்துக் கொடுக்கப்பெற்றுள்ள பொருத்தமான மேற்கோள்கள் வாசகர்களுக்கு உளவியலைத் தெளிவாகப் புரிந்து கொள்ளப் பயன்படும்.

தமிழில் உளவியலைப்பற்றிப் பல புத்தகங்கள் வெளிவந்துள்ளன. ஆனுல், அவை எல்லாவற்றிலும் தமிழ் நடை எளிதாக இல்லை. நூறு வருடங்களுக்கு முன் உளவியலை மெய்ப்பொருளியலின் ஒரு பகுதியாகக் கருதப்பெற்றதுபோல், உளவியலும் மெய்ப்பொருளியலைப்போல் புரிந்து கொள்வதற்குக் கடினமான ஒரு நடையில் எழுதவேண்டும் என்றதுபோல் எழுதப்பெற்றிருக்கின்றது. ஆனுல், பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் தனக்கே உரித்தான ஆற்றொழுக்குபோன்ற எளிய தெளிவான நடையில்

உளவியலை எழுதியிருப்பது தற்காலத்தில் உளவியல் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையுடனும் தொடர்புடையது என்பதைப் புலப்படுத்து கின்றது.

ஏறக்குறைய இருபத்தைந்து யாண்டுகளுக்கு முன்பு திரு. தெ.பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் தமிழில் எழுதிய "மானத சாத்திரம்" என்ற நூலில் அன்று அந்தத் துறையில் அறிஞர்கள் அறிந்திருந்த முக்கியமான கருத்துக்கள் பலவற்றையும் ஒருங்கு உணர்த்தியிருந்தார் கள். இதுகாறும் தூய தமிழில் அமைந்த உளவியல் நூல்களில் இது தலைசிறந்ததாகும். இது தமிழ் வாசகர்கட்குச் செய்த சிறந்த சேவை யாகும். ஆனால், சென்ற இருபத்தைந்து யாண்டுகளில் உளவியலார் புதியனவாகக் கண்டறிந்திருக்கும் உண்மைகள் பலப்பல; இக்கருத்துக் கள் பலவற்றையும் ஒருங்கு சேர்த்து திரு. ரெட்டியார் அவர்கள் நல்ல தமிழில் எழுதியதால் இவர் தமிழுக்குச் செய்யும் சேவை இத்துறையில் திரு. பிள்ளையவர்கள் செய்துள்ள சேவைக்கு ஈடானது.

இந்நூல் "கல்வி உளவியல்" என்ற பெயரைத் தாங்குகின்ற போதிலும் பொதுவாகப் பெற்றோர்கள், பொதுமக்கள் ஆகிய யாவருமே படித்துப் பயன் பெறக்கூடியது. பேராசிரியர் ரெட்டியார் அவர்களின் எளிய நடையும், நகைச் சுவையும் இப்புத்தகத்தைப் பலருக்கும் பயன் படச் செய்கின்றன.

பல வருடங்கள் ஆசிரியராகப் பணியாற்றிய அனுபவத்தின் பயனாக ஒவ்வொரு கருத்துக்களையும் விளங்க வைப்பதற்கு யாவரும் தத்தம் வாழ்க்கையில் கண்டறியக்கூடிய எடுத்துக்காட்டுக்களை மேற்கொண் டிருப்பது இப்புத்தகத்தின் தனிச் சிறப்பாகும்.

ஆசிரியப் பெருமக்களும் மற்றுமுள்ள பொதுமக்களும் இப்புத்தகத் தைப் படித்து இதிலுள்ள சில கருத்துக்களையேனும் தங்கள் வாழ்க்கை யில் கடைப்பிடிப்பார்களாயின் அவை அவர்கள் நன்மைக்கே என்பதை நான் உறுதியாக நம்புகின்றேன். ஆகையால் "இதுவும் உங்கள் நன் மைக்கே" என்று கூறி இந்நூலை ஆசிரியப்பள்ளி மாணக்கர்கட்கும் (ஆசிரியக் கல்லூரி மாணக்கர்கட்கும்கூட) ஏனையோர்க்கும் அறிமுகப் படுத்துகின்றேன்.

அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, காரைக்குடி.
27-7-1960.

வை. நா. சுப்பிரமணியம்.

தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

தமிழ் இலக்கிய மரபுகளை நன்கு
அறிந்துகொண்டு சங்க இலக்கியங்களை
சுவைக்க விரும்புவோர்க்கு பெருந்துணை
நல்கும்வண்ணம் அமைந்த நூல்

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-938927-0-1



eBOOK ~ மின் நூல்



அணிந்துரை

தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை 1963


வழங்கியோர்:

Prof A Srinivasa Raghvan
Principal, VO Chidambaram College

டாக்டர் மு வரதராசனார்
தமிழ்ப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக்கழகம்

உயர்திரு பு ரா புருடோத்தம நாயுடு
(Reader in Tamil, University of Madras)







Prof. A. SRINIVASA RAGHAVAN,
Principal,
V. O. Chidambaram College.

"Bharathi Aham'
Tuticorin-3.
2—11—63

FOREWORD

"TOLKAPPIYAM" is one of the earliest Tamil works that have come down to us. Its claims to distinction are many. It is a book of grammar dealing with phonetics, dialectal variations and the mechanics of early Tamil. It is a book of rhetoric discussing figures of speech, prosody and style. It attempts in addition to reach out to the truth behind aesthetic enjoyment and to enunciate why and how poetry moves us. It is something more; it is a grammar of ancient Tamil life, analysing in detail the idealised presentation of life that the poets of the time have given us.

TOLKAPPIYAM distinguishes between what is factual (உலகியல் வழக்கு) and what is idealised (நாடக வழக்கு) and says that the way of the poet is generally a blend of the two (பாடல் சான்ற புலனெறி வழக்கம்). So, his analysis of the poetry of his time, while sketching for us the arche-types of life, invites our attention to the actual in the process of becoming the ideal. It is this aspect of 'TOLKAPPIYAM' that is discussed at length in this book. Prof. N. Subbu Reddiar has rendered carefully and thoroughly Tolkappiyar's account of Tamil life as pictured in poetry. He tries to clarify how Tolkappiyar's distinction between 'akam' (அகம்) and 'puram' (புறம்) can be reconciled with the idea, now almost axiomatic, that all literature, chiefly poetry, is subjective. Referring to the various commentators on 'TOLKAPPIYAM', Prof. Reddiar throws light on some of the baffling 'sutras' of Tolkappiyar on symbolism and suggestion in poetry and points out how rewarding it would be if a careful collation could be made

of Tolkappiyar's work with Sanskrit works like Ananda Vardhana's 'DHVANYA LOKA' and later Tamil works on rhetoric like 'MAARAN ALANKAARAM'. Prof. Reddiar's discussion of 'meyppaadu' (மெய்ப்பாடு) and 'Cuvai' (சுவை) in chapter 21 is carefully related by him to what ancient Sanskrit and Tamil thinkers on aesthetics say. The numerous subdivisions of 'meyppaadu' (மெய்ப்பாடு) under 'akam' in 'Tolkappiyam' are minute and reveal acute observation and considerable knowledge of psychology, though some of them may not be accepted as fundamental. Prof. Reddiar's thoroughness is shown by his devoting two chapters to discussing them. Chapter 26 speaks of prosody as Tolkappiyar presents it and the next chapter discusses Tolkappiyar's analysis of forms of verse. From Chapter 28 onwards, there is a general survey of Tolkappiyar's thought, how it makes allowance for changes inevitable in literary growth, how it reconciles convention and revolt in the literary world, and how, making allowance for the idealisation inherent in poetry, it presents a fairly comprehensive and accurate picture of ancient Tamil society and life. These chapters illustrate how learned writing can be stimulating even while, for the sake of precision and truth, it avoids mere sentiment and fancy.

This work on 'TOLKAPPIYAM' covers almost all aspects of that ancient classic. Its discussions are full, its analysis of TOLKAPPIYAM and its commentators keen and learned and its judgement, on the whole, marked by restraint and balance. Prof. Reddiar has given us a patiently-evolved and carefully-worded thesis on a recondite theme, one that will prove helpful to all earnest students of old Tamil literature.

—Prof. A. Srinivasa Raghavan

டாக்டர் மு. வரதராசனார், எம். ஏ., எம். ஓ. எல்., பிஎச். டி.
(Professor of Tamil, University of Madras)

மனமுவந்தளித்த

அணிந்துரை

தொல்காப்பியம் தமிழ் மொழியின் பண்பாட்டையும் தமிழிலக்கியத் தொன்மையையும் நாகரிகச் சிறப்பையும் விளக்கும் பழம்பெரு நூல் ஆகும். பொதுவாக, இலக்கண நூல்களை விரும்புவார் அருகிவரும் இக்காலத்திலும், தொல்காப்பியத்தைப் பலர் நாடும் காரணம் என்ன? அப்பெருநூல் இலக்கண நூலே ஆயினும், எழுத்திற்கும் சொல்லிற்கும் மட்டும் இலக்கணம் உரைப்பதோடு நில்லாமல், தமிழர் வாழ்க்கையை ஒட்டி அமைந்த இலக்கியத்திற்கும் இலக்கணம் கூறும் நூலாக இருத்தலே காரணம் ஆகும். அதனால்தான், தொல்காப்பியப் பொருளதிகாரம் இலக்கிய வரலாற்று அறிஞர்க்கும் திறனாய்வாளர்க்கும் ஒருங்கே பயன் நல்குவதாக உள்ளது.

இத்தகைய சிறப்புடைய நூற்பகுதியைத் திறம்பட ஆராய்ந்து "தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை" என்னும் இந்நூல் வடிவில் விளக்கியுள்ளார், தமிழ்ப் பேராசிரியர், திரு. ந. சுப்பு ரெட்டியார். அவர் அறிவியல் துறையிலும் பட்டம் பெற்ற அறிஞர்; அவ்வளவில் நில்லாமல், தொடர்ந்து உளவியல் முதலாய துறைகளில் நூல் பல கற்றுத் தேர்ந்து தமிழில் நூல் பல இயற்றியுதவியவர். ஆதலின், தொல்காப்பியப் பொருளதிகாரத்தை ஆயுங்காலத்திலும் அவர்க்கு உளவியல், உயிரியல் முதலாய அறிவியல்துறைகள் மிகப் பயன் பட்டுள்ளன என்பதை இந்நூலில் காணலாம். தொல்காப்பியர் கூறும் அகப்பொருள் புறப்பொருள் பற்றிய இலக்கணங்களை வெவ்வேறு புதிய தலைப்புகளில் இவர் விளக்கம்பெறச் செய்துள்ளார். "தமிழர்கள் காதலை மிகமிகத் தூய்மையானதாக வைத்துப் போற்றினர்" என்பதைப் பலவிடங்களிலும் தெளிவித்துள்ளார். பழங்கால அகப்புற மரபுகளை ஆங்காங்கே பொருத்தமுற விளக்கி

யுள்ளார். உள்ளுறை உவமம், இறைச்சிப்பொருள், மெய்ப்பாடுகள் பற்றிய விளக்கங்கள் நன்கு அமைந்துள்ளன. வடநூற் கருத்துகளும் ஒப்புநோக்கப் பெற்றுள்ளன. தொல்காப்பியரின் செய்யுளியல், இலக்கியத் திறனாய்வு முறைகொண்டு ஆராயப்பெற்றுள்ளது. வெட்சி முதலாய அகத்திணைகட்கும் குறிஞ்சி முதலாய புறத்திணைகட்கும் உள்ள இயைபுகளைப்பற்றிய விளக்கங்கள் முழுதும் உடன்படக்கூடியனவாக இல்லை என்பது தவிர, ஏனைய விளக்கங்கள் முறையுடன் அமைந்து நூலுக்கு அணிசெய்கின்றன. நூலாசிரியரின் இத்தகைய சீரிய முயற்சியைத் தமிழகம் வரவேற்றுப் போற்றும் என நம்புகின்றேன்.

11-10-63

—மு. வரதராசன்

உயர்திரு. பு. ரா. புருடோத்தம நாயுடு அவர்கள்
(Reader in Tamil, University of Madras)

உளங்கனிந்து அளித்த

முன்னுரை

இலக்கியங்கள் தாம் தோன்றியுள்ள காலத்து மக்களது சமுதாய வாழ்வினையும் சூழ்நிலையினையும் எடுத்துக்காட்டும் இயல்பின என்பதை ஆய்வாளர்கள் நன்கு அறிவர். பழந்தமிழரின் வரலாற்றைக் காண்பதற்கு இலக்கியங்களையே சான்றுகளாகக் கொள்ளவேண்டும். ஒரு பழைமையின் உண்மையைக் கண்டறிவதற்கு அகச்சான்று, புறச்சான்று என இருவகைச் சான்றுகள் உள்ளன. புறச்சான்றைவிட அகச்சான்றே சிறந்தது; உண்மை உரைப்பினை உடையது. பண்டைத்தமிழர்களின் வாழ்க்கைமுறை, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றை நன்கு அறிவதற்குக் கருவி நூல்களாக இருப்பன சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம் என்ற ஒப்புயர்வற்ற இலக்கணம் ஆகியவை சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை. இவற்றை அடிப்படையாகக்கொண்டு பல ஆய்வு நூல்கள் தோன்றியுள்ளன. எனினும், பழந்தமிழ்ப் பண்பாட்டைப் பளிங்கென எடுத்துக்காட்டும் தொல்காப்பியத்தைத் தமிழ்மக்கள் இன்னும் நன்கு தெரிந்துகொள்ளவில்லை. தமிழை முறையாகக் கற்றவர்கள் மட்டிலும் அதனை அறிந்துகொண்டால் போதாது; தமிழ்மக்கள் அனைவருமே அறிந்துகொள்வது மிகவும் இன்றியமையாதது.

இந்த நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு என் அரிய நண்பர் பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார், ஓயாது உழைத்து, 'தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை' என்ற இந்தப் பெரிய நூலை ஆக்கித் தந்துள்ளார். இதில் தமிழ் மக்களின் அறிவுக்கருவூலமாக நின்று நிலவும் தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் ஒன்பது இயல்களும் 33 கட்டுரைகளாகப் பாகுபடுத்தப்பெற்று விளக்கம் பெறுகின்றன. இறுதியிலுள்ள 34 ஆவது கட்டுரை, நூலிலுள்ள கட்டுரைகளின் கருத்துகளைத் தொகுத்துக் கூறுகின்றது; அக்கட்டுரையின் தலைப்பே நூலின் பெயராகவும் அமைந்துள்ளது. அவ்வியல்களில் அடங்கியுள்ள கருத்துகள் எவர் மனத்தையும் எளிதில் பிணிக்கும் வண்ணம் எளிய முறையில் புதிய தலைப்புகளில் புதுக்கோலம் பூண்டுத் திகழ்கின்றன. தமிழ் இலக்கிய மரபுகளை நன்கு அறிந்துகொண்டு தமிழ் இலக்கியங்களைச்—சிறப்பாகச் சங்க இலக்கியங்களைச்—சுவைக்க விரும்புவார்க்கு இக்கட்டுரைகள் பெருந்துணை புரியும் என்பதற்கு ஐயம் இல்லை.

தொல்காப்பியப் பொருளதிகாரம் பயில்வார்க்கு இந்நூல் ஒரு வழித்துணை விளக்கம்போலவும் அமையும்.

என் நண்பர் பேராசிரியர் ரெட்டியார் பல கலைகளையும் முறையாகக் கற்றவராதலாலும், இருபது யாண்டுகளுக்கு மேல் மாணாக்கர்கட்குப் பாடம் பயிற்றிய அநுபவத்தையுடையவராதலாலும், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பல்லாண்டுகள் பணிபுரிந்த அநுபவத்தினராதலாலும் பயிற்றும் முறைகளின் நாடியை அறிந்தவர். உளவியல் நுட்பங்களைத் தெரிந்தவர். எனவே, தொல்காப்பியத்தின் பல நுட்பமான கருத்துகள் எவரும் புரிந்துகொள்ளும்வண்ணம் இவரது நூலில் தெளிவும் விளக்கமும் பெறுகின்றன. இவை படிப்போர் மனத்தில் பசுமரத்தாணியெனப் பதியும்பாங்கில் அமைந்துள்ளன. அகப்பொருள் இலக்கியங்களைத் தெளிவாகப் புரிந்து கொள்ளத் துணையாகவுள்ள முப்பொருள் பாகுபாடு, ஐந்திணை நெறி, பெருந்திணை, கைக்கிளை, ஐந்திணை உலகமாந்தர், அறத்தொடு நிற்றல், நாடக வழக்கு, உலகியல் வழக்கு முதலியவை பற்றிய கருத்துகளை இவற்றிற்கு எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம். சங்க இலக்கியங்களின் தனிச் சிறப்பாகவுள்ள உள்ளுறை உவமம், இறைச்சிப்பொருள் இவரது கட்டுரைகளில் நல்ல விளக்கம் பெறுகின்றன. பாட்டிற்கு உயிர்நாடியாகவுள்ள மெய்ப்பாடு பற்றிய விளக்கம் நன்முறையில் அமைந்துள்ளது. மெய்ப்பாடுகளை வடமொழிவாணர் கூறும் ரசம், பாவம் என்ற கருத்துகளுடனும் உளவியலார் கூறும் கருத்துகளுடனும் ஒப்பிட்டு விளக்கியுள்ளமை சிறப்பாக உள்ளது. அங்ஙனமே, செய்யுளியலிற் கூறப்பெற்றுள்ள செய்யுளின் பல உறுப்புகள் தெளிவாக விளக்கப்பெற்றுள்ளன. மரபியலில் பேராசிரியர் குறிப்பிட்டுள்ள மனஉணர்வு—பொறியுணர்வு உளவியல் அடிப்படையில் தெளிவாக விளக்கம் பெற்றுள்ளன.

பொதுவாக, நூலின் போக்கு, விளக்கமுறும் முறையிலும் ஆராய்ச்சிப் பாங்கிலும் அமைந்துள்ளது. நண்பர் பேராசிரியர் ரெட்டியாரின் தொண்டுள்ளத்தில் முளைத்தெழுந்த இந்நூல் பல தமிழ்மக்கள் உள்ளத்திற்கு நல்ல விருந்தாக அமையும் என்பதற்கு ஐயம் இல்லை. நீலமேனிநெடியோன் அருளால் இவர் இன்னோரன்ன பல நூல்களைப் பல துறைகளிலும் எழுதித் தமிழன்னைக்கு அணி செய்தல் வேண்டும். இதற்குச் 'செடியாய வல்வினைகள் தீர்க்கும்' திருவேங்கடவன் இவருக்கு உடல்நலமும் மனவளமும் அருள்வானாக என அவன் அடிகளை நினைந்து வாழ்த்துகின்றேன்.

19-10-63 —பு. ரா. புருடோத்தம நாயுடு

இல்லறநெறி

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

தற்கால இளந்தம்பதிகளின் தேவைக்கேற்ப
ஏற்புடைய நூல்களின் இன்றியமையாமையை
உணர்ந்து, கடித உத்தியைக் கையாண்டு
எழுதப்பெற்ற ஒரு சிறந்த நூல்

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

ISBN: 978-81-938927-9-4

eBOOK ~ *மின் நூல்*

அணிந்துரை




இல்லற நெறி 1964

வழங்கியோர்:

டாக்டர் சௌந்திரம் இராமச்சந்திரன்
கல்வித்துறை துணை அமைச்சர், இந்திய அரசாங்கம்







இந்திய அரசாங்கக் கல்வித்துறைத் துணை - அமைச்சர்
டாக்டர் சௌந்திரம் இராமச்சந்திரன் அவர்களின்

முன்னுரை

பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் அவர்களுடைய 'இல்லற நெறி' என்ற புத்தகத்தைப் படித்தேன். வேலனுக்கு வேங்கடத்தான் எழுதும் கடிதங்கள் மூலமாக ஆசிரியர் இல்லற நெறியைப் பலகோணங்களிலிருந்தும் விளக்கியிருக்கின்றார்: ஆங்கிலத்தில் இதுபோன்ற புத்தகங்கள் ஏராளமாக உள்ளன. இளந்தம்பதிகள் அவைகளை விருப்பத்துடன் படிக்கின்றனர். தற்காலத் தேவைக்கேற்பத் தமிழில் அத்தகைய நூல்கள் மிகவும் அவசியம். பேராசிரியர் ரெட்டியார் அந்த அவசியத்தை உணர்ந்து அதனை ஒருவாறு நிறைவேற்ற முன் வந்தது மிகவும் பாராட்டுதற்குரியது.

பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் வெகு சிரத்தையுடன் முயற்சி எடுத்து 'இல்லற நெறியை' எழுதியிருக்கின்றார். இல்லறத்தை வெற்றியுடன் நடத்த மனோ தத்துவ ரீதியில் அதிகம் ஆலோசனை கொடுப்பது மிகவும் அவசியம். அங்க அமைப்பு விவரங்களின் விஸ்தரிப்பைக் குறைத்திருந்தால் புத்தகத்தின் பளுவும் குறைந்திருக்கும். ஆனால் தமிழ்நாட்டுப் பொதுமக்களுக்கு விஞ்ஞான அறிவு குறைவாக இருக்கும் எனக் கருதி அப்பகுதியை விஸ்தாரமாக எழுதியிருக்கின்றார் போலும்!

இ—1

பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் புத்தக உலகத்திற்குப் புதியவர் அல்லர். பல விஞ்ஞானப் புத்தகங்களை அவர் எழுதியுள்ளார். ஆகவே, அவருடைய இந்த முயற்சி தமிழ் மக்களுக்கு, அதுவும் இளந்தம்பதிகளுக்கு, மிகவும் உபயோகமாக இருக்கும் என்பதில் ஐயம் இல்லை. அவருடைய முயற்சியையும் ஆர்வத்தையும் நான் பாராட்டுகின்றேன்.

புது டில்லி,
8-12-1964

T. S. ஸௌந்திரம்

மலைநாட்டுத் திருப்பதிகள்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

மலைநாட்டுத் திருப்பதிகளுக்கு நம்மை அழைத்துக் கொண்டு
போவது போல் பாசாங்கு செய்யும் பேராசிரியர்,
உண்மையில் வைணவ சமய தத்துவங்கள் ,
பக்தி நிலைகள், மரபுகள் – இவற்றையெல்லாம்
நமக்கு சுற்றிக் காட்டி விடுகின்றார்.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939685-9-8

eBOOK ~ மின் நூல்




அணிந்துரை

மலைநாட்டுத் திருப்பதிகள் 1971

வழங்கியோர்:

ஜஸ்டிஸ் எஸ் மகராஜன்







அணிந்துரை

(ஜஸ்டிஸ் எஸ். மகராஜன்)

மலைநாட்டுத் திருப்பதிகளுக்கு நம்மை அழைத்துக் கொண்டு போவதுபோல் பாசாங்கு செய்யும் இவ்வாசிரியர், உண்மையில் வைணவ சமய தத்துவங்கள், பக்தி நிலைகள், மரபுகள் — இவற்றையெல்லாம் நமக்குச் சுற்றிக் காட்டி விடுகின்றார்.

வீரசைவ சமயத்தைச் சேர்ந்தவர் ஆசிரியர், ஆனாலும் வைணவத்தைப்பற்றிப் பேசும்போதும் எம்பெருமானைச் சேவித்து அவனுடைய பரம கலியாண குணங்களை எடுத்து விரித்துரைக்கும் போதும், அதிசயிக்கத்தக்க ஈடுபாட்டோடும் விரிந்து பரந்த மனப்பாங்கோடும், தன்னையே வைணவத்தோடு இரண்டும் ஒன்றும் அறக் கரைத்துக் கொள்கின்றார். ஆசிரியருடைய ''நினைவும் சொல்லும் ஒருமைப் பட்டிருக்கையாலே'' இந்த அரிய சாதனை அவருக்குக் கை வந்திருக்கின்றது.

மெய்ப்பொருளோடு ஊடாடுவதற்கென்று ஒவ்வொரு சமயத்திலும் பல உத்திகளை வகுத்து வைத்திருக்கின்றார்கள். ஆனால், வைணவ ஞானிகள் வகுத்து வைத்திருக்கும் உத்திகள் தனிச்சிறப்புடையவை. மூர்த்திகளை வெறும் அடையாளப் பொருள்களாகக் கொள்ளாமல், ஒவ்வொரு மூர்த்தியும் இறைவன் எடுத்த அர்ச்சாவதாரம் என்று கொண்டு, மெய்ப்பொருளோடு உறவாடும் போது, பக்திக் கடல் மடை திறக்கின்றது. மெய்யுணர்வு பெருக்கெடுத்தோடுகின்றது.

அர்ச்சாவதாரத்தை அநுபவிக்கக் கொடுத்து வைக்காதவர்கள் வானவர்கள். ஆகவே, வான நாட்டைத் துறந்து மண்ணுலகத்தில் வந்து பிறக்க விரும்புகிறார்கள் அவர்கள், "இங்குள்ளார் அங்குப் போவது மேன்மையை அநுபவிக்க, அங்குள்ளார் இங்கு வருவது சீல குணாநுபவம் பண்ணுகைக்கு" என்ற ஈட்டின் வாசகத்தை மேற்கோள் காட்டி இவ்வுண்மையை விளக்குகின்றார் ஆசிரியர்.

எம்பெருமானுக்கு விண்ணுலகச் சூழ்நிலையில் அவ்வளவு அழகு இருப்பதில்லையாம். மண்ணுலகச் சூழ்நிலையிலேயே அவனுடைய அழகு சோபிக்கிறதாம். ஏன்? வானவர் நாடு ஞானஒளி வீசும் நாடு, ஆகையால், அங்கிருக்கும் எம்பெருமான், பகல் விளக்குப்போல், ஒளி குன்றிக் காணப் படுகிறான். ஆனால், அஞ்ஞான இருள் சூழ்ந்த தம் மண்ணுலகத்திலோ, அவன் இருட்டறை விளக்குப்போல, திவ்ய ஒளி வீசி மிளிர்கின்றானாம். ஆகவே, பேரொளியை அநுபவிப்பதற்கு மண்ணுலக இருட்டும் தேவைப்படுகின்றது என்றே தோன்றுகின்றது. இல்லையேல், "மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்று அப்பர் அடிகள் சொல்லியிருப்பாரா!

புறத்தே நின்ற பேரொலியைக் கொண்டாடக் கொண்டாட, அது ஆழ்வார் அகத்திலும் குடியேறிவிடுகின்றது. குடியேறிய திருவடிகளிலுள்ள துளவம் ஆழ்வார் உள்ளத்தை நிறைத்து, ஆழ்வாருடைய மெய்யெலாம் கமழச் செய்கின்றது. இந்த நிலையில்,

> **"எந்நன்றி செய்தேனோ**
> **என்னெஞ்சில் திகழ்வதுவே"**

என்று வியந்து ஓலமிடுகின்றார் ஆழ்வார். இந்த வியப்புக்கு விளக்கம் கொடுக்கின்றது ஈடு. எப்படி? "சடாயுவைப் போல், பிராட்டி சென்ற திசையை எம்பெருமானுக்குக் காட்டி

விட்டு உயிர் துறந்தேனோ? அல்லது, அநுமனைப் போல் ''கண்டனன் கற்பினுக் கணியை'' என்ற முழக்கத்தோடு வந்து, பெருமானின் துயரத்தைத் தீர்த்தேனோ? அல்லது, வேறு என்ன உதவிதான் செய்தேனோ? அறியேன். ஆனால், அவன் என் நெஞ்சத்துள் புகுந்து அருள் செய்து விட்டான்'' என்று தான் செய்த நன்றியைப் பாராட்டுகின்றாராம் ஆழ்வார்.

இப்படியெல்லாம் இறைவனோடு ஊடாடித் திளைப்பதற்கு வழி செய்திருக்கின்றார்கள் நம் முன்னோர்கள் அந்த வழியிலே நம்மை நடத்திச் செல்லுகிறது இந்நூல்.

ஒன்றினோடு ஒன்றொவ்வாப் பல துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றவர் **டாக்டர் சுப்பு ரெட்டியார்.** அவருடைய விரிந்த படிப்பைக் கண்டு நான் அஞ்சிய காலம் ஒன்றுண்டு. பல ஆண்டுகளுக்கு முன் அவரைக் காரைக் குடியில் சந்தித்தபோது, ''எதற்காக நீங்கள் இவ்வளவு படிக்கின்றீர்கள்? கொஞ்சம் படிப்பைக் குறைத்துக் கொண்டால் நலமாயிருக்கும்.'' என்று அவரிடம் சொன்னேன். மித மிஞ்சிய படிப்பு கவனத்தைச் சிதறடித்து விடுமே என்ற அச்சத்தால் அவ்வாறு சொன்னேன். ஆனால், இந்நூலைப் படித்த பிறகு என்னுடைய அச்சம் மறைந்துவிட்டது. ஆசிரியரின் பிடிக்குள் அடங்காத படிப்பு, பக்தியென்ற சூரிய காந்தக் கல்லில் புகுந்து ஒருமையும் பயனும் பெற்று விட்டது. வாழ்க ''மலைநாட்டுத் திருப்பதிகள்!''

திருவேங்கடமும்
தமிழ் இலக்கியமும்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

பேராசிரியர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய
சொற்பொழிவுகள், நம்மை சங்க காலத்திற்கு
அழைத்துச் செல்கின்றன; இடைக்காலத்திறகு
இட்டு வருகின்றன; பிற்காலத்திற்கும்
கொண்டு வந்து நிறுத்துகின்றன.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939685-0-5

eBOOK ~ மின் நூல்

ந சுப்பு ரெட்டியார்
1916 2016
100
நூற்றாண்டு விழா நிகழ்வுகள்



அணிந்துரை

திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்

1975


வழங்கியோர்:

தாமரைச் செல்வர்

நெ.து.சுந்தரவடிவேலு

துணை வேந்தர், சென்னை பல்கலைக்கழகம்







தாமரைச் செல்வர்

நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள்

(துணை வேந்தர், சென்னைப் பல்கலைக் கழகம்)

அணிந்துரை

சென்னைப் பல்கலைக் கழகம் மூத்த இந்தியப் பல்கலைக் கழகங்கள் மூன்றினில் ஒன்று. அது நூற்றுப் பதினெட்டு வயதானது. அதன் நீண்ட வரலாற்றில் பெற்ற அறக் கட்டளைகள் பலப்பல. அவற்றுள் ஒன்று சொல்லின் செல்வர் பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை வெள்ளி விழா அறக்கட்டளையாகும். அக்கட்டளையின் சார்பில் பல நல்லறிஞர்கள் தொடர் சொற்பொழிவுகள் ஆற்றி யுள்ளனர்.

அம் மரபினை யொட்டி, திருப்பதி, திருவேங்கடவன் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர், தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர். ந. சுப்புரெட்டியார் அவர்கள் 1973-74 ஆம் ஆண்டிற்கான மூன்று சொற்பொழிவுகளை ஆற்றினார்.

டாக்டர் ந. சுப்புரெட்டியார் முறையாகத் தமிழைக் கற்றுத் தேறிய அறிஞர். ஆழ்ந்த புலமையும் கட்டுரைத் திறனும் சொல்லாற்றலும் மிக்கவர்.

'திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்' என்னும் தலைப்பில் டாக்டர் ரெட்டியார் ஆற்றிய சொற்பொழிவுகள், நம்மைச்

சங்ககாலத்திற்கு அழைத்துச் செல்கின்றன; இடைக்காலத்திற்கு இட்டு வருகின்றன; பிற்காலத்திற்கும் கொண்டுவந்து நிறுத்துகின்றன.

விரிந்த தமிழ் இலக்கியத்தின் பல்வேறு இடங்களை அறிமுகப்படுத்தும் இச்சொற்பொழிவுகள் தமிழ்ப் பற்றுளார்களுக்குத் தித்திக்கும். அதுமட்டுமா? பெரிதும் சமயத் தொடர்புடைய திருவேங்கடத்தைப் பற்றிய சொற்பொழிவுகள் பக்தர்களுக்கும் பரவசமூட்டும்.

எனவே, 'திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்' என்னும் தொடர் சொற்பொழிவுகள் நூலாக வெளிவருவதைப் பலரும் வரவேற்பார்கள் என்பது திண்ணம்.

நெ. து. சுந்தரவடிவேலு.

தொண்டைநாட்டுத் திருப்பதிகள்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

தொண்டைநாட்டு திருப்பதிகளை நேரில் கண்டும்,
பாசுரங்களை கற்றும், கேட்டும், துதித்தும் தாம் பெற்ற
அநுபவத்தினை இந்நூல் வாயிலாக மானசீகமாக திவ்வியதேச
யாத்திரைக்கு நம்மை இருப்பூர்திகளிலும், பேருந்துகளிலும்
அழைத்து செல்கிறார் பேராசிரியர்.

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

ISBN: 978-81-939561-9-9

eBOOK ~ மின் நூல்




அணிந்துரை

தொண்டைநாட்டுத் திருப்பதிகள் 1976

வழங்கியோர்:

ஜஸ்டிஸ் என் கிருஷ்ணசாமிரெட்டி
நீதிபதி
சென்னை உயர் நீதிமன்றம்







அணிந்துரை

(ஜஸ்டிஸ் என். கிருஷ்ணசாமி ரெட்டி)

மண்ணில் அரங்கமுதல் வைகுந்த நாடளவும்
எண்ணு திருப்பதிநூற் றெட்டினையும்-நண்ணுவார்
கற்பார் துதிப்பார் கருதுவோர் கேட்டிருப்பார்
பொற்பாதம் என்தலைமேல் பூ.[1]

ஞானானந்த சொரூபனாய், ஞான சக்தியாதி கல்யாண குணங்களையுடையவனாய், தேசகால வஸ்து பரிச்சேத மில்லாதவனாய், தேஜோமயமான திவ்விய மங்கள விக்கிரகமுடையவனாய், எல்லாவுலகங்களையும் படைத்தல், காத்தல், அழித்தல் செய்யும் கர்த்தாவாய், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகைப் பயன்களை அளிப்பவனாய், இலட்சுமி பூமி நீளா நாயகனாய் இருக்கும் நாராயணன் சேதநருக்கு உவப்பான பொன், வெள்ளி, தாமிரம், சிலை, மரம், மண் முதலிய திரவியங்களையே திருமேனியாகவும், அவரிட்டதுவே பெயராகவும் கொண்டு, தேசகால அதிகார பேதமின்றி எல்லோராலும் கண்டு பற்றுதற்குச் சௌலப்பியம் சௌசீல்யம் கருணம் முதலிய நிறைய குணங்களுடைய அர்ச்சாவதாரமாக, இருந்த கோலம், நின்ற கோலம், கிடந்த கோலமாக, 'சொன்ன வண்ணம் செய்த பெருமாளாக', உலகோர் உய்யும் பொருட்டு இம்மண்ணுலகில் திருக்கோயில் கொண்டு சேவை சாதித்துக் கொண்டிருக்கின்றான்.

மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற இத்திருக்கோயில்களை நூற்றெட்டுத் திருப்பதிகளாகக் கொள்வது வைணவ மரபு. இத்திருப்பதிகள் பூர்வாசார்யர்களாலும், ஏனைய பெரியோர் களாலும் போற்றப்பட்டவை தியானிக்கப்பெற்றவை. இவ்வளவு சிறப்புப்பெற்ற திவ்விய தேசங்களை தரிசிப்பவர்களும்,

1. நூற்.திருப்.அந்.

இவைகளைப் பற்றிப் பெரியோர் அருளிய வாக்குகளைக் கற்பவர்களும், சிறப்பித்துப் பேசுகிறவர்களும், சிரவணம் செய்து கொண்டிருப்பவர்களுமாகிய திருமாலடியார்களின் பொற் பாதங்கள் 'என் தலைமேற் சூடும் மலராகும்' என்று பணிவுடன் போற்றுவர் அழகிய மணவாளதாசர்.

இந்நூலாசிரியர் டாக்டர் **என். சுப்பு ரெட்டியார்** அவர்கள் பழுதறவோதிப் பகவானின் கருணை வெள்ளம் கோக்கப் பெற்றவர்கள். இத்திருப்பதிகளை நேரில் கண்டும் அவற்றின் மீதுள்ள திருப்பாசுரங்களைக் கற்றும் கேட்டும் துதித்தும் தாம் இயற்றியுள்ள 'தொண்டை நாட்டுத் திருப்பதிகள்' என்னும் இந்நூலின் வாயிலாக இத்திருப்பதிகளின் சிறப்பைச் சொல்லிக் கொண்டே மானசீகமான திவ்வியதேச யாத்திரைக்கு நம்மைப் இருப்பூர்திகளிலும் பேருந்துகளிலும் அழைத்துச் செல்லு கின்றார். திருக்கோயில்களிலுள்ள மதில்கள் மண்டபங்கள் மூர்த்திகள் தீர்த்தங்கள் இவற்றையெல்லாம் சுற்றிக் காட்டுகின்றார், சுட்டியும் உரைக்கின்றார்; திருத்தலங்களின் வரலாறுகளையும் கூறுகின்றார். அத்துடன் நில்லாது ஆழ்வார் பெருமக்கள் மங்களாசாசனம் செய்து எம்பெருமான்களை அநுபவித்த நெஞ்சு நெக்குருகும் சில பாசுரங்களையும் பாடி நம்மையும் அவ்வெம்பெருமான்கள் எம்பெருமாட்டிகள் இவர்கள் எதிரே கொண்டு நிறுத்தி ஆனந்தக் கடலில் ஆழ்த்துகின்றார். இவற்றிற்கிடையே வைணவ சமயக்கருத்துகள் பலவற்றை நம் சிந்தையில் தூவி சிந்தனையையும் கிளறுகின்றார்.

இந்த நூலினைப் பயிலும் நாமும், இந்த நூலாசிரியரின் துணையின்றியே, தனியாக நம் குடும்பத்துடன் திவ்விய தேச யாத்திரையை **உண்மையிலேயே** உடனே மேற்கொள்ளலாமா என்கின்ற எண்ணத்தை நம்மிடையே எழுமாறு தூண்டிவிட்டுக் கொண்டே நம்மையும் தம்முடன் அழைத்துச் செல்கின்றார். இந்நூலின் வாயிலாக நாமும் மானசீகமான நம்முடைய திவ்வியதேச யாத்திரையை நிறைவு செய்து கொண்டோம் என்ற மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்கின்றோம். அத்தகைய நூல் நிலைத்து வாழ்க.

டாக்டர் ரெட்டியார் அவர்கள் சைவக் குடும்பத்தில் தோன்றியவராயினும் வைணவத்தில் பற்றும் ஈடுபாடும் உடையவர்; ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் ஆழங்கால் பட்டவர்; கண்ணன் கழல் இணைகள் நண்ணும் மனமுடையவர்.

தற்சமயம் திருப்பதியில் வாழ்பவர். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தை ஆராய்ச்சி செய்து நம்மாழ்வார் தத்துவத்தை ஆங்கில ஆராய்ச்சி நூலாக வடித்துத் தந்து 'டாக்டர்' (Ph.D.) பட்டம் பெற்றவர். குடும்பத்துடன் திவ்விய தேச யாத்திரை செய்து தாம் அநுபவித்த இன்பப் பேற்றைப் பிறரும் பெற்று அநுபவிக்கவேண்டும் என்னும் எண்ணத்தின் விளைவாக இந்நூலையும் இதற்கு முன்னர் வெளிவந்த **'மலைநாட்டுத் திருப்பதிகள்'** என்னும் நூலையும் ஆக்கித் தந்திருக்கிறார்கள். மேலும், தாம் சென்று வந்த ஏனைய திவ்விய தேசங்கட்கும் இதுபோலவே தாம் படைக்கும் நூலின் வாயிலாக நம்மையும் மானசீக யாத்திரையில் உட்படுத்தித் தம்முடன் அழைத்துச் செல்வார் என்பதில் ஐயமில்லை.

இந்நூல் மலிவான நல்ல அச்சில் வெளியிடப் பெற்றுள்ளது. இதனை மனமுவந்து ஏற்று வெளியிட்டவர்கட்கும் என் பாராட்டு. இதனை எல்லோரும் வாங்கிக் கற்று, மற்றவர்கட்கும் கற்பித்து எம்பெருமான் திருவருள்பெற்று, இன்புற வாழ வேண்டுமென வாழ்த்துகின்றேன். வாழ்க 'தொண்டை நாட்டுத் திருப்பதிகள்' வளர்க இந்நூலாசிரியரின் சமயம் கலந்த தமிழ்த் தொண்டு!!

- கிருஷ்ணசாமி ரெட்டி

பாண்டிநாட்டுத் திருப்பதிகள்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

தண்ணார் தமிழளிக்கும் தென்பாட்டி நாட்டின்
18 வைணவ திவ்விய தேசங்களைத் தாம் சென்று
தரிசித்ததோடு நில்லாது நம்மையும்
தன்னோடு கூடவே தம் அருமையான
எழுத்தாற்றலால் அழைத்துச் சென்று வைணவ
தரிசனம் செய்து வைக்கின்றார் பேராசிரியர்.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939561-1-3



eBOOK ~ *மின் நூல்*




அணிந்துரை

பாண்டிநாட்டுத் திருப்பதிகள் 1977

வழங்கியோர்:

ஜஸ்டிஸ் பா ச கைலாசம்
உச்ச நீதிமன்றம், புதுதில்லி







அணிந்துரை

ஜஸ்டிஸ் பா. ச. கைலாசம்,
(உச்ச நீதிமன்றம் புதுடில்லி.)

தண்ணார் தமிழளிக்கும் தண்பாட்டி நாட்டின் பதினெட்டு திவ்விய தேசங்களைத் தாம் சென்று தரிசித்த தோடு நில்லாமல் நம்மையும் தன்னோடு கூடவே தம் அருமையான எழுத்தாற்றலால் அழைத்துச் சென்று வைணவ தரிசனம் செய்துவைக்கின்றார் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார். திருக்கோட்டியூரிலே தொடங்குகின்ற இவர்தம் பக்திப் பயணம் திருக்குறுங்குடியிலே போய் முடிவடைகின்றது. இத்தனைத் திருப்பதிகளையும் இவரோடு தரிசிக்கின்ற நாம் 'மறந்தும் புறந்தொழா மாந்தராய்' மாறி விடுகின்றோம்.

'தேவகாரியம் செய்து வேதம் பயின்று வாழ்வோர்கள்' நிறைந்த திருக்கோட்டியூரிலேயே நமக்கு எட்டெழுத்து உபதேசம் ஆகிவிடுகின்றது. 'புகல் ஒன்று இல்லா அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே' என்ற சரணாகதி தத்துவம் தொடர்கின்றது. 'சோராத காதல் பெருஞ் சுழிப்பால் தொல்லை மாலை ஒன்றும் பாராது' அவனுக்குப் பல்லாண்டு பாடும் பான்மையினை நினைத்து நெகிழ்கின்றோம். 'தான் அறப் பெய்யும் காளமேகத்தைத்' திருமாலிருஞ் சோலை மலையிலே 'அறு கால் வரி வண்டு கள் ஆயிரம் நாமம் சொல்லிச் சிறுகாலையிலே பாடும்'

அருமையை அநுபவிக்கின்றோம். 'மாயனை — மன்னு வடமதுரை மைந்தனை — தூய பெரு நீர் யமுனைத் துறைவனை — வாயினால் பாடி — மனத்தினால் சிந்தித்து — அறிவொன்று மில்லாத ஆயர்குலத்துப் பெண்களின்' நிலையிலிருந்து அநுபவித்த ஆண்டாளின் அருள் வெள்ளத்திலே கும்மாளம் அடித்து விட்டு திருத்தண்காலூர் சென்று அப்பனைத் தரிசிக்கின்றோம்.

'இதுவோ திருநகரி ஈதோ பொருநை? இதுவோ பரம பதத்து எல்லை — இதுவோதான், வேதம் பகர்ந்திட்ட மெய்ப் பொருளின் உட் பொருளை, ஓதும் சடகோபன் ஊர்' என்று நம்மை மறந்து ஆழ்வார் திருநகரிலேயே நின்று விடுகின்றோம். வானுற வளர்ந்து விளங்கிய திவ்வியமான பேரொளியைக் கண்டு நம்மாழ்வாரைத் தெரிந்து கொண்டு தனது குருவாக ஏற்றுக் கொண்ட மதுரகவி பிறந்த மண்ணிலே — திருக்கோளூரிலே வைத்தமா நிதியைக் கண்டு மகிழ்கின்றோம். சிறுவர்களின் விளையாட்டின் சுவையிலே ஈடுபட ஆசைப்பட்டு அங்கிருந்த பெரிய திருவடியை 'சற்றே நகர்ந்திடு, கருடா' என்று கூறிய மகர நெடுங்குழைக் காதனின் விளையாட்டு ஆசையை எண்ணி வியக்கின்றோம். 'குழகன்' என்றால் மகானாக இருக்கும் தனது மேன்மையினைப் பாராது சிறியாரோடும் கலந்து பழகுபவன் என்று பொருள் சொல்லும் பேராசிரியர் சுப்புரெட்டியார் நாம் அப் பொருளில் உணர்ந்து உருகி 'அவன்' அழகையும் அருளையும் பருகும் வகையில் அப் பேரருளாளனின் பெருமையனைத்தையும் உணர்த்தி விடுகின்றார்.

கீதையின் பதினெட்டு அத்தியாயங்கள் பதினெட்டு யோகங்களைச் சொல்வது போல இவர்தம் பதினெட்டுக் கட்டுரைகளும் பல்வேறு பக்தித் திருப்பதிகளின் பெருமை களை விளக்குகின்றன. திருமந்திரத்தின் பெருமையை — நலந்தரும் சொல்லை — பரத்துவம், வியூகம், விபவம்,

அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்ற எம்பெருமானின் ஐந்து நிலைகளை—பக்தி, பிரபத்தி வழிகளை பிராரத்தம், சஞ்சிதம், ஆகாமியம் ஆகிய வினைகளின் தொகுதியை — எம்பெருமானின் திருமேனியாக வைணவ சித்தாந்தம் பேசும் சித்து அசித்துபற்றி—சகல வேத சாரத்தைத் தன்னுள்ளேயே அடக்கி வைத்துள்ள முதல் பதமாகிய பிரணவம் பற்றி மிகவும் எளிதிலே புரிந்து கொள்ளும் வகையில் மிக அழகாக விளக்கியிருக்கும் நேர்த்தி உள்ளத்தைக் கவர்கிறது. எத்தனை முறை படித்தாலும் தெவிட்டாத அழகிய தீந்தமிழ் உள்ளத்தின் ஆழத்திலே ஒரு குளுமையை ஏற்படுத்துகிறது. வைண நூல்களை எவ்வளவு ஆழமாகப் படித்திருக்கிறார் பேராசிரியர் சுப்புரெட்டியார் என்பது புரிகின்றது. இது போல இன்னும் பல நூல்களை எழுதி மொழிக்கும் முதல்வனுக்கும் தொண்டாற்றிய வண்ணமிருக்க எம்பெருமான் அருள் புரிய வேண்டுகிறேன்.

—ஜஸ்டிஸ் பா. ச. கைலாசம்

Religion and Philosophy of NALAYIRAM with Special Reference to NAMMALVAR

PROF DR N SUBBU REDDIAR



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

This Book (Professor's PhD Thesis) is an unique one dealing as it does with the Alvars. Sri Vaishnavites must feel greatly indebted to Professor (is a born Saivite) for the deep study and thought he has bestowed on ***Nalayira Divya Prabhandham.*** In this his great work which can be called his *magnum opus*, he has traced the history of Vaishnavism from the time of the *Rig Veda*.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939835-4-6

eBOOK ~ *மின் நூல்*



அணிந்துரை

Religion and Philosophy of **NALAYIRAM**
with special reference to **NAMMALVAR** 1977


வழங்கியோர்:

Dr M Ananthasayanam Ayyengar

Ex-Governor of Bihar







FOREWORD

The author of this work Prof. N. Subbu Reddiar is a well-known Tamil Writer. He got a Department of Tamil founded in the Sri Venkateswara University at Tirupati and has been the Head of the Department for many years. He has recently been raised to the status of a Professor in the University and he richly deserves that position. He has written a number of works in Tamil on various subjects-scientific, technological and academic. His language is easy-flowing and mellifluous, understandable both by scholars and by laymen. He has contributed greatly to Tamil writing.

The present work of his is a unique one dealing as it does with the Āḷvārs. The Āḷvārs are Sri Vaiṣṇavite saints of South India who realised Godhead in His *arcā* form in the Vaiṣṇavite temples of South India. They are mystics of a very high order and sang of God in ecstasy and their verses number about 4000 which are called the *Nālāyira Divya Prabandham.* The main Āḷvārs are ten in number who with the addition of two others viz. Āṇṭāḷ and Maturakavi constitute a dozen. They are drawn from all castes and they gave a great impetus to the spread of Śrī Vaiṣṇavism. Their verses mostly relate to Rāma and Kṛṣṇa – the *avatāras* of Viṣṇu – besides the absolute Para-vāsudeva in Śri Vaikuntha. Of all these Āḷvārs, Nammāḷvār is the foremost one though not the earliest. He is recognised as the patron-saint of Śrī Vaiṣṇavism in southern India. His thousand verses are called *Tiruvāymoḷi Āyiram* as having emanated from his holy mouth. Before the singing of any of these songs, the *taṉiyaṉ* or the verse relating to the author is recited and his blessings are invoked. The *taṉiyaṉ* of Nammāḷvār describes him as one who rendered the *Vedas* into Tamil and that his thousand verses have all the sanctity and the authority of the *Vedas.*

Referring to the *Nālāyira Divya Prabandham*, Śrī Vedantha Desika states that they throw considerable light on a number of intricate and difficult passages in the *Vedas* and help to clarify many doubts therein; and the *Teṉkalais* have given greater authority to the Tamil *Prabandhams* than even to the *Vedas* themselves. Nammāḷvār's hymns are considered to be the authority on Śrī Vaiṣṇavism by both the sects of Śrī

Vaiṣṇavism. These *Prabandhams* are recited during all the temple festivals and have even been made a part of the daily worship both in Śrī Vaiṣṇavite temples and houses of the Vaiṣṇavites. Śrī Vaiṣṇavites must feel greatly indebted to Prof. N. Subbu Reddiar for the deep study and thought he has bestowed on the *Prabandhams;* he has written on the religion and philosophy of the Āḻvārs in his fine English style, thus carrying the message of the Āḻvārs to the very doors of Vaiṣṇavites and non-Vaiṣṇavites alike. The task is stupendous and though Prof. N. Subbu Reddiar is a born saivite, he has taken a deep interest in the Śrī Vaiṣṇavite literature and written on it with great sympathy, love and admiration much better than even a born Vaiṣṇavite can do. In this his great work which can be called his *magnum opus*, he has traced the history of Vaiṣṇavite religion from time of the *Ṛg Veda*.

He has considered the subject under six sections. The first contains his introduction summarising the work. The second relates to the pre-Āḻvār period starting from the *Vedas*. The third is a prefatory study of the work of *Nālāyiram*. In section four, he discusses the main theme of the work relating to religion and philosophy of the *Nālāyira Divya Prabandham* with special reference to Nammāḻvār. The fifth refers to post-Āḻvār period and the sixth gives his conclusion. His summary is in sufficient detail to convey a comprehensive idea of his great work in his own language. In the second section, there is nothing controversial in the subject matter but with regard to Vaiṣṇavism during the pre-Āḻvār period, there may be a difference of opinion regarding his observations. It is true that the *Vedic* scholars of the West have described Viṣṇu as a minor deity during the *Vedic* period and to some extent he has reproduced their views. The *Ṛg Veda* is the earliest *Veda* and the one on which the other *Vedas* and later religious literatures are based. It contains a large number of hymns addressed to various natural elements whose aid and blessing the *Vedic* Aryans invoked by praise and prayer and by offering ablations and libations to them. But Viṣṇu as He emerges in the *Ṛg Veda* is a personal God. The accepted essential feature of all theistic religions is the

existence of a personal God who created the universe. Such attributes like the creator, protector and sustainer are used in the *Ṛg Veda* only with regard to Viṣṇu. It is also specifically mentioned therein that He created even the Sun and Varuṇa and that others followed Him and that He grew from a primeval germ into the cosmos. After having created the worlds, fixed his lasting abode for himself a *Paramapadam* or Heaven which ordinary mortals may not be able to see or reach easily and which place is full of sweetness and bliss. *Ṛg Veda* also refers to His consort Śrī Mahālakṣmī. It states that His worship is easy and the repetition of His name is enough. It also refers to His incarnations.

Thus it appears that the essential features of Vaiṣṇavism were known to the *Ṛg Vedic* Aryans and they worshipped Him as the Supreme Being. The divine qualities of Viṣṇu were enhanced late by the *Brāhmaṇas*, the *Upaniṣads* and the *Purāṇas* in the North and by the Āḷvārs in the South and these laid the foundation for the systematisation of Vaiṣṇavite philosophy and religion by Śrī Rāmānuja.

Coming to the central theme of the discourse of Prof. N. Subbu Reddiar in this volume, all the essential elements of Śrī Vaiṣṇavism, as practised and preached today, have been elaborated by him with special reference to the Āḷvār saints. Briefly they are as follows: that Śrīman Nārāyaṇa is the Supreme Being; that He is the creator; that His abode is the highest in the universe; that He is both transcendent in Heaven and immanent in the Universe; that for the devotees, He took the *Vibhava* form as Rāmā and Kṛṣṇa and that to make Himself easily available to all for worship, He has taken the *arcā* or permanent incarnation in temples. Their conception of the relationship of the individual soul to God is one of *Nāyaka-Nāyakī bhāva* – that is between a lover and his beloved. Nammāḷvār and Tirumaṅkaimannaṉ have emphasised this *Madhura-bhāva* and sung in ecstasy and longed to become one with the divine being. In many passages their description shows how the separation from the Lord is unbearable to them. They appeal to Śrī Mahālakṣmī to recommend them to the Lord's Grace to perform *puruṣahāra*. They haye developed

sakti and more than that *prapatti* or *saranāgati*, the doctrine of surrender, as the means of attaining Godhead. They knew God and realized Him and became one with Him. It is said that after reciting his ten verses, Śrī Tiruppāṇāḷvār, a harijan saint lost himself in ecstasy and his soul merged into that of Śrī Raṅganātha. The thousand verses of Nammāḷvār called *Tiruvāymoḷi*, are treated as sacred. They contain the essence of the *Sāma-veda* and particularly, that of *Chandogya Upaniṣad* which work is largely drawn upon for describing the creation in the *Brahma-sūtras* by the Bādarāyana to establish the existence of God, His attributes and the mode of reaching Him. *Tatva-traya* which is the distinguishing feature of Śrī Vaiṣṇavite philosophy is also referred to by Nammāḷvār. The emphasis of all the *Prabandhams* particularly of Nammāḷvār is laid on true knowledge which is described as one, which finds the universe as the body of a universal consciousness or soul of which body all beings are limbs. It implies that there is only one thing in the world and that is God. In fact, he found God in everything in the universe.

Lastly *Saranāgati* or self-surrender as the means of attaining salvation and release from the cycle of births and deaths is described wonderfully by every one of the Āḷvārs, and Prof. N. Subbu Reddiar has quoted chapter and verse from the original text in support of his conclusion. I admire his great talents and his inexhaustible energy and industry in gathering the material which has spread over millenia and brought the essence of all the texts in the compass of a single work.

I pray to Lord Venkateswara that He may grant him a hundred years of life to serve the cause of the Tamil language, religion and philosophy in an ever-increasing measure. The greatest tribute that can be paid to Prof. N. Subbu Reddiar for his glorious work is to keep his book in every library and in every home and to read and digest it. I most heartily congratulate him on his glorious work and wish his enterprise all success.

TIRUPATI,
February 15, 1977.

M. Ananthasayanam Ayyengar
EX-GOVERNOR OF BIHAR

வடநாட்டுத் திருப்பதிகள்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

திருவேங்கடத்தில் தொடங்கும் பக்திப்பயணம்
சிங்கவேள் குன்றம், நைமிசாரண்யம், துவாரகை,
அயோத்தி, வடமதுரை, ஆயர்பாடி, பிருந்தாவனம், கோவர்த்தனம்,
கண்டம் கடிநகர், திருப்பிரிதி, பத்ரிகாச்சிரமம், ஆகிய
திருத்தலங்களை சேவித்துவண்ணம் சாளக்கிராமத்தில்
நிறைவு பெறுகின்றது.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939430-7-6

eBOOK ~ *மின் நூல்*

அணிந்துரை




வடநாட்டுத் திருப்பதிகள் 1980

வழங்கியோர்:

ஜஸ்டிஸ் எஸ் சூரியமூர்த்தி







அணிந்துரை

(ஜஸ்டிஸ் எஸ். சூரியமூர்த்தி)

திருமந்திரப் பொருளுக்கு எல்லை நிலங்களாக இருப்பவை அர்ச்சாவதார எம்பெருமான்கள் எழுந்தருளியிருக்கும் திவ்விய தேசங்களாகும். இங்கு எம்பெருமான் தன்னுடைய சுவாமித்துவத்தையும் சௌலப்பியத்தையும் புலப்படுத்திக் கொண்டு, அடியவர்கள் தம் உடம்பினால் கைங்கரியம் செய்து மகிழ்வதற்குப் பாங்காக எழுந்தருளியுள்ளான். வைணவர்கள் இவற்றை 108 என்று கணக்கிட்டுள்ளார்கள். இவற்றுள் சோழ நாட்டிலுள்ளவை 40; பாண்டிய நாட்டிலுள்ளவை 18; மலைநாட்டிலுள்ளவை 13; நடுநாட்டிலுள்ளவை 2; தொண்டை நாட்டிலுள்ளவை 22; வடநாட்டிலுள்ளவை 12; திருநாடு ஒன்று. இந்தக் கணக்கைப் பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின்,

ஈரிருப தாம்சோழம்;
  ஈரொன்ப தாம்பாண்டி;
ஓர்பதின்மூன் றாம்மலைநா(டு);
  ஓரிரண்டாம்—சீர் நடுநாடு;
ஆறோடு ஈரெட்டுத்தொண்டை
  அவ்வடநா(டு) ஆறிரண்டு;
கூறுதிரு நா(டு)ஒன்றாக்
  கொள்.

என்ற வெண்பாவால் அறியலாம், இந்த வடநாட்டுத் திருப்பதிகட்கு நம்மை இட்டுச் செல்லுகின்றார் பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் இந்த நூலின் மூலமாக.

சைவ சமயத்தைச் சார்ந்த பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் பல்லாண்டுகள் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தை ஆய்ந்து டாக்டர் பட்டம் பெற்றவர். திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில், ஆழ்வார்கள் பாசுரங்களில் மிகவும் ஈடுபட்டுத் தம் மனத்தைப் பறிகொடுத்தவராதலால் வைணவ தத்துவத்தைப் பேசும்போதும், எம்பெருமானின் அநந்த கல்யாண குணங்களை எடுத்துரைக்கும் போதும், அவனுடைய வெற்றிச் செயல்களையும் வீரச் செயல்களையும் எடுத்துக் கூறும்போதும், வியக்கத்தக்க ஈடுபாட்டோடும், தோய்ந்த உள்ளத்தோடும், விரிந்த மனநிலையோடும் தம்மையே மறந்த நிலையை எய்தி விடுகின்றார். திருவேங்கடத்தில் தொடங்கும் இவர்தம் பக்திப் பயணம் சிங்கவேழ் குன்றம், நைமிசாரண்யம் துவாரகை, அயோத்தி, வடமதுரை, ஆயர்பாடி, பிருந்தாவனம், கோவர்த்தனம், கண்டம் கடிநகர், திருப்பிரிதி, பதரிகாச்சிரமம் ஆகிய திருத்தலங்களைச் சேவித்த வண்ணம் சாளக்கிராமத்தில் நிறைவு பெறுகின்றது; பாற்கடலையும் பரமபதத்தையும்கூட இப்பயணத்தில் தரிசனம் செய்து வைத்து விடுகின்றார்; நாமும் இவருடன் பயணத்தை மேற்கொண்டு இத்திருத்தலங்களையெல்லாம் சேவித்த பேற்றைப் பெற்றுவிட்டதான திவ்விய அநுபவத்தைப் பெறுகின்றோம்.

இத்திருத்தலப் பயண நூலில் திருத்தலங்களின் இயற்கைச் சூழ்நிலைகள், அங்குத் திருக்கோயில் கொண்டிலங்கும் எம்பெருமான்களின் சிறப்புகள் இவற்றையும்; பிருந்தாவனம் கோவர்த்தனம் இவ்விடங்களில் கண்ணன் கன்றுகளை மேய்க்கும்போது ஆற்றிய வீரச் செயல்கள், ஆயர்பாடியில் வளரும்போது ஆற்றிய அருஞ் செயல்கள் ஆகியவற்றையும்; திருப்பாற்கடலிலும் பரமபதத்திலும் எம்பெருமானின் இருப்பையும் கண்டு மகிழ்கின்றோம். இத்தனைக்கும் மேலாகப் பிரபத்தியின் பெருமை, புருஷகாரத்தின் மகிமை, எம்பெருமானின் திருவடிகளின்

சீர்மை, பிரணவத்தின் அருமை, திருமந்திரத்தின் சிறப்பு இத்தத்துவங்களில் ஈடுபடுகின்றோம். இத்திருத்தலப் பயணத்தில் எம்பெருமான்களைப் பற்றிக் காட்டப் பெறும் ஆழ்வார் பாசுரங்கள் ஆராவமுதமாய் இனிப்பதையும் உணர்கின்றோம்.

பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் பலதுறை அறிவை முறையாகப் பயன்று பெற்றவர்; அரும்பாடுபட்டு அத்துறைகளிலெல்லாம் பல நூல்களை எழுதிப் புகழ் அடைந்தவர். பதினேழு ஆண்டுகள் திருப்பதிப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றியவர். அங்கு அரும்பாடுபட்டுத் தமிழ்த் துறையை உருவாக்கியிருக்கும் அவரது உரன், திறன் வியந்து மகிழ்ந்து போற்றுதற்குரியவை. இதனைத் தவிர உழைப்பின் உருவமாய்த் திகழும் பேராசிரியர் ரெட்டியார் பல உயர்நிலைப் பள்ளிகளை உருவாக்கியவர். ஒரு பல்கலைக் கழகத்தை உருவாக்கும் தகுதியும், திறமையும் உடையவர். என்ன செய்தாலும் இவர் அதனைத் தாம் செய்ததாக ஒப்புக்கொள்வதில்லை. இறைவன் திருவுள்ளக் குறிப்பினால் நடைபெற்றதாகக் கொண்டு மகிழ்வர். சுமார் இருபதாண்டுகள் திருப்பதியில் பணியாற்றும் பேறு பெற்றமையால் ஏழுமலையானின் திருவருள் இவர்மீது பாய்கின்றதாகக் கொள்வதே சரியாகும். ஓய்வுக் காலத்தில் சமய, தத்துவ நூல்களை எழுதிக் கண் போன்ற காலத்தைப் பொன் போன்று போற்றுவர். இவர்தம் முயற்சி வெல்க! வாழ்க!

—**எஸ். சூரியமூர்த்தி**

சோழநாட்டுத் திருப்பதிகள் - 1

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

ஆழ்வார் பாசுரங்களில் தன்னைப் பறிகொடுத்து, திருவரங்கம்
பெரிய கோயில் தொடங்கி திருக்கண்ணமங்கை
முடிய 20 திருத்தலங்களை பற்றியும், அங்குப்
பாங்காக எழுந்தருளியுள்ள அர்ச்சாவதார
எம்பெருமான்களைப் பற்றியும் விளக்குகின்றார்

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939353-1-6

eBOOK ~ *மின் நூல்*




அணிந்துரை

சோழநாட்டுத் திருப்பதிகள் - 1 1981

வழங்கியோர்:

ஜஸ்டிஸ் ஜி இராமாநுஜம்







அணிந்துரை

(ஜஸ்டிஸ் ஜி. இராமாநுஜம்)

''சௌலப்பியத்திற்கு எல்லை நிலம் அர்ச்சாவதாரம்'' என்று முமுட்சுப்படி பேசும். இதுவே சேதநருக்கு நலம் அளிப்பதெனக் கொண்டனர் ஆழ்வார் பெருமக்கள். இந்த அர்ச்சாவதார எம்பெருமான்களை 108 என்று கணக்கிட்டு கூறுபவர்களின்மீது பாசுரங்கள் பாடிப் போற்றியுள்ளார்கள். இந்த எம்பெருமான்கள் எழுந்தருளியுள்ள சோழ நாட்டுத் திவ்விய தேசங்கள் 40. இந்த நூல் திருவரங்கம் பெரிய கோயில் தொடங்கி திருக்கண்ணமங்கை முடிய 20 திருக் கோயில்களைப் பற்றியும் அங்குப் பாங்காக எழுந்தருளியுள்ள அர்ச்சாவதார எம்பெருமான்களைப் பற்றியும் கூறுவது. ஏனைய 20 திருத்தலங் கள் பற்றி அடுத்த பகுதியில் வெளிவரும் போலும்.

சைவ சமயத்தைச் சார்ந்தவர் பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் என்பதை நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து பயின்றபோதே அறிவேன். வைணவ சமயத்தைச் சார்ந்த நான் இன்று வைண சமயத்தில் பேராசிரியர் ரெட்டியார் இவ்வளவு ஊற்றம் பெற்றிருப்பதையும் ஆழ்வார் பாசுரங்களில் மிகவும் ஆழங்கால் பட்டிருப்பதையும் காணும்போது எனக்குப் பெரு வியப்பு ஏற்படுகின்றது. ஆழ்வார் பாசுரங்களில் இவர் தன்னைப் பறிகொடுத்திருப்பதை நூலெங்கும் காணலாம். ஆங்காங்கு வைணவ தத்துவக் கருத்துகளை எடுத்துக் காட்டியிருப்பது இத்திருத்தலப் பயண நூலுக்கு பொலிவும் அழகும் ஊட்டி யிள்ளன. தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பெறும் 'மாயோன்' தமிழ் நாட்டில் கண்ணனாக வளர்ந்ததையும் இதுவே தமிழ் நாட்டார் கிருஷ்ணபக்திக்கு முதலிடம் தந்திருப்பதற்குக் காரணமாக இருக்கலாம் என்றும் (பக்கம்-15) ஆசிரியர் சுட்டியுள்ளது நம்மைச் சிந்திக்க வைக்கின்றது.

வைணவ சமயம் கூறும் அர்த்த பஞ்சக ஞானம் (பக். 31-33) சரீர - சரீரிபாவனை (பக். 36-39, 142-144) இதனை விளக்க ஈட்டாசிரியர் காட்டும் எடுத்துக் காட்டு (பக். 41-42), இறைவன் மூன்று காரணங்களாக இருக்கும் நிலை (பக். 46-47), பெரிய பிராட்டியாரின் புருஷகாரம் (பக். 68), நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் தொகுக்கப் பெற்ற வரலாறு (பக். 74-75), வைணவ தத்துவ விளக்கம் (பக். 138-140) அழகின் தத்துவமே ஆண்டவன் தத்தும் (பக். 152-155) போன்ற கருத்துகள் நூலினைப் படிப்போருக்கு ஓரளவு வைணவதத்துவம் பற்றிய சிறு சிறு விளக்கங்களாக அமைந்திருப்பது போற்றத் தக்கது. ஆங்காங்குக் காட்டப் பெற்றுள்ள பாசுரங்களின் விளக்கம் படிப்போரிடம் பிரபந்தத்தைப் பயிலவேண்டும் என்ற அவாவை எழுப்புவதாக அமைந்துள்ளது. வியாக்கியாதாக்கள் கூறியுள்ள குறிப்புகளைச் சுட்டி உரைத்திருப்பது வியாக்கியானங்களைப் பார்க்கவேண்டும் என்ற ஆசையை நம்மிடம் தூண்டுகின்றது. சுருக்கமாகக் கூறினால் இந்நூல் படிப்போருக்கு ஆராவமுதமாய், தெவிட்டாத தெள்ளமுதமாய் இனிக்கின்றது என்று கூறின், அது மிகையாகாது.

பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் பலதுறை அறிவைப் பாடுபட்டுப் பெற்றவர். அத்துறைகளில் எல்லாம் பன்னூல்களை எழுதிக் குவித்திருக்கின்றார். இன்றும் எழுதிக் கொண்டே இருக்கின்றார். பதினேழு ஆண்டுகள் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறையைத் தன் முயற்சியால் நிறுவி அதன் தலைவராக இருந்து பணியாற்றியவர். இதில் இவர் எடுத்துக் கொண்ட முயற்சி பொன்னெழுத்துகளால் பொறிக்கப் பெறவேண்டியது. இவருடைய பல துறை அறிவு, ஆட்சித் திறன், விடா முயற்சி, எண்ணியதைச் செய்து முடிக்கும் திண்ணிய ஆற்றல் இவை யனைத்தும் ஒருங்கே யமைந்து ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவி அதைச் சிறப்புற வளர்க்கும் திறன் இவரிடம் அமைந்து கிடப்பதை நேரில் பார்க்கின்றேன். இத்தனைக்கும் மேலாக, இவருடைய தெய்வ பக்திக் கொப்பத் தமிழ் பக்தியும் இவரிடம் நிறைய உண்டு. பலதுறை அறிவு நூல்கள் தமிழில் பெருகினாலன்றி தமிழ் ஏற்றம் பெறாது என்ற அதிராக் கொள்கையை யுடையவர். இவர், எல்லாம் இறைவன் செயலால் தான் நடைபெறும் என்ற நம்பிக்கையுடையவர். சுமார் இருபதாண்டுகள் திருப்பதியில் தமிழ்ப் பணியாற்றியதால் திருவேங்கடவன் திருவருள் இவர்மீது வெள்ளங் கோத்திருப்ப

தாகவே கருதுகின்றேன். ஒய்வு காலத்திலும் தளராது எழுதி வருவதைப் பாராட்டுகின்றேன். அதுவும் தத்துவம், சமயம் இவைபற்றிய நூல்களை எழுதி வருவது பாராட்டற் பாலது. வயதிற்கும் ஏற்றது. இவர்தாம் முயற்சி வெல்க. இவர் நோய் நொடியின்றி நெடிது வாழ்ந்து தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் ஒல்லும் வகையெல்லாம் பணியாற்றவேண்டும் என்று இறைவனை நினைந்து வாழ்த்துகின்றேன்.

ஜி. இராமாநுஜம்

சோழநாட்டுத் திருப்பதிகள் - 2

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

ஆழ்வார் பாசுரங்களில் தன்னைப் பறிகொடுத்து,
திருத்தலங்களின் பெருமைகளை விளக்கியிருக்கும்
பாங்கு நம்மையே அறியாமல் அத்திருத்தலங்களுக்குச்
சென்று பார்க்க வேண்டுமென்ற அவாவினை
நம்மிடம் எழுப்புகின்றது

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939353-2-3



eBOOK ~ மின் நூல்




அணிந்துரை

சோழநாட்டுத் திருப்பதிகள் - 2 1981

வழங்கியோர்:

பு.ரா.கோகுலகிருஷ்ணன்
தலைமை நீதிபதி
சென்னை உயர் நீதிமன்றம்







அணிந்துரை

சென்னை உயர்நீதிமன்ற மாண்புமிகு தலைமை நீதிபதி
பு.ரா. கோகுலகிருஷ்ணன்

சோழநாட்டுத் திருப்பதிகள் (இரண்டாம் பகுதி) பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் ஆராய்ச்சியின் விளைவிலே வெளிவருகிறது. உழைப்பால் உயர்ந்து, உள்ளத்தால் சிறந்து, செந்தமிழைச் சுந்தரத் தெலுங்கு நிலவும் நாட்டிலேயும் பரப்பிப் பெருமை கண்டவர் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள். அறிவியலைத் தவிர, தமிழிலேயும், குறிப்பாக வைணவ சமயத்திலேயும், அறிவாற்றலும், ஆழ்ந்து ஈடுபாடும் கொண்டவர் ரெட்டியார் அவர்கள். சமய நூல்கள் செந்தமிழைப் பெரிதும் வளர்த்துள்ளமை நம் தமிழகத்தின் பாரம்பரியப் பண்பாடாகும். சைவ நெறியும், பௌத்த நெறியும், சமண நெறியும், வைணவ நெறியும் இன்பத்தமிழ் பாடி எண்குணத்தான் பெருமையினைத் தமிழிலே போற்றி மகிழ்ந்துள்ளது.

'தெளியாத மறை நிலங்கள் தெளிய ஓதிய' *பெருமை வைணவப் பாசுரங்களுக்கு மிக உண்டு.* ***'வேதம் அனைத்திற்கும் வித்தாகும் சோதை தமிழை'*** *வில்லிபுத்தூரராரின் கோதையின் திருப்பாவையில் கண்டு மகிழ்கின்றோம். திருப்பதிக்கும், தென்மண்டலத்திலே இராமநாதபுர மாவட்டத்திற்கு மட்டும் வைணவம் சொந்தமல்ல. சோழநாட்டுத் திருப்பதிகளைக் கண்ணுறுங்கால் வைணவம் செழித்து வளர்வது நன்கு புலப்படும் என்பதனைப் பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் சோழநாட்டுத் திருப்பதிகளை நம் கண்முன் தம் எழுத்தோவியத்தின் மூலம் சித்திரித்துக் காட்டுகின்றார். இந்நூலில் அருமையான வைணவ தத்துவங்களை எளிய நடையில் எல்லோருக்கும் புரியும் வண்ணம் எழுதியுள்ள பான்மை ரெட்டியார் அவர்களுடைய ஆழமான அறிவினை எடுத்துக்காட்டுகின்றது.* ***'திராவிட சிசு'*** *என்று ஆதிசங்ககரரால்*

வழுங்கப்பெற்ற சம்பந்தர் திருமங்கையாழ்வாரின் ஒரு குறளாய் இருநில மூவடிமண் வேண்டி என்ற ஒரு திருமொழியைக் கேட்டவுடன், வியந்து தமது வேலாயுதத்தை இவரது திருமுன் காணிக்கையாகச் சமர்ப்பித்தாா என்ற நிகழ்ச்சியைப் பேராசிரியரின் இந்த நூல் மூலம் அறிந்து வியப்புற்றேன்.

இறைவனுடைய அபய முத்திரை குற்றம் புரிந்தவாகளையும் திருத்தும் தன்மைத்து என்று பொருள்பட ரெட்டியார் அவர்கள் அபய முத்திரையை விளக்கி,

உங்கள் குறங்களை நினைத்து நீங்கள் அஞ்ச வேண்டா. என்னை வந்தடையுங்கள். யான் உங்களை ஏற்றுக் கொள்வேன்.

என்பது அன்பைக் காட்டும் வாத்சலயத்தின் விளக்கம் என்று எழுதியுள்ள பான்மை நம்மையெல்லாம் கவர்கின்றது. இதே கருத்தை நாவுக்கரசர்,

"பிழைத்தோர் பிழைப்பு அறியவல்ல அடி"

என்று இறைவனுடைய திருவடிகளைப் புகழ்ந்து பாடுகின்றார்.

திருப்பதிகளின் பெருமைகளை எடுத்து விளக்கியிருக்கும் தன்மை நம்மையே அறியாமல் அத்திருத்தலங்களுக்குச் சென்று பார்க்க வேண்டுமென்ற அவாவினை நம்மிடம் எழுப்புகின்றது. குறிப்பாக, **'தலைச்சங்காடு'** என்ற திருப்பதியை திரு. ரெட்டியார் அவர்கள் உதாரணத்தோடும், தகுந்த ஆதாரங்களோடும் விளக்கி, இவ்விடம் ஒரு காடாக இருந்ததாகவும், காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து சிறந்த சங்குகள் இங்கு விற்பனைச் செய்யப்பட்டனவாகவும், அதனால் இந்த இடம் **'தலைச்சங்கம்'** என்று பெயர் பெற்றுப் பிறகு **'தலைச்சங்கக்காடு'** — தலைச் சங்காடு என்று மருவியது என்பதனை அழகாக எடுத்து விளக்குகின்றார். இத்தகைய அருமையான விளக்க உரைகள் எம்பெருமான் எழில் உருவத்தின் தத்துவங்களையும், அவர் எழுந்தருளியுள்ள திருப்பதிகளின் பெருமைகளையும் எடுத்து இயம்புகின்றன.

பேராசிரியர் டாக்டர் சுப்பு ரெட்டியார் அவர்கள் நல்ல தமிழறிஞர். அறிவு எப்போதுமே ஓய்வதில்லை. உள்ளத்தில் இளமையும், அதன் காரணமாகச் சிந்திக்கும் திறமையும், இவற்றிற்கெல்லாம் மேலாக ரெட்டியார் அவர்களுடைய ஆழ்ந்த

படிப்பும், அவர்தம் தமிழ்ப் பணியை, ஆராய்ச்சித் திறனைத் தொடர்ந்து செய்யத் தூண்டுகிறது. இத்தகைய அறிவாற்றல் நிறைந்தவர்களுடைய பணி நம்முடைய சமுதாயத்திற்கு மிகவும் தேவை. ரெட்டியார் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து, நம்முடைய தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாடுகள் பலவற்றையும் இவ்வையகம் அறியும்படி விளக்க உரைகள் எழுதுவார் என்ற நம்பிக்கை எங்களைப் போன்றவர்களுக்கு மிகவும் உண்டு.

வாழ்க சுப்புரெட்டியார் அவர்கள்! வளர்க அவர்தம் தெய்விகத் தமிழ்த் தொண்டு!

— பு.ரா. கோகுலகிருஷ்ணன்

சென்னை — 20

30–06–1981.

குயில் பாட்டு - ஒரு மதிப்பீடு

(பாரதியார் நூற்றாண்டு வெளியீடு)

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

முன்னிக்கவிதை வெறிமூண்டு மாலையழகின்
மயக்கத்தால் உள்ளத்தே தோன்றிய கற்பனைத்
திறத்தினால் பிறப்பெடுத்த குயில் பாட்டின் அழகில்
தம் நெஞ்சைப் பறிகொடுத்த பேராசிரியரின்
வியக்கத்தக்க திறனாய்வு நூல் இது

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

ISBN: 978-81-939317-4-5

eBOOK ~ *மின் நூல்*






அணிந்துரை

குயில் பாட்டு - ஒரு மதிப்பீடு 1982

வழங்கியோர்:

பேராசிரியர் டாக்டர் இரா. கு. நாகு







அணிந்துரை

(பேராசிரியர் - டாக்டர், இரா. கு. நாகு)

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞராகக் கொள்ளத் தக்கவர் மகாகவி பாரதியார். அன்னார் தம் பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட விழைந் தார். அந்த மகாகவி நாட்டுப் பற்றையும், மொழிப் பற்றை யும், மானுடத்தையும், மனிதாபிமானத்தையும் அகிலத்து வத்தையும் தம்முடைய பாடல்களுக்கு உள்ளடக்கமாக்கிக் கொண்டு தமிழுக்கு உலகப் பார்வையையே வழங்கினார். அவர் பிறந்ததால் தமிழுக்கு ஏற்றம் உண்டாகியது. நவநவ மான சோதிமிக்க கவிதைகளைத் தமிழுக்குத் தந்து தமிழை வளப்படுத்தினார். அம் மகாகவியின் எழுத்துக்கள் எல்லாமே சிறந்தவைதாம்; என்றாலும், குறிப்பிட்டுக் கூறத்தக்கவை மூன்று உண்டு; மகாபாரதத்தில் 'பாரதத்தை' நினைப்பூட்டிய பாஞ்சாலி சபதம் ஒன்று; கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடையோர் எண்ணித் துதிக்கும் பண்ணார்ந்த கண்ணன் பாட்டு மற்றொன்று; முன்னிக்கவிதை வெறிமூண்டு மாலை யழகின் மயக்கத்தால் உள்ளத்தே தோன்றிய கற்பனைத் திறத்தினால் பிறப்பெடுத்த குயில் பாட்டு பின்னும் ஒன்று. இந்த மூன்றனுள்ளும் குயில்பாட்டிற்கு ஒரு தனி இடம் உண்டு அதன் அழகில் ஈடுபடாத தமிழறிஞர்களே இல்லை எனலாம். "குயில் பாட்டிலே - காதல், கொப்புளிக்கு தடா, செயல்

மறந்தேனடா,—லாகிரி, சிரசில் கொண்டதடா'' என்று பாராட்டினார் கவிமணி. கவித்துவம் நிறைந்த அக்குயில் பாட்டின் அழகில் தம் நெஞ்சைப் பறிகொடுத்த அறிஞர்களில் பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியாரும் ஒருவர். குயில்பாட்டின் கொள்ளை அழகில் உள்ளம் பறிகொடுத்த 'ரெட்டியார்' அவர்கள், குயில்பாட்டின் அழகுகளையெல்லாம் திரட்டி நூல் வடிவில் தமிழுக்குத் தந்துள்ளார். பொருத்தமான நேரத்தில் பொருத்தமான நூலைத் தமிழுலகுக்குத் தந்துள்ளார் அப்பேராசிரியர், மகாகவியின் பெருமையை மாநிலங்களெல்லாம் அறியும் பொருட்டு, தமிழக அரசு விழாவெடுத்து அவனியெல்லாம் அறியச் செய்து வரும் இது அற்புதத் திருநாளில் பேராசிரியர் தமிழுக்குத் தந்துள்ள இந்நூல் பாரதி அன்பர்களின் பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

பேராசிரியர் டாக்டர் சுப்பு ரெட்டியார் அவர்கள் நல்லதொரு இலக்கியச் சுவைஞர். அறிவியல் அறிவும் கலை இயல் அறிவும் கைவரப் பெற்றவர். பல்துறைப் பயிற்சியும், பல்துறை அநுபவமும் பாங்குறப் பெற்றவர். எல்லையிலா இலக்கியப் பயிற்சியும், எழுதிக் குவிக்கும் எழுத்துத் திறனும் வாய்ந்தவர்.பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் மகாகவி பாரதியின் நூற்றாண்டு விழா நினைவாகச் சில நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவற்றுள் ஒன்றே குயில்பாட்டுபற்றிய இந்தநூல்.

இந்த நூலில் எட்டு இயல்கள் உள்ளன. வைணவர்களுக்கு உகப்பானது 'எட்டு'. ஆழ்வார் பாசுரங்களில் ஆழங்கால் பட்ட பேராசிரியர் ரெட்டியார் அவர்களுக்கு 'எட்டு உகப்பானதில் வியப்பில்லை' அல்லவா? திறனாய்வுத் துறையில் நூல் எழுதிப் பயிற்சி பெற்றவர் பேராசிரியர் அவர்கள். அதன் நெறியை இந்நூலுள் செய்முறைப்படுத்தியுள்ளார். 'பாட்டின் பின்னணி' என்று தொடங்கும் முதலி இயலின் தலைப்பே அந்

நெறியைப் பின்பற்றியதற்கான தக்க சான்றாகும். 'குயில் பாட்டு: ஒரு மதிப்பீடு' என்று முடியும் இறுதி இயலும் பேராசிரியர் திறனாய்வு நோக்கில் குயில்பாட்டை அணுகி யுள்ளார் என்பதற்கான மற்றுமொரு சான்றாகும்.

இந்த நூலுள் நயமான பகுதிகளை விளக்கிக் கூற வந்த இடங்களில் சுயமான உவமைகளைஆண்டிருப்பது பாராட்டுக் குரிய ஒன்றாகும். குயில் இசை கவிஞர் செவியில் விழ விழ, காதல் வெறி ஏறிக்கொண்டே போகிறதாம். அதைக் குறித்து எழுதுமிடத்தில் அவருக்கே யுரிய தனித் தன்மையில், 'காற்றழுத்தமானியில் பாதரசம் ஏறுவதுபோல் ஏறிக் கொண்டே போகிறது' (பக். 2) என்று எழுதியுள்ளார். மற் றோர் இடத்தில் இயற்கைக்கும் கவிஞனுக்குமுள்ள இணக்க மான உறவைக் குறிப்பிட்டு விளக்கும்போது, 'உறங்கும் நிலையில் தாய் குழந்தையை அணைவதைப் போல' (பக் 41 என்று குறிப்பிடுகின்றார்; இந்த உவமையைப் படிக்கும்போது மணிவண்ணனை உகந்த பெரியாழ்வார் நெஞ்சில் நிற்கிறார். பத்துப்பாட்டு எட்டுத் தொகைகளில் வரும் உவமைகளையும் பாரதி ஆண்டுள்ள உவமைகளையும் ஒப்பிட்டுக் கூறு மிடத்தில் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் பயன்படுத்தி யுள்ள உவமை, என்னைப் போன்ற சங்கப்பாக்களில் உள்ளம் பறிகொடுத்திருப்போர்களுக்கு உகப்பாக இல்லை.

குயில் பாட்டைப் படிப்போர்க்குச் சலிப்பே தோன்றாது. அதுபோலக் குயில் பாட்டைப்பற்றிப் பேராசிரியர் எழுதி யிருக்கும் இந்த நூலும் சலிப்பைத் தராது. பழந்தமிழ் இலக் கியத்திலிருந்து 'புதுத்தமிழ்' இலக்கியம்வரை பேராசிரியர் படித்தறிந்தவர் என்பதை இந்நூல் காட்டிக் கொடுக்கிறது. குயில் பாட்டில் ஆளப்பெறும் 'காதல் நெறிகள்' பெரிதும் மரபு சார்ந்தவையே என்று அவர் சாதிக்குமிடங்கள் தக்க

சான்றுகளாகும். பாரதி - யார்? என்றதைக் கூற வரும் கவிஞர் வாலியின் பாடலை எடுத்தாளுமிடத்தில் (பக் 97) புதுத்தமிழ்ப் பயிற்சியின் மணமும் கமழ்கின்றது. மற்றும், இசையின் பெருமை குறித்து எழுதுமிடங்களில் புதுமையும் பழமையும் கைகோப்பதைக் கண்டு மகிழலாம்.

'பாட்டின் உள்ளுறை' என்ற ஏழாவது இயலில் பேராசிரியருடைய ஆய்வு நெறி தெளிவாகத் தெரிய வருகிறது; அன்னார் புலமை அங்கு ஒளி வீசுகின்றது. குயிலைச் சீவான்மாவாகவும் கவிஞரைப் பரமான்மாவாகவும் எண்ணிப்பார்க்கும் இடமும், குயில் இறுதியில் கவிஞரின் கையில் வீழ்தலைச் 'சரணா கதி' மூலம் பரம்பொருளிடம் ஐக்கியமாவது போல், என்று பொருத்திக் காட்டும் இடமும் மிக அழகாக உள்ளன. 'ஊகித்துக் கூறும் உள்ளுறை' என்ற கிளைத் தலைப்பில் அவர் கூறும் முடிவுகள் கற்றுவல்ல பெரியார்களுக்குக் கற்கண்டாய் இனிப்பனவாகும்.

இந்நூலின் எட்டாவது இயல் குயில்பாட்டின் இலக்கியத் தன்மைகளைப் பேசுகின்றது. இந்த இயலில் இடம் பெறுவனவற்றைச் சிறந்தன என்ற புகழ முடியாவிட்டாலும், வேண்டாமென்று ஒதுக்கிவிடமுடியாத 'விடுதலறியா விருப்பு'' அவற்றின்பாலுள்ளது என்றே கூறவேண்டியுள்ளது. 'ஒருவகையான' எழுத்தாற்றலே அவ்விடுதலறியா விருப்புக்கான காரணமுமாகும்.

பாரதி என்ற மகாகவி பிறந்ததால் தமிழ்நாடு பெருமை பெற்றது. அவரால் தமிழ் ஏற்றம் பெற்றது. அந்தப் பைந்தமிழ்ச் சாரதி தொடாதது ஒன்றுமில்லை; தொட்டதை அவர் அழகு செய்யாமல் விட்டதுமில்லை. அந்த மகாகவியின் கவிதை ஆழமும் கரையும் காணமுடியாத கடலாகும். அக்கடலில் ஆர்வமுள்ள அனைவரும் ஆடித் திளைக்கலாம்.

அவரவர் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்றவாறு ஆடித்திளைக் கலாம்; ஆடித் திளைப்பதோடு முத்துக்களை அள்ளி அள்ளி வந்து அணிகளாகத் தொடுக்கலாம். அந்த மகாகவியின் கவிக் கடலில் ஆடித்திளைத்து முத்துக்களை அள்ளிக் கொணர்ந்து தெள்ளுதமிழ் மாலை சூடிய அறிஞர்களில் பேராசிரியர் குறிப் பிடத் தகுந்தவராவார். தமிழால் உலகளந்த பேராசிரியரின் தமிழ்ப்பணி சிறக்க மகாகவியின் அருள் மேலும் மேலும் பொழியட்டும். மோனத் தமிழையும் ஞானத் தமிழையும் கானத் தமிழாக்கிக் கட்டுரைகளாக வடித்துதவிய பேராசிரி யரின் தமிழ்ப்பணி சிறக்கட்டும். பல்லாண்டு சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல இறைவன் கருணைக்கு இறைஞ்சுகிறேன்.

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!! வாழிய பாரதம்.

சென்னை-600 005
22-11-1982

இரா.கு.நாகு.
பேராசிரியர் - மாநிலக் கல்லூரி.

கண்ணன் பாட்டுத்திறன்

[பாரதி நூற்றாண்டு விழா வெளியீடு]

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

பாட்டிலமைந்துள்ள படிமங்களையும், கலவை
உருக்காட்சிகளையும் வெளிநாட்டார் இலக்கியத்
திறனாய்வுவழி எடுத்துக் காட்டியுள்ளமை
சுவையாகவும், இலக்கிய மாணாக்கர்கட்கு
பெரிதும் பயனுடையதாக அமைந்துள்ளது

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

ISBN: 978-81-939270-7-6

eBOOK ~ மின் நூல்




அணிந்துரை

கண்ணன் பாட்டுத்திறன் 1982

வழங்கியோர்:

பேராசிரியர் டாக்டர் **கா. மீனாட்சி சுந்தரம்**







அணிந்துரை

பேராசிரியர் டாக்டர் கா. மீனாட்சி சுந்தரம்
(கல்லூரிக் கல்வி இயக்குநர் (பொறுப்பு), சென்னை-600 006.)

'**பாட்டு**த் திறத்தால் வையத்தைப் பாலித்திடும்' மகாகவி பாரதியாரைப்பற்றிப் பட்டி தொட்டியும் இன்று அறியும். உலகப் புலவராக, இன்று, உலகம் அந்த மாமேதைக்கு நூற்றாண்டு விழாக் கொண்டாடுகிறது. பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் தானும் தனித்து நின்று பாரதியைக் **கண்ணன் பாட்டுத்திறன்** என்ற நூல்வழி தன் பற்றையும் பாசத்தையும் காட்டிப் போற்றுகிறார்.

முல்லை, குழல், கண்ணன் இம் மூன்றும் மணம், இனிமை, அழகு ஆகியவற்றைத் தமிழகத்தில் பரப்பிக்கொண்டு ஒளி விட்டுக்கொண்டிருக்கும் சொற்களாம். முல்லை நிலத்தில் குழலிசையை மாயோன் பரப்புவதைத் தமிழ்க் கவிஞர்கள் சுவைத்துச் சுவைத்து உருகி உருகி உருக்கமாகப் பாடியுள்ளார்கள். ஆயினும், அவரவர் முத்திரையை ஆங்காங்கே பதித்துள்ளனர். அந்த வரிசையில் கண்ணனைப் பாரதியார் தம் முத்திரையுடன் பாடியுள்ள தன்மைகளைச் சுவைபட ஆய்வதே "கண்ணன் பாட்டுத்திறன்" என்ற நூலாகும்.

பேராசிரியர் டாக்டர் ரெட்டியாரின் ஆழ்ந்த புலமையும், தெளிவுடன் கூறும் நெறியும் நூல் முழுதும் மின்னுகின்றன.

ஆங்கிலம், வடமொழி, தமிழ் ஆகிய மொழிகளில் நிலைத்து வாழ்ந்து வரும் இலக்கிய இலக்கணங்களை நன்கு கற்றுத் தெளிந்து அவைகளிலுள்ள கருத்துகளை, 'கண்ணன் பாட்டுத் திறனை' விளக்குவதற்கு ஆசிரியர் பயன்படுத்தியுள்ளமை அவருடைய பரந்துபட்ட ஆய்வுநெறியைப் புலப்படுத்துகிறது.

தொல்காப்பியத்தில் பல தேவனைக் காட்ட ஆசிரியர் முயன்றிருப்பதை (பக்கம் 5) நோக்கின் அவர் வேட்கை புலனாகும்.

சம்பந்த ஞானத்தை "இறைவனுடன் நமது உறவுகள்" என்ற தலைப்பில் மிக அற்புதமாகப் பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் எடுத்துவிளக்கியுள்ளார்.

கண்ணன் பாடல்களில் 'ரசங்களைக்' கூறிப் பாரதி எழுதியுள்ளதை யாவரும் அறிவர். எனவே, அச்சுவைகளைப் பற்றி ஆசிரியர் வடமொழிவழி நின்று விளக்குவது ஆய்வாளர் கவனத்தை ஈர்ப்பதாகும். "எல்லாவற்றையும் இன்பமாக உணரும் நிலை மனத்திற்குக் கிட்டிவிட்டால் அது பெறற்கரிய பேறாகும். அந்நிலை கொண்ட மனம் வாய்க்கப் பெற்றவனே கவிஞன்" (பக்கம் 17) என்ற ஆசிரியர் கூற்று ஆழ்ந்து எண்ணத்தக்கது.

"முனிவர் துக்ககரமான நிகழ்ச்சியை ஏற்றிருப்பாராயின் அவரது வாயினின்று கவிதை வெளிவராது என்பது திண்ணம். கவிதை ஆனந்தக் களிப்படைந்த உள்ளத்திலே உருவெடுக்கும் என்பதை நாம் நன்கு அறிவோம்" (பக்கம் 27) என்ற கருத்தைப் பார்க்கும்போது அவல நிலையில் ஒப்பாரி தோன்றுகிறதே என்ற எண்ணம் முகிழ்க்கலாம்.

சுவைகளை ஒவ்வொரு பாடலிலும் ஆசிரியர் பொருத்திக் காட்டியிருப்பது மிகப் பயனுடையதும் தக்கதுமாம். நூல் முழுமையும் ஆங்காங்கே அவை எடுத்துக்காட்டப் பட்டுள்ளன.

பாரதியாரின் புது நெறியை டாக்டர் பேராசிரியர் ரெட்டியார் காட்டுவதற்கு ஒரு சான்று. "பண்டைய சங்கப் பாடல்களிலும் பிற்காலத்தில் எழுந்த பக்திப் பாசுரங்களிலும் பிரிவாற்றாமையைத் தாங்க முடியாது நாயகியே தவிப்பதாக நவிலப் பெற்றிருக்கும் இதுவே அகத்திணை நெறி. ஆனால், இங்கு நாயகன் தவிப்பதாக ஒரு புது நெறியை வகுத்து விடுகின்றார் பாரதியார்" (பக்கம் 178).

பாரதியின் கீதோபதேசம் என ஆசிரியர் எடுத்துக் காட்டுவது நினைக்கத் தக்கது. "அன்றாடம் வாழ்வே சதம் என்று கருதி மயங்கி நிற்கும் மக்களுக்குப் புதிய வாழ்வில் புகுவதற்கு மக்கள் யாவரும் சுதந்திரப் போரில் பங்கு பெற வேண்டும் என்பதே பாரதியின் கீதோபதேசம்" (பக்கம் 206) எனக் கண்ணன் பாடல்கள்வழி அதனை ஆசிரியர் காட்ட விழைகிறார்.

பாட்டிலமைந்துள்ள படிமங்களையும் கலவை உருக் காட்சிகளையும் வெளிநாட்டார் இலக்கியத் திறனாய்வுவழி எடுத்துக் காட்டியுள்ளமை, சுவையாகவும், இலக்கிய மாணவர்க்குப் பயனுடையதாகவும் அமைந்துள்ளது.

பேராசிரியர் டாக்டர் ரெட்டியாரின் அறிவியல் அறிவும் (பக்கம் 29, 87, 113) தம் ஆசிரிய அநுபவமும் (பக்கம் 75) ஆங்காங்கே ஒளிவிடுகின்றன. மாணவர் சமுதாயததிலும் பொதுக்கூட்டங்களிலும் பேசப்படும் "அறுவை"யைக் கூட ஆசிரியர் விடவில்லை (பக்கம் 58, 140).

நாட்டுத் தலைவர்களையும் தன் ஆய்வுக்குக் கொண்டு வருகிறார் ஆசிரியர். "இப்பகுதியைப் படிக்கும்போது 'தந்தை பெரியாரே' கண்ணனாக நின்று பேசுவதுபோல் தோன்றுகிறது (பக்கம் 66) என்பது அவர் குறிப்பாகும்.

ஆசிரியர் ஆங்காங்குத் தந்துள்ள அடிக்குறிப்புகள் மிகப் பயனுடையன. "இதனால் சில மேதாவிகள் ஆங்கில இலக்கியங்

களை மட்டிலும் படித்துவிட்டு—இன்னும் சிலர் எதனையும் படிக்காமல்-இவர்கள் நெருப்பு என்றாலே வாய் வெந்துவிடும் என்று கருதும் அதி மேதாவிகள்—நமது இலக்கியங்களில் சிருங்காரம் ஒன்றே அதிகமாகத் தென்படுவதாயும், அவற்றி லுள்ள பச்சையான வருணனைகளைக் கண்டு அவ்விலக்கியங் களை அதிகமாக இகழ்கின்றனர்" (பக்கம் 137) என எழுதி அங்கு அடிக்குறிப்பில் யார் எனக் குறிக்காமல் திட்டவட்ட மாகக் குறிப்பிட முடியவில்லை என எழுதும் நெறியை ஆய்வு நெறியாளர் ஒத்துக்கொள்ள மாட்டார்கள்.

பேராசிரியர் டாக்டர் ரெட்டியாரின் 'கண்ணன் பாட்டுத் திறனைப்' பலரும் படித்து நற்பயன் பெறுவர் என்பதில் ஐயமில்லை. அவருடைய நடை தெளிவாக, நேராகச் செல்கிறது. வடமொழிச் சொற்கள் இருபபினும் அவை தத்துவங்களை விளக்கவே பயன்படுத்தப்பட்டுள்ளன. ஓட்டம் தடைபடவில்லை.

பல நூல்களைத் தமிழுலகிற்கு வழங்கிவரும் பேராசிரியர் மேலும் பல நல்ல நூல்களைப் படைத்து தமிழ்த் தொண்டாற்றி மென்மேலும் பேரும் புகழும் பெறத் தமிழன்னை தண்ணருள் சுரப்பாளாக.

சென்னை-600 006
27-9-82

கா. மீனாட்சிசுந்தரம்

பாரதீயம்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

பாரதியார் கவிதைகளனைத்தையும்
திறனாய்வு மூலமாக அவற்றின் சாரத்தை பிழிந்து
தமிழ் கூறும் நல்லுலகிற்கு
வழங்கும் பெருநூலே பாரதீயம்

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

ISBN: 978-81-938927-2-5

eBOOK ~ மின் நூல்

ந சுப்பு ரெட்டியார்
1916 2016
100
நூற்றாண்டு விழா நிகழ்வுகள்




அணிந்துரை

பாரதீயம் 1983

வழங்கியோர்:

டாக்டர் ஔவை நடராஜன்







அணிந்துரை

டாக்டர் ஔவை நடராசன்,
(இயக்குநர், மொழியாக்கத்துறை, தமிழ்நாடு அரசு)

**புவியனைத்தும் போற்றிடவான் புகழ்படைத்துத்
தமிழ்மொழியைப் புகழில் ஏற்றும்
கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லையெனும்
வசையென்னாற் கழிந்த தன்றே !**

என்று பெருமிதத்துடன் - ஏன் எக்களிப்புடன் - கூறிக்கொண்ட பெருங்கவிஞர் பாரதியின் நூற்றாண்டு விழா மாநிலமெங்கும் கொண்டாடப்பெற்றது. தமிழக அரசே இதனைத் தன் பொறுப்பில் மேற்கொண்டது. கவியரசர் பெயரில் ஒரு பல்கலைக் கழகத்தையே நிறுவித் தன் புகழை நிலை நிறுத்திக்கொண்டது. பாரதியாருக்கு அறிவுலகம் சூட்டிய புகழ்மாலைகளின் நறுமணம் காற்றில் கலந்த கர்ப்பூரம் போலாகாமல், ஆற்றில் கரைத்த புளி போலாகாமல், அச்சு வடிவம் கொண்டு வெளி வந்துள்ளன. அவற்றுள் பாரதியாரை மிகுந்த ஆர்வத்தோடு பாராட்டி மகிழும் நூல்கள் பல ; ஆற்றலோடு ஆராய்ந்து போற்றும் நூல்கள் சில !....இரண்டாவது வகையைச் சார்ந்தது **பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்** அவர்களின் **பாரதீயம்.** பாரதியாரின் நூற்றாண்டில் அவர் தம் முப்பெரும் பாடல் களைப்பற்றித் தனித்தனியே மூன்று திறனாய்வு நூல்களைத் திறம் பட எழுதி வெளியிட்டுத் தம் போக்கில் கவிஞரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியவர் இப்பேராசிரியர். இவற்றிற்கும் மேலாக, பாரதியார் கவிதைகள் முழுவதையும் சாரமாகப் பிழிந்து வழங்கும் பெருநூலே **பாரதீயம்** என்னும் இந்நூல்.

'கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும்' கொண்ட **பேராசிரியர் ரெட்டியார்** தமிழுலகம் நன்கறிந்த பேரறிஞர். துறையூரில் ஓர் உயர்நிலைப்பள்ளியை நிறுவிஅதன் தலைமையாசிரிய ராகத் தம் கல்விப் பணியைத் தொடங்கிப் பத்தாண்டுகள் அதனைப் 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து' வளர்த்துவிட்ட பிறகு, காரைக்குடி வள்ளல் அழகப்பர் நிறுவிய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி யில் தொடக்கம் முதல் பத்தாண்டுகள் தமிழ்த்துறைத் தலைவ ராகவும் பேராசிரியராகவும் பணியாற்றி, அதன் பிறகு, திருப்பதி

சென்று, தம் விடாமுயற்சியால் பத்தாண்டுகள் தனி நின்று முயன்று, திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் (தமிழக அரசு மானியத்தைக் கொண்டு) தமிழ்த்துறையைப் புதிதாக நிறுவி, அதன் தலைவராகவும் பேராசிரியராகவும் பணியாற்றி, அதனைப் பேரும் புகழும் பரவ அதனை நன்கு வளர்த்து, ஆய்வுப் பணிகள், கருத்தரங்குகள் முதலிய பல நற்பணிகள் புரிந்து, பதினேழு ஆண்டுகள் தமிழை அப்பல்கலைக் கழகத்தில் ஆல்போல் விரிந்து அருகுபோல் வேரூன் றச் செய்துவிட்டு ஓய்வு பெற்றவர். ஓய்வு பெற்ற பிறகும் ஒன்றரை யாண்டுகள் கலைக்களஞ்சியத்தின் தலைமைப் பதிப்பாசிரியராகப் பணியாற்றியவர். உழைப்பின் உருவமாகத் திகழும் பேராசிரியர் ரெட்டியார் அறிவியலையும் அருளியலையும் இணைக்கும் பைந்தமிழ்ப் பாலமாக நிலவி இவர் படைத்துள்ள நூல்களின் எண்ணிக்கை இவர் வயதோடு ஐம்பத்தெட்டை எட்டிப் பிடித்துவிட்டது (இவர் வயது 66). தம் வாழ்வின் அநுபவங்களையும் தாம் பயின்ற நூல்களின் நுண்பொருள்களையும் இணைத்து ஆற்றொழுக்காக, படிப்போர் நெஞ்சைப் பிணிக்கும் வண்ணம், நேருக்கு நேர் நின்று பேசுவதைப் போல் எளிய இனிய தமிழில் விரிவாகவும் சுவையாகவும் எழுதுவது இவருக்குக் கைவந்த கலையாகும்.

'பாரதீயம்' என்ற இந்த நூலின் பெயர்க் காரணத்தை, எடுத்த எடுப்பிலேயே பொருத்தமுற எடுத்துரைக்கின்றார் இப்பெரும் பேராசிரியர்.

> "கொள்கை அல்லது கொள்கைகளைத் தமக்கே உரிய முறையில், பிறர் கூறாத வகையில் ஒருவர் கூறுவது அவர்தம் தனிச் சிறப்பாகும். மொழி, இலக்கியம்பற்றிய கொள்கை களைத் தொகுத்தும் வகுத்தும் கூறினார் தொல்காப்பியர். அவர் கூறிய நூல் 'தொல்காப்பியம்' எனப் பெயர் பெற்றது. அந் நூலுக்குத் தமக்கே உரிய முறையில் உரை கண்டார் நச்சினார்க் கினியர்; அது 'நச்சினார்க்கினியம்' என்ற திருநாமம் பெற்றது. இங்ஙனமே சேனாவரையரின் அந்நூலுக்குரிய உரை 'சேனா வரையம்' என்ற பெயரால் வழங்குகின்றது. இத்தகைய மரபினைப் பின்பற்றிச் சில கொள்கைகளைப் பாரதியார் தமக்கே உரிய முறையில் கூறுவதைப் 'பாரதீயம்' என்று வழங்கலாமல்லவா?" (பக். 1).

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வாரின் **'திருவாய் மொழி'** குறித்து ஆய்ந்து ஆங்கிலத்தில் எழுதி டாக்டர் பட்டம் பெற்ற

பேராசிரியர் ரெட்டியார் ஒரு சிறந்த வைணவத் தமிழறிஞராக விளங்குகின்றார்; வைணவத்தில் பல்வேறு ஆன்மிக நூல்களை எழுதியுள்ளார். இவருடைய வைணவ ஈடுபாடு இவர் எழுதியுள்ள எல்லா நூல்களிலும் வெள்ளிடை மலையாகத் தோன்றும். இந்நூலிலும் பாரதியாரின் விடுதலை வேட்கைக்கு உவமை கூறும்போது "நாயன்மார்கட்கும் ஆழ்வார்கட்கும் பக்தி அவர்தம் மூச்சாக இருந்தது போலவே, இவருக்கு விடுதலையே மூச்சாக இருந்தது" (பக். 7) என்று நயம்பட உரைக்கின்றார்.

'சித்தினை அசித்துடன் இணைத்தாய்—அங்கு
சேரும்ஐம் பூதத்து வியனுலகு அமைத்தாய்
அத்தனை யுலகமும் வண்ணக் களஞ்சிய
மாகப் பலப்பலநல் அழகுகள் சமைத்தாய்'

என்ற பாரதியாரின் பாடற்பகுதி விசிட்டாத்வைத தத்துவத்தை உள்ளடக்கி இருப்பதைப் பேராசிரியர் சுவைபட விளக்குகின்றார் (பக். 67).

இறைவனை அடைதற்கு 'வைணவ' தத்துவத்தில் முடிந்த முடிபாக, எளிய வழியாக, மேற்கொள்ளப்பெறுவது **பிரபத்தி நெறி** (சரணாகதி மார்க்கம்). எனினும், சற்றுக் கடினமாகவுள்ள பக்தி நெறியும் அங்கு மேற்கொள்ளப்பெறுகின்றது' 'என்று கூறி அவற்றைப் பாரதியார் கைக்கொண்டதாக எடுத்துக்காட்டுகின்றார் (பக். 57). பேராசிரியர் ரெட்டியாரின் ஆழ்ந்த தமிழ்ப்புலமையும் பன்னூல் ஆராய்ச்சியும், பழுத்த அநுபவமும் பாரதியார் பாடல்களைப் பாங்குடன் விளக்கப் பல இடங்களில் பயன்படுகின்றன :

> "தன்னைக் கட்டுதல்' என்பது மனத்தைக் கட்டுதல். ஐம்பொறிகளை அடக்கி மனத்தைக் கட்டுதல் என்று ஞானியர் கூறும் பொருளில் அல்ல ஈண்டுக் குறிப்பிடப்பெறுவது. 'பாதரசமாய்ச் சஞ்சலப்பட்டுக்கொண்டே' (தாயுமானவர்) இருக்கும் மனத்தை, பல பொருள்களின்மீது சஞ்சலப்படுகின்ற மனத்தை அடக்கினால் போதும் என்பது பாரதியாரின் கருத்து" (பக். 83).

பாரதியாரின் கவிதைகளை விளக்கும்போது காலத்திற்கேற்ற கருத்துகளையும், குறிப்பாக அறிவியற்கருத்துகளையும் ஆங்காங்குப் (பக். 52—55; 191—92) பேராசிரியர் ரெட்டியார் விளக்கிச் செல்வது படிப்போரின் சுவையை மிகுவிக்கும் என்பதற்கு ஐயமில்லை.

"கலைச்சொற்களை உண்டாக்கிக்கொண்டு தாய்மொழியில் கற்பித்தலைத் தொடங்கவேண்டும் என்று நினைப்பது, நீந்தக் கற்றுக்கொண்ட பிறகு நீரில் இறங்கவேண்டும் என்று எண்ணு வது போலாகும். செயலில் இறங்கினால்தான் அனைத்தும் சீர்படும். தார் சாலை அமைப்பதற்கு முன்னர் மண்சாலை, மண்ணும் பெரிய சல்லிகளும் கலந்த சாலை, மண்ணும் சிறிய சல்லிகளும் கலந்த சாலை என்றிப்படிப் பல படிகளைத் தாண்ட வேண்டியுள்ளதல்லவா ? இந்நிலையைத் தாய்மொழி பயிற்றுமொழியாக அமைவதிலும் சந்திக்க நேரிடும்" (பக்.160).

பாரதியாரின் 'வசன கவிதைகளை' ஆராயும் போக்கில் பேராசிரியர் ரெட்டியார் கூறுவார் :

"நாம் வாழ்வது அறிவியல் தொழில் நுட்பக் காலம். தட்டச்சுப்பொறி, அச்சுப்பொறி, அச்சுப்பொறிகளிலும் பல்வேறு நுட்ப வகைகள்—இவை எழுதுவதற்குத் துணையாக அமைந்துவிட்டன... ....செவிப்புலன் ஆட்சியைவிடக் கட்புலன் ஆட்சி மிகுந்துவிட்டது. எவற்றையும் நினைவில் நிறுத்தித் 'தலைக்கனம்' செய்யவேண்டிய இன்றியமையாமை இல்லாது போய்விட்டது. கல்வி முறையிலும் நெட்டுருச்செய்து நினைவி லிருத்த வேண்டிய முறை தளர்ந்துவிட்டது ; தகர்ந்தே போய் விட்டது என்றுகூடச் சொல்லலாம். வாய்விட்டுப் படித்தல் குறைந்து வாய்க்குட் படித்தல் செல்வாக்கு அடைந்துவிட்டது. ஒரே அறையில் - பெரிய மண்டபத்தில் - பலர் இருக்கைகளில் அமர்ந்து 'கல்லாலின் புடை அமர்ந்துள்ள தென்முகக் கடவுள் போல்' நூல்களிலும் வார, பிறை, திங்கள் இதழ்களிலும் ஆழங்கால் பட்ட நிலையில் அமர்ந்திருக்கும் காட்சி கண்கொள் ளாக் காட்சியாக இருப்பதை நூலகங்களில் காணலாம். (பக். 116).

இந்நூலில் எடுத்துக்காட்டப்பெற்றுள்ள 'இலக்கிய ஆராய்ச் சிக்கு ஓர் அறிமுகம்' என்ற ஆங்கில நூலில் அட்சன் என்ற திறனாய்வுப் பேராசிரியர் கூறும் இலக்கியக் கொள்கைகள்பற்றிய மேற்கோள் 'பாரதீயம்' என்ற இந்நூலுக்கும் பொருந்தும் :

"கவிதையை ஆராயுங்கால், நம்முடைய முதற்கவனம் கவிஞன்பால் செல்லவேண்டும் ; அவன் ஆளுமையிலும் அவன் உலகைப்பற்றிக் கொண்டுள்ள மனப்பான்மையிலும் செல்ல வேண்டும்; வாழ்க்கையை எவ்வாறு நோக்கி விளக்கந் தருகின்

றான் என்பதைக் கவனித்தல் வேண்டும். இது வெளிப்படையாகவும் இருக்கலாம்; குறிப்பாகவும் இதனைப் பெற வைக்கலாம். கலை, வடிவம், வரலாறு போன்ற செய்திகளில் நாம் எவ்வளவு ஆழ்ந்திருந்த போதிலும், மேற்கூறிய கவிதையின் முதனிலைக் கூறுகள் எவ்விதத்திலும் நம் பார்வையினின்று நழுவாமல் காக்கவேண்டும்'' (பக். 150 - 151).

இந்த ஒளியின் அடிப்படையில் இந்த நூலை நோக்கவேண்டும். 'சமுதாயப் பார்வை' (கட்டுரை - 5) என்பதையாவது குறிப்பாக நோக்கவேண்டும். இலக்கியச் சுவைஞர்களும் இலக்கிய ஆய்வாளர்களும் **கட்டுரை - 9, கட்டுரை - 10** ஆகியவற்றைப் படித்துத் தம் சுவையையும் தம் ஆராய்ச்சி நோக்கையும் எடை போட்டுப் பார்த்துக் கொள்ளலாம்; இவற்றில் ஒருவிதப் புத்தொளி வீசுவதையும் காணலாம்.

'உலகை இன்பமயமாகக் கண்டு, உள்ளத்தில் பூரிப்பு அடைபவர்கள் கவிஞர்கள்' என்றால் அக்கவிதை தரும் இன்ப அநுபவங்களை எடுத்துரைக்கும் திறனாய்வாளருக்கும் அக்கவிஞர்களுக்கு இருக்கவேண்டிய உள்ளக்கனிவு கட்டாயம் இருக்கவேண்டும். அவ்வகையில் பாட்டரசர் பாரதியாரின் 'நவநீதம்' போன்ற கவிதைகளை நெய்யாக்கி உண்ணத் தந்துள்ளார் பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் என்பதை இந்நூலைப் படித்து முடிக்கும் எவரும் ஒப்பி மகிழ்வர்.

'கவிதையின் உயிராற்றல் பகுதிகளை உரைநடையில்தான் வளமாகத் தருதல் இயலும்' என்ற வொர்ட்ஸ்வொர்த்தின் கருத்திற்கேற்ப, பல்வேறு உரைநடைச் செல்வங்களைப் படித்துத் தமிழுக்கு வளம் சேர்க்கும் தெய்வப் பணிபுரிபவர் பேராசிரியர் ரெட்டியார். இத்தனைக்கும் மேலாகப் 'புத்தம் புதிய நுட்பங்கள் கூறும்' அறிவியல் துறைகளில் பாடல் நூல்களின் பாணியில் 'அழுது வடியும் முறையில்' எழுதாது அழகான தமிழில் புதிய அறிவியல் பிடிப்புகளை ஆற்றலுடன் எழுத முடியும் என்று தமிழின் மொழியாண்மையைப் புலப்படுத்தும் பாங்கில் பதினான்கு நூல்களை எழுதித் தமிழன்னைக்கு அணிகளாகப் பூட்டி மகிழ்ந்த பேராசான். அறிவியலில் கல்லூரியில் பட்டப் படிப்புக்குப் படித்த மூன்று துறைகளைத் தவிர வேறு நான்கு துறைகளை அரிதின் முயன்று கற்று அவற்றில் ஆழ்ந்த புலமையை அடைந்தவர் என்பதற்கு இவர் தம் அறிவியல் படைப்புகளே சான்றுகளாக நின்று பேசும். உடல்

நலத்துடனும் மன வளத்துடனும் திகழும் இந்த **'நடமாடும் கலைக் களஞ்சியத்தை'** - உழைப்பின் உருவத்தை - தமிழ்ப் பல்கலைக் கழகமோ, தமிழக அரசோ தக்க முறையில் பொறுப்பினை நல்கிப் பயன்படுத்திக்கொள்வது அவர்தம் தலையாய கடமை. இந்தப் பேராசிரியர் தம் பணியால் அளவிடுபவரேயன்றி, பெறும் பொருளால்-ஊதியத்தால் - அல்ல. இத்தகைய பெரும் பேராசிரியர் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழ்மொழிக்கும் தமிழகத்திற்கும் நற்றொண்டாற்றிச் சிறக்க வாழ்த்துகின்றேன். வாழ்க நம் பேராசிரியர்! வளர்க இவர்தம் தமிழ்ப்பணி!!

நவம்பர் 2, 1983 **ஔவை நடராசன்**

கம்பனில் மக்கள் குரல்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

இந்நூலில் உள்ள 11 கட்டுரைகளின் மூலமாக, கம்பன் காலத்து
குடியாட்சி, அசுரர்கள் வதும், இளையபெருமாள், குறிஞ்சி
நிலக்காட்சிகள், அநுமனின் திறன், காடுறை வாழ்க்கை,
இராகவன் புகழ், தும்பியுடையான் பகையஞ்சான்,
இன்ன பிற காட்சிகளையும் திறனாய்வு முறையில்
கம்பனை நுகர இயலுகிறது.

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

ISBN: 978-81-939430-1-4

eBOOK ~ மின் நூல்




அணிந்துரை

கம்பனில் மக்கள் குரல் 1983

வழங்கியோர்:

நீதிபதி சு இரத்தினவேல் பாண்டியன்







அணிந்துரை

நீதிபதி சு. இரத்தினவேல் பாண்டியன்,
சென்னை உயர் நீதிமன்றம்

"விருத்த மெனும் ஒண்பாவிற்கு உயிர் கம்பன்" என்று புலவர்களால் போற்றப்பெறும் கம்பன் மக்கள் கவிஞன். மக்களின் மன எழுச்சிகளையும் அவர்களின் சுவையறிபாங் கையும் நன்கு அறிந்தவன். ஆகையால் 'நடையினின்றுயர் நாயகன்' கதையை 'ஈரத்தமிழில்' நாடறியச் செய்தனன். அவனியில் அவதார மூர்த்தியாக நடையாடின இராம பிரானை மக்கள் மனத்தில் எழுந்தருளச் செய்தான்; தமிழகத்தில் பக்தி இயக்கத்திற்குப் பின்னர் எழுந்த காவியமாதலால் ஆழ்வார் பாசுரங்களின் தாக்கம் காவியத் தின் சிறப்பைப் பன்மடங்கு உயர்த்தி விடுகின்றது. கடந்த ஐம்பதாண்டு முன்னர் வரையிலும் இக்காவியம் புலவர் களால் மட்டிலும் போற்றப்பெற்று வந்தது. கடந்த அரை நூற்றுண்டுக் காலமாகக் காரைக்குடி 'கம்பன் அடிப் பொடி' அமரர் சா. கணேசன் அவர்களின் அரிய முயற்சியால் கம்பன் பொது மக்களுக்கு நன்கு அறிமுகமானுன். ஆனந்த விகடனில் பி. ஸ்ரீ. அவர்கள் எழுதி வந்த 'கம்ப சித்திரம்' பற்றிய கட்டுரைகளும் ரசிகமணி டி. கே. சி. அவர்களின் காவியம்பற்றிய பேச்சும், எழுத்தும், அவர்தம் கம்பராமாயணப் பதிப்பும் பொதுமக்களின் ஆர்வத்தை மேலும் வளர்த்தன. அண்மைக் காலத்தில் மாவட்டந் தோறும் கம்பன் கழகங்கள் தோன்றுவதற்கு முதற்காரண மானவர் முன்னுள் தமிழகத் தலைமை நீதிபதி திரு. மு. மு. இஸ்மாயில் அவர்கள். இக் கழகங்கள் கம்பன் காவியத் தைப் பொது மக்கள் நுகரும் திருப்பணியை நிறைவேற்றி வருகின்றன. கற்ருேரும் மற்ருேரும் காவியத்தை அநு பவித்து மகிழ்கின்றனர்.

பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் இங்ஙனம் கம்பனை ஆழ்ந்து கற்ருேருள் ஒருவர். பல்லாண்டுகளாகப்

பல்வேறு சந்தர்ப்பங்களில் இவர் எழுதிய பதினொரு கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். பேராசிரியர் பல கோணங்களில் கம்பனைத் துய்த்தமையைக் கட்டுரைகள் பிரதிபலிக்கின்றன. 'கம்பனில் மக்கள் குரல்' என்ற முதற் கட்டுரையில் புறநானூற்றுக் காலம் முதல் நடைபெற்று வந்த 'கோனாட்சி' முறை மாறிக் கம்பன் காலத்தில் (பத்தாம் நூற்றாண்டு) 'குடியாட்சி' முறைக்கு வித்திட்ட நயத்தைக் காட்டுகின்றார். மக்களுக்கு உயிராக இருந்த அரசன் அவர்கட்கு உடலாகின்றான். 'மன்னுயிர் உய்யத் தாங்கும் உடலன்ன மன்னவன்' என்றாகின்றான் (பக். 2). இக்கட்டுரையில் பேராசிரியர் நான்கு அரசுகளைக் காட்டுவதும், மக்கள் அந்த அரசுகளைப்பற்றித் திறனாய் வதும் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன. 'காவியத் தம்பி' என்ற கட்டுரை இளையபெருமாளைப் பற்றியது; 'தம்பி யுடையான் பகையஞ்சான்' என்ற உண்மையைப் பறை சாற்றுகின்றது (பக். 32). 'அறங்கடந்தவர் செயல்' என்ற கட்டுரை 'ஆணவத்தின்' திருவிளையாடல்கள் ஒரு நாள் அடங்கியே தீரும் என்ற உண்மையை எடுத்துக் காட்டுவ தாக அமைகின்றது, 'கம்பனில் குழந்தை இன்பம்' என்ற கட்டுரை கம்பன் குழந்தையின்பத்தைப் பற்றி ஏன் பாட வில்லை, சரியான சந்தர்ப்பம் இருந்தும் பாடாது விட்டது ஏன்? என்ற வினாவை எழுப்பி அதற்கு விடையும் தரும் பாங்கு நம் சிந்தனைக்கு விருந்தாகின்றது.

'மலைக்'காட்சி' (ஆறாவது கட்டுரை) குறிஞ்சி நிலக் காட்சிகளை அற்புதமாகச் சித்திரித்துக் காட்டுகின்றது. இங்குக் கம்பனின் 'தெய்மாக் கவியின் மாட்சி'யைக் காண முடிகின்றது. இஃது தான் இராமன் திருமணத்திற்குப் பின்னர் காடுறை வாழ்க்கையின் தொடக்கத்தில் நுகர்ந்த தேனிலவுப் (Honey moon) பகுதி! அதன் பிறகு இராமன் பல் வேறு துன்பங்கட்கு ஆளாகின்றான் என்பதை நாம் அறிவோம். 'விளையும் பயிர்' என்ற கட்டுரை மேகநாதனின் திறமையை மேம்பட எடுத்துரைக்கின்றது, 'சிறை வைத்த

காதல்' என்ற கட்டுரையில் சீதையின் உருவத்தை இராவணன் சிறையில் வைத்ததையும் (ஆரணி, மாரீசன் வதை—83), பல நூறு பாடல்கட்குப் பின்னர் அந்த உருவம் சிறைவீடு பெற்றதையும் (யுத்த இராவணன் வதை-239) காட்டும் பாங்கு பேராசிரியரின் நுண்மாண் நுழை புலத்தை நுட்பமாகக் காட்டுகின்றது.

'கவி நாயகன்' (9-வதுகட்டுரை) என்பதில் 'கவிநாயகன்' என்ற தொடர் கம்பனையும் அநுமனையும் சுட்டுவதை (பக்-108) எடுத்துக் காட்டி, "இராகவன் புகழினைச் செவிக்குத் தேனுக இனிக்கும் வண்ணம் திருத்திய பெருமையை இரு கவிநாயகர்களிடத்திலும் கண்டுகளிக்கலாம். வான்மீகத்திலுள்ள வரலாறுகளில் சிலவற்றைத் திருத்தித் தமிழர்களின் மரபுக்கும் நாகரிகத்திற்கும் ஏற்றவாறு இராமகாதையை அமைத்த பெருமை கவிநாயகனுகிய கம்பனுக்கு உரியது. இராமனது காடுறை வாழ்க்கையின் வரலாற்றில் நேர்ந்த சில பேராபத்துகளை நீக்கி அதனைச் செம்மையாக மாண்புறுத்திய பெருமை கவிநாயகராகிய வாயுபுத்திரனைச் சாரும்'' (பக்-97) என்று சுட்டியுரைத்து இராமனது வரலாற்றில் எழுந்த கோணல்கள் எவை என்பதையும், அவற்றை நிமிர்த்தின அநுமனின் திறத்தினையும்' விளக்கும் பாங்கு அற்புதமாக அமைந்துள்ளது.

'கம்பன் காட்டும் மேழிச் செல்வம்' என்ற கட்டுரையில், இக்காலத்திற்கும் பொருந்துகின்ற தன்மையைக் காண்கின்றேம். 'உணவு பற்றுக்குறை' பற்றிய காரணங்களைச் சுட்டியுரைத்து "வன மகோத்ஸவம்', 'ஏர்முனைவிழா' போன்ற விழாக்களைக் கொண்டாடுவதால் யாதொரு பயனும் விளையப் போவதில்லை.வாணிகத்திற்கும் பொருத்தமான விளம்பரத் திட்டங்களை உணவுப் பெருக்கத்திற்காக அரசினர் மேற்கொள்வது வருத்தத்தை விளைவிக்கின்றது'' என்ற புரட்சிகரமான கருத்து ஆழ்ந்து சிந்திக்கதக்கது. (பக், 105). "(ஏரெழுபது) கம்பனுடையதா? அல்லது பிற்

காலத்துப் புலவர் ஒருவர் இயற்றினதாக அவன் பெயரில் உலவவிட்டாரா?" (பக்,107) என்ற ஆராய்ச்சியில் இறங்காமல் கம்பன் மேழிச்செல்வத்தைப் பாராட்டுவதை மட்டிலும் விளக்குகின்றது. 'கம்பனில் உருக்காட்சிகள்' என்ற இறுதிக் கட்டுரை ஆங்கிலத் திறனாய்வு முறையில் கம்பனை நுகர்வதற்கு வழியமைத்துக் காட்டுகின்றது.

பேராசிரியர் **டாக்டர் ரெட்டியார்** பல்துறை அறிஞர். பல துறைகளையும் சிறப்பாக அறிவியல் துறைகளை முறையாகப் பயின்று அவற்றில் ஆழ்ந்த புலமையைஅடைந்தவர். சிறந்த சிந்தனையாளர். பல் வேறு துறைகளில் படைப்பிலக்கியங்களை வழங்கி தமிழன்னையைப் பெருமிதத்துடன் களிக்கச்செய்து வருகின்றவர். இவரை **'நடமாடும் கலைக் களஞ்சியம்'** என்று கூறினாலும் அக்கூற்று மிகைபடக் கூறியதாகாது. அறிவியல்முறையில் (Scientific Method) பயிற்சி பெற்ற அறிஞரின் நோக்கும் போக்கும் ஆழமாகவே இருக்கும் என்ற உண்மைக்கு இப்பேராசிரியர் ஓர் எடுத்துக் காட்டாகவே அமைகின்றார். பார்ப்பதற்கும், பழகுவதற்கும் இனியவர்; படைப்புகளையும் இனிமையாக வழங்குகின்றார். நல்ல உடல் நலத்துடனும் மனவளத்துடனும் திகழும் இத்தகைய 60 ஆண்டுகட்கு மேல் பழுத்த **'இளைஞர்களின்'**சேவை நாட்டுக்குத் தேவை. இத்தகைய பெரியோர்களை ஒல்லும் வகையெல்லாம் மொழி வளர்ச்சிக்கும் பயன் படுத்திக் கொள்வது அரசின் கடமை. 56 நூல்களைப் படைத்த பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் பல்லாண்டுகள் வாழ்க! வளர்க அவர்தம் தமிழ்ப் பணி!!' என்று வாழ்த்துகின்றேன்.

அண்ணுநகர்
10-5-83 } **சு. இரத்தினவேல் பாண்டியன்**

சைவ சமய விளக்கு

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

சமயக்காழ்ப்பு ஒருகாலத்தில் அருகியிருந்து, பெருகிவரும்
தற்கால சூழ்நிலையில் சைவ சமயத்தில்
உள்ளடங்கியிருக்கும் தத்துவங்களையும்,
பேருண்மைகளையும் எளிய, தூய, இனிமையான
தமிழில் விளக்கும் ஓர் அரிய சமயக் கருவூலம்

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978 -81-939270-2-1



eBOOK ~ மின் நூல்



அணிந்துரை


சைவ சமய விளக்கு 1984

வழங்கியோர்:

Prof VA Devasenapathi







FOREWORD

(Professor V. A. DEVASENAPATHI)

It gives me great pleasure to write this **Foreword** to *Prof. N. Subbu Reddiyar's* **Saiva Samaya Vilakku.** Like a lamp spreading its light to remove darkness and reveal the presence of objects, this book *is intended* to remove ignorance regarding **Saiva Siddhanta** and explain the *basic principles* of this system. Prof. N. Subbu Reddiyar has employed *the technique* of expounding the system in the form of letters from an elderly person to one who is young in age and is eager to learn about this system. This epistolary form gives it a personal touch and makes us feel *that the matter* dealt with is of vital interest and is not a treatment of *abstract or abstruse* issues. Dr. N. Subbu Reddiyar's aim is to make this book a source ot perenninal interest to each succeeding generation of young persons.

'**Saiva Siddhanta** may be *traced* back *to the* **Vedas** and **Saiva Agamas** on one side and Tamil works ranging from the **Tolkappiyam** and **Sangam** classics, to ths *works* of the **Samayacaryas** and **Santanacaryas** and later-day saints and savants. Its authoritative

formulation is found in the **Sivajnana bodham** of Meykandar. It is usual to interpret the word **Siddhanta** as the accomplished end. This, however, does not rule out periodic review of the system so that the basic principles may be studied in the context of systems that are in vogue from time to time. Thus besides dealing with the **Carvaka** a contemporary exposition of **Saiva Siddhanta** may well review it in the light of **Marxism. Rationalism, Lingusstic Analysis** etc. Prof. N. Subbu Reddiyar prepares the ground for such a challenging work by giving a detailed and lucid exposition of **Saiva Siddhanta.** There is an introductory section which deals with Saiva Siddhanta literature. There are three succeeding sections dealing with the basic categories, **Pati, Pasu** and **Pasam** (God, souls and bonds). Arguments for the acceptance of these categories are taken up for exposition along with an account of their nature in these essential or primary and relative aspects. We have two sections on the means of attainment and the fruit of attachment. **Ssiva Siddhanta** is not only of academic interest but is also the basis of a living faith. Hence the author concludes his survey with an exposition of the practical aspects of worship.

Prof. Reddiyar is one of our seniormost Tamil scholars. Yet he has the ardent spirit of youth in keeping his knowledge upto date, not only in the field of literature but also in that of science. He has exacting standards

both for himself and for those who work under his guidance. While he draws fully on the authoritative Siddhanta works, he enriches his exposition by apt parallels from other classics.

Saiva Siddhanta is accorded increasing recognition in the Universities of **Tamilnadu.** Prof. N. Subbu Reddiyas's **Saiva Samaya Vilakku** is at once an invitation to study **Saivs Siddhanta** and a source of inspiration for further intensive study and research. I commend it heartily to institutions at home and and abroad, like SriL anka and Malaysia, interested in promoting study of **Saiva Siddhanta**.

May Lord Siva bless prof. N. Subbu Reddiyar to continue his valuable work through the years to come.

Madras-600007
August 15, 1984.

V. A. DEVASENAPATHI.

வாழையடி வாழை

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

இந்நூல் உயிரியலில் ஜீன்களால் விளையும் பல புதுமைகளை
அறிவியல் கல்வி பயிலாதவர்களும் எளிதில் புரிந்துகொள்ளுமாறு
தெளிவாகப் படங்களுடன் விளக்குகின்றது. மேலும்,
பெற்றோர்களிடமிருந்து தம் சேய்களுக்கு மரபு வழியாகச்
செலுத்துப்பெறும் பண்புகள், கடத்துப்பெறாத பண்புகள்
இவையிவை எனத் தெளிவாக விளக்கப்பெற்றுள்ளன.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939685-2-9

eBOOK ~ *மின் நூல்*



அணிந்துரை

வாழையடி வாழை 1984


வழங்கியோர்:

செ அரங்கநாயகம்

மாண்புமிகு கல்வி அமைச்சர்







அணிந்துரை

மாண்புமிகு கல்வி அமைச்சர்

திரு. செ. அரங்கநாயகம்

'தமிழில் முடியுமா ?'—தமிழில் அறிவியலைப் பயிற்றுவிக்க முடியுமா ? என்ற வினா சுமார் ஐம்பதாண்டுகட்கு முன்னர் எழுப்பப்பட்ட வினா. 'முடியும்' என்று இதே தலைப்பில் இயற்பியல் நூலொன்று அழகான தமிழில் எழுதி மெய்ப்பித்தார் மூதறிஞர் இராஜாஜி. இப்பொழுது இத்தகைய வினாவை எழுப்புவதற்கு இடம் இல்லை. அறிவியலைத் தமிழில் கற்பிக்க, கலைச் சொல்லாக்கம் என்பது தடைக் கல்லாக இருக்காது என்பதற்குக் கடந்த ஐம்பதாண்டுக் காலமாக உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் பாடங்கள் தமிழில் கற்பிக்கப்பட்டு வருவதே ஒரு சான்றாகும். கல்லூரிகளிலும் பல ஆண்டுகளாகத் தமிழிலேயே அறிவியல் பாடங்கள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. பெற்றோர்களும் பயிலும் மாணாக்கர்களும் உரிய அளவுக்கு ஒத்துழைக்காமலிருப்பதால் இம்முறையில் சிறிது தேக்கம் காணப்படுகின்றது. பல நல்ல பாட நூல்கள் தமிழில் இப்போது வெளிவந்துள்ளன. கற்பிக்கும் ஆசிரியர்களும் பேரூக்கம் காட்டி வருகின்றனர். "சொல்லும் திறமை தமிழ்மொழிக்கில்லை" என்ற வாக்கு பழங்கதையாய் மறைந்துவிட்டது.

எனினும், ஆர்வமூட்டும் அறிவியல் கலை நூல்கள் தமிழில் தொடர்ந்து அதிகம் தோன்றவில்லை. எல்லா நிலைகளிலும் பல்லாயிரக்கணக்கான அளவில் கற்பிக்கும் ஆசிரியர்களிருந்தும், இத்தகைய நூல்களை எழுதி வெளி

விடப் பலர் முன்வருவதில்லை. பேராசிரியர் ஆர். கே. விசுவ நாதன், பேராசிரியை ஈ த. இராஜேசுவரி அம்மையார், திரு. பெ. நா. அப்புசாமி போன்ற சிலர்தாம் இத் துறையில் சீரிய பணியாற்றியுள்ளனர். இவர்களை அடுத்துப் பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அறிவியலில்—பல துறைகளில்—சிறுவர்களுக்காகவும் வளர்ந்தவர்களுக்காகவும் பொதுமக்களுக்காகவும் இதுவரையில் பதினான்கு நூல்களை எழுதித் தமிழ் மொழிக்கு வளமூட்டியுள்ளார். அறிஞர் பெட்ரண்ட் ரஸ்ஸல் எழுதியுள்ள "அணுவின் அரிச்சுவடி" (A. B. C. of Atoms) சர் ஜேம்ஸ் ஜீன்ஸ் எழுதியுள்ள 'விராங்கா வியன் உலகம்' (The Mysterious Universe) என்ற நூல்களைப் போலத் தமிழில் அறிவியற் புனைவு நூல்கள் தோன்ற வேண்டும்.

'வாழையடி வாழை' என்ற இந் நூல் மாந்தரின் கால்வழி இயலைப் (Genetics) பற்றியது. 'அணுவியல்' 'தொலை உலகச் செலவு' போன்ற பகுதிகள் அண்மைக் காலத்தில் பல சிறந்த பயன்களை இயற்பியலில் நல்கியுள்ளதைப் போலவே உயிரியலில் கால்வழிப் பகுதி பல வியக்கத்தக்க பயன்களை விளைவித்துள்ளன. 1983 திசம்பர் திங்களில் தில்லி மாநகரில் நடைபெற்ற அனைத்துலகக் கால் வழியியல் மாநாட்டில் கலந்துகொண்ட 50 நாடுகளைச் சார்ந்த 2500 அறிவியல் அறிஞர்கள் இத் துறையில் புதிதாகக் கண்டறிந்த பல அரிய சாதனைகளை விளக்கி உரையாற்றினர்.

இந்த நூல் பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் உயிரியலில் ஜீன்களால் (Genes) விளையும் பல புதுமைகளை அறிவியல் கல்வி பயிலாதவர்களும் எளிதில் புரிந்துகொள்ளுமாறு தெளிவாகப் படங்களுடன் விளக்கியிருப்பது பாராட்டத்தக்கது. இந் நூலில் பெற்றோர்களிடமிருந்து தம் சேய்களுக்கு மரபு வழியாகச் செலுத்தப்பெறும் பண்புகள், கடத்தப்பெறாத பண்புகள்

இவையிவை எனத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. பல இடங்களில் தமிழிலக்கிய மேற்கோளுடனும் ஆசிரியர் தம் கருத்தை விளக்க முயன்றிருப்பது நூலின் சுவையை மிகுவிக்கின்றது. மக்களிடம் நிலவி வரும் தவறான நம்பிக்கைகளை எடுத்துக்காட்டி உண்மைநிலை இன்னது என்பதை அவர் விளக்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இத் துறையில் மார்க்னும் மெண்டலும் கண்டறிந்த பேருண்மைகள் (பக் 74-81) தெளிவாக்கப்பெற்றுள்ளன. இரட்டைப் பிறவிகள், இரண்டுக்கு மேற்பட்ட பிறவிகள் (Multiple births), கொடிய நோய்கள், மரபு வழியாகப் பெற்றோரிடமிருந்து தம் கால்வழியினருக்குப் பரவும் முறைகள், 'மெல்லியலார்' எனப்படும் மகளிரே உண்மையில் 'வல்லியலார்' என்ற கருத்து (பக் 167-8), செயல் சார்ந்த குறைபாடுகள், நோய் மனமுடையோர், மந்த மனமுடையோர், 'இரண்டுங் கெட்டான்கள்', குருதி வகைகள், குருதி வகைகளின் பொருத்தம் (பக். 238) போன்ற தலைப்புகளில் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டிய உண்மைகள் பல சுவையான விளக்கம் பெறுகின்றன.

'கொஞ்சம் நில்லுங்கள்!' (பக். 264) என்ற தலைப்பில் நூல் படிப்போரை ஆசிரியர் சிந்திக்கத் தூண்டுகின்றார். 'கால்வழியில் புரட்சி' என்ற தலைப்பில் (பக். 268) உணவுப் பெருக்கம், தாவர இயலிலும் விலங்கியலிலும் ஒட்டுவகையால் விளைந்த பயன்கள், இந்திய அறிவியலறிஞர்களால் வெளிநாடுகளில் கண்டறியப்பெற்ற நுணுக்கமான அறிவியல் உண்மைகள் முதலியன எழிலுற எடுத்துக்காட்டப்பெற்றுள்ள. ஆசிரியர் பல புதிய கலைச்சொற்களைக் கையாண்டிருப்பது தமிழுக்குப் புதிய வளத்தை வழங்குகின்றது. ஓய்வுபெற்ற நிலையிலும் ஓயாது பணியாற்றும் இவர் திறம் சிறப்புடையதாகும்.

மாணாக்கர்கட்கும் பெரியோர்கட்கும் பொதுமக்கட்கும் இந்நூல் பெரிதும் பயன்படக்கூடியது. அருந்தமிழ்ப் புலமையோடு அறிவியற் புலமையும் வாய்க்கப்பெற்ற பெரும் பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் இத்தகைய பல விழுமிய நூல்களை மேலும் எழுதித் தமிழில் அறிவியல் செல்வத்தை மிகுவிப்பதுடன் பொதுமக்களிடையே அறிவியல் ஆர்வத்தையும் பெருக்குவார்கள் என எதிர்பார்க்கின்றேன். தமிழுலகத்திற்கு இந்நூல் அரிய செல்வமாகும்.

'பொதிகை'
சென்னை-600 028
29—7—1984

செ. அரங்கநாயகம்

வைணவ உரைவளம்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

இந்நூல் 'தேனும் கன்னலும் கலந்த' சுவை நிறைந்த பால் போன்றது. சுவையின்றத் தள்ள வேண்டிய பக்கம் ஒன்றுகூட இல்லை. பேராசிரியர் தாம் துய்த்துணர்ந்ததை ஐதிகம், இதிகாசம், சம்வாதம் என்ற மூவகைகளில் அடக்கி ஆழ்வார் பாசுரங்களுடன் இயைபுபடுத்திக் காட்டுகின்றார்.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939685-5-0

eBOOK ~ மின் நூல்

ந சுப்பு ரெட்டியார்
1916 2016
100
நூற்றாண்டு விழா நிகழ்வுகள்




அணிந்துரை

வைணவ உரைவளம் 1985

வழங்கியோர்:

பெ இராமானுஜன்







ஸ்ரீ

சீதாபதி துணை

அணிந்துரை

நாராயண நாராயண
    நாராயண நமஎன்(று)
ஆராயினும் இம்மந்திரம்
    அநுசந்ததம் மறவார்
பேராயிரம் உடையான்அருள்,
    பிறவார் பிறவியிலை
வாரார்இனி வாரார்என
    மறைநூலும் விளம்பும்.[1]

—ஒரு பழம் பாடல்

'வைணவ உரைவளம்' என்ற நூலின் ஆசிரியர் பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்களைத் தமிழுலகம், சில ஆண்டுகளாக வைணவ உலகம், நன்கு அறியும். இவர் கல்லூரியில் படித்த நாள் தொட்டே இவரை நான் நன்கு அறிவேன்; எனது ஊருக்கு அண்மையில் இருந்தவர் என்பதனாலோ, ஓர் இனத்தவர் என்பதனாலோ அல்ல; இவரது அன்பும் பண்பும் அறிவும் ஆற்றலும் தளரா உழைப்பும் என்மனத்தைக் கவர்ந்துவிட்டன. கல்லூரியில் படித்த நாள்தொட்டு இன்றுவரை அவரோடு இணைந்த தொடர்பு

1. மதுரைத் தமிழ்ச் சங்கம் திருநாராயண அய்யங்கார் சொன்னது.

அறுகுபோல் வேரூன்றிவிட்டது. கல்லூரியில் பயின்ற போதே மாணவநிலையில் கண்டு பேசி இருக்கின்றேன். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்ற பழமொழிப் படி அப்பொழுதே நினைத்தேன்—புலமையில், பழகும் பான்மையில், அறிவுத் திறமையில், அயரா உழைப்பில் நிகரற்று விளங்குவார் என்று. இன்று அவர்களிடத்தில் இவற்றையெல்லாம் கண்கூடாகக் காண்கின்றேன்.

இத்தகைய பேறு வாய்த்தது, ''ஒருமைக்கண் தான் கற்ற கல்வி எழுமையும் ஏமாப்புடைத்து'' (குறள்-398) என்ற தமிழ் மறையைப் பின்பற்றியதா? இறைவன் திருவருளினாலா? என்றால்:இரண்டையும் ஏற்றுக்கொள்ள லாம். எனினும், பேராசிரியர் அவர்களின் உழைப்பு அசாதாரணம் ஆனது. திருச்சி தமிழ்ச் சங்கத்தில் (சனவரி 1983) இவர் எழுதிய 'முத்திநெறி' என்ற நூல் வெளி யீட்டு விழாவில் அடியேன் கலந்துகொண்டு பேசும் வாய்ப்பு கிடைத்தது. அப்பொழுது சொன்னேன், இவர்கள் வெளியிட்டுள்ள நூல்கள்பற்றி. இவ்வளவு நூல்களையும் சிந்தித்து, பிழை நேராதவாறு எழுதிவிட இவர்களால் எப்படி முடிந்தது? குடும்பச் சுமை ஒரு புறம்; ஊதியத்திற்கு உழைக்கும் தொழில் தொல்லை மற்றொரு புறம். இந்த நிலையில் அறிஞர்கள் மூக்கில் விரல் வைத்து வியக்கும் வண்ணம் புலமை நிறைந்த கட்டுரைகளை வெளியிட் டுள்ளார்கள்; வெளியிட்டும் வருகின்றார்கள். ஒருக்கால் ''இன்கவி பாடும் பரமகவிகளால் தன் கவி தான்தன்னைப் பாடுவியாது, இன்று—நன்கு வந்து என்னுடன் ஆக்கி, என்னால் தன்னை வன்கவி பாடும் வைகுந்த நாதனே' (திருவாய் 7.9:6) என்ற ஆழ்வார் பாசுரப்படி வேங்கட நாதனே இவர் நெஞ்சுள் நின்று அருள் பாலித்து வர வேண்டும்'' என்று கூறினேன். அதைத் தான் 'வைணவ உரைவளம்' என்னும் இவ்வரிய பெரிய நூலைக் கண்டதும் நினைவுகூரச் செய்கின்றது. சொல்லுக்கு எட்டாதது இறைவன் செயல் என்பார்கள். இவர் ஆற்றிய, ஆற்றி

வரும் செயல் என் சிந்தனையைக் கடந்து நிற்கின்றது. போலித்தனமானப் பேச்சும், சொல்லும் மலிந்து, உண்மை உணர வழியின்றிப் போன இன்று, என்னுடைய எழுத்தும் சொல்லும் யாருடைய முகமனையும் எதிர்பார்த்தது அல்ல என்பதைக்கூறி, இந்த வெளியீட்டைப்பற்றி உணர்ந்ததைக் —அநுபவித்ததைக்—கூறுவேன்.

'வைணவ உரைவளம' என்ற இந்த வெளியீடு 'தேனும் கன்னலும் கலந்த' சுவை நிறைந்த பாலைப் போன்றது. சுவையின்றித் தள்ள வேண்டிய பக்கம் இந் நூலில் ஒன்றுகூட இல்லை. ஆழ்வார்கள் பாசுரங்களைச் சுவைத்து அநுபவிப்பதற்கு இந்நூல் போன்ற வேறொரு நூலை நான் கண்டதும் இல்லை; கேட்டதும் இல்லை. அடியேனை அணிந்துரை வழங்குமாறு ஆசிரியர் பணித்தது பாசத்தாலன்றி அறிவை அளவுகோலாகக் கொண்டு அல்ல; அடியேன் அநுபவித்ததை—நூலை படிக்கும்போது பரவசம் அடைந்ததை—எழுத்தில் வடித்துக் காட்ட இயலாது. எனினும், கடமையைக் கருதி ஒருசிலவற்றை எடுத்துக் காட்டுவேன். ஓர் ஆசாரியனை ஆச்ரயித்து, பணிந்து, கேட்டு, அறிந்து கொள்ள வேண்டியவற்றை ஒரு சிரமமும் இல்லாமல் அறிந்து அநுபவிக்குமாறு உதவுவது இந்த அரிய பக்திக் கருவூலம்.

ஆசிரியர் 'வைணவ உரைகள்' என்னும் கடலில் மூழ்கி முத்தெடுத்து வந்து அவற்றில் தாம் கண்டவற்றை ஐதிகம், இதிகாசம், சம்வாதம் என்ற மூவகைகளில் அடக்கி ஆழ்வார் பாசுரங்களுடன் இயைபுபடுத்திக் காட்டுகின்றார். அவற்றுள் சிலவற்றை ஈண்டு எடுத்துக் காட்டுவேன்.

ஐதிகம் : (1) 'பக்த விலோசனம்' என்ற தொடருக்கு (பக்.42) இவர்காட்டும் பொருள் நாம் அறியாதது. பக்தி — சோறு; விலோசனம் — பார்வை; சோறு பார்த்திருக்கும் இடம் என்று பொருள் கூறி, இதற்கு இவர் காட்டும் ஐதிகம் நெஞ்சை நெகிழ்விக்கின்றது.

(2) 'கிடந்தவாறு எழுந்திருந்து பேசும்' புதுமை நம்மை பக்திசாரர் காலத்திற்கு இழுத்துச் செல்லுகின்றது. (3) அடியேன் கோயிலில் (அரங்கத்தில்) சில ஆண்டுகள் வாசம் செய்ய நேர்ந்தபோது செந்தாரப்பட்டி பாகவ தோத்தமர் முகுந்த ராமாநுஜ சுவாமிகளோடு ஆழ்வார் அருளிச் செயல்களைச் சல்லாபித்துக்கொண்டு இருப்பது வழக்கம். ஒரு நாள் ''தொண்டரடிப் பொடியாழ்வார் திருவரங்க நாதனை ''நம் அரங்கனாகிய பித்தன்'' என் கின்றாரே, அது பொருந்துமாறில்லை; சிவனை வேண்டு மானால் பித்தன் என்று சொல்லலாம். காரணமும் இருக் கின்றது. மேடையில் ஆடவன் பெண் வேடம் பூண்டு நடிப்பதுபோல புருடோத்தமனான சீமந் நாராயணன் ஒரு காரணார்த்தமாகப் பெண் வடிவு கொண்டபோது, சிவன் அவனைப் பெண் என்றே எண்ணிப் பேதுற்றதனால் அவனைப் பித்தன் என்பது பொருந்தும்; நமது சுவாமிக்கு அது தகாதே'' என்றார். அவர் கொண்ட ஐயத்திற்கு அன்று என்னால் அமைதிகூற இயலவில்லை. பேராசிரியர் 'அடியார் பித்தினை உடையவன்' என்று தெளிவுபடுத் தியது (பக்.51) என்னை வியக்க வைக்கின்றது. திருவாய் மொழியின் ஏற்றம்பற்றி (பக். 72-73) காட்டப் பெற்றுள்ள ஐதிகம் அற்புதமானது. ஆழ்வார்களின்அருளிச் செயல்கட்குப் பட்டர் கூறும் நயமும் ஐதிகமும் இந் நூலில் பரக்கக் காணலாம். 'தாய் எடுத்த சிறு கோலுக்கு மைந்தனுக்கு' என்ற தொடருக்குக் கூறும் விளக்கமும் ஐதிகமும் (பக்.184) வயிறு குலுங்கச் சிரிக்கவைக்கின்றன. 'புரிவதும் புகை பூவே' என்பதற்குப் பட்டரின் ஐதிகம் (பக்.264) சாத்திரத்திற்குப் புதுவிளக்கம் தருவதாக அமை கின்றது. 'மாயன் என் நெஞ்சில் உள்ளான்' என்ற பாசு ரத்தின் கீழ் அரும்பத உரையில் கண்ட ஐதிகம் (பக்.268) போலி வைணவவர்கட்கு ஒரு சாட்டையடி. 'கண்ணுளே நிற்கும்' என்ற பாசுரத்தில் 'இவ்விடத்தில் வேல் வெட்டிப் பிள்ளைக்கு பிள்ளை அருளிச் செய்த வார்த்தையை நினைப்பது' என்ற ஐதிகத்தின் விளக்கம் உண்மையான

வைணவர்கட்கு ஓர் ஒளிவிளக்கு. 'பண்டை நாளிலே' என்ற பாசுரத்தில் காட்டப் பெறும் இரண்டு ஐதிகங்களும் (பக்.494) சுவைமிக்கவை. 'என்சொல்லி' என்னும் திருவாய் மொழியில் கீதைப் போவானுக்கும் திருவாய்மொழி விண்ணப்பம் செய்வானுக்கும் உள்ள வேற்றுமைபற்றிய ஐதிகம் (பக்.472) நம்மை வியக்க வைக்கின்றது. பாகவத சேஷத்துவம் அருமையினும் அருமை என்பதற்கு ஈட்டுரையில் காணும் (பக்.321, 322) இரண்டு ஐதிகங்களும் ஆழ்ந்த கருத்துடையவை. வங்கிபுரத்து நம்பி ஆய்ச்சிகள் பக்கம் நின்று சேவித்தபோது முதலியாண்டான் வார்த்தை (பக்.499) உள்ளன்பை எடுத்துக் காட்டுகின்றது. 'அன்பினையே பார்க்கும்' என்பதற்கு ஈட்டாசிரியர் காட்டும் ஐதிகம் நம்மை முறுவலிக்கச் செய்கின்றது.

இதிகாசம்: 'உந்து மதகளிற்றன்' (பக். 33) என்ற திருப்பாவையில் வரும் இதிகாசத்தை அனைவரும் அறிவர். பேராசிரியர், இராமாநுசர் பிட்சை ஏற்றதைத் துறவுக்கு ஏற்ற செயல் என்று விமர்சிக்கின்றார். இந்த நிகழ்ச்சியைத் திருப்பாவை காலட்சேபம் செய்பவர் எவரும் ஒரு சொல்சொன்னது இல்லை. அன்று நடந்த இந் நிகழ்ச்சியை நமது மனக் கண்ணால் பார்க்க நேர்ந்தால் அத்துழாயைக் கண்டதும் உடையவருக்கு ஏற்பட்ட பிரேமை அதிர்ச்சி நமக்கும் நேரும் என்பதில் ஐயம் இல்லை. 'நின்ற ஓர் நித்திலத்தை' (பக் 95) என்பதுபற்றிய இதிகாசம் நம்மை முறுவலிக்கச் செய்கின்றது. 'வரை மீகானில் தடம் பருகு கருமுகிலை' என்ற தொடருக்கு பட்டரின் அருளிச் செயல் (பக் 98) நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றது. 'கள்வன் கொல்' என்ற பாசுரத்தில் 'வயலாளி மணவாளன் பரகாலநாயகியைக் கவர்ந்து சென்றது மறைவாகவா அல்லது பலரும் அறியவா!' என்ற வினாவுக்கு பட்டர் அருளிய இதிகாசம் (பக் 131) அகப்பொருள் சுவையை விஞ்சவைக்கின்றது. 'போம் பழியெல்லாம் அமணன் தலையோடே' என்ற நம்பிள்ளை சூக்தியில் கண்டவரலாறு

(பக் 261) கண்ணபிரான் தீம்பு செய்யாதிருந்தாலும் பிறருடையை தீம்பு அவன் தலையில் ஏறும் என்பதை அற்புதமாக விளக்குகின்றது. மிளகாழ்வானைப்பற்றிய இதிகாசம் (பக். 513) வைணவத்துவம்பற்றிய மன நிறைவைக் காட்டுகின்றது. 'நல்லபதத்தால் மனைவாழ்வர் கொண்ட பெண்டிர் மக்களே' என்ற தொடரை விளக்குவதற்கு செல்வ நம்பியின் தேவியார் செயலும் சொல்லும் (பக் 487) வைணவ பக்தர்களின் நெஞ்சை நெகிழவைக்கின்றது.

சம்வாதம் :'முன்னோர் தூது' (2-2 : 3) என்ற திருமங்கை மன்னன் திருமொழிக்கு பட்டர் கூறும் நயம் (பக்.85) நம்மை மெய் மறக்கச் செய்யும். 'கலிகன்றி...ஆவாரே' என வரும் பல சுருதிப் பாசுரத்திற்குத் தடையும் விடையுமாக நஞ்சீயருக்கும் பட்டருக்கும் நேர்ந்த உரையாடலை (பக்.102) அறிந்து அநுபவிக்கும் திறன் இல்லாதவர் 'செவியிற் சுவையுணரா வாயுணரும் மாக்களே யாவர்'. 'பள்ளச் செறுவில்...புள்ளம் பூதங்குடிதானே' என்பதில் வரும் வருணனை குறித்து (பக்.140) பட்டருக்கும் ஆலவாயுடையானுக்கும் நேர்ந்த உரையில் பட்டரின் சமத்காரமான பேச்சு கூர்த்த மதியினரையும் கைகூப்பச் செய்யும். 'திரு நறையூர்த்தேனே' என்ற திருவிண்ணகர்ப் பாசுரத் தொடருக்கு (பக்.153) நஞ்சீயர் கேட்ட வினாவுக்கு பட்டர் அருளிய உரைநயம் பட்டரின் கூர்த்த மதிக்கு ஓர் அற்புதமான எடுத்துக்காட்டு.

ஆழ்பொருள் ரஸோக்தி முதலியன ;இவை இந்த நூலின் சிறப்புக்குப் பெருமை அளிக்கின்றன. 'பள்ளி கமலத்திடை நள்ளியூடும்' என்ற தொடருக்குப் பட்டர் கூறும் ஆழ்பொருள் (பக். 162) அவர் புலமைக்கு அடி வணங்கச் செய்கின்றது. 'தண்சேறை யெம்பெருமான்...என் தலைமேலாரே' என்ற தொடருக்குப் பெரியவாச்சான் பிள்ளை கூறும் ரஸோக்தி (பக். 173) நம்மைப் புல்லரிக்கச் செய்

கின்றது. 'பொன்னலர்ந்த நறுஞ் செறுந்திப்...ஊர் என்று போயினாரே' என்ற தொடருக்குப் பட்டர் கூறும் கற்பனாலங்காரம்(பக் 233)செவிக்குத்தேன் எனச் சுவை தரும்.'என் நீர்மை கண்டிரங்கி' என்ற தொடருக்குப் பட்டர் தமிழ்ப் புலவர்க்குக் கூறிய பொருள் (பக். 254) புலவர்கட்குப் பெரு விருந்தாகும். 'உடலொடுங்கொண்டு கொடுத்தவனை' என்ற தொடருக்குப் பட்டர் கூறும் 'ரஸோக்தி' (பக். 327) நம்மை வியக்க வைக்கின்றது.

சொற்பொரு நயம். பழந்தமிழ் இலக்கியங்களுக்கு உரை கண்ட பெரியார் பலருள் நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர், மேலும் பெயர் தெரியாத அரும்பத உரையாசிரியர் போன்ற நுண்மாண் நுழைபுலச் செல்வர்களின் உரை நயத்தை அறிந்து அநுபவித்துச் சுவைத்த பெருமக்களைத் திவ்வியப் பிரபந்த உரையாசிரியப்பெரு மக்கள் பிரபந்தத்தில் காணும் சொற்களுக்கும் சொற்றொடர்கட்கும் காட்டும் நயம் வியப்பால் மெய் சிலிர்க்கச் செய்யும். 'கண்ணார் கரும்பின்... நாங்கூர்' என்ற சொற்றொடரில் 'கழைதின்று வைகி' எனவும் 'மண்ணேந்திள மேதிகள் வைகு' எனவும் வரும் இடங்களில் வைகி, வைகு என்பதற்குப் பட்டர் காட்டும் இடம் புலவர்கட்கு நல் விருந்து. 'மாளிகை சூழ்தெருவில்... நாங்கூர்' என் பதில் வலைச்சியர் விளைந்த நன்முத்துகளைக் கொடுத்து, நெல்லைப் பண்டமாற்றாகப் பெறும் திருநாங்கூர் என்ற தொடருக்குத் (பக். 137) தொனிப் பொருளாக வரைந்திருப்பதும் புலவர்கட்கு நல்விருந்தாகும். 'வலையுள் ...அகப்பட்டேன்' என்பதில் (பக். 368) 'வலை என்பது நோக்கையும் புன்முறுவலையும் காட்டுவதற்கு ஈட்டுரையில் காணப்பெறும் நயம் சிந்தனைக்கு நல்விருந்தாகும். 'வந்தருளி என் நெஞ்சிடங்காண்' என்ற இடத்தில் 'வந்தருளி, வந்தருளி...' என்று மேலே போகமாட்டாமல் பாடுவாராம் ஆப்பான் திருவழுந்தூர் அரையர். இதன் ஈடுபாடு நம் நெஞ்சை நெகிழ்விக்கின்றது.

எம்பெருமான் சிலவற்றுடன் ஒப்பு ; எம்பெருமானை யானை (பக் 146), மேகம் (பக் 223), இரத்தினம் (பக் 194), நிதி (பக் 418) ஆகியவற்றுடன் ஒப்புமைப் படுத்திக் காட்ட பெற்றுள்ள செய்திகள் நெஞ்சில் நிலைநிறுத்தப் பெற வேண்டியவை.

அருளிச் செயலுக்குரிய வியாக்யானங்கள் அனைத்தும் வடமொழியும் தமிழும் கலந்த மணிப் பிரவாள நடையில் அமைந்துள்ளன. அன்றியும் வைணவ சம்பிரதாயத்திற்கே யுரிய சில சம்பிரதாய வாக்கியங்கள், பரியாயச் சொற்கள் ஓர் ஆசானை அணுகிக் கேட்டாலன்றி இவற்றைப் புரிந்து கொள்ள முடியாது. எனவே, என்னைப் போன்றவர்களும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் முயன்றுள்ளபேராசிரி யர் அவர்களின் அரியபணி—தெய்வப்பணி—யைச் சிறப் பாக வைணவப் பெருமக்களும் பொதுவாகத் தமிழ்நன்மக் களும் போற்றி ஆதரவு காட்டுவார்கள் என்பதற்கு ஐயம் இல்லை. இதுபோன்ற உலகிற்கு உதவியான பணியை மேன்மேலும் செய்து உதவும் பேராசிரியர் அவர்கட்கு நலமும் வளமும் தந்தருளமாறு எளியேனை ஆட்கொண்ட அண்ணல் சீதா பதியின் திருவடித்துணையை வாழ்த்தி வணங்குகின்றேன்.

கம்பர் நிலையம்
தேவானூர்-62 12 1 4
அக்டோபர் 1, 1985

உழுவலன்பன்,
பெ. இராமானுஜன்.

தம்பிரான் தோழர்

(தமிழ்த்துறை வெள்ளிவிழா வெளியீடு)

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

பேராசிரியர் ஐந்தெழுத்தின் பெருமையைக் குறிப்பிட்டுள்ளார்.
பேராசிரியர் வன்றொண்டர் பாடிய
அருட்பதிகங்களிலிருந்து ஒவ்வொரு தலத்திற்கும்
உரிய ஓரிரண்டு பாடல்களையும்
காட்டியுள்ளது படித்து இன்புறுவதற்குரியது.

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications



ISBN: 978-81-939637-6-0

eBOOK ~ *மின் நூல்*




அணிந்துரை

தம்பிரான் தோழர் 1985

வழங்கியோர்:

தே.க.சோமசுந்தரம்







அணிந்துரை

(திரு. தே. க. சோமசுந்தரம், தலைமையாசிரியர் (ஓய்வு) தமிழக அரசினர் உயர்நிலைப் பள்ளிகள்)

தலையாய சைவ சமய குரவர்கள் நால்வருள் ஒருவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். இப்பெரியார் எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். சுந்தரர் பாடிய திருத்தொண்ட தொகையையும், அவருக்குப் பிற்காலத்தே வாழ்ந்த நம்பி யாண்டார் நம்பியருளிய திருவந்தாதியையும் அடிப்படை யாகக் கொண்டு சேக்கிழார் சுவாமிகள் சுந்தரரின் வரலாற்றை விரித்துரைக்கின்றார். பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார், இந்தநூல்களையும், சுந்தரர் பாடிய திருப்பதிகங் களையும் நன்கு ஆராய்ந்து, இவ்வரலாற்றை எழுதியுள்ளார்.

திருக்கைலாயத்தில் ஆலாலசுந்தரர் என்பவர் சிவபெரு மானுக்கு அணுக்கத் தொண்டராயிருந்தார். கமலினி, அனிந்திதை என்னும் இரு பெண்களும் உமையம்மை யாருக்குத் தொண்டு புரியும் சேடியர்கள். ஆலால சுந்தரரின் மனம் ஒருநாள் இவ்விரு பெண்கள்பாலும் சென்றது, "தென்னாட்டிலே பிறந்து அவ்விருவரோடும் இன்பம் நுகரு வாயாக" என்பது இறைவனது ஆணை. இவ்வாணையைக் கேட்டதும் ஆலால சுந்தரர் மயங்கினார். உரிய காலத்தில் தடுத்தாட் கொள்வதாகவும் இறைவன் அருள் செய்தார். சிவபெருமான் ஆணைப்படி ஆலாலசுந்தரர் தமிழ் கூறும் நல்லுலகில், திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரிலும் கமலினி அனிந்திதையார் முறையே திருவாரூரில் பரவை நாச்சியாராகவும், திருவொற்றியூரிலே சங்கிலி நாச்சியாராக வும் பிறந்தனர்.

ஆலாலசுந்தரர் திருமுனைப்பாடி நாட்டில் சடையனார் என்பவருக்கும் அவர் மனைவியார் இசைஞானியாருக்கும் புதல்வராய்ப் பிறந்தார். இவருக்குப் பெற்றோர்களால் இடப்பட்ட பெயர் நம்பியாரூரர் என்பதே. சிறுவயதி லிருந்தே நரசிங்கமுனையர் என்னும் அரசரால் வளர்க்கப் பட்டார். திருமணத்திற்குரிய வயது வந்தது. புத்தூரில் வாழ்ந்த சடங்கவி சிவாச்சாரியாரின் மகளைத் திருமணம் செய்வதாக முடிவாயிற்று. சிவபெருமான் அந்தணர்க்கோலம் தாங்கி, திருமணப்பந்தரில் நுழைந்து, நம்பியாரூரரைப் பார்த்து "நீ என் அடிமை" என்று வாதாடி, திருமணத்தைத் தடுத்து, கருணைநோக்கம் செய்தருளினார் என்பது வரலாறு.

அந்தணர்க் கோலம் தாங்கி வந்த சிவபெருமானுக்கும், நம்பியாரூரருக்கும் நடந்த வாக்குவாதத்தில், "நீ ஒரு பித்தனா" என்று இறைவனைப் பழித்தார். அண்மையிலிருக் கும் திருவெண்ணெய் நல்லூரில் இறைவன் உமாதேவி யாருடன் காட்சி தந்து மறைந்தார். "பித்தன்" என்று இறைவனைப் பழித்ததால், "'பித்தா பிறைசூடி' என்றே பாடுக" என்பது இறைவன் கட்டளை. இறைவன் ஆணைப் படியே "பித்தா பிறைசூடி" என்றெடுத்து முதற்பதிகத்தைப் பாடினார். இறைவனோடு வன்மை பேசியதால் "வன் றொண்டன்" என்ற பெயரும் அவருக்கு வழங்கலாயிற்று.

திருஞானசம்பந்தராலும், திருநாவுக்கரசராலும், சுந்தர ராலும் பாடப்பட்ட சிவத்தலங்கள் 275. சுந்தரர் பல சிவத் தலங்களில் ஒவ்வொரு தலத்திற்கு ஒரு பதிகமும், சில சிவத் தலங்களில் ஒவ்வொரு சிவத்தலத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட பதிகங்களும் பாடியுள்ளாரென்றும் அறிகின்றோம்.

பேராசிரியர் ரெட்டியார் வன்றொண்டர் பாடிய அருட் பதிகங்களிலிருந்து ஒவ்வொரு தலத்திற்கும் உரிய ஓரிண்டு பாடல்களையும் காட்டியுள்ளது படித்து இன்புறுவதற் குரியது. வன்றொண்டர் பலதலங்களுக்குச் சென்று வழி

பட்டாரென்றும், அத்தலங்களுக்குரிய பதிகங்கள் மறைந்து போயின என்றும், "சிவபெருமான் அமர்ந்தருளும் பொருத்த மாம் இடம் பலவும் புக்கிறைஞ்சி" என்ற சேக்கிழார் வாக் கால் காட்டுவதிலிருந்து அறிகின்றோம்.

திரு ஆமாத்தூர் கல்வெட்டு ஒன்றால் பதினாறு குருடர் கள் திருப்பதிகம் பாடுவதற்கும், அவர்களுக்கு வழித்துணை யாயிருந்து நடத்திச் செல்ல இருவர் நியமிக்கப்பட்டிருந்தன ரென்றும் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார். இஃது அக்கால ஆட்சியின் சிறப்பினையும், மக்களின் ஆழ்ந்த இறைப் பற்றினையும் உயர்வாய பண்புகளையும் எடுத்துக் காட்ட வல்ல சான்றாகும்.

பல சிவத்தலங்துளுக்குச் சென்று வழிபட்டுப் பதிகங்கள் பாடிய வன்றொண்டர் திருத்துறையூருக்கு வந்தார். அங்கே இறைவனை நோக்கித் தவநெறி வேண்டினார். திருநாவுக் கரசர் உழவாரத் தொண்டு செய்த தலம் திருவதிகை. அத்தலத்தை மிதியாமல் வன்றொண்டர் சித்தவட மடத்தில் தங்கினார். உறக்கம் வந்தது. இறைவன் கிழவேதியராய் வந்து அங்கே திருவடி தீக்கைசெய்தருளினார்.

தில்லையிலே கூத்தப் பெருமானை வழிபட்டார். ஞானத்தால் தொழும் ஞானிகள் இறைவனை வழிபடும் பொழுது அவர்களது ஐந்து பேரறிவும், கரணங்கள் நான்கும் குணம் ஒரு மூன்றும் எவ்வாறு இயங்கும் என்பதைப் பேரா சிரியர் காட்டி விளக்குவது (பக் 44 -47) சிந்தித்து மகிழ்வதற் குரியதாகும் "திருவாரூருக்கு வா" என்ற வானொலி எழுந்தது. மூன்று வயதில் ஞானப்பால் உண்ட திருஞான சம்பந்தர் பிறந்த இடம் சீகாழி; அதை மிதியாது எல்லைப் புறத்தில் தங்கியிருந்தபொழுது வன்றொண்டருக்கு இறைவன் காட்சி தந்தருளினர். பல தலங்களில் வணங்கிய பிறகு திரு வாரூரை அடைந்தார். கோயிலில் தேவாசிரிய மண்டபத்தில்

தியாகேசப் பெருமான் அவர் முன்னே தோன்றி அவரது வழித்தொண்டை அறிவித்து' "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று அடி எடுத்துக் கொடுத்தார். இறைவன் எடுத்துக் கொடுத்த இவ்வடியே வன்றொண்டர் பாடிய திருத்தொண்டத் தொகைக்கு முதலடியாகும். "என்றும் திருமணக் கோலத்தோடு வேட்கை தீர இவ் வுலகில் வாழ்வாயாக" என்ற வானொலியும் எழுந்தது. தன் தோழமையையுந் தந்து இறைவன் மறைந்தருளினார்.

பண்டை நல்வினை கூட்ட. கோயிலில் திருப்பணி செய்யும் கணிகையர் குலத்தில் தோன்றிய பரவையாரைக் கண்ணுற்றார். இருவரும் சிவநேயத்தில் திளைத்தவர்களா தலால், பரவையாரைப் பார்த்ததும், இவள் "அற்புதமோ, சிவனருளோ அறியேன்" என்று வன்றொண்டர் அதிசயித் தார். இவரைக் கண்ட பரவையாரும் "முன்னே வந்து எதிர் தோன்றும் முருகனோ?" என நினைந்தார். இறைவன் பணித்தபடி இருவருக்கும் திருமணம் நடந்தது. "பண்மயத்த மொழிப்பரவை சங்கிலிக்கும்|எனக்கும் பற்றாய பெருமானே" என்பது நம்பியாரூரர் வாக்கு. இப்பெரியார் பெண்ணின் பெருமையை இவ்வாக்காற் கொண்டாடுவது, நாம் மறவாது போற்றி மகிழ்வதற்குரியதாகும். இந்நிகழ்ச்சியைப் பேரா சிரியர் நன்கு விளக்கியுள்ளார் திருவாரூரில் "நமது தோழமையை உனக்குத் தந்தோம்" என்ற அசரீரி வாக்கு இறைவன் அருளால் எழுந்ததால், அன்று முதல் வன் றொண்டர் "தம்பிரான் தோழர்" என்றும் அழைக்கப் பட்டார்.

குண்டையூர் என்னும் ஊரில் ஒரு பெரியார் இருந்தார். அவர் பரவையாரிடத்தில் பேரன்புடையவர். அவர் வேண்டுகோளின்படி சிவபெருமான் நெல்லை மலையாகக் குவித்துத் திருவாரூரில் பூதகணங்களைக் கொண்டு எங்கும் பரப்பியது ஒரு திருவருள் நிகழ்ச்சியாகும். கோட்புலியார் என்ற பெரியாரின் வேண்டுகோளுக்கிணங்கி வன்றொண்டர்

திருநாட்டியத்தான் குடிக்குச் சென்றார். வனப்பகை, சிங்கடி என்ற தம் இரு பெண்களையும் ஆட்கொண்டருள வேண்டினார். இவ்விரு பெண்களையும் வன்றொண்டர் தம் புதல்விகளாக ஏற்றருளினார். இஃது அவர் பெருங் கருணையைக் காட்டுகின்றது. தம்மைச் "சிங்கடியப்பன்", "வனப்பகையப்பன்" என்று திருப்பதிகத்தில் அமைத்துப் பாடினார். கோட்புலியார் அறுபத்துமூன்று சைவ சமய நாயன்மார்களில் ஒருவர்.

பல தலங்களுக்குச் சென்று இறைவனை வழிபட்ட வன்றொண்டர், தில்லைச் சிற்றம்பலவன்பாலும், திருவாரூர் தியாகேசப் பெருமான்பாலும் இடையறாத ஈடுபாடு கொண்டிருந்ததால், அவர் இவ்விரு தலங்களுக்கும் அடிக்கடி வந்து போனதாகவும் தெரிகின்றது.

நாம் அற்புதங்கள் என்று நினைக்கக் கூடிய நிகழ்ச்சிகள் வன்றொண்டர் வாழ்வில் நிகழக் காண்கின்றோம். திருப் புகலூரில் பொன்னை வேண்டிய பொழுது, தலையணையாக வைத்திருந்த செங்கற்கள் பொற்கட்டிகளாக மாறின.

"தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்"

என்று பாடினார். பிறகு திருப்பனையூரில் இறைவன் திருக் கூத்துக் காட்சி வழங்கியதும், திருவாலம் பொழிலில் அவர் கனவில் தோன்றி "மழபாடியை மறந்தாயோ" என்று கேட்டதும், திருப்பேரூரில் திருச்சிற்றம்பலத்திலே ஆடும் திருக்கூத்தைக் காட்டியதும், வேதியராய்த் தோன்றி "கூடலையாற்றூருக்குப் போகும் வழி" என்று சொல்லி மறைந்ததும், திருமுதுகுன்றத்தில் பன்னீராயிரம் பொன் பெற்று மணிமுத்தா நதியிலிட்டுத் திருவாரூர்த் திருக்குளத்தில்

எடுத்ததும், திருக்குருகாவூரில் வேதியராய் வந்து தம்பிரான் தோழரின் பசி தாகத்தைத் தீர்த்தருளியதும், திருக்கச்சூர் ஆலக்கோயிலில் இறைவன் மறையவராய் வந்து சோறு இரந்து கொண்டு வந்து அவரது பசியைத் தீர்த்ததும் வன்றொண்டரின் பதிகங்களிலிருந்தே அகச்சான்றுகளாகக் காண்கின்றோம்.

திருக்காளத்திக்கு வந்து அன்பே பிழம்பாய்த் திகழ்ந்த கண்ணப்பரைத் தொழுது, காளத்தியப்பரை வணங்கினார். அங்கிருந்தே திருப்பருப்பதம், திருக்கேதாரம், திருக்கைலாயம் முதலிய தலங்களைப் பணிந்து பாடினார்.

திருவொற்றியூரை அடைந்தார். இங்கும் ஓர் அரிய நிகழ்ச்சி நடக்கவிருக்கின்றது. கைலாயத்தில் உமாதேவியாருக்குத் தொண்டு செய்து வந்த அனிந்திதையார், ஞாயிறு கிழவர் என்பவருக்கு மகளாகப் பிறந்து, சங்கிலியார் என்னும் பெயர் சூட்டப்பெற்று, இறைவனை வழிபட்டுவந்தார். பண்டை நற்றவத்தால் தோன்றிய சங்கிலியாரைத் திருவொற்றியூர்க் கோயிலில் வன்றொண்டர் காணலுற்றார். "மின்னுக் கொடிபோல்வாள் என்னை உள்ளந்தவிர்ந்தாள் யார்கொல்" என நினைந்தார். இறைவனை வேண்டினார். சிவபெருமான் வேதியராய் சங்கிலியாரின் முன்தோன்றி வன்றொண்டரை "மணத்தால் அணைவாய்" என்றருளினார்.

வன்றொண்டர், திருவாரூரில் தியாகேசர்பாலும் பரவையார்பாலும் பெரிதும் ஈடுபாடுடையவராதலால், 'திருவொற்றியூரை விட்டு விலகிச் செல்லேன்' என்று சபதம் செய்து கொடுக்க வேண்டுமென்று சங்கிலியார் வேண்டினார். வன்றொண்டரும் இசைந்தார். அவ்வேளையில் இறைவன் மகிழின்கீழ் எழுந்தருள வேண்டுமென்று வன்றொண்டர் வேண்டினார். இறைவனும் அதற்கிசைந்தார். ஆனால் சபதம் செய்ய வந்தபொழுது, சங்கிலியாரின் தோழிகள்

இறைவன் முன் சபதம் செய்து கொடுத்தல் தகாதென்றும், மகிழின்கீழ்ச் சபதம் செய்து தரவேண்டுமென்றும் சொல்ல வன்றொண்டரும் இசைந்து சபதம் செய்தார்.

வன்றொண்டர் "திருக்கோயிலில் நம் திருமுன்பு சூளுரைக்க வந்தால், நீ அதற்கு உடன்படாது, மகிழமரத்து அடியில் செய்து தருமாறு வற்புறுத்துக" என்று சங்கிலிக்குக் கூறிய இறைவனின் திருவுள்ளக் குறிப்பை நம்மால் அறிந்து கொள்ளஇயலவில்லை" என்றுகுறிப்பிட்டுள்ளார் பேராசிரியர் இஃது ஒரு முரண்பாடுடைய செயலாகத்தான் தோன்று கிறது. இருப்பினும் இறைவனின் திருவுள்ளக் கருத்தை யாரால் ஆழ்ந்து அலசிப் பார்க்க இயலும்? திருமணம் நடை பெற்றது. வன்றொண்டரும் சங்கிலியாரும் "'ஊழியாம் ஒரு கணந்தான் அவ்வூழி ஒரு கணமாம்" எனும்படி இன்ப வாழ்வு வாழ்ந்தனர்.

தியாகேசப் பெருமானை மறந்திருக்க முடியவில்லை. திருவாரூர் செல்ல ஒற்றியூரை விட்டு நீங்கினார். சபதம் தவறினார். அவரது இருகண்களின் ஒளியும் மறைந்தது.

"நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு"

என்பது வள்ளுவர் வாக்கு. நடுநிலையிலிருந்து உயிர்கள் அனைத்தையும் படைத்தும், காத்தும், துடைத்தும் மறைத்தும், அருளும் இறைவன் வன்றொண்டர் சிறந்த தோழரே யானாலும், அவருக்குரிய தண்டனையைத் தாராமலிருப் பனோ!

சிவபெருமானை நினைந்து நினைந்து உருகிய வன் றொண்டருக்குத் திருவெண்பாக்கத்தில் ஊன்றுகோல் கொடுத்தருளினார். திருவாலங்காட்டை யடைந்தார். காரைக்கால் அம்மையார் தலையாலே வலஞ் செய்த பெருமையை உடையது அத்தலம். அங்கே இறவாத இன்ப

அன்பை இறைவன்பால் வேண்டிய அம்மையாரைப் போற்றினார். திருப்பதிகம் பாடினார். பிறகு காஞ்சியில் திருவேகம்பர் அருளால் இடக்கண் பார்வையையும், திருவாரூரில் தியாகேசப் பெருமானருளால் வலக்கண்பார்வையையும் பெற்றார். இடையே திருத்துருத்தி மேயானை வழிபட்டு உடலில் பீடிக்கப்பட்டிருந்த பிணியினின்றும் விடுபட்டார்.

வன்றொண்டர் சங்கிலியாரை மணந்த செய்தியைக் கேள்வியுற்றுப் பரவையார் பெரிதும் சீற்றங் கொண்டார். அவரது ஊடலின் தன்மையை, வள்ளுவனார் வகுத்த பல குறட்பாக்களால் பேராசிரியர் எடுத்துக் காட்டுவது நகைச் சுவை ததும்பும் மகிழ்ச்சிக்குரிய இடமாகும். வன்றொண்டரின் வேண்டுகோளின்படி சிவபெருமான் நள்ளிரவிலும் பரவையார்பால் தூது சென்று அவரது ஊடலைத் தீர்த்து, தன் தோழரின் இடரையும் களைந்தருளினார்.

இறைவனையே தூதுவிடுத்த செய்தியைக் கேள்வியுற்ற ஏயர்கோன் கலிக்காம நாயனார் வன்றொண்டரை வெறுத்தார். அதனால் சூலைநோய் தந்து அந்நோயையும் வன்றொண்டராலேயே இறைவன் தீர்த்தருளினார். ஏயர்கோன் கலிக்காமர் அறுபான்மும்மை நாயன்மார்களுள் ஒருவர். இவ்விரு பெரியோர்களும் சிறந்த நட்புரிமை பூண்டு அளவளாவினர். பிறகு வன்றொண்டர் திருநாகைக் காரோணத்தை யடைந்து தமிழ்பாடி இறைவன் அருளால் பொன், மணி முதலியவற்றைப் பெற்றார்.

மலைநாட்டு மன்னரும் மிகச் சிறந்த சிவநேயச் செல்வருமான சேரமான் பெருமாள் நாயனார், வன்றொண்டரின் பெருமையைக் கேள்வியுற்று, திருவாரூர் வந்து இருவரும் ஒருவராயினர் என்ற முறையில் தோழமை பூண்டு, பல தலங்களுக்குச் சென்று வழிபட்டனர். சேரமான் பெருமானாரே கழறிற்றறிவார் நாயனார் என்ற பெயரையும் உடையவர்,

அறுபத்து மூவரில் ஒருவர். வன்றொண்டருக்குச் "சேரமான் தோழர்" என்ற பெயரும் உண்டு. இவ்விரு பெரியோர்களும் பாண்டிநாடு போந்து பல தலங்களில் இறைவனை வழி பட்டனர். திருச்சுழியலில் வன்றொண்டர் கனவில் இறைவன் தோன்றி "நாம் இருப்பது கானப்பேர்" என்றருளி மறைந் தார். இருவரும் திருக்கானப்பேர் சென்று இறைவனை வழி பட்டனர். வேறு பல தலங்களிலும் இறைவனைப்பாடி திருவாரூர் திரும்பினர்.

சேரமானாரின் அன்பான வரவேற்பினையேற்று வன் றொண்டர் மலைநாட்டுக்குச் செல்ல இசைந்தார். வழியில் திருவையாற்றில் இறைவனை வழிபட விழைந்தனர். காவிரி பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது.

"விதிர்த்து மேகம் மழைபொழிய
வெள்ளம் பரந்து நுரை சிதறி
அதிர்க்கும் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகளோ

என்று வன்றொண்டர் பாட, இவ்விரு பெரியோர்களும் திருக் கூட்டத்தினரும் கடந்து செல்லக் காவிரிப் பாவையும் நடுவே வழிவிட்டுக் காட்டினாள்.

மலைநாடு சேர்ந்தனர். வன்றொண்டரை அளவற்ற அன்பால் வரவேற்று மலைநாட்டு மன்னர் வழிபாடுகள் செய்தார் திருவஞ்சைக்களத்துப் பெருமானை வழிபட்டனர். சில நாட்களுக்குப் பிறகு வன்றொண்டர் சேரமானாரிடம் பிரியாவிடை பெற்று, அவர் தந்த அன்பளிப்புகளை ஏற்றுக் கொண்டு திருவாரூர் திரும்பினார். வழியில் கொங்கு நாட்டில் திருமுருகன் பூண்டிக்கு அண்மையில் இறைவன் ஆணையால் பூதகணங்கள் வெஞ்சிலை வேடராய் மாறி, சேரமானார் பொருள்களைப் பறித்துச் சென்றன. வன் றொண்டருக்கு எவ்வித ஊறும் செய்யவில்லை. திருமுருகன்

பூண்டியில் சிவபெருமானை வழிபட்டு, இழந்த பொருள்கள் அனைத்தையும் மீட்டு திருவாரூரை நோக்கிச் சென்றார் வன்றொண்டர்.

திருவாரூரில் இறைவனை வழிபட்டு வந்த நாளில் வன்றொண்டரின் மனம் மலைநாட்டு மன்னர் பெருமான் மீதேயிருந்தது. மலைநாடு நோக்கினார். கொங்குநாட்டில் அவிநாசியில் ஓர் அரிய செயல் நிகழ்ந்தது. ஒரு வீட்டில் மங்கல ஒலியும் மற்றோர் வீட்டில் அழுகையொலியும் கேட்டன. இரு சிறுவர்கள் குளத்தில் நீராடச் சென்றனர். ஒருவன் முதலையால் விழுங்கப்பட்டான். அவனை நினைந்து அவன் பெற்றோர் அழுதனர். தப்பிய சிறுவனின் உபநயனத்தின் பொருட்டு அவன் வீட்டில் மங்கல ஒலியெழுந்ததையும் வன்றொண்டர் அறிந்தார். அவர் வருகையைக் கேள்வியுற்ற பெற்றோர்கள், இறந்த சிறுவனை மறந்து, பேருவகையுடன் வன்றொண்டரை வரவேற்றுமகிழ்ந்தனர். அவர்கள் அன்பின் திறத்தை வியந்து, ''கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே'' என்று பாட, முதலையும் கரைக்கு வந்து பிள்ளையை உமிழ்ந்து சென்றது. இவ்வற்புதச் செயல் மலைநாட்டை வியப்பில் ஆழ்த்தியது. சேரமானார் வன்றொண்டரை எதிர்கொண்டு, அவரைத் தழுவி வணங்கினார். மன்னருடன் மகிழ்ந்துறைகின்ற நாட்கள் பல கடந்தன.

வன்றொண்டர் வாழ்ந்த காலம் இந்நிலவுலகில் முடிவுறுகின்றது. கைலாயத்தினின்றும் வெள்ளை யானை வந்தது. வன்றொண்டர் அதன் மீதமர்ந்து மண்ணுலகை நீத்து மேலே சென்றார். இதை அறிந்த சேரமானாரும் ஒரு குதிரையின் காதிலே அஞ்செழுத்தோதி அதன்மீது அமர, அஃது வன்றொண்டரின் வெள்ளை யானையை வலம் வந்து, அதனையும் கடந்து சென்றது.

"தா னெனை முன்படைத்தான்"

என்று பாடி கைலையை யடைந்து, உள்ளே சென்று சிவபரம் பொருளைக் கண்டு உருகினார் நம்பியாரூரர். சிவபெருமான் "ஆரூரனே வந்தனையோ" என்றார். தன்பிழையெலாம் பொறுத்துத் தன்னைத்தடுத்தாட் கொண்டு கயிலைப் பேற்றை மறுபடியும் அருளிய பெருமான் கருணையைப் போற்றி நின்றார் ஆரூரர். வாயிலில் தடைப்பட்டு நின்ற சேரமானாரை, இறைவன் கட்டளைப்படி நந்தியம் பெருமான் அழைத்துச் சென்றார். இறைவனை வணங்கிப் போற்றிய சேரமானார் வேண்டுகோளின்படி, அவர் பாடிய தெரு 'ஞான உலாவை" இறைவன் கேட்டருளினார்.

மண்ணுலகில் பரவையாரும் சங்கிலியாருமாய்ப் பிறந்து, இறைவனை இடையறாது போற்றி, வன்றொண்டப் பெரு மானை மணந்து பேரின்பத்தைத் துய்த்து வாழ்ந்த இவ்விரு சிவநேயச் செல்வியரும், கைலாயத்தில் முன்பு போல் கமலினி அனிந்திதையாராய் மாறித் தங்கள் பழைய தொண்டு களைச் செய்து வரலாயினர். வன்றொண்டர் அருளிய பதிகங் களை வருணன் திருவஞ்சைக் களத்திலும், சேரமான் அருளிய "திருஉலாவை" மாசாத்தனார் திருப்பிடவூரிலும் வெளி யிட்டனர்.

சுந்தரரின் பிறப்பைக் குறிப்பிட்ட சேக்கிழார் பெருமான் மற்றசைவ சமய நாயன்மார்களின் முற்பிறப்பைக் கூறவில்லை யென்றும்' சுந்தரரின் முற்பிறப்பு மட்டும்குறிப்பிடப்பட்டுள்ள தென்றும் எடுத்துக் காட்டியுள்ளார் பேராசிரியர். காலஞ் சென்ற பேரறிஞர் உயர்திரு. மறைமலையடிகளார், பெரிய புராணத்தில் "திருமலைச் சருக்கம்" இடைச் செருகலா யிருக்குமென்றும் கூறியுள்ளார். காலஞ்சென்ற அறிஞர்கள் திரு வி. க., சிவக்கவிமணி உயர்திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் போன்றவர்கள் இவ்வித ஐயப்பாட்டையெழுப்ப

வில்லை. ஆகையால் இதன் உண்மையை இறைப்பற்றும் பெரும் புலமையுமுடைய பெரியோர்கள் ஆராய்ந்து தெளிவார்களாக.

சுந்தரர் 100 பதிகங்கள் பாடியுள்ளார். இவற்றுள் தலப் பதிகங்கள் 96; பொதுப்பதிகங்கள் 4. மூவர் தேவாரப் பதிகங்கள் இரண்டற இசையோடியைந்தனவாகும். அருள்மிகு விபுலாநந்த அடிகள், தாம் இயற்றிய அரிய யாழ் நூலில் "தேவாரவியல்" என்ற தலைப்பில் தேவாரப் பாடல்களின் யாப்பமைதியினையும் இசையமைதியினையும் எண்பது பக்கங்களில் ஆராய்ந்துள்ளார். அடிகளார் மேலும் அவ்வரிய நூலில் எழுதுவது: "பாட்டுக் குருகுந் தமிழ்ச் சொக்கநாதர் கூடலம் பதியிலே பாணபத்திரர் பொருட்டால் விறகாளாகி இசை பரப்பிய ஞான்று, அவ்விசை வலையிற்பட்ட விடவாய் நாகமும், பல்பொறி மஞ்ஞையும், யானையும், சிங்கமும், மானும், புலியும் என்றின்னவை தம்மியல்பாகிய பகைமையினை மறந்து ஒன்று கூடி நின்றனவெனப் புராணங்கூறும். "திரு நீலகண்டப் பெரும்பாணருக்குப் பொற்பலகையளித்து, ஞானசம்பந்தருக்குப் பெற்றாள மீந்து, இசை வளர்த்த பேரருளாளன் இசையே உருவாக நின்றான் என்னும் உண்மை, "பண்ணும் பதமேழும் - விண்ணும் முழுதானான்" என்னும் ஆளுடைய பிள்ளையார் திருவாக்கினாலும், 'ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய தோழனுமாய்' எனக்கூறிய ஆளுடைய நம்பியின் திருவாக்கினாலும், 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே' எனக்கூறிய ஆளுடைய அரசர் திருவாக்கினாலும் அறியப்படுகின்றது.

" 'முன் நல் யாழ் பயில் நூல் நரம்பின் முதிர் சுவையே' எனக் கன்னலும் அமிழ்தும் போன்ற கார்முக வண்ணனைப் பாடிய திருக்குருகைப் பிரான் அவ்வண்ணல் யாழ் நரம்பின் முதிர் சுவையாகி நின்றான் என்னும் உண்மையினைத் தெளிவு

develop devotion, it is enough to show that Jnana and Bhakti are one and the same''.

பேராசிரியர் ஐந்தெழுத்தின் பெருமையைக் குறிப்பிட்டுள்ளார். ஐந்தெழுத்தின் பெருமையைப் பன்னிரு திருமுறை நூல்களிலும், சைவசித்தாந்த சாத்திரங்களிலும் பரக்கக் காணலாம். ஐந்தெழுத்து இறைவனின் திருப்பெயராய்த் திகழும் பெருமையுடையது. சுந்தரர் பெருமான்,

''நற்றவா வுனை நான் மறக்கினும் சொல்லு நா
நமச்சிவாயவே'',

என்கின்றார். பேராசிரியர் கோயில்களின் பெருமையையும் இன்றியமையாமையையும் குறிப்பிட்டுள்ளார். ''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பது அவ்வையார் அருள்வாக்கு. சிவஞானபோதம் பன்னிரண்டாம் சூத்திரம்,

''செம்மலர் நோன்றாள் சேரலொட்டா
அம்மலங்கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத்தொழுமே''

என்று கூறுகிறது. ஆலயவழிபாட்டின் இன்றியமையாமையைப் பழங்காலந்தொட்டே தமிழகமும், இந்திய நாடும் உணர்ந்துள்ளன. பேராசிரியர் தேவாரத் திருத்தலங்கள் தோன்றிய முறையினையும் வரலாற்றினையும் கூறி, அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராய கோச்செங்கட் சோழரின் சிறந்த சிவபக்தியையும், அப்பெரியார் கட்டிய எழுபது மாடக் கோயில்களையும், அமைப்பையும் விளக்கியுள்ளார்.

தேவாரத் தலங்களிருக்கும் பண்டைத் தமிழ் நாட்டின் பல பகுதிகளையும், இந்தியத் துணைக் கண்டத்தின் வடபகுதியிலிருக்கும் தேவாரத்தலங்களையும், தெற்கே ஈழ நாட்டிலிருக்கும் இரு தேவாரத் தலங்களையும் குறிப்பிட்டு, பல

தலங்களின் பெயர்க் காரணங்களையும் பல தலங்களிலுள்ள கோயில்களின் பெயர்க் காரணங்களையும் விளக்கி, தம்பிரான் தோழர் வழிபட்ட திருத்தலங்களின் பட்டியலையும் இணைத்து, அத்தலங்கள் இருக்கும் இடங்களையும் ஆங்காங்கே குறிப்பிட்டு, அட்டவீரத்தலங்கள், சப்தவிடங்கத் தலங்கள், சப்ததானத் தலங்கள் என்று கருதப்படும் சிறப்புத் தலங்களையும் குறிப்பிட்டு, தம்பிரான் தோழரின் வரலாற்றை முடிக்கின்றார் பேராசிரியர்.

தம்பிரான் தோழரின் பாடல்கள் ''யான்'', ''எனது'' என்னும் அகப்பற்று, புறப்பற்றுக்களை அறவே நீக்கி, இறைவன் திருவருளிலேயே மாண்டமனமுடையோர்களுக்குப் பலகோலங்களில் இறைவன் காட்சி தந்து, அவர்கள் வேண்டியதை வேண்டியவாறே ஈந்து, அவர்கள் இடுக்கண் களையும் நீக்கி ஆட்கொள்வான் என்பதும், அப் பண்ணார்ந்த பாடல்கள் பெரிதும் மனவெழுச்சித் தந்து, நீர்க்குமிழி போன்ற நிலையற்ற உலக வாழ்வின் நினைவூட்டி நன்னெறி காட்ட வல்லனவென்பதும் வெளிப்படை.

இச்சிறந்த சைவப் பெரியாரின் வாழ்வை விரிவாயெழுதி முடித்து, என்பாலுள்ள அன்பின் அடிப்படையில் ''அணிந்துரை'' தருமாறு கேட்ட பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவர் மேன்மேலும் பல தரமான நூல்களை எழுதித் தமிழுக்கும் சமயத்திற்கும் தொண்டாற்ற வேண்டும் எனக் கருணைக் கடலான இறைவனை வணங்கி வாழ்த்துகின்றேன்.

தே. க. சோமசுந்தரம்

42, இலக்குமிபுரம் விரிவு
போரூர் (சென்னையருகில்)
பின் கோட் 602104

Collected Papers

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

Collected Papers, covering the entire field of Tamil Studies, presented in National & International Conferences across India !

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

ISBN: 978-81-936450-7-9

eBOOK ~ *மின் நூல்*




அணிந்துரை

COLLECTED PAPERS 1985

வழங்கியோர்:

Prof KR Srinivasa Aiyengar







Foreword

(Professor K.R. Srinivasa Aiyengar)

My esteemed friend, Prof. N. Subbu Reddiar, is less than reasonable in asking me to write a Foreword to this *Collected Papers*, covering the entire field of Tamil Studies, and even overflowing the boundaries so as to mingle in the vast spaces of India reaching upto the Himalayas. I have no credentials to write a Foreword to such a collection as this, 27 learned papers or addresses before academic fraternities, here arranged under 'Religion and Philosphy', 'Language and Literature' and 'History, Education and Culture'. The garner of a life-time devoted to scholarship and teaching, and to the dissemination of Tamil letters and the Vaishnavism of the Tamil Azhavars (and the later apostles), the collection carries its own stamp of authority, and hardly needs any special commendation from one like me whose knowledge in these areas is no more than peripheral. But the claims of friendship are paramount and besides, having learnt a great deal by reading this Collection of papers, it is a pleasure to record my appreciation and gratitude.

Prof. Subbu Reddiar's academic career seems to have spanned the extremities, from the village pial school to the spacious Halls of Sri Venkateswara University. Like me he too had opted for Mathematics-Physics-Chemistry (MPC) at the Intermediate, and Mathematics and Science at the degree course. Then came the decisive shift to Tamil Language and Literature, culminating in his massive Ph.D. dissertation, which has since been published as *Religion and Philosophy of Nalayira Divya Prabandham with Special Reference to Nammalvar* a monumental study of over 900 pages. Dr. Subbu Reddiar's earlier training in science, however, hasn't been in vain, for he has been able to press this specialist knowledge into service in his Tamil writings or translations relating to subjects like physiology, Nuclear Physics and Rockets.

As a teacher too, he has accumulated a body of variegated experience ranging from the Headmastership of the Turaiyur High school to the Headship of the Department of Tamil Studies in Sri Venkateswara University, Tirupati. Scholar, teacher, organiser of teaching, savant in Tamil language and literature, disseminator of knowledge about Vaishnava religion and philosophy, and well-informed and animated guide to the hundred hallowed Vaishnava shrines in South India, Prof. Subbu Reddiar is a man of many parts, and these facets of his learning and personality stand revealed in the present collection of 27 papers, which is really a selection from a corpus comprising more than double the number.

The packaging of a collection of papers and addresses that were prepared or delivered over a period of years and on a diversity of subjects raises ticklish problems. A strictly chronological arrangement may have its own justification, but it will have to wink at strange bedfellows. Hence the contrived arrangement here under three interlinked sub-headings. But in this sort of collection, it would be wrong to look for a steady progression of an argument or for the dialectical presentation of a problem. Variety, versatility and facundity have their uses as well as inconveniences. Even so a garner of essays has its own attractions and its own shortcomings. On the other hand, such a collection as this is not meant to be read at a stretch, but dipped into as the occasion arises; and once you start with one piece, you may be lured on to another and another, and every time this happens, you will light upon new discoveries.

The Tamil Azhvars (the eleven elected ones from Poigai to Tirumangai, and Andal the woman mystic-singer unparalleled) are Prof. Reddiar's perennial subject of discourse, and Nammazhvar - understandably enough—is the heart and soul of it all. The *'Four Thousand'* fascinate Reddiar from every angle, and he communicates his fervours, insights, the finding or his research, his reasoned assessments and his comparatist, evaluations, to the interested reder also. No doubt there is

some repetition, unavoidable repetition, since there are patches of common ground between the diverse papers, but happily there are no contradictions. The *tenkelai-vadakalai* debate among the South Indian Vaishnavites figures in both chapters 2 and 10; *tattva, hita* and *purushartha* are discussed in chapter 8 as also 10; and Tiruvalluvar figures in all three sections. But the broad clarity of the divisions remains, and the cumulative thrust of the 27 papers is almost cyclopaedic in the context of Tamil history, literature and culture.

In Ramanuja Vedanta, the God-soul relationship is symbolised in the *sesha-seshi, sarira—sariri bhava:*

> "God is called the Inner self or Soul (*sareeri*), because as long as they exist, He is... their support, their controller or Rular and their master (*seshi*) ... God is said to be the *Seshi* of all things, because they exist solely for the fulfilment of His purposes. The relationship may be paraphrased as the owner-owned relationship.". (p. 49).
> "What characterises the soul is its relation of liegeship (as creature) to God, the Lord (as creator) = *seshatvam*" (p. 52).

Likewise, in his *King of the Castle*, Gai Eaton (an English Muslim) explains how the human body is the Castle of the King (i.e. God), and the human soul is only the Viceroy. Man the Viceroy, is for the King's (God's) service, and use, and that is how he becomes a link between Here and Eternity. Once this is grasped, Man will find no satisfaction in serving other Masters, or advancing only his own interests. In society too, and in the nation, the only Ruler, the only Master, is God, and all else—Emperor, Mikado, Raja, Sultan, President, Prime Minister—are but the Viceroys answerable to God the source and home of all.

The 10 or more papers on the Azhvars and their work cover whole range of themes, from the codification of the '*Four thousand*' to the value of weeping in spiritual life, from the '*Four Thousand*' as *Dravida Veda* to Bridal

Mysticism in the Azhvars, and from 'Nature Poetry in Azhvars' to the '*Four Thousand*' in relation to the Saiva *Tirumurais*. Here is one excerpt from the last:

> "Sometimes stress is being made on the diffcrent aspects of one and the same episode. For instance, the Azhvars emphasise the churning of the ocean and supplying the nectar to the Devas by Vishnu and the Saivite saints on the swallowing of all destroying poison produced as a by-product in the churning process and saving the world from destruction by Siva. If the Azhvars revel with the three strides of Vishnu and His Visvaroopa, the Nayanmars lose themselves in Siva's form of the big blaze of fire..." (pp. 223–4)

Next in importance to the Azhvars is Tiruvalluvar, who claims a paper in each of the three sections in the volume. Prof. Subbu Reddiar classes Tiruvalluvar with Sankara, Ramanuja and Madhva; and, besides, Tiruvalluvar "represents the true Tamil spirit and is verily the Manu of the Tamil Country" (p. 132). And Tiruvalluvar's life—mission was, simply and all-sufficingly, "to make a *sandron* of every individual". No aim could have been nobler; and none is more needed today.

The other great maker of Tamil literature, Kamban, figures in the essay on the 'Minor Characters' in his *Ramavataram*. There are perceptive comments on Jatayu, Mantharai, Guha, Angada and especially on Neelamalai who doesn't figure in Valmiki. Thus, for instance, on Guha:

> "Guha ferrying Rama across the Ganges makes one amused when one reflects that He who ferries all his creations across life's journey is himself ferried across the waters of the Ganges". (p. 247).

"There is no superfluous character", concludes Prof. Reddiar, "and none without a purpose related to the larger epic purpose". (p. 249)

There are, then, the scholarly and informative essays on *Muttollayiram* and *Kalingattupparani*, on Science Education and Medical References in Ancient Tamil Literature, and a piece on Highlights of Tamil Cultural Influence Abroad, Also of seminal importance is the essay on "One India" in Tamil literature, in which prof. Subbu Reddiar demonstrates with telling citations that "the Kumari—Himalaya combination signifying the integrity of *Bharatavarsha* is as old as the very commencement of Tamil literature, and any suggestion of a separate Tamil country or Andhra country is as unhistorical as it is dangerously frivolous" (p. 281).

In conclusion, there is not a piece but has its pointed relevance and value in the context of Prof. Reddiar's total aim to project the many-sided richness and integral health of Tamil life, letters and culture within the wider background of Indian Civilisation and culture; and I have not the slightest doubt that this volume, with its every rift loaded with ore, will be received with acclaim and gratitude by a widening circle of readers comprising scholars and 'common readers' alike.

K.R. Srinivasa Iyengar

Sri Rama Navami
'Sydney House'
277—B, J.J.Road (Off Mowbray's Road)
Alwarpet,
Madras—600 018.
30-3-1985.

கல்வி உளவியல் கோட்பாடுகள்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

வளர்ந்து வரும் உளவியலையும்
நாளும் சிறந்து வரும் கல்வியியலையும்
தன்னகத்தே கொண்டு திட்ப
நுட்பத்துடன் ஆக்கப்பெற்ற நூல்

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-936450-8-6

ந சுப்பு ரெட்டியார் 1916 2016 100 நூற்றாண்டு விழா நிகழ்வுகள்

eBOOK ~ *மின் நூல்*



அணிந்துரை

கல்வி உளவியல் கோட்பாடுகள் 1985


வழங்கியோர்:

கே.ஆர்.மாணிக்கம்

முதல்வர் (ஓய்வு)

அரசு கல்வி இயல் கல்லூரி, சென்னை







அணிந்துரை

திரு. கே. ஆர். மாணிக்கம், எம்.ஏ., எல்.டி.,
முதல்வர் (ஓய்வு)
அரசு கல்வி இயல் கல்லூரி, சைதாப்பேட்டை
சென்னை - 600 015

'கல்வி உளவியல் கோட்பாடுகள்' *என்ற நூல் என் அரிய நண்பர் பேராசிரியர்* **டாக்டர். ந. சுப்புரெட்டியார்** *அவர்களால் தமிழன்னையின் திருவடியில் சூட்டப்பெற்ற அழகிய அணிகலன் களுள் தலைசிறந்தது. 'இறவாத புகழுடைய புது நூல்கள் இயற்றல் வேண்டும்' என்ற தேசியக்கவி பாரதியாரின் அறை கூவலுக்கு விடையளிக்கும் பாங்கில் அமைந்துள்ளது. இந்நூல் தமிழிலும் உளவியலிலும் பெற்றுள்ள ஒருங்கிணைந்த புலமை யும், பள்ளியிலும் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியிலும் கற்பித்த அநுபவமும் இந்நூலை நன்முறையில் யாத்தற்குப் பெருந் துணை புரிந்துள்ளன. இத்தனைக்கும் மேலாகப் பேராசிரியர் ரெட்டியாரின் ஆற்றொழுக்கான எளிய தமிழ்நடையும், ஆங்காங்கே பொருத்தமாகக் காட்டப்பெற்றுள்ள அநுபவ எடுத்துக்காட்டுகளும் இந்நூலின் தரத்தை மேலும் உயர்த்து கின்றன.*

உளவியல் அண்மைக்காலத்தது. சென்ற நூற்றாண்டிலும் அதற்கு முன்பும் மெய்ப்பொருளியலின் ஒருபகுதியாகக் கருதப் பெற்ற உளவியல் துறை சென்ற நூற்றாண்டில்தான் தனியாகப் பிரிந்தது. 'அறிவியல்' என்ற சிறப்பும் பெற்றது. ஆனால், 'கல்வி உளவியல்' இருபதாம் நூற்றாண்டில்தான் அறிவியல் நிலையை அடைந்தது. இன்று இது பொதுஉளவியலுக்கே சில உண்மை களை எடுத்தியம்பும் நிலையும் பெற்றுள்ளது. ''மக்கள் கற்கக் கூடும்; கற்கத்தான் செய்கின்றனர். எனினும் ஒழுங்காகவும் பயனுடனும் கற்க உளவியல் அறிவு வேண்டும்'' (பக். 6) என்ற பேருண்மையினை இந்நூலெங்கும் பரக்கக் காணலாம்.

இலக்கியத்திற்கும் உளவியலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பெருங்காப்பியத்திலுள்ள கதை மாந்தர்கள் வாழ்க்கையிலுள்ள போராட்டங்கட்குக் குறியீடுகளாக அமைந்திருப்பது போல் தோன்றும். உண்மையில், அப்போராட்டங்கள் யாவும் தனிமனிதனின் உள்ளத்திலேயே தொடங்குகின்றன என்பது சிந்தித்து நோக்குவார்க்குப் புலனாகாமற் போகாது. இவைகளே தற்கால உளவியலின் பொருளாகவும் அமைகின்றன. விலங்கியல் ஆராய்ச்சியில் கண்ட உண்மைகளும் உளவியலில் ஏற்ற பெற்றி எடுத்துக்கொள்ளப் பெற்றுள்ளன.

ஆங்கிலத்திலுள்ள சிறந்த உளவியல் நூல்களில் ஆங்காங்குச் சிறந்த ஆங்கில இலக்கிய மேற்கோள்கள் காட்டப் பெறுகின்றன. இவை படிப்போருக்கு ஒருவிதத் தனி இன்பத்தை நல்குகின்றது. இந்தச் சான்றோர்களின் அடிச்சுவடுகளைப் பின் பற்றியே பேராசிரியர் ரெட்டியாரும் கம்பராமாயணம், திருமந்திரம், திருவருட்பா, திருக்குறள், பாரதியார் கவிதைகள், போன்ற தமிழ் இலக்கியங்களிலிருந்து பொருத்தமான மேற்கோள்களைக் காட்டியுள்ளார். இவை தமிழில் உளவியலைக் கற்பாருக்கு உளவியல் உண்மைகளைத் தெளிவாக மனத்தில் அமைத்துக்கொள்ள துணைபுரியும் என்பதற்கு ஐயமில்லை.

இந்நூலில் கல்வி என்பது இயற்பியல் சூழ்நிலைக்கும் சமூகச் சூழ்நிலைக்கும் பொருத்தப்பாடு அடைவதே என்பதையும், (பக். 27) மாணாக்கர்களின் பல்வேறு ஆளுமைக் கோலங்களை ஓரளவு கட்டுப்பாடுள்ள வகுப்பறையிலும், ஓரளவுகட்டுப் பாடற்ற நிலையிலுள்ள வகுப்பறைக்கு வெளியிலும் புலனாவதைத் தெளிவாக்குவதும் (பக். 81), குழந்தையின் வளர்ச்சியும் துலக்கமும் இயல் 3-இல் தெளிவாகக் காட்டப் பெற்றிருப்பதும், குழந்தைக் கல்வியில் குடிவழியும் சூழ்நிலையும் பங்கு பெறுவதன் விளக்கமும் (இயல் -4), மாணாக்கர்களின் கல்வியில் ஊக்கு நிலை பெரும்பங்கு பெற்றிருப்பதன் விளக்கமும் (பக். 169-172), கற்றல்பற்றிய விதிகளின் விளக்கமும் (பக் 205-216), கற்றலில் அடங்கிய மூலக்கூறுகளாகிய அக்கறை, கவனம், புலன்காட்சி, கற்பனை, சிந்தனை, நினைவு, போன்றவற்றின் விரிவான விளக்கமும் (இயல்-7) தெளிவாக விளக்கப் பெற்றுள்ளன. இவை கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும் மாணாக்கர்களின் பெற்றோர்களும், கல்வியில் ஆர்வங்காட்டும் பொது மக்களும் கருத்தில் இருத்த வேண்டியவை. 'அறிதிறனும் தனியாள் வேற்றுமைகளும்' பற்றிய விளக்கமும் (இயல்-8), மாணாக்கர்களின் இயல்பு பிறழ்ந்த நடத்தைபற்றிய அறிவும் (இயல்-10) எல்லோரும் அறிந்து மாணாக்கர்களைப் பரிவுடன்

கவனித்து அவர்களைத் திருத்துவதற்குத்துணை புரியும். ஒழுக்க வளர்ச்சிபற்றிய விளக்கம் (இயல்-11) ஆசிரியர்களும் பெற்றோர்களும் கருத்தில் இருத்த வேண்டியது இன்றியமையாதது. 'ஆசான்' (இயல்-13) என்ற தலைப்பிலுள்ள செய்திகள் ஆசிரியர்கள் தற்சோதனை செய்து கொள்வதற்குத் துணை செய்யும்.

இந்நூலில் கையாளப்பெற்றுள்ள கலைச் சொற்கள் பக்கங்களில் அடிக்குறிப்பாக அமைந்துள்ளன. படிப்போருக்கு இவை பெருந்துணையாக அமையும். இச்சொற்கள் அகர வரிசைப் படுத்திப் பின்னிணைப்பு-2 ஆக இணைக்கப்பெற்றிருப்பது நூல் எழுதுவோருக்குப் பயன்படும். இங்ஙனம் ஒரு முறையான அமைப்பில் தரமான விழுமிய நூலைப் படைத்த பேராசிரியர் ரெட்டியாரின் பெருந்தொண்டு பாராட்டப் பெற வேண்டியதாகும். ஆசிரியர்களும் கல்வியியல் பள்ளி, கல்லூரி மாணவர்களும் கல்வியில் நாட்டமுள்ள பெருமக்களும் இந் நூலைத் தக்க முறையில் பயன் படுத்துவார்களாயின் அதுவே அவர்கள் நூலாசிரியருக்குச் செய்யும் பெரு நன்றியாக அமையும். இத்தகைய பல அரிய பயனுடைய நூல்களை மேலும் மேலும் படைத்து இந்த ஆசிரியர் மொழிக்கும் தாய்மொழி மூலம் கற்பிக்கும் ஆசிரியர்கட்கும் பெருமக்களுக்கும் தொண்டாற்ற வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

A H-220
அண்ணாநகர்,
சென்னை - 600040
15—12—1985

கே. ஆர். மாணிக்கம்

ஞானசம்பந்தர்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

ஞானசம்பந்தரின் வாழ்க்கையை 16 இயல்களாகப்
பகுத்துக்கொண்டு பேராசிரியர் நயம்பட விளக்கிக் காட்டுவர்.
சம்பந்தரின் வளர்ப்பு, திருத்தலப் பயணங்கள், சுழுமல
நிகழ்ச்சிகள், மதுரை மாநகர அற்புதங்கள், திருமணம்,
பேரொளியிற் கலந்து வீடு பேறு முதலியன நம்
கண் முன் நிறுத்தப்பெறுகின்றன.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939353-6-1



eBOOK ~ *மின் நூல்*




அணிந்துரை

ஞானசம்பந்தர் 1986

வழங்கியோர்:

பேராசிரியர் டாக்டர் இரா சாரங்கபாணி







அணிந்துரை

பேராசிரியர் டாக்டர் இரா. சாரங்கபாணி
எம். ஏ; எம். லிட்., பிஎச். டி.
(முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
அழகப்பா கல்லூரி, காரைக்குடி;
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.)

பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் *அவர்கள் காரைக்குடி அழகப்பச் செட்டியார் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராய் இருந்தகாலை, எனக்கு அவர்களோடு கலந்து பழகும் வாய்ப்புக் கிடைத்தது. எனக்கு வாய்த்த உளங்கலந்து பழகும் பண்புடையார் சிலருள் பேராசிரியரும் ஒருவராவர். அவர்தம் கேண்மையினால்,*

> **நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**
> **பண்புடை யாளர் தொடர்பு** (குறள்—783)

என்னும் அருங் குறளின் செஞ்சொற் பொருளைத் தெளிவாக உணர்ந்தேன். இவ்விழுமிய பண்பினைத் திருமுறைச் செல்வர், பேராசிரியர் **க. வெள்ளைவாரணனார்** *தாம் நல்கிய நாவுக்கரசர் நூலின் சிறப்புப் பாயிர மலரில்,*

> **" செயிர்தீர் நட்பால் அன்பரொடு**
> **சேர்ந்து பழகும் தெளிவுடையான்;**
> **மயர்வில் மனத்தான் மதிநலத்தால்**
> **மக்கள் சுற்றம் மகிழ்கூரத்**
> **துயர்தீர்ந் துலகம் வாழச்செய்**
> **தூயோன் நேயம் மிக்குடையான்."**

எனப் பாரித்துப் பாராட்டியுள்ளார்.

முதலில் அறிவியல் துறையில் பட்டம் எய்திப் பின்னர்ப் புலவர், எம். ஏ. முதலிய தமிழ்ப் பட்டங்களைப் பெற்ற பேராசிரியர்க்கு அறிவியல் நூல்கள் பல படைத்து அவற்று வழியே தமிழ்க் கல்வியை யாண்டும் பரப்பவேண்டும் என்னும் வேணவா மனத்துட் பதிந்து கிடந்தது. அதன் பயனாக அணுவின் ஆக்கம், அம்புலிப் பயணம், அறிவியல் விருந்து, இல்லற நெறி, வாழையடி வாழை, இளைஞர் வானொலி, இளைஞர் தொலைக்காட்சி முதலிய பல நூல்கள் மலர்ந்தன. இவற்றுட் சில தமிழக அரசும் பல்கலைக் கழகமும் வழங்கிய பரிசுகளைப் பெற்றன. ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றியதன் விளைவாகத் தமிழுலகிற்குத் தமிழ் பயிற்று முறை, கவிதை பயிற்று முறை, அறிவியல் பயிற்று முறை, கல்வி உளவியல் கோட்பாடுகள் முதலிய அரும் பெறல் நூல்கள் கிடைத்தன. திறனாய்வு, இலக்கியம், சமயம், வரலாறு முதலிய பல துறைகளிலும் எண்ணற்ற நூல்களைப் படைக்கும் வித்தகம் கண்டு தவத்திரு குன்றக்குடி அடிகளார் அருங்கலைக் கோன் என்னும் பட்டமளித்துச் சிறப்பித்தார்கள். மடியை மடிவித்து 'வினையே ஆடவர்க்கு உயிரே' என்னும் பெருநெறி பிடித்தொழுகும் பேராசிரியர் இடையறாது எழுதிக் கொண்டே இருக்கும் இயல்பினர்.

> **உண்ணா நாள்பசி யாவதொன் றில்லை**
> **ஓவா தேநமோ நாரணா என்று**
> **எண்ணா நாளும் இருக்கெசுச் சாம**
> **வேத நாண்மலர் கொண்டுன பாதம்**
> **நண்ணா நாள்அவை தத்துறு மாகில்**
> **அன்றெ னக்கவை பட்டினி நாளே.**
>
> —பெரியாழ். திரு. 3. 1:6

எனப் பெரியாழ்வார் பணித்தாங்கு, எழுதாத நாளெல்லாம் அவர்களுக்குப் பட்டினி நாளாகும். எழுபான் ஆண்டுகளை எட்டிப்பிடிக்க இருக்கும் பேராசிரியர் தம் வயதுக்கு

மேற்பட்ட நூல்களை இயற்றியவராவர். தம் பருவ நிலைக்குப் பாங்காக இப்பொழுது பத்திப் பனுவல்களாய தேவார திருவாசகங்கள், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் ஆகியவற்றில் ஆழங்காற்பட்டு 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் பெருநோக்கோடு திருத்தலப் பயண நூல்கள் எழுதி வருகின்றார்கள். தம்பிரான் தோழர், நாவுக்கரசர் என்னும் படைப்புகளைத் தொடர்ந்து இப்பொழுது 'ஞானசம்பந்தர் என்னும் அரியநூல் வருகின்றது.

> **வல்லார் பிறப்பறுப்பர் வண்மைநலங் கல்வி**
> **நல்லா தரவின்ப ஞானங்கள்—எல்லாம்**
> **திருஞான சம்பந்தன் சேவடியே என்னும்**
> **ஒருஞான சம்பந்த முற்று.**

என்று ஓதாது ஞானமெலாம் உணர்ந்த முத்தமிழ் விரகராய திருஞானசம்பந்தப் பிள்ளையாரைச் சிவப்பிரகாச சுவாமிகள் ஈடுபாட்டுடன் ஏத்திப் போற்றுவர். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் சமண பௌத்த சமயங்கள் பரவிச் செழித்திருந்தமையால் சமய குரவர்கள் அவற்றோடு போராட வேண்டியநிலை இருந்தது. அப்பொழுது நாடாண்ட வேந்தர்களும் பர சமய வளர்ச்சிக்குக் கைகொடுத்துதவினர். வேத நெறியும் சைவத் துறையும் செழித்து வளராமல் நலிவுற்று மெலிவெய்திய காலம் அது. அக்காலத்தில் சிவபாத இருதயரும் அவர்தம் வாழ்க்கைத் துணைவியாரம் பகவதியாரும் தம் சமயம் பொலிவு பெறாமல் தளர்ச்சியுறுவது கண்டு, உளம் வருந்தி தம் சமயம் வளர்ந்தோங்கவும் பரசமயம் பாழ்படவும் மகப்பேறு வேண்டிக் கண்ணுதற் பெருங் கடவுளை நோக்கிப் பாடு கிடந்தனர். அப்பெருமானின் தண்ணருளால் அவ்விருவர்க்கும் மகவாக ஆளுடைய பிள்ளையார் திருவவதாரம் செய்தார். தம் மூன்றாம் வயதில் உமையம்மையார் பாலடிசிலைப் பொன்வள்ளத்து ஊட்ட உண்டு, பிள்ளையார் சிவஞானசம்பந்தராயினார். இந்

நிலையில் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம், பவமதனை அறம் ஆக்கும் பாங்கினில் ஓங்கிய ஞானம், உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம் ஆகியவற்றைப் பிறர் துணையின்றித் தாமே உணர்ந்தார். 'யார் அளித்த பாலடிசில் உண்டாய்' என வெகுண்டு வினவிய தந்தையாரிடம் பிள்ளையார் 'தோடுடைய செவியன்' எனத்தொடங்கும் பதிகப் பாடல்களால் விடையிறுத்தார். இச் செயலைக் கண்டு வியந்த தந்தையாரும் பிறரும் ஞானக்கன்றை ஏத்திப் புகழ்ந்தனர். அதுமுதல் ஞானசம்பந்தர் பல திருப்பதிகளுக்கும் சென்று இசையுடன் இறைவன் புகழ்பாடி இறைஞ்சி வருவாராயினார்.

திருக் கோலக்காவில் எழுந்தருளிய ஈசனைக் கைம்மலர்களால் தாளமிட்டுப் பாடிய காலை, சிறிய பெருந்தகையாரின்மீது அருள்சுரந்து ஐந்தெழுத்து எழுதப் பெற்ற இரு பொற்றாளங்களை புகலிப்பெருமான் வழங்கியருளினார். பின்னர்த் தில்லை முதலிய திருப்பதிகளை வழிபட்டுத் திருநெல்வாயில் அரத்துறையை எய்தினார். அக்காலை அப்பதியுறை ஈசனின் இன்னருளால் முத்துச் சிவிகை, குடை, சின்னம் ஆகியவை கிடைக்கப் பெற்றார். பின் மழநாட்டிலுள்ள திருப்பாச்சிலாச்சிரமம் சென்று அவ்விறைவனை வழிபட்டுக் கொல்லி மழவன் மகளின் முயலகன் என்னும் நோயைப் போக்கினார். அடுத்துத் திருச்செங்குன்றூரில் பனிநோயால் வாடிய மக்களின் வாட்டம் கண்டு அவ்வூர்ப் பெருமான் திருவடி போற்றி அவர்தம் துயர்துடைத்தார். பின்னர்ப் பாண்டிக் கொடு முடி முதலிய பதிகளைப் பாடிப் பட்டீச்சுரம் வந்தெய்தியபோது அவருக்கு முதுவேனில் வெப்பம் நீங்க முக்கண்ணனார் அளித்த முத்துப்பந்தர் கிடைத்தது. பின் திருவாவடுதுறைப் பெம்மானைப் பாடித் தன் தந்தையார் வேள்வி செய்வதற்காகப் பொற்கிழி பெற்றார். திருமருகல் என்னும் பதியை வந்தெய்தியபோது தன் மாமன் மகன் பாம்பு தீண்டப்பெற்று இறந்ததனால் உழந்த வணிக

மகளின் இன்னல் தீர்க்க அப்பதியிறைவனைப்பாடி மாய்ந்த அவ்வணிகனை உயிர்பெறச் செய்தார். திருவீழிமிழலையில் பஞ்சத்தைப் போக்க இறைவனிடம் படிக்காசு பெற்றார். திருமறைக் காட்டில் மறைக் கதவு அடைக்கப் பாடினார். பின் மதுரையம்பதி ஏகி ஆலவாய் இறைவனை இறைஞ்சிச் சமணர்களை அனல்வாதம் புனல் வாதங்களில் வென்றார். வெப்பு நோயால் துன்புற்ற கூன்பாண்டியனைத் திருநீற்றுப் பதிகம் பாடி உய்யச் செய்தார். கொள்ளம்பூதூரில் ஓடத்தைக் கட்டவிழ்த்து அதன்கண் அடியார்களை ஏற்றிக் கொண்டு திருப்பதிகம் பாடிக் கரை கடந்தார். போதிமங்கையில் புத்தர்களை வாதில் வென்றார். திருவோத்தூரில் ஆண் பனைகளைப் பெண் பனைகளாக மாற்றினார். காஞ்சி, காளத்தி முதலிய தலங்களை வணங்கிப் பின் மயிலை சென்று அங்கு எலும்பைப் பெண்ணாக்கினார். திருமணக்கோலத்தோடு நல்லூர்ப் பெருமணக் கோயிலை எய்தி அங்குத் தோன்றிய பேரொளியில் அன்பர்கள் அனைவருடனும் இரண்டறக் கலந்தார். இவையே சம்பந்தப் பெருமான் வாழ்க்கையின் சிறப்புக் கூறுகளாகும்.

ஞானசம்பந்தரின் வாழ்க்கை வரலாற்றைப் பதினாறு இயல்களாகப் பகுத்துக் கொண்டு பேராசிரியர் சுப்பு ரெட்டியார் அவர்கள் நயம்பட விளக்கிக் காட்டுவர். முதலியல் ஆளுடைய பிள்ளையாரின் பிறப்பும் வளர்ப்பும் பற்றிக் கூறுகிறது. அடுத்தது அவர் தம் கன்னித் திருத்தலப் பயணத்தைக் கட்டுரைக்கும். பின் சோழ நாட்டுத் திருத்தலப் பெரும் பயணம் 5, 7, 12 ஆம் இயல்களிலும், கொங்குநாட்டுத் தலவழிபாடு 6ஆம் இயலிலும், பாண்டி நாட்டுத் திருத்தல வழிபாடு 11ஆம் இயலிலும், நடுநாட்டுத் தலவழிபாடு 13ஆம் இயலிலும், தொண்டை நாட்டுத் தலப் பயணம் 14ஆம் இயலிலும், விரிவாகப் பேசப்படுகின்றன. ஞானசம்பந்தர் தம் தலப்பயணங்களில் திருநீலகண்ட யாழ்ப்பாணருடன் சென்று பாடியிறைஞ்சிய நிகழ்ச்சிகளை

3ஆம் இயலிலும், அப்பர் பெருமானுடன் வழிபட்ட நிகழ்ச்சிகளை 8ஆம் இயலிலும், விரித்துரைப்பர். கழுமல நிகழ்ச்சிகளை 4ஆம் இயலிலும், வீழிமிழலை நிகழ்ச்சிகளை 9ஆம் இயலிலும், மதுரை மாநகர அற்புதங்களை 10ஆம் இயலிலும் குறிப்பிடுவர். பெருமண நல்லூரில் திருமணம் செய்து கொண்டு பேரொளியிற் கலந்து வீடுபேறு எய்திய செய்தியை 15ஆம் இயலிற்கூறி இறுதியாக அமைந்த 16ஆம் இயலில் ஞானசம்பந்தர் அருளிய தேவாரப்பாடல்கள் குறித்து 'அருளிச் செயல்கள்' என்னும் தலைப்பில் விளக்குவர்.

திருஞானசம்பந்தர் அருளிய தேவாரப்பாக்கள் சேக்கிழார் பெருமான் அருளிய பெரியபுராணம் முதலிய வற்றைத் துணையாகக் கொண்டு ஆளுடைய பிள்ளையாரின் வரலாற்றினை எளிய இனிய நடையில் பேராசிரியர் தொடர்புபடுத்தி எடுத்துக் காட்டுவர். தலப்பயணத்தைக் குறிப்பிடும்போது அவ்வத்தலத்தில் பாடியருளிய சில இனிய பாசுரங்களைத் தேர்ந்தெடுத்துக் காட்டுவர். ஆதலால் இந்நூல் வரலாறு அறிவதற்கு மட்டும் துணையாகாமல் தேவாரப் பாக்களை அறிந்துகொள் வதற்கும் துணையாகின்றது. சில தேவாரப் பாடல்களுக்குச் சேக்கிழார் தரும் விளக்கங்களை ஆங்காங்கே பேராசிரியர் இயைத்துக் காட்டுவது படிப்போருக்கு நல்விருந்தாக அமைகின்றது.

'அமணரிட்ட தீத்தழல் போய்ப் பையவே சென்று பாண்டியற்காகவே' எனத் திருஞானசம்பந்தர் பணித்தார். 'பையவே சென்று' எனக் கூறுவதன் நோக்கமறிந்து சேக்கிழார் ஒரு பாடலில் விளக்கம் அளிக்கின்றார்.

> **பாண்டிமா தேவியார் தமது பொற்பிற்**
> **பயிலுநெடு மங்கலநாண் பாதுகாத்தும்**
> **ஆண்டகையார் குலச்சிறையார் அன்பினாலும்**
> **அரசன்பால் அபராதம் உறுதலாலும்**

மீண்டுசிவ நெறியடையும் விதியினாலும்
வெண்ணீறு வெப்பகலப் புகலி வேந்தர்
தீண்டியிடப் பேறுடையன் ஆதலாலும்
தீப்பிணியைப் 'பையவே செல்க' என்றார்.
—திருஞான. புரா: 705.

என்ற இப்பாடலைத் தழுவிப் பாண்டிமா தேவியின் மங்கல நாணைப் பாதுகாத்தற் பொருட்டும், அமைச்சர் குலச்சிறையார் மன்னன்பால் வைத்த அன்பினைக் கருதியும், பாண்டியன்பால் அபராதம் உறுதலை எண்ணியும், அவன் திரும்பவும் சிவநெறியில் சேர்தற்குரிய நற்பேற்றினை நினைந்தும் பிள்ளையார் தீப்பிணியினைப் 'பையவே செல்க' எனப் பணித்தருளினதாகக் கூறுவர் சேக்கிழார் பெருமான் எனப் பேராசிரியர் எடுத்துக் காட்டுவது நயமுடைத்து (பக். 208).

நனிபள்ளியைப் பாடிய பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் முதலிரண்டடி பாலைப் புணைவாகவும் பின்னிரண்டடி நெய்தலும் மருதமும் கலந்த புனைவாகவும் உள்ளன. பாலையாக இருந்த நனிபள்ளி என்னும் பதி பதிகம் பாடியபின் வளமுடையதாக மாறியது என்பதற்குப் பல இலக்கியச் சான்றுகள் உள்ளன. எனினும், இந் நிகழ்ச்சியைச் சேக்கிழார் பெருமான் குறிப்பிடவில்லை என்று பேராசிரியர் எடுத்துக் காட்டுவது அவர்தம் இலக்கிய ஒப்பு நோக்குக்குச் சிறந்த சான்றாகும்.

பேராசிரியர் திருமாலிடமும் ஈடுபாடுடையவராதலின் நாயன்மார்களின் வரலாறு கூறும்போதும் திருமாலைப் பற்றிய கருத்துக்களைத் தொடர்புபடுத்திக் காட்டுவர்.

ஞானசம்பந்தரது தந்தையார் சிவபெருமானது திருவடியை நினைந்து போற்றும் தவப்பெருஞ் செல்வ ராதலின் சிவபாத இருதயர் என வழங்கப்பட்டார் என்று கூறும்போது அடிக்குறிப்பில் பெரியாழ்வார் திருமாலையே

சித்தத்தில் கொண்ட காரணத்தால் விஷ்ணுசித்தர் என்று பெயர் பெற்றார் என்ற செய்தியையும் தொடர்பு படுத்துவர் (பக்.1). சிதம்பரத்தைச் சைவர்கள் கோயில் என்று வழங்குவதைச் சுட்டும்போது வைணவர்கள் திருவரங்கத்தைக் கோயில் என்று வழங்குவது போல என்று காட்டுவர் (பக். 31). சிவபெருமான் நந்தன் தன்னைச் சேவிப்பதற்கு நந்தியை விலகச் சொன்னதற்குத் தென் திருப்பேரைநகரில் பெருமாள், பிள்ளைகள் விளையாட்டைக் காண்பதற்குக் கருடனை விலகச் சொன்னதை ஒப்பிடுவர் (பக் 77). சம்பந்தர் பல பதிகளையும் வணங்கித் தில்லைக் கூத்தரிடம் வந்து சேர்ந்ததைச் சொல்லும்போது 'எங்கும் சுற்றி அரங்கனைச் சேர்ந்தது போல' என்பர் (பக்.303). சண்டைவேந்தர் 'எனதுரை தனதுரையாக நீறணிந்து ஏறுகந்தேறிய நிமலன்' என்று பாடிய அடிகளுக்கு ஒப்புமையாக 'என்னைத் தன்னாக்கி, என்னால் தன்னை இன்தமிழ் பாடிய ஈசனை' (திருவாய் 7. 9:1) என்றும்,

> "என்சொல்லால் யான்சொன்ன
> இன்கவி என்பித்துத்
> தன்சொல்லால் தான்தன்னை
> கீர்த்தித்த மாயன்." (ஷ 7. 9:2)

என்றும் நம்மாழ்வார் அருளியதைக் காட்டுவர். (பக். 326)

ஞானசம்பந்தர் தேவாரத்தில் வரும் செய்திகளைப் பிறர் பாடிய தேவாரப் பாடல்கொண்டு வலியுறுத்துவது பேராசிரியரின் ஆழ்ந்தகன்ற புலமையினைக் காட்டும். திருக்கோலக்காவில் புகலிப் பிள்ளையார் பொற்றாளம் பெற்ற செய்தியை,

> "நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும்
> ஞானசம்பந் தனுக்கு உலகவர்முன்
> தாளம்ஈந் தவன்பாடலுக் கிரங்கும்
> . தன்மையாளனை." (7. 62: 8)

என்னும் நம்பியாரூரரின் பாடலால் வலியுறுத்துவர்.

திருவாவடுதுறை இறைவனை வேண்டித் தம் தந்தையார் வேள்வி செய்வதற்காகப் பொற்கிழியினைச் சம்பந்தர் பெற்ற செய்தியினை,

காயிரும் பொழில்கள் சூழ்ந்த
கழுமல வூரர்க் கம்பொன்
ஆயிரம் கொடுப்பர் போலும்
ஆவடு துறைய னாரே (4. 56: 1)

என்னும் திருநாவுக்கரசரின் பாடல்கொண்டு தெளிவு படுத்துவர்.

திருநீலகண்ட யாழ்ப்பாணருடன் சம்பந்தர் திருவெருக்கத்தம்புலியூரை அடைந்தபோது 'இப்பதி அடியனேன் பதி' எனப் பாணர் கூறக் காழிப்பெருந்தகை, 'ஐயர் நீர் அவதரித்திட்ட இப்பதி அளவில் மாதவம் முன் செய்தது' எனச் சிறப்பித்துரைத்தார். இந்கழ்ச்சியைச் சுட்டும்போது கண்ணன் தூது சென்ற ஞான்று, தன் மனைக்கு வந்ததும் விதுரன் 'நீ எய்தற்கு என்ன மாதவம் செய்தது இச்சிறு குடில்' என்று இயம்பியதை ஒப்பிட்டுக் காட்டுதல் நயமுடைத்து (பக். 35). நல்லூர்ப் பெருமணத் தில் திருஞான சம்பந்தருடன் அன்பர்களெல்லாம் பேரொளி யிற்கலந்து வீடுபேறுற்ற செய்தியை உரைக்கும்போது,

கொள்ளை கொள்ள வீடுதவிக்
கூற்றைப் பிடர்பிடித்துத்
தள்ளும் திருஞான சம்பந்தா

என்னும் சிவப்பிரகாச சுவாமிகளின் நால்வர் நான்மணி மாலைப் பகுதியைப் பொருத்திக்காட்டுவது இன்பந் தருவதாகும் (பக். 314).

நாயன்மார்களின் செயல்களை விளக்கும்போது உலகியல் நிகழ்ச்சிகளைப் பொருத்திக் காட்டுவது சுவை பயக்கின்றது. திருநாவுக்கரசர் தம்மைக் காணும் பொருட்டுக் காழிப்பதியின் எல்லையில் வந்தணைந்தார்

என்பதைப் பிள்ளையார் அடியார்கள்மூலம் கேள்விப் படுகின்றார். இதனை உணர்த்த அமைச்சர் முதலியோர் வருகையைச் சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சித் தொண்டர்கள் மூலம் அறிவதை எடுத்துக்காட்டுகின்றார் (பக். 59). பாண்டிய அரசன் சமண சமயத்தைச் சார்ந்த தால் அந்நாட்டுக் குடிமக்களும் அச்சமயத்தை மேற்கொள் கின்றனர். 'அரசன் எவ்வழியோ குடிமக்களும் அவ்வழி தானே நடப்பார்கள். இன்றைய கட்சி அரசியலிலும் இதைத்தானே நாம் காண்கின்றோம்? சனநாயக ஆட்சியில் பொதுமக்களில் சிலர் ஆட்சியாளர்களின் பாட்டுக்குத் தாளம் போட்டு அல்லது அதற்குத்தகச் சீறியாழை வாசித்துப் பல சலுகைகளையும் பதவிகளையும் பெறுவது நமக்குத் தெரியும் அன்றாட நிகழ்ச்சிகள் அன்றோ?' என விளக்குவர்.

கவுணியப்பப் பிள்ளையார் தேவர்க்கும் முனிவர்க்கும் கிடைத்தற்கரிய சிவஞானம் பெற்றமையால் திருஞான சம்பந்தர் எனப் போற்றப்பெறுகின்றார் என்று குறிப்பிட்ட பின்னர், அடிக்குறிப்பில் 'சிவஞானம் — பதிஞானம். பதிஞானத்திற்குத் தான் பதிப் பொருள் இனிது விளங்கும். பதிஞானத்தால் இறைவனை அறிதலையே சைவ சமய ஆச்சாரியர்கள் அருட்கண்ணால் காணுதல் என்று கூறுவர். இந்த ஞானம் பசுஞானம், பாசஞானம் இரண்டிலும் வேறுபட்டது; உயர்ந்தது' எனச் சிவஞானத்திற்கு விளக்கந் தருவது பேராசிரியரின் சமயப் புலமையைக் காட்ட வல்லதாம். (பக். 6).

கோளும் நாளும் தீயவேனும் இறைவனடியார்களுக்கு அவை நல்லவே என்று 'வேயுறு தோளிபங்கன்' எனத் தொடங்கும் பாடல் வாயிலாக உணர்த்திவிட்டுக் காழிப் பிள்ளையார் மதுரை புறப்படுகிறார். சமணர் செய்த தீமைகள் அவரைத் துன்புறுத்தவில்லை என்ற செய்தியைத் தெரிவித்தபின் பேராசிரியர் 'நம் வாழ்க்கையில் நாளும்

கோளும் நன்னிலையில் இல்லை என்பதை அறிய நேரும் போது இப்பதிகத்தைக் காலையிலும் மாலையிலும் ஓதி உளங்கரைதல் நன்று என்பது என் அநுபவம்' என்று குறிப்பிடுகின்றார். பிறிதோரிடத்தில் பிள்ளையார்க்குப் பிற காப்புகள் மிகை எனக் கருதித் திருநீற்றுக் காப்பினையே அவர்தம் திருநெற்றியில் அணிகின்றனர் என உரைத்த பின் பிற்காலத்தில் பாண்டியம்பதியில் 'மந்திரமாவது நீறு' என்று தொடங்கித் 'திருநீற்றுப் பதிகம் பாடித் திருநீற்றின் பெருமையைக் கட்புலனாகக் காட்டப் போகின்றார் அல்லவா?' என்று இச்செய்தியை இயைபு படுத்திக் காட்டுவர். மேலும் சொந்த வாழ்க்கையில் தமக்கு நேர்ந்த நிகழ்ச்சியை — 'மஞ்சட் காமாலையால் தாக்கப் பெற்று நாடியிறங்கி இறைவன் திருவடி நீழலை அடையும் நிலையில் இருந்த அடியேன் திருநீற்றுப் பதிகம் ஓதித் திருநீற்றினை நெற்றியிலும் உடலிலும் அணிந்து பிழைத்து இன்றும் தமிழ்த் தொண்டும் சிவத் தொண்டும் செய்து வருவதை நினைவு கூர்கிறேன்' — என்று கூறித் திருநீற்றின் பெருமையைப் புலப்படுத்துவர். இச் சொந்த அநுபவங்கள் அன்பர்களுக்குச் சிவநம்பிக்கை ஊட்டத் துணை புரியும்.

ஞானசம்பந்தர் வழிபட்ட பதிகளைக் கூறுமிடத்து அவற்றின் பெயர்க் காரணங்களையும் பேராசிரியர் விளக்கிச் செல்வர். தலைச் சங்கையைச் சம்பந்தர் பாடி இறைஞ்சினார் என்று கூறுமிடத்து அப்பதியின் பெயர்க் காரணம் விளக்கப்பட்டுள்ளது. சிறந்த சங்குகள் விற்பனை செய்யப்பெற்றதால் தலைச்சங்கம் என்று வழங்கினர். இவ்விடத்தைச் சுற்றிப் புரச (பலாச)மரக் காடாக இருந்தமையால் இவ்விடத்தைக் காடு என்றும் வழங்கினர். நாளடைவில் இவ்விரண்டு பெயர்களும் சேர்ந்து தலைச் சங்கக்காடு என்ற திருப்பெயராக வழங்கலாயிற்று. மக்கள் வாக்கில் இத்திருப்பெயர் மருவித் தலைச்சங்காடு என்ற பெருவழக்குப் பெறலாயிற்று (பக். 19). சத்தி முற்றம் (சத்தி முத்தம்) சத்தி சிவத்தை முத்தமிட்ட தலம்

(பக். 119), மருகல் (திருமருகல்) மருகல் என்பது வாழை; வாழை தல விருட்சமாதலால் அப்பெயர் பெற்றது (பக். 150), ஏடகம் (திருவேடகம்) ஏடு தங்கிய இடம் ஏடகம் ஆயிற்றுப் போலும் (பக். 221) இவ்வாறு பெயர் விளக்கங்களைப் பலவிடத்தும் காணலாம். இப்பொழுது பெயர் மாறியிருக்கும் தலப் பெயர்களை நாம் அறிந்து கொள்வதற்குத் துணையாகப் பழைய பெயருக்குப் பக்கத்தில் அடைப்புக் குறிக்குள் மாறிய பெயரையும் பேராசிரியர் குறித்துச் செல்கின்றார். மயேந்திரப்பள்ளி (கோயிலடிப் பாளையம்) கலிக்காமூர் (அன்னப்பன் பேட்டை) குருகாவூர் (திருக்கடவூர்) எருக்கத்தம் புலியூர் (இராசேந்திரப்பட்டினம்) முதுகுன்றம் (விருத்தாசலம்) நணா (பவானி), கோளிலி (திருக்குவளை) கானப்பேர் (காளையார் கோயில்) தினைநகர் (தீர்த்தகிரி) சோபுரம் (தியாகவல்லி) மயிலை (மயிலாப்பூர்) என்பன சில காட்டுகள். முன்னிருந்த பதி மாற்றியமைக்கப்பட்டிருந்தால் அதனையும் சுட்டிச் செல்வர், 'கழிப்பாலை என்னும் பழைய தலம் கொள்ளிடநதி வெள்ளத்தில் போயிற்று. இப்பொழுதுள்ள கோயில் நெல்வாயில் அரத்துறையாகிய சிவபுரியில் ஒரு தனிக் கோயிலாக உள்ளது' (பக். 33). ஊர்பற்றிய பல செய்திகளையும் தொகுத்துக் கூறியிருப்பது நூலைப் படிப்போர்க்குத் தலப் பயணம் செய்யும்போது பெரிதும் உதவியாயிருக்கும். 'பெண்ணாகடம்; விழுப்புரம் — திருச்சி இருப்பூர்தி வழியிலுள்ள பெண்ணாகடம் என்ற நிலையத்திலிருந்து ஒரு கல் தொலைவு. தலப் பெயர் சுருக்கமாகக் கடந்தை என்றும், ஆலயப் பெயர் தூங்கானை மாடம் என்றும் வழங்கும். கலிக்கம்ப நாயனார் தலம். அப்பர் பெருமான் தம்மைச் சிவன் சொத்து என்று உலகறியச் சூலக் குறியும் இடபக் குறியும் தமது தூல உடலில் பொறிக்கும்படி வேண்டி அவ்வாறே பெற்ற அற்புதத் தலம். அச்சுத களப்பாளர் என்ற வேளாளர் திருவெண்காட்டு முக்குள நீராடி வழிபட்டு மெய்கண்டார் என்ற புதல்வரைப்

பெற்ற தலம். மெய்கண்டார் சிவஞானபோதம் அருளிச் செய்து திருக்கயிலாய பரம்பரையைத் தாபித்த சந்தான முதற்குரவர்' இங்ஙனம் பதிகளைப் பற்றிய பல்வேறு செய்திகளைப் பேராசிரியர் அரிதின் முயன்று தொகுத்துத் தந்திருப்பது அன்பர்கள் அவற்றை எளிதில் உணர வழி வகுத்துள்ளது.

ஞானசம்பந்தர் அருளிச் செயல்களின் யாப்புப் பற்றிப் பேராசிரியர் விரிவாக ஆராய்ந்துள்ளார். 'யாப்பின் வகைகளை மொழி மாற்று, மாலை மாற்று, வழிமொழி, மடக்கு, இயமகம், ஏகபாதம், இருக்குக்குறள், எழுகூற்றிருக்கை ஈரடி, ஈரடி வைப்பு, நாலடிமேல் ஈரடி வைப்பு, முடுகியலாகிய திருவிராகம், சக்கரமாற்று, கோமூத்திரி, கூடற்சதுக்கம் முதலியனவாகும்' எனக் குறிப்பிட்டு விட்டு அவற்றை 56—72 பக்கங்களில் விளக்கியுள்ளார். யாழ் முரியின் இலக்கணத்தைத் தெளிவுபடுத்தியுள்ளார் (பக். 144). இவை பேராசிரியரின் யாப்பு, இசை ஆகியவை குறித்த புலமையைத் தெள்ளிதிற் காட்டவல்லன.

ஞானசம்பந்தர் பாசுரங்களில் கற்பனை வளத்தையும் காணலாம். அப்பாடல்கள் எல்லாம் தொகுத்துத் தரப்படவில்லையெனினும் பேராசிரியர் காட்டிய பாடல்களில் அவை இடம் பெற்றுள்ளன. சான்றாகத் திருவையாற்றுப் பதிகப் பாடலைக் காணலாம்.

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந் திட்டைமே லுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்
றருள்செய்வான் அமருங் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி
முகில்பார்க்கும் திருவை யாறே. (1.130:1)

இப்பாடலின்கீழ் 'பலமுறை படித்து — இல்லை பாடி — அநுபவித்து இதிலுள்ள இயற்கைக் காட்சிகளை மனத் திரையில் அமைத்து ஆனந்தம் அடையவேண்டும்' என்று குறித்துள்ளார். தேவாரப் பாடல்கள் கற்பனை வளமும் பொருட் செறிவும் பத்திமையும் நிறைந்தவை. அவற்றைத் துய்த்து இன்புறுதல் கற்பவர் கடனாகும்.

'நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறை மொழிகளாய்' தேவாரப் பாக்களைச் சுவையுடன் எடுத்துரைத்து நாயன்மார்கள் வழிபாடு செய்த தலங் களுக்கு விளக்கங் கூறி அவர்தம் வரலாறுகளை எளிய இனிய நடையில் நூலாக்கித் தரும் பேராசிரியர் சுப்பு ரெட்டியாரின் தொண்டு பாராட்டுதற்குரியது. அவர்தம் பத்திப் பனுவல்களை மெய்யன்பர்கள் சுவைத்துப் பயன் கொள்வார்கள். நாவுக்கரசர், ஞானசம்பந்தர் என்னும் நூல்களைப்போல் நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் போன்ற நூல்களைப் படைத்து மேலும் தமிழ்ப்பணி செய்து உடல்நலத்துடன் எல்லா நலங்களும் பெற்று வாழிய பல்லாண்டு என அப் பெரியவரை வாழ்த்து கிறேன்.

'குறள் இல்லம்'
330, மாரியப்பா நகர்,
அண்ணாமலைநகர் அஞ்சல்
பின்கோடு-608 002
15-11-1986

இரா. சாரங்கபாணி




பேராசிரியர் முனைவர்

ந சுப்பு ரெட்டியார்

நாவுக்கரசர்

எளிமை, இனிமை, தெளிவு இவர்தம் நூல்களின் தனிச்சிறப்புகளாகும்











1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publication




அணிந்துரை

நாவுக்கரசர் 1986

வழங்கியோர்:

டாக்டர் அ.மா.பரிமணம்







அணிந்துரை

டாக்டர் அ. மா. பரிமணம் எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
(பதிப்பாசிரியர், வாழ்வியற் கலைக் களஞ்சியம்,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை-613005)

சிறந்த இசையைக் கேட்கும் ஒருவன், தன்னையும் மறந்து அதன் இன்பத்தில் திளைக்கின்றான். அழகுமிக்க ஓவியத்தைக் காணும் ஒருவன், அக்காட்சியில் ஈடுபட்டு, இன்பமடைந்து மெய்மறந்து நிற்கின்றான். அந்த இசையும் ஓவியமும் அகன்றுவிட்டால், அவற்றைக் கேட்டும் கண்டும் இன்பத்தில் திளைத்தவர்கள், அவ்வின்பத்தை நினைவுகூர்ந்து மகிழ முடியுமே தவிர, அப்போது பெற்ற இன்பத்தினைப் பெற முடியாது. ஆனால் ஓர் அழகு மிக்க கவிதையை - இலக்கியத்தைப் பயின்றவர்கள் அது தம்மை விட்டு நீங்கிவிட்டாலும், அதனை மீண்டும் நினைவிற் கொண்டு, அதே இன்பத்தை எய்தலாம். முன்பு எய்திய இன்பத்தினும் மிக்க இன்பத்தை எய்தவும் கூடும்; தாம் பெற்ற அவ்வின்பத்தை மற்றவர்களும் பெறுமாறு செய்யவும் கூடும். இது கவிதைக் கலைக்கு - இலக்கியக் கலைக்கு- அமைந்த தனிச் சிறப்பாகும்.

அஞ்சிறைத் தும்பியாகி இலக்கிய இன்பம் நுகர்ந்தோர் வேறு இன்பத்தினை விரும்பார். புலவர் பலர் கூடி, உரை

யாடிப் பெறும் இன்பம் மறுமையில் அடையும் வீட்டின்பத்தினும் மேலானது என்பதனை,

'தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முள் குழீஇ
நகலின் இனிதாயின் காண்பாம் அகல்வானத்து
உம்பர் உறைவார் பதி'

—நாலடி. 137

என்னும் நாலடியார்ச் செய்யுள் நாடகப் பாங்கில், கவிதை நயம்படக் காட்டியுள்ளது. இலக்கியத்தில் போலவே, சமயவாழ்வில் குறிப்பாகப் பக்தித் துறையில் ஈடுபட்டிருப் போரும் தாம் போற்றும் இறை நலத்தைத் துய்ப்பதைவிட மேலான இன்பம் இல்லை என்றே கருதுவர். தாம் ஏற்றுப் போற்றும் தெய்வத்தை உளமார நினைத்து, வாயார வாழ்த்தி, உடலார வழிபட்டு அடையும் இன்பத்தினும் உயர்ந்த இன்பம் இல்லை என்பதனைப் பக்தி வழி நின்ற சான்றோர்களின் வாழ்வாலும் வாக்காலும் உணரலாம். திருமாலடியாராகிய தொண்டரடிப் பொடியாழ்வார், அரங்கப்பெருமானை, அச்சுதா, அமரர் ஏறே, ஆயர்தம் கொழுந்தே என்பனவாகக் கூறி வாயினிக்கப் புகழ்ந்து பாடும் இன்பத்திற்கு வேறாக இந்திரப் பெரும் பதமும் வேண்டியதில்லை என்று உறுதி கூறுகின்றார். அப்பாசுரம் வருமாறு:

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகரு ளானே.

—திருமாலை-1

சிவனடியாராகிய திருநாவுக்கரசர் தாமுகந்த சிவபெருமான் திருக்கோலத்தைக் கண்ட கண்களால் காண்பதற்கு வேறொன்றுமில்லை என்று தெளிவுபடுத்தியுள்ளார். அவர் அருளிய திருப்பாடல் வருமாறு:

பாளை யுடைக்கமு கோங்கிப் பன்மாடம் நெருங்கியெங்கும்
வாளை யுடைப்புனல் வந்தெறி வாழ்வயல் தில்லை தன்னுள்
ஆள வுடைக்கழல் சிற்றம்பலத்தரன் ஆடல் கண்டால்
பீளை யுடைக்கண் களாற்பின்னைப் பேய்த்தொண்டர்
காண்பதென்னே.

—அப்பர் தேவாரம் 4.81; 1

ஆழ்வார்களும் நாயன்மார்களுமாகிய அருட்சான்றோர்கள் இவ்வாறு தாம் வணங்கும் தெய்வத்தைப் பரவியும் பார்த்தும் பெற்ற அருளார் இன்ப அநுபவங்களை, இசை நலஞ் சான்ற பாடல்களில் தேக்கி வழங்கியுள்ள பக்திப் பனுவல்களே திவ்வியப் பிரபந்த, தேவார திருவாசகங்களாகும்; இலக்கிய நயமும் பக்தி நலமும் ஒருங்கே திகழும் அருட் கருவூலங்களாகும்; இயலும் இசையும் கூத்தொடு கலந்து களிநடம் புரியும் வண்ண மலர்ச் சோலைகளாகும்.

மாணிக்கவாசகர் சிற்றம்பலப் பெருமானைக் குறிப்பிடும் போது, அவன், நினைத்தாலும் பேசினாலும் கண்டாலும் அவ்வாறு செய்யும ஒவ்வொரு தடவையிலும் உலப்பிலாத ஆனந்தத் தேனை அளிக்கவல்ல கூத்துடையவன் என்று கூறுகின்றார். வண்டினை விளித்துக் கூறும் பாங்கில் அமைந்த அந்த அமுதவாசகம் வருமாறு:

தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும்பு உள்நெக ஆனநதத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ !

—திருவாசகம் - கோத்தும்பி-3

குனிப்புடையானின் சிறப்பாகக் கூறப்பட்ட 'நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும் அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன்சொரியும்' இயல்பு, அவன் புகழ் பேசும் திருவாசகத்திற்கும், அதனை

ஒத்த அருட்பனுவல்களுக்கும் உண்டு. அந்த இயல்பினை நன்குணர்ந்த இராமலிங்க வள்ளலார் திருவாசக மாட்சி கூறுங்கால்,

:வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவைகலந்து
ஊன்கலந்து என்உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.

—திருவருட்பா - *3263* (ஐந்தாம் திருமுறை)

என இயம்பியுள்ளார். திருவாசகப் பாடலின் மாட்சி கூறிய இப்பாடலில், பொதுவாக இலக்கியப் பாடல்களைப்- குறிப்பாகப் பக்திப் பாடல்களைப் - பயின்று இன்பங் காண முற்படுவோர் தவறாது மேற்கொள்ள வேண்டிய கருத்து ஒன்றினைக் குறிப்பிட்டுள்ளார். அது 'நான்கலந்து பாடுதல்' என்பதாகும். பக்திப் பனுவல்களின் பயன் கொள் வதற்கு படித்தலோ பாடுதலோ மட்டும் போதா; படிக்கும் போதும் பாடும்போதும் 'நான்' கலக்கப் பெறுதல் வேண்டும்!

'நான்' கலத்தல் என்னும், பக்தி இலக்கிய அநுபவ உத்தியினை இக்கால இலக்கியத் திறனாய்வாளர் வேறு வகையாக விளக்குவர். கவிதை அநுபவம், பாடியோர், பாடுபொருள், பயில்வோர் என்னும் மூன்று கூறுபட்ட தாகும். பாடுபொருள்பற்றிய உணர்ச்சியும், பாடியோர் உணர்ச்சியும் ஒன்றுபட அமைவதே கவிதை. அந்த இரு உணர்ச்சிகளும் ஒன்றுபட்டு விளங்கும் கவிதையில் பயில் வோரின் உணர்ச்சி ஒன்றுபடப் பயின்றால் அங்குக் கவிதை இன்பம் அநுபவமாகும். கவிதை இன்பத்திற்கு அடிப் படையாகிய முக்கூற்று உணர்ச்சிகளுள் கவிதையில் இரு உணர்ச்சிகள் நேர்பட்டு நிற்கின்றன. அவற்றோடு கற் போன் உணர்ச்சியும் இயைந்து நேர்படுதல் வேண்டும். மூன்று உணர்வுகளும் நேர்படுவதனையே 'நான் கலந்து

பாடுதல்' என்று வள்ளலார் குறிப்பிட்டார். முக்கோணம் பட அமைந்த உணர்வுகள் நேர்படும்போது எய்தும் கவிதை - இலக்கிய - இன்பம், கோதிலா இன்பமாக - குறைவிலா நிறைவாக - அமைகின்றது.

'நான் கலந்து பாடுதல்' என்னும் 'உணர்வு நேர்பாடு' பக்திப் பனுவல் அநுபவத்திற்கு மிக மிக இன்றியமையாத தாகும். அவ்வகையில் பக்திப் பனுவல்களைப் பயிலுதலும் பயின்றவற்றைப் பயில்வோர் உளங்கொளப் பகர்தலும் ஓர் அரிய கலையாகும். தமிழில் அந்த அரிய கலை கைவரப் பெற்றவர்களுள் குறிப்பிடத்தக்கவர் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர். ந. சுப்புரெட்டியார் அவர்கள் ஆவார்கள். பழந் தமிழ் இலக்கியங்களும், ஆழ்வார் அமுதும் அளிக்கும் இன்பத்தில் ஆழங்கால் பட்டு விளங்கும் இரெட்டியாரவர்கள் 'நாவுக்கரசர்' என்னும் பெயரில் அவர்தம் வாழ்வையும் வாக்கையும் தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்க முற்பட்டுள்ளது பாராட்டத்தக்க ஒன்றாகும்.

பேராசிரியர் டாக்டர். ந. சுப்புரெட்டியாரவர்கள் 'பிறந்து மொழி பயின்ற' நாளெல்லாம், பிறமொழிக் காழ்ப்பின்றித் தமிழ் நாட்டங்கொண்டு கற்றவராவர். அதனால், உயர் கல்வி நிலையங்களில் 'தமிழ் கற்பிக்கும் முறையினை' வகுத்து நூலுருவில் வழங்கிய பெருமை அவருக்குண்டாயிற்று. அறிவியல் கற்று அதனைப் பயிற்றும் தொண்டினை மேற்கொண்ட அவர்தம் வாழ்வு, தமிழ் இலக்கியம் பயின்று, சமயக் கல்வியில் மேம்பட்டு, 'வேத சிகையும் விரிகலையும், மெய்யன்பர் போதமும் போய்த் தீண்டாப் பூரணமாய்' விளங்கும் பரம்பொருளை உணர்ந்து அநுபவிக்கும் அருள் வேட்கைமிக்கு விளங்குகின்றது. தம் டாக்டர் பட்ட ஆராய்ச்சிக்கு இவர்கள் நம்மாழ்வாரின் அருளிச் செயல்களை ஆய்வுப் பொருளாகக் கொண்டார்கள். அயராத ஆய்வாலும், தணியாத அருள் ஞான வேட்கையாலும், தளராத போதனையாலும் தாம் பெற்ற அருளநுபவ இன்பத்தினைத் தமிழ் வையகம் பெற வேண்டும் என

விரும்பி அதனைப் பல அரிய நூல்களாக வெளியிட்டுள் ளார். திருமகள் கேள்வனாகிய பெருமாள் உகந்தருளப் பட்டனவும், ஆழ்வார்களால் மங்களா சாசனம் செய்யப் பெற்றனவுமாகிய திவ்விய தேசங்களுக்குத் தமிழ் மக்களை இலக்கிய வழியில் ஆன்மிகப் பயணமாக அழைத்துச் சென்ற பெருமை டாக்டர் இரெட்டியாரவர்களுக்குண்டு.

சைவ வைணவ சமய வேறுபாடு கருதாமல் இருசமய அடியார் பனுவல்களிலும் ஈடுபட்டு இன்புற்றுத் திளைக்கும் மனநலத்தினைத் திரு. இரெட்டியாரவர்கள் வளர்த்துக் கொண்டுள்ளார்கள். தமிழகத்தின், சமயக் காழ்ப்பின்றிச் சைவ வைணவ இலக்கியச் செல்வங்களை ஆரத்துய்த்து அவற்றின் நலங்களைத் தமிழ் மக்களுக்குத் தம் பேச்சாலும் எழுத்தாலும் வரையாது வழங்கிய சிறப்பு இன்று அமரராக விளங்கும் தமிழ்க்கடல், சிவமணி, சிவம்பெருக்கும் சீலர் இராய. சொ. அவர்களைச் சாரும். உழுவலன்பினராய் அவர்களோடு பல ஆண்டுகள் உணர்வு ஒன்றப் பழகிய திரு. இரெட்டியாரவர்கள்பால், சமய வேறுபாடின்றித் திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களையும், தேவார, திரு வாசகப் பாக்களையும் நலமுணர்ந்து சுவைக்கவும் தாம் சுவைத்தவாறே மற்றவர்களைச் சுவைக்கச் செய்யவும் அமைந்த திறம் குறிப்பிடத்தக்கது. சைவ சமய குரவர் களாகத் திகழும் நால்வர் பெருமக்களின் வரலாற்றையும், அருளிச் செயல்களையும் தம்முடைய பாணியில் தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டும் என்று விரும்பிய டாக்டர் இரெட்டியாரவர்களின் வேணவா 'தம்பிரான்தோழர்' என்னும் பெயரில் அவ்வரிசையின் முதல் நூலாக வெளிவந் துள்ளது. அதனை அடுத்துத் நாவுக்கரசர் என்னும் பெயரில் இந்நூல் வெளிவருகிறது. எஞ்சிய இரு நூல்களும் விரைவில் அடுத்தடுத்து வெளிவரும் என்னும் நம்பிக்கை உண்டு. ஆழ்வார் பாசுரங்களுக்கு அமைந்துள்ள ஈடு முதலிய வியாக்கியானங்களை நன்கு கற்றுணர்ந்து அநுபவித்ததால், டாக்டர் இரெட்டியாரவர்கள், நாயன்மார்களின் பதிகங்

களை நோக்கும் கோணத்தில் புதுமையும் பொலிவும் திகழ்கின்றன. இரெட்டியாரவர்கள், அருட்பாசுரங்களைச் சுவைக்கும் பாங்கினை, அச்சுவையினைப் புலப்படுத்தும் பாணியை இந்நூலின் பக்கந்தோறும் காணமுடிகின்றது.

சைவ சமய குரவர் நால்வருள் ஒருவராகிய திருநாவுக்கரசர், உலகில் இதுகாறும் தோன்றியுள்ள இறையருட் செல்வர்களின் வரிசைகளில் முதல்வரிசையில் இடம்பெறத் தக்க மாட்சியுடையவர். அவர், தம் இளமையை, மெய்ப்பொருள் நாட்டங் கொண்டு அதனைத் தேடிக் கண்டடையும் முயற்சியிலும், முதுமையைத் 'தாம் தேடிக் கண்டு கொண்ட' மெய்ப்பொருள் அநுபவ இன்பத்தினை மக்களுக்கு எடுத்துக் கூறி அவர்களை நெறிப் படுத்தும் முயற்சியிலும் கழித்த நடையறாப் பெருந்துறவி. அவருடைய வாழ்க்கை, ஒரு சராசரி மனிதனால் முயன்றடைய முடியாதவாறு, வானத்து மதியமாய், வளர் இமயச் சிமயமாய்க் காணப்படுவதின்றித் தம்முடைய வாழ்க்கையொடு ஒத்தும் உறழ்ந்தும் கண்டு, நெருங்கிச் சென்று போற்றிக் கொள்ளத்தக்க எளிமையும் ஏற்றமும் கொண்டு விளங்குகின்றது. அது மனித சமுதாயத்தை விடுத்து, விலகி விலகிச் செல்வதாக அமையாமல், அதன் பால் நெருங்கி நெருங்கி வந்து, அணைத்து ஆறுதல் அளிக்கும் பாங்கில் அமைந்து திகழ்கின்றது! ஆன்ம ஈடேற்றம் விரும்பும் மக்களுக்கு அவர் வாழ்க்கை, ஒரு கலங்கரை விளக்கம்; அவர்தம் வாக்கு, வழுக்கு நிலத்திற் கிடைத்த ஊன்று கோல்! தென்னக மக்களின் - குறிப்பாகத் தமிழ் மக்களின் - ஆன்ம ஞான வெளியீடாகத் திகழும் சித்தாந்த சைவ சமயத்தின் கோட்பாடுகள், சாத்திரம் வடிவம் பெறுவதற்கு உதவியாக அமைந்த கருத்துக் கருக்கள் திருநாவுக்கரசர் திருவாக்கில் - தேவாரத்தில் - இலை மறைகாயாக இலங்குகின்றன. சிவபெருமான் சாத்திரமும் தோத்திரமுமாக அமைந்து விளங்கும் இயல்பினைத் திருநாவுக்கரசர் அழகுறக் காட்டியுள்ளார். அவர்தம்

பாடல்களும் அவ்வாறே சாத்திரமும் தோத்திரமுமாக அமைந்து சிவம் பெருக்கும் ஞானச் செல்வமாகத் திகழ் கின்றன.

சுந்தரமூர்த்தி சுவாமிகளால் தொகுத்தும், நம்பி யாண்டார் நம்பியவர்களால் வகுத்தும் கூறப்பெற்ற சிவனடியார் வரலாறுகளைச் சேக்கிழார் விரித்துப் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டத் திகழும் திருத்தொண்டர் புராணமாக - பெரிய புராணமாக - இயற்றியுள்ளார். சோழ மன்னரின் முதலமைச்சராகத் திகழ்ந்த சேக்கிழார் தமக்கு முந்திய சிவனடியார்களின் வரலாறுகளுக்கான கல்வெட்டு, இலக்கியம், மரபுகள் பற்றி அமையும் சான்றுகளைத் திரட்டி, அவற்றைக் கவிதைச் சுவையுடன் கலந்து வரலாற்றுக் காவியமாகத் தந்துள்ளார். அவர் கூறிய அடியார் வரலாறுகளின் உண்மைகளை மாற்றவோ மறுக்கவோ முற்படாமல் சைவ உலகம் ஏற்றுக் கொண்டு போற்றி வருகின்றது. இது சேக்கிழார் பெற்ற பெருஞ்சிறப் பாகும். சுந்தரர், நாவுக்கரசர், ஞானசம்பந்தர் ஆகிய தேவார மூவர்களைப் போலவே சமய வாழ்வும், இறையருளநுபவமும் சிறந்து, சைவ சமய நால்வருள் ஒருவராய்த் திகழும் மாணிக்கவாசகரின் வரலாறு சேக்கிழார் சுவாமிகளால் அருளப்படாமை சைவ உலகினுக் கோர் தவக்குறையேயாகும். அவர்தம் வரலாற்றை விளக்கும் புராணங்கள் கூறும் வரலாற்றுச் செய்திகளில் சில வேறுபாடுகள் அமையக் காண்கின்றோம். சேக்கிழார் சுவாமிகளால் ஐயந்திரிபுகட்கு இடமின்றி அமைக்கப் பட்டுள்ள திருநாவுக்கரசர் வாழ்க்கை வரலாறு, அவர்தம் வாழ்வையும் வாக்கையும் பாவும் ஊடுமாய் இணைத்து வழங்கும் கவின்மிக்க கலைவண்ண ஓவியஎழினியாகத் திகழ் கின்றது. இதற்கு முன்னர்த் திருநாவுக்கரசர் வாழ்க்கை யினைப் பலர் வடித்துத் தந்துள்ளனர்; சிலர், சோதனைக் குழலில் இட்டுச் சோதித்து அதன் மாற்றுயர்ந்த மாண் பினைப் புலப்படுத்தியுள்ளனர். சேக்கிழார் சென்னெறி

யினைப் பருந்தும் நிழலுமாய்ப் பின்பற்றிச் சென்று டாக்டர் ந. சுப்புரெட்டியாரவர்கள் திருநாவுக்கரசர் வரலாற்றையும், அவர்தம் தேவாரத் திறத்தையும், தம் தெளிந்த நடைத் தேனில் குழைத்து விருந்தாகவும் மருந்தாகவும் வழங்கியுள்ளார்.

தொண்டைமண்டலத் திருமுனைப்பாடி நாட்டுத் திருவாமூரில் வேளாண்குடியில் புகழனாருக்கும் மாதினியாருக்கும் பிறந்த திலகவதியாருக்குப் பின்னர்த் திருமகனாக மருள் நீக்கியார் என்னும் பெயரில் திருநாவுக்கரசர் தோன்றினார். பெற்றோர் திலகவதியாருக்குக் கலிப்பகையாரை மணஞ்செய்ய இசைந்திருந்த நிலையில் அவர் போரில் உயிர் கொடுத்துப் புகழ் பெற்றார். பெற்றோரும் இறந்த நிலையில் மருள்நீக்கியார் வேண்டுதலால் திலகவதியார் 'அம்பொன்மணி நூல் தாங்காது அனைத்துயிர்க்கும் அருள்தாங்கி' மனைத்தவம் புரிந்து, தம்பியாரைப் புரந்து வந்தார். தம் குடும்பத்தில் நேர்ந்த இறப்புகளால் 'நிலையாமை உணர்ந்து, அறம்பல புரிந்து, மெய்ப்பொருள் நாட்டங்கொண்டு' விளங்கிய மருள்நீக்கியார், 'சமயங்கள் ஆனவற்றின் நல்லாறு தெரிந்துணர நம்பன் அருளாமையால்' கொல்லாமை மறைந்துறையும் சமண சமயம் சார்ந்து, தருமசேனராகி விளங்கினார். திலகவதியாரின் வேண்டுதலால் இறைவன் தருமசேனருக்குச் சூலைநோய் அளிக்க, அதனை நீக்கும் இறுதி முயற்சியாகத் தமக்கையார் அளித்த 'திருவாளன் திருநீறு' கொண்டு, நோய் நீங்கப் பெற்றுச் சைவ சமயத்திற்கு மீண்டார். பொய்யமணர் தூண்டுதலால், நீற்றறையிலிடல், நஞ்சூட்டல், களிற்றால் இடறச் செய்தல், கடலில் பாய்ச்சுதல் என்று அரசன் செய்த கொடுமைகளிலிருந்து, திருவருள் துணையால் உய்ந்து, சிவம் பெருக்கும் தொண்டினைத் தொடங்கித் தொடர்ந்தார். 'எழுந்திரீர் பணி செய்வீர்' என்று தம் தமக்கையார் திருமொழிகளையே குருமொழியாகக் கொண்டு கையில் உழவாரமும் மெய்யில் திருநீறும்

கொண்டு, 'கூற்றாயினவாறு' எனத் தொடங்கிக் கோதில் திருப்பதிகம் பாடிச் சிவத்தொண்டு புரியலானார். 'திருநாவுக்கரசு' என இறைவனால் அன்போடு அழைக்கவும் பெற்றார்.

திருப்பதிகள் பலவும் சென்று உழவாரப் பணி செய்தும், ஒண்தமிழ்ப்பதிகங்கள் பாடியும் வந்த நாவுக்கரசர் திருஞான சம்பந்தரால் 'அப்பர்' என அழைத்துப் போற்றப் பெற்றார். இறைவனை வேண்டி அவன் திருவடி சூட்டப் பெற்றார். தமிழகத்திலுள்ள தலங்கள் தோறும் அடியார் குழாத்துடன் சென்று பதிகத் திருத் தொண்டு புரிந்து வந்த திருநாவுக்கரசர் சிவபெருமான் கைலாயத்தில் இருக்கும் காட்சி காண விரும்பி வடநாடு சென்று இமய மலைமீது ஏறிச் செல்லுகையில் சிவபெருமான் அருளால் திரும்பப் பெற்றுத் திருவையாற்றில் தாம் விரும்பிய கயிலைக் காட்சியைக் கண்டின்புற்றார். மீண்டும் தமிழகத்தில் தம் பதிகத் தொண்டினைத் தொடர்ந்த நாவுக்கரசர் திருப்புகலூரில் இருந்தபோது, உழவாரம் இட்ட இடங்களிலெல்லாம் பொன்னும் மணியும் பொலிந்து தோன்ற, அவற்றை உழவாரத்தால் ஏந்திப் பொற்கமல வாவியுள் புக வீசினார். அகப்பற்றும் புறப்பற்றும் அற்று விளங்கிய அப்பரடிகள் 'என்னை இனிச் சேவடிக்கீழ் இருத்தியிடும்' என்று வேண்டித் தம் முடிவினை முன்னுணர்ந்து 'புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன், பூம்புகலூர் மேவிய புண்ணியனே' என்று கூறி ஒரு சித்திரைச் சதய நன்னாளில், 'அண்ணலார் சேவடிக்கீழ்' அமர்ந்தார். திருவாமூரில் தோன்றி மெய்ப்பொருள் நாட்டத்தில் பல் சமய நெறிகள் கற்றும், சமணம் சார்ந்தும், பின்னர்ச் சைவம் திரும்பியும், தம் உழவாரத்தாலும் தேவாரத்தாலும் உயர் சைவம் பெருக்கியும், சிவபெருமான் திருவடிக்கீழ் ஓர் 'தலைமறைவினை' அருளப்பெற்றுத் திருப்புகலூரில் நிறைவெய்திய நாவுக்கரசரின் எண்பத்தோராண்டு வாழ்வுச் சுருக்கம் இதுவாகும். ஆமூரில் முகிழ்த்த தவ வாழ்வு, புகலூரில் பூரணம் எய்திப் பொலிவுற்றது!

தேவார மூவர்களின் தொண்டு, பதிகள் பலவற்றிற்கும் அடியார்களோடு சென்று பதிகம் பாடி ஆங்காங்குள்ள மக்களை இறையுணர்வில் தோயச் செய்து அவ்வகையில்

சைவம் தழைக்கச் செய்தமையே யாதலின் அவர்களுடைய வரலாறுகளைக் கூறவந்த சேக்கிழார், அச் சான்றோர்கள் மேற்கொண்ட திருத்தலப் பயணங்களையும், ஆங்காங்கே நிகழ்ந்தனவற்றையும் முறைப்பட எண்ணி முந்து நூலாகப் படைத்துள்ளார். பிறப்பு, வளர்ப்பு, சமண் சமயம் புகுதல், சூலை நோயால் தடுத்தாட்கொள்ளப்பெறுதல், சமணர் சூழ்ச்சி, திருவதிகை ஈடுபாடு என்னும் தலைப்பு களில் நாவுக்கரசர் சைவ சமயத்திற்கு மீண்டு, பதிகப் பெருவழி அமைத்துச் சிவத்தொண்டு தொடங்கும் வரையி லான வரலாற்றைச் சேக்கிழார் வாக்கை இடைமிடைந்து கூறியுள்ளார் இந்நூலாசிரியர். அடுத்துத் திருநாவுக்கரசர் மேற்கொண்ட புனிதப் பயணங்களை வகைப்படுத்திக் கொண்டு விரிவாக விளக்கியுள்ளார். அப்பயணங்களை நாடுகள் அடிப்படையில் சோழ நாட்டுத் திருத்தலப் பயணம், தொண்டை நாட்டுத் திருத்தலப் பயணம், திருக் கயிலாயத் திருப்பயணம், பாண்டிநாட்டுத் திருத்தல வழிபாடு என வகுத்து விவரித்துள்ளார். இடையே, நாவுக்கரசர் திருஞானசம்பந்தரோடு இணைந்து சென்றமை, அப்பூதி அடிகளோடு அமைந்த அற்புதத் தொடர்பு, திருவாரூர் நிகழ்ச்சிகள், திருப்பூந்துருத்தியில் திருமடம் அமைத்திருந்தமை போன்ற நிகழ்ச்சிகளைச் சிறப்புறத் தொகுத்துள்ளார். நாவுக்கரசர் திருப்புகலூரில் எய்திய திருவடிப்பேற்றோடு வரலாற்றினை நிறைவு செய்து, அவர்தம் வாக்கினைப் பல்வேறுபடத் திகழும் பொதுப் பதிகங்களை விளக்குவதாலும், அருளிச் செயல் களை விளக்குவதாலும் ஆய்ந்து காட்டியுள்ளார்.

ஒரு தலத்திற்கு சென்று திருப்பதிக வழிபாடு ஆற்றிய பின்னர் அப்பர் பெருமான் அடுத்த தலம் செல்வதனைத் திரைக்காட்சி போலக் காட்ட முற்படும் திரு. இரெட்டியாரவர்கள், அதனைச் சுருக்கமும் தெளிவும்படக் காட்டுகின்றார். 'திருவேட்களம்' என்னும் திருத்தல வழிபாட்டினைப் பின்வருமாறு (பக்.63) காட்டியுள்ளார்.

> ''தில்லையிலிருந்து 'திருவேட்களம்' என்னும் திருப்பதிக்கு வருகின்றார். நன்று நாள் (4. 42) என்ற முதற்குறிப்புடைய பதிகம் பாடி, வேட்களத் திறைவனைவழிபடுகின்றார்.

அல்லல் இல்லை: அருவினை தானில்லை
மல்குவெண் பிறைசூடும் மணாளனார்
செல்வனார் திருவேட்களம் கைதொழ
வல்லராகில் வழியது காண்மினோ (4)

என்பது இப்பதிகத்தின் நான்காவது பாடல். அடுத்துத் திருக்கழிப் பாலைக்கு எழுந்தருளுகின்றார். 'வனபவள வாய்திறந்து' (4.6) என்ற பதிகம் பாடிக் கழிப் பாலை இறைவனை வழிபடுகின்றார். இது நாயகி நிலையில் 'தாய்ப்பாசுரமாக' அமைந்துள்ளது. அதாவது, தாய் காதல் வயப்பட்ட தன்மகள் நிலையை எடுத்துக் கூறுவதாகப் பாசுரம் நடக்கின்றது''.

தலப் பயணங்களை விளங்குங்கால், திரு. இரெட்டியாரவர்கள் அமைத்துக் கொண்ட முறை இதுவாகும். இதில், எந்த ஊரிலிருந்து எந்த ஊருக்குச் செல்கின்றார், வழிபாட்டிற்குப் பின்னர் எந்த ஊருக்குப் பயணத்தைத் தொடர்கின்றார், பாடிய பதிகத்தின் தொடக்கம் என்ன, அப்பதிகத்தில் இடம் பெற்ற நயமிக்கதொரு பாடல் ஆகியன போன்ற விவரங்களைக் கொடுத்து விடுகின்றார். பதிக முதற் குறிப்பினைச் சுட்டும்போதும், பாடலை எடுத்துக் காட்டும்போதும் திருமுறையில் அவை அமைந்துள்ள இடத்தைக் கண்டறியும் வகையில், உரிய எண்ணினை, திருமுறை - பதிகம் -பாடல் ஆகியவற்றின் எண்களைப் பிறைக் கோட்டினுள் தந்துள்ளார். குறிப்பிட்ட ஒரு பாடலின் இருப்பிடத்தை அறிய விரும்பும் ஆய்வாளருக்கு இந்த விவரம், மூலத் திருமுறை நூலினுள் தேடவேண்டாது காண உதவும் அருங்குறிப்பாகும். ஒவ்வொரு பதிகத்திலிருந்தும் எடுத்துக்காட்டாகக் காட்டப் பெறும் முழுப்பாடல், தேவாரப் பதிகப் பாடலைச் சுவைக்க விரும்பும் இலக்கிய விரும்பிகளுக்கு நல்ல தீனியாக அமைகின்றது. 'தாய்ப் பாசுரமாக அமைந்துள்ளது' என்பது போலக் காட்டப்படும் பதிகக் கருத்து விளக்கம் இலக்கியச் சுவைஞர்களுக்கு அளித்த சுவைக் குளிகையாகும்.

தலங்களைப் பற்றிய விவரங்களை நூலின் ஊடே தந்து நூலோட்டத்திற்கு ஊறு விளைக்காமல், அவ்வப் பதிகத்தின் அடியில் அடிக்குறிப்பெண் இட்டுக் கொடுத்திருப்பது இந்நூலின் சிறப்பாகும். ஊர்பற்றிய விவரங்களைத் தேவைப்படுவோர் தேடிச் செல்ல வேண்டாது ஆங்காங்கே அறிந்து கொள்ள வாய்ப்பாக அமைந்த இம்

முறை செம்முறையாகும். வேட்களம், கழிப்பாலை ஆகிய இருதலங்கள்பற்றிய திரு. இரெட்டியாரவர்களின் குறிப்புகள் (பக். 62, 63) வருமாறு:

> "வேட்களம் : சிதம்பரம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 1 கல் தொலைவு. பேருந்து வசதியுண்டு. அண்ணாமலைப் பல்கலைக் கழக வளாகத்தின் கீழ்க் கோடியில் உள்ளது. அருச்சுனன் பாசுபதாஸ்திரம் பெற்ற தலம். சம்பந்தர் இத்தலத்தைத் தம் தங்குமிடமாக வைத்துக் கொண்டு தில்லைக்கு அவ்வப்போது வழிபடச் செல்வார் என்று பெரிய புராணம் கூறும்.
>
> கழிப்பாலை : சிதம்பரம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 3 கல் தொலைவிலுள்ளது. பழைய தலத்தை கொள்ளிட நதி வெள்ளம் அடித்துச் சென்றது. இப்போதுள்ள கோயில் நெல்வாயில் ஆகிய சிவபுரியில் ஒரு தனிச் கோயிலாக உள்ளது."

பேச்சாளர் பற்றி, சில சொல்லல் தேற்றாதவரே, பல சொல்லக் காமுறுவர் என்னும் வள்ளுவர் கணிப்பு எழுத்தாளருக்கும் பொருந்துவதாகும். எதுகை மோனைச் சொல்லலங்காரப் புனைவுகளில் கருத்தினைப் புதைத்து விடும் இயல்பு திரு. இரெட்டியாரவர்களிடம் இருந்ததில்லை. இவர் காவியமாயினும், கவின்கலையாயினும், அறநூலாயினும் அறிவியலாயினும் தாம் கூறும் செய்திகளை எளிமையும் தெளிவும் பெற விளக்குவார். வேட்களம் கழிப்பாலை ஆகிய இரண்டு தலங்களையும் பற்றிய செய்திகள் சில வரிகளில் அமைந்துள்ளனவேனும், அவற்றின் இருப்பிடம், பண்டைநலம், அண்மைக் காலச் சிறப்பு ஆகியவற்றைத் தக்க சான்றுடன் காட்டுவனவாக அமைந்துள்ளன. சமயம், தத்துவம், இலக்கியம், வரலாறு, முதலிய பல்துறை நாட்டமுடையவர்க்கும் பெரிய புராணம் அவ்வவ்துறைச் சிறப்புமிக்க நூலாக விளங்கி இன்பஞ் செய்வது போல, திரு. இரெட்டியாரவர்களின் நாவுக்கரசர் நூலும், பல்துறை நாட்டமுடைய வாசகர்களுக்கும் அவரவர் சுவைக்கும் நிலைக்கும் ஏற்றவாறு இன்புறுத்தி இதந்தரும் ஒன்றாக அமைந்துள்ளது. நாவுக்கரசர் வரலாற்று வழித் தமிழகத்திலும் தமிழகத்திற்கு அப்பாற்பற்ற இடங்களிலும், சைவப் பயிர் வளர்க்கும் பக்திப் பண்ணைகளாகத் திகழும் திருத்தலங்களுக்குப் பயணஞ்

செய்ய விரும்புவோருக்கு அரியதொரு வழிகாட்டியாய் - விளக்க ஏடாய் — இந்நூல் விளங்குகின்றது.

சுந்தரர் முற்பிறப்பு வரலாறு சேக்கிழாரால் வெளிப் படப் கூறப்பட்டுள்ளமைபோல, நாவுக்கரசரின் முன்னை வரலாறு பெரிய புராணத்தில் கூறப்படவில்லை. எனினும் அதுபற்றிச் சில கதைகள் வழங்கி வருகின்றன, இந்நூலா சிரியர், 'உடன்பிறந்தான் முன்னமே முனியாகி எமை யடையத் தவ முயன்றான்' என்று இறைவாக்காக வரும் தொடரும், 'பண்டுபுரி நற்றவத்துப் பழுதின் அளவு இறை வழுவும் தொண்டர்' என்ற தொடரும் இப்புனைவுகளுக்கு வித்துக்களாக அமைகின்றன என்று சுட்டி, அக்கதைகளை யும் இந்நூலில் காட்டியுள்ளார் (பக். 8, 9.). அக்கதை ஒன்றில், 'இராவணன் அநுபவித்து எஞ்சிய துன்பத்தை நீ அநுபவித்து எம்மை அடைவாயாக' என்பது இறைவன் கட்டளையாக அமைகின்றது'' என்று இவ்வாசிரியர் காட்டியிருப்பது 'பொருந்தப் புனைவு' வகையினைச் சார்ந்ததாகும்.

பதிகப் பாடலின் கருத்தினை விளக்கிச் செல்லுகையில், மரபான விளக்கத்தோடு, இன்றைய உலகியலுக்குப் பொருந்தும் வகையில் விளக்கிச் செல்வது திரு. இரெட்டி யாரவர்களிடம் காணப்படும் ஒரு சிறப்பாகும். கடம்பூர்ப் பதிகத்தினைச் சுட்டி அதிலமைந்துள்ள, 'நங்கடம்பனைப் பெற்றவன் பங்கினன்' என்னும் பாடல் இக்கால நிலைக்குப் பொருந்துமாற்றை விளக்கிக் காட்டியிருப்பது அதற்கோர் சிறந்த எடுத்துக்காட்டாகும் (பக். 92). அப்பாடலில் ''தன்கடன் அடியேனையும் தாங்குதல் என்கடன் பணி செய்து கிடப்பதே'' என வரும் அடிகளை இக்காலக் குடியரசு ஆட்சிக்குப் பொருந்துமாறு விளக்கியுள்ளார்.

அகத்துறைக் கருத்தமைந்த பாடல்களை விளக்கும் போது, அப்பாடலுக்கேற்ப 'வண பவள வாய் திறந்து' எனத் தொடங்கும் பாடல் நாயகி நிலையில் தாய்ப்பா சுரம்' (பக். 63) என்றும், 'வஞ்சித் தென் வளைகவர்ந் தவன்' எனத் தொடங்கும் பாடல் 'மகள் பாசுரம்' (ப. 118) என்றும் குறிப்பிட்டுச் செல்வது, ஆழ்வார் பாசுரங்களுக்கு அமைந்துள்ள வியாக்கியானங்களை ஆசிரியர் பயின்றதன் பயனாகும். ஆழ்வார் பாசுரங்களைப் பயின்ற சுவை முதிர்ச்சியால் இவர், 'உருகுமனத் தடியவர்

கட்கு ஊறும் தேனை' என்னும் திருத்தாண்டகத்தைக் குறிப்பிடும்போது, 'உளங்கனிந்திருக்கும் அடியவர் தங்கள் உள்ளத்தில் ஊறும் தேனை' என்ற திருமங்கையாழ்வார் பாசுரத் தொடரினை எடுத்துக்காட்டுவது (பக். 140) இன்பம் பயப்பதாக உள்ளது. ''திருக்குறுந்தொகைச் செந்தமிழ் மாலையால் சேவிக்கின்றார்' (பக் 192) என்று கூறியிருப்பது வைணவ மரபில் ஊறிய ஆசிரியர் தம் சொல்லாட்சிச் சிறப்பாகும்.

'உயிராவணம்' எனத் தொடங்கும் பதிகத்தில் இடம் பெற்றுள்ள 'முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்' என்னும் பாடலின் பொருளை விளக்கிப் பின், 'பாசத்தை நீக்கிப் பதியை அடையும் உயிரின் தன்மை கூறுகிறது என்று கருத்துரைக்கும் ஆசிரியர், 'தனியாக ஓர் அகப்பாடல் எப்படி வந்து இப்பதிகத்தில் ஏறியது என்பதை அறியக் கூடவில்லை'. (பக். 154) என்று கூறியிருப்பது எண்ணத் தக்கது. பொதுவாக ஒரு பதிகப் பாடல்கள் அனைத்தும் ஒரு போக்குடையனவாகும். அரிதாகச் சில பதிகப் பாடல் கள் பல் போக்குடையனவாக அமைதல் உண்டு. அவ்வகை யிலமைந்த 'உயிராவணம்' என்னும் தொடக்கப் பாடல் கொண்ட பதிகத்தின் இடையே பொருளால் வேறுபட்ட பாடல் - அகப்பாடல் - ஒன்று இடம் பெற்றுள்ளதெனக் கொள்ளுவது ஏற்புடையதாகும்.

திருமறைக் காட்டில் அப்பரும் சம்பந்தரும் ஆலயக் கதவினைத் திறக்கவும் மூடவும் பாடிய பாடற் சூழலை விளக்கும்போது, 'இந்த அற்புத நிகழ்ச்சி பண்டை நான் மறைகட்கும் திருநாவுக்கரசர் அருளிய தேவாரத் திருமுறை கட்கும் சிறிதும் வேற்றுமை இல்லை என்பதனைத் தெளிவாக வலியுறுத்தலைக் காண்கின்றோம்' என்று கருத்துக் கூறியிருப்பது, குறிப்பிடத்தக்கது (பக். 173). அவ்வாறே அப்பரும் சம்பந்தருங் கண்ட 'வாய்மூர்க் காட்சி' பற்றிய விளக்கமும் சிறப்பாக உள்ளது (பக். 177).

'சிவபெருமானின் திருவடிப்புகழ்ச்சி இப்பதிகத்தின் தனித்தன்மையாகும்' என்று ஒரு பதிகக் கருத்துரைத்த ஆசிரியர், 'கலம்பகம் போன்ற சிற்றிலக்கியங்களில், 'புயவகுப்பு, திருவடி வகுப்பு' போன்ற உறுப்புகளில் பாடல்கள் அமைவதற்குத் திருமுறை வித்திட்டிருக்கலாம்

என்பதற்கு இப்பதிகம் நல்லதொரு சான்று' என்று கூறியிருப்பது (பக். 200) ஏற்கத் தக்கதாகும்.

அப்பரடிகள் ஐயாற்றில் கண்ட கயிலைக் காட்சிக் கருத்தினை ஆசிரியர், கண்ணாற் காணும் உலகின் பன்மை யோனிகளில் இறைவன் உடனாகி நின்ற காட்சி முதற் காட்சி; இறைவன் காணப்படும் உலகினோடு உடனாகி நிற்பதேயில்லாமல் தனித்து வேறாகியும் நிற்பான்; இந்தக் காட்சியே இரண்டாவது காட்சி' எனத் தத்துவ நிலையில் சிறப்பாக விளக்கியுள்ளார் (பக். 246).

தலைப் பதிகங்களாக அல்லாமல், பொதுப் பதிகங் களாக அமைந்துள்ள சில பதிகங்களின் சிறப்பு, பெயர்க் காரணம் போன்றவற்றை விளக்கிய ஆசிரியர், திருநாவுக்கரசர் அருளிச் செயல்கள், அப்பர் தேவார யாப்பமைதி, பதிகங்களின் சிறப்புகள் போன்ற செய்தி களை இறுதியில் விளக்கியுள்ளார்.

நம் காலத்தில் காந்தியடிகள் அரசியலில் ஆன் மிகத்தைக், கலந்து மேற்கொண்ட உண்ணாநோன்பு, சத்தியாக்கிரகம் ஆகியவற்றின் முன்னோடியாய் விளங்கிய வராய் தயாமூலதன்மம் என்பதனை வாழ்க்கை நெறி யாகவும், தத்துவமாகவும் கண்டு காட்டிய பெருமை மிக்கவராய் விளங்கிய திருநாவுக்கரசரின் வாழ்வினையும் வாக்கினையும் அழகிய வரலாறாகத் தொகுத்து வழங்கிய பேராசிரியர் டாக்டர் சுப்புரெட்டியாவர்கள் தமிழ் மக்களின் பாராட்டிற்கு உரியவராகின்றார்.

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சை - 613005
22 - 6 - 1986

அ. மா. பரிமணம்

ஆழ்வார்களின் ஆராஅமுது

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

ஆழ்வார் பெருமக்கள் மங்களாசாசனம் செய்தருளிய
திவ்விய தேசங்களை நேரில் சேவித்து, அங்கு
நடந்தும், நின்றும், இருந்தும், கிடந்தும்
சேவை சாதிக்கும் எம்பெருமான்களின்
திருவருளைத் துய்த்துணர்ந்து
பாங்கினை பகரும் அரிய நூல்

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

ISBN: 978-81-939270-8-3



eBOOK ~ *மின் நூல்*




அணிந்துரை

ஆழ்வார்களின் ஆரா அமுது 1987

வழங்கியோர்:

புலவர் மு இராமசாமி







அணிந்துரை

'சிந்தாமணிச் செம்மல்' 'ஸ்ரீவைணவச் செல்வம்'
புலவர் மு. இராமசாமி எம்.ஏ., பி.எட்.

' இருந்தமிழே உன்னால் இருந்தேன்—இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன் '

என்று அமிழ்தச் சுவையை வேண்டாத தாக்கி தன் சுவையையே அறிஞர்களை வேண்டச் செய்யும் பெற்றியது தமிழ். தமிழ்ச்சுவை அமிழ்தத்தையும் சுவையற்றதாக்கும் இயல்பினை உணர்ந்தவர்கள் தமிழ்ச் சான்றோர்கள்.

'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' தென்னாட்டில் வைணவப் பெருமக்களால் பெரிதும் போற்றப்படும் சிறந்த பக்திப் பனுவல். இதன் கவிதைச் சுவையும் பக்திச் சுவையும் அழகும் நுகர்ந்து நுகர்ந்து இன்புறத்தக்கவை. தமிழ் மக்கள் அனைவருக்கும் பொதுவுடைமையாகக் கொள்ளுதற்கரிய பெருந் தகுதி வாய்ந்தது. பக்திப்பாடல் என்ற நூல் வகையில் இதனைப்போன்ற பெருமையுடைய நூல்கள் இலக்கிய உலகில் மிக மிகச் சிலவற்றைத்தான் கருதுதல் கூடும். ஆழ்வார் பெருமக்கள் பன்னிருவரால் அருளிச் செய்யப் பெற்ற பாசுரங்களின் தொகுப்பே இப் பிரபந்தம். 'அருமறை துணிந்த பொருள் முடிவை, இன் சொல் அமுது ஒழுகுகின்ற தமிழினில்' விளம்பி அருளியவர்கள்தாம் ஆழ்வார் பெருமக்கள்.

'ஆழ்வார்களின் ஆரா அமுது' என்ற இந்த நூல் பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் தாம் திருப்பதியில் பணியாற்றிய ஒரு காலப் பகுதியில் திருப்பதியைச் சுற்றி யுள்ள ஐந்து இடங்களில் நிகழ்த்திய ஆறு சொற்பொழிவு கள் அடங்கியது. ஒரு காலத்தில் ஒரு சில இடத்தினருக்குப் பயன்பட்ட பொழிவுகள் எல்லா இடத்தினருக்கும் எல்லாக் காலத்தினருக்கும் பயன்படட்டும் என்னும் பெருநோக்கால் இந்த ஆறு பொழிவுகளும் நூல் வடிவம் பெற்றுத் தமிழ் மக்களிடையே உலா வருகின்றன.

ஆழ்வார்கள் அரா அமுதப் பெருமானை எப்படி அநுபவித்தார்கள், அவ்வநுபவ ஆனந்தத்தை வெளியிடு வதற்கு எத்தகைய உயர்ந்த பாசுரங்களைப் பயன்படுத்தி னார்கள், அப்பாசுரங்கட்கு ஆசாரியப் பெருமக்களின் மணிப்பிரவாள நடையிலமைந்த வியாக்கியானங்கள் எப்படி நுட்பப் பொருளைக் காட்டியுள்ளன என்பவை போன்ற கருத்துகளை தெள்ளத் தெளிந்த ஆற்றொழுக்கான தீந்தமிழ் நடையில் விளங்க வைக்கும் ஆற்றலை இயல்பாகப் பெற்றவர் பேராசிரியர் டாக்டர் ரெட்டியார். ஆழ்வார் பெருமக்கள் மங்களா சாசனம் செய்தருளிய திவ்விய தேசங்களை நேரில் சேவித்து அங்கு நடந்தும், நின்றும், இருந்தும், கிடந்தும் சேவை சாதிக்கும் எம்பெருமான்களின் திருவருளுக்குப் பாத்திரமானவர். எழுபது அகவையைத் தாண்டும் நிலையின் எழுபத்தெட்டு நூல்களைப் படைத்த திருக்கரத்தினர். வாழ்நாளில் ஒரு சிறுபொழுதும் வீழ்நாள் படாமல் நற்றொண்டாற்றும் நல் இயல்பினர். உலைவின்றித் தாழாது உஞற்றி ஊழையும் உப்பக்கம் கண்டவர்.

துறையூர் உயர்நிலைப்பள்ளியை உருவாக்கி, திரு வாக்கி, அதன் தலைமையாசிரியராக நின்று பணியாற்றி அப்பக்கப் பெருமக்களின் அன்புக்கும் மரியாதைக்கும் பாத்திரரானவர். காரைக்குடி ஆசிரியப் பயிற்சிக்

கல்லூரியின் முதல் தமிழ்ப் பேராசிரியர் — துறைத் தலைவராகப் பணியேற்றுக் கல்லூரி வளர்ச்சியைப் பெரிதாக்கி தம் வளர்ச்சியையும் வளமாக்கிக் கொண்டவர். இவரிடம் பயிற்சி பெற்ற நூற்றுக்கணக்கான இளம் ஆசிரியர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவர். இக்காலத்தில் இவர் படைத்த பயிற்சி பற்றிய ஐந்து நூல்கள் 'அர்த்த பஞ்சகம்' போல் இன்றும் செல்வாக்குடன் திகழ்கின்றன. 'பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங் கொண்டல்' திருக்கோயில் கொண்டுள்ள திருமலை திரு அடிவாரத்தில் உருப்பெற்றுத் திகழும் திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் வேங்கடவாணனின் துணை கொண்டு தன் சொந்த முயற்சியால் 'ஓரேர் உழவன்போல்' தமிழ்த் துறையை உருவாக்கி அதைச் சீரும் சிறப்புமாக வளர்த்துத் திருவாக்கிய செம்மல். இவரது திருப்பதி வாழ்வும் (17 ஆண்டுகள்) தமிழ்த் திருத்தொண்டும் பொன்னெழுத்து களால் பொறிக்கப் பெற வேண்டியவை. செம்மாந்த சமயப் பெரு வாழ்க்கையராகிய இப்பெருமகனார் 'நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் — நம்மாழ்வார் தத்துவம்' என்ற தலைப்பை ஆய்வுப் பொருளாக்கிக் கொணடு ஆங்கிலத்தில் ஆய்வுக் கட்டுரையை உருவாக்கி டாக்டர் (பிஎச். டி) பட்டம் பெற்று வேங்கடவன் திருவருளையும் நிறையப் பெற்றவர்.

இத்தகைய பெருமையைப் பெற்ற இப்பேராசிரியப் பெருமகனார் படைத்த இப்பக்திப் பனுவல் பல சிறப்பு களைக் கொண்டது. நயம், நடை, உவமை, மேற் கோள், வைண சமயக் கருத்துகள், பொதுக் கருத்துகள், சொற் பொருள் விளக்கம், ஐயத்தைத் தெளிவுபடுத்துதல்— ஆகிய எட்டு வகைகளில் இந்நூலின் உயிரோட் டத்தைக் காணலாம். வைணவ சமய உயிரோட்டத்தின் அடக்கமும் எட்டெழுத்தில் தானே உள்ளது?

௯. நயம்: ஆழ்வார் பாசுரங்களில் பயின்று வந்துள்ள சொற்களின் பொருள் நுட்பத்தைப் படிப்பவரின் அறிவுக்குத் தித்திக்குமாறு எடுத்துக்காட்டுவதே நயமாகும். இத்தகைய நயமான பகுதிகள் பல உண்டு இந்நூலில். அவற்றுள் சில.

(1) காட்டில் வேங்கடம்: தண்டகாரண்ய வனத்தில் இருடிகளோடு கூடியிருந்து வனவாச ரசம் அநுபவித்த படிக்கு ஒப்பாகும் திருமலை வாசம் என்பதைக் காட்டுகின்றது இத்தொடர். கண்ண புரநகர்: வனவாசம் முடிந்து திருவயோத்தியில் அனைவரோடும் கூடியிருந்து நகர் வாச ரஸம் அநுபவித்தபடிக்கு ஒப்பாகும் திருக்கண்ணபுரவாசம் (பக். 33). வாமனன்: தன் உடைமையைப் பெறுகைக்குத் தான் இரப்பாளனாய் அவதரித்தபடியல்லவா வாமனாவதாரம்? இதனால் சேதநலாபம் ஈசுவரனுக்குப் புருஷார்த்தமேயன்றி ஈசுவர லாபம் சேதநனுக்குப் புருஷார்த்தம் அன்று என்ற ஸத்ஸம்ப்ரதாயார்த்தம் விளக்கும் (பக். 33-34). (2) அமலனாதிபிரான் (1) 'உவந்த உள்ளத்தனாய் (2) 'மந்திபாய் வடவேங்கட மாமலை' (3) என்ற முதல் மூன்று பாடல்களின் முதல் எழுத்துகள் அ, உ, ம என்பனவாகும். இவை ஓம் என்னும் பிரணவத்தின் வடிவமாக அமைந்திருப்பதைக் காண்கின்றோம் (பக். 61).

(3) 'கோரமாதவம் செய்தனன் கொல்' - இந்த அடியிலுள்ள 'செய்தனன்' என்பதைத் தன்மை வினைமுற்றாகக் கொள்ளாமல் படர்க்கை வினைமுற்றாகக் கொண்டு 'என்ன தவம் புரிந்தானோ?' என்பதாக்குக. — என்ன அழகான நுட்பம்? (பக். 68) (4) 'செய்யவாய் ஐயோ' — 'பச்சை மா மலை போன்ற மேனியின் அழகிற்குத் தப்ப முடிந்தாலும்

அடியார்களின் நலன்களை வினவத் துடித்துக் கொண்டிருக்கும் திருவாயின் அழகிற்குத் தப்ப முடியாது. 'ஐயோ!' என்பதற்கு "பண்டே பறி கொடுத்த என்னை அநியாயம் செய்வதே! என்று கூப்பிடுகின்றார் ஆழ்வார்" (பக். 70). (5) 'ஞாலம் ஏழும் உண்டான்' என்று சொல்வதைவிட 'வெண்ணெய் உண்ட வாயன், என் உள்ளம் கவர்ந்தான்' என்று கூறுவதில் இந்த ஆழ்வாருக்கு (திருப்பாணாழ்வார்) முற்றிலும் மனநிறைவு' (பக். 74). (6) 'மல்லர்களோடு போர் செய்யக் கற்றாயேயன்றி என்னோடு சிருங்கார ரஸாநுபவம் பண்ணக் கற்றிலை காண்!' என்ற வசை தோன்ற 'மற்பொரு தோளுடை வாசுதேவா!' என்று விளிக்கின்றாள் (பக். 256). இதில் குலசேகராழ்வார் நாயகியின் உள்ளம் பளிச்சிடுகின்றது.

உ. நடை: எழுத்தாளரது உள்ளத்துக் கிளர்ந்தெழும் உணர்ச்சிச் சரக்கு, நூலைக் கற்போரது உள்ளத்திற்குச் சென்று சேரும் வண்ணம் அதனை ஏற்றிச் செல்லும் வாகனமாக அமைவது நல்ல நடை அழகு. பாசுரங்களின் நயங்களைப் படிப்பவருக்குப் பயனுடையதாக்கும்போது தான் நடை அழகு பெறுகின்றது. இத்தகைய உரைநடை அழகினை இந்நூலுள் கண்டு மகிழலாம், சில எடுத்துக் காட்டுகள் :

(1) 'கீதமே ஓர் உருவம் கொண்டு சிந்திப்பதும், திகைப்பதும், தெளிவதும், கை கூப்புவதுமாக இருக்கின்றதோ?' என்று மயங்குகின்றார் மாமுனிவர் (பக். 57). (2) 'ஓதி ஓதி, உணர்ந்து உணர்ந்து, இன்புற்று அநுபவித்தால் ஒவ்வொரு சொல்லும் ஒரு படித் தேனாக இனிக்கும் (பக். 70). (3) 'புராணக் கதைகள் புதை பொருளோடு கூடியவை' (பக். 128). (4) முதலாழ்வார்கள் மூவரையும் ஒரு மாபெரும்

பக்தியுகத்தைத் தோற்றுவித்த மூல புருடர்களான மும்மணிகள் என்று கொள்வது மிகப் பொருத்தமாகும்' (பக். 150).

ங. உவமை : எழுத்தாளர்களை ஏந்திச் செல்லும் நடையை அழகுபடுத்த உதவுவது உவமை அணிகளாகும். கூறுவோனின் கருத்து நயத்தை கேட்போனின் உள்ளத்தில் எளிமையாக ஆழப் பதிய வைக்கும் ஒருவித யுக்தியே உவமையாகும். இதனால் கவிஞர்கட்கும் எழுத்தாளர் கட்கும் உவமையணி வலக்கையாக நின்று தன் பணியை நிறைவேற்றுகின்றது. இந்நூலில் உவமைகள் தக்க இடத்தில் தக்கவாறு அமைந்து கருத்துகளை எளிமையாக்கி இருப்பதைப் பலவாறாகக் காணலாம்.

(1) 'எழு ஞாயிறு இருளை ஓட்டுவதுபோல், இருட் சக்திகளான அஞ்ஞானம், அதர்மம் முதலியவற்றை ஈசுவர சக்தி ஓட்டிக் கொண்டிருப்பதாக உணர்ந்தார் இப்பரமஞானி' (பக். 51). (2) 'அமுதபானம் பண்ணி வைப்பவர்கள் பாலையும் சோற்றையும் பிறவற்றையும் கண்ணெடுத்துப் பார்ப்பார்களோ? — இவரும் 'மற்றொன்றினை' என்கின்றார்—வேறொன்றின் பேர் சொல்லவும் கூசுகின்றார்' (பக். 74). (3) ''வானநூல் அறிஞர்கள் பூமியின் சிறுமையையும் அதனை ஈர்த்து நிற்கும் கதிரவனின் பெருமையையும் உணர்வதுபோல், பக்தர்களும் சமுசாரத்தில் உழலும் தம் ஆன்மாவின் சிறுமையையும் எல்லா உயிர்களையும் புரக்கும் இறைவனின் பெருமையையும் பேராற்றலையும் உணர் கின்றனர் (பக். 110). (4) 'ஆட்டில் தாடையில் தொங்கும் முலை (அதர்) போலே என்னையும் என் தாய் வீணாக அன்றோ பெற்றாள்?' (பக். 251).

ச. மேற்கோள் : கூறும் கருத்துகளைத் தெளிவு படுத்துவதற்கும் உறுதிப்படுத்துவதற்கும் உதவுவது பொருத்தமான மேற்கோள்களாகும். இத்தகைய உயர்ந்த

மேற்கோள்கள் கையாளப் பெற்றிருப்பதை இந்நூலில் பரக்கக் காணலாம். அவற்றுள் சில:

(1) 'வாமனன் ஓட்டராவந்து' : 'இந்த வாக்கியம் சந்தர்ப்பஸ்வாரஸ்யத்தால், பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்வது: "ஓரடி மண்ணுக்குப்ப பதறுமவன், இவர்களைப் பெறும் போதைக்கு, ஆறியிரானிறே. ஆஸுரப்பிரகிருதியான மகாபலி முன்னே கழஞ்சு மண்ணுக்குப் பதறி நடக்குமவன், இவளொடு தலையானால், ஆறியிரானிறே. காற்றில் முன்னம் கடுகி ஓடிவரக் கடவனிறே' என்பது (பக். 35). 'வாமனன்' என்ற சொற்பொருளை விளக்குவதற்கு எடுத்துக் காட்டப் பெற்ற மேற்கோள் எவ்வளவு பொருத்தம்! (2) 'கமல பாதம் வந்து என், கண்ணின் உள்ளது ஒக்கின்றதே' (1) என்கின்றார். இவ்விடத்தில் முமுட்சுப்படியின் (146) இரண்டு வாக்கியங்கள் அநுசந்திக்கத் தக்கனவாகும். 'பிராட்டியும், அவனும் விடினும், திருவடிகள் விடாது திண்கழலயாயிருக்கும்' என்பது ஒன்று (பக்.61). (3) 'இத்தனை காலமாய் பாவங்களுக்கு இருப்பிடமாயிருந்த என் நெஞ்சை அப்பாவங்களை யோட்டிவிட்டுத் தனக்கு இருப்பிட மாகக் கொண்டான்' என்கின்றார் முன் இரண்டு அடிகளில். இந்த இடத்தில் நம்மாழ்வாரின் 'கல்லும் கனைகடலும்' (பெரிய. திருவந். 68) என்ற பாசுரம் அநுசந்திக்கத் தக்கது' (பக். 67). (4) திருமலைக் காட்சிகள் : 'பெரும்பாலும் எல்லா ஆழ்வார்களும் அர்ச்சாவதாரத்தில்தான் அதிக ஈடுபாட்டைக் காட்டு வதைப் போல் இந்த மூவரும் (முதலாழ்வார்கள்) அந் நிலையிலேயே அதிகம் ஈடுபடுகின்றார்கள். 'பூகதஜலம் போலே அந்தர்யாமித்வம்; ஆவரணஜலம் போலே பரத்வம்; பாற்கடல் போலே வியூகம்; பெருக்காறு போலே விபவம்; அதிலே, தேங்கின மடுக்கள் போலே

அர்ச்சாவதாரம் (ஸ்ரீவசனபூஷணம்-42) என்ற வாக்கியத்தைச் சிந்திக்கின்றோம்' (பக். 99.)

இந்த மேற்கோள்கள் யாவும் தக்க இடங்களில் எடுத்துக் காட்டியிருப்பது ஆசிரியரின் வைணவப் பெரு நூல்களின் பயிற்சியைக் காட்டுகின்றது.

ரு. வைணவ சமயக் கருத்துகள்: வைணவ சம்பந்தமான சம்பிரதாய, சாத்திர, தோத்திர நூல்களை ஆழ்ந்து கற்றவர்கள்தாம் இலக்கியங்களில் ஆங்காங்கு ஒளி விட்டுத் திகழ்ந்து கொண்டிருக்கும் சமய சம்பிரதாயக் கருத்துகளை தெளிவாக எடுத்துக்காட்ட இயலும். அப்பெரும்பணியைச் செய்துள்ளார் பேராசிரியர் இந்த நூலில். சில காட்டுகள்:

(1) 'அர்த்த பஞ்சகம்' என்பது என்ன? இதனை ஈண்டு விளக்குவேன்... திடமாயுள்ள பகவத, பாகவதபசாரங்கள் பொறுக்க முடியாத அபசாரங்களாகும்' (பக். 21, 22). (2) பேற்றுக்கு எம்பெருமான் சாதனமேயொழிய நாம் செய்யும் கிரியையால் லாபங்களொன்றும் சாதனமல்ல' (பக். 226). (3) இதனால் பரமான்மா சீவான்மாவுக்கு நன்மை செய்வதிலே ஊன்றியிருப்பதும், சீவான்மா பரமான்மாவிடம் நம்பிக்கை கொள்ள வேண்டியிருப்பதும் தெளிவாகின்றன' (பக். 280). (4) 'சீவான்மா பரமான்மாவை விட்டு விலகிப் போக முடியாத நிலையையும் பின்னது முன்னதற்கு ஆதாரமாயிருக்கும் நிலையையும் உணர்கின்றோம்' (பக். 281). (5) 'சீவான்மா பரமான்மாவின் உடைமை' (பக். 285).

சா. பொதுக் கருத்துகள்: எந்தச் சமயக் கருத்துகள் அந்தச் சமயத்திற்கு அப்பாற்பட்டவராய் வாழ்கின்ற மக்களுக்கும் பொருத்தமாக-ஏற்றுக் கொள்பவையாக-அமைகின்றனவோ அவைதாம் உயர்ந்த மக்கட் சமுதாயத்திற்குரியவையாகும். அத்தகைய பொதுவான கருத்துகளை

ஆழ்வார்களின் அருளிச் செயல்களிலிருந்து வடித்துக் கொடுத்துள்ளார் நூலாசிரியராகிய பேராசிரியர். சில காட்டுகள்:

(1) 'தண்டனையும் ஒரு முறையில் இறைவனின் திருவருளேயாகும்' (பக். 209). (2) 'இறைவனது கருணை வெள்ளம் துன்ப வடிவிலும் நம்மை வந்தடையும்' (பக். 280). (3) 'பரமான்மா இன்பம் தருபவன் என்பதையும் சீவான்மா இன்பம் துய்ப்பவன் என்பதையும் அறிகின்றோம்' (பக். 282). (4) 'உலகத்து உயிர்கட்கெல்லாம் பரமான்மாவே வாழ்வின் அடிப்படை' (பக். 283).

ஏ. சொற்பொருள் விளக்கம் : கையாளப்படும் சொற்களுக்குப் பொருத்தமான பொருள் விளக்கம் செய்வதும் நூலின் சிறப்புகளுள் ஒன்றாகும். இந்நூலில் இத்தகைய பொருள் விளக்கத்திற்குச் சில காட்டுகள்:

(1) நடலை-நிற்பது, இருப்பது, விழுவது, எழுவதாய்ப்படுகின்ற நோய் (பக்.40). (2) 'பிரசாதம் என்பது, அருளுக்கிடமான திருத்துழாய் முதலியவை' (பக். 45-46). (3) கிங்கரன்—அடிமையாள்; கிங்கரன் செய்யும் தொழில் அடிமைத் தொழில், அதாவது கைங்கரியம் (பக். 54). (4) 'பாரமாய பழவினைகள்—பொறுக்க முடியாத சுமையாகவுள்ள நெடுங்கால வினைகள்' (பக். 66). (5) 'பயின்றது—நித்தியவாசம் செய்தது' (பக். 87). (6) 'ஜன்ம உத்கர்ஷ அநுகர்ஷங்கள் தெரிவது'—சாதியும் ஆசிரமும் ஞானமும் ஒழுக்கமும் தள்ளத் தக்கவை என்கை' (பக். 220). (7) 'சலங்கொண்டு — தணியாத முற்றின வைரம் கொண்டு' (பக். 239).

ஐ. ஐயத்தைத் தெளிவுபடுத்துதல்: கற்பனவற்றைக் கசடறக் கற்பதுதான் கற்கும் முறையாகும். மயக்கமும் ஐயமும் இல்லாமல் உண்மையைத் தெளிவுபடுத்துவது

எழுத்தாளர்களின் சிறப்பியல்புகளுள் ஒன்றாகும். சில காட்டுகள்:

(1) 'அரங்கன், என் அமுதினைக் கண்ட கண்கள்'— இந்த அடியில் வருவது 'அமுதா, அமுதனா' என்பதில் ஐயப்பாடு. இதனைத் தெளிவுபடுத்துகின்றார் இந் நூலாசிரியர். 'உப்புச் சாறாய் எட்டா நிலத்தில் இருக்கும் தேவர்களின் அமுதம் போலன்றிப் பரமப் மதுரமாய் பரம சுலபமாயிருக்கும் நான் கண்ட அமுதம்' என்பார் 'என் அமுதினை' என்கின்றார். சிலர் 'அமுதனை' என்று ஓதுவது சுவையற்றது. ஆழ்வாருக்குப் பெரிய பெருமாள் அமுதத்தை யொத் திருத்தல் கருத்தேயல்லது 'அமுதனாகவே இருத்தல்' கருத்தன்று. திருமங்கையாழ்வாரும், 'அளப்பரிய ஆரமுதை அரங்கம் மேய அந்தணனை' (திருநெடுந். 14) என்று போற்றுவது கண்டு மகிழத் தக்கது' (பக், 74). 'அமுதன்' அல்லது 'அமுது' என்ற மேற்கோள் காட்டித் தெளிவுபடுத்தியிருப்பது நூலாசிரியரின் மதி நுட்பம் நூலோடு இயைந்த ஒன்று என்பதை வாசகர்கட்குத் தெளிவாகின்றது. (2) 'அற்றமே ஒன்ற றியீர், அவனல்லால் தெய்வம் இல்லை' (திருமாலை-9) —இதில் 'அற்றம்' — மறைபொருள்; உட்கருத்து 'அவன் அல்லால் தெய்வம் இல்லை' என்பதால் தேவதாந்தரங்கள் இல்லை என்று மறுக்கின்றார் அல்லர் ஆழ்வார். எம்பெருமானுக்குச் சரீரமாகப் பல தேவதைகள் உள என்பதற்கு மறுப்பு இல்லை. 'சரணமாகப் பற்றத்தக்க தெய்வம் வேறில்லை' என் பதையே ஆழ்வார் உணர்த்துவது (பக் 216-17). இத் தெளிவிற்குப் பிறகு இப்பாசுரம் எச்சமயத்தினர் உள்ளத்தையும் புண்படுத்தாதிருப்பதைக் காணலாம்.

நிறைவாக: இந்நூலின் மூலமாக, ஆழ்வார்கள் வழிபட்ட ஆராஅமுதை மனதாரக் கண்டு தரிசிக்கலாம்;

அவர்கள் அருளிய தமிழ் அமுதினைச் சுவைத்து இன்புறலாம். இந்நூலாசிரியரின் அகத்தோற்றத்து வைணவப் பொலிவைக் கண்டு வியந்து போற்றி மகிழலாம்.

இவருக்கு வேங்கடத்தெம்மானின் திருவருள் வெள்ளம் கோத்து நிற்பதால், இப்பேராசிரியப் பெருந்தகை இது போன்ற பயனுடைய நூல்கள் பலவற்றை உருவாக்கி விரைவில் 78 என்ற எண்ணை 100க்கு (நூல் 78 ஐ 100 ஆக்குதல்) உயர்த்திவிடுவார் எனப் பெரிதும் நம்புகின்றேன். 100 நூல்களின் ஆசிரியராக இப்பேரறிஞர் விளங்கும் காலம் மிக அண்மையதாக அமையவேண்டி 'வேங்கட விளக்கினை' வழுத்தி வழிபடுகின்றேன். ஆரா அமுதாக இனிக்கும் இவ்வரிய நூலுக்கு அணிந்துரை வழங்கும் வாய்ப்பைக் கிடைத்தற்கரிய பேறாகக் கருதுகின்றேன். இதுவும் அவனிட்ட வழக்காகவே கொள்ளுகின்றேன்.

'திருவரங்கம்'
7, எல்லப்பச்செட்டியார் குடியிருப்பு
இராசிபுரம்-637 408
சூலை, 6, 1987

மு. இராமசாமி

விட்டுச்சித்தன் விரித்த தமிழ்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

பெரியாழ்வாரைப்பற்றி பேராசிரியர் விரித்துரைக்கும் கருத்துக்கள் படிப்போரின் மனதில் பாங்குறப் படிவதற்கு இவர் வகுத்துக் கொண்ட இந்நூலின 14 இயல்களும், சரளமான தீந்தமிழ் நடையும், கருத்துக்களைத் தெளிவாக விளக்கும் போக்கும் கைகொடுத்து உதவுகின்றன.

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications



ISBN: 978-81-939835-4-6

eBOOK ~ மின் நூல்



அணிந்துரை


விட்டுச்சித்தன் விரித்த தமிழ் 1987

வழங்கியோர்:

க பத்மநாப ரெட்டியார்







ஸ்ரீ :

ஸ்ரீசௌமிய நாராயணாய நம :

அணிந்துரை

[திரு. க. பத்மநாபரெட்டியார்
பெருவள நல்லூர்]

குருந்தம்ஒன்று ஒசித்தானொடும் சென்று
கூடி யாடி விழாச்செய்து
திருந்து நான்மறை யோர்இராப்பகல்
ஏத்தி வாழ்திருக் கோட்டியூர்க்
கருந்தடமுகில் வண்ண னைக்கடைக்
கொண்டு கைதொழும் பக்தர்கள்
இருந்தவூரில் இருக்கும் மானிடர்
எத்த வங்கள்செய் தார்கொலோ! [4]

—பெரியாழ்வார்

'விட்டுசித்தன் விரித்த தமிழ்' என்னும் நூலின் ஆசிரியர் பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்களைக் கடந்த அரை நூற்றாண்டுக் காலமாகத் தமிழ் கூறு நல்லுலகமும் கிட்டத்தட்டக் கால் நூற்றாண்டு காலமாக வைணவ உலகமும் நன்கு அறியும். இவர் கற்றுத்துறை போய வித்தகர்; கணக்காயர். எழுபது அகவையைத் தாண்டி நிற்கும் இப்பெரியார் பல பட்டங்கள் பெற்றிருந்தாலும் 'உன்னுகின்ற போதெல்லாம் இன்பம் நல்கும் ஒப்பற்ற திருவாய்மொழியை இனிதேயாய்ந்து' தத்துவம் கண்டு டாக்டர் பட்டம் பெற்றது இவர் பெற்ற பட்டங்களின் மணிமுடியாகும். ஆசிரியம், இலக்கியம், சமயம், திறனாய்வு

---

4. பெரியாழ். திரு. 4.4;7

அறிவியல் முதலிய பல துறைகளில் எழுதிய 78 நூல்களில் 12 நூல்கள் வைணவ சமய—தத்துவங்களைப் பற்றியவை. இவற்றுள் எட்டு நூல்கட்குச் சென்னைப் பல்கலைக்கழகம், தமிழக அரசு, தமிழ் வளர்ச்சிக்கழகம் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளன. அண்மையில் (மார்ச்சு - 1987) பண்ணுருட்டி ஸ்ரீமத் ஏ. வே. வி. இராமாநுச நாவலர் சபை தமது 62-வது ஸ்ரீ வைணவ மாநாட்டில் இவர்தம் வைணவத் திருத்தொண்டினைப் பாராட்டும் முகத்தான் 'ஸ்ரீ சடகோபன் பொன்னடி' என்ற விருதை வழங்கிச் சிறப்பித்தமை இவர் பெற்ற பெரும்பேறாகும். திருப்பதியில் தம் முயற்சியால் தமிழ்த்துறையைத் தோற்றுவித்து நன்கு வளர்த்து ஆற்றிய பணி பொன்னெழுத்துகளால் போற்றத்தக்கது; அறிஞர் உலகத்தால் பாராட்டத்தக்கது.

இப்போது 'பெரியாழ்வார் திருமொழியை' நன்கு ஆய்ந்து பொதுவிருப்பார்வ நூலாக வழங்குகின்றார். இது பொதுமக்களுக்கு நல்விருந்து; வைணவ உலகிற்கும் பெரு விருந்து. பெரியாழ்வாரைப்பற்றி இவர் விரித்துரைக்கும் கருத்துகள் படிப்போரின் மனத்தில் பாங்குறப் படிவதற்கு இவர் வகுத்துக்கொண்ட இந்நூலின் பதினான்கு இயல்களும், சரளமான தீந்தமிழ் நடையும், கருத்துகளைத் தெளிவாக விளக்கும் போக்கும் கைகொடுத்து உதவுகின்றன.

சைவசமயத்தைச் சார்ந்த இப்பெருமகனார் பதினான்கு இயல்களாக நடைபெறும் இந்தப் பனுவலில் சமயக் காழ்ப்பின்றி பொதுநோக்கோடு உண்மையை உணர்ந்து பெரியாழ்வாரைப் பற்றிய பல கருத்துகளையும் வைணவக் கொள்கைகளின் நுட்பங்களையும் சம்பிரதாய மரபு கெடாது இயன்ற அளவு வைணவ நடை கலந்து உணர்த்தும் திறன் அனைவராலும் போற்றத் தக்கதாகும்; வைணவப் பெருமக்களாலும் பாராட்டத்தக்கதாகும். அவற்றுள் சில:

(1) பல சுருதிப் பாசுரம் ஒன்றில் வரும் 'விட்டு சித்தன் விரித்தமிழ்' (3:6:11) என்ற சொற்

றொடரையே நூலின் பெயராக இட்டு ஆசிரியர் வழங்கியமை நூலிற்குக் கவர்ச்சியுடைய பெயராக அமைந்திருப்பது ஒரு தனிச் சிறப்பாகும்.

(2) 'ஒரு மகள் தன்னையுடையேன்' (3.8:4) என்ற பாசுரத்தில் குறிப்பிடப்பெறும் 'ஒரே மகள் யார்?' என்பதன் விளக்கம் (பக். 6) அற்புதமாக வுள்ளது. இஃது ஆண்டாளைக் குறிக்காமல் தாய்ப் பாசுரத்தில் குறிக்கப்பெறும் 'மகள்' என்று ஆசிரியர் விளக்குவது (பக். 245) பொருத்தமாக அமைந்துள்ளது.

(3) பரத்துவ நிர்ணயத்தில் 'சமய சண்டமாருதங்கள்... தருக்கப் புலிகள்' வரையுள்ள பகுதி (பக். 13, 14) வாதச் சூழ்நிலையைக் காட்டி சொற்களின் ஓசையே வாதப் பிரதிவாதம் தொடங்கிவிட்டது போன்ற உணர்ச்சியை எழுப்பி விட்டுசித்தரின் வாதத் திறனையும் அற்புதமாகக் காட்டுவர்.

(4) 'திருப்பல்லாண்டு' பதிகத்தில் செல்வத்தை விரும்புபவர்கள், கைவல்யத்தை விரும்புபவர்கள், எம்பெருமானின் அநுபவத்தைமட்டிலும் விரும்பு பவர்கள் (பக். 24) என்று மூன்று அதிகாரிகளைக் காட்டி இதன் விளக்கத்தை (பக். 33) தெளிவாக எடுத் துரைப்பது இவர்தம் நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

(5) 'திருப்பல்லாண்டு தனிப்பிரபந்தமா?' என்ற வினாவை எழுப்பி வடகலை, தென்கலை முறை அவரவர் நிலையை விளக்கி நடுவு நிலையில் நின்று ஆய்ந்து (பக். 51) 'வேயர்தங்கள் குலத்த' (5. 4: 11) என்ற பாசுரத்தில் 'கோயில் கொண்ட கோவலன்' என்ற தொடருக்குப் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம் செய்துள்ளதை எடுத்துக்காட்டி 'திருப்பல்லாண்டு தனிப் பிரபந்தம் அன்று' என்று எவரும் ஒப்புக் கொள்ளும் முறையில் விளக்கியுள்ளமை இவர்தம் நியாய வாதத்தைக் காட்டுகின்றது.

(6) கண்ணனைப் 'பிள்ளைப் பெருமாள்' என்று பெயரிட்டழைப்பது புதுமையாகவும், எவரும் வியந்து, உவந்து, ஏற்றுப் போற்றுவதுமாகவும் உள்ளது (இயல். 5).

(7) பிள்ளைப் பெருமாளின் வளர்ச்சி நிலைகளைப் பல பாசுரங்களைக் கொண்டு (பக். 75 - 103) பிற்காலப் பிள்ளைத்தமிழ்க் கூறுகளைச் சுவைபட விளக்கிப் பிள்ளைத்தமிழ் இலக்கியத்திற்கு வித்திட்டவர் விஷ்ணுசித்தரே என்று அறுதியிட்டுக் கூறுவது இவர்தம் ஆராய்ச்சித் திறனை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது.

(8) கண்ணபிரானைக் குறித்து இவர்தம் 'விருந்தாவனம் எங்கும் செவிகளாய்...அடியார்களின் கொள்கையாக மலர்ந்துள்ளது' (பக். 173 - 174) என்ற பகுதியிலுள்ள விளக்கத்தில் ஒவ்வொரு சொற்றொடரும் கருத்தாழமும் சுவையும் மிக்கதாக உள்ளது.

(9) பாசுரங்களில் அகப் பொருள் கலப்பு (இயல் — 12) என்ற பகுதியில் உள்ள ஆராய்ச்சி ஆசிரியரின் சொந்த சொத்து. 'அகத்திணைக் கொள்கைகள்', 'தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை' என்ற இவர்தம் நூல்களே இதற்குச் சான்றுகளாக அமைகின்றன. அகப்பொருள் நுட்பங்கள் பக்தியாகப் பரிணமிக்கும் பொழுது எவ்வளவு உயர்நிலையை அடைகின்றன என்பதை விளக்கும் பாணியே இவர்தம் தனிச்சிறப்பாக அமைகின்றது.

(10) 'பாசுரங்களில் படிமங்கள்' (இயல் — 14) என்ற பகுதி மேனாட்டுத் திறனாய்வு முறையில் அமைந்துள்ளது. இதில் ஆசிரியரின் உளவியல் அறிவு கை கொடுத்து உதவியுள்ளது. இந்த இயல் இலக்கியத் திறனாய்வாளருக்கு ஒரு நல்ல விருந்து. ஆழ்வாரிடம் உள்ளத்தைப் பறிகொடுத்தமையே இங்ஙனம் இவரைச் செயற்படச் செய்துள்ளது என்று கருதலாம்.

இவற்றைத் தவிர வடமொழிப் பதங்களுக்குச் சரியான தமிழில் விளக்கம் கூறுதல் (பக். 20), பக்தியின் பெருமை (பக். 258 - 59), பிள்ளைகட்குத் திருநாமம் இடுதல் (பக். 259), அகத்திணை மரபுகள் (பக். 265), நாட்டுப் பாடல்களின் தாக்கம் (பக். 266) போன்ற பகுதிகளில் நல்ல விளக்கங்களைக் காண முடிகின்றது. கண்ணனின் சிறு குறும்புகள், தீரச் செயல்கள் என்ற பகுதிகள் ஆழ்வாரின் கிருஷ்ணாநுபவத்தைத் தெளிவாக விளக்கு கின்றன.

இங்ஙனம் பல்வேறு கோணங்களில் பெரியாழ் வாரையும் அவரது திருமொழிகளின் விளக்கங்களையும் காட்டி நமக்கு அரியதோர் பக்தி விருந்தாக அமைந்த இப்பனுவல் உள்ளபடியே 'விட்டுசித்தன் விரித்த தமிழே' யாகும். பெரியாழ்வாரைப் புரிந்து கொள்ள விழை வாருக்கு இஃது ஓர் திறனாய்வு விளக்கமாகும். இத்தகைய நல்லதோர் பனுவலைப் படைத்து அளித்த பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் நீலமேனி நெடியோனின் தண்ணரு ளால் நல்ல உடல்நலத்துடனும் மனவளத்துடனும் நோய் நொடியற்ற நீண்ட ஆயுளுடனும் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து நாட்டிற்கும், தமிழுக்கும், வைணவ சமயத் திற்கும் ஸ்ரீ சடகோபன் பொன்னடியாக, அருங்கலைக் கோனாகத், திகழ்ந்து தொண்டாற்ற வேண்டுமென்று அவன் திருக்கழலிணைகளை நினைத்து வணங்கி வாழ்த்து கின்றேன்.

பெருவளநல்லூர்
(வழி) பூவாளூர்
திருச்சி மாவட்டம்
பின்கோட் 621 712
6-5-1987

க. பத்மநாபன்

தமிழ் இலக்கியங்களில்

அறம் - நீதி - முறைமை

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

அறம் என்ற தலைப்பில், மனத்தூய்மை, நிலையாமை, நடுவுநிலைமை,
இன்னும்பிற : நீதி என்ற தலைப்பில், செங்கோன்மை, நீதி உணர்வு,
நீதிவழங்கல் இன்னபிற : முறைமை எனும் தலைப்பில், ஊழ்செயற்படுதல்,
முறைமை பற்றி பல்வேறு காட்டுகள் இன்னபிற தலைப்புகளை
எளிதாகவும், தெளிவாகவும், பற்பல கோணங்களில்
இனிய தமிழில் விளக்கியுள்ளார் பேராசிரியர்.

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

ISBN: 978-81-939637-3-9

eBOOK ~ மின் நூல்



அணிந்துரை

தமிழ் இலக்கியங்களில்

அறம் - நீதி - முறைமை


1988

வழங்கியோர்:

ஜஸ்டிஸ் எஸ் நடராஜன்







அணிந்துரை

(ஜஸ்டிஸ் எஸ். நடராசன், உச்சநீதிமன்றம், தில்லி)

'தமிழ் இலக்கியங்களில் அறம், நீதி, முறைமை' என்னும் தலைப்பில் சென்னைப் பல்கலைக் க்ழகத்தில் ஆற்றிய சொற்பொழிவுகளின் தொகுப்பு, நூலாக மலர்ந்தது கண்டு மகிழ்கிறேன்.

'அறம்' என்ற தலைப்பில் கூறப்பட்ட பொருள்கள் மிகவும் சிறப்பானவை. தொல்காப்பியம், நன்னூல், சங்க இலக்கியம், ஐம்பெரும் காப்பியங்கள் முதலான இலக்கண இலக்கிய நூல்களினின்றுமேற்கோள்கள் எடுத்துக் காட்டிய பாங்கு சிறப்பான ஒன்று.

உறுதிப் பொருள்களில் அறம், பொருள் என்னும் இரண்டன் விளக்கம் அருமையானது. இன்பத்தைப்பற்றிக் கூறுங்கால் ''இன்பம் என்பது வெறும் பொருளை மட்டும் நுகரும் இன்பமாக இருப்பின் அதுவும் புறப்பொருள் என்றே வழங்கும். ஆனால் அகப்பொருள் என்று கூறப் பெறும் இன்பமாவது உயரறிவின் அன்பை நுகரும் இன்ப மாதலின் அது தனியாக 'அகம்' என வழங்கலாயிற்று'' துப 10, 11) என்ற விளக்கம் நன்று.

முழுமுதற் கடவுளைச் 'சிவம்' என்று கூறி, அதனக் இயக்கத்தை, செயலை, செயலாற்றலை, அருளை 'அறம்' என்று கூறியிருப்பது (பக். 13) புதிய ஒன்று.

சங்க இலக்கியங்கள் பண்டைய தமிழரது வாழ்க்கை யைப் படம்பிடித்துக் காட்டுவன என்று சில காலமாக ஆராய்ச்சியாளர்கள் சொல்லுவதை ஆசிரியர் நன்றாக மறுத்துள்ளார் (பக். 17, 18).

இன்றைய வாழ்க்கை நிலையைப் பொருளாதார அடிப்படையில் ஆய்ந்து அக்கால இலக்கியங்கள் இன்றைய சூழ்நிலையில் எங்ஙனம் பொருந்தும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார் ஆசிரியர்.

அகப்பொருளில் அறத்தைப்பற்றி பேசுங்கால் "பால தாணையின், ஒத்தகிழவனும் கிழத்தியும் காண்ப" (தொல். கள. 5) என்னும் நூற்பாவில் 'கிழவனும் கிழத் தியும்' என்று இருவரையும் எழுவாயாக வைத்துக் காட்டும் பாங்கில் முன்னதாகக் காதலித்தவர் யார் என்ற வினாவுக்கு இடம்வைக்கவில்லை என்பது சிந்திக்கத் தக்கது" (பக்.-23) என வரைந்திருப்பது ஆசிரியர் ஆய்வுத் திறனுக்கு ஓர் காட்டு.

'அறத்தொடுநிற்றலையைப்' பக்தி இலக்கியத்தோடு புணர்த்திப் பேசுங்கால் ஆசிரியரது சமய இலக்கிய அறிவு நன்கு வெளிப்படுகிறது. குறிப்பாக வைணவ இலக்கியத் திலும், அந்த மரபுகளிலும் உள்ள ஆழ்ந்த பயிற்சி ஆய்வுக்குத் துணை செய்கிறது(பக்.-30).

வெளிநாட்டைப்பற்றிக்கூறிவருங்கால் சமுதாயச்சடங் கிற்கும், கற்பொழுக்கத்திற்கும் நடக்கும் போராட்டமாக வரைந்திருப்பது அழகான ஒன்று.

இல்லற இயல், துறவறவியல் என்னும் இரண்டிற்கும் பொதுவானவையாக அழுக்காறு, இன்னாச் சொல், அவா, வெகுளி என்னும் நான்கினையும் நீத்தல் என்றுகூறப்படுதல் வேண்டும் என்ற உரைத்த ஆசிரியர் (பக்-64) இக்காலத்துச் சில போலித் துறவிகள் செல்வம் சேர்ப்பதையே குறிக் கோளாகக் கொண்டு இயங்குவதைச் சுட்டிக்காட்டு கின்றார்.

"கண்டனென் கற்பினுக் கணியைக் கண்களால்" என்னும் கம்பன் சொற்றொடரில் வரும் 'க்ண்களால்' என்ற சொல்லுக்குப் புத்துரை வழங்கிய ஆசிரியர் (பக்-73) பாராட்டுக்குரியவர்.

'அன்பின்' சிறப்பையும் தன்னலத்தினால் ஏற்படும் தீமைகளையும் ஆசிரியர் நன்கு விளக்குகின்றார் (பக்-82).

'விருந்தோம்பலைச் சொல்லுங்கால் இக்காலத்தில் விருந்து என்ற பெயரில் நடக்கும் ஆடம்பரங்களையும், உண்மையான விருந்து வழங்க இயலாத நிலையையும் குறித்து ஆசிரியர் கூறியிருப்பது அவரது நுனித்த பார்வைக்கு ஓர் எடுத்துக் காட்டு (பக்-88).

'செய்ந்நன்றி அறிதல்' என்னும் தலைப்பின் கீழ் "செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல்அரிது" என்ற குறளுக்குக் கணித வாய்பட்டில் விளக்கம் தந்திருப்பது (பக்-98, 99) புதுமையான, ஆசிரியரின் சிந்தனைக்கு ஓர் உரைகல்லான எடுத்துக்காட்டு.

'பொறையுடைமையைப்' பற்றிக் கூறுங்கால், தருமனது பொறுமையை விளக்கும் முகத்தான் வில்லிபாரதப் பாடல்களையும், பாஞ்சாலி சபதப் பாக்களையும் எடுத்துக் காட்டியிருப்பது (பக் 132-135) சிறப்பான ஒன்று.

அவாவறுத்தல், வெஃகாமை, கள்ளாமை என்னும் மூன்று சொற்களும் ஒருபொருளுடையன போலத் தோன்றினும் அவை தம்முள் நுணுகிய வேறுபாடுடையன என அழகாகக் குறித்துள்ளார்.

துறவறவியலில், செவிச் செல்வத்தைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, அந்தச் செல்வம் பொருட்பாலினதாயினும் அருட்செல்வத்தினும் ஒருபடி உயர்ந்தது என்பதை விளக்கும் பாங்கு அழகியதாகும் (பக். 156-57).

'புலால் மறுத்தல்' பற்றி நீதிபதி ஒருவர் கூறிய கருத்து வள்ளுவத்திற்கு முரணானது என நிலைநாட்டியிருப்பது ஆசிரியரின் கொள்கைத்துணிவுக்கு (Courage of conviction) எடுத்துக்காட்டு (பக். 163-64)

'தவம்' அனைவர்க்கும் பொதுவானதென்றும், இல்லறத்தினரும் இதனை முயலுதலே சிறப்பானதென்றும்

கூறிய ஆசிரியர் அதற்குத் தக வள்ளுவரது வாய்மொழியை விளக்கியிருப்பது சாலப் பொருந்தும்(பக். 165).

'மழித்தலும் நீட்டலும்' என்பதைப்பற்றிக் குறிப்பிடும்போது தமக்குத் தெரிந்த ஒரு நிகழ்ச்சியைக் கூறியிருக்கும் பாங்கு ஆசிரியரின் நகைச்சுவையுணர்வையும், இத்தகைய வழக்கங்களில் அவருக்கு நம்பிக்கையின்மையையும் புலப்படுத்துவன(பக். 168-69).

'நீதி' என்ற பகுதியில் தொடக்கத்திலேயே அறத்திற்கும் நீதிக்கும் உள்ள வேற்றுமையைத் தெளிவுபடுத்தி விடுகின்றார்(பக். 218).

புறநானூற்றுக் காலத்தில் மன்னனை உயிராகவும் மக்களை உடம்பாகவும் காட்டப்பெற்ற கருத்து, கம்பன் காலத்தில் தலைகீழாகமாறி 'மக்களாட்சிக்கு' வித்து நடப்பெற்றது. அத்தகைய நிலையிலிருந்து ஆட்சி செய்யும் மன்னனின் செங்கோன்மையைப்பற்றி இக்கால நடைமுறையோடு ஒப்பிட்டுப் பேசுகிறார் ஆசிரியர் (பக். 224-225).

'நீதி நெறி' வழுவாது ஆட்சிபுரிந்த மூவேந்தரது வரலாறுகளின்று தக்க நிகழ்ச்சிகளை ஆசிரியர் கூறுகிறார் (பக். 232, 235, 248).

தமிழக வேந்தர் நீதி வழங்கிய முறையையும், அதன்பால் அவர்கள் கொண்டிருந்த ஊற்றத்தையும் ஆசிரியர் தக்க மேற்கோள்களுடன் புலப்படுத்துகிறார்.

'கொலைத்தண்டனை கூடாது' என்றும், சிற்சில இடங்களில் அது தேவை என்றும் இருவேறு கருத்துகள் நிலவும் சூழ்நிலையில் மேனாட்டு அறிஞர் வாய்மொழிப்படி திருந்தத் தக்கவர், திருந்தாதவர் என இரு பகுப்புடைய கொலைஞருள் பிற்பகுதியினருக்குக் கொலைத் தண்டனை சாலும் என்று கூறும் ஆசிரியர், அண்மைக் காலத்தில் நிகழ்ந்த இருபெருங் கொலைக் குற்றங்களைச்

சுட்டிக்காட்டுவது அவரது யதார்த்த நோக்கைப் (பக். 255) புலப்படுத்துவதாகும்.

இறை, புரவு, கடமை என்னும் சொற்கள் பிறந்த வகையைக் கூறும் ஆசிரியர் பிசிராந்தையாரது பாடலை எடுத்துக்காட்டி மன்னனது (இக்காலத்து அமைச்சரது) கடமை இன்னதென்று நிறுவுகின்றார் (பக். 258).

'அறிகரி' 'பொய்க்கரி' போன்ற சொற்கள் பயிலும் அகப்பாடல்களை மேற்கோள் காட்டி அம்முகத்தான் நீதிபற்றிக் கூறுவது சுவையான இடம் (பக். 266, 267).

உடல் ஊனமுற்றோருக்குச் சிறப்பாக அரசன் செய்ய வேண்டிய கடமையைப் பற்றிக் கூறிவரும்போது 'சாதி யொழிப்பு' என்ற பெயரில் நடக்கும் முறையற்ற செயல் களை ஆசிரியர் வெளிப்படையாகச் சாடுவது அவரது துணிவுக்கு ஓர் அளவுகோலாகும் (பக். 271, 275).

மூன்றாவது பகுதியாகிய 'முறைமை' யில் ஆசிரியர் பொதுவாக அச்சொல் பயின்றுவரும் இலக்கிய மேற்கோள் களையே எடுத்துக்காட்கிடுன்றார். முறைமை என்ற சொல் பெரும்பாலும் அறம், நீதி என்ற பொருளிலேயே ஆளப் படுதலானும், அவ்விரண்டையும் பற்றி முன்னரே நிறையக் கூறியிருத்தலானும், இந்தப்பகுதி சுருங்கவே அமைந்துள்ளது.

ஆயினும், முறைமை என்பது அரசநீதி, மரபு முறை, மரியாதைமுறை என்ற பொருள்களிலும் பயின்றுவரு வதைக் காணும் ஆசிரியரின் நுண்மாண் நுழைபுலம் வியக்கத் தக்கது.

'முறைமை' என்ற சொல்லை நெறிமுறை தவறாது நிகழும் ஊழ், ஞாலத்திகிரி, முதுநீர்த்திகிரி, காலத்திகிரி, கோலத்திகிரி போன்ற பொருள்களுடன் புணர்த்தி

வைணவ இலக்கியங்களின் மேற்கோள்களுடனும் இக்கால அறிவியல் வளர்ச்சியுடனும் ஒப்பிட்டுப் பேசும் பாங்கு மிகவும் சுவையான பகுதியாகும் (பக். 303-309).

பொதுவாக நூல்முழுதும், ஆசிரியரின் இலக்கண இலக்கிய அறிவையும், குறிப்பாக வைணவ சமயத்திலும் அதன் இலக்கியங்கள், தத்துவங்கள் ஆகியவற்றில் அவருக்குள்ள ஆழ்ந்த பயிற்சியையும் வெளிப்படுத்துகின்றன.

இந்நூல் தமிழ்கூறும் நல்லுலகிற்குக் கிடைத்த ஓர் மாமணி. தமிழின்பால் காதல் கொண்ட ஒவ்வொருவரும் பன்முறை படித்துப் பயன்பெற வேண்டிய நூல் இஃது என்பதில் ஐயமில்லை.

—எஸ். நடராசன்

நினைவுக் குமிழிகள் - 1

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

சுயசரிதை

கால கட்டம் ,,,,,, 1916 ~ 1941 (பல் வேறு இடங்கள்)

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-936450-1-7

eBOOK ~ மின் நூல்



அணிந்துரை


நினைவுக் குமிழிகள் - 1

1988

வழங்கியோர்:

டாக்டர் சிலம்பொலி சு செல்லப்பன்







அணிந்துரை

தமிழ் நாடு அரசு தமிழ் வளர்ச்சி இயக்குநர்
[**டாக்டர். சிலம்பொலி சு, செல்லப்பன்**
எம்.ஏ, பி,டி., பி.எல்., பிஎச்.டி.]

பேராசிரியர் **டாக்டர். ந. சுப்புரெட்டியார்** தம் வாழ்க்கை வரலாற்றை **'நினைவுக் குமிழிகள்'** என்னும் தலைப்பில் வரைந்துள்ளார்கள். முதல் தொகுதியாகிய இந்நூலில் அவர் பிறப்பு, பிள்ளைப் பருவ நிகழ்ச்சிகள், பள்ளி—கல்லூரிப் படிப்பு, துறையூர் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியராக அமர்த்தப் பெற்றமை ஆகிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. மற்றவை அடுத்த தொகுதிகளில் தொடரும்.

பேராசிரியர் ரெட்டியார் மூன்றாண்டுப் பருவம் நிரம்பும் முன்னர் தந்தையாரை இழந்தவர். எளிய குடும்பத்தில் வளர்ந்தவர்கள், என்றாலும் தன் கடின உழைப்பால் படிப்படியாக முன்னேறி இன்று கல்வியுலகு பாராட்டுகின்ற உயர்ந்த நிலையில் திகழ்கின்றார்கள். தம் வாழ்க்கைப் பயணம்பற்றி அவருடைய மனம் அசை போட்டதன் விளைவே இந்நூல். நீர்ப் பரப்பில் மழை சிறு தூறலாக விழும்போது குமிழிகள் தோன்றுவதில்லை. பெருந்துளிகளாக விரைந்து விழும் போது மட்டுமே அழுத்த மிகுதியால் குமிழிகள் தோன்றுகின்றன. பேராசிரியர் ரெட்டியாருடைய வாழ்க்கைப் பரப்பில், எண்ணத்தில் நிற்கின்ற அழுத்தமான நிகழ்ச்சிகள் மட்டுமே இங்குக் குமிழிகளாக உருப்பெற்றன. குமிழியை நோக்கும்போது அதனுள் நமது உருவத்தையும் காண முடியும். அதேபோல் இந்நூற் குமிழியைப் படிக்கும்போது

பேராசிரியர் ரெட்டியாரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளுடன் அந்த வயதில் நம்முடைய வாழ்வில் நடந்தவையும் நம் மனத்திற்குள் நிழலாடவே செய்யும்.

தங்கள் பெருமைகளைக் கூறிக் கொள்வதற்கு மட்டுமே வரலாறு எழுதுவாருண்டு; தங்களுக்கு நேர்ந்த இன்னல்களை மட்டுமே சொல்லி உலகம் தங்களைக் கண்டுகொள்ள வில்லையே என்னும் ஏக்கத்தைப் புலப்படுத்துவாரும் உண்டு. பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் உயர்வோ தாழ்வோ, நடந்ததை நடந்தவாறே ஒளிவு மறைவின்றி வெளியிட்டுள் ளார்கள். தம் இளமைப்பருவப் படிப்புபற்றிய செய்திகளை ஓவியப்படுத்துவதுபோல துல்லியமாகவும் அழகாகவும் சித்திரித்துள்ளார்கள். வெறும் நிகழ்ச்சிக் கோவையாக அமைந்துவிடாமல் ஒரு கட்டுரைக் களஞ்சியம்போன்று படிக்கப் படிக்க நிறைவேற்படுத்தும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது.

பேராசிரியர் தம் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை மட்டுமே அடுக்கிச் செல்லவில்லை. ஒவ்வொரு நிகழ்ச்சியைக் குறிக்கும்போதும் அது தொடர்பான பின்னணிகளுடன் அனைத்து விவரங்களையும் அழகு மிளிரும் சொல்லோவிய மாகத் தீட்டிச் செல்கின்றார்கள். இந்நூலினைப் பேராசிரியர் சுப்புரெட்டியாரின் தன்வரலாறு என்பதை விட 1920, 1930 களில் தமிழ் நாட்டுச் சிற்றூர்களின் நிலை, மக்களின் வாழ்க்கை முறை, திண்ணைப் பள்ளிக் கூடங்களில் கல்வி கற்றுத் தந்த முறை, உயர்நிலைப் பள்ளி—கல்லூரிகளில் கல்வி நிலை போன்றவற்றையெல்லாம் படம் பிடித்துக் காட்டுகின்ற சமூக வரலாற்று விளக்க நூல் என்று கூறுவது பொருத்தமாக இருக்கும். ஆசிரியரின் அன்னையார் பிறந்த ஊர் பெரகம்பி என்பதும், ஆசிரியரின் சொந்த ஊர் கோட்டாத்தூர் என்ப தும் வெறும் செய்தியாக மட்டும் இடம்பெறவில்லை. அந்த ஊர்களுக்கே ஆசிரியர் நம்மை அழைத்துச் செல்கின்றார்கள்.

அந்த ஊர்களில் வாழ்ந்தது போன்ற உணர்வுகளையும் தோற்றுவித்து விடுகின்றார்கள்.

திண்ணைப் பள்ளியில் நடைபெறும் சிறப்பான நிகழ்ச்சி களாகப் பிள்ளையார் சதுர்த்தி, சரசுவதி பூசை ஆகிய இரண்டைச் சொல்லலாம் என்பது ஆசிரியர் கூறவரும் செய்தி. ஆனால் ஆசிரியர் அந்தச் செய்தியைத் தெரிவிப்ப தோடு மட்டும் நில்லாது இவ்விரண்டு விழாக்களையும் ஏன் கொண்டாடுகின்றோம்? எவ்வாறு கொண்டாடுகின்றோம்? என முழு விவரங்களையும் தந்துவிடுகின்றார். இதேபோல் சிற்றூர்த் திருவிழாக்களாக கரக ஆட்ட விழா, கண்ணன் பிறப்பு, காமன் பண்டிகை போன்றவற்றைக் குறிப்பிட்டு அவற்றை விளக்குகின்றார்கள். கோலிகுண்டு, கிட்டிப்புள், பம்பரம், கார்த்திசுற்றுதல், பீச்சுக்குழல் ஆகிய சிறுவர் விளையாட்டுகளும் இதில் அழகாக இடம்பெறுகின்றன.

பேராசிரியர் ரெட்டியார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பேராசியராகப் பணிபுரிந்தவர். அதில் பெற்ற பட்டறிவு கொண்டு தன் பள்ளிப் படிப்பு, கல்லூரிப் படிப்பைப் பற்றிக் கூறும்போது இன்றைய கல்விமுறைகள், கற்பிக்கும் முறைகள் பற்றிய விளக்கங்களைச் சுவையாக எடுத்துச் சொல்லித் தாம் படித்தபோதிருந்த நிலையுடன் ஒப்பிட்டு அவற்றின் குறை நிறைகளை எடுத்துக் காட்டுகின்றார்கள். அவருக்குப் பாடம் சொல்லித் தந்த ஆசிரியர்களை நினைவுகூரும் வகையில் அவர்கள் சொல்லித் தந்த பாடங்களை நூலாசிரியர் நமக்குச் சொல்லித் தந்துவிடுகின்றார். அதனால் அறப்பளீசுரசதகம், குமரேச சதகம், விவேக சிந்தாமணி, நல்வழி, நன்னெறி போன்ற நூல்களிலிருந்து பல பாடல்களுக்கான விளக்கங் களைப் பெற்று மகிழ்கின்றோம்.

தமிழாசிரியர் குமார வீரய்யர் "கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவ!" எனும் கம்பராமாயணப் பாடலை

அன்று இவருக்கு நடத்திய திறத்தைக் கூறி, இன்று நாமும் இப்பாடலின் பொருள் நயத்தை உணர்ந்து மகிழுமாறு செய்கின்றார்கள். கற்பிக்கும் முறையில் கற்பித்தால் கணக்குப் பாடத்தைவிட எளிதான பாடம் இல்லை எனலாம்' ஆசிரியர் சரிவர விளக்கும் திறனில்லாதவராகும்போதுதான் 'கணக்கு பிணக்கு' என்னும் மொழி தோன்றுகின்றது. கணக்கைப் பிணக்கின்றி நடத்தியதால் இவருடைய கணித ஆசிரியர் திரு. கே. இராமச்சந்திர அய்யர் இவர் உள்ளத்தில் குறிக்கோள் ஆசிரியராக நிரந்தர இடத்தைப் பெற்றுள்ளதை அறிய முடிகின்றது. அவருடைய கற்பிக்கும் ஆற்றலை இந் நூலாசிரியர் கூற்றாகவே அறிவது சிறப்பாம். ''வரலாற்று ஆசிரியர் கதை சொல்லுவது போல் ஆரம்ப கணிதத்திலுள்ள கணக்கின் சூழ்நிலையை உண்டாக்கி விடுவார். இலாப நட்டம், கூட்டுவட்டி, வட்டிக் கணக்கு, கூட்டு வாணிகம் இவற்றைக் கற்பிப்பது அற்புதமாக இருக்கும். வகுப்பறையில் இருப்பதை மறந்து அங்காடித் தெருவில் இருப்பது போன்ற சூழ்நிலையை உண்டாக்கிவிடுவார். நாங்களே முதல் போட்டுக் கூட்டு வாணிகம் நடத்துவது போலவும், கந்து வட்டிக் கந்தசாமிக் கடையில் வட்டிக்குக் கடன் வாங்குவது போலவும், காஃபிப் பொடிக் கடையில் காஃபித் தூளில் சிக்கிரித் தூளைக் கலப்பது போலவும், சருக்கரை மூட்டைகள் போன்ற சரக்குகள் வண்டியில் வந்து இறங்குவது போலவும் உணர்ச்சியை எழுப்பி விடுவார்''—இவ்வாறு கற்பிக்கும் செய்திகளை வாழ்க்கையுடன் இணைக்கும்போது கருத்துகள் மனத்தில் ஆழமாகப் பதியத்தானே செய்யும்!

''இன்று பெரும்பாலும் இலக்கணம் மாணாக்கர் காதில் புகாத உலக்கையாகவே இருக்கின்றது. மாணாக்கர் இலக்கணத்தைச் சிம்ம சொப்பனமாகக் கருதுகின்றனர். இதற்கு இலக்கணம் காரணமன்று; கற்பிக்கும் ஆசிரியர்களே இந்நிலைக்குக் காரணம். இலக்கணத்தை அநுபவ முறையில்

இலக்கியப் பாடத்துடன் இணைத்துக் கற்பித்தால் மாணக்கர் கள் கட்டாயம் இலக்கணத்தை விரும்புவர். நல்ல முறையில் கற்பித்தால் ஏனைய பாடங்களைக் கற்பதுபோல் அதிக இன்பத்தையும் பெறுவர்'' என்கின்றார் இந்நூலாசிரியர். இவருக்கு இனிமையாக இலக்கணம் சொல்லித் தந்த ஆசிரியரை நினைக்கும்போது எனக்கு இலக்கணம் போதித்த ஆசிரியரும் என் நினைவுக் குமிழியில் தோற்றமளிக்கின்றார். என்னுடைய தமிழாசிரியர் வேற்றுமை உருபுகள் பற்றிப் பாடம் நடத்தும்போது முதல் வேற்றுமை உருபு, இரண்டாம் வேற்றுமை உருபு இன்னின்ன என்று சொல்லி நடத்தமாட்டார். ஒருகதை சொல்வதுபோலத் தொடங்குவார். ''ஒரு மன்னன், ஒரு மைந்தனைப் பெறும் விருப்பினால் தனக்குரிய மதுரை மாநகரின் நீங்கி மாதவத்தோரது மதங்கி வனத்தில் மலரவனே! மலரவனே! என மாதவம் புரிந்தனன்'' இதைச் சொல்லிப் பார்; இதில் எட்டு வேற்றுமைகளும் உள்ளன என்று விளக்குவார். ''மன்னன் — முதல் வேற்றுமை, மைந்தனை — 'ஐ' இரண்டாம் வேற்றுமை உருபு; பெரும் விருப்பினால் — 'ஆல்' மூன்றாம் வேற்றுமை உருபு; தனக்கு —'கு' நான்காம் வேற்றுமை உருபு; மதுரைமா நகரின்— 'இன்' ஐந்தாம் வேற்றுமை உருபு; மாதவத்தோரது—'அது, ஆறாம் வேற்றுமை உருபு; மதங்கி வனத்தில் —'இல்' ஏழாம் வேற்றுமை உருபு; மலரவனே! மலரவனே! —இது எட்டாம் வேற்றுமையாகிய விளி வேற்றுமை —தெரிகிறதா?'' என்பார். இவ்வாறு இலக்கணத்தைதச் சொல்லித் தந்தால் இலக்கணம் இனிப்பின் கொடுமுடியாக விளங்காதா?

தம் வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சொல்லிச் செல்லும் போது இலக்கியச் செய்திகளை இணைத்துச் சொல்வது இந் நூலாசிரியர்க்குக் கை வந்த கலையாக விளங்குகின்றது. சிற்றூரில் ஆரம்பக் கல்வி கற்ற இவரையும், இவர் அண்ணன் மகன் கணபதியையும் இவர்களின் ஆசிரியர் வி. கே.

அரங்கநாத அய்யர் அவர்களே முசிறிக்கு அழைத்துச் சென்று உயர்நிலைப் பள்ளியில் சேர்த்தார் என்பதை நயமாக எழுதுகின்றார். வசிட்டரிடம் கல்வி சற்ற இராம இலக்குமணர்களை விசுவாமித்திரர் வேள்வி காக்க அழைத்துச் சென்றார். இராம இலக்குமணர்கள் வசிட்டரிடம் பயிலாத சில அரிய வித்தைகளை இவரிடம் கற்றனர் என்பது இராமாயணம். பேராசிரியர் ரெட்டியாரையும், அவர் அண்ணன் மகனையும் அவர்களுடைய ஆசிரியா உயர்நிலைப் பள்ளியில் சேர்க்க முசிறிக்கு இட்டுச் சென்றது "வசிட்டரே இராம இலக்குமணர்களைக் கூட்டிச் சென்று" விசுவாமித்திரரிடம் விட்டது போன்று இருந்தது என எழுதி நயம் கூட்டுகின்றார்.

முதலில் புரியாதிருந்த ஒரு செய்தி பின்னர் புரிய வந்தது என்று கூறுமிடத்தில் "இந்தப் புதிர் அப்போது பிரம்ம சூத்திரம் போல் இருந்தாலும் நாளடைவில் அஃது பாஷியம் போல் விளக்கம் அடையும் என்பதை என்னால் அப்போது அறியக் கூடவில்லை" என எழுதுவதன் வாயிலாகச் சூத்திரம், பாஷியத்தின் இயல்பை நுண்மையாக விளக்குகின்றார்.

கல்லூரியில் படித்த காலத்தில் உணவு விடுதியில் தங்கியிருந்தபோது 'பிட்சு' எனும் இளைஞன் ஒருவன் அங்குப் பணியாளாக இருந்தான். அவன் சலிப்பு ஏதுமின்றி விருப்புடன் இவர்கள் இட்ட வேலைகளையெல்லாம் செய்தான். அதனை இலக்கிய நடையில் அவன் "பாரதியார் சித்திரிக்கும் 'கண்ணன்—என் சேவகனைப்" போன்றே பணியாற்றினான் என்பார்!

"எங்கும் தமிழ் எதிலும் தமிழ்" என்னும் முழக்கம் எம்மருங்கும் கேட்டாலும் நாம் சில சாதாரணப் பிழைகளைக் கூடக் களைவதில்லை. களைவதில் முயற்சி எடுத்துக் கொள்வதுமில்லை. அதனால் விளம்பரங்கள், அறிக்கைகள், வெளியீடுகள் இவை 'பிழை மலிந்த சருக்கங்களாகக்' காணப்

பெறுவதை நாம் எம்மருங்கும் பார்க்கிறோம்'' என்கின்றார். 'பிழை மலிந்த சருக்கம்' என்னும் தொடராட்சி நயத்தைத் தந்தாலும் இந்நிலை கவலைக்குரியதன்றோ? இதனைப் போக்கவேண்டுவது தமிழர் கடனன்றோ!

பேராசிரியர் ரெட்டியார் எப்போதுமே நகைச்சுவையாக உரையாடும் இயல்புடையவர். அவருடைய நகைச்சுவைப் பேச்சால் ஓயாது நகைத்த வண்ணமேயிருக்க வேண்டி யிருக்கும் என்பதை அவரிடம் உரையாடியோர் நன்கு உணர்வர். எழுத்திலும் அந்த நகைச்சுவை இழையோடுவதை நூல் முழுதும் காணமுடிகின்றது. அவர் சிறுபிள்ளையாகப் பாட்டி வீட்டில் வளர்ந்தபோது காலையில் பால்கறக்கும் போது முதலில் இவருடைய தம்ளரில்தான் கறந்துவிடுவார் களாம். சிறிது வெப்பத்துடன் உள்ள அந்தப் பசும்பாலை அப்படியே பருகுவாராம்! இதனை ''மகேசுவரப் பால் பூசை காலை ஆறு மணிக்குள் எனக்குத்தான் முதலில்'' என நயமாக எழுதிச் செல்கின்றார்.

இவருடைய துணைவியாரின் ஊரான பொட்டணத்தில் நல்லப்ப ரெட்டியார் என்று ஒருவர். அவர் வீட்டுத் திண்ணையில் அவருடன் நம் நூலாசிரியர் பேசிக் கொண் டிருப்பது பழக்கம். திரு நல்லப்ப ரெட்டியார் பேச்சில் வல்லவர். உலகியலை நன்கறிந்தவர். அவரால் உலகியல் பற்றிய எவ்வளவோ செய்திகளை அறிந்துகொள்ள முடிந்தது என்பதை ''இவர் திண்ணை ஒரு பி.டி.ஐ. (P.T.I.) அலுவலகம்போல் செயற்பட்டு வந்தது' என்று நகைச்சுவை யாகக் குறிப்பிடுகின்றார்.

மற்றோர் இடத்தில் ''நூலின் தமிழ்நடை நன்றாக ஆற்றொழுக்காக அமையவில்லை; மேடு பள்ளங்களுள்ள சரளைச் சாலையில் நடப்பது போன்ற அநுபவத்தைத் தந்தது'' என்பார். 'மேடு பள்ளங்களுள்ள சரளைச் சாலை',

என்னும் சொல்லாட்சி பொருத்தமான உவமையாக அமைவதோடு நடையைப்பற்றிய நகைப்பையும் உண்டாக்கி விடுகின்றது.

இடையிடையே வரும் முதுமொழிகளும் நயவுரைகளும் நடைக்கு உயிரூட்டுகின்றன. 'குருடன் இராஜ விழி விழிப்பது போல', 'சாணே ற முழஞ் சறுக்கியது', 'தப்பித்தது தம்பிரான் புண்ணியம்', 'பணம் பத்துவிதம் செய்யும்' 'கூட்டத்தில் கோவிந்தா போடுகிற மாதிரி', 'குருவிக்குத் தகுந்த இராமேசுரம்'. 'கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி; கடன் வாங்கியும் பட்டினி, 'பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவாது', 'கெடுமதி கண்ணுக்குத் தெரியாது', 'வினாச காலத்திற்கு விபரீத புத்தி', 'பூசாரியைப் பார்க்க முயல்வதைவிடச் சுவாமியைப் பார்ப்பது மேல்', 'பரம்பரை ஆண்டியோ பஞ்சத்தில் ஆண்டியோ' போன்ற மொழிகளைத் தக்க இடங்களில் பொருத்தமாகக் கையாண்டு செய்திக்குச் சுவைகூட்டி நடைக்கு விறுவிறுப்பூட்டியுள்ளார் ஆசிரியர்.

புகழ்ப் பட்டப் படிப்பில் (பி.எஸ்சி. ஆனர்ஸ்) சேர இவர் மறைத்திரு ஜெரோம் டி.செளஸா (முதல்வர்) அவர்களை அடிக்கடி நேரில் பார்த்துக் கெஞ்சினாராம். பத்து நாட்கள் தொடர்ந்து சென்று வந்ததை ''குழந்தைப் பேறு இல்லாத ஓர் இளம்பெண் அரச மரத்தைச் சுற்றி வழிபாடு செய்வதைப்போல் விடாமல் பாதிரியார் விடுதிக்குப் போவதும் வருவதுமாக இருந்தேன்'' என்றெழுதுவார். அவருடைய ஆர்வத்தையும் அக்கறையையும் காட்ட இதை விடச் சிறந்த உவமை ஏது?

'சாதி அமைப்பு ஒழிக்கப் பெறாதவரை நாட்டிற்குக் கதிமோட்சமே இல்லை' என்பது இவர் கொள்கை. தந்தை பெரியாரின் அடிச்சுவட்டை ஓரளவு பற்றியவரல்லவா?

பயிற்றிப் பலகல்வி தந்து—இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்

என்பது பாரதியின்கல்வித்திட்டம். இந்தத்திட்டம் வெற்றிகரமாக நிறைவேற வேண்டுமானால் தாய்மொழியிலேயே எல்லாப்பாடங்களையும் கற்பித்தல் வேண்டும். விலைப்பாலை விட முலைப்பால் நல்லதல்லவா? என்பன போன்று இன்றைய வாழ்க்கைக்குத் தேவையான இன்றியமையாக் கருத்துகளை இடையிடையே பொதித்து வைத்துள்ளார்.

இளமைப் பழக்கம் எப்போதும் நிலைக்கும் என்பர். இவர் கல்லூரியில் படித்த காலத்தே ஒரு குயர் தாள் ஒன்றரை அணாவுக்குக் கிடைக்கும். இத்தாள்களை ¼ புல்ஸ்கேப் அளவில் வெட்டிக் கோப்புகளில் போடுவதற்கேற்பத் துளையிட்டு வைத்துக் கொள்வாராம். ஒரு நாளுக்குத் தேவையான தாள்களை வகுப்பிற்கு எடுத்துச் செல்லும் கோப்பில் கோத்துக் கொண்டு ஆசிரியர் கொடுக்கும் குறிப்புகளை தேதிபோட்டு எழுதும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தாராம். இந்தப் பழக்கம் இன்றும் இவரிடம் தொடர்கின்றது. அன்று (1934ல்) வாங்கிய துளையிடும் கருவி இன்றும் (1988ல்) அவரிடம் பயன்பட்டு வருவதைப் பெருமையுடன் எழுதிக் களிக்கின்றார்.

உரியவர்கள் படிக்க நேர்ந்தால் தம்மீது சினம் கொள்வார்களே என்பது பற்றியெல்லாம் கவலைப்படாமல் எதனையும் மறைக்காமல் தாம் சொல்ல நினைத்ததைச் சொல்லிவிடுகின்ற இயல்புடையவர் இவர்.

"என் தாய் மாமனுக்கு வாழ்க்கைப்பட்ட அம்மையாரும் சற்றுக் கடுமையானவர்கள். அவர்களின் சிரித்த முகத்தை நான் ஒருநாளும் பார்த்ததில்லை" என் மாமன் மனைவி பற்றிக் கூறுவதும், "இராமநாதபிள்ளை, கரும்பலகையில்

$$\frac{PV}{T} = \frac{P_1V_1}{T_1}$$

என்னும் வாய்ப்பாட்டை எழுதி விளக்கினார். அவருக்கு விளக்குவதற்கு வேண்டிய ஆங்கில

அறிவு இல்லையா அல்லது அவர் விளக்கத்தைப் புரிந்து கொள்ளுவதற்கேற்ற ஆங்கில அறிவு என்னிடம் இல்லையா என்பது அந்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். நான் 'விளங்கவில்லையே' என்றேன். மேடையிலிருந்து இறங்கி வந்து என் கன்னங்கள் வீங்குமளவுக்கு மாறி மாறி அறைந்தார். மீண்டும் மேடையேறி அதே பாடத்தையே படித்தார். சொல்வதையே சொல்லும் கிளிப்பிள்ளை யானாரேயன்றி வேறு விதமாக மாற்றிச் சொல்லும் திறமை அவரிடம் இல்லை என்பதை உணர்ந்தேன்'' எனத் தனக்கு வேதியியலைக் கற்பித்த ஆசிரியர் பற்றிக் கூறுவதும் இதற்குச் சான்றாகளாம்!

தலைமையாசிரியப் பணி கிடைத்தது என்பதோடு நூல் நிறைவுறுகின்றது. ஆசிரியப் பணி இவருடைய உள்ளம் கவர்ந்த பணி. ''ஆசிரியர் பணி என்பது கீதாசிரியனின் பொறுப்பைப் போன்றது. அப்பணியுடன் ஒரு பொறுப்பும் இணைந்தே வருகின்றது. நாம் என்றும் அப்பணிக்கு நம்மைப் பொருத்தப்பட அமைத்துக் கொள்வதே அது'' என்பது ஆசிரியப் பணி பற்றிய ஆசிரியர் கருத்து. ஆசிரியப் பணி ஏற்ற அவர் அதனைத் திறம்பட அனைவரும் போற்றும் வகையில் கடமையுணர்வுடன் செய்து வந்தார் என்பதை அனைவரும் நன்கு அறிவர்.

பேராசிரியர் ரெட்டியார் அவர்களிடம் காரைக்குடியில் அழகப்பர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் மாணவனாக இருக்கும் நற்பேறு எனக்குக் கிட்டியது. 1952-53இல் அவருடைய மாணவனாக இருந்தேன். ''நான் காரைக்குடி யில் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றியபோது ஒரிருவரைத் தவிர எல்லோருமே உற்சாகமாக வகுப்புகளைக் கையாண் டோம். அதிகமாக நூல்களைப் பயின்றோம்; அற்புத மாகக் கற்பித்தோம்'' என்னும் பேராசிரியர் ரெட்டியார்

கூற்று நூற்றுக்கு நூறு உண்மை என்பதை அவரிடம் பயின்ற மாணவன் என்ற முறையில் என்னால் துணிந்து கூறமுடியும்.

அவருடைய மாணவன் என்னும் ஒரு தகுதி கருதியே எனக்கு இந்நூலுக்கு அணிந்துரை எழுதும் பெருவாய்ப்பினை ஆசிரியர் நல்கியுள்ளார். அவருக்கு என் உளமார்ந்த நன்றி.

இற்றைநாள் வரையிலான நிகழ்ச்சிகளையும் நினைவலைகளையும் ஆசிரியர் ஐந்து தொகுதிகளில் வெளியிட உள்ளார்கள். பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் எதுபற்றியும் எத்தனைத் தொகுதிகள் வேண்டுமானாலும் எழுதக்கூடிய அறிவும் ஆற்றலும் வாய்ந்தவர்கள். அவர்கள் எழுதும் அத்தனையும் முத்தனையதாகவே இருக்கும். இப் பெருந்தகை இன்னும் பல தொகுதிகளை நினைவுக் குமிழிகளாக வெளியிடுகின்ற வகையில் நெடுநாள் வாழ்ந்து தமிழுக்குத் தொண்டாற்ற வேண்டுமெனும் என் பெருவிருப்பினைத் தெரிவித்து வணங்கி அமைகின்றேன்.

"குறளகம்"
சென்னை-600 108
15-12-1988

அன்புடன்,
சு. செல்லப்பன்.

பாட்டுத்திறன்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

கவிதையின் தத்துவம், கற்பனை, சொல்வளம்,
யாப்புமுறை, அணிநலன், தொடைநயம்,
உண்மைப்பொருள் போன்ற செய்திகளை
திறம்படவும், நிரல்படவும்
உள்ளடக்கியது இந்நூல்

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939270-1-4

eBOOK ~ மின் நூல்




அணிந்துரை

பாட்டுத் திறன் 1988

வழங்கியோர்:

டாக்டர் க.ப. அறவாணன்







அணிந்துரை

டாக்டர் க. ப. அறவாணன்
தமிழியல் துறைத் தலைவர், புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி

நம் தலைமுறையில் இன்றும், என்றும் சுறுசுறுப்பாக இயங்கி வரும் மார்க்கண்டேயர் நம் சுப்புரெட்டியார் ஆவார்கள். முன்னையவர் ஆன்மிக மார்க்கண்டேயர். நம்மவர் எழுதும் மார்க்கண்டேயர். உழைப்பாலும், நினைப்பாலும், ஓயாது எழுதிக் குவித்துக் கொண்டிருக்கும் பேராசிரியர் தமிழ்ப் பேராசிரியர் உலகில் கள்ளம் கபடமற்ற குழந்தையாகத் திறந்த மனத்தோடு வாழ்கின்றவர்; விரிந்த மனத்தோடு உதவு கின்றவர்; அகன்ற மனத்தோடு அனைவரையும் அணைத்துக் கொள்கின்றவர்.

அவர் எழுதிய நூல்களில் அவருடைய அறிவியல் தெளிவு புலப்படும். கலையியல் தெளிவு கிடைக்கும். அறவியல் செழிப்பு கிடைக்கும். பல்முனை அறிவும், ஒருமுகப்பட்டுக் கிடைக்கும்.

அவர்தம் நூல்களில் ஒன்று 'பாட்டுத் திறன்'. இந்நூல் கவித்திறனை மட்டும் ஆராயாமல், கவித்திறனுக்கு அடிக் கிடையாகக் கிடக்கும் உடலியல், உளவியல், உணர்வியல் ஆகிய அனைத்தையும் ஆராய்கின்றது. உள்ளக் கிளர்ச்சிபற்றி வால்சன் ஆகியோர்கொண்ட கொள்கைகளை விளக்கி, பழந் தமிழர் உள்ளக்கிளர்ச்சி பற்றிக் கொண்ட கொள்கைகளைப் பொருத்திப் பார்த்து ஆராய்ந்து இருப்பது பாராட்டத்தக்கது.

கவிதையின் தத்துவம், கற்பனை சொல்வளம், யாப்பு முறை, அணி நலன், தொடை நயம், உண்மைப் பொருள் போன்ற பல்வேறு செய்திகளைப் பேராசிரியர் திறம்படவும், நிரல்படவும் விளக்கியுள்ளார்.

நூலின் முற்பகுதி தமிழிற்கு அறிவியல் அணி சேர்க்கும். பிற்பகுதிகள் இரண்டும் கவியியலுக்கு அணி சேர்க்கும்.

பாட்டுத்திறன்பற்றிப் பல்வேறு மரபு நூல்கள் தரும் கருத்து களையும் புதிய வரவு நூல்கள் கூறும் கருத்துகளையும் இணைத் துப் பிணைத்துத் தரும் பான்மையதாக விளங்குகிறது இந்நூல். சான்றாக, குறிப்புப் பொருள், வடமொழித் 'தொனி', தமிழ்

இலக்கிய இலக்கண உள்ளுறை, இறைச்சி ஆகியவற்றுடன் இணைத்து ஆராயப்பெற்றுள்ளது. அண்மை ஐரோப்பியத் திறனாய்வாளர்கள் முனைந்து போற்றும் 'இமேசரி' என்ற படிமம் கட்புலப் படிமம், செவிப்புலப் படிமம், சுவைப்புலப் படிமம், நாற்றப்புலப் படிமம் முதலாயின நிரலுறப் பகுக்கப்பெற்றுப் பொருத்தமான தமிழ் இலக்கிய மேற்கோள்களுடன் நல்கப் பெற்றுள்ளன.

சுவைகள் என்ற இயல், இரசம் பற்றிய பழைய கோட்பாட்டைப் புதிய புனைவில் அளிக்கின்றது.

தற்போது தமிழ்க் கவிதை உலகில் தலைமை பெற்று இன்றைய இதழ்களில் முன்னிடம் எய்தி இருக்கும் புதுக் கவிதையின் உருவம், உள்ளடக்கம், உத்தி ஆகியன ஆராயப்பெறுகின்றன.

தமிழகத்தில் தமிழ் ஈழச் செல்வாக்கின் விளைவாக மார்க்சீய அடிப்படையில் நிகழும் இலக்கிய ஆராய்ச்சி அறிமுகம் பெற்றுள்ளது. அது மிகப் பெரிய ஆய்வு நெறிமுறையாகும். அந்த அடிப்படையிலும், சுருக்கமாக, நூலாசிரியரால் தமிழ்க் கவிதைகள் திறனாயப் பெற்றுள்ளன. அதற்கு எதிர்த் திசையான தனிமனிதத்துவ நோக்கும் கவிதைப் படைப்பில் இடம் பெற்றிருப்பது நூலில் எடுத்துக்காட்டப் பெற்றுள்ளது.

தமிழர்கள் நகைச்சுவை உணர்வு குறைந்தவர்கள் என்ற ஒரு கருத்து உண்டு. புதுக் கவிதை நகைச்சுவையை வைத்து பின்னப்பட்டிருக்கும் பாங்கை நூலாசிரியர் விரிவான எடுத்துக்காட்டுகளுடன் விளக்குகின்றார்.

படிமக்கோட்பாடு, குறியீட்டியல், மீமெய்ம்மையியல், நனவோடை ஆகியன தமிழ் இலக்கியத் திறனாய்வு உலகிற்குப் புதிய வரவுகளாகும். அவற்றைப்பற்றிய கருத்தும் நூலின் இறுதியில் சுருக்கமாகத் தரப்பெற்றுள்ளது.

தமிழ் இலக்கிய மாணாக்கர்க்குத் திறனாய்வைத் தொடக்க நிலையில் அனைத்துப் பார்வையிலும் அறிமுகப்படுத்தும் நூலாகப் பாட்டுத்திறன் நூல் அமைந்துள்ளது. நூல் ஆசிரியரின் அளவிறந்த முயற்சி பாராட்டத் தக்கது.

இடம்: புதுச்சேரி
நாள்: 15–12–88

க. ப. அறவாணன்

கலியன் குரல்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

இந்நூலில் கலியனின் வாழ்வு பற்றிய உண்மைகள்,
அருளிச் செயல்கள், அவர்தம் பெரும்புலமை, பதிகங்களில்
அமைந்த நாட்டுப்புற இலக்கியக் கூறுகள் முதலியன
பக்திச்சுவையாகவும், கவிதையனுபமாகவும்
திறனாய்வு நோக்கில் வழங்கப்பெற்றுள்ளன

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939353-0-9



eBOOK ~ *மின் நூல்*




அணிந்துரை

கலியன் குரல் 1989

வழங்கியோர்:

டாக்டர் ஆறு. அழகப்பன்







பேராசிரியர், கலைமாமணி, தமிழாகரர்,
டாக்டர் ஆறு. அழகப்பன்,
தமிழியல் துறைத் தலைவர்,
முதன்மையர் இந்திய மொழிப்புலம்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

அணிந்துரை

அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சிறப்புப் பொழிவுகள் திட்டத்தின்கீழ், பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் தமிழியல் துறையில் நிகழ்த்திய மூன்று பொழிவுகள் 'கலியன் குரல்' என்ற தலைப்பின்கீழ் இந்நூலாக வெளிவருகின்றது.

பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் அறிவியல் ஆசிரியராகத் தம்பணியினைத் தொடங்கி, தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்றுப் பின்னர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றியவர். ஆழ்வார் அருந்தமிழால் ஈர்க்கப் பெற்று வித்துவான், முனைவர் பட்டங்கள் பெற்றுத் திருவேங்கடவன் பல்கலைக் கழகத் தமிழியல் துறைத் தலைவராகப் பல்லாண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்ற அறிஞர். ஆங்கிலம் மற்றும் தமிழ் நூல்களைக் கசடறக் கற்ற புலமையாளர்; தமது சிந்தனைகளை நூலாக்கும் திறம் பெற்றவர். ஓயாத உழைப்பாலும் எழுத்தாற்றலாலும் இலக்கியம் சமயம், திருத்தலப்பயணம், திறனாய்வு, வரலாறு அறிவியல், ஆராய்ச்சி, பயிற்று முறை என்று பல்வேறு துறைகளில் தமிழிலும் ஆங்கிலத்திலுமாக எண்பத்தைந்திற்கு மேற்பட்ட நூல்களைத் தமிழன்னைக்கு அளித்துச் சிறந்து விளங்குபவர்; இன்று வளர்ந்து வரும் அறிவியல் தமிழுக்கு இவர் ஒரு முன்னோடி.

டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் கடந்த இருபத்தெட்டு ஆண்டுகளாக ஆழ்வார் அருளிச் செயல்களிலும் வைணவ தத்துவங்களிலும் கொண்ட ஈடுபாட்டின் காரணத்தால் 'கலியன் குரல்' என்ற பொதுத் தலைப்பில் 'கலியனின் வாழ்வும் வழியும், அருளிச் செயல்கள் – இலக்கிய இன்பம், அருளிச் செயல்கள்–தத்துவக் கருத்து என்ற மூன்று ஆராய்ச்சிப் பொழிவு

களை நிகழ்த்தினார்கள். கலியன் என்பது திருமங்கையாழ்வாரின் திருபெயர்களில் ஒன்று. இப்பொழிவுகளின் வழி அமைந்த இந்நூலில், ஆசிரியர் கலியனின் வாழ்வு பற்றிய உண்மைகளை ஆழ்வார் பாசுரங்களிலிருந்து அகச்சான்றுகள் தந்து நிறுவியுள்ளார்; கலியனின் அருளிச் செயல்களை எடுத்துரைத்துப் பக்திச் சுவையினையும் கவிநயனுபவத்தையும் விரித்துரைத்துள்ளார். திருமங்கையாழ்வார் 'நாலுகவிப் பெருமாள்' என்று சிறப்புப் பெற்றவராதலால் அவர்தம் பெரும்புலமையினை எளிதாக விளக்கியுள்ளார். அவர் தம் பதிகங்கள் சிலவற்றில் நாட்டுபுற இலக்கியக் கூறுகள் அமைந்துள்ளதனைச் சுவைபட மொழிந்துள்ளார். இறுதிப் பொழிவில் ஆழ்வார் பாசுரத்தின் வழி அறியப் பெறும் வைணவ தத்துவக் கருத்துக்களை விரித்துள்ளார். திருமங்கையாழ்வார் மங்களா சாசனம் செய்த திருத்தலங்கள், 108 வைணவ திவ்விய தேசங்கள், பொருட் குறிப்பு ஆகியன, பின் இணைப்பாகத் தரப் பெற்றுள்ளன. சுருங்கக் கூறின் இந்நூல் நல்லதொரு ஆராய்ச்சி நூலாகும்.

இப்பொழிவுகள் நிகழக் காரணமாக இருந்த இந்திய மொழிப் புலக்குழு உறுப்பினர்களும் ஆட்சிக்குழு உறுப்பினர்களும், மாண்பமை துணைவேந்தர் பேராசிரியர் இராம. சேதுநாராயணன் அவர்களும் நன்றிக்குரியவர்கள் ஆவர். தந்தை வழி, தமிழ் மொழியை வளர்த்து வருகின்ற மாண்பமை இணைவேந்தர் டாக்டர் மு. அ. மு இராமசாமி அவர்களுக்கும் நூலாசிரியரும் துறைத்தலைவரும் தனித்த முறையில் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளார்கள்.

இப்பொழிவுகளை அச்சுக்குக் கொண்டு வரத்துணை நின்ற தமிழியல்துறை நூல் வெளியீட்டுப் பொறுப்பாளர் இணைப் பேராசிரியர் டாக்டர். வெ. பழநியப்பன் மற்றும் நூலினை விரைந்து அச்சிட்டு வெளிக் கொணர்ந்த பல்கலைக்கழக நூல் வெளியீட்டுத் துறைப் பொறுப்பாளர் வெ. இலக்குமணன் ஆகியோருக்கும் எம் நன்றி. நூலினைச் சிறப்புற அச்சிட்ட சிதம்பரம் கஜேந்திரா அச்சகத்தார் பாராட்டுகுரியவர் ஆவர்.

டாக்டர் ஆறு. அழகப்பன்
தமிழியல் துறைத் தலைவர்

நினைவுக் குமிழ்கள் - 2

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

சுயசரிதை

கால கட்டம் ,,,,,, 1941 ~ 1950 (துறையூர்)

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-936450-2-4

eBOOK ~ மின் நூல்




அணிந்துரை

நினைவுக் குமிழிகள் - 2 1989

வழங்கியோர்:

ஆ. பன்னீர்செல்வம்
துணை இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை







அணிந்துரை

ஆ. பன்னீர்செல்வம்

துணை இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை

தமிழ்நாடு அரசு

''குறளகம்''—சென்னை-600 108

பேராசிரியர் **டாக்டர். ந. சுப்பு ரெட்டியார்** அவர்களை, அவர் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் பணி யாற்றி வந்த காலத்திலிருந்தே ஓரளவுக்கு அறிவேன் என்றாலும், அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு அவர் அப்பல்கலைக் கழகப் பணியிலிருந்து ஓய்வு பெற்று சென்னைக்கு வந்த பின்னரே எனக்கு வாய்த்தது. பேராசிர்யர் அவர்கள் '**நினைவுக் குமிழிகள்**' எனும் தலைப் பில் எழுதும் தன்-வரலாற்று நூற்கோவையில் ஏற்கனவே வெளிவந்துள்ள இரு தொகுதிகளையும் (1, 3) படித்துள்ளேன். இந்நூற்கோவையின் இரண்டாம் தொகுதிக்கு நான் அணிந் துரை எழுதவேண்டும் எனப் பேராசிரியர் அவர்கள் ஒருநாள் என்னிடம் தெரிவித்தார்கள். அது எனக்கு எதிர்பாராத ஒன்றாக அமைந்தது. பேராசிரியர் அவர்கள் அவ்வாறு என்னைப் பணித்தமைக்கு அவர்கள் என்னிடம் கொண்டுள்ள பேரன்பே காரணமாகும்; அஃதன்றி வேறு எத்தகுதியினை யும் நான் பெற்றிருக்கவில்லை. அறிவிலும், அநுபவத்திலும் உயர்ந்து விளங்கும் பேராசிரியர் அவர்களுடைய நூலுக்கு நான் அணிந்துரை வழங்குவதைப் பெரும் பேறாகக் கருது கின்றேன்.

இவ்வுலகில் ஒவ்வொருவருடைய வாழ்வும் ஒவ்வொரு தன்மையில் அமைந்து கிடக்கின்றது. சூழ்நிலைகளாலும், வாழ்க்கைப் போராட்டங்களாலும் வாழ்க்கைப் போக்குகள் மாறுபடுகின்றன. 'ஏதோ வாழ்கின்றோம்' என வாழ்நாளை ஓட்டிச் செல்பவர் பலர். வாழ்க்கை வாழ்வதற்கே என வாழ்பவர்கள் சிலர். ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் ஒரு வரலாறே. தங்களுடைய வாழ்க்கை வரலாற்றை மற்றவர் கள் போற்றிக் கொள்ளும் சிறப்பினை அடையப் பெற்றவர் கள் பெரியோர்களெனப் புகழப் படுகின்றனர்.

தன்-வரலாறு எழுதுவதற்கு மிகுந்த தன்னம்பிக்கை வேண்டும். தன்னம்பிக்கையால் கூடாத செயல்கள் எவையு மில. தன்னம்பிக்கையுடையோர் மனத்திட்பமும், செயல் திறனும், அறிவுத் தெளிவும் உடையவர்களாக விளங்குதல் இயல்பேயாகும். அவ்வகையில் எழுந்துள்ள பேராசிரியர் அவர்களின் நினைவுக் குமிழிகள் படித்துப் பயன்பெறுவதற் குரியனவாகும்.

"If is not the load that breaks you down; It is the way you carry it" என ஆங்கிலத்தில் குறிப்பிடுவர். பேராசிரியர் அவர்கள் தமக்குரிய பொறுப்புகளைத் திட்ட மிட்ட முறையில் செயற்பாங்குடன் நிறைவேற்றி வருபவரா வார்கள். அதனால் வாழ்க்கையைச் சுமையாகக் கொள்ளா மல் சுவையாக்கிக் கொண்டு வாழ்ந்து வருபவர். 'நீர் வழிப் படூஉம் புணை போல'ன்றி எதிரிட்டு—எதிர் நீச்சலிட்டு —வாழ்க்கையில் வெற்றிகளை ஈட்டியவர்; சாதனைகளைப் படைத்தவர்.

இத் தொகுதியில் பேராசிரியர் அவர்கள் தம்முடைய துறையூர் வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியராகப் பொறுப்பேற்றுப் பணிபுரிந்த காலத்தில் அவர் அடைந்த இடர்ப்பாடுகளும், இன்னல்களும் 'விரிப்பின் நீளும், தொகுப்பின் மிஞ்சும்,' என்ற முறையிலேயே அமைந்துள்ளதனைக் காண்கிறோம். 'ஞானியார் மரபில்' பிறந்து வளர்ந்து மேற்கல்வி பயின்ற பேராசிரியர் அவர்கள், ஆசிரியப் பணியில் சிறந்து விளங் கியவர். மிகக் குறைந்த சம்பளத்தில் நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியராகப் பணியாற்றிய பேராசிரியர் அவர்கள் நாள் முழுவதையும் பள்ளியின் முன்னேற்றத்திற்குரிய செயற் பாடுகளிலேயே கழித்து வந்துள்ளார்கள் (பக். 141). பள்ளியைச் சொந்த நிறுவனமாகவே கருதி உழைத்தவர் (பக். 204). 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற அப்பர் பெருமானின் வாக்கிற்கு ஆளாகி பள்ளி முன்னேற்றத் திற்கு ஒல்லும் வகையெல்லாம் உழைத்துக் களிப்படைந்தவர். 'பணியே பரமன் வழிபாடு' எனக் கொண்டு வாழ்ந்தவர். 'மடி நிறையப் பொருளும், மனம் நிறைய இருளும்'படைத்த 'கஞ்சப் பிரபுக்களால்' தொடங்கப் பெற்ற புதிய பள்ளியில் பல பிரச்சினைகளையும் சமாளிக்கும் பொறுப்பு தம் தலை மீது அமைந்ததால் 'தலைமை' ஆசிரியர் எனத் தம்மை அழைத்தனரோ எனப் பேராசிரியர் அவர்கள் குறிப்பிடுவது

(பக். 194) அவர்பட்ட தொல்லைகளை நமக்குத் தெளிவாக எடுத்துக் கூறுவனவாகும்.

ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொள்பவர்கள் வெற்றி பெற வேகமாக ஓடினால் மட்டும் போதாது; ஓட்டத்தைக் காலத்தே (குறிப்பிட்ட நேரத்தில்) தொடங்க வேண்டும் எனக் கூறுவர். அவ்வடிப்படையில் பேராசிரியர் அவர்கள் முன்னேற்றங் கருதித் தாம் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தையும் காலத்தே திட்டமிட்டுத் தொடங்கியுள்ள தனை அறிகின்றோம். பொதுவாக ஆசிரியர்கள் சிறந்த நிருவாகிகளாக இருப்பதில்லை; நிருவாகிகள் சிறந்த ஆசிரியர்களாக இருப்பதில்லை. இஃது உலகியலில் நாம் காணும் நடைமுறையாகும். ஆனால் நம்முடைய பேராசிரியர் அவர்கள் சிறந்த ஆசிரியராகவும், சிறந்த நிருவாகியாகவும் விளங்குகின்றார்கள். பள்ளி ஆசிரியர்கள் நியமனம் (பக். 8-9), பள்ளிக் கணக்கு வைப்பு முறை (பக். 19-24), பள்ளிப் பணத்தை முறையாக வங்கியில் செலுத்தல் (பக். 27), மாணவர்களிடமிருந்து கட்டணம் தண்டலுக்கான ஏற்பாடு, மேலிடங்களிலிருந்து வரும் கடிதங்களுக்கு மறுமொழி அனுப்புதல் (பக். 31), வகுப்புகளுக்கு இடவசதி செய்தல் (பக். 36), பள்ளி நூலக மேம்பாடு (பக். 38) கற்பிப்பு சாதனங் கள் (Educational Aids) வாங்குதல், வகுப்புகளுக்குத் தேவை யான அறைகளை வசதி செய்தல், நான்காம் படிவம் தொடங்கத் தக்கவர் துணைகொண்டு விண்ணப்பம் தயாரித் தல் (பக் 44-45), வைரிசெட்டிப் பாளையம் குடிமைப் பயிற்சி முகாம் (பக். 244-255) ஆகியன பேராசிரியர் அவர் களின் தேர்ந்த நிருவாகத் திறனை எடுத்துக் கூறுவனவாகும்.

பேராசிரியர் அவர்களுக்குச் சிறுவயதில்பெற்றோர் இட்ட 'சுப்புரெட்டி' எனும் பெயர், உயர்நிலைத் தொடக்கப் பள்ளி யில் 'சுப்பு' என ஆகி துறையூரில் தலைமையாசிரியராகப் பணியாற்றிய காலை 'சுப்புரெட்டியார்' என மாற்றம் பெற்ற தனை அறிகின்றோம் (பக். 9-11). 'ரெட்டி' எனும் சாதிப் பின்னொட்டினை முதலில் வெட்டிக் கொண்டு பின்னர் 'ரெட்டியார்' எனும் பின்னொட்டினைப் பேராசிரியர் அவர்கள் தம் பெயருடன் ஒட்டிக் கொண்டது சாதிப்பற்றின் காரணமாக இல்லை என்பது தெளிவாகும். பேராசிரியர் அவர்கள் எக்காலத்தும் 'சாதி சமய வெறி சற்று மில்லாத' வராக இருந்து வந்துள்ளார் (பக். 154). எனவே தமிழுலகில், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, டாக்டர்.

உ.வே. சாமிநாதய்யர், திரு. வ.வே.சு. அய்யர், டாக்டர். ரா. பி. சேதுப்பிள்ளை, சித்தாந்தக் கலாநிதி ஔவை. சு. துரைச்சாமிப் பிள்ளை, நாவலர் வேங்கடசாமி நாட்டார், டாக்டர். அ. சிதம்பரநாதன் செட்டியார், பண்டிதமணி கதிரேசன் செட்டியார், திரு. கா. சு. பிள்ளை, திரு. வையாபுரிப் பிள்ளை போன்ற சாதிப் பின்னொட்டுகளுடன் கூடிய பெயர்கள் வழங்கி வருவதனைப் போன்று நம் பேராசிரியர் அவர்களுடைய பெயரும் வழங்கப் பெறுவதாயிற்று எனக் கொள்ளலாம்.

பொறுப்பான பதவிகளை வகிப்போர் இரு குற்றச் சாட்டுகளுக்கு ஆளாவதுண்டு. அவை, புகழ்மொழியை நச்சி அடிமையாதலும், பழிமொழியை நம்பிப் பகை கோடலுமாம். துறையூர் பள்ளியில் தலைமையாசிரியராகப் பொறுப் பேற்றுப் பணியாற்றிய பேராசிரியர் அவர்கள் மேற்காணும் இரு குற்றச் சாட்டுகளுக்கும் ஆளாகாமல் இருந்து வந்துள்ளது சிறப்புக் குரியதாகும். பள்ளியில் பயின்ற 'அடங்காப் பிடாரிகளை'ச் சமாளித்த விதமும் (பக். 275), மொட்டை மனுக்களுக்குத் தக்க மறுமொழி அளித்த பான்மையும் (பக். 276-278), ஆசிரியர் திரு. பிச்சுமணி அய்யர் மகனுக்கு நீதி வழங்கிய நீர்மையும் (பக். 284), பேராசிரியரின நடுவுநிலை கோடாத் தன்மைக்கும், ஏற்ற பொறுப்பின் பால் கொண்ட கடமையுணர்வுக்கும் எடுத்துக் காட்டுகளாக அமைகின்றன.

விதிக்குப் புறம்பான தன்மையில் பள்ளி நிருவாகத்துடன் பெரிதும் இணங்கி தம்முடைய சொந்த வசதிகளைப் பெருக்கிக் கொண்டு 'சிவனே' என்று பேராசிரியர் தம் வாழ்நாளைக் கழித்திருக்கலாம். ஆனால் அவ்வாறு வாழ அவர் விரும்பினாரில்லை. தம்முடைய பணி தலைமையாசிரியர்க்கென விதிமுறைகளில் வரையறுக்கப்பட்ட பணிகளுடன் முடிவடைவதாக அவர் கருதவில்லை. பள்ளியின் முன்னேற்றத்திற்காக எல்லா வகைகளிலும் பாடுபட்டுள்ளார். தரத்திலும், அளவிலும் பள்ளியை மேம்படுத்தினார். பள்ளியில் 'மாணவர் இலக்கியக் கழகம்' எனும் அமைப்பினை நிறுவி வழக்கமான கூட்டங்களை மட்டுமின்றி, பெருமக்கள் பலரையும் வரவழைத்து மாணவர்களுக்குப் பல இலக்கிருங்களையும் அறிமுகம் செய்வதை வழக்கமாகக் கொண்டியந்தார். இஃது ஒரு சாதனை என்றே கருதப்படுவதற்குரியதாகும்.

பேராசிரியர் அவர்கள் மிகுந்த நினைவாற்றல் உள்ள வர்கள் என்பதையும் இந்நூல் நமக்கு எடுத்துரைக்கின்றது. பல ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்தவற்றை, எவ்விதக் குறிப்பும் எழுதி வைத்திராத நிலையில், நிரல்பட எடுத்துக் கூறியுள்ளமை வியப்பளிப்பதாக உள்ளது. துறையூரில் தலைமையாசிரியராகப் பணியாற்றிய போது கணக்குத் தேர்வு (Account Test) எழுத அவர் மேற்கொண்ட முயற்சிகளையும், கணக்குத் தேர்விலான வினாக்கள் பற்றிய விவரங்களையும் (பக். 48, 50) அறிகின்றோம். தற்போது பணியிலுள்ளவர்களில் கூட பலர் இந்த அளவுக்குக் கணக்குத் தேர்வைப் பற்றி அறிந்திருப்பார்களா என்பது ஐயத்திற்குரியதாகும். பள்ளி 'இலக்கிய மன்றக் கூட்டத்தில்' பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துரைத்த கருத்துகளும் (பக். 184-187), திருப்பராய்த்துறையில் தவத்திரு. சித்பவாநந்த அடிகள் அத்வைதம், துவைதம், விசிட்டாத்வைதம் (பக். 207-208) பற்றிப் பேராசிரியருக்கு எடுத்துரைத்த விளக்கமும் படித்துணர்வதற்குரியன.

அன்புள்ளமும், செயல் திறனும் இணையும் போது பயன்மிகு விளைவுகள் ஏற்படும் என்பது நாமறிந்த உண்மையாகும். ஏழை மாணவர் நிலைக்கு இரங்கி காலம் தாழ்ந்த நிலையில் முன் தேதியிட்டுக் கட்டணம் பெற்றமை, அரசு விதிகளின்படிக் கட்டணச் சலுகைக்குத் தகுதியற்ற 'பரம ஏழை' மாணவர்களுக்குக் கட்டணச் சலுகை ஏற்பாடு (பக். 114), துறையூரிலும் சுற்றுப்புறச் சிற்றூர்களிலும் சாதி வேற்றுமை பாராமல் செல்வர்களை நாடி கட்டணச் சலுகைத் திட்டத்திற்கென நன்கொடை திரட்டியமை, முதல், இரண்டாவதாகத் தேறிய மாணவர்களுக்குப் பரிசுத் திட்டம் ஏற்படுத்தியமை, **'இளைஞர் அறிவுச் சுடர்'** கையெழுத்து இதழ் தொடங்கியமை, வீட்டில் இடவசதியற்ற ஏழை மாணவர்களுக்கு இரவில் படிப்பதற்காகப் பள்ளியில் மின்விளக்கு வசதியுடன் இடவசதி ஏற்பாடு செய்தமை, (பக். 120) பள்ளியில் பயிலும் மாணவர்கள் அனைவருமே தம் குழந்தைகள் எனக் கொண்டு இரவு நேரத்திலும் மாணவர் தம் ஐயங்களைப் போக்கி அவர்களை நன்கு படிக்க வைத்தமை, சாலை வசதிகளற்ற நிலையில் இடர்ப்பாடுகளுக்கிடையே தொலைவிலிருந்து வந்து பயின்ற மாணவர்களின் துயர் துடைக்க 'மாணவர் இல்லம்' நிறுவியமை, நன்கொடை திரட்டி சமையல் பாத்திரங்கள் வாங்கித் தக்க பணியாளர்களைக் கொண்டு விடுதிக்கட்டணம் திங்கள்

ஒன்றுக்கு ரூ. 10/-க்கு மேற்படாத வகையில் மாணவர்களுக்கு உணவும், உறையுளும் அளித்தமை ஆகியன பேராசிரியர் அவர்களின் அன்புள்ளத்தின் அடிப்படையில்விளைந்த அருஞ் செயல்களேயாம். மாணவர் இல்லம் உண்மையாகவே விடுதி போலில்லாமல் 'இல்லம்' போன்றே இயங்கி வந்துள்ள தனை அறிகின்றோம் (பக். 169. 173).

உலகில் சிலர் எவரோடும் கலந்து பழகாமல் தனியராக வாழ்ந்து வருவதனைக் காண்கிறோம். அவர்கள் இணைப்புப் பாலங்களைக் கட்டிக் கொள்ளாமல் தங்களைச் சுற்றித் தடுப்புச் சுவர்களைக் கட்டிக் கொள்வதே அதற்குக் காரண மாகும். பேராசிரியர் அவர்கள் துறையூரில் பணியாற்றிய போது சுற்றுப்புற ஊர்களிலுள்ள மக்களுடன் நன்கு பழகியவர். திருமணம், இறப்பு நிகழ்ச்சிகளில் தவறாது கலந்து கொள்வார். சாதி, சமய வேற்றுமையின்றி அனை வரிடமும் பழகினார். இதனால் பள்ளி வளர்ச்சிக்கும், மாணவர் நலனுக்கும் பொது மக்களின் ஒத்துழைப்பினை அவரால் பெற முடிந்தது. (பக். 18). உள்ளூரில் செல்வாக்கு வாய்ந்த பெருமக்கள் உதவியுடன் பள்ளியில் இலக்கியச் சொற்பொழிவுகளை நடத்தினார். திரு. நடேச முதலியார், திரு. வீ. உலக ஊழியனார், திரு. பு. ரா. புருடோத்தம நாயுடு, திரு. சாம்பசிவ ரெட்டியார், திரு. சி. இலக்குவனார், பேரறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன், தவத்திரு. சித்பவாநந்த அடிகள், டாக்டர் T. S. S. இராசன், பன்மொழிப் புலவர் வே. வேங்கடராஜுலு ரெட்டியார், டாக்டர். மு.வ., திரு. ஏ.கே. செட்டியார் முதலிய பெரு மக்களுடன் தொடர்பு கொண்டு அவர்களைப் பள்ளிக்கு அழைத்துவந்து சொற்பொழிவுகளை நிகழ்த்தவும் செய்தார். கற்றுத்துறை போய பெருமக்களிடம் தொடர்பு கொண்டு தமிழ் இலக்கிய, இலக்கணங்களைப் பேராசிரியர் தெளிவாகக் கற்றறிந்துள்ளார்கள். அந்நாளில் (1941-50) திருச்சி மாவட் டத்தில் தமிழ்படித்த—வித்துவான் பட்டம் பெற்ற-தலைமை யாசிரியர் பேராசிரியர் ஒருவரே எனும் சிறப்பையும் பெற் றுள்ளார்.

தமிழ் M. A. தேர்வு எழுதுவதற்கு "நந்திமயமாக" அமைந்த சென்னைப் பல்கலைக் கழக விதிகளைத் தொடர்ந்து போராடி, தொடர்புடையவர்களைச் சந்தித்து நியாயமான உதவிகளை நாடி இறுதியில் M.A. தேர்வு எழுது வதற்குப் பேராசிரியர் அனுமதி பெற்றதானது 'விதி'யை

மதியால் வெல்லலாம் என்பதனை விளக்குகின்றது (பக். 67-68). மேலும் எந்த ஒரு விதியும் அது பொது நலனுக்கு உறுதுணை புரியும் தன்மையை வைத்தே மதிப்பிடப் பட வேண்டும் என்பதனையும் இந்நிகழ்ச்சி எடுத்துக் கூறுகின்றது.

உலகில் ஒருவர் நல்லவராக இருந்தால் மட்டும் போதாது;வல்லவராகவும்-உலகியல் புரிந்தவராகவும்-இருக்க வேண்டுவதனைப் பேராசிரியர் அவர்களின் வாழ்க்கைநிகழ்ச்சி கள் எடுத்துக் கூறுகின்றன. சீதனப் பணத்தின் நிலைபற்றிப் பேராசிரியர் கொண்ட கருத்தும் (பக். 96), நாமக்கல் நீதி மன்றத்தில் குடும்ப வழக்குத் தொடர்பாக அவர் மேற் கொண்ட செயற்பாடுகளும்,பேராசிரியரின் உலகியல் அறிவை யும், வினைத்திட்பத்தையும் விளக்குவனவாகும்.

சிறுதிறப்பட்ட நேர்வுகளில் கூட அநீதியை எதிர்த்துக் குரல் கொடுக்க மனமில்லாமை, அடுத்தவர்கள் மனம் புண் படக்கூடாது என்ற எண்ணம் அல்லது இடையூறு ஏற்படும் என்ற அச்சம் ஆகியன மெல்ல மெல்ல ஒருவருடைய நேர்மையுணர்வினை அழித்து அதன்மூலம் நம்முடைய சமுதாயத்தையே பொய்யர்கள் நிறைந்த கூட்டமாக மாற்றி வரும் நிலைமையினைக் காண்கின்றோம். ஆனால் பேராசிரியர் அவர்கள் தம் சொந்த எண்ணத்தில் எழுபவை பெரும்பாலும் சரியாக இருக்கும் (பக். 54) என்பதில் நம்பிக்கையுடையவர். துணிவையே துணையாகக் கொண் டவர். மாவட்டக் கல்வி அதிகாரியின் எண்ணப்படி பள்ளிக்கு அநுபவம் மிக்க ஒருவரைத் தலைமையாசிரியராகப் போட வேண்டுமெனத் தாளாளர் தெரிவித்ததற்குப் பேராசிரியர் அஞ்சாமல் தம் கருத்தினை உறுதியுடன் எடுத்துக் கூறி யுள்ளார் (பக். 57). பேராசிரியர் தமக்குச் சரியெனப் பட்டதை அஞ்சாமல் எடுத்துரைக்கும் இயல்பினர்.

தமிழ் மொழி வளர்ச்சி குறித்தும், தமிழ்க்கலைச் சொல் லாக்கம் குறித்தும் பேராசிரியர் குறிப்பிட்டுள்ள கருத்துகள் 'பழமைக்கும் பழமையான தமிழ் புதுமைக்கும் புதுமையாய் வளர்ந்தோங்க' வகைசெய்யும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள சில தமிழாக்கங்கள் வழக்கிலுள்ளவற்றுக்குச் சற்று முரண்படுமாறு உள்ளன. (எ.கா.) Play ground (ஆடுகளம்) பக். 166); Public Service Commission (பொதுப் பணி ஆணையம்) (பக். 60); Personal Assistant (தனி அலுவலர்) (பக். 107). நூலில் ஆங்காங்கே

சில எழுத்துப் பிழைகளும் உள. (எ.கா.) 10 × 2400 ச.கெ. (பக். 121); இருவர்களையும் (பக். 347) எழுத்துப் பிழைகள் அடுத்த பதிப்பில் திருத்தப் பெறுவதற்குரியன. திருத்தலப் பயணம் பற்றிய பகுதி (பக். 293-362) சற்று நீண்டுவிட்டதோ என்று தோன்றுகின்றது.

தமிழ்நாட்டுப் பள்ளிகளில் அமைந்த இலவச நண்பகல் உணவுத்திட்டம் (பக். 117-118) முதன் முதலில் எப்போது தொடங்கப் பெற்றது என்பது குறித்துச் சில ஆண்டுகளுக்கு முன்னர் கருத்து வேறுபாடுகள் எழுந்தன. இத்திட்டம் முதன் முதலாக சென்னை மாநகர் மேயராக விளங்கிய நீதிக் கட்சியைச் சார்ந்த திரு. தியாகராயர் அவர்களால் தொடங்கப் பெற்றது என்று தெரிவிக்கப் பட்டுள்ள கருத்தும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

பேராசிரியர் அவர்கள் பல்வேறு பண்பு நலன்களைக் கொண்டுள்ளதனை அறிகின்றோம். இருப்பினும் விழுப்பம் தரும் ஒழுக்கத்தினை—தனி வாழ்க்கை ஒழுக்கத்தை (morality)—உயிரினும் உயர்வாக அவர் போற்றி வருவதனையே அவரிடம் அமைந்த சீரிய பண்பு நலனாகக் கூறலாம். பொருளாசையையும், பெண்ணாசையையும் ஒருவர் சமாளிக்கக் கூடுமானால் அவர் மனத் தூய்மையுடன் வாழலாம் என்பதில் நம்பிக்கை கொண்டவர் பேராசிரியர் (பக். 28). அண்மையில் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்குப் (Indian Express dt. 18-11-89) பேட்டியளித்த அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர். வா. செ. குழந்தைசாமி அவர்கள் நன்னெறி, ஒழுக்கம் (moral and ethical plane) பற்றிய தம்முடைய கொள்கையைக் குறிப்பிடும் போது "What I cannot achieve in Public I shall not 'do in Private' எனக் குறிப்பிட்டுள்ளார்கள். நம் பேராசிரியர் அவர்கள் பொதுவாழ்க்கையில்—அலுவல் துறையில்—சீரிய நெறிகளைப் பின்பற்றியதன் காரணமாகத்தான் தனி வாழ்க்கையிலும் (Private life) அவர் சிறப்பான வெற்றிகளைப் பெற்றுள்ளார் எனலாம். எத்தனை ஆண்டு அநுபவம் பெற்றிருப்பினும் மேற்கொண்ட பணியில் உள்ளத் தூய்மையுடன் ஈடுபடாவிடால் எதனையும் சாதிக்க இயலாது என்பதனை உளங்கொண்டவர் பேராசிரியர் அவர்கள். 'வக்கற்றவனுக்கு வாத்தி தொழில்' என்பது உலக மொழியாயினும், 'அன்புடைய மனைவி இறுதிவரை கணவனே தெய்வம் என்று வாழ்வதைப் போன்று' பேராசிரியர் அவர்

களும் தாம் மேற்கொண்ட பணியைத் தெய்வப் பணியாகக் கருதி ஓய்வுபெறும் வரையில் அதே ஆசிரியப் பணியில் ஈடுபட்டிருந்தார். குறைந்த சம்பளத்திலும், இடர்ப்பாடுகள் நிறைந்த நிலையிலும் துறையூர்ப் பள்ளியில் அவர் தொடர்ந்து தலைமையாசிரியராகப் பணியாற்றியதற்கு அவர் பணியில் கொண்டிருந்த மன நிறைவுதான் (Job satisfaction) காரணமாகும். இத்தகைய பணியிலான மன நிறைவு யாவருக்கும் வாய்ப்பதில்லை. அதிகாரங்களோ, உயர்ந்த சம்பளமோ, வேறு வகையிலான ஆதாயங்களோ உள்ளபடியான மன நிறைவினை அளிப்பதில்லை. அவை யாவும் வெளித் தோற்றங்களே. இதனை அறிந்து வாழ்வோர் மிகச்சிலரே. தன் முயற்சி விளம்பரங்கள், வெற்றி ஆரவாரங்கள், எனச் செயல் புரிந்தேனும் தான் முந்தியிருப்பதற்கான ஏற்பாடுகள் போன்றவற்றில் முனைந்து 'உள்ளமும் வாக்கும் புளியம் பழமும் ஓடும் போல' வாழ்வார் தொகை பெருகி வரும் இந்நாளில், பேராசிரியர் அவர்கள் அமைதியான முறையில்—ஆரவாரமற்ற தன்மையில் மறைந்த டாக்டர். மு.வ. அவர்களைப் போன்று—எழுத்துப் பணிமூலம் அருந்தொண்டாற்றி வருவது சிறப்புக்குரியதாகும்.

பேராசிரியர் அவர்கள் நல்ல உடல் நலத்துடன் வாழ்ந்து வர என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்தம் அறிவுத்திறனும், அநுபவமும இன்றைய தலைமுறையினர்க்கு ஏற்றவாறு பயன்பட அவர்கள் மேலும் சீரிய நூல்களை வடித்துத் தர வேண்டும் என்ற விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

''குறளகம்'' **ஆ. பன்னீர்செல்வம்**
சென்னை-600 108.
31—12—1989

நினைவுக் குமிழிகள் - 3

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

சுயசரிதை

கால கட்டம் ,,,,,, 1950 ~ 1960 (காரைக்குடி)

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-936450-3-1

eBOOK ~ மின் நூல்




அணிந்துரை

நினைவுக் குமிழிகள் - 3 1989

வழங்கியோர்:

டாக்டர் ச.மெய்யப்பன்
தமிழ்த் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்







அணிந்துரை

(டாக்டர் ச. மெய்யப்பன்,
தமிழ்த்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)

தமிழில் திரு. வி.க. அவர்களின் வாழ்க்கைக் குறிப்பும் உ. வே. சாமிநாத ஐயரின் வாழ்க்கை வரலாறும் வாழ்க்கை வரலாற்று இலக்கியத்தில் சிறப்பிடம் பெறுவன. திருச்சி T.S.S.ராஜன் அவர்கள் எழுதிய 'நினைவலைகள்' குறிப்பிடத்தக்கது.

பல்லாயிரம் சிறுகதைகளும், ஆயிரக்கணக்கான புதினங்களும் மலிந்துள்ள தமிழில் வாழ்க்கை வரலாறுகள் விரல்விட்டு எண்ணத்தக்க அளவிலேயே எழுதப் பெற்றுள்ளன. நீண்ட வரலாறு உள்ள நெடிய தமிழில் பல்வகை இலக்கியவடிவங்கள் பெருகியுள்ளன. தற்புகழ்தல் குற்றம் என்று கருதித் தமிழ்ப் பெருமக்களும், தமிழறிஞர் களும் தங்கள் வரலாறுகளை எழுதாது விட்டுவிட்டனர். இந்தத் தலைமுறையில் கவியரசு கண்ணதாசன் அவர்களின் 'வனவாசமும்,' கலைஞரின் 'நெஞ்சுக்கு நீதியும்,' ஜெயகாந்தனின் ஓர் இலக்கியவாதியின் அரசியல் அநுபவங்கள் ஆகிய மூன்றும் வாழ்க்கை வரலாற்றிலக் கியங்களில் மும்மணிகளாகத் திகழ்வன.

கல்வியாளர் சுந்தரவடிவேலு அவர்கள் ஏறத்தாழ மூவாயிரம் பக்கங்களில் எழுதிய 'நினைவலைகள்' குறிப்பிடத்தக்க வாழ்க்கை வரலாறு ஆகும். மேலே குறிப்பிட்ட வாழ்க்கை வரலாறுகள் அனைத்தும் தமிழ்

நாட்டு வரலாற்றில் ஒரு நூற்றாண்டுக் காலத்தினுடைய நிகழ்ச்சிகளை, உணர்வுகளை, போக்குகளை, அலைகளைப் பதிவு செய்துள்ளன. வாழையடி வாழை என வருகிற மரபில் வந்துதித்த அறிஞர் சுப்புரெட்டியார், தாம் வாழ்க்கையில் கண்டவற்றை, கேட்டவற்றை, கற்றவைகளை, உணர்ந்தவைகளை நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து எழுதி மகிழ்கிறார்.

டாக்டர் சுப்புரெட்டியார் அவர்கள் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியராக வாழ்வைத் தொடங்கிப் படிப்படியாகத் தமிழ்த்துறைத் தலைவராக விளங்கிப் பின்பு கலைக்களஞ்சியத் தலைமைப் பதிப்பாசிரியராக உயர்ந்த செம்மல். அரை நூற்றாண்டுக் காலமாகக் கல்வி உலகில் சிறந்து வருபவர்கள். பல்துறைப் பயிற்சி மிக்கவர்கள். பல நிலைகளில் பதவி ஏற்றுச் சிறந்தவர்கள். எதனையும் ஆழ்ந்து கற்பவர்கள். எளிதாகக் கற்பிப்பவர்கள். கல்வி இயலில் தனிநோக்குச் செலுத்துபவர்கள். இவர்தம் படைப்புகளின் பயனாக முகிழ்த்த நூல்கள் பல. எதனையும் விரிவாகவும், விளக்கமாகவும் எழுதுபவர்கள். இவர்கள் படைத்த நூல்கள் அனைத்தும் அளவாலும் பொருளாலும் பெரியவை.

பெரு நூல்கள் எழுதிப்பழகிய டாக்டர் சுப்புரெட்டியார் தம் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளில் பெரும்பாலானவற்றைத் தொகுத்து ''நினைவுக் குமிழிகள்'' என்ற தலைப்பில் நூலாக்கியுள்ளார்கள். இந்நூலில் ஆசிரியரின் வாழ்வில் சிறந்த பகுதியாகிய காரைக்குடி வாழ்வு மலரும் நினைவுகளாகின்றது. காரைக்குடி கவின்மிகு நகர். கற்றோரைப் போற்றும் நகர். கம்பனுக்கு விழா எடுக்கும் நகர். செல்வர்கள் பலர் சிறப்போடு வாழும் திருநகர். தமிழ் விழாக்களும் திருவிழாக்களும் மலிந்த மாநகர். சொ. முருகப்பாவும், இராய. சொக்கலிங்கமும், கம்பன் அடிப்பொடி கணேசனும், கண்ணதாசனும் வாழ்ந்த நகர்

பல பத்திரிகை ஆசிரியர்களை உருவாக்கிய நகர். நாடெங்கும் நற்பணிகள் பல செய்யும் நகரத்தார்கள் வாழும் நன்னகர்.

இத்தகு திருநகரில் தாம் வாழ்ந்த காலங்களை எண்ணி நினைவலைகளைப் பதிவு செய்கிறார் அறிஞர் சுப்புரெட்டியார். ஒவ்வொரு நினைவுக் குமிழியிலும் ஒரு பெரிய அல்லது ஒரு சிறிய நிகழ்ச்சி அமைந்திருக்கும். ரெட்டியாரின் கைவண்ணத்தால் அவை உயிரோவியம் ஆகின்றன. காரைக்குடியின் கதையினை, பெருமக்கள் வாழ்வினை, கல்வி நிலையங்களின் வளர்ச்சியினை, சான்றோர்களின் சால்புகளை, அறிஞர்களின் அறிவுரைகளை கவிதை அழகுடன் கல்வெட்டுகளாக்கித் தருகிறார்கள். அவர்கள் கண்ட காட்சி ஒன்றா? இரண்டா? ஓராயிரமல்லவா! மனிதர்களின் சாதனைகள் எத்தனை எத்தனையோ? தனித்தனி வளையங்களாக அவை வட்ட மிடுகின்றன. ஓர் ஆசிரியர் நல்லாசிரியர் பேராசிரியர் உருவான கதையை பொன் இழைச் சரடாக இந்நூலுள் இழையோடுகிறது.

பத்துப் பக்கம் கூட எழுதமுடியாத 'பெருமக்கள்' வாழும் இந்நாளில் பேராசிரியர் சுப்புரெட்டியார் அவர்கள் பல்லாயிரம் பக்கம் எழுதிச் சாதனை செய்தவர் ஆகிறார். பழைய நிகழ்ச்சிகளை அசைபோடாமல் அந்நிகழ்ச்சிகள் இன்றுவரை வளர்ந்துள்ள பாங்கினையும் படம் பிடித்துக் காட்டுகிறார். திருப்பதியில் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் இவருடன் பேராசிரியர் பதவிக்குப் போட்டியிட்ட குமாரசாமி ராசா அண்மையில் ஆகஸ்ட்-89 காணாமல் போன கதையைக்கூட கலையழகுடன் விவரிக்கும் திறம் வியப்பிற்குரியது. திரும்பிப்பார்க்கிறார், நிகழ்ச்சிகளை. நெஞ்சில் நிறுத்துகிறார். ஓவியங்களாக வரைந்து நம் மனக்கண் முன் உலவ விடுகிறார். இது ரெட்டியாரின் நினைவாற்றலையும் எடுத்துச் சொல்லும் திறமையினையும் எழுத்தாற்றலையும் புலப்படுத்துகிறது.

பல நிகழ்ச்சிகளைப் பின்னினைந்து பெருமைப்படுகிறார். சிலரின் பிரிவுக்கு இரங்கி ஏங்குகிறார். ஒவ்வொரு குமிழியும் ஒரு வகையில் நம் உள்ளத்தில் ஒரு அசைவினை உருவாக்குகிறது. அவர்காலத்தில் வாழ்ந்த அறிஞர்களைப் பற்றிய அடுக்கடுக்கான செய்திகள் பெருமக்களைப்பற்றிய மதிப்பீடுகள் நம் நெஞ்சை விட்டு என்றும் நீங்காதவை. டாக்டர் ரெட்டியாரின் உயர்கல்விப் பணிக்குப் 'பிள்ளையார் சுழி' போட்ட சா. க. வைப்பற்றிய சில நினைவுகள்:

'காரைக்குடியில் மிகவும் பிரபலமானவர் சா. கணேசன். காந்திவழி நிற்பவர்; நாட்டுப் பற்று மிக்கவர். பலமுறை சிறைக்குச் சென்றவர் (பக்-166)......நாற்பது ஆண்டுகட்குமேல் கம்பன்புகழ் பாடிக் கன்னித்தமிழ் வளர்த்தவர். காரைக்குடிக் கம்பன் திருநாள் இவர்தம் திருத்தொண்டு. கம்பனுக்கு ஒரு மணி மண்டபமும் தமிழன்னைக்கு ஒரு திருக் கோயிலும் கட்டி முடித்த திருத்தொண்டர். கம்பன் மேல் அளவற்ற ஈடுபாடுகொண்டு 'கம்பன் அடிப் பொடி' ஆனவர் (பக்-167)...... என் எல்லா நூல் களின் கைப்படிகளிலும் இவர்தம் கைவண்ணத்தின் பங்கு உண்டு. பெரும் பகுதிகளைப் படித்துத் திருத்தங்களைக் கூறிச் செம்மைப்படுத்தியவர் (பக் 167)... நூல்களைப் பொறுத்தமட்டிலும் இவர்தம் திருக்கை இராசியான கை என்பது என்கணிப்பு.

ஊரில் நடைபெறும் எல்லாத் திருவிழாக்களிலும் இவர் பங்கு உண்டு. சுவாமியின் திருமேனியை வாகனங்களில் ஏற்றி அலங்காரம் செய்வதில் அருகி லிருந்தே ஒவ்வொரு செயலையும் கவனித்துக் கலை யுணர்ச்சியுடன் குறிப்புகளைத் தந்து செம்மைப் படுத்துபவர். சீவகனை நந்தட்டன் முதலிய எட்டு நண்பர்கள் சூழ்ந்து கொண்டிருப்பதுபோல் பல தன வைசிய இளைஞர்களும் பிற வகுப்பு இளைஞர்களும்

இவரைச் சூழ்ந்தவண்ணம் இருப்பர்; ஏவல் கேட்டு நிற்பர். இவர்களும் இவர்களைப் போன்ற எண்ணற்றவர்களும் இவரை வீர வழிபாடுசெய்வர் (பக் 169)

திரு.சா. கணேசன்பற்றிய மதிப்பீட்டில் ரெட்டியார் தரும் உவமைகளும் கருத்துக்களும் இந்நூலுக்கு வலிமை தருகின்றன. பொழுதினை அவமே போக்காது கல்வித் தவம் செய்த ரெட்டியார் வரலாறு என்போல்வார்க்கு வழிகாட்டி. நல்வாழ்வு வாழத் துடிக்கும் இளைஞர்களுக்குக் கலங்கரை விளக்கம். பொதுவாக எல்லோரும் இந்நூலைப்படிக்க வேண்டும். சிறப்பாக ஆசிரியர் ஒவ்வொருவரும் கற்க வேண்டும். ஒரு மனிதனின் எண்ணமும் செயலும் எவ்வாறு அவரை வளர்க்கின்றன, உயர்த்துகின்றன என்பதனை அறிய விரும்பும் அனைவரும் கட்டாயம் படிக்க வேண்டிய நூல். ரெட்டியார் அவர்களை முப்பது ஆண்டுகளாக நான் நன்கறிவேன். மூன்று ஆண்டுகட்டுமுன் நினைவுக் குமிழிகள் பற்றிய திட்டத்தை விளக்கினார்கள். இன்று இந்நன்னூலுக்கு அணிந்துரை அளிக்கும் பேறு பெற்றது குறித்துப் பெருமைப்படுகிறேன். வாழ்க்கை வரலாறு படிப்பது எனக்கு விருப்பமான செயல். இதனைப் பலமுறை படித்தேன். ரெட்டியாருக்காக ஒருமுறை, காரைக்குடியின் கதைக்காக ஒருமுறை, நாடறிந்த பெருமக்கள் பலரை உயிரோவியமாக்கியதை கண்டுகளிக்க ஒருமுறை, எங்கள் பகுதி மக்களின் வாழ்வும் வளமும் வரலாறும் சுவையாகக் கூறப்பெறுதலின் அதற்காக மீண்டும் ஒருமுறை, சமகால வரலாற்றின் சாறு பிழிந்து

தருவதால் இந்நூலைப் பன்முறை படித்து மகிழ்ந்தேன்; திளைத்தேன்.

ரெட்டியார் அவர்கள் நிரம்பப் படிப்பார்கள். நிரம்பப் பேசுவார்கள். நிரம்ப எழுதுவார்கள். இது அவர்கள் இயல்பு. மூளைச் சுறுசுறுப்பும், உடல் சுறுசுறுப்பும் ஒருங்கே வாய்ந்தவர்கள். எத்தனையும் சிரத்தையுடன் உவந்து செய்வார்கள். அவர் எழுதிய நினைவுகளை நினைப்போம். சிந்திப்போம். போற்றுவோம். மகிழ்வோம்.

சிதம்பரம்
28-11-89

ச. மெய்யப்பன்

மாணிக்கவாசகர்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

முக்திநெறியின் அருமையும், பக்திநெறியின் எளிமையும்
வாசகர் வாக்கில் விளங்கும்
வண்ணம் உண்மையை உணர்ந்து
தெளிவு செய்யும் பாங்கினை
மணிவாசகப் பெருமான் வாயிலாக
துய்த்துணரும் நூல் இது

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

ISBN: 978-81-938927-6-3



eBOOK ~ மின் நூல்



அணிந்துரை


மாணிக்கவாசகர் 1989

வழங்கியோர்:

டாக்டர் பொன்.சௌரிராசன்
தமிழ்த்துறைத்தலைவர்
திருவேங்கடவன் பல்கலைக்கழகம், திருப்பதி







அணிந்துரை

[டாக்டர் பொன். சௌரிராசன் பேராசிரியர்—துறைத் தலைவர், திருவேங்கடவன் பல்கலைக்கழகம், திருப்பதி]

கவிதை ஓட்டத்தைக் களிற்று நடை, பரிநடை (கஜகதி, துரக கதி) என்றெல்லாம் குறிப்பிட்டு வாய்விட்டுப் படித்து மனக்கண்ணில் கண்டு சுவைஞர்கள் மகிழ்வர். "ஆடு கொடிப் படை சாடி அறத்தவரே ஆள" என்னும் கம்பர்தம் பாடல் பரிநடையில் (துரக கதியில்) அமைந்துள்ளது என்று குறிப்பிட்டு அதற்கேற்ப மொழிநடையில் பாடி இன்புறுவர்.

இவ்வாறு ஒலி நயத்திற்குக் கவிதை உகந்த இந்தக் களிற்றுநடை, பரிநடை முதலியன உரைநடையில் இன்னொரு வகையில் அமைந்து அழகு செய்வதைக் காணலாம்.

பூனைக்கு ஒரு பொந்து போதும்; பூனை நடை பதுங்கு நடை. யானைக்குப் பெரிய தோப்பு வேண்டும்: அது நடையில் நிறைவும் பெருமிதமும் கொண்டு விளங்கும். அப்படித் தான் பேராசிரியர் டாக்டர். ந. சுப்புரெட்டியார் அவர்களது நடை எப்பொழுதுமே 'கோலஞ்செய் துங்கக் களிற்றின்' நடையாக அமைதலைக் காணலாம்.

மாணிக்கவாசகர் நூலின் தொடக்கமும் வளர்ச்சியும் இப்படித்தான் பெருமிதத்தோடும் மிகுந்த அநுபவத் துடனும் அமைந்து விளங்குவதைக் காணலாம்.

"மதுரையின் புகழுக்குத் தமிழ்ச்சங்கமும், மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலும்தான் முதற்காரணம் என்பதை நாம் அறிவோம். மீனாட்சி கோயிலின் மிகப் பெரிய வானளாவ நிற்கும் ஒன்பது கோபுரங்களும், அவற்றின்மீது புராணக் கதைகளையெல்லாம் விளக்கும்

பாங்கில் கொத்துக் கொத்தான அழகிய சிற்ப வடிவங்களும், கோயிலுக்கு உள்ளே அமைந்த உறுதியான கற்றூண்களும் அவற்றில் கைபுனைந்தியற்றிய அற்புதமான சிற்ப வடிவங் களும் பண்டைத்தமிழரின் கலைச் சிறப்பையும் நாகரிக முதிர்ச்சியையும் பறைசாற்றிக் கொண்டுள்ளன.'' என்ற பகுதி இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. இவருடைய நடையில் தத்துவம் தாண்டவமாடும்; அறிவியல் பல அழகு செய்யும்.

பிறப்பால் பேராசிரியர் ரெட்டியார் சைவர்; வளர்ப்பா லும் சைவர். வாழ்வால் அனைத்தும் கடந்த அனைவரை யும் அன்பால் பிணைக்கும் அருளாளர். ''முக்தி நெறியே அறியாத'' என்னும் மணிவாசகர் பாடலை ஆசிரியர் நெஞ்சம் அசை போடுகின்றது. முக்திநெறி, பக்திநெறி இரண்டும் அவர் சிந்தனையில் இடம்பெறுகின்றன. முக்தி நெறி—இது சரியை, கிரியை யோக, ஞானங்களால் முதிர்ந்த அறிவுடைய பெருமக்கள் மட்டுமே அறிந்து கடைப்பிடித்தற் குரிய அருமையுடையது. பக்திநெறி அப்படி அன்று. பேரன்பின் முதிர்ச்சியே பக்தி. இஃது உலக மக்கள் அனைவரும் அன்பினால் பின்பற்றுதற்குரிய எளிமை வாய்ந்த வழி. முக்திநெறியின் அருமையும், பக்திநெறியின் எளிமையும் வாசகர் வாக்கில் விளங்கும் வண்ணம் உண்மையை உணர்ந்து தெளிவு செய்யும்போதே ஆசிரியரின் நெஞ்சம் ஆழங்கால் பட்டு வைணவ நெறியின் மாட்சியை யும் கண்டு கற்பவர்க்கு நன்கு புலனாக்குகின்றது.

மாணிக்கவாசகர்தம் பிறப்பையும், வளர்ப்பையும் இன்று எழுதுகின்ற ஆசிரியர் என்றோ தாம் சென்று கண்ட திருவாதவூர்ச் சூழலை நெஞ்சில் நிறுத்தி நமக்கும் நினைவூட்டுகின்றார். அந்தப் பகுதியில் தொன்மையியல் கூறுகள் அமைந்து விளங்கக் காணலாம்.

''உழவுத் தொழிலே மக்களின் வாழ்க்கைத் தொழில். இந்த ஊரிலுள்ள ஏரியின் மதகின்மீது உள்ள ஒரு சிலை நம்

மனத்தைக் கவர்கின்றது. இச்சிலை மனித முகமும், சிங்க உடலும் கொண்டது. இதன் சிற்ப அழகே கண்ணைக் கவரும் பான்மையது. இது 'புருஷா மிருகம்' என்ற பெயரால் வழங்குகின்றது. இஃது ஏரி நீரைத் தூய்மையாக்கும் தெய்வம் என்றும், ஊரைக் காக்கும் தெய்வம் என்றும், இதனால் ஆண்டுதோறும் மகாசிவராத்திரியன்று ஒரு திருவிழா நடைபெறுகின்றது என்றும் சிலர் மூலம் கேள்விப்படுகின்றேன். இதன் அருகிலுள்ள பிடாரிக் கோயில் ஊர்ப் பெரு மக்களுக்குப் பத்தியின் இருப்பிடமாகத் திகழ்கின்றது. இத் திருக்கோயிலின் நித்திய கருமங்களில் ஏதேனும் ஒன்று எக் காரணத்தினால் தவறிவிட்டாலும் ஏரி வறண்டு மழை குன்றி வேளாண்மைக்குக் குந்தகமாய் விடும் என்று இன்றும் மக்கள் நம்புகின்றனர்,'' என்பதில் இவற்றைக் காணலாம்.

பேராசிரியர் சுப்புரெட்டியார் பிறவியிலேயே ஓர் ஆராய்ச்சி யாளர். எந்தச் செய்தியையும் மேல்மட்டமாகக் கூறி யாரும் அவரிடமிருந்து தப்பமுடியாது. என்ன அது, எப்படியாயிற்று அது, எதற்கு ஆயிற்று அது, யாரால் ஆயிற்று அது, அதனால் விளையும் நன்மை தீமை என்ன என்று இப்படியெல்லாம் துருவித் துருவிக் கேட்பது அவரது இயல்பு. தாம் காணுகின்ற காட்சிகளையும், கற்கின்ற நூல்களையும் அவ்வாறு ஆய்ந்து, ஆய்ந்து உண்மை கண்டு அறிவுறுத்துதலும் இவருக்கு இயல்பு.

'திருத்தில்லையில் அருளிச் செய்த' பகுதியில் இவர்தம் ஆராய்ச்சி ஆழ்ந்தும், அகன்றும் செல்லுதலை நன்கு காணலாம். இப்படித்தான் மணிவாசகம் என்ற தொடர் அமைந்ததற்கு (பக்-26, 27, 28) ஆசிரியர் காட்டும் அகப்புறச் சான்றுகளும் ஆகும்.

இடையிடையே மணிவாசகப் பெருமானுக்கும் தில்லைக் கூத்தனுக்கும் மானசீகமாக நிகழ்ந்த பேச்சினை நேர்முக நடையில் சிறுகதை போக்கில் ஆங்காங்கே ஆசிரியர் தந்து செல்வது பூஞ்சோலையில் நடைபயில்வது போலக் கற்பவர் நெஞ்சம் எளிதில் நூலில் உலவ இடந்தருகின்றது.

'எல்லாப் பொருளும் இதன்பால் உள' எனத் திருவள்ளுவர்தம் திருக்குறளை உலகம் போற்றி உரைக்கும். பேராசிரியர் சுப்புரெட்டியார் அவர்களும் மண்ணுலகத்திலும்—விண்ணுலகத்திலுமுள்ள எல்லாச் சிந்தனைகளையும் தமிழில் தந்துள்ளார்கள். அவர்தம் சிந்தனைகள் 'மண்ணில் நல்ல வண்ணம் வாழ'வகை செய்வதோடு விண்ணிலும் ஒரு மச்சுவீடு கட்டிக்கொள்ளத் துணை செய்யவல்லன.

பல்வேறு பொருள்பற்றி பற்பல வகைப்பாடுகளில் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் நூல் பல எழுதினாலும் இறையியல் பற்றிப் பயண நூல் போக்கில் எழுதுகின்ற வகையில் அளவாலும், பொருளாலும் அதிகம் எழுதி இன்று முன்னணியில் இருப்பவர் ஆவர். இந்த வகையில் சாகித்திய அகதெமி இவரை நன்கு நினைவு கூர்தல் வேண்டும்.

மாணிக்கவாசகம் நெஞ்சுருக்கும் நீர்மையது; உண்மை தான். ஆனால், அதில் பொதிந்துள்ள சைவசித்தாந்தச் சிந்தனைகள் அறிந்து கொள்வதற்கு மிக அருமையானவை. மாணிக்கவாசகர் தம் அருள்மொழியும் சித்தாந்தக் கோட்டைக்குள் பயணம் செய்ய நம்மை மிக எளிதாக அழைத்துக் கொண்டு போகின்றார் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள். தொடக்கத்தையே பாருங்களேன்.

"தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி!

என்று மாணிக்கவாசகர் போற்றும் பழம்பதியாகிய பாண்டி நாட்டில் வைகையாற்றங்கரையிலுள்ள திருவாதவூர் என்பது ஒரு சிற்றூர். மதுரைக்குக் கிழக்கே சுமார் 12கல் தொலைவிலுள்ளது; பேருந்து வசதியுண்டு. இன்றளவும் சாலை நன்கு சீர்படவில்லை. 1979ஆம் ஆண்டு மே மாதம் கொடைக்கானலில் 10 நாள் என் மனைவியுடன் தங்கி மதுரைக்கு வந்தேன். மங்கம்மாள் சத்திரத்தில் இடம் கிடைக்காததால் 'காலேஜ் அவுஸ்' என்ற விடுதியில் இருவரும் தங்கினோம்.

வந்த மறுநாள் காலை மாணிக்கவாசகப் பெருமான் அவதரித்த திருத்தலத்தைப் பார்க்கவேண்டும் என்ற அவா எங்கள் மனத்தில் எழுந்தது.''

சேரன் கலம் ஒன்று கடலில் சென்றால் அடுத்து வேறொன்றும் செல்ல இயலாது என்று பண்டைத்தமிழ்ச் சான்றோர் ஒருவர் பாடியுள்ளார். அப்படித்தான் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் ஒருவரைப் பற்றி, ஒரு நூலைப் பற்றி எழுதிவிட்டால் பின் வருபவர் எழுவதற்கு வேறொன்றும் இல்லாது போய்விடும். அவ்வாறு பல நோக்குகளில் நூல் எழுதுதல் இவர்க்கே அமைந்த பாங்கு. பயன்பட்ட நூல்கள், சொல்லடைவுகள் முதலியவற்றை முறையாக அமைத்து எந்நூலாயினும்—படைப்பிலக்கிய மாயினும் ஆராய்ச்சி நூலாயினும்—பதிப்பித்தல் இவருக்குக் கைவந்த கலை.

இந்நூலிலும் அத்தகு பின்னிணைப்புகள் :

1. பயன்பட்ட நூல்கள், 2. பழமொழிகள், 3. புராண வரலாறுகள் 4. மாணிக்கவாசகர் வழிபட்ட தலங்கள் எனப் பல அமைந்து நூலுக்கு ஒரு முழுமை தருதலைக் காணலாம்.

ஆராய்ச்சிக்கும், அகங்குழைந்த பொருள் உணர்வுக்கும் உதவவல்ல இந்த நூல் சைவ அன்பர்களும், தமிழ் ஆய்வாளர்களும், கவிதை ஆர்வலர்களும் படித்துப் பயன் பெறவேண்டிய ஒப்பற்ற நூலாகும். இத்தகைய நூல் பல எழுதித் திருவேங்கடவன் திருவருளால், பல்லாண்டு, பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு, பலகோடி நூறாயிரம் வாழவேண்டி அமைகிறேன்.

11, பேராசிரியர் குடியிருப்பு
பிரகாசம் நகர்,
திருப்பதி-517502
16-5-1989

பொன். சௌரிராசன்

சடகோபன் செந்தமிழ்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

நம்மாழ்வாரையும் அவர் தாயாகி விளங்கி ஈன்ற தமிழ் மறையையும்
ஒரு சேர இணைத்துப் பயில்கின்ற முயற்சியை எடுத்துக் காட்டுகின்றது
இந்நூல். அதனோடு கூட இலக்கியத்திற்கும் சமயத்திற்கும்
உள்ள பிரிக்க இயலாத உறவினைக் காட்டும் வகையிலும்,
இந்நூல் நம்மாழ்வாரின் பக்தியில் விளைந்த
பாசுரங்களை விளக்குகின்றது.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939637-2-2

eBOOK ~ *மின் நூல்*

ந சுப்பு ரெட்டியார் 1916 2016 நூற்றாண்டு விழா நிகழ்வுகள் 100




அணிந்துரை

சடகோபன் செந்தமிழ் 1989

வழங்கியோர்:

பேராசிரியர் டாக்டர் தி. வைத்தமாநிதி







அணிந்துரை

பேராசிரியர் டாக்டர். தி. வைத்தமாநிதி

எம்.ஏ., பி.டி., பிஎச்.டி.

'சடகோபன் செந்தமிழ்' என்னும் இந்த 'நன்னூல்' பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்கள், தமிழ் கூறும் நல்லுலகிற்கு, இப்போது, புதிதாக ஆக்கித் தந்துள்ள ஒன்று. பேராசிரியர் அவர்கள் பயன்மிக்க பல நூல்களை, எழுதிப் பெரும் எழுத்துப் பணியாற்றியுள்ளவர்கள். அவர்கள் தந்துள்ள நூல்கள் தம் பொருளாலும், பொருளைச் சொல்லும் வகையாலும் தரத்தில் உயர்ந்தவை என்ற பாராட்டை அறிஞருலகிடமிருந்து பெற்றவை. அத்தனை யும் சிறப்பானவையே. அவர்களது உயர்நிலைப்பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகத் தலைவர் ஆகிய, பேராசியப் பணியில் ஈடுபாட்டோடு, தம்மிடம் பயில்வோரைத் 'திருத்திப் பணி கொண்ட' அநுபவத்திற்கும், தமிழ் இலக்கிய, சமய இலக்கிய நூல்களில், அவர்களுக்குள்ள ஆழ்ந்த புலமைக்கும், தெளிந்த பார்வைக்கும் எடுத்துக் காட்டுகளாக விளங்குபவை. அத்தகைய அறிவு சான்ற பெரியாரின் எழுத்தாற்றல், இப்போது சடகோபன் செந்தமிழ் என்ற நூலை மிகுந்த ஆர்வத்துடன் தமிழ் உலகிற்கு அளிக் கின்றது.

சடகோபன் செந்தமிழ் பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்களது அடிமனத்தில், அநுபவமாகப் பல நாட்கள் படிந்து, படிந்து, அன்னாரின் மனம் முழுவதையும் நிறைக்க முயல்கின்ற வொன்று இலக்கிய ஆக்கம் பெற்று எழுத்து முயற்சியாகிவிட்டது என்றே தோன்றுகின்றது. ஏனென்றால், சைவ மரபினரான அவர்கள் வைணவ நெறி

யின் தலைவராம் "வேதம் தமிழ் செய்த வித்தகரான" நம்மாழ்வாரின் பாசுரங்கள் தேக்கித் தரும் இறையநுபவத்திலும் 'ஈரத் தமிழிலும்' மனத்தைக் கொடுத்த அந்தத் தாராளம் இந்த நூலில் பயில்வதைப் பார்க்கின்றோம்.

அவ்வப்போது இந்நூலின் பகுதிகளிலும் அடிக்குறிப்புகளிலும் சடகோபன் வாழ்வோடும் 'மொழி' யோடும் தொடர்புள்ள செய்திகளுக்குச் சைவத்திலிருந்து ஒப்புமை காட்டும்போது இதனைப் புரிந்து கொள்ளுகின்றோம். அந்த ஒப்புமை தரும் முயற்சியின் பின்னால் அவர்களது மனதுக்குள்ளேயே, ஓங்கி வளர்ந்துள்ள ஒரு சிந்தனை,

> "வைணவத்தில் இந்த நிலையும், அதைச் சொல்லும் தமிழ்ச் சுவையும் வேறோர் ஒப்பின்றி உயர்வது போலுள்ளதே!" என்பது.

அவர்கள் நூலின் தொடக்கத்திலிருந்து முடிவுவரை, இந்த உணர்வு நிலைபெற்றிருக்கின்றது. அதனால்தான் அவர்கள் நம்மாழ்வாரின் வாழ்க்கை வரலாற்றை நூலின் முதல் இயலாகத் தந்துள்ளார்கள். ஆங்கே, வழிவழியாக வந்துள்ள செய்திகளையும், தலபுராணச் செய்திகளையும் ஏற்றுக் கொண்டு, அவற்றின் "புராணிகத் தன்மை" வாயிலாக (Mystical quality and language) வலியுறுத்தப் பெறும் என்றுமுள உண்மைகளை இனங்காண முயல்கின்றார்கள். T.S. எலியட் என்ற மேனாட்டு அறிஞர் 'Myth is the emotional equivalent of Philosophy' என்று குறிப்பிடுவார். அதன் பொருளும் இந்த நிலையில் தெளிவாகின்றது. அதிலிருந்து தொடங்கும் சடகோபன் செந்தமிழ் பதினைந்து இயல்களாக, தம் நோக்கான நம்மாழ்வாரையும் அவர் தாயாக விளங்கி ஈன்ற தமிழ் மறையையும் ஒரு சேர இணைத்துப் பயில்கின்ற முயற்சியை எடுத்துக்காட்டி நிறைவு செய்கின்றது. அதனோடு கூட இலக்கியத்திற்கும் சமயத்திற்கும் உள்ள பிரிக்க இயலாக உறவினைக் காட்டும் வகை

யிலும், இந்நூல் நம்மாழ்வாரின் பக்தியில் விளைந்த பாசுரங்களை விளக்குகின்றது. ஆக, இந்தப் பார்வையில் வழிவழியாக வைணவ நெறி பேணி வரும் அடிப்படையை இலக்கிய வழியாக்கி, நூல் உருவாகியிருப்பதை உணரலாம். இதைச் சற்றே விளக்க விரும்புகின்றேன்.

வைணவநெறி நிற்போர் 'பிரமாணம்' (ஆதாரம்), பிரமேயம் (சொல்லப்படும் பொருள்), 'பிரமாதா' (ஆதாரம் கொண்டு பொருளை அளந்தறிபவன்) என்ற மூன்றம்ச அடிப்படையில் தம் கொள்கைகளை வகுத்துக் காட்டுவர். அதன்படி, தென்புலத்து வைணவ நெறியில் அடிப்படைச் சட்டம், தமிழ் வேதங்களான திவ்வியப் பிரபந்தங்களே. அவற்றிற்கு இந்நெறியினர் அளித்துள்ள தமிழ் இலச்சினையே "அருளிச் செயல்கள்" என்ற பெயர்.

ஒரு காலம் செல்வாக்கோடு எல்லா நிலைகளிலும் பயன் பெற்றுப் பின், சில காலம் மறைந்த அல்லது விடுபட்ட தமிழ் மறைகளை மறுபடியும் தம் நிலையில் குறைவில்லாமல் வடமொழி மறைக்கு மேலாகப் பயன்படும்படிச் செய்தவர் மணவாள மாமுனிகள் என்ற ஆசாரியர். "இம்மணவாள மாமுனிவன் தோன்றாவிடில் ஆற்றில் கரைத்த புளியலவோ தமிழ் ஆரணங்கள்" என்று வைணவத் தமிழ்ப் பக்தியுலகு பெருமையோடு கேட்கும். அந்த மாமுனிகளின் மங்களா சாசனத்தினை — வாழ்த்தினைப் — பலமாக்கிக் கொண்டன அருளிச் செயல்கள். மாமுனிகளின் குரல் வாழ்த்தியது:

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி
தாழ்வாதுமில் குரவர் தாம்வாழி — ஏழ்பாரும்
உய்ய அவர்கள் உரைத்தவைகள் தாம்வாழி!
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

ஆக, அருளிச் செயல்களே, அவை தோன்றிய காலத்திலிருந்தே தென்புலத்து வைணவ நெறியின் பிரமாணம் (ஆதாரம்) ஆயிற்று.

ஆழ்வார்கள் அனைவருமே அர்ச்சாவதாரத்திலே ஈடுபட்டவர்கள். திருக்கோயில்களில் உறையும் உருவத் திருமேனியே அவர்களுக்கு எல்லா இறைநிலையுமாகத் திகழ்கின்றது. பரம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை ஆகிய ஐந்து நிலைகளையும் திவ்வியப் பிரபந்தங்கள் பேசினாலும், அவற்றின் விசேஷ நோக்கு அர்ச்சாவதாரமே என்று ஆசாரிய ஹிருதயம் என்ற தத்துவ நூல் அறுதியிடும். ஆக, அர்ச்சாவதாரத்தின் நிலைக்களங்களான திருக்கோயில்கள் கண்டுள்ள திவ்விய தேசங்களின் பெருமையைப் பேசுவதே, அருளிச் செயல்களின் பெருமையாகின்றது. அத்திவ்விய தேசங்கள் அல்லது திருப்பதிகள் இந்நெறியின் பிரமேயம் (சொல்லப்படும் பொருள்) ஆயின.

அருளிச் செயல்களையும் திருக்கோயில்கள் திகழும் திவ்விய தேசங்களையும் ஒன்றாகவே பரவிப் போற்றிய ஆசாரியர்கள் 'பொலிக, பொலிக' என்ற திருவாய்மொழியில் (5,2) நம்மாழ்வார் திருவாக்கு கூறுவதுபோல "கடல் வண்ணன் பூதங்களாக'ப் பொலிந்து வியாக்கியானங்களை ஆக்கித் தந்து, ஆழ்வார்களுடன் சேர்ந்து பிரமாதாக்கள் (ஆதாரத்தில் நின்று பொருளை அளந்து ஆய்பவர்கள்) ஆயினர்.

'பிரமாணம்', 'பிரமேயம்', 'பிரமாதா' என்ற மூன்றம்சம் கொண்ட வைணவ சமயநெறிக் கொள்கையை அப்படியே இலக்கியத்தோடு சமயம் பக்தி வழியில் கண்ட உறவாக்கிச் சடகோபன் செந்தமிழ் நூலில், பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் விளக்குகின்றார்கள். அந்த விளக்கம் கம்பநாட்டாழ்வாரின் 'சடகோபரந்தாதி' நூலின் ஒரு பாசுரத்தின் பொருளை அப்படியே விரிவாக்கியது போலத் திகழ்கின்றது. பாடல் இதுதான்:

அந்தமி லாமறை யாயிரத்
தாழ்ந்த அரும்பொருளைச்
செந்தமி ழாகத் திருத்தில
னேல்நிலத் தேவர்களும்
தந்தம் விழாவும் அழகும்என்
னாம்?தமி ழார்கவியின்
பந்தம் விழாஒழு கும்குரு
கூர்வந்த பண்ணவனே(25)

திருக்குருகூர் பண்ணவன், புனிதன், சடகோபன் வேதங்களின் அருமையான சாரத்தை மிகச் செவ்விய தமிழ்ப் பிரபந்தமாகச் சீர்செய்து அருளினார். அஃதின்றேல் கோயில்களில் ஓதுவதற்குரிய "நித்திய நைமித்திக" விழா சிறப்பிற்கான பாஞ்சராத்திர சாத்திர சம்பந்தமான அருளிச் செயல்கள் கிடைக்காவே!

இச்சடகோபரந்தாதிப் பாடல் அறுதியிடுவதுபோல், சடகோபன் அருளிய அனைத்துப் பாசுரங்களும் சாத்திரத் தகுதியுடையனவே. இன்னும் வைணவத் திருக்கோயில்களில், குறிப்பாக ஆழ்வார் திருநகரி, திருவரங்கம், சிரீவில்லிபுத்தூர் ஆகியவற்றில் திவ்வியப் பிரபந்தங்கள் "நித்திய நைமித்திகங்களில்" சிறப்பான இடம் பெற்றுத் திகழ்கின்றன. இவற்றிலுள்ள தோத்திரப் பகுதியும்கூட, மற்றைய சமய, தோத்திரப் பாடல்களிலிருந்து வேறுபட்டு, பாடல்களைப் பாடுவோர் — 'சேவிப்போர்' — நிலையில், அவர்களது ஆன்மாநுபவத்தையும் அவற்றில் கலந்து வரும் நிலையில், சாத்திரமாகிவிடும் தகுதி பெறுகின்றன. பக்திப் பனுவல்களின் ஏற்றமே, அவற்றைப் பயில்வோர் அந்தப் பாடல்களில் தோயும் அநுபவமாகும். மேனாட்டு அறிஞர் நார்மன் கட்லர் என்பார் தமது நூலில்[1] இந்தப் பாங்கினை

---

1. Norman Cutler : *Songs of Experiences : The Poetics of Devotion.* pp 10-11

அருமையாக விளக்கி இப்பாடல்கள் தம் ஒலித்தொகுதியினால், இசையின் தன்மையினால், பொருளைத் தவிர்த்தும் கூட பயன்தர வல்லவை என வைணவ உலகு கருதி வந்து பயன்படுத்தும் முறையை நுட்பமாகக் காட்டுகின்றார்.

ஆக, சடகோபரின் செந்தமிழ் என்பது திருந்திய வேதமே. குறையறிவுடையோரால் கலக்கப் பெற்ற 'சுருதி', நல்ஞானத் துறை சேர்ந்து, தெளிவுற்று ஆழ்பொருளைக் காட்டுகின்றது என ஆசாரிய ஹிருதயம் என்ற நூல் எடுத்துக் காட்டுவதும், சடகோபரந்தாதி குருகூர்ப் பண்ணவன் விளைத்த தமிழ் வேதத்தின் திருந்திய செந்தமிழ் எனப் போற்றுவதும் எவ்வளவு பொருத்தம் என்பதன் விளக்கமாகின்றது நம் பேராசிரியர் அவர்களது நூல்.

பேராசிரியரின் இந்நூலில் முதல் ஐந்து இயல்கள் முன்னர் விளக்கிய 'பிரமேய'த்தைப் பற்றியவை. அதாவது அங்குச் சொல்லப்படும் பொருள், திவ்விய தேசப் பெருமை, நம்மாழ்வார் பாடல் பெற்று மங்களாசாசனம் பெறும் திருப்பதிகளே முதலிலே விளக்கம் பெறுகின்றன. திருவரங்கம் தொடங்கி — சோழ, பாண்டிய, மலைநாடு, வடநாடு — உள்ளிட்ட ஆழ்வார் மங்களாசாசனம் பெற்ற முப்பத்தாறு திவ்விய தேசங்களைப் பற்றியவை. சில எடுத்துக்காட்டுகளையே தந்து, ஆழ்வார் அந்தந்தத் திருப்பதி எம்பெருமானிடம் கொள்ளும் உறவினையும், ஈடுபாட்டினையும், அவர் பாசுரம்வழி நம் அநுபவமாக மாற்றும் அற்புதம் எப்படி நிகழ்கின்றது என்று பேராசிரியர் அவர்கள் விளக்குகிறார்கள்.

அவர்களது விளக்கத்திற்குத் துணை நிற்பன பெரிய வாச்சான் பிள்ளை, நம் பிள்ளை ஆகியோரின் வியாக்கியானங்களும் **'ஆசார்ய ஹிருதயம்', 'ஸ்ரீவசனபூஷணம்' 'முமுட்சுப் படி'** போன்ற இரகசிய கிரந்தங்களென வழங்கப்படும்

தத்துவ நூல்களும், நேற்று வரை நம்மிடையே வாழ்ந்து பெரும் சமயப் பணியாற்றிய பிரதிவாதி பயங்கரம் அண்ணங் கராச்சாரியார் சுவாமிகளது திவ்வியார்த்த தீபிகை உரையும் ஆகும். இவை தவிர, பேராசிரியர் தமக்கே உரிய ஆழ்ந்த தமிழ்ப் புலமையையும், காட்டி — தொல்காப்பியம், திருக்குறள், ஒரு சில இடங்களில் கம்பராமாயணம் — ஆகிய வற்றிலிருந்தும் ஆதாரங்கள் தந்து, சடகோபன் செந்தமிழ் ஆற்றலை எடுத்துக்காட்டுகிறார்கள்.

பேராசிரியர் இப்பாசுரங்களை வியாக்கியானங்கள் உதவியினால் விளக்கும்போது, அவர்கள் உள்ளம் தோய் கின்ற படியை, விரிவஞ்சி, இரு எடுத்துக் காட்டுகளால் சுட்டுவேன்.

பாண்டி நாட்டுத் திருப்பதிகளில் திருப்புளிங்குடி எம் பெருமானிடம் ஆழ்வாரின் அநுபவத்தை விளக்கும்போது (பக் 69, 70, 71) "உன்தாமரைக் கண்களால் நோக்காய்" என்ற சொற்களில் பொருள் தரும் இடம் சிறப்பானது. அங்கேயுள்ள அடிக்குறிப்பும் (குறிப்பு-20) பேராசிரியர் எவ்வளவு அநுபவிக்கின்றார் என்பதைக் காட்டும். இப்படிப் பல சந்தர்ப்பங்களில் இந்த வியாக்கியானங்களிலும், பாசுரங் களிலும் ஈடுபட்டு, தாம் விளக்க முற்படும்போது, வைணவத் திற்கே உரிய கலைச் சொல்லைப் பயன் கொள்கின்றார்கள். எப்படி? இப்போது நாம் இந்தப் பாசுரங்களின் பொருளில் 'ஆழங்கால் படுவோம்' என்று கூறித்தான்!

'அருளிச் செயல்கள்' 'அகப்பொருள் தத்துவம்', 'தோழி', 'தாய்', 'மகள்' பாசுரங்கள் என்ற தலைப்புகளில் 6 முதல் 10-வது முடிய ஐந்து இயல்களில் வைணவ நெறியின் 'பிரமாணம்' என்ற அம்சத்தின் விளக்கமாகத் தருகின்றார்கள்.

'அருளிச் செயல்கள்' என்று தலைப்பிட்ட இயலில் நம்மாழ்வாரின் நான்கு பிரபந்தங்களின் சாராம்சத்தைத்

தந்து, அவை வேதப் பொருளின் வடிவமே என்று வியாக்கியா னங்கள் காட்டும் உண்மையை உணர வைக்கின்றார்கள். பேராசிரியர் அவர்கள் முதல் இயலில், நம்மாழ்வாரின் நான்கு பிரபந்தங்களும் எண்ணிக்கை அளவில் நான்கு வேதங்களுடன் சமதையாகக் காட்டப்படுகின்றனவேயன்றி அந்தந்த வேதக் கருத்துகள் எப்படி நம்மாழ்வாரின் அந்தந்தப் பிரபந்தங்களில் கிடைக்கின்றன என யாரும் தொகுத்துத் தரவில்லை என்று குறைப்படுகிறார்கள். ஆனால், ஆறாவது இயலிலிருந்து, பதினைந்து முடிய இவர் கள் பயன்படுத்தும் வியாக்கியான மேற்கோள்களிலேயே வேதம் குறிப்பிடும் மெய்ப்பொருள் இலக்கணங்களும் விளக்கங் களும் பயில்வதைப் பார்க்கின்றோம். அதனால்தான் அந்த மெய்ப்பொருள் உறவினைச் சங்ககாலத் தமிழின் அகத் துறைப் பொலிவோடு 'அகப்பொருள் தத்துவம்', 'தாய்', 'தோழி', 'மகள்' பாசுரங்கள்'' என்ற இயல் விளக்கங்களில் பேராசிரியர் அவர்களே சமயப் பொருள் அற்புதமான இலக்கியப் பொருளாகி மனித அநுபவமாகத் தரப்படு கின்றதை அறிகிறோம். தவிர, பேராசிரியரின் நூலில் "இயல்கள்" என்றே குறிப்பிடுவது ''குருகையர்கோன் யாழினிசை வேதத்தியல்'' என்பதன் எதிரொலிதானே! வடமொழி ஞானம் பெரிதும் நிரம்பிய சுவாமி தேசிகன் 'திருவாய்மொழி தெளியவோதி தெளியாத மறை நிலங்கள் தெளியக் கண்டோம்' என்றே சான்று பகர்கின் றார். நூலிலிருந்து ஒருசில சான்றுகள்:

> ''ஆழ்வார்கள் தாமான தன்மையை விட்டுப் பெண் பாவனையை ஏறிட்டுக் கொள்ளுதல் எற்றுக்கு? என்ற வினா எழுகின்றது......ஆழ்வார் பெண் தன்மையைத் தாமாக ஏறிட்டுக் கொள்கின்றாரல்லர். இந்த நிலை (அவஸ்தை) தானே பரவசமாக வந்து சேருகின்றது. புருடோத்

> தமனாகிய எம்பெருமானின் பேராண்மைக்கு முன் உலகம் அடங்கப் பெண் தன்மையதாக யிருக்கை யாலும் சீவான்மாவுக்குச் சுவாதந்திரிய நாற்றமே யின்றி பாரதந்திரியமே வடிவாயிருப்பதாலும், இவ்வகைகளுக்கேற்பப் பெண் பாவனை வந்தேறி யன்றே என்று கொள்ளலாம்......ஆழ்வார் பெண் தன்மை யெய்திப் பல திருக்கோயில் எம்பெருமான் களைப் பாடி அநுபவித்ததை அவர்களுடைய திருப் பாசுரங்களில் கண்டு மகிழலாம்'' (பக்.184).

> ....இங்ஙனம் ஆழ்வார்கள் பெண்மை நிலையிலிருந்து கொண்டு எம்பெருமானை அநுபவிக் கும்பொழுது, அவர்கள் தோழி, தாய், மகள் என மூவருள் ஒருவரின் தன்மையைத் தாம் அடைந்து கூற்றுகள் நிகழ்த்துவர்'' (பக். 185) இந்தக் கொள்கையினைத் தரும் ஆசாரிய ஹிருதய ஆதாரம்: ''சம்பந்த உபாய பலன்களில் உணர்த்தி துணிவு, பதற்றம் ஆகிய பிரஜ்ஞாவஸ்தைகளுக்குத் தோழி, தாய், மகள் என்று பேர்'' (சூரணிகை 133). சுவாமி தேசிகனும் இதையே ''பக்தி சிருங்கார வித்யா என்பர்'' எனப் பூருவர்கள் எடுத்துக் கொள்வர்.

இந்த ஆதாரத்தில் உள்ள சொற்களையும், பொருளை யும் விளக்கும் வகையிலும் ''தாய், தோழி, மகள் பாசுரங்கள்'' பற்றிய இயல்களை நம் பேராசிரியர் அவர்கள் எழுதியுள்ளார்கள். அவற்றின் எளிமையே, அவரது பெரிய வெற்றி. ஏனென்றால், சமய நெறியின் தத்துவப் பொருளை விளக்கும்போது பலரும் கருத்தியமாகச் சொல்லிப்போவர் பேராசிரியர் அவர்கள் கருப்பொருளையே பருப்பொருளாக்க் காட்டுவதுபோல வியாக்கியானங்களின் துணையோடு அருமையாக இந்த இயல்களை ஆக்கியுள்ளார்கள். இந்த

இயல்களில் பகவத் பக்தியாகின்ற பகவத் காமமே பரம புருஷார்த்தம் என்று ஆழ்வார்கள் பாசுரங்கள் மெய்ப்பிப்பதை எடுத்துக் கொள்கிறார்கள். இதைத்தானே,

"சொல்லார்தமிழ் ஒருமூன்றும் சுருதிகள்
நான்கும் எல்லை
இல்லா அறிநெறி யாவும்
தெளிந்த (இரா. நூற். 44)

என்று உடையவர் (இராமாநுசர்) அறுதியிட்டார் என்று திருவரங்கத் தமுதனார் பாடுவார்!

'சேமநல் வீடும், பொருளும்!
தருமமும், சீரியநல்
காமமும் என்றுஇவை நான்குஎன்பர்
நான்கினும் கண்ணனுக்கே
ஆம்அது காமம்' (ஷ-40)

என்றும் நிலை நாட்டினார். தவிரவும், பக்வத் பக்தியாகிற 'இன்பம்' என்ற பரம புருஷார்த்தம் ஒன்றுதான் வழியாக வும், பயனாகவும் இருக்க இயலும். மற்றைய புருஷார்த் தங்களைத் தம்தம் படிநிலைகளில் பயன்களாகவே கொள்ள இயலும். பேராசிரியர் இப்பகுதி இயல்களில் மிகச் சிறப்பான விளக்கங்கள் தந்துள்ளார்கள்.

இயல் 11லிருந்து 15முடிய ஐந்து இயல்களில் ஆழ்வார் களும் ஆசாரியர்களும் பிரமாதாக்கள் என வழங்கப்பெறும் தகுதி விளக்கம் பெறுகின்றது. "மணிவல்லிப் பேச்சான" திருவிருத்தத்தில் நம்மாழ்வார் "விண்ணோர் பிரானார் மாசில் மலரடிக்கீழ் எம்மைச் சேர்விக்கும் வண்டுகளே" (54) என்று கூறும் சொற்களை நினைவூட்டி, 11-ஆம் இயலில் மகள் பாசுரங்களில் தூதுபற்றியவையாக வருபவற்றை விளக்கி, பிரமாதாக்களின் வடிவத்தினைப் பொருத்தமாகப் பேசு கிறார் பேராசிரியர். இறைநிலை (பரம், வியூகம், விபவம்,

அந்தர்யாமி, அர்ச்சை) தூது நடைபெறுவதை நம்மாழ்வாரின் பாசுரங்களில் நிகழும் நாடகமாகவே படம் பிடித்துக் காட்டுகின்றார். 12-வது இயலான "இறையநுபவம்" பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் நம்மாழ்வார் பிரபந்தங்கள் அனைத்தின் சாரத்தைப் பிழிந்து ஆழ்வாரின் பிரபத்தியையும் இன்ப, துன்பங்கள் மன, உடல் நிலைகளில் பரிமாற்றமாவதின் தன்மையையும், உயிரின்கண் உண்டாகும் இன்பம் எது என்றும் காட்டுகின்றார்கள். இந்த இடத்தில் திருவள்ளுவரின் இரு குறள்களைச் (621, 630) சுட்டி, 'அவர்' என ஆழ்வார் குறிப்பிடும் நிலையின் இலக்கணத்தை, நயமாக எடுத்துரைக்கின்றார்கள்.

பேராசிரியர் அவர்கள் நூலில், 6-வது இயலிலிருந்து அவர்களது விளக்கங்கள் வளர்ந்து கொண்டே வந்து, 13, 14, 15-வது இயல்களில் கனமும் முழு வளர்ச்சியும் பெற்றுத் திகழ்கின்றன. அவைதாம் 'அர்த்த பஞ்சகம்' 'தத்துவத் திரயம்', 'மந்திரங்கள்' ஆகிய மூன்று இயல்கள். இறைநிலை, உயிர்நிலை, தக்க நெறி, தடையான ஊழ்வினை, வாழ்வினையாகிய வீடுபேறு — இவற்றை 'அர்த்த பஞ்சகம்' என்று வைணவநெறி பேசும். திருவாய்மொழிப் பாசுரங்களின் அடிகளைக் கொண்டே இவையனைத்தையும் சுட்டிக் காட்டுகின்றார் பேராசிரியர். இந்த இயலின் முடிவில், தம் விளக்கத்திற்கு அரண் செய்யும் வகையில் பேராசிரியர் குறிப்பிடுகின்றார்:

> "... ...வேதங்கள், இதிகாச புராணங்கள், மகாத்மாக்கள், முனிவர்கள் இவர்களின் கருத்துகள் இவற்றில் (அர்த்த பஞ்சகம்) அடங்கியுள்ளன என்றும், இவையே திருவாய்மொழிக்கே வியாக்கியார்த்தமாக அமைந்துள்ளன என்றும் பெரிய வங்கிபுரத்து நம்பியும் அருளிச் செய்வர்" (பக்.359-60) என்று.

தத்துவம், இதம், புருஷார்த்தம் என்று குறிக்கப்பெறும் தத்துவத்திரயத்தினை (திரயம்-மூன்று) திருவாய்மொழிப் பாசுரங்கள் சில கொண்டே நுட்பமாகப் பொருள் சொல்லி தெளிவாக்குகின்றார் பேராசிரியர். "நின்ற ஒன்றை உணர்ந்தேனுக்கு" என்ற திருவாய்மொழி (8.8:5) யில் ஆழ்வாரின் அநுபவத்தைப் படம் பிடித்துத் தருகின்றார். அதற்கு ஒத்த தைத்திரிய உபநிடதப் பொருளையும் நினைப் பூட்டுகிறார்கள் (பக் 363-64). இப்படித்தான் எம்பெரு மானார் அருமைப்பாட்டோடு விளக்கும் உயிர்-உடல் உறவினையும் (சரீர-சரீரிபாவனை) அறிவு மயமான ஆன்மா அறிவுக்கு இருப்பிடமாகும் படியைத் தெளிவதான "தர்ம பூதஞானம்" என்ற கொள்கையினையும் அற்புதமாகத் தெளிவாக்குகின்றார் பேராசிரியர் இந்த இயலில்.

பதினைந்தாவது இயல் 'மந்திரங்கள்' என்பது, நம்மாழ் வாரின் நான்கு பிரபந்தங்களுமே வைணவ நெறி மிக உயர் வாகப் பேணும் அதன் தலையான மந்திரங்களான திரு மந்திரம், துவயம், சரமசுலோகம் ஆகிய மூன்றையும் எப்படி உள்ளடக்கிக் காண்பிக்கின்றன என்று எடுத்துக் காட்டு களுடன் பேராசிரியர் சுருக்கமாக, ஆனால் விளக்கமாக, முந்தைய இயலொன்றில் ஆன்மாவுக்கு இறைவனிடம் உள்ள சம்பந்த ஞானத்தை — நவவித சம்பந்தமாகக் கூறும் முறையை — நினைவூட்டும் வகையில் அருமையாகத் தந்துள் ளார்கள்,

நம்மாழ்வார் பேசுகின்றார்:

தேனும் பாலும் கன்னலும்
அமுதும் ஆகித் தித்திப்ப
யானும் எம்பி ரானையே
ஏத்தினேன்; யான்உய்வானே (திருவாய் 4.3:10)

என்று.

"..................
எவையும் எவரும் தன்னுள்ளே
ஆகியும் ஆக்கியும் காக்கும்
அவையுள் தனிமுதல் எம்மான்" (திருவாய் 1.9;1)

"..............தான் தோன்றி
முனிமாப் பிரம முதல்வித்தாய்
உலகம் மூன்றும் முளைப்பித்த
தனிமாத் தெய்வம்" (திருவாய் 8-10:7)

ஆகிய திருமால் "என் நெஞ்சு நிறையப் புகுந்து" "தன் சொல்லால் தான்தன்னைக் கீர்த்தித்த மாயன்" என்று ஆழ்வார் அழுத்தமாகக் கூறுகின்றார்! ஆழ்வாரின் "நெஞ்சத்துஉள்ளிருந்து இருந்தமிழ்நூல் இவை மொழிந்தது" அவனே என்று ஆழ்வார் பேசுவதுபோல் பேராசிரியர் ரெட்டியார் அவர்களும் நம்மாழ்வாரைத் தம் நெஞ்சத்தில் நிறுத்தி "ஆவி அகமே தித்திப்பாய்" என்று அவர் திருமாலைக் குறித்துச் சொல்வது போலவே சொல்லி **சடகோபன் செந்தமிழ்** என்ற இந்த நூலைத் தமிழுலகிற்கு மறக்க இயலாத படைப்பாக்கித் தந்துள்ளார்கள். ஆர்வாரின் 'அகம் தித்திக்கும்' அநுபவத்தை நம்முடைய அகத்தில் தித்திக்கும் அநுபவமாக மாற்றுகின்றது நூல். இது, இந்த நூலின் சிறப்பான வெற்றி.

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்களது இந்த நூலுக்கு அணிந்துரை எழுதும் தகுதி அடியேன்பால் ஏதும் இல்லை. என் பேராசிரியரான அ. சீநிவாசராகவன் அவர்களிடம், தாம் கொண்டுள்ள அன்பாலும், மதிப்பாலும் எளியேனை இந்த நூலின் முதல் பயில்வோனாக இருந்து பயன்பெறப் பணித்தார்கள். அந்த அநுபவத்தையே அணிந்துரையில் சில சொல்ல முயன்றேன்; அவ்வளவே. ஆழ்வார் திருநகரியில் பிறந்து வளர்ந்த என்போன்ற ஒரு தமிழனுக்கு **சடகோபன் செந்தமிழ்** இனிப்பினை நுகர்வது உகப்புத்தானே! பேராசிரியர் அவர்களுக்கு அடியேன் செய்வதெல்லாம் எனது வணக்கங்களே.

இந்த நூலைத் தமிழ்கூறு நல்லுலகம் நன்கு வரவேற்கும். எல்லாரும் பயிலலாம்; இவ்வின்பத்தை உறுதியாகத் துய்க்கலாம். அதுவே சடகோபனின் இனிமை என்று கூறி அமைகின்றேன்.

ஆழ்வார்திருநகரி
24-9-1989.

அன்பன்,
தி. வைத்தமாநிதி

நினைவுக் குமிழிகள் - 4

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

சுயசரிதை

கால கட்டம் ,,,,,, 1960 ~ 1977 (திருப்பதி)

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications



ISBN: 978-81-936450-4-8

eBOOK ~ மின் நூல்



அணிந்துரை


நினைவுக் குமிழிகள் - 4 1990

வழங்கியோர்:

முனைவர் தானியேல் தேவசங்கீதம்
பேராசிரியர், தமிழ்த்துறை
திருவேங்கடவன் பல்கலைக் கழகம்







முனைவர் தானியேல் தேவசங்கீதம்
எம்.ஏ.பிஎச்.டி, பட்டயம் மொழியியல்

தமிழ்ப் பேராசிரியர், தமிழ்த்துறை
திருவேங்கடவன் பல்கலைக் கழகம்
திருப்பதி-517502 (ஆ.மா)

அணிந்துரை

பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் *அவர்கள் ஒரு விந்தை மனிதர்; துணிவையே துணையாகக் கொண்டவர்; உழைப்பால் உயர்ந்த செம்மல்; அநுமனைப்போல் ஆற்றலும் அடக்கமும் ஒருங்கே கொண்டவர்.*

பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் 1960 இல் திருவேங்கடவன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் விரிவுரையாளராகச் சேர்ந்தார். 1977-இல் பேராசிரியர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். திருப்பதியில் வாழ்ந்த பதினேழு ஆண்டுகளில் அவர் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் **''நினைவுக் குமிழிகள்''-4** *என்னும் நூலாக மலர்ந்திருக்கின்றது. இந்நூலுக்கு அணிந்துரை எழுத எனக்கு எந்தத் தகுதியும் இல்லை; என்மீது அவர் வைத்திருக்கும் அன்பு ஒன்றே இதற்குக் காரணம்.*

சற்றேறக் குறைய இருபத்தைந்து ஆண்டுகளாகப் பேராசிரியர் ரெட்டியார் அவர்களோடு நெருங்கிப் பழகியவன் நான். கிறித்துவப் பாதிரிமார் இயேசுவின் அன்பை உலகெங்கும் சொல்ல தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்து இந்திய மண்ணிற்கு

வந்ததைப் போல் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் தமிழ் வளர்ச்சியையே தம் வாழ்க்கைப் பணியாக (Life mission) மேற்கொண்டு திருப்பதி மண்ணில் கால் வைததார். மனத்தூய்மையால், அன்பு வார்த்தைகளால், மாணவர்கள் உள்ளங்களைக் கவர்ந்தார். 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் போக்கு' இவரிடம் இல்லாததால் மாணவர்க்கு இவரிடம் அளவற்ற நம்பிக்கை உண்டானது. அந்நம்பிக்கை, பின்னால் துறை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது. இந்நூலின் பிற்பகுதியில் அவர் சித்திரிக்கும் பல நிகழ்ச்சிகள் நான் நேரில் கண்டவை; முற்பகுதியில் குறிப்பிட்டுள்ள செய்திகள் நான் சித்தூரில் இருந்த நாட்களில் என்னாசிரியப் பெருமக்களால் சொல்லக் கேட்டவை; இவ்வாறு நான் கண்டதும் கேட்டதுமே இந்நூலில் எழுதப் பெற்றுள்ளன. பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சிகளை மிகத் துல்லியமாகத் தேதி, மாதம், ஆண்டோடு பேராசிரியர் அவர்கள் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார். என் சொந்த வாழ்க்கையில் நடந்த பல நிகழ்ச்சிகளை (பக் 594-595) இந்நூலில் நான் படிக்கும் போது, பேராசிரியர் இவைகளையெல்லாம் ஏதாவது கோப்புகளைப் பார்த்து எழுதினாரோ என்று கூட நினைக்கத் தோன்றுகிறது. ஆய்வு மாணவனாக நான் ஆற்றிய பணிகள், நான் பெற்ற பல்கலைக்கழக மானியப் படிப்புத் தொகை ரூ. 750/= மூன்றாண்டுகள் இங்ஙனம் கிடைத்தது. ஒரு மூன்று மாத காலமாக நான் வகுப்பில் செய்தபணி, அதற்குப் பல்கலைக்கழகம் ஊதியம் கொடுக்க மறுத்த நிகழ்ச்சி, பின்னர், பேராசிரியர் முயற்சியால் அப்பணிக்குரிய ரூ. 1200/— காசோலையைப் பெற்றது இவைகளெல்லாம் நானே மறந்துபோன நிகழ்ச்சிகள். இவற்றையெல்லாம் நேற்று நடந்ததுபோல் குறிப்பிடும் பேராசிரியரின் நினைவாற்றல் வியத்தற்குரியது. இந்நூலில் சித்திரிக்கப்பெறும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் வேதனை மிகுந்த பேராசிரியர் உள்ளத்தில்

எழுந்த குமுறல்கள். அவையே பின்னர்க் குமிழிகளாக முகிழ்த்துள்ளன.

திருப்பதி வாழ்வில் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் சுகப்பட்டதை விடத் துன்பப்பட்டது தான் மிகுதி.

> "திருப்பதி வாழ்வில் பூமகளின் கடைக்கண்
> நோக்குச் சரியாக இல்லை; ஏன்
> சுத்தமாக இல்லை என்றே சொல்லலாம்" (ப. 86)

என்ற தொடர்கள் அவர் அடிமனதில் உள்ள வேதனைக் குமுறல்கள். தியாக உணர்வும், உண்மையான தமிழ்ப்பற்றும், எதையும் தாங்கும் இதயமும் பலனை எதிர்ப்பாராது கடமை யாற்றும் கண்ணியமும் நிறைந்த பேராசிரியர் அவர்கள் இத்துன்பங்களை யெல்லாம் பொருட்படுத்தாது 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று மனந்தளராது தமிழ்ப்பணி செய்து வந்திருக்கிறார்.

பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறையை உருவாக்கிய சிற்பி (The Architect of the Dept of Tamil of Sri Venkateswara University) என்பது தமிழ்கூறு நல்லுலகம் நன்கறிந்த உண்மை. இந்தச் சிற்பியின் வேதனைகளை, கனவுகளை கற்பனைகளை, இந்நூலில் படிக்கும்போது. மெய்சிலிர்க்கிறது.

> "உண்ணுஞ் சோறுபருகும் நீர் தின்னும் வெற்றிலை
> எல்லாம் கண்ணனே"

என்று எண்ணிய ஆழ்வார் நெறியில் ஆழங்கால் பட்ட பேராசிரியர் அவர்கள் திருப்பதியில் கால்வைத்த நாள் முதல் தமிழ்த்துறை தோற்றுவிப்பது ஒன்றையே தம் வாழ்வும் வளமுமாகக் கொண்டிருந்தார், காரைக்குடியில் பெரியதொரு புகழ்மிக்க கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி, முதல்வராகும் வாய்ப்பையுந் துறந்து, திங்கள் தோறும் ரூ. 153/- இழப்பில் திருவேங்கடவன்

பல்கலைக் கழகத்தில் ஒரு சாதாரண விரிவுரையாளராகச் சேர்ந்து பல எதிர்ப்புகள், அவமானங்கள், நிந்தனைகள் இவற்றையெல்லாம் சகித்து, தமிழ்த்துறையை நிறுவிய செய்திகளை இந்நூலில் படிக்கும்போது பேராசிரியரின் உண்மையான தமிழ்ப் பற்றையும் தியாகவுணர்வையும் நம்மால் உணர முடிகின்றது.

> ''பதிமூன்று ஆண்டுகள் 'மக்கள் பேறு' வாய்க்கப் பெறாதிருந்தபோது புதிதாகத் தொடங்கப் பெற்ற உயர்நிலைப் பள்ளியின் வளர்ச்சியிலேயே என் கவனம் சென்றதால் மக்கட்பேறு பற்றிய எண்ணம் என் மனத்தில் எழாதிருந்தது. என் மனைவியும் என் அன்னையும் தான் இதுபற்றி மிகவும் கவலைப் பட்டனர். அவர்கள் வற்புறுத்தலின் பேரில் இரண்டு மாத காலம் திருத்தலப் பயணத்தை மேற் கொண்டேன். இராமேச்சுவரத்தில் பல்வேறு வைதிகக் கருமங்களை மேற்கொண்டேன். எனக்கு மக்கட்பேறு (1949) ஏற்பட்டது. அந்த மகிழ்ச்சியை விட இப்போது துறை பிறந்தபோது பெரிய மகிழ்ச்சி ஏற்பட்டது...விழா கொட்டகையில் அமர்ந்து கொண்டு திரு. பி. திம்மா ரெட்டி துறைகளைத் திறந்து வைத்தபோது கண்கள் குளமாயின! இரண்டு கன்னத்திலும் நீர் வழியத் தொடங்கியது. அருகிலிருந்த நண்பர்கள் 'என்னவாயிற்று? ஏன் அழுகிறீர்கள்?' என்று கேட்க, ஒன்றுமில்லை; இஃது ஆனந்தக் கண்ணீர்!' என்று மறுமொழி பகர்ந்து கண்ணீரைத் துடைத்துக் கொண்டேன். (ப, 424)''

என்ற பகுதியைப் படிக்குங்கால், தாயொருத்தி மகனை ஈன்று புறந்தந்த போது பெற்ற மகிழ்ச்சியைத் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை பிறந்த ஞான்று இவர் பெற்றிருப்பதை அறிகிறோம்.

தமிழ் வளர்ச்சிக்கு எதிராய் வந்த தடைக்கற்களை யெல்லாம் பேராசிரியர் அவர்கள் தம் தடந்தோளால் தாங்கிய நிகழ்ச்சிகள் குமிழிகள் 182, 184 இல் நன்கு சித்திரிக்கப் பெற்றுள்ளன. அண்மையில் (1989) திருவேங்கடவன் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியரின் இருக்கைக்குத் தமிழக அரசு வழங்கும் மானியம், தொடர்ந்து வழங்கப் பெறுவதற்கும், அம்மானியத் தொகை உயர்த்தப்படுவதற்கும் பேராசிரியர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பொன்னேடுகளில் பொறிக்கத் தக்கன.

பேராசிரியர் அவர்கள் தமிழ்த் தொண்டை துறை உருவாக்கினதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. மொழி வழி மாநிலங்கள் பிரிந்த பின் வடவேங்கடப் பகுதிகளில் தமிழ் கொஞ்சம் கொஞ்சமாகச் சாவதைப் பார்த்து, இப் பகுதிகளில் எப்படியாவது தமிழ் மக்கள் தமிழ் உணர் வோடு வாழ வேண்டும் என எண்ணி **பாக்காலா, சித்தூர், திருப்பதி, புத்தூர், நகரி, குந்தக்கல்** ஆகியவிடங்களில் படிப்படியாகத் தமிழ்ச் சங்கங்களை ஏற்படுத்தி அங்குள்ள தமிழர்களை ஊக்குவித்திருக்கிறார். பேராசிரியர் அவர்கள் இத்தமிழ்ச் சங்கங்களைத் தமக்குச் சிறந்த இலக்கிய மேடைகளாகப் பயன்படுத்திக் கொண்டதோடு நில்லாது, இவைகளைத் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை ஏற்படத் துணைக் கருவி களாகவும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். பலவிடங் களில் சிதறிக் கிடந்த உறுப்பினர்களை ஒன்று சேர்த்தல், தாமே நேரிற் சென்று நிர்வாகச் சபையைக் கூட்டச் செய்தல், தீர்மானங்களைத் தட்டச்சு செய்து அவற்றைத் தமிழக அரசு, தமிழ் வளர்ச்சி இயக்கம், ஆந்திர அரசு முதலான இடங்களுக்கு அனுப்பல் முதலிய சிறந்த பணிகளை இத் தமிழ்ச் சங்கங்களில் செய்திருப்பதோடு, நல்லறிஞர் பலரை அழைத்துச் சிறந்த பல சொற் பொழிவுகளை ஆற்றுமாறும் செய்திருக்கிறார். இவ்வாறு

ஆந்திர மண்ணில் வாழும் தமிழ் மக்கள்தம் உள்ளப் புழுக்கத்தைத் தமிழ்த் தென்றலால் அகற்றிய பெருமைக்குரியவராகத் திகழ்கிறார் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள்.

"ஆசிரியர்கள் நல்ல நூல்கள் எழுதவேண்டும். எழுத்துப் பழக்கத்தைத் தொடக்கத்திலிருந்தே வளர்த்துக் கொள்ள வேண்டும். பல நூல்களைப் படித்த வண்ணமிருந்து தம் அறிவினைப் பெருக்கிக் கொள்ளவேண்டும். அதிகம் சிந்திக்கவேண்டும். இந்தச் சிந்தனையால் தாம் எழுதவேண்டிய பொருள் மனத்தில் உதயமாகும். நல்ல முறையில் மாணாக்கர்கட்குக் கற்பித்து வந்தால் தாமெழுதும் எழுத்திலும் தெளிவு பிறக்கும். உரை நடையும் ஆற்றொழுக்காக அமையும்" (பக். 94) என்ற தம் கொள்கைக்கு ஏற்பப் பேராசிரியர் தொடக்கக் காலத்திலிருந்தே எழுத்துப் பணியைக் கண்ணெனப் போற்றி வந்திருப்பதை இந்நூலில் (குமிழிகள் 163, 164, 167, 171, 172, 173, 179, 185, 187, 197, 192, 193, 194 212, 215, 224, 228, 230) நன்கு அறிகிறோம். திருப்பதியில் வாழ்ந்த பதினேழு ஆண்டுகளில் இருபது நூல்கள் எழுதியுள்ளார். இவர் எழுதிய சிறந்த நூல்கள் பல, மாணவர்களாகிய எங்கட்கு வகுப்பறையில் பல ஆண்டுகளாகப் பாடமாகக் கற்பிக்கப்பட்டவை. ஆழ்ந்து சிந்தித்துக் கட்டுரைகளை எழுதுவார். எழுதிய கட்டுரைகளைத் தாம் படித்துப் பார்த்து, மாணவர்க்கும் ஆசிரியரனைவர்க்கும் படித்துக் காட்டி இன்புறுவார். குறை நிறைகளை எடுத்துச் சொல்லுமாறு கேட்பார். இத்தகைய சிறந்த பண்புகளைக் கொண்டது இவருடைய எழுத்துப்பணி. இவருடைய வாழ்நாள் எண்ணிக்கையைவிட (74) இவர் எழுதிய நூல்களின் எண்ணிக்கை (88) மிகுதியிலேயே, இவர் மெய் வருத்தம் பாராக் கருமமே கண்ணாயினரானார் என்பது நன்கு விளங்கும்.

இந்நாட்களில் நூல்களை எழுதும் சிலர் தாமெழுதிய நூல்களைத் தமக்கு மிகவும் வேண்டியவர்க்கோ,

உறவினர்க்கோ, உதவுவோர்க்கோ, அன்புப் படைய லாக்குவதைக் காண்கிறோம். இன்னும் சிலர் காக்கைப் (கால், கை) பிடிப்பதற்காகத் தம் நூல்களைப் பதவியில் இருப்பவர்க்கும் அரசியல் வாதிக்கும் அன்புப் படையல் செய்வர். ஆனால் பேராசிரியர் இதில் முற்றிலும் மாறுபட்டவர். ஒவ்வொரு நூலையும் உயர்ந்த எண்ணத் தோடு, தக்க அறிஞர் பெருமக்களுக்கே அன்புப் படைய லாகியிருப்பதைக் காண்கிறோம்.

முனைவர் பட்டம் (பி எச். டி) இன்று மிக மலிவாக விலைபோகிறது. பதிவு செய்தவர் சற்று உழைத்து எழுதினால் போதும்; ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு பட்டம் பறந்து வந்து சேருகிறது. மொழித்துறையில் அதுவும் தமிழ்த் துறையில் இந் நாட்களில் பட்டங்களுக்குப் பஞ்சமில்லை. ஆராய்ச்சிப் பொருளுக்கு ஒரு தராதரம் இல்லாமல் போய்விட்டது; உயர்ந்த சிந்தனைக்கும் பெரும் பஞ்சம். இந்நிலையில் ஆராய்ச்சிக்குப் பதிவு செய்து கொள்ள ரெட்டியார் அவர்கள் பட்ட சிரமங் களைப் படிக்கும்போது (குமிழின். 175, 177) ஒரு பக்கம் வேதனையும் மற்றொரு பக்கம் நகைப்பும் உண்டாகிறது.

> ''மகப்பேறு இல்லாத மங்கை யொருத்தி அரச மரத்துப் பிள்ளையாரை விடாது சுற்றி வருவதைப் போல துணைவேந்தரைச் சுற்றிச் சுற்றி வருவதை நிறுத்தவில்லை. அடிக்கடி வழக்கம்போல் காலை ஏழுமணிக்கு அவர் திருமாளிகை சென்று, அவர் தரிசனம் பெற்று வருவது உண்டு. போகும் போதெல்லாம் என் கோரிக்கையைச் சொல்வது மில்லை. பேச்சுவாக்கில் இதைச் சொல்லாதும் விடுவதில்லை. (பக். 146)

என்ற வரிகளைப் படிக்கும் போது பேராசிரியர் தம் விடாமுயற்சி ஒரு பக்கம் வெளிப்பட்டாலும் அவர்தம் மனவேதனையும் உணர முடிகிறது. பிள்ளைச் செல்வம்

இல்லாதார் பிறர் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் பிள்ளைச் செல்வம் கிடைக்குமாம். அதைப் போல டாக்டர் பட்டம் இல்லாத பேராசிரியர் கும்பகோண ஹோமியாபதி ஆய்வுக் கழகத்தில் (Institute of Homeopathy) ஒரு டாக்டர் பட்டத்தைப் பெற்று அப்பட்டத்தைத் துணைவேந்தரிடம் காட்டி, முனைவர் பட்ட ஆய்வுக்குப் பதிவு செய்து கொண்டிருக்கிறார் (குமிழ் 177). நிலைத்த செல்வமாகிய ஊக்கத்தினைத் தம்மிடம் கொண்ட பேராசிரியரின் பெருஞ் சாதனைகளில் இது குறிப்பிடத் தக்கது. இந்தக் கும்பகோண வழியைத் தத்துவக் கண்ணாடி கொண்டு நம்மைப் பார்க்கச் செய்யும் அவருடைய சிந்தனை ஆற்றல் வியந்து போற்றற் குரியது.

பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் வீண் வம்புக்குப் போகமாட்டார். வந்த வம்பையும் விடமாட்டார்; துணிச்சலோடு போராடி வெற்றி காண்பார். பார்ப்பதற்கு இவர் பரம சாது; ஆனால் இந்தச் சாது மிரண்டால் காடு கொள்ளாது. திருவேங்கடவன் பல் கலைக் கழகத்தில் தொடர்ந்து வந்த நான்கு துணை வேந்தர்களிடமும் பணிவோடு, அன்போடு பழகி இருந் தாலும் தம்முடைய உரிமை இவர்களால் பறிபோகும் போது துணிச்சலோடு செயலாற்றி இருக்கிறார். "முறையற்ற முறையில் நடை பெற்ற என் பேட்டி" (குமிழி. 209), இராமகிருஷ்ணன் மருத்துவக் கல்லூரியில் சேர்வதில் (குமிழி. 206) முதலான குமிழிகள் மூலம் இவருடைய துணிவை அறிகிறோம். நய வஞ்சகத் துரோகம், தனக்கு மட்டுமல்ல, பிறர்க்கும் ஏற்பட்டாலும் அதைச் சகித்துக் கொள்ளமாட்டார்; வெளிப்படையாகப் பேசி விடுவார். விளைவுகளைக் குறித்துக் கவலைப்பட மாட்டார். இந்த வெள்ளையுள்ளந்தான் இவருடைய நோயற்ற நீண்ட வாழ்வுக்கு மருந்து. "அஞ்சாமை அறிவுக்குத் தாய்" (Bravery is the Mother of wit) என்ற

பொன்மொழிக் கேற்ப, இவருடைய தெளிந்த சிந்தனைச் சிதறல்களுக்கு அஞ்சாமையே காரணம்.

பேராசிரியர் அவர்களின் 'நினைவுக் குமிழிகள்' ஒரு தன் வரலாற்று நிகழ்ச்சிக்கோவை மட்டுமன்று; அஃது ஒரு சிறந்த இலக்கியம்; வாழ்க்கை அநுபவங்களை இலக்கியச் சான்றுகளால் விளக்குவதும், இலக்கியம் கூறும் உண்மைகளை, நீதிநெறிகளை, வாழ்க்கைத் தத்துவங்களைத் தம் சொந்த வாழ்க்கை நிகழ்ச்சிகளால் விளக்கிக் காட்டுவதும் இந்நூலின் சிறப்புகளில் தலையாயவை என்று கூறலாம். படித்த இலக்கியத்தை ஏட்டிலே நிறுத்திவிட்டாமல், வாழ்க்கைப் பயணத்தில் அதன் உண்மைகளை ஒருவர் எவ்வாறெல்லாம் உணர்ந்து, சிக்கலுக்குத் தீர்வு காண வேண்டும். தன்னைத்தானே அவ்விலக்கிய ஒளியில் ஆற்றுப் படுத்திக் கொள்ள வேண்டும் என்ற உண்மைகளை மிகத் தெளிவாக இந்நூல் விளக்குகிறது. கற்ற இலக்கியங் களெல்லாம், வாழ்க்கைப் பாதையில் கால் வழுக்கும்போது உற்றதுணையாக உதவுவதைப் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் பல பாடல்களின்வழி இந்நூலில் ஆங்காங்கு குறிப்பிட்டிருப்பது பாராட்டற்குரியது.

மேல்நிலையிலுள்ள அதிகாரிகள் தமக்கு அனுப்பி வைக்கும் கோப்புகளில் கீழ்மட்டத்தில் உள்ள எழுத்தர்கள் எழுதி வைக்கும் குறிப்புகளைப் பாராமல் பொறிபோல் (Mechine) கைநாட்டுச் செய்வது (பக். 213) இன்றும் நிகழ்ந்து வருகிற கொடுமையே. ஆர்வமுள்ள ஆய்வாளர் கள் முனைவர் பட்டத்திற்குப் பதிவு செய்வதற்கு ஆயிரம் தடைக்கற்களைப் போடும் கல்விக் கழகங்கள் இன்றும் இல்லாமலில்லை. கல்விக் கழகங்களில் இவ்வாறு இன்று நடக்கும் கண்மூடித்தனமான முறைகேடுகள், அவற்றிற்குச் சாதகமாக அமையும் சட்டதிட்டங்கள், சட்டதிட்டங் களைச் 'செக்கு மாடுகள்' போன்று பின்பற்றும் கல்வி

அதிகாரிகளின் கபோதித் தன்மைகள்—முதனலாவற்றிற் கெல்லாம் நல்ல சவுக்கடி இந்நாளில் தரப்பட்டுள்ளது.

பேராசிரியருடைய சிறந்த கற்பனைகளையும் அநுபவ உண்மைகளையும் நகைச்சுவை உரையாடல்களையும் அவ்வப்போது துய்த்த மு. வ. அவர்கள் பேராசிரியர் ரெட்டியார் அவர்களை நோக்கி "நீங்கள் இந்தத் திறமை களையெல்லாம் பயன்படுத்தி நாவல்கள் எழுதலாமே" என்று கூறுவாராம். ரெட்டியாருடைய அத்தகைய படைப்பாற்றலெல்லாம் இந்நூலின்கண் அமைந்துள்ளன. மேலும் ஆனந்தரங்கம்பிள்ளை நாட்குறிப்புபோல எதிர்கால அறிஞர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் தமிழகத்தில் ஒரு கால கட்டத்தில் நிலவிய சமுதாய பொருளாதார கல்வி பற்றிய செய்திகளையெல்லாம் அறிந்து கொள்வதில் இவ்வரிசை நூல்கள் (ஐந்து) சிறப்பிடம் பெறும் என்பதற்கு ஐயமில்லை.

பேராசிரியர் ரெட்டியார் அவர்களுக்கு தன்னம்பிக்கை ஒரு தும்பிக்கை. எனினும் இத்தும்பிக்கை சோர்ந்துபோகும் போதெல்லாம் இவர்தம் இறை நம்பிக்கை அச்சோர்வைப் போக்கிப் புத்துயிர் கொடுத்திருப்பதைப் பேராசிரியர் ரெட்டியார் மிக உருக்கத்தோடு இந்நூலில் பல விடங்களில் சுட்டியிருப்பதைக் காண்கிறோம். மனிதனின் அறிவும் ஆற்றலும் தோற்றுப் போகும்போது ஆழ்ந்த இறை நம்பிக்கை அவனை எவ்வாறு உய்யுமாறு நிலை நிறுத்து கின்றது என்பதைப் பல அநுபவ நிகழ்ச்சிகளால் பேராசிரியர் உறுதிபடுத்துகிறார். இந்நூற் சிறப்புக்களில் இதுவும் கோடிட்டுக் காட்டற்குரியது.

எங்கள் பல்கலைக்கழக வளாகத்தில் பேராசிரியர் ரெட்டியாரின் சுவையான, உவமைகள் நிறைந்த உரையாடல்களைக் கேட்டு இன்புறும் நண்பர்கள் இவருக்கு Doctor of Simile என்று ஒரு பட்டத்தை வழங்குதல் வேண்டும் என்று நகைச் சுவையாகக் கூறுவர்; இந்தித்துறை அப்பட்டத்தை வழங்கியே மகிழ்ந்தது. இவ்வாறு எதைக்

கூறினாலும் உவமை ஒன்றைக் கூறி விளக்கும் போக்கை இவருடைய மொழி நடையில் காணலாம்.

பல்வேறு துறைகளில் ஈடுபாடு கொண்டு கற்று கேட்டு, கற்பித்து தாம் பெற்ற அநுபவங்களையெல்லாம் இவ்வுலகோடு பகிர்ந்து கொள்ளும் இந்த எழுத்தாளரைத் தமிழ்கூறு நல்லுலகம் சரியாகப் புரிந்து கொண்டு இவருயிரோடுஇருக்கும்போதே பெருமை செய்யவேண்டும். பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் பல ஆண்டுகள் நோயற்று வாழ்ந்து இன்னும் நூல்கள் பல எழுத எல்லாம் வல்ல எம்பெருமானான ஏகநாதர் அருள் செய்ய வேண்டும் என்று வேண்டி அமைகின்றேன்.

திருப்பதி—2
8-5-1990

—டாக்டர் தேவசங்கீதம்

புதுவை(மை)க்கவிஞர்

சுப்பிரமணிய பாரதியார்

ஒரு கண்ணோட்டம்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

மகாகவி பாரதியை ஏழு கோணங்களில் – பாட்டுக்கு ஒரு
புலவர், நாடு மொழி பற்றாளர், கல்விச்
சிந்துனையாளர், வைணவச்செல்வர், சக்திதாசர்,
சமரச நோக்கர், புதுக்கவிதை நாயகர் –
திறனாய்வு செய்யும் ஓர் அரிய நூல்

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

ISBN: 978-81-939317-2-1

eBOOK ~ *மின் நூல்*





அணிந்துரை

புதுவை(மை)க்கவிஞர்

சுப்பிரமணிய பாரதியார் 1991

ஒரு கண்ணோட்டம்

வழங்கியோர்:

டாக்டர் ந கடிகாசலம்


முதுநிலை ஆய்வாளர்

பன்மொழிக் கல்வித்துறை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை







டாக்டர் ந. கடிகாசலம்
முதுநிலை ஆய்வாளர்
பன்மொழிக் கல்வித் துறை
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

அணிந்துரை

பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் உழைப்பால் உயர்ந்த உத்தமர்; கனவிலும் பிறர்க்குத் தீங்கு நினையாதவர். பயன் கருதாது தமிழ்த்தொண்டாற்றி வருபவர். எளிய தமிழில் அறிவியல் நூல்களைத் தருபவர். அன்னார் புதுவைப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய அறக்கட்டளைச் சொற்பொழிவே ''புதுவை (மை)க் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார்: ஒரு கண்ணோட்டம்'' எனும் இந்நூலாக உருவெடுத்துள்ளது.

கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் பற்றிய இந்நூலில், மாபெரும் தேசியக் கவிஞரை ஏழு நோக்கில் காண்கிறார் பேராசிரியர். இது, 'சர் ஐசக் நியூடன் சூரிய ஒளியில் காணும் ஏழு நிறமாலை (SPECTRUM) *போல்' (ப. 3) என்று பேராசிரியரே குறிப்பிடுகின்றார்.*

பேராசிரியர் அவர்களின் நேர்மையை இங்குப் பாராட்டியாக வேண்டும். புதுவைப் பல்கலைக் கழகத்தில் அறக்கட்டளைச் சொற்பொழிவு ஆற்ற அவர் ஒப்புக்கொண்டதற்கு ஒரு காரணம்: 'இத்தகைய அறக்கட்டளைகளால் பல்கலைக்கழகங்கள் கரும்பு தின்னக் கூலி கொடுக்கின்றன'. (ப. 1). 'அறிவியலை அநுபவித்துக் கொண்டிருந்த என்னைத் திசை திருப்பித் தமிழுக்கு வரச் செய்தவை இவர்தம் பாடல்களே. இதனால், வித்துவான், எம்.ஏ., பிஎச். டி., வரை படிக்கச் செய்து தமிழையே என் பிழைப்பிற்கு வழியாக அமையச் செய்தன' (ப. 3). நூலின் இறுதியில், 'என் மனத்திலுள்ள கருத்துகளை ஏதோ ஒரு வகையில் வடித்துக் காட்டினேன். காட்டாதவை ஏராளமாக உள்ளன'(ப. 102) என்று குறிப்பிடுகிறார். இவ்வாறு உள்ளத்தில் உள்ளதை — உண்மையை — வெளிப்படையாகக் கூறிவிடுவதே பேராசிரியரின் சிறப்பான பண்பாகும்.

'பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேணும்' என்ற பேராசை கொண்ட பாரதியார் பாட்டுக்கு ஒரு புலவர் என்பதைப் பல்வேறு கோணங்களில் ஆணித்தரமாகப் பேராசிரியர் நிலைநிறுத்துகிறார். பாரதியின் தேசிய கீதங்கள், ஆங்கில மொழியிலுள்ள

தேசிய கீதங்களுக்குப் பொருட்சுவையிலும் இசைச்சுவையிலும் எள்ளளவேனும் தாழ்ந்தவை அல்ல' (ப. 6) என்பது பேராசிரியரின் கருத்தாகும்.

ஆழ்வார் பாசுரங்களில் ஆழங்கால்பட்ட பேராசிரியர், பாரதியாரின் பாடல்களில் காணப்படும் ஆழ்வார் பாசுரங்களின் செல்வாக்கை ஆங்காங்கே குறிப்பிட்டுச் செல்கிறார். அத்துடன், புதுக் கவிதைகளையும் அவர் விட்டு வைக்கவில்லை. பாரதியாரின் பாடல்களைத் திறனாய்வு செய்யும் வேளையில், தம் வாழ்க்கையில் நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளை—பாரதியார் பாடல்கள் தொடர்பானவற்றை—வெளிப்படுத்தவும் (பக்.12, 13) மறந்துவிடவில்லை. இதை ஓர் உத்தியாகவே கைக்கொள்கிறாரோ என்று கூட எண்ணத் தோன்றுகின்றது.

மொழியையும் இனத்தையும் நாட்டையும் இணைத்துப் பாடிய 'பாரதீயம்' பாரதியார் தம் இணையற்ற கொள்கை (ப.23) என்கின்றார் பேராசிரியர்,

கல்விச் சிந்தனையாளர் எனும் பகுதியில் பாரதியாரின் கல்விச் சிந்தனைகளை மிகத் தெளிவாகப் பேராசிரியர் அலசுகிறார். ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றிய அநுபவம் நிறைந்த பேராசிரியர், தாய்மொழியில் கல்வி கற்பதையும், அறிவியல் கல்வியைத் தமிழ்மொழி மூலம் பெறுவதையும் (பக். 33, 35) பாரதியார் பாடல்கள் வழிநின்று உறுதிப்படுத்துகின்றார். 'கலைச்சொற்களை உண்டாக்கிக்கொண்டு தாய்மொழியில் தொடங்க வேண்டும் என்பது, நீந்தக் கற்றுக்கொண்ட பிறகு நீரில் இறங்க வேண்டும் என்று எண்ணுவது போலாகும்' (ப. 33) எனச் சாட்டையடி தருகின்றார். 'புதுமுறைக் கல்வியைப் பற்றி பாரதியார் சிந்தித்ததாக ஊகம் செய்யத் தூண்டுகிறது' (ப.42) என்று பேராசிரியர் தெரிவிக்கின்றார்.

பாரதியாரை வைணவச் செல்வராகப் பேராசிரியர் காண்கின்றார். வருணாசிரம தர்மத்தைப் பற்றிப் பாரதியின் கண்ணன் கூறுவதைப்('நாலு குலங்கள் அமைத்தான்') படிக்கும்போது தந்தை பெரியாரே கண்ணனாக நின்று பேசுவது போல் (ப. 59) பேராசிரியர்க்குத் தோன்றுகிறது. 'இயற்கை அன்னையை இயலும்போதெல்லாம் பாராட்டுவது—போற்றுவது—பாரதியார் தம் அழுத்தமான சக்தி வழிபாட்டுக் கொள்கையைச் சார்ந்ததாகும்' (ப. 54) என்று பேராசிரியர் தீர்மானிக்கிறார். கோள்களின் ஆய்வுகள்

பிற்காலத்தில் நடைபெறலாம் என்ற சாத்தியக் கூறு களைப் பாரதியார் கனவு கண்டார் (ப. 55) என்றும் பேராசிரியர் கருதுகின்றார்.

"நிறந்தனிற் கருமை கொண்டான்—அவன்
நேயமுறக் களிப்பது பொன்னிறப் பெண்கள்"

எனும் பாரதியின் பாடல் வரிகளுக்குப் பேராசிரியர் தரும் விளக்கம்: 'இன்றைய கருமைநிறக் காளையர் பொன்னிற மேனி மங்கையரை விரும்புவதுபோல், கண்ணனும் அத்தகைய மனப்பான்மையைக் கொண்டிருந்தான் போலும்' (ப. 58). நடைமுறை உவமைகளை நகைச்சுவை யாக உதிர்ப்பதில் (ப. 91) பேராசிரியருக்கு நிகர் பேராசிரி யர்தான். 'உவமைச் சக்கரவர்த்தி' என்றால் அது பேராசிரியர் ஒருவராகத்தான் இருக்க முடியும். கற்றோர் கூட 'சங்கம்' அமைத்துக்கொண்டு 'கலாட்டா' செய்வதை (ப. 60) பேராசிரியர் எள்ளி நகையாடுகின்றார்.

வைணவதத்துவத்தைப் போலவே சைவ தத்துவத்தை யும் கரைத்துக்குடித்தவர் பேராசிரியர் என்பது சக்திதாசர் எனும் பகுதியில் (ப. 71-74) வெளிப்படுகின்றது. சக்தி பற்றிய மேலும் சில செய்திகளையும் (ப. 82) தருகின்றார்.

வசனமும் கவிதையும் ஒன்றாகுமா என்ற வினாவுக்குப் பேராசிரியர் தரும் விளக்கம் (ப. 99) ஏற்புடையதே. பாரதியார் புதுக்கவிதையின் பிதாமகன் (பாட்டன்) ஆகின்றார் (ப. 102) என்பது பேராசிரியரின் முடிவு.

'பாரதி, புதிய தமிழுக்குப் போடப்பட்ட பிள்ளையார் சுழி' என்பதில் ஐயமில்லை என்பது பேராசிரியரின் கணிப்பாகும்.

எளிய நடை, ஆழமான அறிவியல் பூர்வமான திறனாய்வுப் போக்கு, சிக்கலான சமய தத்துவங்களையும் எளிமையாக வெளிப்படுத்தும் பாங்கு. நடைமுறை உவமைகளை வாரி வழங்கும் பான்மை ஆகியவற்றால் பாரதியாரை ஒரு மாமனிதனாகக் காணும் "புதுவை (மை)க் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார்: ஒரு கண் ணோட்டம்" என்ற இந்நூல் தமிழன்னைக்குப் பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் சூட்டியுள்ள புத்தம் புதிய ஆபரணமாகும் என்றால் அது உண்மை; வெறும் புகழ்ச்சியல்ல.

வாழ்க பேராசிரியர்! வளர்க அவர்தம் தமிழ்தொண்டு!

சென்னை-113
நாள் : 18-7-1990

ந. கடிகாசலம்

பரகாலன் பைந்தமிழ்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

திருமங்கையாழ்வாரின் திருத்தலப்
பயணங்களையும், அவரது பாடல்களின்
அருமை பெருமைகளையும், நயங்களையும்
தமிழ் கூறும் நல்லுலகிற்கு தூய, எளிய
தமிழில் வழங்குகிறது இந்நூல்

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

ISBN: 978-81-939270-5-2

eBOOK ~ மின் நூல்





அணிந்துரை


பரகாலன் பைந்தமிழ் 1992

வழங்கியோர்:

பேராசிரியர் டாக்டர் A.V. ரங்காசாரி
பொருளாதாரத்துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்







ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம!

அணிந்துரை

பேராசிரியர் டாக்டர் A. V. ரங்காச்சாரி
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
பொருளாதாரத்துறைத் தலைவர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலை நகர்-608 002.

'தேனுடைக் கமலத் திருவினுக்கு அரசாகிய' தேவாதி தேவனை தொழுவதைவிடப் பெரிய இன்பம் இல்லை என்று எடுத்து இயம்பும் வகையில் சொல்மாலை முடித்த ஆழ்வார்கள் பன்னிருவர். இவர்களுள் காலத்தாலும், அரிய எளிய உபதேச முகத்தாலும் நமக்கு அருகே உள்ளவர் திருமங்கை ஆழ்வாராவர். கலியன் அருளிச் செயல் இல்லை என்றால், திவ்விய தேசத்து எம்பெருமான்களின் வடிவழகை உள்ளபடியே உணர்ந்து வழிபட வழியில்லை. ''விஷய ப்ரவணராகிய இவரைச் சாஸ்திரத்தைக் கொண்டு மீட்க வொண்ணாது; நம்மழகைக் காட்டியே மீட்க வேண்டும் என்று பார்த்து, தன்னழகை திவ்விய தேசம்தோறும் காட்டிக் கொடுத்தான் எம்பெருமான்'' என்று பரம காருணிகரான பெரியவாச்சான்பிள்ளை அழகாகப் பணித்தபடி.

அர்ச்சா திருமேனியில் உள்ள ஊற்றத்தை இவ்வாழ்வார் பாசுரங்கள் உண்டாக்குவதுபோல மற்றைய

ஆழ்வார்களின் பாசுரங்கள் உண்டாக்க மாட்டுவன அல்ல என்று சொல்ல இயலாத முறையில் அர்ச்சாநுபவம் மிகுந்திருக்கும் இவரிடத்தில். அவ்வநுபவத்தின் பெருமைக்குச் சேர, அழகிய சப்த ஜாலங்களும், வாத்திய அமைப்புகளும், பாடும் நாவுக்கும், கேட்கும் காதுக்கும், பேரின்பம் பயப்பனவாகும். பாடப்பெறும் பெருமாளும், அநுஸந்திக்கும் பெரியோர்களும், தம் நிலைமையை மறந்து இருக்கும் நிலையில் பாசுரங்களைப் பொழியும் அழகு இவர் ஒருவரதே. தம் பாடலில் எவ்வளவு ரஸத்தைக் கண்டால் "வெண் சங்கம் ஒன்று ஏந்திய கண்ண! நின் தனக்கும் குறிப்பாகில் கற்கலாம் கவியின் பொருள் தானே?" என்று பெருமாளையும் கூப்பிட்டு 'பாடல் இன்பத்தை அநுபவிக்க வாரீர்!' என்று அழைக்க இயலும். ஆசு, விஸ்தாரம், மதுரம், சித்ரம் என்ற நான்கு வகைக் கவிதைகளைப் பாடுவதன் மூலம், 'நாலுகவிப் பெருமாளாகத்' திகழ்ந்த இவ்வாழ்வார் தமிழ்க்காவியத்தின் கரைகண்டவரே. கலிகன்றி ஒலி செய்த இன்பப் பாடலாம் பெரிய திருமொழியின் ரஸத்தை "உண்டு தன்னுள்ளம் தடித்து அதனால் வலிமிக்க சீயம் இராமாநுசன்" என்பர் அமுதனார். நூல் துறை முற்றும் ஓதிய ஸ்ரீ பராசர பட்டர் தம்மைத் "திருநெடுந் தாண்டகம் கற்றோம்" என்று பெருமை கொள்வர். கவிதார்த்திக சிங்கமாகிய ஸ்ரீ வேதாந்தாசாரியரும் "கலியன் உரை கொண்ட கருத்துடையோர்" ஆவர். எம்பெருமானுடைய அர்ச்சாவதாரத்தில் உள்ள ஊற்றத்தாலே இவர் தம்மை "தேஹாத்ம வாதியாகக் கூறிக்கொள்வர்" என்றும், "ஆத்மாவை வெய்யிலிலே இட்டு, சரீரத்தை நிழலிலே வைத்தவர்" என்றும் பெரியோர் இவர் பெருமையைப் பேசுவர்.

ஆழ்வார்கள் மங்களாசாஸனம் செய்த திவ்ய தேசங்கள் 108-இல் 86 திவ்ய தேசங்களை நேரில் சென்று பாடிய பெருமை இவ்வாழ்வாருக்கே உரியது. இறைவன் வீற்றி

ருக்கக் கூடிய நிலைமையையும், அங்கே பாயும் ஆறு முதலானவற்றையும், திருத்தலங்களிலே உள்ள இயற்கை அழகினையும் திருமால் நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் உள்ள திருவுருங்களையும், திருத்தலங்களுக்கே உள்ள ஸ்தல மஹிமைகளையும், தல புராணம் கூறும் தேவர்கள் வணங்கிய பெருமைகளையும் வியந்து கூறுவதால், இவை செவி வாயிலாக உணர்ந்து கூறிய செய்திகள் இல்லை என்பது உற்று நோக்க விளங்கும். ஓரிடத்திலேயே இருந்து திருத்தலங்களைப் பாடி இருந்தால், நாடெங்கும் பரவியுள்ள மக்கள் அப் பாடல்களைக் கேட்டு இன்புற முடியாது. எனவே, திருமால் சமயம் செழிக்க, திருத்தலங்கள்தோறும் சென்று, அங்கே கோயில் கொண்டுள்ள இறைவனைப் பாடிப் போற்றினார் என்பதற்கு இவர் பாடிய பாடல்களே சான்றாகும்.

இத்தகைய ஆழ்வாரின் திருத்தலப் பயணங்களையும் ஆழ்வார் பாடல்களின் அருமை பெருமைகளையும், நயங்களையும், **பரகாலன் பைந்தமிழ்** என்னும் இப் புதிய நூலின்கண் பேராசிரியர் **டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்கள்** தமிழ் கூறும் நல்லுலகிற்கு ஆக்கித் தந்துள்ளார்கள். 'பரகாலன் பைந்தமிழ்' பேராசிரியர் அவர்களது அடிமனத்தில் ஆழமாகப் படிந்து அநுபவிக்கப் பெற்று, அந்த அநுபவம் பீறிட்டுக் கொண்டு நூல் வடிவமாக அமையப் பெற்றது என்பதனை வரிகள்தோறும் உய்த்துணர முடிகிறது.

முதல் இயலில் திருமங்கை மன்னனின் பிறப்பு வளர்ப்பு, திருமணம் ஆகியவற்றை ஆசிரியர் வெகு அழகாகக் கூறி, திருமங்கை மன்னன் 'திருமங்கையாழ்வாராக' மாறிய காரணங்களை— குறிப்பாகக் குமுதவல்லியிட்ட கட்டளையை— "திருவிலச்சினையும், பன்னிரு திருமண் காப்பும் உடையவர்க்கொழிய மற்றவர்க்கென்னைப் பேசவொட்டேன்" என்றதை முதலில் கூறி, அவர் திருநறையூர் நம்பியிடம் அதை முறைப்படிப் பெற்று வந்தபோது

'அரசர் பெருமானே! தினமும் 1008 திருமால் அடியார்க்கு அமுது செய்வித்து, அவர்கள் ஸ்ரீபாத தீர்த்தமும், போனகம் செய்த சேடமும் உண்டு, ஓராண்டுக் காலம் வைணவ நெறியுடன் ஒழுக வேண்டும்' என்று அறிவிக்க, அதனையும் அவர் உறுதியுடன் நிறைவேற்றியதை உகந்த அரங்க நகரப்பன், அவரை உய்விக்க, பிராட்டியாரோடு நேரே எழுந்தருளியபோது, பெருமாளை வெருட்டி, திருமந்திரம் உபதேசிக்கப் பெற்ற வரலாற்றைச் சுவை படக் கூறியுள்ளார் பேராசிரியர் ரெட்டியார்.

இரண்டாவது இயலில், ஆழ்வார் வயலாலி மணவாள னிடமிருந்து உபதேசம் பெற்ற திருமந்திரத்தின் வைபவத் தையும், இதனை எம்பெருமான் வதரியில் தானே சிஷ்ய னுமாய் ஆசார்யனுமாய் நின்று உபதேசித்தது, பின் அதனை ஆழ்வார்க்கு உபதேசித்த வரலாறு, இம் மந்திரத் தின் சீர்மையை ஆழ்வார் உணர்ந்து, தமது முதல் பதிகத்தில் "நன்று நானுய்ய நான் கண்டு கொண்டேன்" "செல்கதிக்கு உய்யுமாறெண்ணி நல்துணையாகப் பற்றி னேன்", "நலந்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்" என்று வெளியிட்டு, "நற்பொருள் காண்மின், நாடிநீர் உய்மின், நாராயணா என்னும் நாமம்" என்று கூறி, திரு நறையூர் பாசுரத்தில் "நானும் சொன்னேன். நமரும் உரைமின் நமோ நாராயணமே", "நங்கள் வினைகள் தவிர உரைமின் நமோ நாராயணமே" என்றும், திருவேங்கடப் பதிகத்தில் "பேசுமின் திருநாமம் எட்டெழுத்தும்" என்று எட்டெழுத்தாகிய திருமந்திரம் ஸர்வாதிகாரம் என்று விளக்கி, திருக்கண்ணபுரத் தெம்பெருமானிடம் தாம் கற்ற திருமந்திரப் பொருள் சிறப்பு 'பாகவத சேஷத்வமே' என்பதை,

மற்றும்ஓர் தெய்வம் உளதென்று இருப்பாரோடு
உற்றிலேன்—உற்றதும் உன்னடியார்க் கடிமை
மற்றெல்லாம் பேசிலும் நின்திரு வெட்டெழுத்தும்
கற்றுநான் கண்ண புரத்துறை அம்மானே

என்று கோடிட்டுக் காட்டியுள்ளார்கள் (பக்கம் 26).

மூன்றாம் இயலில், திருமங்கையாழ்வாரின் வாழ்க்கை பற்றிய விவரங்களை அகச் சான்றுகளைக் கொண்டு, இவர் ஆலி நாட்டிற்கும் குறையல் பதிக்கும் தலைவர், பெருஞ் சேனையை உடையவர், வாட்போரில் பகைவர் உடல் துணிக்க வல்லவர், பெருஞ் செல்வமுடையவர், புலவர் போற்றும் புலமையும், கவிபாடும் திறமையும், வள்ளண்மையும் உடையவர், பரம்பரை பரம்பரையாகத் திருமால் அடியவர், மறந்தும் புறந்தொழாது திருப்பதிகள் தோறும் சென்று பரவும் அடியவர், திருக்குடந்தை ஆராவமுதனிடம் அளவற்ற ஈடுபாடு கொண்டவர் என்பவற்றையெல்லாம் ஆசிரியர் அழகாக விளக்கி யுள்ளார். சீகாழியில் ஞானசம்பந்தர் சந்திப்பைக் கூறி, ஆழ்வார் கவிபாடி பரிசாக வேல்பெற்ற குறிப்பையும் வரைந்துள்ளார் (பக். 38). இந்த வரலாறு குருபரம்பரை மட்டுமன்றி, உடையவர் காலத்திலே வழங்கப்பட்ட திவ்யசூரி சரிதம், ப்ரபன்னாம்ருதம் முதலிய நூல்களிலும் கூறப்பட்டுள்ளது. மேலும் சீகாழிப் பதிகத் திருமுகத்துப் பாசுரத்தில் ஆழ்வார் தம்மை **கொற்றவேல் பரகாலனாக** சிறப்பித்துக்கூறிக் கொண்டதும் இதற்குச் சான்று பகரும்.

ஆழ்வார் திருவரங்கத்துத் திருப்பணிகள் பல செய்தமையை,

> மாடமாளிகை சூழ்திரு வீதியும் மன்றுசேர்
> திருவிக்ரமன் வீதியும்
> ஆடல்மாறன் அகளங்கன் வீதியும் ஆலிநாடன்
> அமர்ந்துறை வீதியும்
> கடல்வாழ் குலசேகரன் வீதியும் குலவிசை
> மகேந்திரன் வீதியும்
> தேடரிய தர்மவர்மா வீதியும் தென்னரங்கர்
> திருவா வரணமே.

என்று கோயில் ஒழுகு அறிவிக்கும். இப்பணிக்கு, நாகப் பட்டினத்தில் இருந்த பொன் பதுமையும் பயன் பட்டது என்பதைப் பட்டர்,

ஜித பாஹ்ய ஜிராதி மணி ப்ரதிமா
அபி வைதிகயந் நிவ ரங்க புரே
மணிமண்டப வப்ரகணார் விததே
பரகால கவி: ப்ரணமே மஹிதாத்.

என்று தமது ரங்கராஜஸ்தவத்திலும், பெரிய திருமடல் 137 வது கண்ணி வ்யாக்யானத்தில் ''என்ன பட்டணத்தே புக்கான்? இடைச்சேரியன்றோ?—என்ன மகுட பங்கம் பண்ணினான்? துன்னு படலன்றோ?—என்ன ப்ரதிமை எடுத்தான்? வெண்ணெயன்றோ? என்ன திருப்பணி செய்தான்? தன் வயிறு வளர்த்தான் அத்தனையன்றோ? திருமங்கையாழ்வாரைப்போலே பரார்த்தமாக களவு காண்கிறதன்று.'' என்று வ்யாக்யான சக்ரவர்த்தியான ஸ்ரீ பெரிய வாச்சான் பிள்ளை வ்யாக்யான பங்க்திகளும், அதே கண்ணிக்கு அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வ்யாக்யானத்தில் 'களவு காண்பது துச்சமான தயிரும் வெண்ணையுமன்றோ! பௌத்த ப்ரதிமையோ? ஏதேனுமொரு திருமதிள் செய்கைக்காக வன்றோ''— என்ற பங்க்தியும் பக்கம் 40ல் கண்டுள்ள பேராசிரியரின் ஐயத்தைத் தெளிவிக்கும்.

நான்காவது இயல் முதல் 8 இயல்கள் வரை திருத்தலப் பயணம் பற்றியவை. இப் பயணத்தில் திருமங்கையாழ்வார் மேற்கொண்டதாகப் பெரிய திருமொழி அமைப்பில் உள்ள திருத்தலப் பயண முறையைத் தவிர்த்து, ஆசிரியர் தாமாகவே ஒரு வழிப்பயண முறையில் அமைந்துள்ளார். திருநாங்கூர்த் திருப்பதிகளை அநுபவிக்கும்போதும், பெரியவர்கள் நிர்வஹித்துள்ள பெரிய திருமொழி அமைப்பில் உள்ள வரிசையில்லாது புது வழியால் பயணத்தை விவரித்துள்ளார்.

வடநாட்டுத் திருத்தலப் பயணத்தில் திருப்பிருதி, வதரித்திருமலை, சாளக்ராமம், வடமதுரை, திருவாய்ப்

பாடி, பிருந்தாவனம், திருப்பாற்கடல், அயோத்தி, நைமிசாரணியம், துவாரகை, சிங்கவேழ்குன்றம், திருவேங்கடம் ஆகிய 12 வடநாட்டுத் திருப்பதிகளின் அமைப்பு, ஆழ்வார் காட்டும் இயற்கைச் சூழ்நிலை, புராண வரலாறு, ஆழ்வார் தமது பாசுரங்களால் எம்பெருமானை அநுபவித்துப் பாடிய பாங்கு, அப் பாசுரங்களின் வியாக்யான நயங்களில் ஆசிரியர் ஈடுபாடு ஆகியவை படிப்பவருக்கு நல்விருந்தாக அமைந்துள்ளன. நைமிசாரணியத்திலும், திருவேங்கடத்திலும், ஆர்த்தியின் கனத்தாலே தம் குற்றங்களை விரிவாகப் பேசி, பெரிய பிராட்டியாரை முன்னிட்டுப் பிரபத்தி பண்ணியும், அகோபிலத்தில் எம்பெருமானின் சந்நிதான மகிமையினால் மிருகங்களும் பகவத் பத்தியில் திளைப்பதை ஆழ்வார் பாசுரங்கள், அவற்றின் வ்யாக்யானம் கொண்டும் ஆசிரியர் விளக்கியிருப்பது படித்து இன்புறத் தக்கது.

தொண்டை நாட்டுத் திருத்தலப் பயணத்தில், திருவள்ளூர், திருநின்றவூர், திருவல்லிக்கேணி, திருநீர்மலை திருக்கடல்மல்லை, திருஇட எந்தை, திருக்கடிகை ஆகிய ஏழு பதிகளை ஓர் இயலிலும், காஞ்சித் திருத்தலங்கள் பதினைந்தினை ஒரு தனி இயலிலும், விளக்கியுள்ளார்கள். திருக்கடன்மல்லை பெருமாளின் சயனக்கோலத்தை விளக்குமிடத்து, 108 திவ்ய தேசங்களில் இருபது தலங்களில் திருமால் சயனக்கோலம் கொண்டுள்ளதையும், சயன கோலங்களின் வகைகளையும் தெரிவித்து, அவ்வூர்த் திருமொழியில், திருமங்கை மன்னன் பகவத்பக்தியின் எல்லை நிலமான பாகவத பக்தியில் தாம் ஊறினபடியை,

> தண்ணார்ந்த கடல்மல்லைத்
> தலைசயனத் துறைவாரை
> எண்ணாதே இருப்பாரை
> இறைப்பொழுதும் எண்ணோமே

என்ற பாசுரத்தை எடுத்துக் காட்டியுள்ளார். இருஇட எந்தையில் நாயகி பாவனை அடைந்த ஆழ்வாரின் தாய்ப்பாசுர நயத்தை எடுத்துக் கூறும்போது, 'சேதநனுடைய செயல் தொகுதிகள் யாவும் பேற்றுக்கு சாதனம் அன்று; எம்பெருமானுடைய திருவுள்ளத்தில் இயல்பாகவே சுரக்கும் இரக்கமே பலனைப் பெறுவிக்க வல்லது' என்ற சீரிய மறைப்பொருளை பேராசிரியர் கூறியுள்ளது ஆழ்ந்து அநுபவிக்கத் தக்கது.

காஞ்சித்தலப் பயணத்தில் 'திரு அட்டபுயங்கரம்' என்று திவ்விய தேசத்திற்குப் பெயர் கொடுத்து, ஆனால் அட்ட புயகரம் என்ற திருநாமமே பொருத்தமுடையது என்பதனைத் தெரிவித்து, இப்பதிக்கு ஆழ்வார் நாயகி பாவனையில் மகள் பாசுரமாக அருளிச் செய்த பாசுரங்களை விளக்க, காதல் வெறி, பக்தி வெறி ஆகியவற்றின் தன்மையை முதலில் தெரிவித்து, அந்தப் பின்னணியில் பாசுரங்களின் நயத்தை ஒரு நாடகக் காட்சிபோல் சித்திரித்துள்ளது பேராசிரியரின் சொல்வளம், பாசுரங்களை அநுபவித்த பாங்கு, அதில் ஆழங்கால்பட்டமுறை இவற்றைக் கண்டு மகிழலாம். ஆழ்வார் காலத்தில் தனிச் சந்நிதியில் சீரும் சிறப்புமாக விளங்கி, ஆழ்வார் மங்களா சாஸனத்தைப் பெற்ற நிலாத்திங்கள் துண்டப்பெருமாளும், கள்வனூர் பெருமாளும்பிற்காலத்தில் சிவாலயத்தின் பிராகாரத்தில் ஒருபுறத்தில் 'ஒண்டிக் குடித்தனமாக' எழுந்தருளியிருப்பது எண்ணி வருந்தத்தக்கது. பேராசிரியர் அவர்கள் ''மறந்தும் புறந்தொழா மாந்தர்'' நிலையிலுள்ள சில குறுகிய நோக்கமுடைய வீர வைணவர் தேவையற்ற தம் பத்தினித்தனத்தால் வழிபடாது இருப்பது பரந்த நோக்கு உடைய வைணவர்களுக்கு வருத்தத்தை விளைவிக்கின்றதாக, முதலில் வீர வைணவர்களைச் சாடி, பரந்த நோக்குடைய வைணவர்கள் என்று ஒரு போலிச் சமரஸத்தை கற்பனை செய்து'' எம்பெருமானே அவர்கள் பரிதாப நிலை கண்டு

கழிவிரக்கம் கொள்ளுவதாகச்'' சித்திரிப்பது பேராசிரியரின் உண்மை மனநிலை தெரிவிக்கின்றது.

நடுநாட்டுத் திருத்தலப் பயணத்தில், நடுநாடு என்பதன் சிறப்பு, அசித்தை எம்பெருமான் உடலாகக் கொண்டிருப்பதால் அழகு தவழும் இடங்களில் எம்பெருமான் கோயில் கொண்டுள்ள தன்மை ''கோங்கரும்பு, சுரபுன்னைக் குரவுஆர் சோலைக் குழாம் வரிவண்டு இசை பாடும் பாடல்கேட்டு தீங்கரும்பு கண் வளரும்'' என்ற பாடல் பகுதிக்கு பேராசிரியர் தேனும் பாலும் அமுதும் கன்னலுமாக அளித்துள்ள பொருள் நயம் ஆழ்ந்து அநுபவிக்கத்தக்கது. திரு அயிந்திரபுரப்பயணத்தில் வண்டு என்பதின் உள்ளுறைப் பொருளை ஆசார்ய ஹ்ருதய நூலை ஒட்டி அளித்துள்ள விளக்கமும், அதனைக் கொண்டு திவ்விய தேசப் பாசுரத்தில் பல விளக்கங்களும், பேராசிரியரின் ஆழ்ந்த ஞானத்தையும், அதில் அவர் ஆழ்ந்து, நம்மையும் தோய்ந்து அநுபவிக்கச் செய்வது உணரத்தக்கது.

சோழ நாட்டுத் திருத்தலப் பயணத்தை, 'ஈரிருபதாம் சோழம்' என்ற 40 தலங்களையும் பேராசிரியர் 158 பக்கங்களில் மூன்று பகுதிகளாகப் பிரித்து, அநுபவிக்கிறார். திரு நாங்கூர்த் திருத்தலப் பயணத்தில் ஊர் வளம், தலச் சூழ்நிலை, தலத்து எம்பெருமான் சிறப்புகள், தத்துவக் கருத்துக்கள் ஆகியவற்றை அழகாக அநுபவிக்கச் செய்கிறார். மேலும், இந்த திவ்வியதேசப் பயணத்தில் ஆழ்வார் ஆங்காங்கே இந்த திவ்விய தேசம் பற்றி அருளியுள்ள பாசுரக் குறிப்புகளையும் தொகுத்து, ஆழ்வார் அநுபவ உணர்ச்சிகளையெல்லாம் படம் பிடித்துக் காட்டுகிறார்.

சிறுபுலியூரில் பாகவத வைபவத்தை ஆழ்வார் அருளிச் செய்துள்ளதைப் பேராசிரியர் அவர்கள் ''சிறுபுலியூர் என்ற திருத்தலமும் வேண்டா; அங்குள்ள சல சயனத்திருக்

கோயிலும் வேண்டா; அங்குக் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானும் வேண்டா; அத்திருக்கோயிலைத் தொழுவதையே இயல்பாக உடைய பாகவதோத்தமரின் திருவடிகளே சரணம்'' (பக்கம் 24) என்று கூறியுள்ளது படிப்பவர் நெஞ்சை நெகிழச் செய்கின்றது.

பாண்டிநாட்டுத் திருத்தலங்களை 28 பக்கங்களிலும், மலைநாட்டு 5 திருப்பதிகளை 7 பக்கங்களிலும் விவரித்து, ஆழ்வாரின் திருத்தலப்பயணத்தை நிறைவு செய்கிறார். இந் நூலினைப் படித்த நமக்கும் நேரில் திருத்தலப் பயணம் சென்ற மன நிறைவு ஏற்படுகிறது.

''**அருளிச் செயல்கள்**'' என்ற தலைப்பில் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த ஆறு பிரபந்தங்களின் சாராம்சமும், மடல் பற்றிய விபரங்களும் கூறப்பட்டுள்ளன. தமது முதற் பிரபந்தமான பெரிய திருமொழியில் 86 அர்ச்சாவதார திவ்விய தேசஎம்பெருமான்களை மங்களாசாஸனம் செய்து, பத்தாம் பத்துமுதற்கொண்டு அவதார அநுபவத்தில் ஈடுபட்டு இராமாவதாரத்தை இராட்சசர் பாவனையிலும், கிருஷ்ணாவதாரத்தை யசோதை பாவனையிலும், மற்ற அவதாரங்களின் மேன்மையோடு கிருஷ்ணாவதாரத்தின் எளிமையைச் சேர்த்து அநுபவித்து, கடைசியில் பிரளயாபத்தில் பாதுகாத்த எம்பெருமானையே கிட்டி உய்யும்படி உபதேசித்து, எம்பெருமான் திறத்தில் ஈடுபடாத அவயவங்கள் பயனற்றவை என்று தெரிவித்து, கடைசி திருமொழியில் தேஹ ஸம்பந்தத்தை அறுத்துத் தந்தருள வேணும் என்று எம்பெருமானைப் பிரார்த்தித்து, முதல் பிரபந்தத்தைத் தலைக்கட்டினார். இரண்டாவது பிரபந்தமான திருக்குறுந்தாண்டகத்திலே பசி மிகுதியாகும்வரை சோறிடத் தாமதம் செய்யும் தாயைப்போல, தன்னை அநுபவிப்பதற்குத் தேவையான பெருவிடாய் பிறப்பித்த எம்பெருமான் முகம் காட்டாதொழிய, அவனை விட்டுக் கணமும் தரிக்கவொண்ணாமல்

எம்பெருமானை வாயினால் பேசியும், தலையாலே வணங்கியும், நெஞ்சாலே நினைந்தும் தரிக்கப் பார்க்கின்றார்.

இவ்வநுபலம் மேலும் விடாயை மிகுதியாகப் பிறப்பிக்க, திருவெழுக்கூற்றிருக்கையிலே ஆராவமுதனை "நின் அடியிணை பணிவன் வருமிடரகல மாற்றோ வினையே" என்று ஆர்த்தியோடு சரணம் புகுந்தும் அவனைப் பெறாமையாலே, கண்ணாஞ் சுழலையிட்டு இரண்டு தலையை அழித்தாகிலும் அவனை முகங்காட்டச் செய்வோம்" என்று உறுதி பூண்டு, மடலெடுக்கத் தொடங்கி, சிறிய திருமடலில் "அவதாரங்களில் உண்டான நீர்மையை அழிக்கிறேன்" என்றும், பெரிய திருமடலில்,' நீர்மைக்கு எல்லை நீலமான கோயில்களில் நின்ற நீர்மையையும் அழிக்கிறேன்" என்றும் "இனியும் காட்சி கொடுக்காவிடில் மக்கள் அனைவரும் எம்பெருமானிடம் நம்பிக்கை இழப்பர்" என்று எண்ணிய எம்பெருமான் முகம் காட்ட, தாம் அவனைப் பெற்ற படியை திருநெடுந்தாண்டகத்திலே அநுஸந்தித்துத் தலைக் கட்டுகின்றார்.

அகப் பொருள் தத்துவம், தாய், மகள், பாசுரங்கள் — தூது, ஆகிய இயல் விளக்கங்களில், ஆழ்வார்கள் தாமான தன்மையைவிட்டு "பெண் பாவனையை ஏறிட்டுக் கொள்ளுதல் எதற்கு?" என்ற வினாவினை எழுப்பி (பக். 353) "ஆழ்வார்கள் பெண் தன்மையைத் தாமாக ஏறிட்டுக் கொள்கின்றனரல்லர். இந்நிலை (அவஸ்தை) தானே பரவசமாக வந்து சேருகிறது" என்று அறிவித்து, இதற்கு அடிப்படையான தத்துவக் கருத்துகளை ஆசாரிய ஹ்ருதயத்தில் கூறப்பட்டுள்ள "ப்ரஜ்ஞாவஸ்தைகள்" என்பதனை அஷ்டாட்சர விவரணம் கொண்டு விளக்கி, பரபக்தி, பரஞானம், பரமபக்தி முதலான பக்தியின் கொடுமுடிகளை தெரிவித்துள்ளது மிகவும் பாராட்டத் தக்கது.

தோழி, தாய், மகள் பாசுரங்கள், தூது விளக்கங்கள் இந்த நூலிலேயே மிகவும் சிறந்த பகுதியாகும். பரகாலர் தாய் நிலையில் பண்பட்ட தமிழ் பாடுகையில் தம் மகளைக் கண்டு பேசுவதாகவும், அவள் நோய் பற்றி அறிய விரும்புவதாகவும் திருமாலிடம் தம் மகளின் நிலையை எடுத்துப் பேசுவதாகவும், திருமாலோடு சென்ற மகளைக் குறித்து இரங்குவதாகவும் பல நிலைகளில் பாடுகின்றார். பரகாலர் தாய் நிலையிலிருந்து பாடும் திருப்பதிகள், திருவிடஎந்தை, திருவாலி, திருப்பார்த்தன்பள்ளி, திருவரங்கம், திருக்கண்ணபுரம், திருமாலிருஞ்சோலை, திருநெடுந்தாண்டகம் இடைப் பத்து (11·20) நற்றாயாகவும், செவிலித் தாயாகவும் பாவித்துப் பாடும் பாடல்களின் உருக்கம் தாயின் உள்ளன்பைக் காட்டுவனவாகும்.

திருமங்கையாழ்வார் பெண் தன்மையை ஏறிட்டுக் கொண்டு. அட்டபுயகரம், திருவாலி, திருக்கண்ணபுரம் திருப்புல்லாணி முதலிய திவ்விய தேசத் தெம்பெருமான்களைக் காதல் மீதூரப் பாடுகின்றார். பரகால நாயகியின் உள்ளம் உணர்ந்த எம்பெருமான் அட்டபுயகரத்தில் ஸேவை ஸாதிக்க, இவ்வாழ்வார் நாயகி இவரை யார் என்று அறிந்து கொள்ள முடியாமல், ''யார் கொல் என்ன, அட்டயபுயகரத்தேன் என்றாரே'' என்கிறார்.

இறைவனோடு கலந்து பிரிந்த பரகால நாயகி, பிரிவினால் துன்புற்று, தலைவன் மீண்டும் வாராமையினால், அவனைப் பிரிந்து தரிக்க மாட்டாமையினால், தானே அவன் இருப்பிடம் நோக்கிச் செல்ல, மேனி தளர்ச்சியுற, கண்களில் கண்ட வண்டு, குருகு முதலிய பறவைகளைத் தூது சொல்லி தன் ஆற்றாமையை வெளியிடுகிறாள். திருக்கண்ணபுரத் திறைவனிடம் கருத்து வைத்த பரகால நாயகி, தன்னுடைய வளைகள் கழன்று விழுவதைக் கூறுகிறாள். திருப்புல்லாணிப் பதிகத்தில் ''மனமே! நீ இங்கு வருந்துவதால் பயனில்லை. காதல்

கொண்ட வள்ளல் விளங்கும் புல்லாணி சென்று சேர். 'ஒரு நாளும் உன்னைப் பிரியமாட்டேன்' என்றவர் ''இப்போது பிரிந்து சென்று விட்டார். அவர் இருப்பிடம் சென்று வணங்குவோம்'' என்று கூறி புல்லாணி செல்ல புறப்படுகின்றாள். தான் படும் துன்பம் எல்லாம் கூறி புல்லாணியம்மானை அடையத் துடிக்கின்றாள் பரகால நாயகி.

தோழியோடு கொண்ட நாயகி அநுபவங்களை விளக்கும் பாசுரங்கள் இறைவனையும் கட்டுப்பண்ணி, நம்மையும் கரைந்துருக வைப்பவை. பக்தி இலக்கிய உலகில் ஒப்பற்ற இப் படைப்புகளின் சிறப்பினைப் பேராசிரியர் அவர்கள் நாடகமாகவே படம் பிடித்துக் காட்டுகின்றார். திருத்தண்காவையும், திருக்குடந்தையையும், திருக்கோவலூரையும் வாயாரப் பாடின விடத்திலும் மனநிறைவு பெறாமையாலே பரகால நாயகி ஆடவும் தொடங்குகிறாள். இப்படி இவள் ஆடுகின்றபடியைக் கண்ட அன்னை, ''நங்காய்! நங்குடிக்கு இதுவோ நன்மை?'' என்கிறாள். அதாவது சேதந இலாபம் ஈசுவரனுக்கு புருஷார்த்தமேயன்றி, ஈசுவர இலாபம் சேதநனுக்குப் புருஷார்த்தமன்றே; அவனுடைய பேற்றுக்கு அவன் தானேயன்றோ பதற வேண்டும்? நீ இங்ஙனம் பதறலாமா?'' என்ற பேராசிரியரின் விளக்கம் ஸம்பிரதாயத்தின் தோய்ந்த பொருளை நயமாக எடுத்துரைத்துள்ளார்கள்.

ஆழ்வாரின் இறையநுபவம் என்ற தலைப்பில் திருமங்கை ஆழ்வாரின் பகவதநுபவம் தாமாகவும், நாயகி பாவத்திலும் அமைந்தது என்று (பக் 439) கூறி, திருநாமங்களைச் சொல்லி அநுபவித்தல், பகவத் குணாநுபவம், வடிவழகை வருணித்துப் பேசுதல், திவ்விய தேச அநுபவம், மனத்தை ஆற்றுப் படுத்துதல் ஆகியவற்றைக் கூறி, ஆழ்வாரின் பரத்துவ, வியூக, விபவ அவதாரங்களில் அநுபவம், மற்றும் அன்னமாதி அருமறை

கள் அருளிச் செய்தது, அயக்ரிவ, கல்கி அவதாரங்கள், கஜேந்திரனுக்கு அருளியது ஆகியவற்றை அழகாக எடுத்துக்கூறிப் பேராசிரியர் ஆழங்கால் படுகின்றார்கள்.

நிறைவாக தத்துவக் கருத்துக்களை தத்துவம், இதம், புருஷார்த்தம் என்ற தலைப்பில், சித்து, அசித்து, ஈசுவரன் என்று தத்துவத் திரயத்தையும், சரீர-சரீரி பாவனை, இறைவனின் ஐந்து நிலைகள், பாகவத வைபவம், இதம்-சித்தோபாயம், சாத்தியோபாயம், பிரபத்தி நெறி, புருஷகாரம் மற்றும் புருஷார்த்தம் ஆகியவைகளின் விளக்கங்களை ஆழ்வார் பாடல்களைக் கொண்டு நுட்பமாகப் பொருள் சொல்லி அருமையாகத் தெளிவாக்கியுள்ளார்கள் பேராசிரியர் அவர்கள். வைணவ சமய நெறியின் தத்துவப் பொருளை விளக்கும்போது, அர்த்த பஞ்சக விளக்கங்களையும் ஆங்காங்கு இரஹஸ்ய கிரந்த நூல்களின் துணைகொண்டு மிக அற்புதமாக எழுதியுள்ளார்கள்.

ஆக, பேரரசிரியர் அவர்கள் தமது 77-வது வயதில், வயது முதுமையைப் பாராது அறிவு முதுமையையே பற்றாசாகக் கொண்டு, 555 பக்கங்களில் பரகாலன் பனுவல்களின் சாரத்தைப் பிழிந்து, வியக்கத்தக்க ஈடுபாட்டோடும், தோய்ந்த உள்ளத்தோடும், தம்மையே மறந்து ஆழ்வாராகவே ஒன்றி விடுகின்றார். பாசுரங்களின் சொல் வளம், உரை ஆசிரியர்களோடு பேராசிரியரும் பாசுரப் பொருள்களை அநுபவித்த பாங்கு, இறை அநுபவத்தில் ஆழ்வார் ஆழங்கால்பட்ட முறை ஆகியவைகளோடு இந் நூலைப் படிப்போரின் உள்ளங்களையும் இக்கட்டுரைகள் ஆழ்வாரின் பாசுரங்களைச் சேவித்து அநுபவிக்கத் தூண்டுகிறது. திருத்தலப் பயணக் கட்டுரைகளை படிக்கும் போது நாமும் ஆழ்வாரோடும் ஆசிரியரோடும் இத்திருத் தலங்களை எல்லாம் நேரில் சேவித்த பேற்றைப் பெற்று விட்டதான திவ்விய அநுபவத்தைப் பெறுகிறோம். பதரி வரை யாத்திரை சென்ற அடியேனுக்கே இந்த அநுபவம்

ஏற்பட்டது எனில் மற்றவர்களுக்கு இந்நூல் திருத்தப்பலப் பயணத்தில் ஆழ்ந்த ருசியை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இதுகாறும் ஸ்ரீவைஷ்ணவ உலகில் 'பரகாலன் பைந்தமிழ்' பற்றிய இம் மாதிரியான அரிய பெரிய நூல் வெளிவந்தது இல்லை. திருமங்கை ஆழ்வார் பனுவல் களின் எல்லா நலன்களையும் வியாக்யானங்கள், இரஹசிய நூல்கள், சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம், கம்ப ராமாயணம் ஆகிய நூல்களின் உதவி கொண்டு பூரண மாக ஆய்வு செய்து, 341 பக்கங்களில் திருத்தலப்பயண அநுபவங்களையும், 218 பக்கங்களில் பரகாலன் பனுவல் களின் தத்துவங்களையும் மிக எளிய முறையில் படைத் துள்ளது பேராசிரியர் அவர்களின் அரிய சாதனையாகும். இந்நூல் பேராசிரியர் அவர்களின் 96 வது வெற்றி நூல். இந்நூலைத் தமிழ் கூறு நல்லுலகம் நன்கு வரவேற்கக் கடமைப்பட்டுள்ளது''. அரும்பாடுபட்டு, ஒரு குழுவாக எழுதக் கூடிய இந் நூலினை, உழைப்பின் உருவமாய்த் திகழும் பேராசிரியர் அவர்கள் தாம் ஒருவராகவே எழுதிப் படைத்துள்ளது அவரது அயராத ஊக்கத்தையும் பரநத உள்ளத்தையும் காலத்தைப், பொன் போன்று போற்றி, பிறர்க்காகவே வாழ்வதையும் எடுத்துக்காட்டு கின்றது. இத்தகைய உயர்குணச் செம்மல் ஆக்கிய இந் நூலுக்கு அணிந்துரை எழுதப் பணிந்த பேராசிரியருக்கு எனது பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும், வணக்கத்தையும், நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க வைணவம், வளர்க வைணவ நூல்கள்.

அன்பன்,
A. V. ரங்காசாரி

தில்லைத் திருச்சித்ரகூடம்
14-12-92

வாய்மொழியும் வாசகமும்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

இக்கட்டுரைகள் இறையுண்மை, இறைத்தன்மை, இறையநுபவம் எனும்
முப்பெரும் உண்மைகளை அருளாளர்களின் திருவாக்கு,
ஆசாரியர்களின் மெய்யுணர்வு, அறிவியலாரின் ஆய்வு நோக்கு
எனும் முத்திறக் கோணங்களின் வழி ஆய்ந்து தெளிவிக்கும்
நோக்கத்தை அடி நாதமாகக்கொண்டு விளங்குகின்றன.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939685-1-2



eBOOK ~ மின் நூல்



அணிந்துரை


வாய்மொழியும் வாசகமும்

1993

வழங்கியோர்:

பேராசிரியர் டாக்டர் அ.அ.மணவாளன்
தமிழ்மொழித் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்







அணிந்துரை

பேராசிரியர் டாக்டர். அ. அ. மணவாளன்
(தமிழ்மொழித் துறை சென்னைப் பல்கலைக்கழகம்)

பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரை அறியாத தமிழறிஞர்களோ, தமிழ்க்கல்வி நிறுவனங்களோ, தமிழ் நாட்டுச் சமயப் பெரியார்களோ, சமயக் கல்வி தழைக்கப் பாடுபடும் சமய அமைப்புகளோ தமிழ்நாட்டில் இல்லை என்று கூறினால் அது மிகையன்று. தமிழ் வரம்பறுத்த வடவேங்கடத்தின் திருவடி நீழலில் அமைந்துள்ள திருவேங்கடவன் பல்கலைக் கழகம் அவரைத் தமிழ்ப் பேராசிரியராக, தமிழறிஞராக, வைணவச் செம்மலாகப் போற்றிப் புரந்து வந்துள்ளது; இன்றும் புரந்து வருகின்றது. தமிழ் இலக்கியம், கல்வியியல், அறிவியல், சமயங்கள் எனப் பல்வேறு துறைகளிலும் அநுபவமும், பயிற்சியும், புலமையும் பெற்ற பேராசிரியர் தம் அகவையினும் மிக்குப் பல நூல்களைப் படைத்துள்ளார். அவர்தம் வயதைக் கூட்ட இடையறாது முயலும் காலதேவனுக்கும் தம் படைப்புகளின் எண்ணிக்கையைக் கூட்டுவதில் கருமமே கண்ணாயிருக்கும் ரெட்டியார் அவர்களுக்கும் இடையில் நடந்து வரும் போட்டியில் பேராசிரியர் தான் இதுவரை வெற்றி பெற்றுள்ளார். நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்துக் காலதேவனின் முயற்சியை முறியடித்துள்ளார்; இனியும் அவனைவென்று ஒரு நூறு நூல்களைப் படைத்துப் புகழ்பெறுவார் என்பதில் ஐயமில்லை; திருவேங்கடவன் திருவருள் முன்னின்று இதனைக் கூட்டுவிக்குமாக என்று அவன்தாள் இறைஞ்சி வணங்குகின்றேன்; வாழ்த்துகின்றேன்.

இவ்வாறாகப் பாரோர் புகழும் பேராசிரியர் அவர்கள் தம்முடைய 'வாய்மொழியும் வாசகமும்' என்னும் இப்புதிய

நூலுக்கு ஓர் அணிந்துரை வேண்டும் என்று என்னைப் பணித்தபோது எனக்கு வியப்பும் மகிழ்ச்சியும் முறையே தோன்றின. வியப்பிற்குக் காரணம், ரெட்டியார் நூலுக்கு அறிமுகமோ அணிந்துரையோ தேவையற்றது; அப்படியிருக்க அணிந்துரையெழுத என்னைப் பணிப்பானேன் என்ற சிந்தனை. ஆண்டுகள் பல கடந்தும் நூல்கள் சிலவும் படைக்காமல் காலம் கழித்து வரும் என்னைத் தாம் எழுதும் நூல்களையாவது படித்து ஊக்கப்பட்டு நானும் சில நூல்களையாவது எழுதிச் சமுதாயத்திற்குப் பயன்பட வேண்டும் என்னும் கருத்தால் எளிவந்து ஆட்கொள்ளக் கருதும் சௌலப்பியம் என்று நான் உணர்ந்தமையே என் மகிழ்ச்சிக்குக் காரணம். அதனால் ஒருவாறு ஒருப்பட்டு இவ் அணிந்துரையை எழுதுகின்றேன்.

வாய்மொழியும் வாசகமும் என்னும் இந்நூல் பத்துக் கட்டுரைகளின் தொகுப்பாக விளங்குகிறது. பல்வேறு நிகழ்ச்சிகளுக்காகப் பல காலங்களில் படைக்கப் பெற்ற கட்டுரைகளை அவற்றின் பொருளொற்றுமை கருதித் தொகுத்து இப்போது ஒரு நூலாகப் பேராசிரியர் தமிழகத்திற்கு வழங்கியுள்ளார். இவற்றுள் "சமயமும் அறிவியலும்", (பக் 1-42), "திருமங்கையாழ்வார்" (43-84), "வாய்மொழியும் வாசகமும்", (பக் 85-106), "சரணாகதிநெறி" (158-194) ஆகிய நான்கும் மிக நீண்ட கட்டுரைகள். "நம்மாழ்வாரின் இறையநுபவம்" (107-108), "புலவர்க்கு அறிவுரை" (119-135), "கீதை—மறைமுடியின் சாரம்" (144-157) ஆகிய மூன்றும் இடைநிகர்த்த அளவுடையன. "திருக்குறள் சமயவியல் சிந்தனைகள்" (136-143), "தமிழ் முருகன்" (195-201), "நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்" (20?–207) ஆகிய மூன்றும் வாமனவடிவின.

இந்நூலின் முதற்கண் அமைந்துள்ள "சமயமும் அறிவியலும்" என்னும் கட்டுரை ஒவ்வாதன போலவும் முரண்படுவனபோலவும் தோற்றமளிக்கும் இருபெரும்

மானுட வாழ்வுத் துறைகள் எவ்வாறு ஒரே கருத்துடையன வாய்க் காணப்படுகின்றன என்பதை மிக ஆழமாகவும் அழகாகவும் விளக்குகின்றது. உலகமும் இறைவனும் உள்பொருள்கள்; இவற்றுள் இறைவனே முதற் காரணம்; உலகத் தோற்றமும் ஒடுக்கமும் அவனை முன்னிட்டே நிகழ்கின்றன; இத்தகைய தோற்ற மறைவுகள் வடிவ மாற்றங்களேயன்றி வேறல்ல என்றும் சமய உண்மைகளை வேதியியல் முதலான அறிவியல் துறைக் கோட்பாடுகளைக் கொண்டு ஆசிரியர் இனிது விளக்குகின்றார்; மேலும் அண்டங்களின் அமைப்பை விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் ஒரே தன்மையில் விளக்கும் பாங்கினை மணிவாசகப் பெருமான், பரஞ்சோதிமுனிவர், பாரதியார் ஆகிய கவிஞர்களின் பாடல்களைக் கொண்டும், அறிவியலாரின் கொள்கைகளைக் கொண்டும் விளக்குகின்றார். அண்டங்களின் சுழற்சி குறித்தும் அதனால் விளையும் பௌதிக மாற்றங்கள் குறித்தும் அறிவியல் கண்ட செய்திகளை அரங்கனின் திருக்கோல அழகினைப் பரவும் திவ்விய கவி பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின் திருவரங்கத்து மாலையைக் கொண்டு விளக்கும் ஆசிரியரின் நுண்மாண் நுழைபுலமும் உள்ளொளி விளக்கமும் பெரிதும் வியந்து பாராட்டுதற்குரியன. இவ்வாறே சமய கோட்பாடுகளாகிய சற்காரிய வாதம், விசிட்டாத்துவிதம் என்பனவும், தமிழர்தம் திருநாளாம் பொங்கல் விழாவின் அடிப்படைத் தத்துவமும், அறிவியல் உண்மைகளோடு பொருத்தி விளக்கும் இக்கட்டுரை, இந்நூலின் முதலாவதாக மட்டுமின்றி முதன்மையானதாகவும் அமைந்து நம்மை மகிழ்விக்கின்றது.

தம்பிரான் தோழர் சுந்தரமூர்த்தி நாயனாரைப் போன்று பரமபத நாதனால் தடுத்தாட் கொள்ளப் பெற்றவர் கலியன் என்று புகழ்பெற்ற திருமங்கையாழ்வார். இவரைப் பற்றிய இரண்டாவது கட்டுரை இவ் ஆழ்வாரின் வாழ்க்கை வரலாற்றைச் சுருங்கக் கூறி இறைவன் இவரை ஆட்கொண்ட வரலாற்றையும் அதனால் ஞானக் கண்

திறக்கப் பெற்ற கலியனாழ்வார் மேற்கொண்ட திருத்தல பயணங்களையும், அவரால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற அர்ச்சாவதாரங்களையும் விளக்கமாக எடுத்துரைக் கிறது. பின்னர்க் கலியனின் அருளிச் செயல்களில் காணப் பெறும் சரீர-சரீரி பாவனை, தத்துவத்திரயசாரம், பிரபத்தி நெறி போன்ற வைணவக் கோட்பாடுகளையும், இவரால் அறிமுகப்படுத்தப் பெற்ற பல்வேறு புதிய இலக்கிய உத்திகளையும், புதிய இலக்கிய வகைமை களையும் இக்கட்டுரை மிக அழகாக விளக்கிச் செல்கின்றது. திருமங்கையாழ்வார் என்னும் அருளாளரை முழுவதுவமாக அறிந்து அநுபவித்துச் சேவிக்க இந்தக் கட்டுரை பெரிதும் பயன்படுதலை ஒவ்வொரு வாசகரும் நன்கு உணர்வர்.

இறைவன், இறையநுபவம் என்னும் நிலைகளை மணிவாசகப் பெருமானும் நம்மாழ்வாரும் உணர்ந்து, துய்த்து பிறர்க்கெடுத்து உணர்ந்துள்ள திறம் ஒரே தன்மையவாய் அமைந்துள்ள பாங்கினை 'வாய்மொழியும் வாசகமும்' என்னும் கட்டுரை ஒப்பிட்டாய்ந்து கூறுகின்றது. பேராசிரியரின் சமயக் காழ்ப்பற்ற ஆளுமைக்குச் சான்று பகரும் இக்கட்டுரையைப் போலவே 'தமிழ் முருகன்' என்னும் கட்டுரையும் முருகப் பெருமானின் தனிப்பெருஞ் சிறப்புகளைத் தெள்ளிதின் விளக்குகின்றது.

ஆழ்வார்களின் அருளிச் செயல்களை அருளாளர் நாதமுனியடிகள் அடைவுபடுத்தி நாலாயிரம் என அழைத்த சீர்மையினை 'நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம்' என்னும் கட்டுரை விளக்குகின்றது. ஆராக்காதல் குருகூர்ச் சடகோபன் எம்பெருமான்மீது கொண்டிருந்த தீராக் காதற் பெருமையினை, ஆழ்வார்தம் ஆன்மாநுபவத்தை 'நம்மாழ்வாரின் இறையநுபவம்' என்னும் கட்டுரை விளக்குகின்றது. 'புலவர்க்கு அறிவுரை' என்னும் ஒப்பியலாய்வு 'வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன்' என்னும் சங்கப் புலவர்தம் கோட்பாட்டைப் பின்பற்றி நம்மாழ்வாரும் சுந்தர மூர்த்தி நாயன்மாரும் ''பொருள்

நோக்கம் கொண்டு புல்லியரைப் பாடாதீர்; புலவீர்காள், அருள் நோக்கம் பற்றி அரி அரனைப்பாடி உய்ம்மின்" என்று அறிவுறுத்தும் பாங்கினை அழகாக எடுத்துரைக்கின்றது. தமிழர்தம் திருமறையாம் திருக்குறள் சமயப் பொதுமை யுடையது என்பதை மற்றொரு கட்டுரை காட்டுகின்றது.

வைணவக் கோட்பாட்டின் கௌஸ்துபமாகிய சரணாகதித் தத்துவத்தை வேதங்களின் சாரமாகிய கீதையைக் கொண்டும் தமிழ் வேதம் தந்தருளிய மாறன் திருவாய்மொழி கொண்டும் விளக்கியுரைப்பன இரண்டு கட்டுரைகள். கீதை சுருதியாகவும் சுமிருதியாகவும் அமைந்து துவைதம், அத்துவிதம், விசிட்டாத்துவிதம் என்னும் மூவகைத் தத்துவக் கோட்பாடுகளுக்கும் உயிரூற்றாக அமைந்துள்ள திறத்தைக் 'கீதை-மறைமுடியின் சாரம்' என்னும் அரிய கட்டுரை தெளிவிக்கின்றது. 'சரணாகதி நெறி' என்னும் கட்டுரை வைணவர்க்கோர் ஔடதம் எனலாகும் தன்மை பெற்ற ஆன்மநேயக் கைவிளக்கு எனப் புகழத்தக்கது. சரணாகதி என்னும் பிரபத்தி நெறி வைணவத்தில் மட்டுமின்றிச் சைவத்திலும் விவிலியத்திலும் அமைந்துள்ள நுட்பத்தினை இக்கட்டுரை எடுத்துக் காட்டுகின்றது. பல்வேறு தோத்திர, சாத்திர, வியாக்கியானங்களில் பொதிந்து கிடக்கும் தத்துவப் பேருண்மைகளையெல்லாம் ஒருங்கு தொகுத்துச் சரணாகதி நெறியின் அருமையையும் எளிமையையும் ஒக்க விளக்கும் இக் கட்டுரை பேராசிரியரின் ஆசாரிய சௌலப் பியத்துக்குத் தக்கதோர் எடுத்துக் காட்டாக விளங்கு கின்றது.

வாய்மொழியும் வாசகமும் என்னும் இந்நூல் பல உதிரிக் கட்டுரைகளின் தொகுப்பாகத் தோற்றமளிப்பினும் இறையுண்மை, இறைத்தன்மை, இறையநுபவம் என்னும் முப்பெரும் உண்மைகளை அருளாளர்களின் திருவாக்கு, ஆசாரியர்களின் மெய்யுணர்வு, அறிவியலாரின் ஆய்வு நோக்கு என்னும் முத்திறக் கோணங்களின் வழி ஆய்ந்து தெளிவிக்கும் நோக்கத்தை அடி நாதமாகக் கொண்டு

இக்கட்டுரைகள் விளங்குவதைக் காணலாம். பேராசிரியர் சுப்பு ரெட்டியாரின் ஆழ்ந்த புலமையும், சமயப் பொது நோக்கும், அறிவியல்சார் ஆய்வுப் பயிற்சியும் இந்நூலுக்கு அகலமும் ஆழமும் நுட்பமும் தந்து இதனை வளப்படுத்தி யுள்ளன. நம் தமிழ்ப் பண்பாட்டு மரபு ஒன்றுபட்டுள்ள சிறப்பினை இன்றைய கருத்தோட்டத்துக்கு ஏற்ப விளக்கித் தெளிவிக்கும் இந்நூலைத் தமிழ் கூறும் நல்லுலகம் மகிழ்ந்து வரவேற்றுப் பயனடையும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்மொழித் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
மெரினா வளாகம்
சென்னை-600 005.
13—12—1993

அ. அ. மணவாளன்

அர்த்த பஞ்சகம்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

வைணவ சமயத்தில், அந்தந்த சம்பிரதாயங்களையும்,
தத்துவங்களையும் நன்கு அறிந்து
அவற்றின்படி வழிபடுவோமேயானால், இறைவன்
பதமாகிய முக்தி எளிதில் கிட்டும் என்பதனை
துய்த்துணர வழி செய்கிறது இந்நூல்

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications



ISBN: 978-81-939317-0-7

eBOOK ~ *மின் நூல்*




அணிந்துரை

அர்த்த பஞ்சகம் 1994

வழங்கியோர்:

பேராசிரியர் டாக்டர் **இராம மகாதேவன்**
முன்னாள் துணைவேந்தர்
இராஷ்டிரிய சமஸ்கிருத வித்யாபீடம், திருப்பதி







அணிந்துரை

பேராசிரியர் டாக்டர் இராம. மகாதேவன்
முன்னாள் துணைவேந்தர்
இராஷ்டிரிய சமஸ்கிருத வித்யாபீடம்
திருப்பதி - 517 507

ஊண், உறக்கம், அச்சம், இனப்பெருக்கம் இவை மனிதர்கட்கும் விலங்கினங்கட்கும் பொதுவானவை. தர்மம் என்பது மனிதர்கட்கு விசேஷமானது. அதில்லாதவர்கள் மிருகங்கள்.

விவாகத்துக்காகப் பெண் எடுக்கப் போகையில் கூட, ''தர்மத்தின் பொருட்டுப் பிரஜா பாலனத்திற்காகத் தங்கள் பெண்ணைத் தரவேண்டும்'' என்று கேட்பது சாஸ்திர மரபு. அதுவும் பிதிர்க் கடனைத் தீர்ப்பதற்காக. ஆக, சிற்றின்பத்திலேயே பேரின்பத்தைத் தேடுவது மனிதப் பிறவி கடைத்தேற வழி.

இரண்டு கால் மிருகமான மனிதன் தன்னுடைய மிருகத்தனத்தை விட்டு (அதாவது மிருகத்திற்கே இயல்பான கீழ்தரமான குணங்களை விட்டு) புலனடக்கத்துடன் ஈகை, தயை முதலிய நற்குணங்கள் நிரம்பப்பெற்று பிறர் நலம் கருதி வாழ்ந்து, தேவனாக உயர்ந்து நிற்கின்றான். அப்படிப்பட்டவர்களைப் பகவான் கைகொடுத்துத் தன்னிடம் வருமாறு தூக்கிவிட்டுக் கொள்கின்றான். அப்படி ஒரு சிலரைத்தான் தூக்கி விடமுடியும். சமூகம் முழுவதையும் கடைத் தேற்ற முடியாது. அப்படித்தானே மக்களாக உயர முடியாதவர்கள் மாக்களாகவே வாணாளை வீணாக்குகிறார்கள்!

அப்படியே சமூகம் முழுவதையும் காக்கும் பொறுப் பேற்கும் போது இறைவன் அவதரிக்கின்றான். அதாவது மனிதர்களிடையே இறங்கி வருகின்றான்.

மனிதன் தன் நலத்தையே சரிவரத் தெரிந்து கொள்ளாத போது, கருதாத போது, அவன் பிறர் நலத்தை எப்படிக் கருதமுடியும்? இவ்வளவு ஆசாபாசங்களுடன், காமக் குரோதாதிகளுடன் அவன் எப்படிப் பொறுக்க முடியும்? ஒரு கதை நினைவுக்கு வருகின்றது. கடவுள் ஒரு பக்தன் முன் தோன்றி, "பக்தனே! உன் தவத்தை மெச்சினேன்; என்ன வரம் வேண்டுமோ, கேள்; தருகிறேன். ஆனால் ஒன்று, உனக்களிக்கும் பலனில் இரண்டு மடங்கு உன் பக்கத்து வீட்டுக்காரனுக்குக் கொடுப்பேன். யோசித்துச் சொல்" என்றார். "தனக்கு ஒரு பொருள் கிடைப்பதை விட, பிறருக்கு அது கிடைக்க வொட்டாமல் செய்வ தல்லவா முக்கியம்?" என்று யோசித்து, கடைசியில் ஒரு வரம் கேட்டான், "கடவுளே! எனது ஒரு கண்ணைப் போக்கி விடுக" என்று. தனது ஒரு கண்ணை இழந்தாவது மற்றவனுடைய இரண்டு கண்களையும் போக்கி இன்புறும் நல்லெண்ணம்! மற்றும் புண்ணிய பாவங்களைப் பற்றி யெல்லாம் நிறையக் கேட்டறிகின்றோம். ஆனால் நடை முறையில்!" மாந்தர்கள் புண்ணியத்தை விரும்புகிறார்கள்; அதனை அடைய வழிகோலும் செயல்களைச் செய்ய விரும்புவதில்லை. அதாவது முதலீடும் உழைப்பும் இல்லாமலே இலாபம் வேண்டும்! அதேபோல் பாவத்தை விரும்புவதில்லை; ஆனால் பாவச் செயல்களை விலக்கு கிறார்களில்லை."

பதினெண் புராணங்களில் சிவன், விஷ்ணு, சூரியன் என்றிப்படிக் கடவுளர்களைப் பற்றி வருணிக்கப் பெற்றி ருக்கின்றது. அவற்றுள் ஒன்றான கருட புராணத்தில் இறந்த மனிதனுடைய ஆவி எங்கெங்குச் செல்லுகிறது? அவனது புண்ணிய பாவங்களுக்கேற்ப என்னென்ன கதியை அடைகின்றது? என்றெல்லாம் விவரிக்கப் பெற்

றுள்ளது. இறந்த வீட்டில் முதல் பத்து நாட்களில் இதை வாசித்து எல்லாரையும் கேட்கச் செய்வர், இதைக் கேட்டாவது அவர்கள் திருந்தட்டும் என்று. இந்தக் கருட புராணத்தை எழுத ஆரம்பித்ததன் நோக்கம் என்ன? ஒரு சுலோகம்; "நாராயணன் என்னும் சொல் இருக்கிறது. அதைச் சொன்னால் உய்யும் வழி என்றும் தெரிகின்றது நம்மவர்க்கும் நம் சொற்படி வார்த்தைகளை உச்சரிக்க வல்லது (வியாதி முதலியவைகளால் நலிவுறாமல்). ஆனாலும், மாந்தர்கள் நரகத்தில் உழலுகின்றார்கள். என்ன விசித்திரம்!" என்கிறது. உபாயங்கள் தெரிந்தும் அவற்றில் ஈடுபாடு இல்லாமல் சோம்பல், மற்றக் கவைக் குதவாத விஷயங்களில் கவனம்.

இவற்றையெல்லாம் நீக்க மனிதன் பகுத்தறிவு உள்ள வனாக, அதாவது விவேகம் உள்ளவனாகத் தன்னையும் மற்றவர்களையும் வாழ்வித்து, உய்வித்து உயரும் வகையில் கடைத்தேற ஆறு வழிகள் "ஷண் மதங்கள்" என்ற பெயருடன் சங்கராசாரிய சுவாமிகள் ஸ்தாபித்தார்கள். அதில் வழிபடு கடவுளர் அறுவர்; கணபதி, சூரியன், சக்தி, சிவன், குமரன், விஷ்ணு என்பவர்கள்.

இப்படி விஷ்ணுவைப் பரமான தெய்வமாகக் கருதி வழிபடும் வைணவ சமயத்தில்தான் இந்நூலில் விரிவாக உரைக்கப்படும் **'அர்த்த பஞ்சகம்'** வருணிக்கப்பெறு கின்றது. அந்தந்த சம்பிரதாயங்களையும் தத்துவங் களையும் நன்கு அறிந்து அவற்றின்படி வழிபடுவோமே யானால், இறைவன் பதமாகிய முக்தி எளிதில் கிட்டும். ஈண்டு ஒரு வரலாறு நினைவு கூரத் தக்கது,

திரௌபதி, மான சம்ரட்சணத்துக்குப் பின்னர், ஒரு சமயம் கிருஷ்ண பகவானிடம் மிகவும் கோபமாக, "கண்ணா! நீ மிகவும் பொல்லாதவன். துச்சாதனனிடம் சிக்கித் தவித்து உன்னைத் துதித்தால் நீ மிகவும் தாமதமாக வந்து என்னை மிகவும் சோதித்து விட்டாய்." என்கிறாள்.

கண்ணன் தனக்கே உரிய மாயச் சிரிப்புடன், ''திரௌபதி! நான் அங்கேயே இருந்தேன். 'கிருஷ்ணா!' என்றோ நீ அழைத்திருந்தால், அங்கேயே உனக்கு உடன் உதவி செய்திருக்க முடியும். ஆனால் நீயோ 'துவாரக வாசா!' என்று கூவி அழைத்தாய். ஆகவே, உனக்காக ஒருமுறை துவாரகை சென்று திரும்ப வேண்டிய நிர்ப்பந்தத்தில் சிறிது கால தாமதமாய் விட்டது'' என்கின்றான். பரம பாகவதையான திரௌபதியின் கதியே இப்படி என்றால் நம் போன்றவர்களின் கதி என்னாவது? ஆகவே, அந்தந்த தத்துவங்களைச் சரிவர நன்கு புரிந்து கொண்டு அவ்விதமே அநுட்டித்தால் விரைவில் பலன் கை கூடும் என்பது முக்காலும் உண்மை.

இந்நூலில் நுவலப்படும் **'அர்த்தபஞ்சக ஞானம்'** என்பது சம்சாரியான சேதநன் தத்துவஞானம் பிறந்து உய்யும்போது தோன்றுவதாம். இது (1) ஈசுவரனது இயல்பு, (2) ஆன்மாவின் இயல்பு, (3) ஆன்மா அடையும் பயன், (4) அப்பயனை அடைவதற்குரிய வழிகள், மற்றும் (5) அப்பயனை அடைய வொட்டாமல் தடுக்கும் இடையூறுகள் இவை ஆகும். இவற்றைப் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் இந்நூலில் மிக விரிவாக, ஆழ்வார்களின் பக்திப் பாசுரங்களிலிருந்து தெளிவான மேற்கோள்களுடன் விளக்கியுள்ளார்கள்.

திங்கட் கிழமையன்று அமாவாசை வந்தால் அன்று அரசமரத்துக்கு (அசுவத்த நாராயணனுக்கு) விசேஷ பூசை செய்வர். தின்பண்டங்களையோ பழங்களையோ மற்றும் சீப்பு, கண்ணாடி முதலிய உபயோகமான பொருள்களில் 108 கணக்கிட்டு வைத்துக் கொண்டு, ஒவ்வொரு முறை அரசை வலம் வந்ததும், மேற்கூறிய பொருள்களில் ஒன்றை எண்ணிக்கைக்காக உபயோகித்து 108 உம் முடிந்ததும் அந்தப் பொருள்களைப் பூசையில் படைத்துப் பிறகு அவற்றை மற்றவர்கட்கு இலவசமாக விநியோகித்து மகிழ்வர்.

பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் வேறு பொருள்கள் எவையும் சமைக்காமல், அல்லது வாங்காமல் தம் உள்ளக் கருத்தான நூல்களையே (தம் உள்ளத்தையே) சீமந் நாராயணனுக்கு (அமாவாசைக்காகக் காத்திராமல்) சமர்ப்பித்து வருகின்றார்கள். ஆசிரியம், இலக்கியம், திற னாய்வு. சமயம்-தத்துவம், அறிவியல், ஆராய்ச்சி, வாழ்க்கை வரலாறு- தன் வரலாறு என்றிப்படி அந்த விதத்தில் கிட்டத்தட்ட 108 ஐ நெருங்கியும் விட்டார்கள். இந்தப் பூசை முடிந்ததும் வேறு பூசைகள் என்றிவ்வாறு பேராசிரியர் டாக்டர் ரெட்டியாரவர்களின் நூற்றொண் டான அரச பிரதட்சணம் பன்னெடுங்காலம் தழைத் தோங்கவும், அதனால் வாசகர் உலகம் பயன் பெற்று உய்யவும் அருள் புரியுமாறு அருள்மிகு பதுமாவதித் தாயாரையும் அருள்மிகு திருவேங்கடவாணனையும் இறைஞ்சி நிற்கின்றோம்.

> ''நலந்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
> நாராயணா என்னும் நாமம்''

— இராம. மகாதேவன்

திருப்பதி
7-6-1994

நவவித சம்பந்தம்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

ஸ்ரீவைணவர்கள் அவசியம் தெரிந்து கொள்ளவேண்டிய எம்பெருமானுக்கும் ஜீவாத்மாக்களுக்கும் உள்ள ஒன்பது விதமான உறவுகளைப்பற்றித் தனியாகவும், விரிவாகவும், ஆராய்ச்சி முறையிலும் விளக்கி ஒப்பற்ற விரிவான நூலை முதன்முறையாக இயற்றி வெளியிடுகிறார் பேராசிரியர்.

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

ISBN: 978-81-939502-3-4



eBOOK ~ மின் நூல்




அணிந்துரை

நவவித சம்பந்தம் 1994

வழங்கியோர்:

பேராசிரியர் NS ராமாநுஜ தாத்தாசாரிய சுவாமிகள்
முன்னாள் துணைவேந்தர்
இராஷ்டிரிய சமஸ்கிருத வித்யாபீடம், திருப்பதி







அணிந்துரை

பேராசிரியர் N. S. ராமநுஜ தாத்தாசாரிய சுவாமிகள்
முன்னாள் துணைவேந்தர்
இராஷ்டிரிய சமஸ்கிருத வித்யா பீடம்,
திருப்பதி - 517 502.

வேதத்தையும் வேதாந்தமாகிய உபநிடதங்களையும் ஆதாரமாகக் கொண்டு தோன்றிய மதங்களுள் ஸ்ரீ வைஷ்ணவ மதம் ஒன்றில்தான் உலகத்தைப் படைத்துக் காக்கும் எம்பெருமானுக்கும், ஜீவாத்மாக்களுக்கும் சம்பந்தத்தை ஒப்புக் கொண்டுள்ளனர். ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவையில் 'உன்றன்னைப் பிறவிபெறுந்தனைப் புண்ணியம் யாமுடையோம்' 'உன்றன்னோடுறவேல் நமக்கிங்கொழிக்க ஒழியாது' என்று அருளிச் செய்தது கல்நெஞ்சையும் கரைக்க வல்லது. 'உன்றன்னோடுறவு நமக்கொழிக்க ஒழியாது' என்னாதே 'உறவேல்' என்றவிது மிகவழகியது. எம்பெருமானுக்கும் நமக்குமுள்ள உறவு ஒன்றன்று பல என்பதைக் காட்டி நிற்கும் அச்சொல்லாற்றல். அவ்வுறவுகளில் சேஷ-சேஷி பாவம் ஸ்வஸ்வாமி பாவம் இவை மிகவும் முக்கியமானவை. சீவாத்மாக்கள் எல்லோரும் எம்பெருமானுடைய சொத்து; அவனுக்குச் சேஷபூதம். இதைக் கருத்தில் கொண்டே 'பாரார்த்தயம் ஸ்வம்ச்ருதி சதசிரஸ்ஸித்தமத்யாபயந்தீ' என்று திருப்பாவைக்குத் தனியன் அருளிச் செய்யா நின்ற பட்டர் அருளிச் செய்தார். பக்தி, ப்ரபத்தி இவைகள் பெரும் பேற்றுக்குக் காரணங்கள். எம்பெருமான் நமக்கு ஸ்வாமி, நம்மைக் காட்டிலும் உயர்ந்தவன் என்கிற எண்ணமிருந்தால்தான் அவனிடம் பக்தியைச் செய்ய முடியும். அவ்வாறே எம்பெருமானுக்குச் சேஷ பூதமாயும் ஸொத்தாயுமுள்ள நம் ஆத்மஸ்வரூபத்தை நமது என்று நினைத்துக் கொண்டு ஸம்ஸாரக் கடலில் ஆழ்ந்துள்ளோம். அக்கடலைத் தாண்டி மோக்ஷம் பெற விரும்பினால் அவனைச் சரணமாகப் பற்ற வேண்டும்.

அவனுக்குச் சொத்தாகிய ஆத்ம ஸ்வரூபத்தை உடையவ னிடமே ஸமர்ப்பிந்தலாகிய சரணாகதி என்கிற பிரபத் தியையும் ஸ்வஸ்வாமி பாவம் என்கின்ற; உறவை அறிந்தால்தான் செய்ய முடியும். ஆகையால் எம்பெரு மானுக்கும் நமக்கும் உள்ள உறவு முறையை அறிய வேண்டியது மிகவும் அவசியம். மற்றுள்ளாருடன் நமக்குள்ள உறவு வந்தேறியது; அழியக் கூடியது. எம்பெருமானுடன் உள்ள உறவோவென்றால் எம்பெருமான் நினைத்தாலும் அழிக்க முடியாது. இதைத்தான் ஆண்டாள் அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றாள்.

திருவஷ்டாக்ஷர மஹா மந்திரத்திலிருந்து ஒன்பது வகை யான உறவுகள் தேறுகின்றனவென்று பூர்வாசார்யர்கள் அருளிச் செய்கிறார்கள். திருமந்திரம் திருமாங்கல்யம் போன்ற தென்று கூறுகிறார்கள். உலகில் ஒரு கன்னிகையின் கழுத்தில் தாலியேறினவாறே தம்பதிகளுக்குப் பதி-பத்னீ பாவமென்கிற ஓர் உறவு ஏற்பட்டதாகும். திருமந்திரமாகிற தாலி நமது கழுத்தில் ஏறினவாறே ஓர் உறவு அல்ல; ஒன்பது உறவுகள் ஏற்பட்டனவாகும். அந்த உறவுகளை நாம் சிந்தனையில் பதிய வைத்துக் கொள்வதற்காக நம் முன்னோர்கள்.

"பிதா ச ரக்ஷக: சேஷீ பர்த்தா ஜ்ஞேயோ ரமாபதி:

ஸ்வாம் யாதாரோ மமாத்மா ச போக்தா ச ஆத்யமநூதித:"

என்றொரு ச்லோகமியற்றி உபகரித்துள்ளார்கள். ஆத்ய மநு வாவது மூலமந்திரம். அதில் ப்ரதிபாதிக்கப்பட்ட ரமாபதி:- ச்ரிய: பதியானவன் பிதாவாயும் ரக்ஷகனாயும் சேஷியாயும் பர்த்தாவாயும் ஜ்ஞேயனாயும் ஸ்வாமியாயும் ஆதாரனாயும் ஆத்மாவாயும் போக்தாவாயுமுள்ளான்—என்பது ச்லோகத்தின் பொருள். அவன் பிதாவானால் நாம் புத்திரனாகிறோம். அவன் இரக்ஷகனானால் நாம் இரக்ஷ்யனாகிறோம். அவன் போக்தாவானால் நாம் போக்யனாகிறோம். ஆக, இவை ஒன்பது வகையான உறவுகள். இவற்றைத் திருமந்திரத் திலிருந்து உய்த்துணரும் வழி :

முந்துற முன்னம் மூன்று உறவுகள். திருமந்திரத்தில் முதல் பதம் ப்ரணவம். அது அ உ ம என்று மூன்று பதங் கொண்டது. முதற்பதமான அகாரத்தில் பிதா-புத்ரபாவம், ரக்ஷ்ய-ரக்ஷகபாவம், சேஷ-சேஷி பாவம் என மூன்று உறவுகள் தோன்றும். ''அகாரோவை ஸர்வா வாக்'' என்றும் ''அகர முதலவெழுத்தெல்லாம்'' என்றும் சொல்லுகிறபடியே அகாரமானது எல்லா எழுத்துகளுக்கும் முதன்மையாயிருந்து கொண்டு, தனக்குப் பொருளான எம்பெருமான் உலகுக்கெல்லாம் முதல்வன் என்று காட்டுதலால் அகாரத்தில் ஏற்பட்டவுறவு ஜன்ய-ஜனக பாவம் அல்லது பிதா-புத்ரபாவம் என்பது. அந்த அகாரமானது ''அவ ரக்ஷணே'' என்கிற தாதுவிலிருந்து தேறினதாகையாலே எம்பெருமான் ஸர்வரக்ஷகன் என்றதாகும். இதனால் ரக்ஷ்ய-ரக்ஷக பாவமாகிற உறவு தோன்றுகிறது. அகாரத்தின் மேலுள்ள நான்காவது வேற்றுமை லோபித்ததாகக் கொள்ளப் படுகிறது. அந்த வேற்றுமையானது '' அவனுக்குச் சேஷப்படுகை '' என்கிற பொருளைக் காட்டுதலால் சேஷ- சேஷி பாவம் என்கிற உறவு தேறிற்று. ஆக, அகாரத்தில் மூன்று உறவுகள்.

இனி அடுத்துள்ள உகாரமானது அவதாரணப் பொருளதாய் எம்பெருமானுக்கே சேஷப்பட்டது என்று காட்டுதலால் '' கொண்டானையல்லா லறியாக்குலமகள்போல் '' என்கிறபடியே பதி-பத்னீ பாவமாகிய உறவு தேறுகின்றது. உகாரத்தற்கு அடுத்துள்ள மகாரமானது '' மந ஜ்ஞானே '' என்கிற தாதுவிலிருந்து தேறினதாகையாலே ஜ்ஞாதாவான ஆத்மாவைச் சொல்லுதலால் ஜ்ஞாத்ரு-ஜ்ஞேயபாவம் என்கிற உறவு தேறிற்று. எம்பெருமான் அறியப்படுபவன்; ஆத்மா அறிகிறவன் என்றவாறு '' ஒண் தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கு முணர்வு '' என்கிற பொய்கையாழ்வார் பாசுரம் இங்கு காணத்தக்கது.

மகாரத்திற்குப் பிறகு உள்ள நம: பதத்தினால் தன்னை இரக்ஷித்துக் கொள்வதில் தனக்கு எவ்விதமான உரிமையுமில்லை என்று காட்டுவதால் ஆன்மாக்களெல்லாம்

எம்பெருமானுடைய சொத்து என்று ஏற்படுகிறது. இதனால் ஸ்வஸ்வாமி பாவம் என்கிற உறவு தேறுகிறது. எம்பெருமான் ஸ்வாமி; நாம் அவன் சொத்து.

இனி, நாராயண பதத்திற்கு தத்புருஷஸமாஸமென்றும், பஹுவ்ரீஹிஸமாஸம் என்றும் இருவகையான ஸமாஸங்கள் கொள்ளப்பட்டு நாரபதார்த்தமான ஸகல வஸ்துக்களுக்கும் எம்பெருமான் ஆதாரம் என்றும் அந்த ஸகல வஸ்துக்களையும் தான் ஆதாரமாகி உடையவன் என்றும் தெரிந்து கொள்கிறோம். ஆதலால் நாராணாம் அயனம் என்கிற தத்புருஷ ஸமாஸத்தால் ஆதாராதேயபாவம் என்கிற உறவு தேறுகின்றது.

எட்டாவது உறவு சரீர - ஆத்மபாவம். நாராயண சப்தத்தில் நாரங்கள் பகவானிடத்திலே இருக்கின்றன என்பது தத்புருஷனால் ஸித்திக்கிறது. நாரங்களிலே பகவான் உளன் என்பது பஹுவ்ரீஹியால் ஏற்படுகிறது. அவற்றிலே இவன் இருப்பதாவது அவற்றை உடலாகக் கொண்டு தான் அவற்றுக்கு உயிராக இருப்பதேயாதலால் சரீர-ஆத்ம பாவம் ஸித்திக்கிறது. ஸகல சேதந அசேதங்களும் சரீரம்; அவன் சரீரி.

ஒன்பதாவது உறவு போக்த்ரு - போக்யபாவம். இது நாராயண பதத்திலுள்ள நான்காவது வேற்றுமையால் ஏற்படு கிறது. நாராயணனுக்குச் செய்யப்படுகின்ற கைங்கர்யத்தின் போகமும் அவனுக்கேயன்றி இந்த ஜீவனுக்கில்லை. என்று காட்டுதலால் போக்த்ரு - போக்யபாவம் என்கிற உறவைத் தெரிவிக்கின்றது. எம்பெருமான் போக்தா; ஜீவாத்மா போக்யன். ஜீவாத்மாவை போக்தாவாகவும் எம்பெருமானை போக்யனாகவும் கொள்வதும் ஒருபுடை உண்டெனினும் திருமந்திரத்தில் வடிகட்டின பொருள் முந்துறக் கூறினதே யாகும் என்பர். ஆக, திருமந்திரத்தினால் நவவித (ஒன்பது விதமான) ஸம்பந்தங்கள் தெரியவந்தன.

ஸ்ரீவைஷ்ணவர்கள் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய மேற்கூறிய எம்பெருமானுக்கும் ஜீவாத்மாக்களுக்கும் உள்ள ஒன்பது விதமான உறவுகளைப் பற்றித் தனியாகவும் விரிவாகவும் ஆராய்ச்சி முறையிலும் இதுவரை யாராலும் நூல் இயற்றப்பட்டு வெளிவரவில்லை. ஸ்ரீமான் பேராசிரியர் டாக்டர். ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் இக் குறையை நீக்க "நவவித சம்பந்தம்" என்கின்ற ஒப்பற்ற விரிவான நூலை இயற்றி இப்பொழுது வெளியிடுகின்றார். இஃது ஓர் ஒப்பற்ற பொக்கிஷமாகும்.

இந்நூலில் பத்து அதிகாரங்கள் உள்ளன. முதல் அதிகாரத்தில் பொதுவாக ஒன்பது விதமான சம்பந்தங்களைப் பற்றி விளக்கம் தருகிறார். பிறகு ஒன்பது அதிகாரங்களில் ஒவ்வொரு சம்பந்தத்தையும் பற்றி விளக்கம் தருகிறார். அது திருமந்திரத்தில் பெறப்படும் விதத்தை முதலில் விளக்குகிறார். பிறகு ஆழ்வார்களுடைய பாசுரங்களை மேற்கோளாகக் காட்டி எந்த எந்த ஆழ்வார்கள் எந்த எந்த சம்பந்தத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார் என்பதை மிகவும் விளக்கமாகவும் ஆராய்ச்சி முறையிலும் கூறுகின்றார். இதைப் படிக்கப் படிக்க மிகவும் ஆர்வம் உண்டாகின்றது. இம்மாதிரியான நூல் இது வரை வெளிவரவில்லை என்று கூறுதல் மிகையாகாது. ஏற்கனவே ரெட்டியார் அவர்கள் வைணவத்தைப் பற்றிப் பல உயர்ந்த நூல்களை இயற்றி வெளியிட்டுப் புகழ் பெற்றவர். அவருடைய ஆழ்ந்த அறிவின் திறனும் ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் பூராவையும் நுட்பமாக ஆராய்ந்து அநுபவித்துள்ளமையும் இவருடைய ஒவ்வொரு வரியிலும் வெளிப்படுகின்றது. மேலும் பகவத் விஷயம் எனப்படும் ஈடு முதலிய நூல்களில் புகுந்து அவற்றுள் கிடந்த இரத்னங்களை நமக்குத் தருகிறார். இந்த நூல் எல்லோருடைய கையிலும் இருப்பது அவசியம்.

இறைவன் அருளால் ரெட்டியார் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து எல்லோரும் பயன் பெறும்படியான இம்மாதிரியான

ஒப்பற்ற நூல்களை இயற்றி வெளியிட்டுக் கொண்டு தானும் இன்புற்று ஏனையோர்களையும் இன்புறச் செய்து ஒளி பெற வேண்டும் என்று திருவேங்கடத்தானை வேண்டி நிற்கின்றேன்.

—N. S. ராமாநுஜ தாத்தாச்சாரிய ஸ்வாமிகள்

6-12-17B,
கனகபூஷணம் லே அவுட்,
திருப்பதி-517 502,
15-2-1994.

இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

இலக்கியங்களின் பல்வேறு வகைகளையும் ஆராய்ந்து
இக்கால இலக்கிய வளர்ச்சி பற்றியும், ஆழ்ந்த
புலமையோடு எளிய முறையில் சிந்தனைப்
பொறிகள் தெறிக்க மிக சிறப்பாக இந்நூல்
வடிவமைக்கப் பெற்றுள்ளது.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939353-9-2

eBOOK ~ மின் நூல்



அணிந்துரை


இலக்கிய வகையின் வளர்ச்சியும்
இக்கால இலக்கியங்களும்

1997

வழங்கியோர்:

திரு இரா காந்தி
மூத்த வழக்கறிஞர்
சென்னை உயர்நீதி மன்றம்







அணிந்துரை

திரு. இரா. காந்தி, மூத்த வழக்கறிஞர்,
சென்னை உயர்நீதி மன்றம்.

ஓர் அறக்கட்டளைச் சொற்பொழிவு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாக அமைந்திருக்கிறது சென்னைப் பல்கலைக் கழகமும், தமிழ் இலக்கியத் துறையும் சேர்ந்து நடத்திய நமது பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் அவர்களுடைய கல்கி அறக் கட்டளை சொற்பொழிவினுடைய நூல் வடிவம்.

பேராசிரியர் அவர்கள் எழுதியுள்ள நூல்களின் எண்ணிக்கையும், அவர்கள் எழுதியுள்ள கட்டுரைகளும், உரைநடைகளும் எண்ணிலடங்கா. முத்தாய்ப்பு வைத்தாற்போல், இந்த "இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்" என்ற அற்புதமான சொற்பொழிவை நூலாக வடித்திருக்கிறார்.

தமிழ் இலக்கியத்தினுடைய 2500 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றில் பிறமொழி தாக்குறவு பற்றி நூலாசிரியர் சிறப்பாக ஆராய்ந்து சொல்லியிருக்கிறார். மேலும் பண்டைய இலக்கணமான தொல்காப்பியத்திலிருந்து பண்டைய இலக்கியங்கள்பற்றியும் மற்ற இலக்கிய வேந்தர்களைப் பற்றியும் மிகச் சிறப்பாகச் சொல்லுயிருக்கிறார். வடமொழியினுடைய சொற்கள் தமிழிலிலே கலந்து இருக்கின்ற காரணங்களைச் சொல்லிகின்ற பொழுது, ஆதிசங்கரரின் அத்வைதக் கொள்கையும், இராமாநுசருடைய விசிட்டாத்வைதக் கொள்கையும் பரவத் தொடங்கியபோது, வடமொழி கற்றவர்களின் தொகை பெருகியது என்கிறார். வடமொழியை 'தேவபாஷை' என்றும் 'நீசபாஷை' என்றும் தூற்றியும் கூறிய அன்பர்களையும் நூலாசிரியர் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

வெண்பாவினுடைய விளக்கங்களையும் நெடு வெண்பாடிவினுடைய விளக்கங்களையும் வெகு சிறப் பாக எடுத்துரைத்திருக்கிறார். வஞ்சிப்பா பற்றி ஆசிரியர் எழுதியிருப்பது அவரது ஆராய்ச்சித்திறனைக் காட்டுகிறது. திருப்பாவை, திருவெம்பாவை, தேவாரம், திருவாசகம் முதலிய பக்திப் பனுவல்களிலிருந்து மேற்கோள் காட்டிய நூலாசிரியர், பிற்காலத்தில் வந்த இலக்கியவாதிகள், கவிஞர்களுடைய நூல்களையும் இக்கால இலக்கியங்களை விளக்கும் போக்கில் காட்டி யிருக்கிறார். யாப்பு எப்படி ஒலி நயத்திற்குத் துணை புரிகிறது என்பதனை பாரதியாரின் "பிள்ளைக் கனியமுதே கண்ணம்மா" என்ற பாடலின் மூலமும், பாரதிதாசனின் "பெண்குழந்தை தாலாட்டு" என்ற பாடலின் மூலமும் சிறப்பாக விளக்குகிறார். கவிதைகள் உணர்ச்சி பொங்க இருக்கவேண்டும் என்பதற்குப் பல பாடல்களை மேற்கோள்களாகக் காட்டி விளக்கு கின்றார். கும்மிப் பாடல்கள்பற்றி பல மேற்கோள் காட்டி எழுதிய நூலாசிரியர் கி.பி. 7-ஆம் 9-ஆம் நூற்றாண்டுகளில் பக்திப் பாடல்கள் பாடிய ஆழ்வார், நாயன்மார்கள் தம்முடைய பக்திப் பாடல்களில் இளங்கோ அடிகளைப் பின்பற்றி நாட்டுப் பாடல் களின் கூறுகளை அமைத்துப் பயன்படுத்தினார்கள் என்று ஆராய்ந்து எழுதியுள்ளார். பாரதியாருடைய பாடல்களை விரிவாக கூறியுள்ள நூலாசிரியர், அப் பெருமகனார் தமது பாடல்களில் குழந்தை இலக்கியத் திற்கு வித்திட்டார் என்று கூறி, புதிய ஆத்திசூடியை யும், முரசுப் பாட்டையும் மேற்கோள் காட்டுகிறார்.

குழந்தைக் கல்வி பற்றி எழுதுகிற நூலாசிரியர் தம்முடைய பத்தாண்டுகளுக்கு மேற்பட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றிய அநுபவத்தைக் கொண்டு விளக்குகிறார். மேநாட்டு அறிஞர்களில் ருசோ, பெஸ்டலாஸ்ஸி, ஃபிராபெல், மாண்டிசாரி

போன்ற அறிஞர்களின் சேவையைப் பாராட்டுகிறார். தமிழ் இலக்கிய வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டில் தோன்றின புதிய முயற்சியில் பிறந்ததுதான் 'புதுக் கவிதை' என்று எழுதுகிறார். இதனை வரவேற்றுப் பேசும் நூலாசிரியர் இது தமிழ் அன்னைக்குச் சூட்டப் பெற்ற புதியதொரு அணியாகும் என்றும் சொல்லு கிறார்.

இப்படி இலக்கியங்களுடைய பல்வேறு வகைகளை யும் ஆராய்ந்து இக்கால இலக்கிய வளர்ச்சி பற்றியும், ஆழ்ந்த புலமையோடு எளிய முறையில், சிந்தனைப் பொறிகள் தெறிக்கப் பேராசியர் ரெட்டியார் அவர்கள் மிகச் சிறப்பாக இந்த நூலை வடித்திருக்கிறார். நல்ல நூல்களை எழுதுவதும் வெளியிடுவதுமாகக் கொண் டிருக்கிறார் பேராசிரியர் ரெட்டியார். அவர்களுடைய நூற்றுக்கணக்கான படைப்புகளுக்கு இடையில் இந் நூல் சிறப்பான இடத்தைப் பெறும் என்பதில் ஐயமில்லை. தமிழுக்கும், தமிழகத்திற்கும் நூலாசிரியர் ஆற்றிவரும் தொண்டு மிகவும் போற்றுதற்குரியது.

—இரா. காந்தி.

"ஈரோடு இல்லம்"
47, மூன்றாவது முதன்மை சாலை
காந்திநகர், அடையாறு
சென்னை-600 020
ஆகஸ்டு 6, 1997
தொ.பே. 4910974

வாழும் கவிஞர்கள்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

பேராசிரியர் ‘திறனாய்வு நோக்கில் வாழும் கவிஞர்களின் கதைகள்’
எனும்பொருளில் மரபுக்கவிதை, புதுக்கவிதை என்ற
இரு தலைப்பில்இராமசாமி தமிழ்க்கல்லூரியில் சொற்பொழிவு
நிகழ்த்தினார். அப்பொழிவு ‘வாழும் கவிஞர்கள்’
எனும் நூலாக வெளியிடப்பெற்றது.

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

ISBN: 978-81-939685-8-1

eBOOK ~ மின் நூல்



அணிந்துரை

வாழும் கவிஞர்கள்


1998

வழங்கியோர்:

பொன்னம்பல அடிகளார்
ஆதீனகர்த்தர்
திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி







உ

சிவ சிவ

திருவருள் திரு
தெய்வசிகாமணி பொன்னம்பல
தேசிக பரமாசாரிய சுவாமிகள்
(ஆதீனகர்த்தர்)

திருவண்ணாமலை ஆதீனம்
குன்றக்குடி – 630 206
சிவகங்கை மாவட்டம்
தமிழ்நாடு

☎ குன்றக்குடி – 04577 – 64267
காரைக்குடி – 04565 – 23215

நாள் 22–11–98

அணிந்துரை

செட்டி நாட்டில் சைவமும் தமிழும் சேர்ந்தே வளர்ந்தது. வாழும் கலையும் பிறரை வாழ வைக்கும் கலையும் நன்கறிந்த நகரத்தார் மரபில் தமிழ்ச் செம்மல் ரெ. முத்துக்கணேசனார் அறக்கட்டளைச் சொற்பொழிவு அமைத்து, அயராது தமிழ் வளர்க்கின்றார். அந்த அறக்கட்டளைச் சொற்பொழிவாக, நமது ஆதீனத்தின் அருங்கலைக்கோ பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் "வாழும் கவிஞர்" பதினாறு பேரின் கவிதைகளைச் சிறப்பாக ஆய்வு செய்துள்ளார். தமிழ், என்றும் பதினாறாய், இளமையாய் இருக்கின்ற காரணத்தால் பதினாறு கவிஞர்கள் நூலாசிரியர் தேர்வு செய்துள்ளார் போலும்.

ந. சுப்புரெட்டியார் சுந்தரத் தமிழுக்குச் சொந்தக்காரர்; இன்று வாழும் தமிழறிஞர்களில் போற்றிப் பாதுகாக்க வேண்டிய பெட்டகம்.

தமிழைக் கற்பவர் சிலர் ; கற்றவழி நிற்பவர் சிலரில் சிலர்! கற்றவழி நின்றதோடு, நானிலத்தை நல்வழிப்படுத்த சமூகம் மேம்பாடடைய வழிகாட்டுவோர் வெகுசிலர்! தமிழால் தரணியில் உயர்பீடத்தில் நிற்பவர் பலர்! தமக்காய் தமிழை விற்பவர் பலர் ! தமக்கெனத் தமிழைப் பயன்படுத்தி, மலரின் மகரந்தத்தில் தேனை நுகர்ந்து, மரப்பொதியில் மனித சமுகத்திற்குச் சேர்த்து வைக்கின்ற

தேனீயைப் போலத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு உழைக்கும் நற்றமிழறிஞர் ந. சுப்புரெட்டியார்.

கவிஞர் முடியரசன் தொடங்கி, மரபில் உருவாகி புதுமையில் பூத்த வைரமுத்துவரை சிறந்த கவிஞர்களை, தமிழ் கூறும் நல்லுலகின் மணிமுடியாய் திகழும் மாபெரும் கவிஞர்களின் புதையலை ஆய்வு செய்திருப்பது பாராட்டுக்குரியது.

தோண்ட, தோண்டப் புதையல் கிடைப்பதைப்போல, அரிய இந்த படைப்பாளிகளின் படைப்பை ஆய்வு செய்யச் செய்ய, புதிய புதிய செய்திகள் கிடைக்கின்றன. நல்ல முயற்சி! பாராட்டுக்குரியது.

அறக்கட்டளைச் சொற்பொழிவின் நிகழ்விடமாகிய இராமசாமி தமிழ்க் கல்லூரியும் நூல்வெளியிடும் மெய்யம்மை பதிப்பகத்தாரும் நம் பாராட்டுக்குரியவர்கள்.

தமிழ்க் கல்லூரி முதல்வர் நமது தமிழாகரர் தெ. முருகசாமி அவர்கள் காலத்தில், நல்ல பணியைச் செய்திருக்கின்றார். தமிழ் கூறும் நல்லுலகிற்கு வளம் சேர்க்க உழைத்திருக்கின்றார்.

உணவிற்கு உப்பு போல, தமிழ் கூறும் நல்லுலகிற்கு சுப்புரெட்டியார் படைப்புகள் தவிர்க்க முடியாதவை! தமிழ், தழைக்கும் பணியில் தளராது பாடுபடும் சுப்புரெட்டியாருக்கு இனிய நெஞ்சுநிறை பாராட்டுக்கள்!

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

பொன்னம்பல அடிகளார்.

நீங்காத நினைவுகள் - 1

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

இருபது பெருமக்கள் – முதலமைச்சர், கல்வி அமைச்சர், பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள், பல்கலைக் கழகத் துறைத்துலைவர்கள், பேராசிரியர்கள், நீதி அரசர், கல்வி நிறுவனங்களின் பொறுப்பாளர்கள், பொதுவாழக்கையில் ஈடுபட்டவர்கள், மாணாக்கர் – தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிக் குறிப்புகள் சுவைபட தொகுக்கப்பெற்றுள்ளன.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939502-5-8

eBOOK ~ *மின் நூல்*



அணிந்துரை


நீங்காத நினைவுகள் - 1

1990

வழங்கியோர்:

இராம வீரப்பன்







இராம. வீரப்பன்

9, திருமலை சாலை
சென்னை-600 017
தொ.பே. 8266866

7.1.1999

அணிந்துரை

பேராசிரியர் டாக்டர் என். சுப்புரெட்டியார் அவர்கள் பெற்றுள்ள அறிவார்ந்த தமிழ்வளமும், அவர் ஆற்றிவரும் அளப்பரிய தமிழ்த் தொண்டும் நாடும், ஏடும் புகழ் பெற்றவை. ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்குள்ளேயே வட்டம் போடும் "கிணற்றுத் தவளை" அல்லர் அவர். இமயச் சாதனைகளைக் குறிவைத்து சாதகப் பறவையைப் போல் விரிவானம் ஊடுருவிப் பறந்து கொண்டிருப்பவர் - பாடுபட்டுவருபவர்...

இலக்கியத் துறையில் மட்டுமல்லாமல், தத்துவம், சமயம் - குறிப்பாக அறிவியல் - போன்ற பல துறைகளிலும் அவரது பணிகளும், படைப்புகளும் மலர்ந்துள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாக ஆராய்ச்சி அறிவுடன் ஆன்மிக, சமய இலக்கியத் துறைக்கு அவர் ஆற்றிவரும் அரும்பணிகள் வரலாற்றின் முத்திரை பெற்றவை.

இதுவரை பலதுறைகளில் 114 நூல்கள் எழுதியுள்ள பேராசிரியர் சுப்புரெட்டியார் அவர்கள் "நீங்காத நினைவுகள்" என்ற தலைப்பில் இந்த நூலைப் படைத்துள்ளார்கள்.

இருபது பெருமக்கள் தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிக் குறிப்புகளைச் சுவைபட எழுதியுள்ளார்கள். ஒரு முதல் அமைச்சர், ஒரு கல்வி அமைச்சர், மற்றும் பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள், பல்கலைக்கழகத் துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், நீதிஅரசர், கல்விநிறுவனங்களின் பொறுப்பாளர்கள், பொதுவாழ்க்கையில் ஈடுபட்டவர்கள், ஒரு மாணாக்கர் என்று சமுதாயத்தின் பலகூறுகளை விளக்கும் வகையில் நிகழ்ச்சிகளைத் தொகுத்துள்ளார்கள்.

மேலும் இந்த நூலில் ஒரு புதுமையைக் கையாண்டிருக்கிறார்கள். பொதுவாக பல பெருமக்களின் சிறப்புக்களை, பெருமைகளை எடுத்துச் சொல்லும் நூலாக அமைந்துள்ளது; என்றாலும், நாற்பது ஆண்டுகளுக்கு மேலான தனது வாழ்க்கை வரலாற்றையும் ஊடுபாவைப் போல இணைத்திருப்பது ஒரு அருமையான நெசவுத் திறனாக அமைந்துள்ளது.

துறையூர் உயர்நிலைப்பள்ளி துவங்கி முடிவில் திருவேங்கடம் பல்கலைக்கழகம் வரை - பின் 15 மாதங்கள் தமிழ்க் கலைக்களஞ்சிய தலைமைப் பதிப்பாளராகப் பணியாற்றியது உட்பட - பல்வேறு கல்வித் தளங்களில் அவரது ஆக்கமும், ஊக்கமும் செயற்பாடுகளும் நீக்கமற நிறைந்து பரிமளித்திருக்கின்றன.

இக்காலகட்டங்களில் அவரோடு தோழமை பூண்டவர்கள், அவர் தொண்டுக்குத் துணைபுரிந்தவர்கள், ஏன், தொல்லை கொடுத்தவர்கள் உட்பட, பலரின் குணச்சித்திரங்கள் இந்நூலில் அகச்சித்திரங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.

பேராசிரியர் சுப்புரெட்டியார் அவர்கள் அமைதியான ஒரு அறிவுப் பெட்டகம்... இலக்கியக் கருவூலம்... சிந்தனைச் சுரங்கம் என்ற சிறப்புகளுக்கு உரியவர் என்றாலும், இந்த நூலின் மூலம் மனிதர்களை எப்படி உணரவேண்டும், அவர்களை எப்படி ஆராயவேண்டும் என்ற மனிதநேய தத்துவத்தை உணர்த்தும் ஆய்வாளராகவும் விளங்குகிறார்கள்..

மனிதனின் சிறப்பியல்புகளை வெளிப்படுத்துகிற போதும், சில குறைகளைத் தெரிவிக்கின்ற போதும் எப்படிச் சொல்லவேண்டும், அதிலே அடக்கமும், அன்பும், நயமும் எப்படி இணைந்து வரவேண்டும் என்பதற்கு அருமையான தமிழ்நடையில் இலக்கணம் படைத்துள்ளது இந்த நூல்

இருளும், ஒளியும் கலந்த உலகம் போல நல்லதும் கெட்டதும் கலந்தவன்தான் மனிதன் என்ற எச்சரிக்கையோடு தாம் உறவாடிய

சான்றோர்களின் அருங்குணங்களை ஆழமாகத் தீட்டி, ஆகாத் தன்மைகளையும் மிக நாகரிகமாகப் புலப்படுத்தியுள்ளார்கள் அவரது இருவகை விமர்சனங்களிலும் அவரது மென்மையும், மனிதநேயமும், நட்பும், நன்றி உணர்வும் ஆதாரசுருதியாக விளங்குவதைச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். தம்மை மிகவும் பாதித்தவர்களைக் கூடப் "பாதகர்கள்" என்று கூறத் துணியாத அவரது "தருமநெறி" தகைமை மிக்கது

மேலும் இந்த நூலில் தமிழகத்தின் சுமார் 50 ஆண்டுகாலக் கல்வி வளர்ச்சியையும், அதற்கு வாய்ப்பளித்த சில களங்களையும் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் தெளிவாகத் தொட்டுக் காட்டியுள்ளார்கள் திருவேங்கடம் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை, ஒருவகையில் அவரது தனிப்பட்ட சாதனையாகும். அதன் பரிணாமம் பற்றியும் பக்குவமாகக் கூறியுள்ளார்கள்.

கடந்த காலங்களில் கல்வித்துறையில் வாழ்ந்த பலவகை மனிதர்களைப் பற்றியும், அங்கே நிலவிய பல்வேறுபட்ட சூழ்நிலைகளைப் பற்றியும் சுவைசொட்டும் தமிழ்நடையில் இந்நூலில் அவர் நிரந்தரமாகப் பதிவு செய்துவிட்டார்

பண்பட்ட மனிதர்கள் எப்படி இருப்பார்கள் என்பதையும் இந்த நூலில் விளக்குகிறார். பண்பாளர்கள் எப்படி இலக்கியம் படைப்பார்கள் என்பதையும் இந்த நூல் விளக்குகிறது

பேராசிரியர் சுப்புரெட்டியாரின் ஏனைய தமிழ்ப்பணிகள் போன்றே, இவை நிலையான பதிவுகள், அழியாத இலக்கியப் பெட்டகங்கள்!

இராம வீரப்பன்

பாவேந்தரின் பாட்டுத் திறன்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

கற்பனைத்திறன், கவிதைவளம், யாப்புநெறி,
உவமைத்திறன், வருணனைத்திறன் முதலியவை
குறித்து விரிவாக எடுத்துரைக்கும் இந்நூல்,
தமிழ்ச்சமுதாய மக்கள் அனைவரும் கற்றுத்
தெளிந்து, சுவைத்து, உணர்ந்து மகிழத்தக்கது

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939270-9-0



eBOOK ~ மின் நூல்



அணிந்துரை

பாவேந்தரின் பாட்டுத்திறன்


2001

வழங்கியோர்:

மு கருணாநிதி

முதல்வர், தமிழ்நாடு







மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.

நாள்: 11.3.99

அணிந்துரை

பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் "பாவேந்தரின் பாட்டுத்திறன்" எனும் பெயரில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவிதைகளில் காணப்படும் பல்வேறு திறன்கள் குறித்து விரிவாக ஆராய்ந்து எழுதியுள்ள நூல் கண்டு மகிழ்ந்தேன்.

"பாட்டுத் திறத்தாலே - இவ்வையத்தைப் பாலித்திட வேணும்!" எனப் பாடினார் பாரதியார். அப்பாரதியின் தாசன் - பாரதிதாசன் எழுதிய பாடல்கள் ஒவ்வொன்றும் தமிழ்ச் சமுதாயத்தைப் பாலித்திடும் - பாதுகாத்திடும் தன்மையுடையதாகும்.

பேராசிரியர் சுப்பு ரெட்டியார் கல்வியியல் வல்லுநர்; ஆசிரியர் பயிற்சிக்குரிய நூல்கள் உட்பட பல்வேறு இலக்கிய நூல்களைப் படைத்துள்ளார். அவர், இந்நூலில் பாரதிதாசன் பாடுபொருளாகக் கொண்டவற்றைப் பட்டியல் படுத்துகிறார். கற்பனைத் திறன், கவிதைவளம், யாப்புநெறி, உவமைத் திறன், வருணனைத் திறன், முதலியவை குறித்து விரிவாக ஆராய்ந்து பாரதிதாசனின் அரிய கருத்துகளை எடுத்து மொழிகிறார்.

"தூவென்று சாதிமதம் கான்று மிழ்ந்தால்
அந்தநொடியே நமது மிடிப றக்கும்
அடுத்தநொடி திராவிடரின் கொடிப றக்கும்" (பக். 44)

- என்று தமிழரின் ஒற்றுமைக்குத் தடையாயுள்ள சாதி மதங்கள் அகற்றப்படவேண்டும் என்ற பாரதிதாசனைப் படம்பிடித்துக் காட்டுகிறார்.

தமிழ் மண்ணில் பிறந்து - வளர்ந்து - இந்த மண்ணின் பயன்களை நுகர்ந்து - நல்வாழ்வு பெற்று வாழும் மாந்தரில் பலர் தமது

குழந்தைகளுக்குத் தமிழ்ப் பெயர் சூட்டிட வேண்டும் என்னும் உணர்வுமின்றி வாழ்கின்றனர். இதனை எண்ணி வருந்திய புரட்சிக் கவிஞர்,

"**தமிழரின் தமிழ்க் குழந்தை**
தமிழ்ப்பெயர் பெறுதல் வேண்டும்" (பக். 55)

என்று பாடித் தமிழர்கள் தம் குழந்தைகளுக்குத் தமிழ்ப் பெயர் சூட்டிட வேண்டும் என்று ஊட்டிய உணர்வினை இந்நாள் தமிழர்களுக்கும் சுட்டிக்காட்டுகிறார் பேராசிரியர் சுப்பு ரெட்டியார்.

இப்படிப் பாரதிதாசன் அவர்களின் பாடல்கள் பலவற்றிலும் காணப்படும் சிந்தனைத் திறன்களைத் தொகுத்துரைக்கும் பேராசிரியர் சுப்பு ரெட்டியாரின் அரிய முயற்சி போற்றுதற்குரியதாகும். தமிழ்ச் சமுதாய மக்கள் அனைவரும் கற்றுத் தெளிந்து, சுவைத்து, உணர்ந்து, மகிழத்தக்கது அவர் படைத்துள்ள "பாவேந்தரின் பாட்டுத்திறன்".

இங்ஙனம்,

(மு. கருணாநிதி)

எளிமை, இனிமை, தெளிவு இவர்தம் நூல்களின் தனிச்சிறப்புகளாகும்.

பேராசிரியர் முனைவர்

ந சுப்பு ரெட்டியார்



தந்தை பெரியார் சிந்தனைகள்



1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publication



அணிந்துரை


தந்தை பெரியார் சிந்தனைகள்

2001

வழங்கியோர்:

பேராசிரியர் டாக்டர் இரா தாண்டவன்







அணிந்துரை

(பேராசிரியர் டாக்டர் இரா. தாண்டவன் அவர்கள்)

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கிறது குறிஞ்சி மலர். பன்னூறு ஆண்டுகளுக்கு ஒருமுறை பன்னூறு ஆயிரம் பேர்களில் ஒருவர் தலைவர் ஆகிறார். தமிழர்க்கு காலம் தவமிருந்து பெற்றளித்த தலைவர் தந்தை பெரியார், ஈ.வெ.ரா. அவர்கள்.

நூற்றுக்கணக்கான மலைகள் ஆயினும் நோக்கமுடியாத உயரம் இமயம்! அலைகள் ஆயிரக்கணக்கானவைகள் எனினும் அளக்கமுடியாத ஆழம் கடல்! இருபதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் தோன்றிய தலைவர்கள் எண்ணற்றோர்! மக்களின் மனதில் நிற்பவர்களோ மிகச் சிலரே. மிகச் சிலரில் முதன்மை இடம் வகிப்பவர் தந்தை பெரியார்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் முதன்முதலில் பகுத்தறிவுக் கொள்கையைப் பரப்பிய பெருமை சித்தர்களைச் சாரும். "கோயிலாவதேதடா! குளங்களாவதேதடா!" "நட்ட கல்லும் பேசுமோ - நாதன் உள்ளிருக்கையில்" என்று பல நிலைகளில் எடுத்தியம்பினர். ஆனால் சித்தர்களின் சித்தாந்தங்களினால் பாமரமக்களின் மத்தியில் பயன் பெரிய அளவில் விளையவில்லை என்றே கூறலாம். சித்தர்களுக்குப் பிறகு பகுத்தறிவுக் கொள்கையைப் பரப்பத் தமிழில் எளிய வழிகளில் எல்லோரும் புரிந்துகொள்ளும்படி விளங்கப்பேசி மக்களைத் தட்டியெழுப்பிய பெருமை தந்தை பெரியாரையே சாரும்.

சென்னை பல்கலைக் கழக அண்ணா பொதுவாழ்வியல் மையத்தில் உருவாக்கப்பட்டுள்ள பேராசிரியர் சி.அ. பெருமாள் அவர்களின் அறக்கட்டளைச் சொற்பொழிவுக்காக (2001) பேராசிரியர் டாக்டர் ந.சுப்புரெட்டியார் அவர்களை அணுகியபோது அவர் "வெண்தாடி வேந்தர்" ஈ.வெ.ரா.வைப் பற்றிப் பேச முன்வந்தார். தள்ளாத வயதிலும் தமிழ்ப்

பேராசிரியர்-துறைத் தலைவர், அண்ணா பொதுவாழ்வியல் மையம்,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை - 600 005

பணியாற்றும் பல்துறை அறிஞர் பல்கலைச் செம்மல் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் மிகுந்த ஆராய்ச்சிப் பாங்கோடு தந்தைப் பெரியாரைப்பற்றி அரியதொரு ஆய்வுப் பேருரை நிகழ்த்தினார். அவர் ஆற்றிய மூன்று சொற்பொழிவுகளைத் தொகுத்து 'தந்தை பெரியார் சிந்தனைகள்' எனத் தலைப்பிட்டு மிகச் சிறந்த இந்த நூலை உருவாக்கியுள்ளார். திருமிகு வே.ஆனைமுத்து அவர்களின் 'ஈ.வெ.ரா. சிந்தனைகள்' என்ற நூலை தமிழுலகம் நன்கறியும். அது ஒருமுறையில் சம்பிரதாயப் போக்கில் அமைந்தது. பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் புதிய நோக்கிலே, புதிய சிந்தனையுடன் தந்தை அவர்களின் சிந்தனைகளை நூலாக அமைத்து வெளியிடுவதை எண்ணி நெஞ்சு மகிழ்கின்றேன்.

ஈ.வெ.ரா. அவர்கள் தொடாத துறைகள் இல்லை. அவர் தொட்ட துறைகள் துலங்காமல் போனதும் இல்லை. அத்தகை யாரின் சிந்தனைகளை மூன்று பெரும் தலைப்புகளின்கீழ் அமைத்து ஈ.வெ.ரா.வின் கொள்கைகளில் உள்ள ஆழ்ந்த சிந்தனைகள் என்ன என்பதை தமிழுலகிற்கு நூலாசிரியர் தெளிவுபடுத்துகிறார்.

பெரியாரின் சிந்தனைகளில் முதலிடம் வகிப்பது கடவுள் மறுப்புக் கொள்கை. தந்தை பெரியார் என்றாலே கடவுள் மறுப்புக் கொள்கை உடையவர் என்றுதான் இன்றும் தமிழுலகம் எண்ணிக் கொண்டுள்ளது. அவரின் கடவுள் மறுப்புக் கொள்கைகளின் பின்னணியில் அமைந்த அடிப்படைக் காரணங்களை மிக விரிவாகத் தெளிவுபடுத்தியுல்ளார் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள்.

> தமிழினை முட்டாள் ஆக்குவது கடவுள்; அதை ஒழிப்பதுதான் எங்கள் வேலை. தமிழனை இழிவுபடுத்துவது சாத்திரம், மதம், புராணம். அவற்றை ஒழிப்பதும் நெருப்பிலிட்டுக் கொளுத்துவதும்தான் எங்கள் வேலை. (ப. 42)

'மனிதனை இழிவுபடுத்துவதற்கும் பகுத்தறிவற்ற தன்மைக்கும் கடவுள் நம்பிக்கை காரணமாக அமைவதால் அதை ஒழித்துக்கட்ட வேண்டும்; கடவுள்மேல் எங்களுக்கு எவ்வித கோபமும் இல்லை" என்ற வரிகளின் மூலம் பெரியாரின் கடவுள் மறுப்புக் கொள்கையின் பின்னணியில் மனித சமுதாயத்தின் உயர்வுதான் அடிப்படையாக அமைந்துள்ளது என நிறுவுகிறார் நூலாசிரியர் சுப்புரெட்டியார் அவர்கள். சமயம் என்ற நிலையில் பெரியார் அவர்கள் "மதமே மனிதனுடைய சுயமரியாதைக்கு

விரோதி - மதமே மனிதனுடைய அறிவு வளர்ச்சிக்கு விரோதி - மதமே மனித சமூக சமதர்மத்திற்கு விரோதி" (ப. 45) என்றும் "இன்று மதமானது ஒருவரையொருவர் ஏய்க்கப் பயன்படுத்தப்பெறுகின்றதே அல்லாமல் தொல்லையில்லாதிருக்க நிம்மதியான வாழ்வு வாழ உதவுவதாக இல்லை. போலி வாழ்க்கைக்காரருக்குத் திரையாகவே மதமும் பத்திரிகையும் உதவுகின்றன" (ப.46) போன்ற பெரியாரின் சிந்தனைகளை தம் நூலில் ஆணித்தரமாகக் கூறி நிறுவுகிறார் நூலாசிரியர்.

"மக்கள் முன்னேற்றத்தில் மதம் வந்து தடைசெய்தால் அஃது எந்த மதமாக இருந்தாலும் ஒழித்துத்தான் ஆகவேண்டும். உன்னைப் பறையனாய்ப் படைத்தார்; அவனைப் பார்ப்பன னாய்ப் படைத்தார்; என்னைச் சூத்திரனாய்ப் படைத்தார்" என்று கடவுள்மேல் பழிபோடும் கொடுமைகள் ஒழிக்கப்பட வேண்டும் என்றால் கடவுள் ஒழிக்கப்பட வேண்டும்" (பக். 49) என்று தந்தை பெரியார் சிந்தித்ததை தெளிவாக விளக்குகிறார் நூலாசிரியர்.

தந்தை பெரியாரின் சமூகச் சிந்தனைகளை இரண்டாவது தலைப்பின்கீழ் விரிவாக ஆராய்ந்து எழுதியுள்ளார் நூலாசிரியர். சமூகம் என்ன என்பதைப் பெரியார்வழி நின்று விளக்குகிறார். மனிதன் ஒருபோதும் தனித்து வாழக்கூடியவன் அல்லன் - அப்படி வாழவும் அவனால் முடியாது; இங்ஙனம் வாழ்நாள் முழுவதும் சமூகப்பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் பெரியார். "நான் ஒரு நாத்திகன் அல்லன், தாராள எண்ணமுடையோன். நான் ஒரு தேசியவாதியும் அல்லன்; தேசாபிமானியும் அல்லன்; ஆனால் தீவிர சீவாதார எண்ணமுடையவன். எனக்குச் சாதி என்பதோ உயர்வு தாழ்வு என்பதோ இல்லை; அத்தகைய எண்ணத்தையே நான் எதிர்ப்பவன்; ஆதரிப்பவன் அல்லன். (ப. 57) எனக் கூறும் பெரியாரின் உள்ளக்கிடக்கையை நூலாசிரியர் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார்.

இதுபோன்று நாட்டில் எப்படிப்பட்ட ஆட்சிமுறை இருக்கவேண்டும்; திருமணம் எப்படி அமையவேண்டும்; திருமணத்திலுள்ள சமூக இழிவுக் கொடுமைகள் எப்படி ஒழிய வேண்டும்; மற்றும் மதுவிலக்கு ஆகியனபற்றிய பெரியாரின் சிந்தனகளை இந்நூலில் மிகவும் விரிவாக ஆய்வு செய்துள்ளார் நூலாசிரியர்.

மூன்றாவது நிலையில் தமிழ் மொழியின்மீது அவர் கொண்ட எண்ணம் என்ன என்பதை விளக்குகிறார். பெரியார் ஒரு

காலகட்டத்தில் தமிழ் மொழியை காட்டுமிராண்டி மொழி என்று கூறியவர் என்பதும் எண்ணத்தக்கது.

"நான் தமிழுக்குத் தொண்டு செய்வது தமிழுக்காக அல்ல; தாய்மொழியைப் பாதுகாத்தல் ஒவ்வொருவருடைய கடனுமாகும். நம் தமிழ்மொழி தாய்மொழி என்று மட்டுமல்லாமல் எல்லா வனப்புகளும் கொண்ட சிறந்த மொழி என்பதாலேயே" (ப. 131) என்ற பெரியாரின் கருத்துகளையும் "அவர் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்றவர்; கட்டாய இந்தியை கல்லறைக்கு அனுப்பியவர்" போன்ற செய்திகளையும் தெளிவுபடுத்துகிறார் நூலாசிரியர். தந்தை பெரியார் தமிழை விமர்சனம் செய்ததோடு நிறுத்திக் கொள்ளாமல் யாரும் எண்ணிப் பார்க்காத காலகட்டத்தில் தமிழில் எழுத்துச் சீர்திருத்தத்தைத் தன்னுடைய குடியரசு இதழில் வெளியிட்டு நடைமுறைப் படுத்தியவர். இவ்வெழுத்துச் சீர்திருத்தம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் அனைத்து நிலைகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது.

தீண்டாமை, சாதி ஒழிப்பு, வருணாச்சிரமதர்மம் போன்றவற்றைப்பற்றிப் பெரியாரின் கருத்துகளைக் கூறும் நூலாசிரியர் மிகவும் தெளிந்த பார்வையோடு அவற்றை விளக்குகிறார். நம் நாட்டில் சாதி என்று எடுத்துக்கொண்டால் பார்ப்பான், சூத்திரன் என்கிற இரண்டுதான்: செட்டி, முதலி, பறையன், நாவிதன், வண்ணான் என்பவன் எல்லாம் அவனவன் செய்கிற தொழிலால் பிரிந்திருந்தவனே தவிர - பிரிக்கப்பெற்றவனே தவிர - மற்றபடி அவர்களுக்குள் எந்த பேதமும் இல்லை (பக். 86). "உத்தியோகத்தினால் ஒருவன் மேல்சாதியானால் கீழ்ச்சாதிக்காரனுக்கும் மேல்சாதியான் பெற்றிருக்கும் அளவுப்படியே உத்தியோகம் கொடுத்துக் கீழ்சாதித் தன்மையை ஒழி என்கிறேன். தகுதியால் ஒருவன் மேல்சாதி யானால் மேல்சாதியான் பெற்றிருக்கும் தகுதிமுறையைக் கீழ் சாதியானும் பெறும் அளவுக்குத் தகுதியைக் கொடுத்து கீழ்ச் சாதித் தன்மையை ஒழி என்றுதான் நான் கூறுகிறேன்" (பக். 87) என்பன போன்ற பெரியாரின் கருத்துகளைப் பொருத்தமான முறையில் வகைப்படுத்தி விளக்கியுள்ள நூலாசிரியரின் திறமை வியந்து பாராட்டத்தக்கது.

தந்தை பெரியாரின் சிந்தனைகள் முழுவதையும் அப்படியே எழுதுவதாக இருந்தால் பல்லாயிரம் பக்கங்களாக நீளும்

என்பதாலேயே நூலாசிரியர் பெரியாரின் சிந்தனைகளின் சாரங்களை மட்டும் அவற்றின் அசல் த்ன்மை மாறாமல் தெள்ளத் தெளிவாக விளக்கியுள்ளார்.

இறுதியாக, தந்தை பெரியார் பற்றி, அறிஞர்களின் கருத்துகளைத் தொகுத்துக் கொடுத்துள்ளார் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள்.

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் அறிவுத் தெளிவும் ஆழ்ந்த நுட்பமும் வாய்க்கப்பெற்றவர். முயன்று முடிக்கும் முயற்சியர். தான் ஆற்றிய மூன்று பொழிவுகளையும் காற்றில் கரைந்துவிடாமல் அதை நூலாக்கித் தமிழ்ச் சமுதாயத்திற்கு அளித்துள்ள பேராசிரியரை வாழ்த்த எனக்கு வயதில்லை என்பதால் வணங்கி மகிழ்கின்றேன். பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் மொழிக்காகவும், இனத்திற்காகவும் நாட்டிற்காகவும் நூல்கள் பல படைத்து அணி செய்ய வேண்டும் என்பது என் ஆழமான விழைவு.

—இரா. தாண்டவன்

சென்னை - 600 040
அக்டோபர், 17, 2001

சைவசித்தாந்தம்
ஓர் அறிமுகம்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

சைவசித்தாந்தைப்பற்றி தெரிந்துகொள்ள
வேண்டுமென்று விழையும் இளையோரும்,
முதியோரும் பெருமளவு பயன்படும்
வண்ணம் பல செய்திகளை தன்னகத்தே
உள்ளடக்கியது இந்நூல்

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939270-4-5

eBOOK ~ *மின் நூல்*



அணிந்துரை

சைவ சித்தாந்தம் - ஓர் அறிமுகம்

2001

வழங்கியோர்:


பேராசிரியர் டாக்டர் பெ.கிருஷ்ணன்

தலைவர் – சைவசித்தாந்தத்துறை

சென்னைப் பல்கலைக்கழகம்







அணிந்துரை

பேராசிரியர் டாக்டர் பெ.கிருஷ்ணன்

தமிழர் வாழ்வில் சைவமும் தமிழும் இணைந்தே வளர்ந்து வந்துள்ளன என்பது வரலாற்று உண்மை. பழந்தமிழ் நூற்களில் **'சிவன்'** என்ற சொல் எழுத்தாளப் படவில்லை. எனினும் சிவனின் பண்புப் பெயர்கள் பல காணப்படுகின்றன. 'செம்மை' என்ற தமிழ்ச் சொல்லை அடிப்படையாகக் கொண்டே **'சிவன்'** என்ற சொல் வந்தது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். 'சிறந்தது பயிற்றல்', **'சிறப்பெனும் செம்பொருள்'** போன்ற தொடர்கள் ஆதாரங் களாக அமைகின்றன. தமிழர் நாகரிகம் சிந்துச் சமவெளி நாகரிகத்தின் தொடர்ச்சி என்பதை ஏற்றால், சைவ சமயம் வேத நாகரிகத்திற்கும் முற்பட்டது எனக் கொள்ள வேண்டும்.

சங்க காலத்திற்குப் பின் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் பௌத்தமும் சமணமும் செல்வாக்குப் பெற்று விளங்கின. சைவம் வலிகுன்றிய நிலையில் இருந்தது. பிராகிருதம், பாலி மொழிகள் சிறப்புற்று விளங்கின. எனினும், சமணம் தன்னை நிலை நிறுத்திக் கொள்ளவும் வளர்ச்சி அடையவும் வேண்டுமானால் தமிழில் கொள்கைகள் விளக்கப்பட வேண்டும் என்பதைச் சமணர்கள் உணர்ந்தனர். உயர்ந்த சமண சமய அறநெறிக் கருத்துக்களைக் கொண்ட **'பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்'** களப்பிரர் ஆட்சிக்காலத்தில் தோன்றின.

பேராசிரியர் - துறைத்தலைவர் சைவ சித்தாந்தத் துறை, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை 600 005.

பல்லவர் ஆட்சிக்காலத்தில் தமிழொடு சைவமும் மிக உன்னத நிலையினை அடைந்தது. தமிழகம் செய்த தவப்பயனால் அவதரித்த தமிழ்ஞானசம்பந்தர் அவர்களால் திருநெறிய தமிழில் **'பதிகப் பெருவழி'** தோற்றுவிக்கப் பட்டது. அவரது அடியொற்றி வந்த அருளாளர்களின் தொண்டினால் தமிழும் சைவமும் செழித்தோங்கி வளர்ந்தன. சோழர், பாண்டியர் காலம் சைவ சமய வரலாற்றின் பொற்கா.லம் எனலாம்.

'பன்னிரு திருமுறைகள்' தமிழ் சைவ சமயத்தின் அடிப்படை நூல்களாக அமைந்தன. மூவர் முதலிகளையும் மாணிக்க வாசகரையும் சமயத் தலைவர்களாகவும், சிவனை முழுமுதற் பொருளாகவும், மாறா இறையன்பு ஒன்றே வீடுபேற்றிற்கு வழி என்பதும், சாதி மத வேறுபாடின்றி ஆணும் பெண்ணும் இறையின்பத்தைத் துய்த்து வாழலாம் என்பதும், சமய வாழ்வு இவ்வுலக வாழ்க்கைக்கு எதிரானதல்ல என்ற கொள்கையும் சைவர்களால் ஏற்கப் பட்டன. இந்தக் கொள்கைகள் சமண சமயத்தின் கடினமான அறிவுக் கொள்கைக்கும், கடவுள் மறுப்புக் கொள்கைக்கும் உலக மறுப்புக்கும் மாற்றாக அமைந்தது மட்டுமல்லாமல் சமண சமயத்தின் நலிவுக்கும் காரணங்களாக அமைந்தன. சைவ சமயம் நாயன்மார்களை முன்னிருத்தி ஒரு மக்கள் இயக்கமாகவே உருப்பெற்று வளர்ந்தோங்கியது.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றிய மெய்கண்டார் ஆக்கிய **சிவஞானபோதம்** சைவ சமயத்தின் தத்துவக் கொள்கைகளை விளக்கும் முதல் அடிப்படை நூலாகும். அந்நூல் மொழிபெயர்ப்பு நூலல்ல என்பதற்கு அறிஞர்கள் போதுமான ஆதாரங்களைத் தந்துள்ளனர். சிவஞானபோதம் உட்பட சைவ சித்தாந்த சாத்திரங்கள் மொத்தம் பதினான்கு. சிவஞான போதத்திற்குப் பல உரைகள் இருப்பினும் சிவஞான முனிவரின் **சிவஞானபோத**

மாபாடியம் சிறந்த உரையாக சைவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேல் வளர் வரலாற்றைப் பெற்றுள்ள சைவம், பல்வேறு காலகட்டங்களில் வைதிக சமயம், ஆகமம், அறுவகைத் தரிசனங்கள், சமணம், பௌத்தம், சாருவாகம் ஆகியவற்றின் கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டு தமிழகத்துக்கே உரிய சைவ சித்தாந்தமாக செம்மை பெற்று விளங்கி வருகின்றது. இன்றளவும் சைவத் திருமடங்களால் பேணப்பட்டும் வளர்க்கப்பட்டும் வருகின்றது.

ஏனைய இந்தியத் தத்துவங்களைப் போலவே சைவ சித்தாந்தமும் அறிவாராய்ச்சி இயல், மெய்ப் பொருளியல், அறவியல் எனும் முப்பெரும் பிரிவுகளை உடையது. பதி, பசு, பாசம் (இறை, உயிர், தளை) என்பன சைவ சித்தாந்தம் நுவலும் உண்மைப் பொருள்கள். இறைவன் தன் பொருட்டன்மையால் உயிர், உலகுக்கு **வேறாயும்**, வியாபகத் தன்மையால் **ஒன்றாயும்**, உயிருக்கு உயிராம் தன்மையால் **உடனாயும்** இருக்கின்றான். இறைவனின் இவ்வுறவை '**அத்வைதம்**' என்று சித்தாந்திகள் விளக்குவர். சங்கரர், இராமானுசர், மத்துவர் போன்றோர் கொள்வதைப் போல '**அத்வைதம்**' என்ற சொல் பொருட்களின் எண்ணிக்கை பற்றியது அல்ல என்றும், அது அன்மைப் பொருளில் இரு பொருள்களுக்கிடையிலான உறவு (வியாபக வியாப்பிய சம்பந்தம்) பற்றியது என்றும் விளக்குவது சித்தாந்தத்தின் தனிச் சிறப்பாகும்.

உயிரின் ஆணவமலம் நீக்கத்தின் பொருட்டு ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழில்களை இறைவன் செய்கிறான். ஐந்தொழில் புரிவது அவனின் சிறப்பிலக்கணமேயன்றி பொதுவிலக்கண மல்ல என்பது சிவஞான முனிவரின் கொள்கை.

பந்தம், வீடுபேறு ஆகிய இருநிலைகளிலும் அறிபவன் உயிர், அறியப்படுபொருள்கள் இறைவனும் உலகமு மாகும். இறைவனே அறிபவன் எனக் கொண்டால் அது சங்கரர் கூறும் அத்வைதத்தில் முடிவுறும். எனவே அறிபவன் இறைவனே எனும் சித்தாந்திகள் சிலரின் (சிவாக்கரயோகி) கொள்கையை சிவஞான முனிவர் மறுக்கிறார்.

இறை உயிர் போலவே, ஆணவம், கன்மம் மாயை ஆகிய பொருட்களும் சற்காரியவாதப்படி நித்தியமான உள்பொருள்களாகக் கொள்ள வேண்டும். உள்பொருளோ அன்றி இல்பொருளோ என நிச்சயிக்க முடியாத இயல்புடைய பொருட்கள் அல்ல அவை

உயிர் தனது சமய வாழ்வின் மூலம் 'மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதோடு' செல்கதிக்கும் குறைவிலா நிலையினை அடையும். மற்ற இந்திய தரிசனங்கள் ஏதோ ஒரு வகையில் பிறவியைத் துன்ப மயமானது என்றும் அது வெறுத்து ஒதுக்கப்பட வேண்டியது என்றும், அது அறியாமையின் விளைவு என்றும் கொள்ளும். ஆனால் சைவ சமயம் பிறவி இறைவனால் அளிக்கப்பட்ட அருட்கொடை என்றும், அறியாமையைப் போக்கிக் கொள்ளவே அஃது அமைந்தது என்றும் கொள்வது தனிச் சிறப்பாகும்.

சைவசித்தாந்தம்: ஓர் அறிமுகம்' என்று தலைப்பிட்ட இந்நூல் தொல்காப்பியம் முதல் மெய்கண்ட சாத்திரங்கள் ஈறாக உள்ள பல நூற்களில் காணப்படும் சைவ சித்தாந்தக் கருத்துகளைத் தொகுத்து ஆய்வு நோக்கில் எழுதப்பட்ட நூலாகும். சைவ சமய வரலாற்றைத் தெரிவிக்கும் நூல்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் பல உள்ளன. ஆனால் சைவ சமயக் கருத்துகளை மையப்படுத்தி தமிழ் நூல்களை மட்டுமே ஆதாரங்களாகக் கொண்டு வரலாற்று நோக்கில்

எழுத்தப்பட்ட **'முதல் ஆய்வு நூல்'** இது என்றால் அது மிகையாகாது. எளியநடையில் இலக்கிய நயத்தோடு எழுதப்பட்ட சுவையான நூல் இது. ஆங்காங்கே சைவக் கருத்துகளுக்கு இணையான வைணவக் கருத்துகளையும் ஒப்புநோக்காகச் சுவைபட எடுத்துக் கூறி சமயப் பொறையின் இன்றியமையாமையை வலியுறுத்திச் செல்வது பாராட்டுக்குரியது.

தமிழகக் கலைமாமணி பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியாரவர்கள் இந்நூலின் ஆசிரியர். சைவம், வைணவம் ஆகிய இரண்டையும் தம் இரு கண்களாகப் போற்றி வாழ்ந்து வருபவர். சமயம், தத்துவம், இலக்கியம், சமூகவியல், அறிவியல் போன்ற துறைகளில் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதித் தமிழக எழுத்துலகில் மிகப்பெரும் சாதனை படைத்தவர். பிறர் குறை காணாது நிறை மட்டுமே காணும் பண்பாளர். என் போன்ற எளியோரை அன்பால் நெறிப்படுத்தும் குணக்குன்று. அனைத்துச் சமயங்களுக்கும் அடிப்படை **'சமயங்கடந்த மெய்ப்பொருளே'** என்பதை வலியுறுத்தும் அருட்செல்வர். அன்னாரின் நீண்ட நெடிய அநுபவமும், நுண்ணறிவும் இந்த நூலில் விரவி மிளிர்வன படித்து இன்புறத் தக்கவை. பொதுமக்கள், மாணாக்கர்கள், ஆய்வாளர்கள் அனைவருக்கும் அரும்பெரும் கருத்துக் கருவூலமாகவும், விருந்தாகவும் இந்நூல் அமைந்துள்ளது என்பது வெள்ளிடை மலை.

சென்னை – 5 **பெ. கிருஷ்ணன்**
7 – 6 – 2001

தாயுமானவர்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

இந்நூலைப் பயிலுங்கால், குருவருளும் திருவருளும்
பெற்ற தாயுமானவர்சைவ உலகிற்குக் கிடைத்த
மெய்ஞ்ஞானச் செல்வர் என்பதையும், அவர்
அருளிய தெய்வமணம் கமழும் பாடல்கள்
உயிர்வளர்க்கும் ஞானப்பாடல்கள்
எனபதையும் மிகத் தெளிவாக உணர முடிகிறது.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939835-4-6

eBOOK ~ மின் நூல்



அணிந்துரை


தாயுமானவர் 2001

வழங்கியோர்:

புலவர் த இராமலிங்கம்
தலைவர் – அண்ணாநகர் தமிழ்ச்சங்கம்
சென்னை







அணிந்துரை

(புலவர் த.இராமலிங்கம் எம்.ஏ., எம்.எட்.,)*

தமிழ்கூறும் நல்லுலகம் நன்கறிந்த முதுபெரும் பேராசிரியர் முனைவர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் தமிழ் நூற்கடலை நிலை கண்டுணர்ந்த வித்தகர். சாத்திர தோத்திர நூல்களில் ஆய்வும் தோய்வும் உடைய தமிழ் மூதறிஞர். 125க்கு மேற்பட்ட இறவாத புகழுடைய நூல்களை எழுதிக் குவித்த பெருமை இவருக்கு உண்டு. எழுதாத நாளெல்லாம் பிறவா நாளே என்று எண்ணுபவர். அருள் நலம் கனிந்த சமயச் சான்றோர்களிடம் கொண்ட ஈடுபாட்டால் தேவாரம் பாடிய மூவரைப் பற்றியும், திருவாசகம் தந்த மாணிக்க வாசகரைப் பற்றியும், ஆழ்வார்களைப் பற்றியும் நூல்கள் எழுதிப் பேரும் புகழும் பெற்ற ஆன்மிகச் செல்வர். திரு.வி.க. விருது போன்ற பல விருதுகளையும் பாராட்டுகளையும் பெற்ற பெருமைக் குரியவர். இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த பேராசிரியர் அவர்கள் ஞானச் செல்வராகிய தாயுமான அடிகளாரைப் பற்றிப் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட அருமையான ஒரு நூலை எழுதியுள்ளார்.

இந்நூலைப் படித்தபொழுது தாயுமான அடிகளார் சைவ உல கிற்குக் கிடைத்த மெய்ஞ்ஞானச் செல்வர் என்பதையும், அவர் அருளிய தெய்வமணம் கமழும் பாடல்கள் உயிர் வளர்க்கும் ஞானப் பாடல்கள் என்பதையும் அறிய முடிந்தது.

குருவருளும் திருவருளும் பெற்ற தாயுமான அடிகளாரைப் பற்றி இந்நூலாசிரியர் எழுதியுள்ள நூல் இரண்டு பகுதிகளாக அமைந்துள்ளது. முதல் பகுதிக்கு 'அடிகளார் வாழ்வு' என்னும் தலைப்பையும், இரண்டாம் பகுதிக்கு 'அருளிச் செயல்கள் இயல்பு கள்' என்னும் தலைப்பையும் தந்துள்ளார். 13 இயல்களாகப் பகுத்துக் கொண்டு தாயுமான அடிகளாரின் சமயக் கருத்துகளை - தத்துவங்களைப படிப்பவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் எளிமைப்படுத்திப் பழகு தமிழில் விளக்கியுள்ளார்.

* தலைமையாசிரியர் (ஓய்வு) தேசிய நல்லாசிரிய விருது பெற்றவர்; துணைத் தலைவர், அண்ணா நகர், தமிழ்ச் சங்கம்.

அடிகளாரின் வாழ்வையும் வாக்கையும் பல கோணங்களில் சிந்தித்து, அச்சிந்தனைகளை இந்த நூலில் வெளிப்படுத்தியுள்ளார். நூலாசிரியரின் ஆழ்ந்தகன்ற சமய அறிவிலும் அநுபவ முதிர்ச்சியிலும் விளைந்த இந்நூல், தாயுமான அடிகளாரைப்பற்றி அறிய விரும்புகிறவர்களுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காகத் திகழ்கிறது.

'அடிகளார் வாழ்வு' என்னும் பகுதியில் தாயுமானவரின் வாழ்க்கை வரலாற்றினைத் தோற்றம் முதல் சமாதி நிலை அடைந்த வரை மூன்று இயல்களில் நிரல்படச் சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டியுள்ளார்.

'அருளிச் செயல்கள் இயல்புகள்' என்னும் பகுதியில் வேதாந்த சிந்தாந்த சமரச நன்னிலை கண்ட அடிகளாரின் பாடல்களை ஆய்வு நோக்கிலும் போக்கிலும் ஆய்வு செய்து சிந்தைக்கினிய செவிக்கினிய கருத்துகளை ஆசிரியர் தந்துள்ளார்.

அடிகளாரின் பாடல்கள் பல தலைப்புகளில் காணப்படுகின்றன. பெரும்பான்மையான பாடல்கள், பாடல்களின் முடிவையே தலைப்பாகவும் (சுகவாரி - தேசோமயானந்தம்) மற்ற பாடல்கள் பாடல்களின் தொடக்கத்தையே தலைப்பாகக் கொண்டு அமைந்திருப்பதையும் (ஆகாரபுவனம், எடுத்த தேகம்) நுணுகி ஆராய்ந்து வகைப்படுத்தி இருப்பது ஆசிரியரின் ஆய்வுப் புலமையைக் காட்டுகிறது.

அடிகளாரின் பாடல்களில் காணப்படும் உருவகங்கள் (பாச இருள் - ஞானஒளி) உவமைகள் (தாயிலாச் சேய்போல - எள்ளுக்குள் எண்ணெய் போல) பொருள் நிறைந்த தொடர்கள் (அவனன்றி ஓரணுவும் அசையாது) ஆகியவற்றை அரிதில் முயன்று கண்டறிந்து கூறி இருப்பது போற்றுதற்குரியது.

'இறைவனின் திருக்குணங்கள்' என்னும் இயலில் இறைவன் பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்துள்ளான் என்பதையும் தோற்றமும் இறுதியும் இல்லாதவன் என்பதையும் அடிகளாரின் பாடல்களைக் கொண்டு மிகத் தெளிவாக ஆசிரியர் விளக்கியுள்ளார். 'ஆன்மாவின் அருங்குணங்கள்' என்னும் தலைப்பில் உயிர்கள் பாசத்தால் பிணிக்கப்பட்டுள்ளதையும், சார்ந்ததன் வண்ணம் இயங்கும் இயல்புடையது என்பதையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

'தத்துவக் குறிப்புகள்' என்ற இயலில் 'சைவ சித்தாந்தத்தின் முடிந்த முடிபாகக் கொள்ளப்படும் பதி, பசு, பாசம் பற்றியும், முப்பத்தாறு தத்துவங்கள்பற்றியும் விரிவாக எடுத்து விளக்கியிருப் பதிலிருந்து நூலாசிரியரின் சைவ சித்தாந்தப் புலமையை அறிய முடிகிறது.

'மனத்தின் பண்புகள்' என்ற இயலில் ஆன்ம தத்துவம் பற்றி யும், சாத்துவிகம், இராசசம், தாமசம் என்ற முக்குணங்கள் பற்றியும் அகங்காரம் பற்றியும் ஆசிரியர் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார்.

'வாழ்வில் வினையின் பங்கு' என்ற இயலில் உயிர்கள் நல்வினையால் இன்பத்தையும் தீ வினையால் துன்பத்தையும் அநுப விக்கின்றன என்பதையும், சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் பற்றி யும் விளக்கம் தந்துள்ளார். பராபரக் கண்ணியில் வரும் இருவினை என்பதற்கு, நல்வினை, தீவினை என்று பொருள் கொள்வதைவிட 'மூவினை' என்று பொருள் கொள்வது முற்றிலும் பொருந்துகின்றது என்று ஆசிரியர் குறிப்பிட்டிருப்பது சிந்தனைக்குரியது.

'சித்தர்களின் பெருமைகள்' என்ற இயலில் (பக்கம் 215) சித்தி பெற்றவர் சித்தர் என்று ஆசிரியர் விளக்கம் தந்துள்ளார். உருவ சித்தி, அருவுருவ சித்தி, அருவ சித்தி ஆகியவற்றைத் தேவார ஆசிரியர்கள் மூவரின் வழியாக விளக்கியிருப்பது அருமையினும் அருமை. விராலிமலையில் அடிகளார் சித்தர்களைச் சந்தித்த காலத் தில் 'சித்தர்கணம்' என்ற பதிகம் பாடியிருக்கலாம் என்ற ஒரு குறிப்பையும் ஆசிரியர் தந்துள்ளார்.

''புனிதமெனும் அத்துவிதம்'' என்ற இயலில் இறைவனுக்கு உலகத்தோடு உள்ள தொடர்பை விளக்குவதற்கு அடிகளார் 'அத்து விதம்' என்ற சொல்லை எடுத்தாண்டுள்ளார் என்று குறிப்பிட்டு மிக விரிவாக விளக்கம் தந்துள்ளார். அத்துவிதம் என்பதற்கு மெய்கண்டார் கூறும் விளக்கத்தை ஆசிரியர் எடுத்துக்காட்டியிருப் பது பொருத்தமாக உள்ளது.

'வழிபாட்டு முறைகள்' என்ற இயலில் (பக்கம் 247) நூலாசிரி யர் வழிபாட்டின் இன்றியமையாமையையும், வழிபடும் போது மனம் அடையும் மகிழ்ச்சியையும், மெய்ப்பாடுகளையும், கற்றதன் பயன் வாலறிவன் நற்றாள் தொழுதலே என்பதையும் உருக்கமாகக்

குறிப்பிட்டிருப்பதிலிருந்து ஆசிரியருக்கு வழிபாட்டின் மீதுள்ள ஈடுபாட்டைக் காண முடிகிறது. அகப்பூசை செய்தல் இறைவனுக்கு மிகவும் உகந்தது என்பதை 'நெஞ்சமே கோயில்' என்ற பாடல் வழியாக விளக்கி இருப்பது சிறப்பாக உள்ளது.

பராபரக் கண்ணியில் வரும் 'பராபரம்' என்பதற்கு ஆசிரியர் நுட்பமாக விளக்கம் தந்துள்ளார் (பக்கம் 28). பராபரம் என்பது பரம், அபரம் என்னும் இரு சொறகளாலாகிய சொற்றொடர். பரம் மேலானது, அபரம் கீழானது. மேலானதும், கீழானதும் ஆகிய எவற்றினும் கலந்துள்ள முதல்வனைப் பராபரம் என்று அடிகள் குறிப்பிட்டுள்ளார் என விளக்கம் தந்திருப்பது ஆசிரியரின் சொற்க ளுக்கு நுண்பொருள் காணும் புலமையை வெளிப்படுத்துகிறது.

தெய்விகம் பற்றி விளக்கும்போது (பக்கம் 195) சிக்கி முக்கிக் கல்லில் தீ மறைந்திருப்பது போல் தெய்விகம் மனிதனிடம் மறைந் துள்ளது என்று குறிப்பிட்டு அரிய பொருளை எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

'கருணாகரக் கடவுள்' என்னும் பதிகத்தில் (பக்கம் 78) கூத்தப்பெருமான் வடிவம் பறறித் தாயுமான அடிகளார் வியந்து கூறியுள்ள அருமை பெருமைகளை எல்லாம் ஆசிரியர் நெஞ்சம் நெகிழும் வண்ணம் பக்திச் சுவை ததும்ப எடுத்துரைத்துள்ளார்.

பேராசிரியர் சுப்பு ரெட்டியார் அவர்கள் தாயுமான அடிகளா ரின் பாடல்களில் மூழ்கித் திளைத்து, அவருடைய பெரு வாழ்வை யும் வாக்கையும் அழகு தமிழில் தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் வகையில் நூலாகத் தந்துள்ளார். இந்நூல் ஒரு தத்துவப் பேழை! ஆன்மிகக் களஞ்சியம்!

'நல்லாரைக் காண்பதுவும் நன்றே, நலமிக்க நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே'' என்ற நிலையில் 20 ஆண்டுகளாக இப்பெருந் தகையாருடன் நெருங்கிப் பழகி இவருடைய பயனார்ந்த அநுபவ உரைகளைக் கேட்டு வருபவன். பேராசிரியர் அவர்கள் அறிவிலும் அநுபவத்திலும் இமயமாய் உயர்ந்து நிற்பவர். இருப்பினும் இப்பெ ருந்தகையார் அவர்கள் என்மீது வைத்துள்ள அன்பால் ஞானக் கருவூலமாக விளங்கும் இந்நூலுக்கு அணிந்துரை தர வேண்டு மென்று அன்புக் கட்டளை இட்டார். பேராசிரியரின் கட்டளையை

மீற முடியுமா? தாய் தன் குழந்தையைப் பாடச் சொல்லிக் கேட்டு மகிழ்வதைப்போல தாயுள்ளம் கொண்ட இப்பெரியார் அடியவனை அணிந்துரை எழுதச் செய்துள்ளார் என்றே கருதுகிறேன். சைவ மணம் கமழும் இந்நூலில் பொதிந்துள்ள பயன் நிறைந்த செய்திக ளைக் கோடிட்டுக் காட்டியுள்ளேன்.

கற்கண்டுக் கட்டியை எப்பக்கம் சுவைத்தாலும் இனிக்கும். அதுபோல ஆன்மிகத் தேன் நிறைந்த இந்நூலில் எந்தப் பகுதியைப் படித்தாலும் இனிக்கும்.

தாயுமான அடிகளாரை அறிய விரும்புவோர்க்கு அவர் அரு ளிய பாடல்களை ஆய்வு செய்ய விழைவோர்க்கு இந்நூல் கலங்கரை விளக்காகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை' என்பார் பாவேந்தர் பாரதிதாசன். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற தொண்டுள்ளத்துடன் தமிழுக்குத் தொண்டு செய்யும் இப்பெரும் பேராசிரியர் மேலும் பல நூல்களைத் தமிழுலகிற்கு வழங்கவும், பல்லாண்டுகள் உடல்நலத்துடன் இனிது வாழவும் அருள் பாலிக்கு மாறு கந்தகோட்டத்துள் எழுந்தருளி இருக்கும் முருகப் பெருமானை இறைஞ்சுகின்றேன்.

— த. இராமலிங்கம்

2-55, அண்ணாநகர்,
சென்னை - 600 040.
26.11.2001

சைவமும் தமிழும்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

சைவத்திற்கு ஓர் உயர்விடத்தை, ஆராய்ச்சியாளர்கட்கு
நல்லதொரு புள்ளிவிவரங்களை, தமிழ்
ஆர்வலர்களுக்கு வளம்கொழிக்கும்
தமிழ்ச்சுவையை அள்ளித்தரும்
பெட்டகமாகத் திகழ்கின்றது இந்நூல்

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939270-3-8

eBOOK ~ *மின் நூல்*



அணிந்துரை


சைவமும் தமிழும் 2001

வழங்கியோர்:

நீதியரசர் பி.ஆர்.கோகுலகிருஷ்ணன்







அணிந்துரை

(நீதியரசர் பி.ஆர்.கோகுலகிருஷ்ணன்)

தமது தள்ளாத வயதிலேயும் தமிழைத் தள்ளாது தலைசிறந்த தமிழ் இலக்கியப் புதையல்களை அள்ளித் தந்துகொண்டு இருப்பவர் நம் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள். அவர் தமிழ் அன்னைக்குப் புனைந்துள்ள மணி மகுடத்தில் பதிந்த மற்றொரு வைரக்கல் "சைவமும் தமிழும்" எனும் இந்நூல்.

ஒருரும் ஒரு பேரும் இல்லாத ஒப்புவமை அற்ற இறையினை ஓராயிரம் நாமம் சொல்லித் தெள்ளேணம் கொட்டிய புலவர்களை, அவர்கள் வடித்துத் தந்த இலக்கியங்களை, குறிப்பாக அவ்விலக்கியங்கள் முழுமுதற் கடவுளாகச் சிவனைக் குறிக்கும் சிறப்பான இடங்களை இந்த நூலில் திறம்பட எடுத்து இயம்பி உள்ளார்.

தொல்காப்பியம் முதல் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளைவரை கண்ணுதற் பெருங்கடவுள் கழகமோடு அமர்ந்து பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்பசுந்தமிழில் கண்ணுதற் பெருங்கடவுள்பற்றிய குறிப்புகளை விளக்கியுள்ள பான்மை பாராட்டுதற்குரியது.

நம்மிலே பலருக்கு, டாக்டர்.ந.சுப்புரெட்டியார் அவர்கள் வகைப்படுத்தியுள்ள முறையில் சிவனைப்பற்றிய குறிப்புகள் தெரிந்திருக்க முடியாது. தொல் காப்பியத்தில் பத்துப்பாட்டில், எட்டுத் தொகையில் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே முக்கண்ணனின் குறிப்பினைக் காண்கிறோம். பத்துப் பாட்டில் முதலாவதாகக் கூறப் பெறும் பாட்டு திருமுருகாற்றுப்படை. இதில் 317 அடிகள் உள்ளன. மாலையின் வருணனை உள்ள அகநானூறு செய்யுள் ஒன்றில் சிவனும் திருமாலும் குறிக்கப் படுகின்றனர்:

-தலைமைநீதி, குஜராத் உயர்நீதிமன்றம்.

''வெருவரு கடுந்திறல் இரும்பெருந் தெய்வத்து
உருவுடன் இயைந்த தோற்றம் போல
அந்திவானமொடு கடலணி கொளா அ
வந்த மாலை'' என்ற பாடல் அது.

இதுபோல் எட்டுத்தொகை நூல்களில், புறநானூற்றில், கலித்தொகையில், பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில், சிவனைப்பற்றிய குறிப்புகள் இந்நூலில் காணக்கிடக்கின்றன.

''பிறவாயாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்''

என்ற சிலப்பதிகார அடிகளை, சிவனைப்பற்றி சிலம்பில் காணப்பெறும் பல்வேறு இடங்களையும் மணிமேகலை, சீவகசிந்தாமணியில் சிவனைப்பற்றிய குறிப்புகளையும் ஆசிரியர் தெளிவாக எடுத்து எழுதி உள்ளார். சீவக சிந்தாமணியில் :

''போகம் ஈன்ற புண்ணியன்
எய்த கணையே போல்''
என்ற அடிகளும்

''கடிமதில் மூன்றும் எய்த
கடவுளிற் கனன்று சொன்னான்''

என்ற அடிகளும்

''திங்கள் சேர்முடியினானும்
செவ்வியும் போன்று''
என்ற அடிகளும் சிவனைக் குறிப்பதாக விளக்கி உள்ளார்.

சங்க காலத்தையும் தாண்டி, நீதிநூல் காலத்தில், பக்தி இலக்கிய காலங்களில் கம்பராமாயண காவியத்தில் சிவனைப் பற்றிய பல குறிப்புகள் இந்நூலில் அடங்கி உள்ளன. இராமனின்

தோற்றத்தை அவன் போர்க்களத்தில் நின்ற போது கம்பன்.

'தீ மொய்த்த அனைய செங்கண்
அரக்கரை முழுதும் சிந்திப்
பூமொய்த்த கரத்த ராகி
விண்ணவர் போற்றி நின்றான்
பேய் மொய்த்து நரிகள் ஈண்டிப்
பெரும் பிணம் பிறங்கித் தோன்றும்
ஈமத்துள் தனியன் நின்ற
கறைமிடத்து இறைவன் ஒத்தான்'

என்று கூறி,. யாவரையும் அழித்து இராமன் போர்க்களத்தில் நின்றது ஊழியின் முடிவில் அனைத்து உயிர்களும் மாள சுடுகாட்டில் தனியாக நிற்கும் சிவபொருமானை ஒத்தான் எனக் குறிப்பிடுகிறார்.

இங்ஙனம், தமிழ்நூல்கள் பலவற்றில் பண்டைக்காலம்தொட்டே சைவம் பேசப்பட்டதை, போற்றப்பெற்றதை ஆசிரியர், பல சான்றுகளோடு கூறி, திருமுறைகள் அத்துணையையும் விளக்கி நம்மை யெல்லாம் சிவவழிபாட்டின் பெருமையினை உணர வைக்கிறார்.

காலில் தீண்டத் தகுதி அற்ற சாக்கடை நீரும் கங்கையில் சேர்ந்தபின் தானும் கங்கை ஆகிறது.. அங்ஙனமே, கங்காதரனைச் சேர்ந்த கயவர்களும் கடவுள் மயமாகின்றனர் அன்னவர்க்குத் திருவாசகம் ஞான விளக்காக ஒளிர்கிறது என்ற உண்மைகளை ஆசிரியர், சாதாரணமக்களும் உணரும்படி பல செய்திகளோடு, தமிழ்நூல்களில் காணப்பெறும் சைவத்தின் மேன்மையினை இந்நூலில் தெளிவாக எழுதி உள்ளார்.

இந்நூலில், சைவத்தோடு தொடர்பு கொண்ட ஏராளமான பட்டினத்தார் பாடல்கள் பலவற்றையும், தாயுமானவர் சொல் ஓவியங்களையும் படித்து மகிழலாம். திருமுறைகள் பற்றி எத்தனையோ செய்திகள் நம்மில் பலருக்குத் தெரிந்திருக்க முடியாது. இருபத்தேழு பேர் திருமுறைகளை

எழுதினார்கள், பன்னிரு திருமுறைகளிலும் ஏறத்தாழ பதினெட்டாயிரம் திருப்பாடல்கள் காணப்பெறுகின்றன. இதைப் பாடியவர்களில் மூத்தவர், காரைக்கால் அம்மையார். சேக்கிழார் காலத்தில் பிற்பட்டவர் என்பது போன்ற ஏராளமான செய்திகள் தெரிந்து கொள்ள இந்நூல் ஒரு அகராதியாக விளங்குகிறது. தேவராய சுவாமிகள் செய்த கந்தர் சட்டி கவசம், பாம்பன் குமரகுருதாசர் எழுதிய சண்முக கவசம் பல தரப்பட்ட உலாக்கள், பிள்ளைத் தமிழ் நூல்கள் போன்ற எண்ணற்ற நூல்களின் பட்டியலும், அவை கூறியுள்ள சைவத்தின் பெருமையும் இந்நூலில் ஏராளமாகக் காணக் கிடக்கிறது.

சித்தர்களைப்பற்றி, அவர் இலக்கியங்களைப் பற்றி, சிவனிடத்தில் அவர்கள் கொண்டிருந்த ஈடுபாடு பற்றி, அவர்கள் இயற்றிய பாடல்கள் மூலம் இந்நூலில், ஆசிரியர் நமக்கெல்லாம் அற்புதக் கருத்துகளை அள்ளித் தந்துள்ளார். சித்தர்களைப் பற்றி பலருக்குத் தெரியாத பல உண்மைகளை இந்நூலில் காணலாம்.

வடநாட்டில் ஒன்பது பேர் கொண்ட நவநாதர் சித்தர்கள், தமிழ் நாட்டில் ஆரம்பத்தில் பதினெட்டுச் சித்தர்கள் பிறகு ஐம்பதிற்கு மேற்பட்ட சித்தர்கள் வாழ்ந்ததும், அவர்களில் சிலர் உருவ வழிபாட்டைக் கடிந்தனர் என்பன போன்ற இலக்கியங்களை இந்நூல் விளக்குகிறது. சித்தர்களில் கோயில் வழிபாட்டைக் கடிந்த ஒருவரின்

'கோயிலாவது ஏதடா ? குளங்களாவது ஏதடா?
கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே'

என்ற அற்புதப் பாட்டை, இந்நூலில் படித்து மகிழ்ந்தேன். இதைப் போல் எத்தனையோ பாடல்கள் மனிதனைத் திருத்தி, மடமையை ஒழித்து, எல்லாம் சிவமயம் என்று காட்டிய காருண்யமுள்ளபெரியார் படைத்த காவியங்கள் இந்நூலில் ஏராளம் ஏராளம். நான் எழுதிக் கொண்டே போகலாம் காரணம், சிவமும் தமிழும் இரண்டரக் கலந்த ஒன்று. ஆகவே ஆதிகாலம்தொட்டு நிகழ்காலம் வரை எழுந்துள்ள காவியங்கள், தமிழ் இலக்கியங்கள், இன்ன பிற தமிழ்நூல்கள் அனைத்தும் சைவத்தைப்பற்றி பேசி

உள்ளன. அவைகள் எவை எவை என்று நீங்கள் அறிய வேண்டுமா? ‘படியுங்கள் டாக்டர் ந.சுப்புரெட்டியாரின் ‘சைவமும் தமிழும்’ என்ற இந்நூலை. இதிலே தமிழ்ச்சமுதாயத்தில் எழுந்துள்ள இலக்கியங்கள் அத்தனையும், அவை எவை எவை சைவத்தைப் பற்றிப் பேசியுள்ளன என்ற குறிப்புகளையும் தொல்காப்பியக்காலம் தொட்டு, கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை காலம் வரை தமிழ் இலக்கியங்களில், சைவ தத்துவங்கள் சிறப்பிக்கப் பெற்றுள்ள பான்மைகளையும், இந்நூலில் படித்து மகிழலாம். இந்த நூல் சைவத்திற்கு ஓர் உயர்விடத்தை, ஆராய்ச்சியாளர்களுக்கு நல்ல தொரு புள்ளி விவரங்களை, தமிழ் ஆர்வலர்களுக்கு வளம் கொழிக்கும் தமிழ்ச் சுவையை அள்ளித்தரும் பெட்டகம். ஆழமான ஆராய்ச்சியைச் செய்து அழகுத் தமிழை அற்புதமாக வடித்துத்தந்து சைவ நெறி தழைத்தோங்க சீரிய சான்றுகளுடன் தமிழ் இலக்கியங்களை நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்தியுள்ள பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்களை மனதாரப் பாராட்டுகிறேன். வாழ்க அவர்தம் தமிழ்த் தொண்டு.

பு. ரா. கோகுலகிருஷ்ணன்.

அறிவியல் நோக்கில்

இலக்கியம், சமயம், தத்துவம்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

அறிவியல் தோற்றமும் வளர்ச்சியும், சமயங்களின் தோற்றமும் வளர்ச்சியும், அறிவியல் நோக்கில் சமயம் தத்துவம் எனும் மூன்று தலைப்புகளில் அடங்கியுள்ள மிகவும் இன்றியமையாத பல்வேறு உட்பிரிவுகளைக் குறித்து மிகத்தெளிவாகவும் விரிவாகவும் விளக்கியுள்ளார் பேராசிரியர்.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939835-4-6

eBOOK ~ மின் நூல்



அணிந்துரை

அறிவியல் நோக்கில்

இலக்கியம், சமயம், தத்துவம்


2001

வழங்கியோர்:

நீதியரசர் NK கிருஷ்ணசாமி ரெட்டி







Justice N.K. KRISHNASWAMY REDDY (Retd.) Ph : 6211044
AD-47, Anna Nagar
Chennai - 40
12-6-2000

அணிந்துரை

பேராசிரியர் பெரும்புலவர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் பல்லாண்டுகளாகத் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் ஆற்றியுள்ள பணி மகத்தானது. பல துறைகளிலே பல நூல்கள் எழுதிப் பல பரிசுகளும் பட்டங்களும் விருதுகளும் பெற்றிருக்கிறார்கள். இத்துணை புகழ் பெற்றும் செருக்கின்றி, ஆரவார ஆடம்பர வாழ்க்கையை அறவே ஒதுக்கி, எளிமையான வாழ்க்கையை ஏற்றுக்கொண்டு ஒழுக்க சீலராய் வாழ்கின்றார்கள்.

**"எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு"** (424)

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க டாக்டர் ரெட்டியார் அவர்கள் மிகவும் கடினமான மறைபொருள்களையும் எளிமையாக மக்கள் புரிந்துகொள்ளும் வகையில் எழுதுவதில் வல்லுநர் இவர்தம் தமிழ்ப்பணியில் அறிவியல் வாடை - ஒளி வெகுவாக இருக்கும்; ஆதிக்கம் பெற்றிருக்கும்.

பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் நிமிஷகவி திரு.கே. சுப்பைய நாயுடு அறக்கட்டளையின் ஆதரவில் **"அறிவியல் நோக்கில் தமிழ் இலக்கியம், சமயம், தத்துவம்"** என்ற பொருளில் 1996-97ஆம் ஆண்டிற்குரியனவாய், சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய இரண்டு சொற்பொழிவுகளே இன்று நூல் வடிவம் பெற்றுள்ளன.

"அறிவியல் தோற்றமும் வளர்ச்சியும்' என்னும் தலைப்பில் ஆதிமனிதன் அநுபவத்தில் படிப்படியாய்க் கூட்டுவாழ்க்கை, சமுதாய வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளான உண்டி, உடை, உறையுள், பாதுகாப்பு இவைகளை வேளாண்மை மூலமாய் நிறைவு செய்துகொண்டான் என்பதையும், அறிவியல் போக்கில் உயிரியல், மருத்துவம், கணிதம், வானியல், போக்குவரத்து முறைகள் எப்படிப் படிப்படியாய் வளர்ந்தன என்பதையும் தெளிவாய் எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

"சமயங்களின் தோற்றமும் வளர்ச்சியும்" என்னும் தலைப்பில் பல்வேறு சமயங்களைக் குறிப்பிட்டுப் பஞ்சபூதங்களாலாகியது இந்த உலகத்தின் தோற்றம் என்பதைச் சுட்டி, வைதிகச் சமயங்களாகிய வைணவம், சைவம் ஆகியவைபற்றியும் புறச்சமயங்களான சார்வாகம், சமணம், பௌத்தம் முதலியவைபற்றியும் தெளிவாகவும் விரிவாகவும் விளக்கியுள்ளார்கள். வைதிகச் சமயங்கள் யாவும் இறைவன் படைப்பிற்கு இறைவனையே நிமித்த காரணமாய்க் கொள்வதையும், புறச்சமயங்கள் யாவும் அணுக்களிலிருந்துதான் உலகம் தோன்றியது என்பதையும் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

'அறிவியல் நோக்கில் சமயம் தத்துவம்' என்னும் தலைப்பில் அண்டங்களின் அமைப்பையும் அணுவின் அமைப்பையும் ஒப்பிட்டு விளக்கி, 'ஆதவனே ஆற்றலின் மூலம்' என்பதையும், அவ்வாற்றலை ஆருயிர்கள் பல்வேறு பொருள் வடிவங்களின் மூலம் நுகர்கின்றன என்பதையும், இதற்கு அறிகுறியாகத்தான் பொங்கல் திருநாளை உழவர்கள் "தமிழர் திருநாளாகக்" கொண்டாடுகிறார்கள் என்பதையும் விளக்கமாய்த் தெளிவாக்கியுள்ளார்கள்.

அணுவாற்றலே சக்தி தத்துவமாய் உருவெடுத்தது என்றும், அறிவியல் யுகத்தில் தோன்றிய பாரதியார் அறிவியல் அடிப்படையில் தம் பாடல்களைப் படைத்துள்ளார் என்றும் பெருமையுடன் சுட்டியுள்ளார்கள்.

இந்த அருமையான, அறிவியல் நோக்கில் - போக்கில் - அமைந்த **பனுவலை** உலகத் தத்துவ மேதை **டாக்டர் T.M.P. மகாதேவன்** அவர்கட்கு அன்புப்படையலாக்கியிருப்பது மேலும் இதற்குப் பெருமை சேர்ப்பதாய் அமைகின்றது. இச்சீரிய நூலைத் தமிழ்ப்பெருமக்கள் படித்துப் பயன்பெறவேண்டும் என்பது என் விழைவு.

டாக்டர் ரெட்டியார் அவர்கள் மேலும் மேலும் தமிழ் மக்கட்குப் பயன்படுமாறு அறிவியல் சார்ந்த நூல்களை **எழுதிக் கொண்டே** பல்லாண்டுகள் மனவளமுடனும் உடல் நலத்துடனும் வாழ்வாங்கு வாழ எல்லாம் வல்ல எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

- என். கிருட்டிணசாமி ரெட்டி

கவிமணியின் தமிழ்ப்பணி

ஒரு மதிப்பீடு

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

கவிமணி காட்டும் இயற்கைக் காட்சிகளையும்,
படிமக் காட்சிகளையும் வரலாற்றுப் போக்கிலும்,
ஒப்பீட்டு முறையிலும் தமக்கே உரித்தான
முறையில் பேராசிரியர் திறனாய்ந்து
படைத்த ஓர் ஒப்பற்ற நூல்

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939317-5-2

eBOOK ~ மின் நூல்

ந சுப்பு ரெட்டியார் 1916 2016 100 நூற்றாண்டு விழா நிகழ்வுகள்



அணிந்துரை

கவிமணியின் தமிழ்ப்பணி

ஒரு மதிப்பீடு

2002

வழங்கியோர்:


பேராசிரியர் முனைவர் **இராதா செல்லப்பன்**

தலைவர் – தமிழியல்த்துறை

பாரதிதாசன் பல்கலைக் கழகம்







அணிந்துரை

(பேராசிரியர் முனைவர் இராதா செல்லப்பன்)

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் தமிழகத்தின் மூத்த தமிழறிஞர். நூறு நூல்களுக்கு மேல் படைத்து உலவ விட்ட பெருமைக்குரியவர். அவர் தொடாத துறைகள் இல்லை. பல்வேறு துறைகளில் ஆழங்காற்பட்டு தமிழ் ஆய்வு வளர்ச்சியில் தம்முடைய முத்திரையை நன்கு பதித்த பேரறி ஞர். தம்முடைய 87ஆவது அகவையிலும் ஓயாது உழைத்துத் தமிழன்னைக்குப் பல்வேறு நூல்களைக் காணிக்கையாக்கி உள்ளார். அவருடைய படைப்புச் சாதனையில் இப்பொழுது முகிழ்ந்துள்ளது "**கவிமணியின் தமிழ்ப்பணி - ஒரு மதிப்பீடு** " என்னும் நூல்.

கலை வேறு; அறிவியல் வேறு என்ற கருத்து மாறி இரண்டும் ஒன்றாகக் கை கோர்த்து நடக்கும் காலமிது. திறனாளிகள் அறிவியல் ணுகுமுறைகளைக் கொண்டு இலக்கி யத்தை ஆராய்வர். இலக்கியத் தோற்றமும் வளர்ச்சியும் அதன் போக்கும் சில பொதுவான கொள்கைகளுக்கு உட்பட் டவை. அப் பொது .ண்மைகளை அறியும் ஆர்வம் கிளர்ந்தெ ழுந்ததன் விளைவே இந்நூல். இந்நூலின்கண் ஆசிரியர் கவிமணி பல்வேறு கால கட்டங்களிலும் எழுதிய பாக்களைத் தொகுத்துப் பல்வேறு தலைப்புகளில் வகைப்படுத்தி ஆராய்ந்து தந்துள்ளார் நூலாசிரியர். கவிமணி காட்டும் இயற்கைக் காட்சிகளையும் படிமக் காட்சிகளையும் வரலாற் றுப் போக்கிலும் ஒப்பீட்டு முறையிலும் தமக்கே உரித்தான முறையில் திறனாய்ந்துள்ளார் பேராசிரியர்.

கவிஞரின் குழந்தைப் பாடல்களை நுணுகி ஆராய்ந்து கருத்தளிக்கிறார் பேராசிரியர். ரூசோவின் எமிலி என்ற நூல்தான் புதிய கல்வி முறைகளுக்கான வித்து என்று கூறும் அவர் பெஸ்டலாஸ்ஸி, ஃபிராபெல் முதலான மேனாட்டறிஞர்

பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர், தமிழியல் துறை, பாரதிதாசன் பல்கலைக் கழகம், பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி - 620 024. (தொ.பே.0431 - 660358)

களின் கல்விக் கொள்கைகளை எளிமையாக எடுத்துக் கூறுகிறார். அவர்கள் கொள்கைகள் மூலமாகக் குழந்தைக் கல்வி முறைகளைக் கூறுகின்றனர். கவிமணியின் குழந்தைப் பாடல்களோ கற்பித்தல் முறைக்குச் செயல்முறை வடிவம் கொடுக்கு மாற்றினை விளக்குகிறார்.

கவிமணியின் கவிதைகளில் வெளிப்படும் தேசபக்தி உணர்வைப் பாரதியார், பாரதிதாசன் ஆகியோரது உணர்வுகளோடு ஒப்பிட்டு ஆராய்ந்து கூறுகிறார். விடுதலைக்காகப் பாடுபட்டோர் மிதவாதிகள் தீவிரவாதிகள் என்ற இரு வகையாகப் பிரிந்து செயல்பட்டனர். பாரதியாரின் கவிதைகளில் தீவிர தேசபக்தக் கனல் வீசுவதை எடுத்துக்காட்டும் பேராசிரியர் பாரதிதாசனைப் பற்றிக் கூறும்போது ''பாரதிதாசன் கவிதைகளில் நாட்டுப்பற்று இல்லாமலில்லை. ஆனால், சமூக நீதிகளைக் கண்டிக்கும் போக்கும் தந்தை பெரியாரின் கருத்துக் களும்தான் அவர் பாடல்களில் தலைதூக்கி நிற்கின்றன'' என்று திறனாய்கிறார். கவிமணியைப் பற்றிக் கூறும்போது ''கவிமணி வாழ்ந்த சூழ்நிலை காரணமாக இவர்தம் பாடல்கள் நாட்டுப்பற்றின் இனிய மணம் கமழ்வதாக அமையவில்லை. ஆனால், நாட்டுப்பற்றிற்குரிய பொருள்களை இவர் பாடவே இல்லை என்று கருதவும் முடியாது'' என்ற கருத்துரைக்கிறார். தேசக்கொடியின் சிறப்பு, கதர் விற்பனை, வட்ட மேசை மாநாடு முதலான தலைப்புகளில் பாடி அவரும் தேசிய நீரோட்டத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவராக அமைந்து விடுகின்றார். கவிமணியவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்றும் சுதந்திரம் பற்றி அவர் பாடிய இரு பாடல்களுமே சுதந்திரம் பெற்றபின் பாடப் பெற்றவையே என்ற செய்தியையும் தருகிறார்.

கவிஞரின் கடவுள் கொள்கையை ஆராய்கின்ற பேராசிரியர் தாயுமான சுவாமிகள், குமரகுருபரர் ஆகியோரின் கருத்துக்கள் இவர்தம் பாடல்களில் காணப்படுகின்றன என்ற கருத்தைத் தெரிவிக்கிறார். கவிஞரின்,

கோவில் முழுதும் கண்டேன் - உயர்
கோபுரம் ஏறிக் கண்டேன்
தேவாதி தேவனையான் - தோழி!
தேடியும் கண்டிலேன்

என்று தொடங்கி காணாமைக்குரிய காரணத்தையும் அவ னைக் காணும் முறையையும் விளக்குவதை எடுத்துக்காட்டுகி றார் பேராசிரியர்.

> கண்ணுக் கினியன கண்டு - மனத்தைக்
> காட்டில் அலையவிட்டு
> பண்ணிடும் பூசையாலே - தோழி
> பயனொன் றில்லை, அடி
> உள்ளத்தில் உள்ளான், அடி!அதுநீ
> உணர வேண்டும்.அடி!
> உள்ளத்தில் காண்பாய்எனில் - கோயில்
> உள்ளேயும் காண்பாய்,அடி!

என்று கடவுளை ஆரவாரமின்றி கருத்தை ஒருநிலைப்படுத்தி நினைக்க வேண்டும் என்று கவிஞர் கூறும் நயம் சிறப்பாக உள்ளது. கலைமகள் பற்றிக் கவிஞுமணி பாடியுள்ள பாடல் குமரகுருபரரின் சகலகலாவல்லிப் பாடல்களையும் கம்பனின் சரசுவதி அந்தாதிப் பாடல்களையும் விஞ்சும் முறையில் அமைந்துள்ளது என்று பாராட்டிக் கூறுகிறார் பேராசிரியர் (ப.56) கவிமணி வடமொழியைத் தழுவி எழுதிய மீராபா யின் பாடல்களை அன்பொழுகும் அற்புதக் கவிதைகள் என்று கூறிக் களிக்கிறார் பேராசிரியர். அந்தப் பாடல் நிகழ்ச்சிகளை தமிழிலுள்ள பக்திப் பாடல்களில் உள்ள நிகழ்ச்சிகளோடு ஒப்பிட்டு வருணிப்பது மிகவும் சுவை பயப்பதாக அமைந்துள் ளது. மீரா அளித்த நைவேத்தியத்தை கண்ணன் விக்கிரகம் ஏற்றுக்கொண்ட செய்தி பேராசிரியருக்குக் கண்ணப்பநாய னார் குடுமித் தேவரைத் தம் நைவேத்தியத்தை உண்ணச் செய்ததையும் நம்பியாண்டார் நம்பி பொல்லாப் பிள்ளையா ரைக் கொழுக்கட்டையை உண்ணச் செய்ததையும் நினைவுக் குக் கொண்டு வருகிறது. மீரா முக்தியடைந்த நிலையை ஆண்டாளின் முக்தி நிலையோடும் திருப்பாணாழ்வார் முக்தி நிலையோடும் ஒப்பிட்டுக் காட்டி மகிழ்கிறார். புத்தர் பெரு மான் வரலாற்றைக் கூறும் ஆசிய ஜோதியைப் பற்றித் திற னாய்வு செய்யும் பேராசிரியர் அக்கவிதைகளில் தம்மையே இழந்து உணர்ச்சிப் பெருக்கோடு கவிதை நயம் காட்டுகிறார். தாம் அனைத்திந்தியக் கீழ்த்திசை மாநாட்டில் கலந்து கொள்ள வாரணாசி சென்றபோது புத்த கயைக்குச் சென்றதையும் அவ்வமயம் கவிமணியின் ஆசிய ஜோதிக் கவிதைகள் அவர் மனக்கண் முன்னே குமிழியிட்டதை உணர்ச்சி பொங்கக்

காட்டுகிறார் பேராசிரியர். அவ்விடங்களிலெல்லாம் மானசீக மாகப் புத்தர் பெருமானைத் தரிசிக்க அவர்தம் புனித வர லாற்றை உணரக் கவிமணியின் கவிதைகள் அவ்விடங்களி லெல்லாம் தம் மனக் காதுகளினால் கேட்டுக் களித்த நிலையை நயம்பட நம்மிடம் பகிர்ந்து கொள்கிறார் பேராசிரியர் அவர் கள்.

பாரதியும் பட்டிக்காட்டானும் என்ற தலைப்பில் அமைந்த கவிமணியின் கவிதையை "கவிதைத் திறனாய்விற்குக் கவி தையாலேயே திறனாய்ந்த அற்புதத் திறனாய்வுக் கவிதை இது. பின்னோர்க்கெல்லாம் இது ஒரு கலங்கரை விளக்கம் போல் அமைந்து என்றும் நின்று வழிகாட்டும் சிறந்த ஓர் இலக்கியமா கும்" என்று உவந்து பாராட்டுகிறார் பேராசிரியர்.

சுந்தரமூர்த்தி வழியில் என்ற இயலில் இயலுக்கான பெயர்க் காரணத்தை தருகிறார் பேராசிரியர். தேவாரத்தில் திருத்தொண்டத் தொகையைப் பாடி அடியார் வழிபாட்டைத் தொடங்கி வைத்தவர் சுந்தரமூர்த்தி நாயனார். தொடர்ந்து நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் அந்தாதி பாடினார். அந்தப் பாதையைப் பின்பற்றி பாரதியாரும் பாரதிதாசனாரும் பல்வேறு அறிஞர்கள், தொண்டர்கள் முதலானோரைப் பற்றிப் பாடினர். அம் மரபை அடியொற்றிக் கவிமணியும் வாழ்த்துப் பாடல்களாகவும் இரங்கற் பாக்களாகவும், போற்றும் முறையி லும் பாடல்களை அமைத்துள்ளனர். கவிமணியின் இப்பாடல் களைப் பற்றிய செய்திகள் இடம் பெறும் இவ்வியலுக்குச் சுந்தரமூர்த்தி வழியில் என்று பேராசிரியர் பெயர் சூட்டியுள்ள முறை சுவையூட்டுவதாக அமைந்துள்ளது. கவிமணி பல அறிஞர்களைப் போற்றிப் பாடியுள்ளார். பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்களும் கவிமணியும் இணை பிரி யாத தோழமையுணர்வுடன் பழகியவர்கள். கவிமணியின் நூல்கள் பலவற்றைப் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் முன்னுரை அணி செய்திருக்கிறது. தம்முடைய படைப்புகள் பெரும்பாலானவற்றைப் பிள்ளையவர்களிடம் படித்துக் காட் டிய பிறகே அவற்றை அச்சு வாகனம் ஏற்றியவர் கவிமணி. பிள்ளையவர்களைப் பற்றி அவர் ஒரு சிறிய பாடல் கூடப் படைக்கவில்லை என்பது வியப்பான ஒரு செய்தி. ஒரு சமயம் ஒரு நண்பர் கவிமணியிடம் நீங்கள் உங்கள் அன்பிற் கும் மதிப்பிற்குரிய வையாபுரிப் பிள்ளையவர்களைப் பற்றி ஒரு பாடல் கூடப் புனையவில்லையே என்று கேட்டாராம்.

அதற்குக் கவிமணியோ ''நான் வேறு பிள்ளையவர்கள் வேறு அல்ல; அவரைப் பற்றி நான் பாடலெழுதுவது என்னைப் பற்றி நானே பாடுவது போலாகுமே. அதனால் தான் நான் அவ்வாறு பாடலியற்றவில்லை'' என்று பதிலிறுத்தாராம்.

சமூகநலச் சிந்தனைகள் என்ற இயலிலே கவிமணியின் சமூக நோக்கை நன்கு வெளிப்படுத்துகிறார் பேராசிரியர். சமுதாய ஒற்றுமை, சாதி வேற்றுமை, தீண்டாமைக் கொடுமை, பெண்கள் நிலை, தொழிலாளர் நிலை, பிச்சைக்காரர் நிலை எனப் பல்வேறு கருத்துக்களின் அடிப்படையில் கவிமணியின் பாடல்களை ஆராயும் பேராசிரியர் தக்க இடங்களில் பாரதி யார் பாடல்கள், பக்தி இலக்கியப் பாடல்கள் முதலியவற் றோடு ஒப்பிட்டுக் காட்டி நயம் பாராட்டியுள்ளது மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. பண்பாட்டுக் கூறுகளைப் பற்றிப் பேசும்போது, கவிமணி நிலைமையாமையைப் பற்றிப் பாடல் களில் விளக்கியிருப்பது போல வேறு எங்கும் தமிழிலக்கியத் தில் காண முடியாது என்பதை ஆணித்தரமாகப் கூறுகிறார். கவிமணியின் மக்கட் பண்புக் கோட்பாட்டினை விளக்கும் போது, குதிரையின் புலம்பலாகக் கவிமணி தரும் பாடல்க ளைப் பேராசிரியர் எடுத்துக் காட்டியிருப்பது அந்த இயலுக் குப் பொருத்தமாக அமைந்துள்ளது. இயற்கையை நன்கு அனுபவித்துப் பாடிய புலவன் கவிமணி. அந்த உணர்வி னைத் தம் திறனாய்வின் மூலம் நமக்குப் பேராசிரியர் அளிக்கி றார் என்றால் அது மிகையாகாது. கவிமணியின் மருமக்கள் வழி மான்மியம் என்ற படைப்பு அங்கதச் சுவை நிறைந்த அருமையான ஒரு படைப்பு. நாஞ்சில் நாட்டில் வழக்கிலி ருந்த மருமக்கள் வழித் தாய் முறையைக் கண்டித்து எழுதப் பெற்ற ஒரு படைப்பு. இதனைப் பற்றிப் பேராசிரியர் கூறும் போது, ''மருமக்கள் வழி மான்மியம் என்ற சமுதாய ஓவியம் ஒரு நூதன இலக்கிய வகையைச் சார்ந்தது. இலக்கியம் வாழ்க்கையின் திறனாய்வு என்பர். இக்கூற்றினை விளக்குவது போல் கவிமணியின் இந்தச் சொல்லோவியம் அமைந்துள்ளது (பக்.224). கதைதைய ஓர் அபலையின் வாயில் வைத்துக் கவிமணி பேசுவது அற்புதமாக அமைந்துள்ளது (பக்.241). இந்தக் காவியம் நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மக்களின் வாழ்க்கையின் கண்ணாடியாகத் திறனாய்வுப் போக்கில் அமைந்துள்ளது தெளிவு (பக்.224)'' என்று தெளிவுபடுத்துகி றார் கவிமணியின் பாடல்களில் அமைந்துள்ள படிமங்கள்

பயில்வோர் மனத்தில் தோன்றி கவிதையனுபவத்தைக் கிளர்ந் தெழச் செய்கின்றன என்றும் அவை படிப்போரைக் கவிதைய னுபவத்தின் கொடுமுடிக்குக் கொண்டு செலுத்துகின்றன என் றும் கருத்து தெரிவிக்கும் பேராசிரியர் கவிமணி கையாண் டுள்ள படிமங்களை நன்கு வெளிப்படுத்தியுள்ளார். இப்படி மக் காட்சிகள் நம் மூளையில் பதிந்து முருகுணர்ச்சியாக மாறுவதை அறிவியல் பூர்வமாகவும் விளக்குகிறார் பேராசிரி யர்.

கவிஞரின் மொழிக் கொள்கையை ஆராய்கின்ற பேராசிரி யர் ''நூல் முழுவதும் கையாளப்பெறும் வட்டார வழக்குச் சொற்கள் காவியத்தை இயல்புடைத்தாக்குகின்றன. எடுத்துக் காட்டாக ஏகாங்கி, கண்டாங்கி, குலுக்கை, களரி கட்டுதல், மலரணை முதலிய பல சொற்களைக் காட்டுகிறார். கல்லாதா ருக்கும் விளங்கும் சொற்களைப் பயன்படுத்துகிறார். பெரும் பாலும் கதாபாத்திரங்களே பேசுவதாக இயற்றுவது அவரது வழக்கமாக உள்ளது என்கிறார் ஆசிரியர். இதுகாறும் மேற்கூ றிய கவிதைகளால்... இவருடைய தமிழ் என்றும் உள்ளத்தில் போற்றி வைக்கத்தகும் பொற்களஞ்சியம். நமது மூதாதைய ரின் பண்பாட்டிலும் மரபிலும் ஊறித் தோய்ந்து இனிமை முற்றிய தமிழ், உண்மை நிரம்பிய தமிழ், கல்லார்க்கும் கற்றார்க்கும் நாட்டார்க்கும் நகரத்தார்க்கும் ஒன்றுபோல நலம் இனளிக்கும் தமிழ் (பக்.263) என்ற மதிப்பீடு பேராசிரியரின் நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

''சாந்தலிங்கத் தம்புரான் தண்ணீரில் மிதந்து வந்த காகி தக் கப்பலைக் கையில் எடுத்துப் படித்துப் பார்த்து அதிசயித் துப் போனார். அழகழகான முத்து முத்தான எழுத்தில் தமிழ்ப் பாடல்கள் அதில் எழுதியிருந்தன... என்ன ஆச்சரியம்! சின்னச் சின்ன வார்த்தைகளில் புரியக் கூடிய தமிழில் எழுதியிருந்த அந்தப் பாடல்கள் அவருக்குப் பெரிய சந்தோ ஷத்தை உண்டாக்கிற்று... ஆச்சரியத்தோடு எதிர்க்கரையைப் பார்த்த தம்புரானுக்கு ஒரே வியப்பு! அச்சிறுவனை அழைத்து விவரம் கேட்க, அவன் எழுதிய பாட்டுத்தான் அது என அறிந்து வியந்து போகிறார் தம்புரான். தம்பி! என் மடத்துக்கு வா! உனக்கு நான் தமிழ் சொல்லித் தருகிறேன்!'' என்று குகன் பெரும்புள்ளிகள் என்ற தமது நூலில் கூறுகிறார். அச்சிறுவன் தான் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை. அவருடைய தமிழை அவருடைய கவிதைகளை இன்னும் சொல்லப்

போனால் அவருடைய படைப்புகளை ஆழமாகக் கண்டு தனது திறனாய்வுப் பார்வையால் அடையாளம் காட்டுகிறார் பேராசிரியர் சுப்பு ரெட்டியார் அவர்கள். அவருடைய இத் திறனாய்வு நூல் ஒப்பீட்டு முறையில் அமைந்த திறனாய்வாகத் திகழ்கிறது. கவிமணியுடன் பாரதியாரை, பாரதிதாசனை, நாமக்கல் கவிஞரை ஒப்பிட்டுக் காட்டுகிறார். கவிமணியின் பாடல்களைப படிக்கும் போது பேராசிரியருக்குத் தேவாரமும், ஆழ்வார் பாசுரங்களும் கண்முன்னே தோன்றுகின்றன. பேராசிரியரின் ஆசிய ஜோதியைப் பற்றிய மதிப்பீடு நம் கண்முன் புத்த கயையைக் கொண்டு வந்து காட்டுகிறது. கவிமணியின் கவிதைகளை ஒப்பிட்டு முறையில் நடுநிலையில் நின்று திறனாய்ந்து நல்லதொரு திறனாய்வு நூலினைப் படைத்தளித்த பேராசிரியருக்குத் தமிழ் உலகம் குறிப்பாகத் தமிழ்க் கவிதை உலகம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது என்றால் அது மிகையன்று.

— **இராதா செல்லப்பன்**

கவிஞர் வாலியின்

பாண்டவர் பூமி
ஒரு மதிப்பீடு

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

ஒரு படைப்பு வந்ததும் அதனை உடனே
திறனாய்வு செய்து நூல் வெளியிடும்
நல்லதொரு மரபினை அடியெற்றி
படைக்கப்பெற்றது இந்நூல்

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-938927-4-9

eBOOK ~ மின் நூல்



அணிந்துரை

பாண்டவர் பூமி

ஒரு மதிப்பீடு

2002


வழங்கியோர்:

பேராசிரியர் முனைவர் **வ. ஜெயதேவன்**

தலைவர் – தமிழ்மொழித்துறை

சென்னைப் பல்கலைக் கழகம்







சென்னைப் பல்கலைக்கழகம்

தமிழ் மொழித்துறை

டாக்டர் வ. ஜெயதேவன்
பேராசிரியர் - தலைவர்

சென்னை-600 005

11—3—2002

அணிந்துரை

இந்தியத் திருநாட்டிற்கு எத்தனையோ பெருமைகள் உள்ளன. அவற்றுள் அதன் இதிகாசப் பெருமை மிகவும் சிறப்பாகக் குறிக்கப்படுகிறது. இராமாயணம், மகாபாரதம் என்னும் இருபெரும் இதிகாசங்களின் தாயகமாக இந்தியா திகழ்வதே அத்தகு சிறப்பிற்குக் காரணம் ஆகும்.

சுவாமி விவேகானந்தர் கூறும் பின்வரும் கருத்துகளைக் கூர்ந்து படித்தால் இந்திய இதிகாசப் பெருமையை நன்கு தெரிந்துகொள்ளலாம்:

"There are two great epics in the Sanskrit language, which are very ancient. They embody the manners and customs, the state of society, civilization. etc., of the ancient Indians. The oldest of these epics is called Ramayana, 'The Life of Rama'. ...Rama and Sita are the ideals of the Indian nation. All children, espicially girls, worship Sita. The height of a woman's ambition is to be like Sita, the pure, the devoted, the all-suffering.

Mahabharata means Great India or the story of the great descendants of Bharata. This epic is the most popular one in India; and it exercises the same authority in India as Homer's

poems did over the Greeks. The internal conflicts between righteousness and filial affection in the of the god-fearing, yet feeble, old, blind King Dhritarashtra, the majestic charecter of the grandsire Bhishma; the noble and virtuous nature of the royal Yudhishthira, and of the other four brothers, as mighty in valour as in devotion and loyalty; the peerless charecter of Krishna. unsurpassed in human wisdom; and not less brilliant, the charecters of the women-the stately queen Gandhari, the loving mother Kunti, the ever-devoted and all suffering Draupudi-these and hundreds of other charecters of this Epic and those of Ramayana have been the cherished heritage of the whole Hindu world for the last several thousands of years and form the basis of their thoughts and of their moral and ethical ideas. In fact, the Ramayana and the Mahabharat are the two encyclopaedias of the ancient Aryan life and wisdom. portraying an ideal civilization which humanity has yet to aspire after.

When you study these charecters. you can at once find out how different is the ideal in India from that of the West. The West says, 'Do! Show your power by doing.' India says, Show your power by suffering. "The West has solved the problem of how much a man can have; India has solved the problem of how little a man can have." [Swami Vivekananda. My India: The India Eternal, Calcutta: The Ramakrishna Mission Institute of Culture,1996, 2nd reprint, pp.14-15]

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வடமொழியில் இயற்றப்பட்ட இந்த இதிகாசங்கள் இந்தியாவின் அனைத்து மொழிகளிலும் அம்மொழி மரபுகளுக்கேற்பக் கூட்டியும் குறைத்தும் மாற்றியும் படைக்கப்பட்டுள்ளன: முழுமையாக வும் பகுதியாகவும் படைக்கப்பட்டுள்ளன. செய்யுள், உரைநடை என்னும் இருவகை நடையிலும் படைக்கப்

பட்டுள்ளன. நாட்டுப்புறக் கதைகளிலும் கதைப்பாடல்களிலும் பிற கலைவடிவங்களிலும் படைக்கப்பட்டுள்ளன. இக்கால இலக்கிய வடிவங்களிலும் பல்வேறு கலை வடிவங்களிலும் படைக்கப்பட்டுள்ளன. பல்வேறு ஊடகங்கள் வாயிலாகவும் படைக்கப்பட்டுள்ளன. திரைப்படம், வானொலித் தொடர், தொலைக்காட்சித் தொடர், மேடை நாடகம், பள்ளி, கல்லூரி மேடைகள், இலக்கிய விழாக்கள், சொற்பொழிவு, கவியரங்கம், பட்டிமன்றம், வழக்காடு மன்றம், ஆய்வு எனப் பல நிலைகளிலும் முறைகளிலும் இந்த இதிகாசக் கதைகள் நாடு முழுவதும் பரவியுள்ளன.

காலந்தோறும் நிகழும் இத்தகைய நன்முயற்சிகளின் தொடர்ச்சியாகக் கவிஞர் வாலி இக்காலத்தில் மிகவும் செல்வாக்குற்றுத் திகழும் புதுக்கவிதை வடிவில் கம்பராமா யணம், வில்லிபாரதம் ஆகியவற்றைத் தழுவி முறையே *அவதார புருஷன், பாண்டவர் பூமி* என்னும் அழகிய பனுவல்களை எளிய இனிய தமிழில் படைத்துள்ளார். கவிஞர் வாலியின் அவதார புருஷன் வெளிவந்த உடனேயே அதனை நன்கு ஆராய்ந்து தமிழ் மூதறிஞர் பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் தனது 82-வது அகவையில் கவிஞர் வாலியின் அவதார புருஷன்-ஒரு மதிப்பீடு என்னும் ஆய்வு நூலை 1997-இல் அழகுற வெளியிட்டதைத் தமிழுலகம் நன்கறியும். அவ்வாறே, கவிஞர் வாலியின் பாண்டவர் பூமி வெளிவந்த உடனேயே அதனையும் நன்கு ஆராய்ந்து இப்போது *கவிஞர் வாலியின் பாண்டவர் பூமி-ஒரு மதிப்பீடு* என்னும் இந்த ஆய்வு நூலைத் தனது 87-ஆவது அகவையில் பேராசிரியர் சுப்பு ரெட்டியார் வெளியிட்டுள்ளார். ஒரு படைப்பு வந்ததும் அதனை உடனே திறனாய்வு செய்து நூல் வெளியிடும் நல்ல மரபைப் பேராசிரியர் தமிழுக்குத் தோற்றுவித்திருப்பது மிகவும் பாராட்டற்குரியது.

திரைப்படப் பாடலாசிரியராகவும் கவியரங்கக் கவிஞராகவும் பொய்க்கால் குதிரைகள் முதலிய படைப்புகள்

வாயிலாகவும் கவிஞர் வாலி தமிழுலகிற்கு நன்கு அறிமுக மானவர். புகழ்பெற்ற படைப்பாளியான அவர், புகழ்பெற்ற இராமன் கதையை அவதார புருஷன் என்னும் தலைப்பிலும் புகழ்பெற்ற பாரதக் கதையைப் பாண்டவர் பூமி என்னும் பெயரிலும் புகழ்பெற்ற புதுக்கவிதை வடிவில் படைத்ததன் வாயிலாகப் புகழின் உச்சியை எட்டியுள்ளார். அன்னாரின் பாண்டவர் பூமி குறித்த பேராசிரியர் சுப்பு ரெட்டியாரின் மதிப்பீட்டை இனி நோக்கலாம்.

கவிஞர் வாலியின் பாண்டவர் பூமி - ஒரு மதிப்பீடு என்னும் இந்த நூல், நூல்முகம் நீங்கலாகப் பன்னிரண்டு இயல்களைக் கொண்டுள்ளது. திருமாலின் தசாவதாரங் களுள் கிருஷ்ணாவதாரமே ஆழ்வார்களை மிகவும் ஈர்த்தது. பாரதியாரும் கண்ணனைக் கதாநாயகனாகக் கொண்டு கண்ணன் பாட்டுப் பாடினார். தூது போனவன் ஏற்றம் சொல்வது பாரதம் என்னும் ஸ்ரீவசனபூஷண வாக்கும் எழுந்தது. சௌலப்பியமே வடிவெடுத்தவன் கண்ணன். கண்ணன் இல்லையென்றால் பாரதமே இல்லை. இவ்வாறு கண்ணன் பெருமை பேசிப் பாரதத்தை ஆசிரியர் நூல்முகம் என்னும் பகுதியில் அறிமுகப்படுத்துகிறார். அன்றியும், கவிஞர் வாலியின் பாண்டவர் பூமி என்னும் பெயர் அந்நூலுக்குப் பெருந்துமாற்றையும் இப்பகுதியில் புலப் படுத்துகிறார்.

தோரணவாயில் என்னும் முதல் இயல் பாரதக் கதை மாந்தர்களை அறிமுகப்படுத்திப் பாண்டவர் பூமியில் கவிஞர் வாலி செய்துள்ள புதுமைகளைச் சுட்டிக் காட்டுகிறது. விதுரனின் திருமணம், கண்ணனை விதுரன் மனைவி வரவேற்றமை, விதுரனின் முற்பிறப்பு வரலாறு போன்றவை வில்லியில் இல்லை என்பதை எடுத்துக்காட்டி இத்தகைய மாற்றங்கள் பாண்டவர் பூமி என்னும் காவியத்தின் கதை யோட்டத்திற்கும் சுவைக்கும் துணை செய்வனவாக உள்ளன

என ஆசிரியர் ஆராய்ந்து கூறியுள்ளார். வாலி செய்துள்ள வியாதனின் படைப்பு சீர்திருத்தக் கொள்கையை அடிப் படையாகக் கொண்டது என்றும்,

பிறப்பால் நானொரு
புளிஞன் எனினும்
தெய்வானுக் கிரகத்தால்—நான்
தெளிஞன்

என்று தொடங்கிக் கவிஞர் வாலி விளக்கும் கருத்துகள் யாவும் உபநிடதக் கருத்துகளையும் விஞ்சுமாறு அமைந்துள் ளது என்றும் ஆசிரியர் கூறும் திறம் பாராட்டத்தக்கது. பெரும்பாலும் வியாசரை அடியொற்றியே பாண்டவர் பூமி நடை போடுகிறது என்பதை முதல் இயல் தெளிவுபடுத்து கிறது.

அடுத்து வரும் இயல் பாண்டவர் பூமியின் வருணனை வளத்தை விதந்துரைக்கிறது.

அந்தத்
தீர்த்தங்கரையின்—
திவ்வியத்தை அள்ளி—
புலவோர்
வார்த்தைக் கரையில்
வைத்ததுண்டு, அதன்—
வனப்பும்—
வசீகரமும்—
தவசிகளின் நெஞ்சையும்
தைத்த துண்டு!

அந்த—
மண்ணழகில்—
மன்னவர்க்குப்
பெண்ணழகும்—
கைத்த துண்டு
நூறிடத்தில் தாவி—

நொந்த நெஞ்சங்களும்—அந்த
ஓரிடத்தில் ஒன்றி—
மொய்த்த துண்டு!

இத்தகைய வருணனைகள் பலவற்றை வகைப்படுத்தி எடுத்துக்காட்டி இவற்றில் படிப்போர் மனம் ஈடுபட்டு மகிழ்வதை ஆசிரியர் சுட்டிக்காட்டிச் செல்லும் பாங்கு பாராட்டற்குரியது.

காவிய மாந்தர்கள்-அறிமுகம் பற்றி அமைகிறது. சகுனியை அறிமுகம் செய்யும்போது அவன்மீது கவிஞர் வாலி கொண்ட சினமும் சேர்ந்தே வெளிப்படுகிறது என்பதை ஆசிரியர் பின்வரும் எடுத்துக்காட்டால் விளக்குகிறார்:

தீய
வர்க்கத்தை—
மொத்தமாக—
குத்தகைக்கு எடுத்தவன்
சுத்தமாக—
சத்தியத்தை விடுத்தவன்
... ...
சகுனி, அவன்
ஆணுருக் கொண்ட
ஆயிரம் கூனி
... ...
சூதாடுவதிலும்—
சூதை உள்வைத்து—
வாதாடுவதிலும்
அவன்போல்—
ஆருக்கும் வராது—அத்துணை
ஆகடவிகடம்

இவ்வாறு ஐம்பத்தைந்து கதைமாந்தர்களையும்

ஆசிரியர் அறிமுகப்படுத்திக் கவிஞர் வாலியின் ஆற்றலைப் புலப்படுத்துகிறார்.

அடுத்துவரும் இயல் பாண்டவர் பூமியின் அணிநலன்களை ஆராய்கிறது. கவிஞர் வாலியின் உருவகிக்கும் ஆற்றலை ஆசிரியர் பின்வரும் எடுத்துக்காட்டுவழி விளக்குகிறார்:

அழகு—
அங்கமெல்லாம்
அப்பிக் கிடக்கும்
அளகபாரத்தில்
ஐப்பசி மேகம்
கப்பிக் கிடக்கும்
விழி விளக்குகள்
வெளிச்சத்தைத்
துப்பிக் கிடக்கும்
உதட்டுப் பூக்கள்
உள்ளிருக்கும் கள்ளால்
உப்பிக் கிடக்கும்

இவ்வாறே கவிஞர் வாலியின் உவமிக்கும் ஆற்றலையும் எடுத்துக்காட்டுகள் பலவற்றின் வாயிலாக ஆசிரியர் புலப்படுத்துகிறார். காட்டாகப் பின்வருவனவற்றைக் குறிக்கலாம்:

விதையிலிருந்து எழுகின்ற
விருட்சம் போல்—அவன்கை
கதையிலிருந்து எழுந்தது
...

முற்றுப்புள்ளி வைத்த
வாக்கியம் போல்—
முடிந்து போனாள்

அடுத்துவரும் இயல் பாண்டவர் பூமிவழி வெளிப்படும் கவிஞர் வாலியின் சொல்லாட்சிச் சிறப்பைச் சான்று காட்டி விளக்குகிறது.

மூவரசு காத்து வந்த
முத்தமிழை—அந்தப்
பூவரசு சுற்றி வந்து
பெற்றவன் நான்

எனக் கவிஞர் வாலி தன்னைப் பற்றிக் கூறும்போதும்,

பிள்ளையார் சுழியைப்
பிள்ளையாரே போட்டு
எழுதிய ஒரே கதை
இந்தக்கதைதான்

என மகாபாரதத்தைக் கூறும்போதும்,

இன்னும்
இறவாதிருக்கும்
ஒரு கதை, கிராமத்து
மண்ணும்
மறவாதிருக்கும்
ஒரு கதை, இதன்
மகத்துவத்தைப் பேச—என்
கவித்து வத்திற்கு ஏது
அருகதை?

உப்புக் கடலின்
உள்ளீ டெல்லாம்—ஒரு
செப்புக் குடமா
செப்பக் கூடும்?—நாகம்
கக்கும் மணியின்
கீர்த்தியை முழக்கி—சிறு
நாக்குப் பூச்சியின்
நாக்கா பாடும்?

திருப்பதிக் குடையின்
தெய்வீகத்தை—ஒரு
நாய்க் குடை கூறியா
நானிலம் அறியும்?—நிலத்தைப்
பேர்க்கும் ஈட்டியின்
பெருமை ஈதென—ஒலை
ஈர்க்குப் பேசியா
ஊர்க்குப் புரியும்?

எனத் தன்னடக்கமாகக் கூறும்போதும் அற்புதமாகச் சொல் வீச்சு வெளிப்படுவதை ஆசிரியர் அழகாக எடுத்துக்காட்டு கிறார். பழமொழி ஆட்சி, சொல்-பொருள் நயப்பகுதிகள், மரபுத் தொடர்கள் எனத் தலைப்பிட்டு ஆசிரியர் கவிஞர் வாலியின் பன்முகப்பட்ட கவிதைச் சிறப்புகளைப் புலப்படுத்துகிறார். சான்று இதோ:

ஞாயிறு வனப்பை—
தரையில் பூத்த—
திங்கள் கண்டது
அதன்—
செவ்வாய் வியந்து
'அடடா
அற்புதன்' என்றது
அந்த—
வியாழன் நிகர்த்த—துர்
வாசன் அருளால்—சொக்க
வெள்ளி நிகர்த்த—ஒரு
வெளச்சம் 'பளிச்'சென—
சனித்து நின்றது, ஒப்பின்றித்
தனித்து நின்றது

அடுத்துவரும் இயல் பாண்டவர் பூமியில் இடம் பெற்றுள்ள கிளைக்கதைகளை விளக்குகிறது. அதனை அடுத்துவரும் இயல் பாண்டவர் பூமியின் ஒன்பான் சுவைகள்

குறித்துப் பேசுகிறது. தொடர்ந்து வரும் இயல்களில் முறையே கிருட்டிணன் தூது, கவிஞர் வாலியின் கிருட்டிண பக்தி, உண்மைகளும் படிப்பினைகளும், கீதையின் சாரத்தின் சாரம் ஆகியவற்றை ஆசிரியர் விளக்குகிறார். முடிவுரையில் இந்த ஆய்வின் முடிவுகளைத் தொகுத்துரைக்கிறார் ஆசிரியர். '*கவிஞர் வாலியின் புதுக்கவிதையில் அமைந்த பாண்டவர் பூமி பொதுமக்களின் சொத்தாக அமைந்துவிட்டது. புலவர் கட்கும் எட்டும் போக்கிலும் அமைந்துள்ளது. இதனை இவ்வுலகுக்கு வழங்கிய உபகரித்த கவிஞர் வாலி 'தமிழ் வியாசர்' என்று கருதும் அளவுக்கு உயர்ந்துவிடுகின்றார். தமிழர் நெஞ்சங்களில் நிலையான இடத்தைப் பெற்றுத் திகழ்பவருமாகின்றார்*' என்பது நூலாசிரியர் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் கண்ட முடிபு, கொண்ட துணிபு.

இத்தகு இனிய நூலைப் படைத்த பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் அவர்களுக்கு நமது பாராட்டுகள். தமிழ் உலகம் இந்நூலை நன்கு வரவேற்கும் என நம்புகிறேன்.

வ. ஜெயதேவன்

பல்சுவை விருந்து

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

இலக்கிய ஆய்வு, அறிவியல், வள்ளுவரின் கருத்துக்கருவூலம்,
சுவை பற்றிய கருத்து, சீர்திருத்தம், புதுக்கவிதை, பெரியார்கள்
பற்றிய நினைவுக்குறிப்புகள், சாதி சமயக் குறிப்புகள்,
சமுதாய சீர்கேடுகள், இன்னபிற பொருட்கள் குறித்தும்
பதிமூன்று கட்டுரைகளை தன்னகத்தே கொண்ட
ஓர் அரிய தொகுப்பு.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications



ISBN: 978-81-939561-2-0

eBOOK ~ மின் நூல்




அணிந்துரை

பல்சுவை விருந்து
2002

வழங்கியோர்:

அரிமாதுரை சுந்தரராஜூலு








அணிந்துரை

(அரிமா துரை, சுந்தரராஜுலு)



'தமிழ்ச்செம்மல்', 'கலைமாமணி', 'ஆய்வுத் தமிழரசு', 'பொதுமறைச் செம்மல்', 'தமிழ் வாகைச் செம்மல்' பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் எண்ணற்ற நூல் களை எழுதி, மக்கள் மத்தியிலே பெரும் நன் மதிப்பை பெற்றவர். ஏறத்தாழ 120 நூல்களுக்கும் மேல் எழுதிய இவர் ''பல்சுவை விருந்து'' என்ற நூலினைத் தமது பட்டியலில் இணைத்துள்ளார். தனது 87 வயதிலும் தளரா உழைப்போடு இடையறாது தமிழ்ப்பணி ஆற்றிவரும் இவர், இந்த நூலின் அணிந்துரையை எழுத என்னைப் பணித்துள்ளார். நான் புத்தகங்கள் நிறைய படிப்பவன் என்றாலும், இப்படிப்பட்ட பணி எனக்குப் புதியது. முயன்று இருக்கிறேன். அண்ணா நகர்த் தமிழ்ச்சங்கத்தின் தலைவராக இருக்கும் இந்நூலாசிரியர், அச்சங்கத்தின் செயலாளராக உள்ள என்னிடம் இப்பொறுப்பை ஒப்படைத்திருப்பது நான் பெற்ற பெரும் பேறாகக் கருதுகிறேன். 'பல்சுவை விருந்து' என்னும் இந்நூல் 13 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை, ''ஒன்றே குலம் - ஒருவனே தேவன்'', 'வழிகாட்டும் வள்ளுவம்', 'பாவேந்தர் பாடல் களில் படிமங்கள்', 'விண்வெளிப்பயணம்' 'தமிழில் நகைச்சுவை', 'புதுக்கவிதை - சமுதாய நோக்கில்', 'ஒவ்வாமை', 'வரலாறு எழுதுவது எப்படி', 'திருக்குறள் - வாழ்வுச் செல்வம்', 'காமராசர் பற்றிய நினைவுகள்', 'இராஜாஜி பற்றிய நினைவுகள்', 'சாதி ஒழிப்பு', 'வைணவச் சிகரப் பேரொளி' என்பனவாம். பல்வேறு நிலைகளில் தாம் எழுதியதும், பேசிய சொற்பொழிவுகளைத் தொகுத்து இந்த 13 கட்டுரைகளில் வடித்துத் தந்திருக்கிறார்.

செயலர், அண்ணாநகர்த் தமிழ்ச்சங்கம், 101 எல்.பிளாக், அண்ணாநகர் கிழக்கு, சென்னை - 600102. தொ.பேசி. 6633322

சாதிப்பாகுபாட்டினையும், குலப்பாகுபாட்டினையும் வேறு படுத்தி இவை அவரவர்கள் மேற்கொண்ட தொழில் ரீதியாக ஏற்பட்டது என்பதைக் கூறும்போது, சாதிகளை ஒழிப்போம் என்று சொல்லிக்கொண்டே, சாதிகளை அரசே வளர்க்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி இருக்கிறார். சங்க காலத்திலே சமயம் என்பது இல்லை என்று கூறும் ஆசிரியர், ஞானசம்பந்தர், அப்பர் காலத்திலும், ஆழ்வார் பாசுரங்களிலும் சைவ, வைணவ சமய மோதல்கள் இருந்தன என்று விளக்குகிறார். அந்தக் காலத்தி லேயே 'மத மாற்றம்' இருந்ததைக் கூறும் இவர், தாயுமான அடிகள், மற்றும் வடலூர் வள்ளலார் போன்றவர்கள் சாதி சமய எண்ணம் ஒழிய வேண்டும் என்ற தங்கள் ஆதங்கத்தையும் வெளிப்படுத்துவதைக் காட்டுகின்றார். இப்பூசல்களிலிருந்து விடுபட, சாதிக் குழப்பங்களாலும், சமயப் பூசல்களாலும் அலைக்கழிக்கப்பெறும் சமுதாயம் நல்வழிப்பட 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற திருமூலரின் கருத்தினை வலியுறுத்து வதுதான் இன்றைய சமுதாய சீர்கேடுகளினின்றும் மீள்வதற்கு ஒப்பற்ற வழி என்று கூறுகிறார்.

பல்வேறு அறிஞர் பெருமக்கள், புலவர்கள் கூறியதை கூறும் இவ்வாசிரியர் 'வாழ்க்கைக்கு வழிகாட்டும் திருக்குறள்' என்ற கட்டுரையில், சங்கப் புலவர் பரணர் கூறியதையும், மனிதன் பெறவேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு பொருள்களையும் பற்றி நக்கீரர் கூறியதைப் பற்றியும் குறிப்பிட்டு இருக்கிறார். அனைத்தைப்பற்றிக் கூறிய வள்ளுவர், வீடு பற்றித் தெளி வாகக் குறிப்பிடவில்லை என்று கூறுவோரும் உண்டு. ஆனால்,

"அறனறிந்தேம், ஆன்ற பொருள் அறிந்தேம் இன்பின்
திறனறிந்தேம் வீடு தெளிந்தேம்"

என்று திருவள்ளுவ மாலையில் கூறியிருப்பதை இங்கே கையாண்டிருப்பது நமக்கு தெளிவுபெறச் செய்கிறது. திருக்குறளை ஒரு பெட்டகத்தோடு ஒப்பிட்டு விளக்கியிருப்பதும்,

குறளைக் கையாண்டவர்களில் கம்பன், திருத்தக்கதேவர், இளங்கோவடிகள், சீத்தலைச் சாத்தனார், புகழேந்தி போன்ற புலவர்கள் முக்கியமானவர்கள் எனக் கூறியிருப்பதும் சிந்திக்கத் தக்கதாகும். திருக்குறள் ஒரு வைட்டமின் மாத்திரைக்கு நிகரானது எனக் கூறும் ஆசிரியர், உரை எழுதுபவர்கள் முன்னுக்குப் பின்னான முரணான கருத்துக்களை கூறுவதற்கு ஆதங்கப்படுகிறார். இருப்பினும் இந்நூல் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைகிறது என்பது மறுக்க முடியாத ஒன்று.

பல்சுவைகளைத் தன்னகத்தே அடக்கியுள்ள பாவேந்தர் பாடல்களில் படிமங்கள் சிலவற்றை - அதாவது - கட்புலப் படிமங்கள், செவிப்புலப்படிமங்கள், சுவைப்புலப் படிமங்கள், நாற்றப்புலப் படிமங்கள், தொடுபுலப் படிமங்கள், இயக்கப்புலப் படிமங்கள், கலவை நிலைப் படிமங்கள், மின்வெட்டுப் போன்ற மணிமொழிப் படிமங்கள் போன்றவைகளைக் குறிப்பிட்டு, அண்டங்கள் கோடி கோடி அனைத்தையும் தன்னகத்தே கொண்ட ஒரு பெரும்புறத்தில் கூத்தாடுகிறது காற்று, அது தென்றலாக உருவெடுப்பதைப் 'பொதிகைமலை விட்டெழுந்து சந்தனத்தின்'..... என்ற பாடலின் மூலம் இப்புலப் படிமங்கள் ஒருங்கே அமைந்திருப்பதை சுட்டிக் காட்டியுள்ளார். மின்வெட்டு போன்ற மணிமொழிப் படிமத்தில், ஆசிரியர் கையாண்டிருக்கும் சொற் களும், கருத்துகளும் மின்வெட்டினைப் போன்று நறுக்குத் தெறித்தாற் போல அமைந்துள்ளது வியக்கத்தக்கதாகும். படிப் போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றன என்றால் அது மிகையாகாது.

ஆசிரியர் அடுத்து வானவெளியில் உள்ள மண்டலங்களைத் தெளிவாகச் சொல்லி இராக்கெட்டு எவ்வாறு அமையப்பெறுகின்றது, இயக்கப்பெறுகின்றது போன்ற துல்லியமான விவரங்களைக் கூறி, விண்வெளிப் பயணம் மேற்கொள்பவர்கள் எதிர்நோக்கும் இடர்கள், நெருக்கடிகள் குறித்தும் விரிவாக விவாதிக்கிறார். இக்கட்டுரையைப் படிக்கும் போது ஏதோ நாமே விண்வெளியில் பயணம் செய்வது போன்ற அநுபவம் ஏற்படுகிறது.

சுவை என்றால் உணவு சம்பந்தப்பட்டு ஒருவிதமான உணர்ச்சி என்று தான் இதுகாறும் கருதி வந்துள்ளோம். ஆனால் 'சுவை' என்ற சொல்லுக்கு இவ்வளவு விரிந்த, பரந்த பொருள் உண்டு என்பது இக்கட்டுரையைப் படித்த பின்னர் உணர முடிகிறது. காதலுக்குக் காரணமாகவும், நடிகர்களின் அபி நயத்தின்போது எதிர்ப்படும் 'விபாவம்', 'அநுபாவம்', 'சஞ்சாரி பாவம்' இவைகளெல்லாம். 'ரஸம்' அல்லது 'சுவை' என்று அறியும்போது வியப்படையச் செய்கிறது. எத்தகைய சுவையாக இருப்பினும், அவை சிருங்காரம் (உவகை) கருணம் (அழுகை) வீரம் (பெருமிதம்) ரௌத்திரம் (வெகுளி) ஹாஸ்யம் (நகை) பயானகம் (அச்சம்) பீபத்ஸம் (இழிவரல்) அற்புதம் (மருட்கை) சாந்தம் (நடுவுநிலை) என்ற 9 உணர்ச்சிகளுக்குள்ளேயே பாகு படுத்தியுள்ளனர் என்பதை தெளிவாக எடுத்துக்கூறுகிறார். ஆசிரியர் நகைச்சுவையை 'முறுவலித்து நடுதல்', 'அளவே் சிரித்தல்', 'பெருகச்சிரித்தல்' என்று பாகுபடுத்தித் தக்க விளக்கங்களுடன் கூறியுள்ளார். 'எள்ளல்' பற்றியும், 'இளமை' பற்றியும், 'பேதமை' பற்றியும் 'மடமை' பற்றியும் வரும் நகைச் சுவைகளை சரித்திரச் சான்றுகளுடன் எடுத்துக் கூறியிருக்கிறார். நகைச்சுவையோடு இது நின்றுவிடாமல், சிந்தனைக்கும் விருந்தாக அமைகிறது என்றால் அது மிகையல்ல.

'புதுக்கவிதையை'ப் பொறுத்த வரையில் சமுதாயத்தில் எந்த அளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை சுட்டிக்காட்டியுள்ளார். அவர் மேற்கோளாக காட்டியிருக்கும் புதுக்கவிதைகளின் தலைப்புகள், ''சுதந்திரம்'', ''காதல்'', ''ஆட்சிமுறை'', ,''விலைவாசி'', ''கல்லூரிகளின் நிலை'' , ''குடிப்பழக்கம்'', ''விபசாரம்'', ''வறுமை'' போன்றவை சமுதாயத்தில் பிணைந்து நிற்கக் கூடியவைகள். சுதந்திரத்தைப் பற்றிக் கூறும்போது, காந்தி அடிகளின் புன்னகையைப் பற்றி குறிப்பிடுகிறார். காதலைப்பற்றிக் கூறும்போது ''ரோகிணி'' செயற்கோளை காதலியாக உருவகப்படுத்திக் கூறுகிறார். ஆட்சி முறையைப்பற்றிக் குறிப்பிடுகையில் ''தண்டியாத்திரையையும்

தற்போது நடக்கும் ''கிண்டியாத்திரையையும்'' பற்றிக் குறிப் பிட்டு ஒப்புநோக்குகிறார். ''நீ எமர்ஜென்சி பூசாரிக்குத்தான் அடங்குவாயா'' என விலைவாசியைப் பற்றிக் குறிப்பிடுகிறார். ''தன் குடலுக்குத் தானே தீ மூட்டிக் கொள்வதில் அப்படி என்ன போர்க்கால வேகமும் வெறித்தனமும்'' என்ற வரிகளைப் படித்த பின்னரும் ஒருவனுக்குக் குடிக்கத் தோன்றுமா என்ன? விபசாரத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் ''கண்ணகி கல்யாண மண்டபக் கட்டிடத்திற்கு நிதி வசூல் செய்கிறேன்'' என்றும், 'பரத்தைகள்' என்ற தலைப்பில் எழுதப்பட்ட கவிதை அடிகள், தரையிலே ஓடும் ரயில்கள் என்ற கவிதைத் தொகுப்பு இவற்றைத் தொகுத்து 'விபசாரம்' என்ற தலைப்பிலே எழுதியுள்ள ஆசிரியர், 'போனது போலீசார் மட்டும்தானா, தோளோடு தோள் இணைந்து நீதியும் நெடும் பயணம் போனது அவரோடு' என்று சொல்லப்பட்ட அடிகள், மாமூல் வாங்குவதை நாசூக்காகவும், நாகரிகமாகவும் குறிப்பிட்டுள்ளார். ''அவர்கள் விடியலின் விரோதி கள், கல்யாணப் பந்தலில் நுழைய முடியாத நித்திய கல்யாணிகள், கண்ணீர் புத்திரிகள்'' என்ற அடிகள், படிப் போரின் நெஞ்சத் தைப் பிழிய வைக்கின்றன. சமுதாயத்தோடு ஒட்டி வருகின்ற இந்தக் கவிதைகள் ஆசிரியரால் தொகுக்கப்பட்டு வெளி வந்திருப்பது உள்ளத்தை உருக வைக்கும் என்பதில் ஐயமில்லை.

ஒவ்வாமையைப் (Alergy) பல்வேறு கோணங்களில் சித் திரித்துப் பாமரர்களும் புரிந்து கொள்ளும் அளவிற்கு தொகுத்து தந்துள்ள ஆசிரியர் பாராட்டுக்குரியவர். உணவுப்பழக்க வழக் கங்கள் எவ்வாறு இருக்கவேண்டும், ஒவ்வாமை வராமல் தடுக்க என்ன செய்ய வேண்டும், வந்திடின் கையாள வேண்டிய முறைகள் என்ன என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

'வரலாறு எழுதுவது எப்படி' என்று இக் கட்டுரையைப் படித்த பின் தெளிவடைபவர்கள் ஏராளம். சிலர் எழுதும் வரலாறு, வரலாறாகவே இருப்பதில்லை என்பதும் மறுக்க இயலாத ஒன்று. வரலாற்றில் தான் எத்தனை வகை. தன் - வரலாறு, வாழ்க்கை வரலாறு, மொழி வரலாறு, இலக்கிய

வரலாறு, அறிவியல் வரலாறு, நாட்டு வரலாறு போன்ற தலைப்புகளில் சீரிய கருத்துகளைக் கூறியுள்ளதோடு, பல்வேறு தலைவர்கள், அரசியல் அறிஞர்கள் - காந்தி, நேரு, டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர், இராஜாஜி போன்றவர்கள் எழுதிய தன் - வரலாறு, நாட்டிற்கே வழிகாட்டியாக அமைந்தது என்றால் மிகையல்ல. அதே போன்ற தமிழ்நாட்டில் 'டாக்டர் கலைஞர்' அவர்கள் எழுதிய 'நெஞ்சுக்கு நீதி' என்ற நூல் அவரது வாழ்க்கை வரலாற்றை மட்டுமல்ல, தமிழகத்தின் வரலாற்றையும் விளக்குகிறது என்பது என் கருத்தாகும்.

இந்நூலாசிரியர் பேராசிரியர் முனைவர் ந. சுப்புரெட்டியார் அவர்களும் தன் - வரலாறு 'நினைவுக் குமிழிகள்' (ஐந்து தொகுதிகள்) எழுதியுள்ளார். வாழ்க்கையை எவ்வாறு அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை தெளிவாகக் குறிப் பிட்டுள்ளார். நடந்ததை நடந்தபடியே எழுதுவதுதான் வரலாறு. ஆனால் ஒருசிலர் தங்களுக்குப் பாதகமான செய்திகளை விட்டுவிட்டு, சாதகமான செய்திகளை மட்டும் எழுதுவதை நான் கண்டிக்கிறேன். தமிழ் மொழி வரலாறு எழுதிய சூரியநாராயண சாஸ்திரியும், மொழி வரலாறு எழுதிய டாக்டர் மு.வ. அவர் களும் இங்கே நினைவு கூரத் தக்கவர்கள். ஒவ்வொரு முறையும் ஆட்சிக்கு வருபவர்கள், தங்களுக்கு முன்பிருந்த ஆட்சியாளர் களின் வரலாற்றை மறைத்து எழுதுவதையும் நாம் காண்கிறோம். இவ்வழக்கம் ஒழிக்கப்பட வேண்டும். ஜவகர்லால் நேரு எழுதிய "Discovery of India" என்ற வரலாற்று நூல் இத்தகையவர் களுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது என்பது கண்கூடு.

2000 ஆண்டுகளுக்கு முன்னர் தெய்வப்புலவர் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் இன்றைக்கு உள்ள சூழ்நிலைக்கும் பொருத்தமாக இருக்கிறது என்பதில் இருவேறு கருத்துகள் இருக்க முடியாது. இந்நூலாசிரியர் வாழ்க்கைக்கு இன்றியமையா ததான அறிவியல், வேளாண்மை, மருத்துவம், நிலையாமை, அரசியல் போன்ற தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து வாழ்க்கைக்கு அவை எவ்வாறு பயன்படுகின்றன என்பதை விளக்கிக் கூறி

இருக்கிறார். வள்ளுவர் கூறிய இல் வாழ்க்கையை அமைத்துக் கொள்பவர்கள் சீரிய வாழ்க்கைக்குச் சொந்தக்காரர்கள். அதில் இல்லாததே இல்லை என்று சொன்னால் அது மிகையாகாது. அதனால்தான் - மதுரைத் தமிழ்நக்கனார் என்ற சங்கப்புலவர் -

"எல்லாப் பொருளும் இதன்பால் உளதென்பால்
இல்லாத எப்பொருளும் இல்லை"

என்று கூறியுள்ளார்.

அத்தகைய சிறப்புமிக்க இந்நூல் வாழ்க்கைக்கு வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை.

கல்விக்கண் திறந்தவர், படிக்காத மேதை என்று அனைவ ராலும் பாராட்டப்பட்ட கர்மவீரர் காமராசரைக் குறித்து ஆசிரியர் தெளிவாக குறிப்பிட்டிருக்கிறார். தாம் வாய் திறந்து பேசாமல் தன்னைவிட அதிகம் படித்தவர்களிடம் பெற வேண்டிய பணிகளை செவ்வனே பெற்று சீரிய முறையில் ஆட்சி செய்தார். ஏழைபங்காளர் என்று இன்றும் பேசத் தக்க அளவுக்கு மக்களுக்கு நன்மை செய்து வந்தார். மிகச் சிறந்த தேசிய வாதியான இவர், பள்ளி செல்லும் குழந்தைகள் பகலுணவு கிடைக்காமல் கஷ்டப்படுவதை அறிந்து 'மதிய உணவுத் திட்டம்' கொண்டு வந்தார். கோப்புகளை எவ்வாறு பார்த்து, வேண்டிய வர்கள், வேண்டாதவர்கள் என்ற பாகுபாடு இன்றி, உதவ வேண்டியவர்களுக்கு எவ்வாறு உதவினார் என்பதை இந்நூலாசிரியர் விளக்கியிருப்பது மற்றவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்று. அத்தகைய தன்னலம் கருதாத, தனிச் சிறப்பு வாய்ந்த இவரது வாழ்க்கை மற்றவர்களுக்குப் பாடமாக அமை யட்டும்.

இராஜாஜி அவர்களோடு தமக்கிருந்த தனிப்பட்ட நெருக் கத்தை நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். இராஜாஜியைப் பொறுத்த வரையில், அவர் ஒரு தலைசிறந்த நிர்வாகி, தேசபக்தர், நகைச்சுவையோடு பேசுவதில் வல்லவர். அழிவை நோக்கி சென்ற காங்கிரசைக் காப்பாற்றுவதற்காகவே, முதலமைச்சர்

பதவியை ஏற்றவர். விடுதலை அடைந்த இந்தியாவின் முதல் கவர்னர் - ஜெனரலாகப் பதவியேற்றார். தமது கொள்கைக்கு நேரெதிர் கொள்கைகளைக் கொண்ட, பெரியார், அண்ணா இவர்களின் நெருங்கிய நண்பர். நட்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர்கள். இராஜாஜி அவர்கள் மரணப்படுக்கையில் இருந்தபோது, கண்களில் நீர் மல்க தந்தை பெரியார் அவர்கள் படுக்கை அருகில் அமர்ந்திருந்த காட்சி உள்ளத்தை உருக்கு வதாய் இருந்தது. அண்ணா அவர்கள் ஆட்சி பொறுப்பேற் பதற்கு முன் தந்தை பெரியார் மூதறிஞர் இராஜாஜி போன்ற வர்களிடம் ஆசி பெற்றதை மறக்க முடியுமா? இவர் முதல்வராக இருந்தபோது அரசியல் வாதிகள் தலையீட்டை வெகுவாகக் குறைத்து, தலைமைச் செயலக வராண்டாவைச் சுத்தமாக வைத்திருக்க ஆணை பிறப்பித்தது இவரது நேர்மைக்குச் சான் றாகும். இவரைப்போன்று தொலைநோக்குப் பார்வையோடு அனைவரும் செயல்பட்டால் தமிழகம் முன்னேற்றப்பாதையில் செல்லும் என்பதில் ஐயமில்லை.

'சாதிகள் இல்லையடி பாப்பா' என்ற பாரதியின் வாக்கும், 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்ற முதுமொழியும் இன்று கடைபிடிக்கப்பட வில்லை என்பது கண்கூடு. ஆசிரியரும் தமது ஆவேசமான கருத்துக்களை வெளியிட்டுள்ளார். சாதியை ஒழிப்போம் என்று ஒருபுறம் கூறும் அரசு, மறுபக்கம் சாதியின் பெயரால் பள்ளி, கல்லூரிகளில் சேர்த்தல், வேலைவாய்ப்பு அளித்தல், பதவி உயர்வு அளித்தல் போன்ற காரியங்களில் ஈடு படுவதைச் சுட்டிக்காட்டியுள்ளார். ஆசிரியர் குறிப்பிட்டதைப் போல, தெருக்களில் சாதிப் பெயரை நீக்குவதில் ஏற்படும் குளறுபடிகள், பத்திரப்பதிவில் சாதிப்பெயர் வைப்பது வேடிக்கை. இதைவிடக் கொடுமை, தம்பெயரோடு 'ரெட்டியார்' என்று சேர்ந்திருப்பதால், அவர் அறக்கட்டளை துவங்க அனுப்பிய ரூ. 25,000/-ஐ ஒரு பல்கலைக்கழகம் திருப்பியனுப்பியது என்பதை எண்ணும் போது எந்தளவுக்கு சாதி வெறியர்கள் இருக்கிறார்கள் என்பதை வேதனையோடு குறிப்பிடுகிறார். அனைத்து அரசியல்

கட்சிகளும் சாதியின் பெயரால் இயங்குவதைக் கண்ட ஆசிரியர், தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் சாதி ஒழிபிற்காகப் போராடியதை சுட்டிக்காட்டுகின்றார். இந்நிலை மாற, மக்கள் தெளிவுபெற வேண்டும், சாதியின் பெயரைச் சொல்லி ஆதாயம் தேடுபவர்களை ஒழிக்க வேண்டும் என்பது என் அவா.

இந்நூல், சிறந்த கல்வியாளரும், தமிழக அரசின் கல்வித்துறையின் முன்னாள் முதல் இயக்குநரும், புதுவைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தருமான டாக்டர். கி. வேங்கடசுப்பிரமணியன் அவர்கட்கு அன்புப் படையலாக அர்ப்பணிக்கப்பட்டிருப்பது சாலச்சிறந்த ஒன்றாகும். இந்திய அரசின் திட்டக் குழு உறுப்பினராக தற்போது பணியாற்றும் இவர், காமராஜர் கொண்டு வந்த 'மதிய உணவுத்' திட்டத்திற்கு கால்கோள் நாட்டியவர். இவரது அறிவுரையின் பேரில்தான் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. கல்வித்துறையில் படிப் படியாக உயர்ந்து தமிழகத்திற்குப் பெருமை சேர்த்துக் கொண் டிருப்பவர். எந்தக் கருத்தையும் வெளிப்படையாக கூறும் இவர், அரசியல் இலாபத்திற்காக தம்மை மாற்றிக் கொள்ளாத ஒரு நேர்மையான அதிகாரியாக இருந்தார். மிக நகைச்சுவையாகப் பேசும் இவர், தீர்க்க சிந்தனையோடு, தெளிவான கருத்துகளைக் கூறுவதில் வல்லவர். இந்நூல் இவர் பெயரில் அர்ப்பணம் செய்யப்பட்டிருப்பது, நூல் ஆசிரியர் திரு. சுப்புரெட்டியார் அவர்கள் இவர்பால் கொண்டுள்ள மதிப்பும், மரியாதையும் எத்தன்மைத்தது என்று காட்டுகிறது. இரு பெரியாரும் பல்லாண்டு வாழ்ந்து பல்துறைப் பணிபுரிய என் அன்பு வாழ்த்துகள்.

அண்ணாநகர் கிழக்கு
சென்னை - 600 102

- துரை சுந்தரராஜுலு

பாண்டியன் பரிசு

ஒரு மதிப்பீடு

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

தலைமைக் காவிய மாந்தர்கள், துரோகியான
எதிர்த் தலைவன், துணைக்காவிய மாந்தர், காவிய நடை,
காவியத்தில் படிமங்கள், காவியம் உணர்த்தும் உண்மைகள்
முதலான தலைப்புகளில் புரட்சிக்கவிஞரின் படைப்பு நலன் விளங்க
திறனாய்வு செய்யப் பெற்ற ஓர் அரிய நூல்

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

ISBN: 978-81-939317-3-8

eBOOK ~ *மின் நூல்*



அணிந்துரை

பாண்டியன் பரிசு


2002

வழங்கியோர்:

க அன்பழகன்

கல்வி அமைச்சர், தமிழ்நாடு







க. அன்பழகன் எம்.ஏ.,
கல்வி அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.

நாள்: 14.11.98

அணிந்துரை

திருப்பதி வெங்கடேசுவரா பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பல ஆண்டுகள் விளங்கித் தமிழுக்கு ஆக்கந்தரும் பல பணிகளை நிறைவேற்றியும், ஆந்திர மாநில மாணவர்கட்கு நற்றமிழ் இலக்கியத் தேர்ச்சி வழங்கியும் அரும்பணியாற்றியவர் தமிழ்ச்செம்மல் முனைவர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள். தமிழ் வளர்க்கும் குறிக்கோள் வெற்றிபெற தமிழ்நாட்டில் கடந்த முறை கலைஞர் முதல்வராக இருந்தபோது அவர்களை அணுகி, ஆண்டுதோறும் அப்பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராசிரியர் இருக்கைக்காக வழங்கும் நிதியை உயர்த்திடக் கேட்டுப் பெற்றவர்.

அவர் சங்கத் தமிழிலும், திருக்குறளிலும், வைணவ சமய நூல்களிலும், சமய தத்துவ ஆராய்ச்சியிலும், கம்ப இராமாயணத்திலும் மிகுந்த ஈடுபாடுடையவர். வைணவம் தொடர்புடைய நூல்களை ஆராய்ந்தவர். தமிழுக்கு ஆக்கம் செய்யும் ஆர்வத்துடன் அறிவியல் புலம் சார்ந்த பல நூல்களையும் இயற்றிய பெருமைக்குரியவர்.

இருபதாம் நூற்றாண்டின் தமிழ் எழுச்சிக்கு வழிகண்ட தேசியக்கவி பாரதியார் கவிதைகளையும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கவிதைகளையும் போற்றும் நெஞ்சத்தினர். மரபுக் கவிதையேயன்றி புதுக்கவிதையின் சிறப்பினையும் காலத்தின் தேவை என ஓர்ந்து வரவேற்பவர். அவரைப் பல ஆண்டுகளாக நான் அறிந்துள்ளேன். அவரது அயராத உழைப்பையும், இடைவிடாத தமிழ் ஆக்கத் தொண்டினையும் பாராட்டும் வாய்ப்பும் பெற்றுள்ளேன். அவர் சில ஆண்டுகளாகத் தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மரபுவழிப் பண்பாட்டு நிறுவனத்தின் இயக்குநர் பொறுப்பேற்று நற்பணி ஆற்றி வருகிறார்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் இயற்றியுள்ள 'பாண்டியன் பரிசு' என்னும் குறுங்காவியம் குறித்து ஒரு மதிப்பீடு செய்து இந்த நூலை வெளியிட்டுள்ளார். பாண்டியன் பரிசு, பல பதிப்புகள் வெளி வந்து பலரது உள்ளத்திலும் பதிந்த நூல். பலரது பாராட்டும் பெற்ற நூல். 'பாண்டியன் பரிசு' வரலாற்றுச் சாயல் கொண்டதொரு மன்னர் குடும்பக் கதை.

மன்னன் மகளொருத்தி எளிய உழைப்பாளி குடும்பத்து இளைஞன் ஒருவனின் பண்பு நலனும் வீரமும் கண்டு, அவனது தந்தை திருட்டுத் தொழில் உடையவனாக இருந்தவன் என்பதையும் பொருட்படுத்தாது அவனையே மணாளனாக ஏற்று மணிமகுடத்துக்கும் அவனை உரியவனாகக் கொண்டனள். மன்னர் குடும்ப வழக்கத்தில் இருந்து விலகிய நிலையால் ஒரு புரட்சிக் கொள்கை இதனால் அரங்கேற்றப்படுகிறது. உண்மையில் கதைத் தலைவியாக விளங்கும் அன்னம், தன் தந்தையான மன்னன் முடியைக் கவர்ந்து கொள்ளத் திட்டமிட்ட தன் தாயின் உடன்பிறப்பான மாமனே தன் தந்தையை முதுகுப்புறத்தில் ஈட்டி எறிந்து வஞ்சகமாகக் கொன்றான். உண்மை உணர்ந்து சினம் கொண்ட தன் தாயையும் வெட்டிக் கொன்றான். தன்னையும் கொல்ல முனைந்தான் என்பதையும், அந்நிலையில் தன்னைத் தூக்கிச் சென்று காத்து வளர்த்தவள் தன் தாயிடம் பணிப்பெண்ணாக வேலை பார்த்த ஆத்தாள் என்பதையும், திருட்டுத் தொழிலைக் கைவிடாமையினால் தன் மனைவி ஆத்தாளின் கண்டிப்பால் அவளைவிட்டு விலக நேரிட்டவனே தன் காதலனின் தந்தை என்பதையும் அறிந்தவளாகிய நிலையில், மன்னர் குடும்பம் என்பதில் மதிப்போ, ஏழைப்பாட்டாளி குடும்பம் என்பதில் வெறுப்போ அன்னத்திற்கு ஏற்படவே முடியாத நிலை அமைந்தது கருத வேண்டியதாகும்.

அன்னம் - மன்னன் மகளாயினும் அவள் உரிமை, 'பாண்டியன் பரிசான பேழை' கண்டுபிடிக்கப்படுவதைப் பொறுத்திருந்தது. அவள் வாழ்வோ மன்னன் மகளாக இல்லாமல், ஏழையான ஆத்தாளின் வளர்ப்பினாலேயே காக்கப்படுவதான நிலையில் அவள் மனம் அவர்களிடம் வேற்றுமை காணுதல் இயல்பன்று.

மேலும், அன்னத்துக்குரிய 'பாண்டியன் பரிசை' எவ்வகையிலேனும் கவர்ந்திடவும், அதனால் அன்னத்தின் உரிமையைப் பறித்திடவும், திட்டமிட்ட சூழ்ச்சியில் இறங்கிய அவள் மாமன், அரசைக் கைப்பற்றி முடிசூடும் தனது நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள, கைக்கொள்ளும் ஒரு தந்திரமாகத் தன் மகனுக்கே அன்னத்தை மணம் செய்யவும் தயாராக இருந்ததை அறிந்திருந்த அன்னம், 'பாண்டியன் பரிசினை' மீட்டுத்தந்த தன் காதலனின் தந்தையைக் குறித்து நன்றியுணர்வுக்கு ஆட்பட்டவளாவதன்றி மாறுபட எண்ணவும் இடமில்லாமற் போவதும் கருதலாகும்.

புரட்சிக் கவிஞரின் பகுத்தறிவுக் கொள்கை விளக்கம் செய்வதற்கு பூதம் புதையல் காக்கிறது எனக் கற்பிக்கப்பட்டதன் பொய்மை பலபல நிகழ்ச்சிகளாலும், கதைமாந்தர் வாய்மொழியாலும் விளக்கப்படுகிறது.

அப்படிப்பட்ட சுவையான சிறுகாவியத்தின் சிறப்பினை விவரிக்கப்புகும் ஆய்வாளர், புரட்சிக் கவிஞரின் குறுங்காப்பிய வடிவ படைப்புக்களைக் குறித்தும் விவரித்து அவற்றினால் உணர்த்தப்படும் கொள்கைகளையும் வரைந்துள்ளார். 'புரட்சிக்கவி' என்னும் தலைப்புடைய கவிதையில், மன்னன் மகளைக் காதலிக்கும் சூழ்நிலைக்கு ஆளான தமிழ்க்கவிஞன் உதாரன் - தனக்கும் தன் காதலிக்கும் முறையற்ற மரண தண்டனை மன்னரால் விதிக்கப்பட்டு கொலை மேடையில் நிறுத்தப்பட்டபோதும், தன் காதலிக்குற்ற தண்டனைக்கே கழிவிரக்கம் கொள்வதும், அதனினும் மேலாக, தான் தமிழ் கற்பிக்கச் சென்றவனாதலின், தன் உயிர் பறிக்கப்படுமாயின், அதனால்

"அமுதென்று சொல்லுமிந்தத் தமிழ், என்னாவி
அழிவதற்குக் காரணமாயிருந்த தென்று
சமுதாயம் நினைத்திடுமோ? ஐயகோ! என்
தாய்மொழிக்குப் பழிவந்தால் சகிப்பதுண்டோ!"

என்று கேட்பதுமாக அமைந்த அடிகள் புரட்சிக் கவிஞரின் உள்ளப் பிழிவாதல் உண்மை. இந்த உதாரனை நம் கண்முன் நிறுத்தும் கவிதையின் தலைப்பான 'புரட்சிக்கவி' என்பதே பாரதிதாசனாரின் சிறப்புப் பெயராக வழங்கலாயிற்று.

இப்படிப்பட்ட சிறுகாப்பிய நலன்களை விவரித்துள்ளதுடன், பாண்டியன் பரிசின் தலைமைக் காவிய மாந்தர்கள், துரோகியான எதிர்த்தலைவன், துணைக்காவிய மாந்தர், காவிய நடை, காவியத்தில் படிமங்கள், காவியம் உணர்த்தும் உண்மைகள் முதலான தலைப்புக்களில் நூலாசிரியர் புரட்சிக் கவிஞரின் படைப்பு நலன் விளங்க ஆய்வு செய்துள்ளார்,

புரட்சிக் கவிஞரின் தமிழ் நெஞ்சம், புலமை நலம், கொள்கை உறுதி, அஞ்சாமை, பகுத்தறிவுக் குறிக்கோள் முதலானவற்றை மதிப்பீட்டாளர் ஆங்காங்கே பாராட்டி உரைப்பாராயினும், சில நிகழ்ச்சிகளை விவரிக்கும் இடத்துத் தம் உள்ளத்தில் பதிந்த உணர்வினை வெளியிடுவதைக் காண முடிகிறது. 'எதிர்பாராத முத்தத்'தில் வரும் காதலர்கள் சந்திக்க நேருவதை "ஊழ் கூட்டுவிப்பதால்" (பக்கம்-17) சந்திக்க நேரிடுகின்றது என்பது புரட்சிக் கவிஞரின் உள்ளக்கிடக்கைக்கு ஒவ்வாது.

நரிக்கண்ணன் அன்னத்தின் வாளுக்கு இரையாகின்றான் என்பதைக் கூறுமிடத்து, அன்னையையும் அத்தனையும் கொன்றவன், அவர்தம் அன்புச் செல்வியாலே மாள நேர்வது "விதியின் ஒரு பெரு விளையாட்டு" (பக்கம்-64) என்பதும் புரட்சிக் கவிஞரின் பகுத்தறிவுக் கொள்கைக்கு உடன்பாடு ஆகாதது. புரட்சிக் கவிஞர் அமைதியான முறையினால் சமூகத்தை மாற்ற முடியாது என்னும் கருத்துடையராய்ப் புரட்சி நோக்கில் வன்முறையில் நம்பிக்கை ஊட்டுகின்றார் என்பதைக் கூறி, காந்தி வழியில் அமைதி காத்திடும் நோக்குடன் நடைபெற்ற விடுதலைப் புரட்சியை ஆசிரியர் எடுத்துக்காட்டுகின்றார். காந்தியடிகள்தான் அகிம்சைவாதியே தவிர, ஆகஸ்டு புரட்சி அம்முறையில் நடைபெற்றதல்ல என்பது வரலாறு.

மேலும் "கையாலாகாத, கவைக்குதவாத இம்முறை செயலற்றுப் போன பிறகு இறைவனின் அவதாரக் கொள்கை பிறக்கின்றது. அறம் தாழ்ந்து மறம் தலைதூக்கி நிற்கும்போது, நல்லோரைக் காப்பதற்கும் அல்லோரை அழிப்பதற்கும் நான் யுகந்தொறும் அவதரிக்கிறேன் என்பது கீதை வாக்கியம்" (பக்கம்-74) என்று ஆசிரியர் உரைத்திருப்பது அவரது உள்ளத்து

உணர்வின் வெளிப்பாடு. உலகில் தோன்றிய அவதாரங்களும், வன்முறை கொண்ட கொலைமிகும் போர்களையோ, போரில் வஞ்சனை செய்து எதிரியை வீழ்த்துவதையோ கைவிடவில்லை என்பதற்குக் குருட்சேத்திரப் போரே சான்று. இறையினாலேயே யுகந்தொறும் மறம் தலைதூக்குவதைத் தடுக்க இயலவில்லை என்பதுடன், அதனால் அவ்வப்போது அவதாரம் எடுப்பதாகவும் கூறும் அந்த வாக்கியம் 'இறைக்குப்' பெருமை சேர்ப்பதல்ல என்பதும் குறிப்பிட வேண்டியதாகும்.

'பகவத் கீதை'யில் அறத்திற்கு மாறான கருத்துகள் பல இடம் பெற்றிருப்பதைப் புரட்சிக் கவிஞர் எடுத்துக் கூறியவர். அவரது நூல் குறித்த ஆய்விலாவது இத்தகைய மேற்கொள் தவிர்க்கப்பட வேண்டும் என்பது என் விழைவாகும்.

நூலாசிரியர் பேராசிரியர் சுப்பு ரெட்டியார் அவர்கள், பரந்த நோக்குடையவர். அவரது மதப்பற்று அகவுணர்வாக அமைவது அன்றிப் புறப்பொலிவாக ஆவதில்லை என்பதை அறிந்தவனாதலின், இப்படிப்பட்ட கருத்தை வலியுறுத்தும் நோக்கத்தில் இது இடம்பெறவில்லை என்றே நான் கருதுகிறேன்.

எனினும் வீழ்ச்சியுற்ற தமிழர்தம் நிலையை மாற்றிடும் உள்ளத்தவராதலின் தமிழர்கட்குப் பெருமை சேர்க்கும் வகையான இலக்கிய மேற்கோள்களையே புரட்சிக் கவிஞர் போன்றாரின் நூல் மதிப்பீட்டில் அவர் எடுத்தாள்வது சிறப்பாகும். இந்த ஆய்வு நூலை வழங்கியுள்ள பேராசிரியரின் ஆர்வமும், தொண்டும் தமிழுக்கு எந்நாளும் கிடைத்திட எனது வாழ்த்துக்கள்!

க. அன்பழகன்

தமிழில் அறிவியல் செல்வம்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

இந்நூலில் கதிரவன், அணு செய்யும் அற்புதங்கள், விண்வெளி
ஆய்வின் வளர்ச்சி, மருத்துவத்துறை நவீன வேளாண்மை
முதலியவற்றில் அணுவின் பயன்பாடு பற்றி பொது
மக்களுக்கும் புரியும்படி அறிவியல் உண்மைகளை
எளிய நடையில், இனிய தமிழில்
விளக்கியுள்ளார் பேராசிரியர்.

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

ISBN: 978-81-939637-4-6

eBOOK ~ மின் நூல்



அணிந்துரை

தமிழில் அறிவியல் செல்வம்

2002


வழங்கியோர்:

அருட்தந்தை முனைவர்

ச இன்னாசிமுத்து


துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்







அணிந்துரை



அருட்தந்தை முனைவர் ச. இன்னாசிமுத்து, சே.ச.

துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்.

அறக்கட்டளை நிறுவும் அன்பர்கள் தாம் வாழ்க்கையில் நிறைவேற்ற வேண்டிய பல குறிக்கோள்களில் ஏதாவது ஒன்றை நிறைவேற்ற வேண்டுமென்ற கருத்துக்கு ஒரு நிரந்தர வடிவம் அமைத்து அது காலம் உள்ளவரையில் நடைபெற்றுக் கொண்டிருக்க வேண்டும் என்று கருதிய திட்டமே அறக்கட்டளையாகும். டாக்டர்.எஸ். சாமிமுத்து என்ற தமிழன்பர் எல்லாவித முன்னேற்றங் களுக்கும் அடிப்படையாகவுள்ள அறிவியல் உணர்வு மக்களிடம் ஏற்படவேண்டியது மிகவும் இன்றியமையாதது என்று கருதினார். தமிழில் அறிவியல் வளர்ச்சி எப்படி ஏற்பட வேண்டும் என்பதை ஆண்டுதோறும் மக்களுக்கு எடுத்துக்காட்ட பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் "டாக்டர் எஸ். சாமிமுத்து அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்" என்ற ஓர் அறக்கட்டளை நிறுவியுள்ளார். அந்த அறக்கட்டளை ஆதரவில் பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் 1998-க்கு உரிய திட்டத்தில் (1) இயற்பியல் நோக்கில் (2) உயிரியல் நோக்கில் என்ற தலைப்புகளில் நிகழ்த்திய இரு சொற்பொழிவுகளே தமிழில் அறிவியல் செல்வம் என்ற இந்த நூல் வடிவம். பேராசிரியர் தம் வாழ்நாளில் நிகழ்த்திய 14 சொற்பொழிவுகள் நூல் வடிவம் பெற்றுள்ளன. அவற்றில் இதுவும் ஒன்று. இதனால் அறக்கட்டளை நிறுவியவர்களின் குறிக்கோள்

பொது மக்களின் கருத்திலும் இடம் பெற வாய்ப்பு ஏற்பட்டு அவர்களிடமும் அக்குறிக்கோள் உணர்வு வளர்கின்றது. இங்ஙனம் அறக்கட்டளைப் பொழிவுகளுக்கு ஒரு நிரந்தர வடிவம் தந்துகொண்டிருக்கும் பேராசிரியர் ரெட்டியார் எல்லோர் பாராட்டுதலுக்கும் உரியவராகின்றார். அத்தகைய தமிழன்பருக்கு என் ஆசியும், பாராட்டுகளும் வாழ்த்துகளும் உரித்தாகுக.

'இயற்பியல் நோக்கில்' என்ற தலைப்பில் நடைபெறும் முதற்பொழிவில் (1) சூரியன் (2) அணுவாற்றல் (3) விண்வெளிப் பயணம் என்ற மூன்று சிறு தலைப்புகளில் செய்திகள் புதிய பார்வையில் விளக்கப் பெறுகின்றன. பாரதியாரின் பாடல் ஒன்றினை நடுவாக அமைத்துக்கொண்டு சூரியனைப் பற்றிக் கூறும் செய்திகள் புதுமையாக உள்ளன. 'ஆதவனே ஆற்றல் மூலம்' என்ற கருத்து விளக்கும் போக்கில் மனிதன், விலங்குகள், பறவைகள் இவற்றிற்குக் கிடைக்கும் உணவு வகைகள், பொறிகளுக்குக் கிடைக்கும் எண்ணெய் வகைகள், நிலக்கரி முதலிய யாவும் ஏதோ ஒருவகையில் கதிரவனிடமிருந்து பெறப்படும் ஆற்றலே என்பது வியத்தகுமுறையில் அற்புதமாக விளக்கப்பெறுகின்றன.

கம்பராமாயணப் பாடல் ஒன்றினைத் துணையாகக் கொண்டு 'அணுவாற்றல்' பற்றிய செய்திகள் தொடங்கப் பெறுகின்றன. இதனை விளக்கும் பேராசிரியர் ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய ஜப்பான் நகரங்களில் வீழ்த்தப் பெற்ற யுரேனியம் அணுகுண்டு, புளுட்டோனியம் அணுகுண்டு இவற்றால் ஏற்பட்ட சேதங்களை முன்வைத்து அணுவாற்றலின் அற்புத விளைவுகளைக் காட்டுகின்றார். தொடர்ந்து அணுவின் நுட்பம், அணுவகைகள் பெயரிடும் முறை, உட்கருவின் பிணைப்பாற்றல், அணுவகைகள், குறிப்பாக ஐசொடோப்புகள், மருத்துவத்துறை, உழவுத்துறை, உயர்வகைத் தாவரங்கள் உற்பத்தி, தொழில் துறை இவற்றில் பயன்படும் முறைகள் அற்புதமாக விளக்கப் பெறுகின்றன. இந்த விளக்கத்திற்குப் பேராசிரியரின் இலக்கிய நுண்ணறிவு பெரிதும் கைகொடுத்து உதவுவதைக் காணலாம்; சான்றுகளாகக் காட்டப் பெறும் பாடல்கள் நூலாசிரியரின் பரந்த இலக்கிய அறிவையும் பறைசாற்றுகின்றன.

விண்வெளிப் பயண விளக்கத்தைத் தொடங்குமுன் நமது அண்டை உலகுகளின் இருப்பைப் பற்றி விளக்குவது அவர்தம் ஆசிரியப் பாங்கினைக் காட்டுகின்றது. அடுத்து விண் வெளியையும் விரிவாக விளக்குவது அடிப்படை அறிவியலறிவு இல்லாதவர் களும் செய்திகளைப் புரிந்து கொள்ளத் துணையாக அமைகின்றது;

விண்வெளிப் பேரிடர்களை விளக்கும் போக்கும் சிறப்பாக அமைகின்றது. அம்புலிப் பயண முயற்சிகளாக அமெரிக்கர்களின் மெர்க்குரித் திட்டம், ஜெமினித் திட்டம். அப்போலோத் திட்டம் என்ற மூன்று திட்டங்களைச் சுட்டிக்காட்டி அப்போலோ-8 முதல் 11 வரை மேற்கொண்ட பயணங்கள் அனைத்தையும் விரிவாகவும் நுட்பமாகவும் விளக்குவது அற்புதம். இப்பகுதி விண்வெளிப் பயணத்தை அறிந்துகொள்ள விழையும் ஆர்வலர்கட்குப் பெருந்துணை புரியும்; இரஷ்யர்களின் முயற்சியும் சுட்டப் பெறுகின்றது.

'உயிரியல் நோக்கில்' என்ற இரண்டாம் பொழிவில் (1) மானிடப் பிறப்பியல் (2) கால்வழிஇயல் என்ற இரண்டு பகுதிகள் அமைகின்றன . எல்லாம்வல்ல இறைவன் படைப்பில் மனிதன் படைப்பு ஏணிப் படியில் உச்சகட்டப் படியில் வீற்றிருக்கும் நிலையைச் சுட்டிக்காட்டிப் படைப்பின் விந்தையை விளக்கத் தொடங்கும் பேராசிரியர் ரெட்டியார் இனப்பெருக்க மண்டலத்தில் தொடங்கி, ஆண் பிறப்புறுப்புக்கள் அடங்கிய தொகுதிக்கும், பெண் பிறப்புறுப்புக்கள் அடங்கிய தொகுதிக்கும் உள்ள ஒற்றுமை நயத்தை விளக்கி, விந்தணுக்கள், முட்டையணுக்கள் இவற்றின் அமைப்புக்களையும் இயல்புகளையும் தெளிவாக விளக்கி கருவுறுதலில் அவற்றின் செயற்பாடுகளைத் தெளிவாக்குகின்றார். அறிவியலடிப்படையில் சுகப்பிரசவத்தை விளக்கும் போக்கில் பல வகைப் பிரசவங்களைத் தெளிவாக விளக்குகின்றார். ஆயுதப் பிரசவம் முழவிளக்கம் பெறுகின்றது; அவை நேரிடும் சந்தர்ப்பங்கள் சுட்டியுரைக்கப் பெறுகின்றன. மாதவிடாய், சூதக ஓய்வு பெண்ணின் வாழ்க்கையில் உள்ளவை - அறிவியல் அடிப்படையில் விளக்கம் பெறுகின்றன.

மருத்துவ உலகில் ஒரு காவியம் போன்ற மானிடப்பிறப்பில் முக்கிய பகுதிகளாகிய கருப்பகாலம், கருப்பகாலச் சின்னங்கள், கருச்சிதைவு, குறைமாதப் பிரசவம், நச்சு வாந்தி, கருவுயிர்த்தலில் பல கோளாறுகள், குடும்பக்கட்டுப்பாடு முதலியவை காலச் சுருக்கம் கருதி விளக்கம் பெற முடியாமைக்கு வருத்தம் தெரிவித்து பிறப்பியல் நிறைவு பெறுகின்றது. மருத்துவப் படிப்பு மாணவர்கட்குரிய பல செய்திகள் பொதுப்படிப்பு மாணவர்கட்குக் கிட்டச்செய்த பேராசிரியர் ரெட்டியாரின் முயற்சி மிகவும் பாராட்டப் பெறவேண்டியதாகும். இவருடைய பேச்சில் தெளிவான விளக்கக் கூறுகள் கேட்போர் மனத்தில் ஆழப் பதியும் பான்மையுடையன.

கால் வழி இயலும் பொதுப்படிப்பு மாணாக்கர்கட்கும் - ஏன் மருத்துவப் படிப்பு மாணாக்கர்கட்கும் எட்டாப் பழமேயாகும். இயற்கை அமைப்பில் இனமாற்றம் நிகழாமல், உயிரினங்களின் வகைகள் மாறாமல் வாழையடிவாழையாக இருந்து வருவதற்கு மரபு வழியில் இயற்கை அன்னை புரிந்துவரும் அற்புதங்களை இந்த இயலில் அற்புதமாக விளக்கும் பேராசிரியரின் மதிநுட்பம் மிகவும் பாராட்டப் பெறவேண்டிய தொன்று. மரபுவழி இறங்கும் பண்புகள், மரபுவழி இறங்காப் பண்புகள் ஆகியவற்றிற்கு நிறக்கோல்களில் உள்ள ஜீன்களே காரணம் என்பதைத் தெளிவாக விளக்கியவர், மக்கட்பேறு பெறுவதில் உள்ள தவறான நம்பிக்கைகளையும் சுட்டியுரைப்பதில் தவறுவதில்லை.

ஜீன்களின் திருவிளையாடல் அறபுதமாக விளக்கம் அடைகின்றது. ஆணா, பெண்ணா, இரண்டும்கெட்டான்கள், போலிகர்ப்பம், இரட்டைப் பிறவிகள், இயல்பிகந்த இரட்டையர், பல கோவைக் குழவிகள் போன்ற செய்திகள் அற்புதமாக விளக்கம் அடைகின்றன. நெடுநாள் வாழ்வுக்குக் காரணம், அது சீரழிவதற்குக் காரணங்கள் தெளிவாக விளக்கப் பெறுகின்றன. கால் வழி இயலில் புரட்சி, கால்வழி இயல் - அனைத்துலக மாநாடு ஆகியவற்றின்கீழ் விளக்கப் பெறும் செய்திகள் அனைவரும் ஆழ்ந்த கவனத்துடன் தெரிந்து கொள்ள வேண்டியவை. இங்கும் பேராசிரியரின் விளக்கம் சுவை பெறுவதற்கு அவர் தம் பரந்த இலக்கியப் புலமை கைகொடுத்து உதவுவதைக் கண்டு மகிழலாம். இந்தப் பொழிவுகள் உருவம் பெறுவதற்குத் துணையாக அமைந்த ஆங்கில, தமிழ் நூல்களின் பட்டியல் பின்னிணைப்பில் தரப் பெற்றுள்ளன.

87 வயதிலுள்ள பேராசிரியர் ரெட்டியாரின் இந்த நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். பேராசிரியர் ரெட்டியாரின் அறிவியல், இலக்கிய, சமய, தத்துவ ஆர்வங்கள் மேலும் மேலும் வளரவும் இவர்தம் சமூகத் தொண்டு மேன்மேலும் பெருகவும் இவர் நூறாண்டு வாழவும் பிறசமயக் காழ்ப்பின்றி வைணவப் பற்றாளராகிய இவர் இராமநுசர் போல் 120 ஆண்டுகள் வாழவும் - இயேசு பெருமான் திருவடிகளை நினைத்து ஆசிகளையும் வாழ்த்துக்களையும் வழங்கி மகிழ்கின்றேன். இந்த நூல் அறிவியல் மேதை அப்துல் கலாம் அவர்கட்கு அன்புப் படையலாக்கியது மிகவும் பொருத்தமானது; போற்றப் பெறவேண்டிய தொன்றுமாகும்.

சென்னை - 600 005

நாள்: 10.11.2002

அண்ணல் அநுமன்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

இந்நூலில் காணப்பெறும் ஒவ்வோர் இயலும், ஒவ்வொரு கோணத்தில்
அநுமனை முழுவதுமாய்க் காட்டிடும் புதிய பார்வை வீச்சுகள்;
முழுப்பார்வை முயற்சிகள்; பேருருவ தரிசனங்கள். அநுமனின்
மனோ பலத்தையும், அநுமனின் வாக்கு பலத்தையும்,
அநுமனின் காய பலத்தையும், மொத்தத்தில் அநுமனின்
பேருருவைக் கண்ட மகிழ்ச்சியை நம்முள் உண்டாக்குவன.

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

ISBN: 978-81-939430-5-2

eBOOK ~ *மின் நூல்*





அணிந்துரை

அண்ணல் அநுமன்


2003

வழங்கியோர்:

கம்பன் அடிசூடி

பழ பழநியப்பன்







அணிந்துரை

கம்பன் அடிசூடி பழ. பழநியப்பன்



"கம்பருக்கு அடிமையென்று
கைச்சாத்து செய்துவிட்டேன்;
இம்பர்வேறு ஒன்றற்கு
இடமுண்டோ?"

என்னும் சொ. முருகப்பாவின் பாடல் அடிகளே என் உச்சிமேற் கொண் டொழுகத் தக்கன என்றாலும், கலி காலம் நிரம்பவும் பொல்லாதது! இல்லாவிட்டால் ஆசிரியப்பிரான் ஒருவர் தம் மாணாக்கனையே தம் நூலொன்றுக்கு அணிந்துரை எழுதச் சொல்வாரா, என்ன?

அதுவும் யாரைப்பற்றி? "வேத நன்னூல் உய்த்துள காலமெல்லாம் புகழொடும் ஒக்க நிற்கும்" அநுமனைப்பற்றி! மனமாசுகளை எல்லாம் ஆசு இரியும் பிரானல்லவா? காரணத்தோடுதான் செய்துள்ளார்கள். "போர் உதவிய திண்தோளால் பொருந்துறப் புல்லுக!" என்று இராமபிரானே தன் தொண்டனாம் அநுமனைத் தன்னை வந்து மார்புறத் தழுவிக்கொள்ளப் பணித்தானே, அதே போன்று, அந்த அநுமனைப்பற்றி ஐம்பது ஆண்டுகட்கும் மேலாகத் தம் கருவில் உருக்கொண்டிருந்து வெளிவரும் நூற்குழந்தையை முதலில் அவர்தம் மாணாக்கத் தொண்டனாம் இச்சிறியவனிடம் தந்து சீராட்டச் சொல்வது சாலப் பொருத்தந்தானே? அதுதானே, அந்த இராம நாமத்தை அல்லும் பகலும் அனவரதமும் நினைந்து நினைந்து நெகிழ்ந்துருகித் துதி செய்து மகிழும் 'ஸ்ரீ சடகோபன் பொன்னடி'யாம் பேராசிரியர் சுப்பு ரெட்டியாரவர்களுக்கு உகந்த கைங்கர்யம்!

இன்னுமொன்று : தன்னை வணங்குவோரையும் தான் வணங்கி மகிழும் ஒரே கடவுள் அநுமனே! எந்தச் சந்நிதியிலும் இல்லாது, அநுமன் சந்நிதியில் மட்டுமே 'அஞ்சலி ஹஸ்தனாய்'க் கூப்பிய கைகளுடன் கூடின இறையைக் 'கண்கள் கொள'

முடியும். 'அருங்கலைக் கோனும்' அங்ஙனமே தம் மருங்கணைந்த சீடனிடம் சீராட்டப் பணித்தார் கொல்லோ?

'தமிழ்ச்செம்மல்' ரெட்டியாரவர்களின் 121ஆவது நூலாக, மூன்றாயிரம் ஆண்டுத் தொடக்கத்தில் அவர்தம் முதல் நூலாக இந்நூல் வெளிவருவதும் 'இம்மையே, எழுமை நோய்க்கும் மருந்தாம்', 'இராமன் என்னும் செம்மைசேர் நாமம்' தன்னைத் தாரக மந்திரமாகக்கொண்ட அநுமனைப்பற்றியதாக வருவதும் காலங்கருதிய செயல்; காலத்தினாற் போற்றப்பெற வேண்டிய தொன்றுமாகும். அதிகாரம், ஆணவம், தலைமை வேட்கை, சுய நலம், பண வெறி என்றிப்படிப் பலவும் மனிதர்களைப் பிடித்தாட்டி ஆட்கொண்டுள்ள இக்காலத்திற்குத் தேவை யானதாம். எப்படி?

பரம்பொருளாம் இராமனே 'போர் உதவிய திண்தோளால் பொருந்துறப் புல்லுக' என்று தொண்டனை அன்போ டழைத்துத் தலைவனைத் தழுவிக்கொள்ளச் சொல்லியும், அடிக்கீழ் இருந்து 'அரியணை தாங்கும்' தொண்டே போதும் என்று நிறைந்த அநுமனின் தொண்டுள்ளமே இன்றைய சூழலில் பின்பற்ற வேண்டியதொன்றாகும்; முன்மாதிரியுமாகும். தலைவன் விரும்பித் தந்தாலும் பணிவுடனே அடித்தொண்டனாகி வாழ்ந்து காட்டிய அநுமனே, இன்றைக்கு - தலைவன் அயரும் நேரம் பார்த்துத் தானே தலைவனாகிவிடத் துணிவோர் நிறைந்த இன்றைக்கு - தலைவர்களும் தொண்டர்களை அனுசரித்து அடங்கிப்போக வேண்டிய தொண்டர் நிறைந்த இன்றைக்கு - இளைய தலைமுறைக்கு, விதை நெல்லுக்கு முன்மாதிரியாய், வழிகாட்டியாய் விளங்க முடியும்.

கம்பன் 'பாத்திரம் சுவைசெய் பாவலன்' ஆவான். பெரும் பாத்திரமோ, சிறிய ஒன்றோ, ஒரு காட்சியில் தோன்றி மறையும் பாத்திரமோ, எதனையும் சுவை குன்றாது ஒரே விதமான கலையழகுடன் படைக்கவல்ல கவிதைத் தச்சன். சீதா பிராட்டியை எவ்விதம் 'காந்தையருக்கு அணி' எனக் காட்டினானோ அவ்விதம், அதற்கு ஒரு மாற்றும் குறையாது அவள் தோழியாய் ஒரே ஓரிடத்தில் வந்து போகும் நீலமாலையை யும் 'சுந்தரி'யாய்க் காட்டவல்ல ஓவியக் கவிஞன். அப்படிப்பட்ட கவிச்சக்கரவர்த்தி அநுமனைப் படைத்துக் காட்டும் விதம் ஒப்பற்றது. உடலாற்றல் நிறைந்த ஒருவன் அறிவாற்றலும் நிரம்பி யிருத்தல் உலக வழக்கில் அதிசயமே. கம்பன் அநுமனைப் பேரறிஞனாகவும், அதே சமயம் பெருவீரனாகவும் காட்டுகிறான். 'வீங்கிய வீரன்', 'வீரருள் வீரன்', 'வெந்திறல் வீரன்' என்றெல்லாம்

அவன் ஆற்றலைப் பாடும் கம்பன், இராமன் கூற்றாகப் 'பேரறிவாளன்' என்று புகழ் பாடிடுவான். வீடணனை ஏற்றுக் கொள்ளலாமா என்று தன் துணைவரையெல்லாம் கேட்ட இராமன் அநுமனிடம் கேட்பதை இதோ, கம்பன் வாயிலாய்க் காண்போம் :

"உறுபொருள் யாவரும் ஒன்றக் கூறினார்
செறிபெருங் கேள்வியாய்! கருத்து என்? செப்புஎன,
நெறிதரு மாருதி என்னும் நேர்இலா
அறிவனை நோக்கினான், அறிவின் மேல்உளான்."

(யு.கா.6448)

நெறிதரு மாருதியாம், நல்வழி காட்டும் அநுமனைச் 'செறிபெருங் கேள்வியாய்!' என இராமன் விளிக்கிறான். இறுதி அடியில் உள்ளது முத்தாய்ப்பு! "அறிவனை நோக்கினான் அறிவின் மேல்உளான்"; அதுவும் நேர்இலா அறிவன்; அநுமனுக்கு நிகர் அவனேயாம். அப்படிப்பட்ட அறிவனை நோக்கியவன் யார்? 'அறிவின் மேல்உளான்' ஆகிய இராமன். அறிவின்மேல் உளனாகியவனே கருத்துக் கேட்கும் அளவுக்கு, 'செறிபெருங் கேள்வியன்' என்னுமளவுக்கு, 'நேர் இலா அறிவன்' அநுமன் ஆவான் என்றால், 'பேரறிவாளன் அநுமன்' என்பதில் ஐயமுண்டோ? பேராசிரியர் ரெட்டியாரவர்கள் அப்படி மாருதி நுணங்கிய கேள்வியனாய் வடித்துச் சொல்லும் 18 காரணங்களை மிக அழகாகத் தொகுத் துச் சொல்கிறார்கள், 'குணக்குன்றன்' என்ற கடைசிப்பகுதியில் 'சமயோசித புத்தி' என்ற தலைப்பில்.

'கவிக்கு நாயகன்' என்ற தலைப்புடைய முதல் இயலில் 'இராகவன் புகழினைத் திருத்தும்' என்ற தொடருக்குப் பேராசிரியரவர்கள் விளக்கம், செவிக்குத் தேனாய்த் தித்திக் கின்றது. இராமகாதை மங்களகரமாய் முடியக் காரணனாய் அமைந்தவன் என்பது எப்படி என்ற பேராசிரியரின் ஆய்வு, சிந்தைக்கும் தேனாய் இனிக்கின்றது.

'விழையும் உருவினன்' என்ற நான்காவது பகுதி, இதுவரை அநுமனைப்பற்றி யாரும் சிந்தித்திராத முயற்சி. எங்கெல்லாம் அநுமன் பேருருவம் எடுக்கிறான், அதன் நயம் என்ன என்று பட்டியலிட்டுக் காட்டியுள்ளது 'அருங்கலைக்கோன்' அவர் கட்கே உரித்தான அரிய ஆய்வு.

இப்படியெல்லாம் அநுமனை ஒவ்வொரு புதுக் கோணத்திலும், யாரும் கண்டு காட்டியிராத முயற்சியிலும் ஈடுபடுவதுதான் பேராசிரியர் ரெட்டியாரவர்கட்கே கைவந்த

கலை. இந்நூலில் காணப்பெறும் ஒவ்வோர் இயலும், ஒவ்வொரு கோணத்தில் அநுமனை முழுவதுமாய்க் காட்டிடும் புதிய பார்வை வீச்சுகள்; முழுப்பார்வை முயற்சிகள்; பேருருவ தரிசனங்கள். 'கவிக்கு நாயகன்', 'சிந்தனைச் செம்மல்', 'இராம பக்தன்' என்னும் பகுதிகள் அநுமனின் மனோ பலத்தையும், 'சொல்லின் செல்வன்', 'இராம தூதன்', 'குணக்குன்றன்' என்னும் பகுதிகள் அநுமனின் வாக்கு பலத்தையும், 'அஞ்சா நெஞ்சன்', 'விழையும் உருவினன்' என்பன அநுமனின் காய பலத்தையும், மொத்தத்தில் அநுமனின் பேருருவைக் கண்ட மகிழ்ச்சியை நம்முள் உண்டாக்குவன.

நூன்முகத்தில் ஆசிரியரே சொல்லுவது போல, இராம பக்தனாகிய அநுமனைப்பற்றி எழுதிய இந்நூலும் எட்டெழுத்து மந்திரம் போல, எட்டுப் பகுதியாய் அநுமனின் எண்குணங்களை விரித்துச் சொல்கிறாற்போல அமைந்ததுவும் அவன் திருவுளமேயாம்.

'சுப்பு ரெட்டியாரா, சுறுசுறுப்பு ரெட்டியாரா?' என்று எண்பத்து ஏழாண்டான வயதில் இவர்கள் உழைப்பும் முயற்சியும் நம்மை வியக்க வைக்கின்றன. அவர் வணங்கும் அந்த வேங்கடவனை, வேண்டுவார்க்கு வேண்டுவன ஈந்து நலந்தரும் நாராயண நாமத்தானை, அவர் நூற்றாண்டு கண்டு, இன்னு மொரு நூறு நூல்கள் தமிழ் இலக்கிய உலகிற்கு விருந்தாகச் செய்தளிக்கப் பிரார்த்திப்பது அல்லால், வேறென் செய்ய வல்லோம்?

**"அடியார்கள் வாழ! அரங்கநகர் வாழ!
சடகோபன் தண்தமிழ்நூல் வாழ! - கடல்சூழ்ந்த
மண்உல கம்வாழ! 'வேங்கடம்' உறைரெட்டியே!
இன்னும்ஒரு நூற்றாண்டு இரும்!**

**இனிய தமிழ்ப்பிழிவாய் உன்னிலிருந்து
இன்னும் ஒருநூறு நூல்கள்வரும்!**

- கம்பன் அடிகுடி

**'சரணம்'
வி 110/1, அண்ணா நகர்,
சென்னை - 600 040.**

பட்டினத்தடிகள்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

பேராசிரியர் பதினொராந் திருமுறைப் பனுவல்களில் தோய்ந்து
அழகிய பகுதிகளை எடுத்து மிக அழகாக விளக்குகிறார்.
பட்டினத்தடிகளின் வரலாறு, அவரின்
அருளிச்செயல்கள் ஆகியவை யாவரும் கற்று
உணரும் வகையில் எளிய இனிய தமிழ் நடையில்
ஆய்வுநோக்கில் தரப்பெற்றுள்ளன.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939561-5-1

eBOOK ~ மின் நூல்



அணிந்துரை

பட்டினத்தடிகள்


2003

வழங்கியோர்:

எஸ் தியாகராசன்

தலைவர், சைவ சித்தாந்தப் பெருமன்றம்







அணிந்துரை

(திரு. **எஸ்.தியாகராசன்** B.E. [1])



மூதறிஞர் டாக்டர் சுப்புரெட்டியார் **"பட்டினத்தடிகள்"** பற்றிய ஓர் அருமையான நூலை வரைந்துள்ளார். பதினொராந் திருமுறையில் சில பிரபந்தங்களை அருளியுள்ள திருவெண்காட்டிகளையும், 'பட்டினத்தடிகள் பாடல் திரட்டு' என்ற நூலில் காணப்பெறும் பனுவல்களைப் பாடிய அருளாளர் ஒருவரையும், வேறுசில பாடல்களைத் தந்த பெரியார் ஒருவரையும் **பட்டினத்தார்** என்றே தமிழுலகம் வழங்கி வருகிறது. மூவர் வரலாறும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் சொல்வதுபோலப் "பஞ்சாமிருதமாய்" வழங்குகின்றன. நக்கீரர், ஔவையார், கம்பர் முதலிய பலரும் இந்தச் சிக்கலுக்கு உள்ளானவர்களே! ஆதிசங்கரர் பேரிலும் கதைகள் கட்டப்பட்டதும் மற்றவர் பாடிய பாடல்கள் அவர் தலையில் ஏற்றப்பட்டதும் உண்டு.

பேராசிரியர் சுப்புரெட்டியார் பட்டினத்தாரைப் பற்றிய சிக்கலுக்கு ஒரு தெளிவு தரும் நேரத்தில் மூன்றாவது பட்டினத்தார் ஒருவரையும் நமக்கு அறிமுகம் செய்கிறார். நாட்டுக்கோட்டை நகரத்தாரில் **'பட்டினச்சாமி'** என்று ஒரு மரபினர் உள்ளனர். அரசர் அண்ணாமலைச் செட்டியார் அம்மர

1. 104, **அண்ணாநகர் கிழக்கு, சென்னை** - 600 102 **தொழிலதிபர்;** (M/S. Southern Alloy Foundaries (P) Ltd.); **தலைவர், சைவ சித்தாந்தப் பெருமன்றம், சென்னை** - 600 004.

பினரே. மூன்று பட்டினத்தாரில் இவர் ஒருவரா? அன்றி நாலாமவராகக் கொள்ளத்தக்கவரா என்ற வினாவும் எழுகிறது.

திருவொற்றியூருக்குப் பதினொராந் திருமுறைத் திரு வெண்காட்டடிகள் பாடலும் உண்டு. பாடல் திரட்டுப் பட்டி னத்தார் அந்தாதியும் உண்டு. ஆதலால் மூவரில் அல்லது நால்வரில் எந்தப் பட்டினத்தாருக்கு உரியது ஒற்றிக் கடற்க ரைத் திருக்கோயில்? நமக்குத் தெளிவு கிடைக்கவில்லை.

தமிழர்கள் வரலாற்றுணர்வு பெற வாழ்ந்திருந்தால் இந்தச் சிக்கல்கள் எழுந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் யாவர் வரலாறும் ஒன்றாய் இணைந்த 'பஞ்சாமிருதக்' கலவை வர லாறு கேட்கச் சுவையாக ஒருவர் வரலாறாகவே இன்றளவும் கொள்ளப் பெறுகிறது. நிற்க.

பட்டினத்தார் முதலிருவர் வரலாறுகள் சிவநேயச் செல் வர் வரலாறாகத் திகழ்கின்றன. மூன்றாமவர் சித்த புருடராகத் தெரிகிறார். சித்தர்கள் வாலை (சத்தி) வழிபாட்டுக்காரர்கள். நாலாமவர் மூனறாமவரின் சீட பரம்பரையினராகக் கொள்ளத் தக்கவர்.

'ஞானம்' என்ற சொல் ஆசிரியர் ஒருவர் பெயரை அடுத்து வருமானால் அம்முதலாசிரியரின் சீட பரம்பரையில் சந்தானமாகப் பெற்ற ஞானம் என்ற பொருளே தரும். சித்தர் நூல்களில் 'காகபுஜண்டர் ஞானம்', 'திருவள்ளுவர் ஞானம்' முதலியன காண்க.

பட்டினத்தடிகள் வரலாறுகளை ஆராயும்போது முதலாம வர் இராஜராஜன் காலத்துக்கு முற்பட்டும், வரகுண பாண்டி யர் காலமாகிய ஒன்பதாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டும் வாழ்ந்தவர் ஆதல் வேண்டும். இரண்டாமவர் பத்தாம் நூற் றாண்டுக்குப் பின்னரும் பதினாலாம் நூற்றாண்டுக்கு முன்னும் வாழ்ந்தவர் எனலாம். மூன்றாமவர் அதற்குப் பின்னர் வாழ்ந் திருத்தல் கூடும்.

முதல் பட்டினத்தாரைச் சிலர் 'வேளாண் மரபினர்' என்பர். இரண்டாவது பட்டினத்தார் 'வணிகர்' என்று கூற இடம் உண்டு.

வித்தாரம் பேசினும் சோங்கு ஏறினும் கம்பமீதிருந்து
தத்தா என்றோதிப் பவுரிகொண்டாடினும்.....

என்னும் பாட்டில், சோங்கு - மரக்கலம் என்று பொருள்படும். நடைமுறையில் வழங்கும் கதைகள் பட்டினத்தாரை வணிக மரபினர் என்பதற்கு இது துணையாக நிற்குமேயன்றி இந்த ஒரு காரணம் பற்றி அவரை 'வணிகர்' என்று துணிந்து கூறவும் முடியாது.

தாயுமான அடிகள் பட்டினத்தாரைப் பாராட்டும் அடிகள் இங்கு நினைக்கத்தக்கன.

''பாரனைத்தும் பொய்யெனவே - பட்டினத்துப்
பிள்ளையைப்போல், ஆரும் துறத்தல் அரிது அரிது''

என்பதில் இரண்டு செய்திகள் புலனாகின்றன. பட்டினத்தாருக்குப் 'பிள்ளையார்' என்ற திருநாமம் உண்டு. அவர் மிகப் பெருஞ்செல்வம் உடையவராயிருந்தார். வணிகர் பெருஞ் செல்வர் உடையராயிருத்தல் இயல்பு. அவர் ஒரு கணத்தில் அச்செல்வத்தை வெறுத்துத் துறந்தவர் என்பது விளங்குகின்றது.

இன்னொரு பாட்டில் 'பட்டினத்தார் பத்திரகிரி பண்புணர் வதெந்நாளோ?' என்பதனால் பட்டினத்தடிகளும் பத்திரகிரியாரும் மிக்க கேண்மையுடையவர்களாயிருந்தார்கள் என்பது குறிப்பால் புலப்படுகிறது.

ஆனால், உஜ்ஜயினி என்ற மத்திய இந்தியப் பகுதியை ஆண்டதாகக் கூறப்படும் பத்திரகிரியாரா இவர்? ஐயப்பாடே! சிருங்கார சதகம் முதலியவைகளை வடமொழியில் இயற்றிய அந்த பத்திரகிரியாரா இவர்?

பட்டினத்தார் தமிழ்நாட்டைத் தாண்டியவராகத் தெரிய வில்லை. காரைக்குடிக்கு ஆறு கல் அளவுத் தொலைவில் உள்ள உஞ்சனை வடநாட்டு உஞ்சையை நினைவு கொள்ள எழுந்த தலம். கல்வெட்டுகள் இதனை உஞ்சேனை என்கின் றன. நம் பத்திரகிரியார இந்த உஞ்சனையைச் சேர்ந்தவரா? பத்தாம் நூற்றாண்டுப் பட்டினத்தார் திருவெண்காட்டாராயி ருக்க வாய்ப்பில்லை. திருவெண்காட்டார் நகரத்தார் வாழ்வுப் பகுதியில் உள்ள உஞ்சேனையைக் கருத்தில் வைக்கவும் வாய்ப்பில்லை.

பத்திரகிரியார் தமிழ்நாட்டவராகவேயிருந்து ‘புலம்பல்’ என்ற அருந்தமிழ் மாலை பாடியிருத்தல் வேண்டும். பேராசிரி யர் சுப்புரெட்டியார் அவர்கள் இந்தச் சிக்கலில் மாட்டிக் கொள்ள விரும்பவில்லை. அவர்கள் பட்டினத்தாரின் கருத்துக் களிலேயே கவனம் செலுத்த விரும்பகிறார்.

பதினொராந் திருமுறைப் பனுவல்களில் தோய்ந்து அழ கிய பகுதிகளை எடுத்து விளக்குவது மிக அருமையாக இருக்கிறது. அதனுள்ளும் கோயில் நான்மணி மாலையில்

...... சராசரம் அனைத்தும்
நின்னிடைத் தோன்றி நின்னிடை அடங்கும் நீ
ஒன்றினும் தோன்றாய் ஒன்றினும் அடங்காய்....

என்னும் பாட்டு அடிகட்கு முதற்காரணமும் நிமித்த காரண மும் முதல்வனே என்று கொள்ளும் விசிட்டாத்துவைத சிவாத் துவைதக் கொள்கைப்படி மயங்கிப் பொருள் கொள்ளலாகாது என்று காட்டி, சைவ சித்தாந்தக் கொள்கைப்படி விளக்கம் கொடுத்துள்ள பேராசிரியர் ரெட்டியார் அவர்களின் புலமை நலம் பாராட்டத்தக்கது.

பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் பட்டினத்தடிகளார் பெண்பாலர்பால் வெறுப்புக் கொண்டு பேசிய இடங்களைக் காட்டி, ''ஆயின் ஆண்பாலார் அல்லரோ தவறிழைப்பவர். பெண்பாலரை இத்துணை இழித்துப் பேசலாமா?'' என்று கேட்டு நம்மைச் சிந்திக்க வைக்கிறார்.

பட்டினத்தடிகள் காலந்தொடங்கி இப்போக்கு சைவத் தமிழிலக்கியத்தில் மிகுதியாகவே காணக் கிடக்கிறது. பட்டினத்தடிகள், தாயுமானவர், அருணகிரியார், இராமலிங்கர், குணங்குடியார் இவர்களும் இப்போக்கைக் கடைப்பிடிக்கின்றனர். பிறர் குறைகளையும், குற்றங்களையும் தம்மேல் இட்டுக் கொண்டு நீல நினைந்திரங்கலாக அவர்தம் பாடல்கள் விளங்கக் காண்கிறோம்.

இராமகிருஷ்ண பரமஹம்ஸர் எப்போதுமே 'காமினீ காஞ்சனம்' (பெண் - பொன்) வெறுத்து இருக்க வேண்டும் என்று ஓயாது அறிவுறுத்தி வந்தனர். ஆண்களெல்லாம கற்புவிட்டுத் தவறு செய்தால் அழகான பெண்மை நலம் அழிந்திடாதோ என்று பேசினார் பாரதியார். இது அந்த அருளாளர்க்குப் புரிந்திராத ஒன்று அன்று.

மனிதன் பெரிதுஞ் சறுக்குவது இன்பத்துறையில்தான். திருநீலகண்டர் பத்தராயிருந்தும் இன்பத் துறையில் எளியராயிருந்தார். அவரைத் தெளிவாக்கவே இறைவன் திருவோட்டுத் திருவிளையாடல் நிகழ்த்தினான். எண்பதாண்டு கடந்த அப்பருக்குப் பெண் பொன் தேர்வு வைத்து அவர் உள்ளத்துறுதியை மற்றையோருக்குத் தெரியக் காட்டினான் சிவபெருமான்.

காமமும் பசியும் யானை முதலா எறும்பீறாகவுள்ள
யோனி பேதம் அத்தனைக்கும் உள்ள உணர்வுகளில்
காமம் உயிர்த்தொகுதி இடையறவு படாமல்
காக்கும் உணர்வு; பசியோ உடலில் உயிர் நீட்டித்தலைச் செய்வது.

விலங்கு முதலிய அஃறிணைகளுக்கு இவ்விரண்டும் உணர்வுகளாகவே இன்றளவும் நீடிக்கின்றன. மனிதன் காமம், பசி இரண்டிற்கும் நிறைவு காண்பதைக் கலையாகவே வளர்ந்திருக்கிறான். இரண்டையும் துய்ப்பதில் வரையறை இல்லாதவனாக இருப்பதே பல சமுதாயச் சிக்கங்களுக்கும் தோற்றுவாய் செய்து விட்டது.

பெண்ணைத் துய்ப்புக்கு உரிய பொருளாக ஆடவர் நினைக்கலாகாது என்பதே பட்டினத்தார் அருணகிரியார் முதலிய ஞானிகள் உள்ளக்கிடக்கை. இளம்பருவத்தினரைக் குறித்தும் மற்றையோரைப் பொதுவில் நோக்கியும் பெண் பொன் பித்தினைப் போக்குவதற்கு இவ்வுத்தியை முன்சொன்ன அருளாளர் பலரும் கைக்கொண்டனர்.

அதே சமயத்தில் பெண்ணைத் தாயாகப் பார்க்கப் போதிக்கின்றார் பட்டினத்தார் என்பது நன்கு உணரக் கிடக்கின்றது. **'வெட்டாத சக்கரம்'** என்னும் பாட்டின்மூலம் பட்டினத்தார் யோக மார்க்கத்தைப் பின்பற்றியவர் என்பது நன்கு புலனாகின்றது. **'சொல்லினும் வேதச் சுருதியினும்'** என்ற பாட்டின்மூலம் அது உறுதிப்படுகின்றது.

பட்டினத்தடிகள் என்று ஒரே பெயரில் வழங்கப்பெறும் ஞானியாரின் வரலாறுகளையும் அவர்களின் அருளிச்செயல்களையும் ஒருசேர யாவரும் கற்று உணரும் வகையில் எளிய இனிய தமிழ்நடையில் ஆய்வுநோக்கில் தந்துள்ளனர் பேராசிரியர் சுப்புரெட்டியார். அவர்களையும் இந்நூலையும் பாராட்டி மகிழ்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

எஸ்.தியாகராஜன்

104, அண்ணாநகர் கிழக்கு
சென்னை - 600 102.

இராமலிங்க அடிகள்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015-2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

வள்ளற்பெருமானது சமய சமரசக் கொள்கையும் ஒளிவழி பாடும்,
சாதி சமய சழக்கினை விடவேண்டும் என்ற கருத்தும் இன்றைய
சமூகத்திற்கு மிகவும் அவசியமானவை ஆகும். அவரது
பெருமைகளையும் அவரது கொள்கைகள் பற்றிய அவசரமும்
அவசியமும் நாடெங்கும் பரப்பப்படுதல் வேண்டும். இதற்கு
இந்நூல் பெரிதும் பயன்படும்.

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

ISBN: 978-81-939637-1-5

eBOOK ~ மின் நூல்



அணிந்துரை


இராமலிங்க அடிகள்

2003

வழங்கியோர்:

சி எஸ் குப்புராஜ்







ARUT PERUN JOTHI,
ARUT PERUN JOTHI
THANIP PERUN KARUNAI,
ARUT PERUN JOTHI

அருட்பெருஞ்சோதி,
அருட்பெருஞ் ஜோதி
தனிப்பெருங்கருணை,
அருட்பெருஞ் ஜோதி

Er.C.S. KUPPURAJ, B.E.
CHARTERED CIVIL ENGINEER &
CONSULTANT
FORMER CHIEF ENGINEER,
P.W.D.,

"ARUT PERUNJOTHI"
15, (OLD NO. 8), THIRD MAIN ROAD,
RAJA ANNAMALAIPURAM,
CHENNAI - 600 028.
☎ : 2493 6557 / 2495 0707

அணிந்துரை

திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகள் (1823 - 1874) பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மாபெரும் அருளாளர். இறைவனால் இவ்வுலகுக்கு அனுப்பப்பட்டவர். ஒரு குறிப்பிட்ட பணியினை செய்து முடித்துவிட்டு வரவேண்டும் என்று இறைவனால் கட்டளை இடப்பட்டு வந்தவர். நாமெல்லாம் நமது வினையினைத் தீர்ப்பதற்காக இவ்வுலகில் பிறக்கிறோம். அவர் அப்படிப் பிறந்தவர் அல்லர் என்பதனை அவரே கூறுகிறார்.

''அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்திருந்த
உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத்
தடைவித்திட அவரும்
இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்திடுதற்
கென்றே எனைஇந்த
உகத்தே இறைவன் வருவிக்க உற்றேன்
அருளைப் பெற்றேனே (5485)

— ஆறாம் திருமுறை, உற்றதுரைத்தல் (9)

இறைவனால் அனுப்பப்பட்டு அவதரித்தவர் என்ற காரணத்தினால் தான், யாரிட்மும் கல்வி கற்காமல், பள்ளிக்குச் செல்லாமல், ஒன்பது வயதுச் சிறுவனாக இருந்தபோதே புராணப் பிரசங்கம்

செய்யத் தொடங்கினார். சென்னை முத்தியாலுபேட்டை, லிங்கிச் செட்டித் தெருவில் அமைந்திருந்த சோமு செட்டியார் வீட்டிற்கு, தனது தமையனாருக்குப் பதிலாகச் சென்று, பெரிய புராணத்தில் பாயிரம் கடவுள் வாழ்த்துப் பாடலாகிய ''உலகெலாம்'' என்று தொடங்கும் முதற் பாடலைப் பாடி, ''உலகெலாம்'' என்ற முதல் சொற்றொடருக்கு மட்டும், பல மணி நேரம் விளக்கம் அளித்தார் என்று அவரது வரலாறு கூறுகிறது. இந்த விளக்கத்தினை ''திரு அருட்பா - உரை நடைப்பகுதி'' என்னும் நூலிலே ''உலகெலாம்'' என்னும் மெய்ம்மொழிப் பொருள் விளக்கம் என்னும் தலைப்புடன் 85 பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளது. (இரண்டாம் பதிப்பு 1981 - இராமலிங்க பணி மன்றம்)

அதனை இன்றைக்குப் படித்தாலும் நமக்குப் பூரணமாகப் புரியவில்லை. 1832 ஆண்டு சோமு செட்டியார் வீட்டில் அமர்ந்து இருந்த மக்களுக்கு இது எந்த அளவுக்குப் புரிந்திருக்கும் என்பது தெரியாது. இருந்தாலும் இச்சொற்பொழிவு ஒரு அருளியல் உலகின் அற்புதம் என்பதைப் பற்றி ஐயமில்லை.

இதற்கு அடுத்தபடியாக, சிதம்பரம் இராமலிங்கப் பிள்ளை என்ற பன்னிரண்டு வயது சிறுவன் சென்னை கந்தகோட்டம் என்னும் கோவிலில் நின்று கொண்டு இனிய எளிய தமிழில் முப்பத்தோரு கருத்துச் செறிவுமிக்கப் பாடல்களைப் பாடினான். இப்பாடல்களே இன்றைக்கு *தெய்வமணி மாலை* என்ற பெயரில் விளங்கி வருகின்றன. இப்பாடல்கள் ஒவ்வொன்றின் இறுதியிலும், மகுடமாக ''தருமமிகு சென்னையில் கந்தகோட்டத்துள் வளர், தலமோங்கு கந்தவேளே, தண்முகத் துய்யமணி உண்முகச் சைவ மணி சண்முகத் தெய்வ மணியே'' என்பது அமைந்திருக்கும். (தருமமிகு என்பதற்குப் பதில் பல்வேறு அடை மொழியும் இருக்கும்) இவ்வாறு மகுடம் அமைத்துப் பாடும் திறமை பன்னிரண்டு வயது சிறுவனுக்கு எப்படி வந்தது? தெய்வ அருளே என்று கூறுவதைத் தவிர வேறென்ன சொல்ல முடியும்?

இந்தத் தெய்வப் பிறவி வளர்ந்து ஐம்பது ஆண்டுகாலம் வாழ்ந்து, பல அற்புதங்களை எல்லாம் நிகழ்த்தி, ஆறாயிரம்

தெய்வீகப் பாடல்களை இயற்றி, பல புதிய தத்துவங்களை இவ்வுலகுக்கு அறிவுறுத்தி, இறுதியாக வடலூரை அடுத்த மேட்டுக் குப்பம் என்னுமிடத்தில் அருட்பெருஞ் ஜோதி இறைவனுடன் கலந்தது. உடல் மண்ணுக்கோ, நெருப்புக்கோ தரப்படவில்லை. இதுவும் ஒரு மாபெரும் அற்புதமே.

துரதிர்ஷ்டவசமாக, வள்ளற்பெருமானது மிக உயர்ந்த கருத்துகளை, இன்றைக்கும் மிகமிக தேவைப்படும் கருத்துகளை, அவர் வாழ்ந்த காலத்தில் புரிந்து கொண்டவர்கள் மிகச் சிலரே. இன்றைக்கும் அதே நிலைதான். அவரை இன்றைக்கு சரிவரப் புரிந்து கொண்ட வெகு சிலரில், பேராசிரியர் டாக்டர் ந.சுப்புரெட்டியார் ஒருவர். இல்லாவிட்டால் தனது 88வது வயதில், 350 பக்கங்கள் கொண்ட ஒரு நூலினை, *"இராமலிங்க அடிகள்"* என்ற தலைப்புடன் எழுதி வெளியிட முன் வருவாரா? அவருக்குச் சைவ உலகமும் சன்மார்க்க உலகமும் பெரிதும் கடப்பாடு உடையன ஆகும்.

சைவ சித்தாந்திகள் என்று தங்களைக் கூறிக் கொள்ளும் சிலர், வள்ளற் பெருமானை சரிவர புரிந்து கொள்ளாமல் அல்லல்படுகின்றனர். அவரைப் போன்ற சிறந்த சைவ அருளாளர் வேறு யாரும் இல்லை என்றும் கூடக் கூறலாம். சமயகுரவர் நால்வரைப் பற்றிய அருண்மாலையை ஊன்றிப் படித்தால், அவர் எவ்வளவு தூரம் நால்வரை அனுபவித்திருக்கிறார் என்பது புரியும். தேவாரப் பாடல் பெற்றத் தலங்கள் 274. இந்த 274 தலங்களின் சிறப்பினையும், ஒரே பாடலில் அமைத்து *"விண்ணப்பக் கலிவெண்பா"* பாடியதைப் போல வேறு அருளாளர்கள் யாராவது பாடியுள்ளனரா? அவரது இறுதிக்காலம் வரை சிவசிவ நடராஜா என்றுதான் பாடியிருக்கிறார். இதனை எல்லாம் சிந்தியாமல் வள்ளலாரைப் புறக்கணிப்பது சைவ உலகத்திற்கு நல்லதல்ல.

வள்ளற்பெருமானது சமய சமரசக் கொள்கையும் ஒளிவழிபாடும், சாதி சமய சழக்கினை விடவேண்டும் என்ற கருத்தும் இன்றைய சமூகத்திற்கு மிகவும் அவசியமானவை ஆகும். தமிழராகிய நாம் வள்ளற் பெருமானது சமரசத்தையும், சீவகாருண்யத்தையும் நாடெங்கும் பரப்பத் தவறியதால்தான், நாட்டில்

இத்தனைக் கொலைகளும், ஏனைய கொடுமைகளும் நாடோறும் நிகழ்கின்றன. வள்ளற் பெருமானின் பெருமைகளையும் அவரது கொள்கைகள் பற்றிய அவசரமும் அவசியமும் நாடெங்கும் பரப் பப்படுதல் வேண்டும். இதற்கு இந்நூல் பெரிதும் பயன்படும் என்று நம்புகிறேன்.

வள்ளற்பெருமான் சென்னையில் ஏழுகிணறு பகுதியில் உள்ள வீராசாமிப் பிள்ளைத் தெருவில் 33 ஆண்டுகள் வாழ்ந்தார். அப்போது அதே தெருவில் வாழ்ந்த திருமழிசை முத்துச்சாமி முதலியார் என்பவர் அவருக்கு நண்பனாகவும் சீடனாகவும் பழகி வந்தார். அப்போது இவர் பாடிய சில தோத்திரப் பாடல்களை வள்ளற்பெருமானிடம் காட்டி, சாற்றுக்கவி பெற்றுள்ளார். அந்த சாற்றுக்கவியில் வள்ளலார் இவரை ''முத்துச்சாமிக் கவிக்குரிசில்'' என்று குறிப்பிடுகிறார்.

சிலகாலம் கழித்து வள்ளலார் வடலூருக்குச் சென்ற பிறகு முத்துசாமிக்கு திருமணம் நிச்சயமாகிறது. அதற்கு வள்ளலார் வரவேண்டும் என்று பெரிதும் விழைகிறார். ஆனால், வள்ளலாரோ திருமணம் முதலிய விழாக்களில் கலந்துகொள்ளும் நிலையில் அப்போது இல்லை. தன்னால் வர இயலவில்லை என்ற செய்தி யினை, 412 அடிகள் கொண்ட நிலைமண்டில ஆசிரியப்பாவாக எழுதி, தனது நண்பர் கொந்தமூர் சீனிவாச வரதாச்சாரியார் மூலமாக, நேரில் கொடுக்குமாறு அனுப்புகிறார். இதில் முத்துசா மியை ''மூதறிவாளன் முத்துசாமி'' என்று குறிப்பிட்டு, இதனை ''இராமலிங்கம் எழுதி விடுத்த மயலுரு சோபான வாசகம்'' என்று கூறுகிறார். இப்பாடல் திருஅருட்பா - ஆறாம் திருமுறை - ஊரன் அடிகள் பதிப்பில் (பக்.1099 - 1010) காணப்படுகிறது. 'குடும்ப கோரம்' என்ற தலைப்பு யார் கொடுத்தது என்பது தெரியவில்லை.

'குடும்ப கோரம்' என்ற பாடல், சைவ சித்தாந்தக் கருத்துகள் நிரம்பிய உருவகக் கதையாக உள்ளது. அதன் சுருக்கம்:-

என் பெயர் 'ஏழை'. எனது முதல் மனைவி 'ஆணவம்'. அவளது மகன் 'அஞ்ஞாமை'. இரண்டாவது மனைவி 'மாயை'. இவள் பெற்ற பிள்ளைகள் நால்வர். மனம், புத்தி, சித்தம்,

அகங்காரம் என்பது அவர்கள் பெயர். மூன்றாவது மனைவி 'காமியம்'. அவளுக்கு மூன்று பிள்ளைகள். அவர்கள் பெயர் சத்துவம், இராசசம், தாமசம் என்பது. இந்த மூன்று மனைவிகளோ டும், எட்டுப் பிள்ளைகளோடும் ஏழையாகிய நான், ஒன்பது ஓட்டைகள் உள்ள ஒரு வாடகை வீட்டில் வாழ்கிறேன். இந்த வீட்டின் உரிமையாளர்கள் மூவர். வாதம், பித்தம், கபம் என்ற பெயர் கொண்ட அவர்களுக்கு நான் தினந்தோறும் மூன்றுமுறை வாடகை கொடுக்க வேண்டும். சற்றே தவறினால் அவர்கள் துன்புறுத்துவர். எனவே, என்னால் திருமணத்திற்கு வர இயல வில்லை.

உருவகக் கதை (Allegory) எழுதுவதிலும் வள்ளலார் வல்லவ ராகக் காணப்படுகிறார்.

இந்த முத்துசாமி முதலியார் திருஅருட்பா அச்சில் வருவதற் கும் காரணமாக இருந்திருக்கிறார். தொழுவூர் வேலாயுத முதலி யார் எழுதிய, ''திருஅருட்பா வரலாறு'' என்னும் நூலில் 45வது பாடலில், ''ஓங்கருளான் முத்துசாமிப் பெயரின் ஓர் உரவன்'' திருவொற்றியூர் சன்னிதி முன்னர் அருட்பாக்களை ஓதி 'பக்தி வித்தினன்' என்று கூறுகிறார்.

இப்படிப் பலவகையிலும் வள்ளலாருடனும், திருஅருட்பாவு டனும் தொடர்பு கொண்டிருந்த, திருமழிசை முத்துசாமி முதலியார் தாம் என்னுடைய தாய்வழி முப்பாட்டனார். அவரைப்பற்றியும், அவர் வீட்டிற்கு அருகில் வாழ்ந்த 'இராமலிங்கப் பரதேசி' பற்றி யும் எனது தாயார் கூறக் கேட்டிருக்கிறேன் (பரதேசி என்பது அந்தக் காலத்தில் மிக உயர்ந்த சொல்லாகக் கருதப்பட்டது). எனது தாயார் தேவாரம், திருவாசகம், திருஅருட்பா பாடல்களை இனிமையாக இசையுடன் பாடக்கூடியவர். எனது இளம் பிராயத் தில் எனக்கும் கற்பிக்க முயன்றார். எனது தவக்குறையினால் அந்தத் திறமை எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால், சைவத்தி லும், சன்மார்க்கத்திலும் ஆழ்ந்த பக்தி, உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தது.

எனவேதான், எனது எண்பதாவது வயதிலும், சைவத்திற்கும் சன்மார்க்கத்திற்கும் என்னாலான பணிகளைச் செய்து வருகிறேன்.

திருமூலரும், மாணிக்க வாசகரும் கூறிய சன்மார்க்கம் (சைவம் கூறும் நான்கு மார்க்கங்களில் நான்காவதாகியது சன் மார்க்கம்) தான் பரிணாம வளர்ச்சியினால் வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கமாக விளக்கம் பெற்றது என்பதனை சைவ உலகமும் சன்மார்க்க உலகமும் உணரும் காலம் அண்மையில் தான் இருக்கிறது என்று நம்புகிறேன்.

"அருட்பெருஞ் ஜோதி, அருட்பெருஞ் ஜோதி
தனிப்பெருங்கருணை, அருட்பெருஞ் ஜோதி"

எனனும் மகாமந்திரம் வள்ளற் பெருமானால் திருவாசகத்தில் இருந்துதான் எடுக்கப் பெற்றது என்பதும், அவர் திருமந்திரத் தினை தாம் போற்றும் சாத்திர நூலாகவும், திருவாசகத்தினை தோத்திர நூலாகவும் கொண்டு வழிபட்டார் என்பதும் யாவரும் அறிய வேண்டிய உண்மையாகும்.

இதற்கும் பேராசிரியர் டாக்டர் ந.சுப்புரெட்டியார் இயற்றி யுள்ள இந்நூல் பெரிதும் துணைபுரியும். இதனைப் பொறுமையு டன் படித்தால் வள்ளற் பெருமானின் திருவுள்ளம் தெளிவாக விளங்கும்.

சென்னை
25.8.2003

சி.எஸ்.குப்புராஜ்

மூவர் தேவாரம்
புதிய பார்வை

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

தேவாரம் ஓர் இலக்கியமாக, இசை நூலாக
தமிழர்களின் வாழ்விற்குப் பயன்படுகின்ற
ஒரு பண்பாட்டுப் பெட்டகமாக விளங்கும்
பாங்கினைத் துய்த்துணரும்
ஓர் அரிய பெரும்நூல்

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-938927-5-6

eBOOK ~ மின் நூல்



அணிந்துரை

மூவர் தேவாரம்

புதிய பார்வை


2003

வழங்கியோர்:

டாக்டர் பிரமீளா குருமூர்த்தி

இந்திய இசைத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்







அணிந்துரை

(டாக்டர் பிரமீளா குருமூர்த்தி இந்திய இசைத்துறை செ.ப.க)

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் அயராது பல நூல்கள் படைத்துள்ள சிறந்த அறிஞர் பெருமகனார் சென்னைப் பல்கலைக் கழகத்தில் வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியராகத் தமிழ் இலக்கியத்துறையிலும், தெற்கு தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மரபு வழிப் பண்பாட்டு நிறுவனத்தின் மதிப்பியல் இயக்குநராகவும் அருந்தொண்டாற்றியவர். இவரது தனித்திறமை யாதெனில் சொற்பொழிவுகளை எல்லாம் நூலாக்கும் பணி என்ற அரும் சாதனையாகும்.

2002-2003ம் ஆண்டு மறைமலை அடிகள் பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள அறக்கட்டளை சொற்பொழிவுகளை இவர் ஆற்றினார். 'மூவர் தேவாரம்' என்ற தலைப்பில் இவர் நிகழ்த்திய சொற்பொழிவுகளைப் பேராசிரியர் **பி. சாம்பமூர்த்தி** அவர்களுக்கு அன்புப் படையலாக சமர்ப்பித்துள்ளமை போற்றற்குரியது.

தென்னக இசை வரலாற்றில் தோன்றிய பாடல் வரிசையில் பண் மற்றும் தாளத்துடன் உருவான முதல் இசைப்பாடல்கள் தேவாரங்கள் என்று பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டுள்ளது இங்கு நினைவு கூரத் தக்கது.

'மூவர் - தேவாரம் புதிய பார்வை' என்று சிறப்பான தலைப் பிட்டு திருமுறைகண்ட சோழனான இராஜராஜ சோழன் மற்றும் நம்பியாண்டார் நம்பி ஆகியோரின் திருப்பணி பற்றியும் தேவாரங்களை அவர்கள் முதல் மூன்று நான்கு ஐந்து ஆறு மற்றும் ஏழு என்று சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோர் பாடல்கலைத் தொகுத்தமையைச் சிறப்பாகவும் தெளிவாகவும் எழுதியுள்ளார். இதனைத் தொடர்ந்து நாலாயிரம் தொகுக்கப்பட்டுள்ள முறையை யும் சீராக வழங்கியுள்ளார். சைவ வைணவ பேதமின்றி இலக்கியப் பொக்கிஷங்களாக விளங்கும் பண்டைய சீர்மை பெற்ற பக்திக் காப்பியங்களை இவ்வாறு ஆய்வு நோக்கில் வழங்கியமை பேராசிரியரின் புதிய கண்ணோட்டத்தைக் காட்டுகிறது. அவர்தம் ஆழ்ந்த அறிவைப் புலப்படுத்துகிறது வாரப் பாடல், தேவ பாணி ஆகியவற்றிற்குச் சிறப்பான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

திருஞானசம்பந்தர் சீரிய வாழ்வில் நிகழ்ந்த அரிய நிகழ்வுகள் அற்புதமாகப் பாடிய பதிகங்கள் இவற்றை விளக்கங்களுடன் அளித்துள்ளமை பாராட்டத்தக்கது.

சைவத்திற்கும் தமிழ் இலக்கியத்திற்கும் ஒப்பற்ற சேவை செய்த சம்பந்தப் பிரான் 7ஆம் நூற்றாண்டிலேயே சாதி வேற்றுமை பாராட்டாது திருநீலகண்ட யாழ்ப்பாணரைச் சிறந்த முறையில் தன்னுடன் சீடராகப் போற்றிய பாங்கு அக்காலத்தில் சிறந்து விளங்கிய சமூக நாகரிகத்துக்குச் சிறந்த ஓர் எடுத்துக்காட்டு. பதினாறு வயதுவரை வாழ்ந்தாலும் சம்பந்தரின் சீரிய வாழ்வும் அவரது அரிய ஆற்றல் தோய்ந்த பாடல்கள், பண்ணிற்கும் தாளத்திற்கும் பாடல் நயத்துக்கும் சந்தங்களுக்கும் எடுத்துக் காட்டாய்த் திகழ்வன. இவற்றையெல்லாம் சிறப்பாக உயர்திரு சுப்புரெட்டியார் தமிழ் கூறு நல்லுலகத்திற்குப் படைத்திருக்கும் ஆற்றல் போற்றத்தக்கது. இது போலவே அப்பர் பிரான் மற்றும் தம்பிரான் தோழர் வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகளையும் பாடல் களையும் பெரிய புராணச் செய்திகளுடன் சேர்த்துத் தருகிறார். இதனைத் தொடர்ந்து பண்களைப் பற்றிய விரிவான செய்திகள் எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு திருமுறை வாரியாகப் பண்கள் சுட்டிக்காட்டப் பெற்று பாடல் வகைகளும் விளக்கப்பட்டுள்ளன.

வடமொழி மற்றும் தமிழில் உள்ள இவரது திறனாய்வு வடமொழி யாப்பியத்தின் மரபு எனும் பகுதியில் சிறப்பாக வெளிப்படுகின்றது. கட்டளை எனும் பகுதியில் இவர் தரும் விளக்கங்கள் ஆய்வாளர்களுக்குப் பெரும் விருந்தாக அமைகின்றன.

மொத்தத்தில் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் சீரிய ஆய்வுக் கட்டுரைகளாக எழுத்து வடிவம் பெற்று நூலாக மாறி யுள்ள தன்மை கடும் முயற்சியின் விளைவு மட்டும் அன்றி அவரது தெளிந்த ஆழ்ந்த உழைப்பின் மேன்மையைப் பறைசாற்றும்.

வாழ்க அவர்தம் பணி.

- பிரமீளா குருமூர்த்தி

இந்திய இசைத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சேப்பாக்கம், சென்னை - 600 005

வைணவ புராணங்கள்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

இந்நூலில் இதிகாச பாகவதம், புராண பாகவதம், திருக்குருகை மான்மியம், கூடற்புராணம், இரு சமய விளக்கம் எனும் ஐந்து நூல்களைப் பற்றிய ஒருநிலையான ஆய்வுகள் உள்ளன. புராணங்கள் பல்வேறு மதுங்களில் எப்படியெல்லாம் உள்ளன என்பன போன்ற செய்திகளை உடலுக்கு ஒரு முகம் போல் விளக்குகின்றார் பேராசிரியர்.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939685-4-3

eBOOK ~ மின் நூல்

ந சுப்பு ரெட்டியார்
1916 2016
100
நூற்றாண்டு விழா நிகழ்வுகள்



அணிந்துரை

வைணவ புராணங்கள்


2003

வழங்கியோர்:

பேராசிரியர் முனைவர் **ஜே பார்த்தசாரதி**

ஆசிரியர் – *வைணவம்*







முனைவர் பேராசிரியர் ஜே. பார்த்தசாரதி
அவர்கள் நல்கிய

அணிந்துரை

உலகம் அறிவுபெற, பல பயனுள்ள நூல்களை இயற்றி, அவற்றை மக்களுக்கு வழங்கி, அவர்களைத் தெளிய வைப்பதன் மூலம் உலகப் பெருந் தொண்டு ஆற்றி வரும் எழுத்தாளர்கள் பலர். அவர்களில் ஒருவரே, நம் 'தமிழ்ச்செம்மல்', 'கலைமாமணி', 'ஸ்ரீ சடகோபன் பொன்னடி' பேராசிரியர் முனைவர் **சுப்பு ரெட்டியார்** அவர்கள்.

இப்பெருந்தகையார் இயற்றிய பல அரிய நூல்களில் ஒன்றுதான் இந்த '**வைணவப் புராணங்கள்**' என்னும் நூல். இது வைணவம் சார்ந்த அரிய ஆராய்ச்சி நூல்.

இந்த நூலில் 'இதிகாச பாகவதம்', 'புராண பாகவதம்', திருக்குருகை மான்மியம்', 'கூடற்புராணம்', 'இரு சமய விளக்கம்' என்னும் ஐந்து நூல்களைப் பற்றிய ஒருநிலையான ஆய்வுகள் உள்ளன.

இந்த ஐந்து நூல்களைப் பற்றிய செய்திகளை அறிவதற்கு உதவும்படியாய்ப் புராணம் என்றால் என்ன ? புராணம் எப்போது தோன்றியது ? புராணம் ஆன்மாவுக்கும் சமுதாயத்திற்கும் புரியும் தொண்டு என்ன ? புராணங்கள் பல்வேறு மதங்களில் எப்படியெல்லாம் உள்ளன என்பன போன்ற செய்திகளை உடலுக்கு ஒரு முகம் போல விளக்குகின்றார் ஆசிரியர்.

இவர் எடுத்துக்கொண்ட நூல்களின் வரிசையைப் பார்த்தால் எல்லாமே மிகப்பல வைணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்படாத இலக்கியங்களே என்பது புரியும். வரிசை நிரலிலும் அறிமுகம் ஆகாதது, மேலும் அறிமுகம் ஆகாதது என்று ஐந்தும் அமைந்

ஆசிரியர் - 'வைணவம்' இதழ்,
25, பள்ளிக்கூடத் தெரு, கோயம்பேடு, சென்னை - 600 107.

திருப்பதைப் பார்க்கும்போது அறிமுகமாகாத இலக்கியங்களை அறிமுகப்படுத்திய தொண்டு புரியும்.

'இதிகாச பாகவதம்' செவ்வைச் சூடுவாராலே இயற்றப்பட்டது. 'புராண பாகவதம்' நெல்லி நகர் அருளாளதாசரால் இயற்றப்பட்டது. இவ்விரண்டுமே 'கண்ணன் கதை' கூறும் பாகவதங்களே, எனினும் 'இதிகாச பாகவதத்தை'விடப் 'புராண பாகவதம்' பலர்க்கும் அறிமுகம் ஆகாததால் அதன்பின் வைத்துள்ளார்.

அதற்கடுத்து உள்ளது 'திருக்குருகை மான்மியம்.' இது திருக்குருகைப் பெருமான் கவிராயரால் எழுதப்பட்டது. நம்மாழ்வார் பற்றிய காவியம் இதுவாகும். நம்மாழ்வாரையே எல்லோரும் அறிவர். ஆனால் நம்மாழ்வார் பெயரோடு இணைந்த 'மாறன்பா - பாவினம்', 'மாறன் அகப்பொருள்', 'மாறன் அலங்காரம்' போன்ற நூல்களையும் இயற்றிய திருக்குருகைப் பெருமான் கவிராயரால் இயற்றப்பட்ட திருக்குருகை மான்மியத்தை அறியாதாரே அதிகம். அப்படியான அழகிய நூலினை அறிமுகம் செய்துள்ளார் வைணவ இலக்கிய மாமணியான நமது ரெட்டியார் அவர்கள்.

அதற்கடுத்து 'கூடற்புராணத்தை' அறிமுகம் செய்கிறார். கூடல் அழகர் திருக்கோயிலைப்பற்றிய தலபுராணமே இந்நூல். இதை இயற்றியவர் பெயரும் தெரியவில்லை. இந்நூலின் சிறப்புகளும் தெரியவில்லை. இப்படியான ஒரு அரிய நூலை அறிமுகம் செய்கிறார் ஆசிரியர்.

அடுத்தது 'இரு சமய விளக்கம்.' இது தற்போது 'நாகலாபுரம்' என்று வழங்கப்படும் 'அரிதை' என்ற ஊரில் பிறந்த அரிதாசரால் இயற்றப்பட்டது. இந்த நூலைப் பலரும் கேள்விப்பட்டிருக்கலாம். ஆனாலும் என்ன உள்ளீடு என்று பலருக்குப் புரியாதிருந்தது. அதைப் புரிய வைத்துள்ளார் இந்த நூலாசிரியர்.

இப்படிப் படிப்படியாக மேலும் மேலும் அறிமுகமாகாத நூல்களை அறிமுகப்படுத்தியதே இவருடைய பெருந்தொண்டு எனலாம். இந்த விதத்தில் இவரைப் போற்ற வைணவ உலகம் மிகவும் கடப்பாடு கொண்டுள்ளது.

பேராசிரியர் சுப்பு ரெட்டியார் அவர்கள் இந்த ஐந்து நூல்களையும் அறிமுகப்படுத்தும்போது வரன்முறையாக நூலின் பெயர், நூலின் பாங்கு, நூலாசிரியரின் பெயர், நூலின் அமைப்பு முறை, அவ்வமைப்பு முறையில் உள்ள புதுமைகள், அந்நூலின் பாடல்கள், கம்பனையும் திவ்வியப் பிரபந்த ஆழ்வார்களின் சாயல்களைக் கொண்டிருக்கும் பாங்குகள் என்பன போன்ற பல செய்திகளையும் கொடுத்துள்ளார்.

ஐந்து நூல்களில் உள்ள அழகான பாடல்களையும் அறிமுகப்படுத்துவதோடு சில பர்டல்கள் உரைநடைப் போக்கையே கொண்டுள்ளன என்பதையும் சுட்டிக்காட்டுவது இவர்தம் நடுநிலையான அறிமுகமாகவே உள்ளது.

செவ்வைச் சூடுவார் பாகவதமான 'இதிகாச பாகவதத்திற்கும்', நெல்லி நகர் அருளாளதாசர் இயற்றிய 'புராண பாகவதத்திற்கும்' உள்ள ஒப்பீடுகள் மிக மிக அருமையாக உள்ளன. இரண்டிற்கும் கருப்பொருள் ஒன்றே எனினும் கட்டமைப்புகளில், கவிதைப் புனைவுகளில், தத்துவ தரிசனப் பாங்குகளில் உள்ள செய்திகளை மிகவும் அழகாகச் சுட்டிக் காட்டுகிறார்.

'திருக்குருகை மான்யம்', 'கூடற்புராணம்' இரண்டிற்கும் உள்ள குறை நிறைகளையும் தெளிவாக்குகிறார். அடைமொழிகளே இல்லாமல் மரங்களின் பெயர்களைச் சுருக்கிக் கூறும் திருக்குருகைப் பெருமான் கவிராயரின் புலமையை வியந்து போற்றுகிறார்.

'கூடற்புராணத்தில்' வரும் நரசிங்கரைப் பற்றிய செய்தி அரிய செய்தியாகும். நரசிங்கத்தின் உக்கிரம் தணியவில்லை. தேவர்கள் சரப மூர்த்தியை அனுப்பி நரசிம்மரின் உக்கிரத்தைத் தணிக்கச் செய்கிறார்கள். சரபத்தைக் கண்ட நரசிம்மர் அதை வென்று தானே சாந்தம் அடைகிறார் என்பதும் அரிய செய்தி.

'இரு சமய விளக்கமோ' வைணவம், சைவம் என்னும் இரு சமயங்களின் கொள்கைகள் பற்றியது. சைவத்தைவிட வைணவமே சிறந்தது என்று பேசுவது. பட்டி மன்றம் போல் அமைந்தது இரு பெண்களால் பேசப்படுவதாய் அமைந்துள்ளது. சைவ சமயக் கொள்கைகளைக் கண்டிக்கும் ஒரு விசித்திரமான நூல் என்று குறிப்பிட்டுள்ளது சரியான ஆய்வு முடிவாகும்.

வைணவ நங்கையான ஆரண வல்லிக்கும், சைவ நங்கையான ஆகம வல்லிக்கும் நிகழ்ந்த உரையாடல்களில் ஆரண வல்லி சிவனிடம் பல பிறப்புகள் உண்டு. திருமாலே பிறப்பிலி என்று நிறுவுகின்றாள். இப்படியான பல செய்திகளைக் கொண்டதே இந்த நூல் என்று அறிமுகப்படுத்துகிறார் ஆசிரியர்.

வைணவர்கள் மிகுந்த பண்பாடுள்ளவர்கள் என்பதை இந்த ஐந்து இலக்கியங்களின் வாயிலாக இந்நூலாசிரியர் வெளிப் படுத்துவது வைணவ சமயத்திற்கே ஒரு முடி சூடுவது போல் உள்ளது.

இரண்டு பாகவதங்களிலும் திருக்குருகை மான்யத்திலும் கூடற்புராணத்திலும் இந்த நாகரிகம் இருப்பதுகூடப் பெரிதல்ல; இரு சமய விளக்கத்தில் இரு பெண்களுமே ஒருவரை ஒருவர் விளித்துக் கொள்ளும்போது அழகான தொடர்கதையே சொல்லி விளித்துக் கொள்கிறார்களே அந்த அழகை ஆசிரியர் குறித்திருப்பது மிக மிக நயமானது. அதன் மூலம் வைணவர்கள் மிகவும் நாகரிகம் மிக்கவர்கள் என்பதைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுவது மிக மிகப் போற்றத்தக்கது.

ஏராளமான செய்திகளை உள்ளடக்கி நடுநிலையோடு வெளிப்படுத்தி, வைணவ மரபு வழிப் பண்பாட்டினை நமக்கெல்லாம் புரிய வைத்து, இந்த நூல்களைத் தேடிக் கண்டறிந்து படிக்க வேண்டும் என்று தூண்டுகிறாரே அதுவே மிகவும் உயிர்ப்பான செய்தியாகும்.

பதிப்பித்த சுரா புக்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தினரும் இந்நூலை வெளியிட்டதன் மூலம் தொண்டு புரிந்திருக்கின்றனர் என்றால் மிகையாகாது.

சென்னைப் பல்கலைக்கழக, தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மரபு வழிப் பண்பாட்டு நிறுவனத்தின் இயக்குநராக உள்ள ஸ்ரீ சடகோபன் பொன்னடியான இப்பெருந்தகை நெடிது நாள் வாழ்ந்து இப்படியான பல வைணவ நூல்களை அருள வேண்டும் என்று எம்பெருமானை வேண்டிக் கொள்கின்றோம்.

வாழ்க தமிழ். வளர்க மனிதநேய வைணவம்.

அன்புடன்
ஜெ. பார்த்தசாரதி
(பேசி: 044-24754819)

கோயம்பேடு,
சென்னை - 600 107.

வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

திருக்குறளை ஆழ்ந்து நுட்பமாக கற்கும்போது ஒருசில கருத்துகள்
முரண்பாடாகத் தென்படும் என ஒரு சிலர் கூறுவர்.
முரண்பாட்டை பேராசிரியர் சான்றுகளுடன்
வன்மையாக மறுக்கின்றார். திருக்குறள் நெறியை
எக்காலத்தும் எவ்விடத்தும் எவராலும்
வழிபட இயலும்.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939685-6-7



eBOOK ~ *மின் நூல்*



அணிந்துரை


வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்

2004

வழங்கியோர்:

பேராசிரியர் திருக்குறள் க பாஸ்கரன்







பேராசிரியர். திருக்குறள். க. பாஸ்கரன்
B.Sc., B.Sc(Hons), M.Sc, M.Phil, B.T., M.Ed.,



அணிந்துரை

தமிழ்ச் செம்மல், கலைமாமணி பேராசிரியர் முனைவர். ந. சுப்புரெட்டியார் M.A., B.Sc., L.T., வித்வான் Ph.D., D.Lit., அவர்கள் நுட்பத்துடனும் திட்பத்துடனும் எழுதிய நூலை, படித்தேன். மகிழ்ந்தேன். எளியேனாகிய எனக்கும் அன்னார் பெருமையை அளித்தமைக்கு வியந்தேன். ஒருநூலுக்கு அணிந்துரையை வரைவது என் கன்னி முயற்சி. பேராசிரியர் ரெட்டியார் இயற்றிய பெருமையும், பேருவகையும் எய்திய எனக்கு அவர் வழங்கிய பணியை அரும்பெருபேறு என கருதுகிறேன்.

வான் பொய்ப்பினும் தான் பொய்யா காவிரி ஆறு பாயும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் அல்லது சோழநாடு ஈன்ற சான்றோராகிய திரு. சுப்பு ரெட்டியார் ஓர் தமிழறிஞர்; மாபெரும் எழுத்தாளர்; சிந்தனைச் செம்மல். பேராசிரியர் 'திருக்குறள் தெளிவு' என்பதில் உள்ளபடி அறிவியல், ஆய்வு, இலக்கியம், உளவியல், கல்வியியல், மற்றும் சமூகம் முதலிய பல்வேறு துறைகளில் இந்நாள்வரை 123 நூல்களை

கல்லூரிக் கல்வி மண்டல இணை இயக்குநர்
நிறுவனர், கருணாகரன் நினைவுத் திருக்குறள் நூலகம்
அறிஞர் அண்ணாநகர் சென்னை - 600 040.
அ.பெ. 7342 போ. 26211150

இயற்றி வெளியிட்ட பின்பு, 124 ஆவது வெளியீடாகிய 'வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்' எனும் நூலுக்கு அணிந்துரையை அளிக்கும் அரியதோர் வாய்ப்பை வழங்கிய மையில் ஒரு நுட்பம் புலனாகிறது. 124 எண்ணில் அடங்கிய இலக்கங்களை கூட்டினால் (1+2+4) 7 ஏழு என்னும் எளிய விழுமிய எண் உருவாகும். இந்நூலின் கருப்பொருளாகிய திருக்குறளுக்கும் நெருங்கிய உறவை அறிய இயலும்.

அகவை (89) முதிர்ச்சியிலும் பல்வேறு இடர்ப் பாடுகளையும், இடையூறுகளையும், இன்னல்களை யும் புறக்கணித்து, 'வாக்கு வாளை விட வலிமை மிக்கது' எனும் மூதுரையை முற்றிலும் நம்பும் நூலாசிரியர், ஆழியில் மூழ்கி முத்துக்களை கண்டறிவதுபோல், திருக்குறள் இலக்கியப் பெருங்கடலில் மிக நுண்ணிய கருத்துக்களை அறிந்து, வரைகிறார் இப்படைப்பை, அறிவுக்கு விருந்தாக, கருத்துக் கருவூலமாக பட்டறிவுப் பாசறையாக சிந்தனையைத் தூண்டும் ஊக்கியாக விளங்குகிறது இந்நூல். புதிய அணுகுமுறையில் உருவாக்கப்பட்ட இயற்றப்பட்ட இந் நூலைச் சிறப்பிக்கவும், படைப்பாளியைப் பாராட்டவும் அணிந்துரையைத் துணிந்து, பணிந்து வழங்குகிறேன் அற நூலுடன் தொடர்புடைய அருமையான நூலை முழுமை யான ஆர்வத்துடன் படிக்க வாய்ப்பை வழங்கிய பேரா சானுக்கு முதற்கண் வணக்கங்கள் கணக்கில.

அரிது அரிது மானிடராய்ப் பிறப்பது அரிது. இவ்வரிய இனத்துக்கு இயல்பாக வழங்கப்பட்ட சிந்தனைத் திறன் என்பது தெளிவு. சிந்தனையே இயற்கையில் மறைந்துள்ள உண்மைகளைக் கண்டறிந்து வெளிப்படுத்து பவன் அறிஞனாவான். சிந்தனையற்றவன் பேதை. சிந்தித்த

கருத்துகளை வெளியிட அஞ்சி மறுப்பவன் ஏழையல்ல. அவனொரு கோழை. இந்நூலை ஆழ்ந்து படிக்கும்போது, முனைவர் சுப்புரெட்டியார் ஒரு சிந்தனைச் சிற்பி என உறுதியாக அறுதியிட்டு இறுதியாக இயம்ப இயலும்.

அணுவைத் துளைத்துஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்தது குறள்

இதனை இயற்றிய திருவள்ளுவர் தன்னை உலகினுக்கே ஈந்து வான்புகழ் ஈட்டிய தமிழகத்தில் தோன்றினாலும் அந்நூல் காலத்தை வென்று, இனம், சாதி, சமயம், நாடு, மற்றும் மொழி முதலிய பல்வேறு பாகுபாடுகளைக் கடந்து, ஞாலம் போற்றும் அறநூலாக, பொருளியல் பனுவலாக, வாழ்க்கைத் துணை நூலாக நீதி இலக்கியமாக இலங்குகிறது.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக (391)

குறில் எழுத்துக்கள் மட்டுமே அடங்கிய இத்திருக்குறளுக்கு எடுத்துக் காட்டாக வழிபடத்தக்க, தகுதிமிக்க திருக்குறள் நூலே திகழ்கிறது என்பது தெளிவு. அகர முதல எழுத்தெல்லாம். . . எனத் தொடங்கும் முதல் குறட்பாவில் 'அ' எனும் உயிரில் அரும்பி, உயிர் மெய்யில் மலர்ந்து தொடர்ந்து, ' கூடி முயங்கப் பெறின்' என்னும் ஈற்றடி அடங்கிய இறுதி 1330 ஆவது குறட்பா 'ன்' என்னும் மெய்யில் முடிகிறது. வாழ்வியக்கமும் உயிர் உடலில் இணைந்து, உயிர் மெய்யாக இயங்கி, இறுதியில் உயிர் உடலிலிருந்து விலகி, 'மெய்' எனப்படும் உடல் மட்டும் எஞ்சி அழிகிறது. இத்தகைய மெய்யறிவு திருக்குறளில் புலனாகிறது.

அளப்பரிய சிறப்புகளுடன் ஈடு இணையற்ற இலக்கியமாக உலவும், உலகப் பொதுமறையாகிய திருக்குறள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோற்றுவிக்கப் பட்டாலும், வியக்கத்தக்க சீரிளமைத் திறன் குன்றாமல் எப்பாவலரும் விரும்பும் குவலயம் போற்றும் முப்பால் ஒப்பற்ற ஒல்காப் புகழ் எய்திய காவியமாக இலங்கும் திருக்குறளுக்குப் பல்வேறு உரைகள்; எளிய உரை, தெளி வுரை, கருத்துரை முதலியன ஏராளமாக வெளியிடப் படுகின்றன. உரைகளை இயற்றல் மற்றும் அவைகளை வெளியிடல் தொடருகின்றன. பொதுவாக, பெரும்பான்மை யான உரை களில் புதுமை இல்லை. பரிமேலழகர் இயற்றிய பழம் உரையையே எதிரொளிக்கின்றன. திருக்குறளுக்கு உரை மூலம் பொருள் மட்டும் புகன்று, செய்யுளை எளிமையாக தெளிவாக சுருக்கமாக விளக்கும் பணி இந்நாள் தேவையையும் எதிர்பார்ப்பையும் நிறைவேற்றுமா? வாழ்வியல் அடிப்படையில், உலகியலுக்கு ஏற்ப திருக்குறள் கருத்துக் களை எளிமையாக, தெளிவாக விளக்கியும், வாழ்வியல் நடவடிக்கைகளுடன் ஒப்பிட்டு, மனித வாழ்வை மாமறைக் கிணங்க மாற்றிட வலியுறுத்தி உரைப்பதே நற்பயனை நல்கும் என்பதே பேராசிரியரின் விழைவாகும். குறளர் திருமால் திருவடியால் உலகையே முழுமையாக அளந்தார் என பழங்கதை பகருகிறது. ஒன்றே முக்கால் அடியில் உலகியல் வாழ்வை அறிந்து, அறிவுரைகளை உவமை நயத்துடன் உள்ளத்தில் உறுதியாக ஊன்றுமாறு உரைத்து உலகப் பொதுமறையை உருவாக்கிய திரு வள்ளுவர் மன்பதையை நெறிப்படுத்துகிறார்.

புராணங்கள், இதிகாசங்கள் பழம்பெரும்

இலக்கியங்கள், காவியங்கள் மற்றும் சமய நூல்கள் முதலியன எண்குணத்தானாகிய இறைவனைப் பல்வேறு வடிவங்களிலும் தோற்றங்களிலும் உருவகப்படுத்திய. உருவங்களும் சிலைகளும் பெருகப் பெருக வழிபாட்டு வகைகள் வளர்ந்தன. இறைநெறிகளை வழிபடுதல் புறக்கணிக்கப்பட்டன. 'மரத்தை மறைந்தது மாமத யானை; மரத்தில் மறைந்தது மாமத யானை(2290)' எனும் திருமூலர் வாக்கு வழிபடுதலை விலக்கி வழிபாட்டு முறைகள் பெருகிய இக்கால உலகியல் நடைமுறைக்கு முற்றிலும் பொருந்தும். தெய்வ மறையாகிய திருக்குறள் உலகியல் வாழ்வில் மனிதனை மையமாக அமைத்து, அம்மனிதனை தெய்வ நிலைக்கு உயர்த்தியது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் (50)

என்பது காண்க. இவ்வுலகில் அறநெறிகளுக்கேற்ப வாழத் தக்க முறைகளில் வாழ்பவன் தெய்வ நிலையை எய்தியதாக கருதப்படுவான் என உலகப் பொதுமறை உணர்த்துகிறது.

அண்மையில் வெளியிடப்பட்ட பல்வேறு உரை நூல்களில் திருக்குறளின் முதல் பதிகத் தலைப்புகள் பல்வேறாகக் குறிப்பிடப்படுகின்றன. பரிமேலழகர் உரையைத் தழுவி வெளியிடப்பட்ட உரைநூல்களில் உரையாசிரியர்கள் முதல் பதிகத்தை 'கடவுள் வாழ்த்து' என, குறிப்பிடுகின்றனர். பல்வேறுக் கோணங்களிலும் அணுகு முறைகளிலும் நோக்கும்போது, முதல் பதிகத்துக்கு இறை வழிபடுதல் எனும் தலைப்பே பொருத்தமாகும்; ஏற்புடையதுமாகும். இந்நூலில் 'கடவுள் உண்மை' என்னும்

இரண்டாவது பதிகத்தில் முதல் குறளின் விரிவான விளக்கம் அறிவியியல் அணுகுமுறையிலும் ஆன்மிகப் பார்வையிலும் அமைகிறது.

'வான்சிறப்பு' 'நீத்தார் பெருமை' 'அறன் வலியுறுத் தல்' மற்றும் 'வாழ்க்கைத் துணைநலம்' ஆகிய நான்கு பதிகங்களும் திருக்குறள் நூலின் மற்றும் 2,3,4 ஆகிய நான்கு பதிகங்களின் தலைப்புகளும் ஒத்தவை. உணவும் மருந்தும், மற்றும் நோயற்ற வாழ்வு ஆகிய முறையே 24 மற்றும் 27 ஆவது பதிகங்களில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளில் பொதுவாக வேறுபாடு இல்லை. 95 ஆவது பதிகமாகிய மருந்து என்னும் தலைப்பே கருப்பொருளாக அறியப்படு கிறது.

மழைநீர் அறுவடைக்காக வலியுறுத்தப்பட்ட அறிவுரைகள், அறிவிப்புகள், அறிவிக்கைகள், விளம்பரங் கள் மற்றும் செயல்விளக்ககங்கள் வெளியிடப்பட்ட காலத்திலும் இன்றும் மழைநீர் சேகரிப்புக்கு, வான் பொய்த்தமையால் வாய்ப்பு இல்லை. யாண்டும் வரட்சியே காட்சி. 'தண்ணீர், தண்ணீர்' என மக்கள் அலைகின்றனர். அல்லல்படுகின்றனர். உலக நடைமுறையில் ஆக்கமும், அழித்தலும் ஆகிய இருவேறு பணிகளை இருவர் நிறைவேற்றுவர். மழைப்பொழிவால் நாடு செழுமையாக வளமாகக் காணப்படும். மழைத்துளி வீழ்ச்சி இன்றி பசுமை மறையும். தேவையான அளவு மழை பொழியுமாயின் நிலம் வளம் பெறும். மாறாக அளவுக்கு மீறி, இடைவிடாது, தொடர்ந்து, நெடிது, மழை பொழியுமாயின் வெள்ளம் வீதிதோறும் தெருவெல்லாம் பெருகிப் பாயும். வீட்டினுள் புகும். கழனிகள் நீரில் மூழ்கும். பயிர்கள் பாழாகும். ஊரே

அழியும். மனித வாழ்க்கையே செயலற்று, உடைமை களையும் உயிர்களையும் இழந்து மக்கள் இன்னலுக்குட் படுவர். கூரியக் கத்தியால் கனியை அறுத்து, அருந்தி, சுவைக்க இயலும். அதே கருவி மாற்றானுடைய கழுத்தை அறுத்துக் கொல்லவும் பயன்படும். தாய் துன்புறுத்தினாலும் குழந்தை 'அம்மா' என அலறி அன்னையை நாடி அணைக்கிறது ஈன்றாளும் தன்னருமை மழலையை அன்பால் ஆதரவளிக்கிறாள். நன்மையை நல்குவதும், தீமையை விளைவிப்பதும், விலக்குவதும், மழையே. ஒரே கருவி இருவேறு வினைகளை நிறைவேற்றுகிறது. ஆக்கலும் அழித்தலும் ஆகிய இருவேறு பணிகளை நிறைவேற்ற வல்லவன் இறைவனே. வானியக்கத்திலும் இறைமையும் தாய்மையும் ஒளிருகிறது.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை (15)

வான்பொய்ப்பின் மக்கள் வாழ்வை அழிக்க வல்லதும், வளம் குன்றி துன்புறுபவர்களுக்குத் துணையாக அமைந்து ஆதரவளிப்பதும் மழையே. மழைப்பொழிவு, இறைமை மற்றும் தாய்மை ஆகிய முக்கூறுகளிலும் திருக்குறள் விளக்கம் மூலம் நூலாசிரியர் ஒருமைப்பாட்டை உணருகின்றார்.

'இல்லாள்' எனும் சொல் 'வாழ்க்கைத் துணைநலம்' பதிகத்தின் ஒரு குறட்பாவில் மட்டும் குறிப்பிடுகிறது.

மனைமாட்சி இல்லாள் கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித்து ஆயினும் இல் (52)

'இல்' எனும் உயிரும் மெய்யும் இணைந்த ஈரெழுத்துச்

சொல் இத்திருக்குறளில் மூன்று இடங்களிலும் கடைசி இரண்டு 'இல்' எனும் சொற்கள் 'இல்லை' என்ற எதிர் மறைப் பொருளிலும் குறிப்பிடப்படுகின்றன. ஆனால் இல்லாள்கண் இணைந்த 'இல்' இல்லத்தைச் சுட்டுகிறது. இல்லாள் என்றால் இல்லத்தை ஆள்பவள், 'இல்லத்தரசி' 'வாழ்க்கைத் துணை' மரபு முறையில் 'மனைவி' என பொருள்படும். இல்லான் இல்லானுக்கு இணையாக இயம்ப இயலாது. 'இல்லான்' என்றால் இல்லாதவன் என பொருள் படும். இல்லாளுக்கும் இல்லானுக்கும் இடையே அறியப் படும் வேறுபாட்டை தமிழறிஞர் ரெட்டியார் தெளிவாகத் தெரிவிக்கிறார்.

> ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச்
> சான்றோன் எனக் கேட்ட தாய் (69)

என்ற இத்திருக்குறளுக்குப் பேராசிரியருடைய விளக்கம் நெஞ்சத் தினுள் தஞ்சம் புகுகிறது. ஈரைந்து திங்கள் சுமந்து, பேறு நேரம் நெருங்கி, குழவி தாய் கருப்பையிலிருந்து வெளி யேறும்போது, ஏற்படும் உடலியல் நிகழ்வுகளை, உடற்கூறு மாறுபாடுகளை, தாய்சேய் நல மருத்துவர்போல் மூதறிஞர் விவரிக்கிறார். இத்துணை அறிவைத் தமிழறிஞர் எவ்வாறு ஈட்டி விளக்குகிறார் என்ற வினா எழுகின்றது. மகனைச் சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடன். கற்றவர்கள் குழுமிய அவையில் தன் மகன் முதன்மையாக சிறப்பாக விளங்கும் நிலைக்கேற்ப அவனை உருவாக்கி முன்னிலைப்படுத்தல் மகனுக்குத் தந்தை நல்கும் நன்மை என்று முப்பாலாசிரியர் மொழிகிறார். தந்தை செவிவழி மகனின் மாட்சிமையை அறியும்போது மகிழ்ந்து மனநிறை வெய்துகிறார். ஆனால் தாயின் எதிர்பார்ப்பு வேறு மது, மாது மற்றும் சூது

தொடர்புடைய தீயவைகளை மகன் தீண்டாது, ஒழுக்கத்தை உயிரென ஓம்பி, அறநெறி காவலனாக சான்றோனாக விளங்குகிறான் எனப் பிறர் தன்னை அணுகி, தன் மகனை பெருமையாகக் கூற அறிந்து அன்னை எய்தும் மகிழ்ச்சிக்கும் எல்லை இல்லை. கதை, கட்டுரை, கவிதை, காவியம், மற்றும் ஓவியம் முதலிய பலவகைப் படைப்புகளை இயற்றி, அவை வெளியிடப்பட்டு ஆக்கியோனை பாராட்டும் போது, ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாயைப் போல் படைப்பாளி தன் எதிர்பார்ப்பு நிறைவேறியதை எண்ணி மகிழ்ந்து மனநிறை வெய்துகின்றார். நூலாசிரியருக்கும் தாய்மை உணர்வு எதிரொளிக்கும் என்ற அரியதொரு கருத்தும் புதுமையாகப் புலப்படுகிறது.

'மக்கட்பேறு' பதிகத்தின் பத்துப் பாக்களுள் மூன்று மட்டுமே குறிப்பாக மகனுக்காகவும் எஞ்சிய ஏழும் மக்கள் என்னும் பொதுச் சொல்லில் அடங்கிய 'மகள்' மற்றும் 'மகன்' ஆகிய இருபாலாருக்கும் ஒதுக்கப்பட்டன. மக்கள் என்னும் சொல் ஆண் மற்றும் பெண் ஆகிய இரு பாலாரையும் குறிப்பிடும் என வலியுறுத்தப்படுகிறது. குழவிகள் மகனாகவோ, மகளாகவோ பிறக்கும் இயற்கை நிலைமைக்காகவும் கணவன் மனைவி இருபாலாராக இணைந்து, இயைந்து இணங்கி இல்லறத்தில் ஈடுபடும் வாழ்வியல் இன்றியமைக்காவும் மக்கள் என்னும் சொல்லே இருபாலாருக்கும் பொருந்தும். பெண்ணியத்தையும் பெண்ணின் பெருமையையும் பொய்யில் புலவர் போற்றுகிறார் என்பது மறுக்கப்பட இயலாத உண்மை என சிந்தனையாளர் முனைவர் சுப்புரெட்டியார் செப்புகின்றார்.

'வாழ்' என 'கருச்' சொல்லிலிருந்து 'வாழை'

என்னும் சொல் உருவாகிறது. வாழை பல்லாற்றானும் பலருக்கும் பயன்பட்டு, தன் மரபு அழியாமல் தொடர குலையைத் தள்ளி, கடமை நிறைவேறிய பின்பு வீழ்கிறது. மனிதன் மாய்ந்த பின்பும் உடலுறுப்புகள் பயன்படுத்தப் படுவதைப் போல் வீழ்ந்த வாழையும் பயன்படுகிறது. வாழையின் பயன்பாட்டுச் சிறப்பினையும் வாழ்வியலுடன் இம்மரம் எங்ஙனம் ஒப்பிடப்படுகிறது என்றும், வாழை வழங்கும் படிப்பினையும் திருக்குறள் மூலம் பேராசிரியர் வழங்கும் தெளிவான, விரிவான விளக்கம் வரவேற்கத் தக்கது.

அறத்துப்பாலில் 'இறைவழிபடுதல்' முதல் பதிகமாகவும் 'ஊழ்' இறுதி 38 ஆவது பதிகமாகவும் அமைகிறது. இறைமை, ஊழ்வினை ஆகிய இரண்டும் தனித்தன்மையும், வலிமையும் மிக்கது. ஆக்கமும் அழிவும், பீடும் கேடும், பிறப்பும் இறப்பும், வளமும் வறுமையும் வாழ்வும் தாழ்வும், வெற்றியும் தோல்வியும், ஊழின் ஆதிக்கத்தால் விளையும். அறிவு, அடக்கம் அமைதி, அவாவின்மை, இனிமை, ஈகை, உழைப்பு, ஊக்கம் எதிர்பார்ப்பு, ஏக்கம், ஒழுக்கம், பொறுமை, முயற்சி முதலிய அகவாழ்வின் கூறுகளில் ஊழின் ஊடுறுவல் இல்லை. மனவலிமையுடன் உள்ளம் உறுதியுடன் ஆர்வம் குன்றாமல் எழுச்சியுடன் முயன்று, வென்று, என்றும் ஏற்றத்தை எய்த இயலும்!.

அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும் (611)

ஒரு செயலை நிறைவேற்ற இயலாது என எண்ணும் எதிர்பார்ப்புக்கு மாறாக, மனச்சோர்வின்மை வேண்டும்.

இடைவிடாத முயற்சி செயலுக்குரிய சிறப்பை நல்கும்.

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றித்
தாழாது உஞற்று பவர் (620)

மனத்தளர்ச்சியும், சோர்வுமின்றி, இடைவிடாது தொடர்ந்து செயலில் ஈடுபடுவர் செயலுக்குத் தடையாக அமையும் தீவினையின் விளைவை தோல்வியுறச் செய்வர். மேற் காணும் இருதிருக்குறள்கள் மனித மேம்பாட்டுக்கு ஆதர வளித்தும், வாழ்வுக்கு ஆறுதலை வழங்கியும் ஊக்கு விக்கின்றன.

திருக்குறளை ஆழ்ந்து நுட்பமாகக் கற்கும்போது ஒரு சில கருத்துகளை முரண்பாடாகத் தென்படும் என ஒரு சிலர் கூறுவர். ஒரே கோணத்தில் ஒரு குறிப்பிட்ட நிலைமையில் திருக்குறளை நோக்கும்போது முரண்பாடு இயல்பாக எழுவதில் வியப்பன்று. முரண்பாட்டை நூலாசிரியர் சான்றுகளுடன் வன்மையாக மறுப்பது பாராட்டுதலுக்குரியது. திருக்குறள் நெறியை எக்காலத்தும் எவ்விடத்தும் எவராலும் வழிபட இயலும். இயலாமையால் தன்னலத் தாக்கத்தால் தூய்மை, வாய்மை, நேர்மை பொறுமை முதலிய பல்வகைப் பண்புகளை வழிபடத் தவறியவர்கள், திருக்குறள் நெறி இக்கால உலகியலுக்கு ஒவ்வாது எனப்புறக்கணித்து அஞ்சி ஒதுங்குவர். மனித வாழ்வு உய்ய, திருக்குறள் நெறியே ஏற்புடையது என்ற கொள்கைப் பற்றை உறுதியுடன் செயல்படுத்த விரும்புவரே, முரண்பாடான கருத்துகளிலும் மெய்யறிவை உணர்ந்து வாழ்க்கையில் உயர்வர்.

எண்களின் ஏற்றத்தை எளிமையாக விளக்கும்

நூலாசிரியர் தன் ஆசிரியர், அருள் தந்தை ஜெரோம் 'டி' சௌசாவை நினைவுகூர்கிறார். பல்லாண்டுகளுக்குப் பின்பு, அருள் தந்தை மாணாக்களைச் சந்தித்தபோது Are you not subbu with number 306? என வினவிய நிகழ்ச்சியை நம்மவர் மறக்கவில்லை. மேலும் அருள் தந்தை ஆசிரியப் பெருந்தகையின் நினைவாற்றல் வியக்கத்தக்கது. திரு. சுப்புரெட்டியார் கல்லூரி இளநிலை அறிவியல் பட்ட வகுப்பில் பயிலும்போது வரிசை எண் 306. இம்மூன்று இலக்கங்களைக் கூட்டினால் (3+0+6=9) 9 எனும் எண் உருவாகும், 3,6,9 ஆகிய மூன்று எண்களும் மூன்றால் வகுபடும். இடைவெளியும் 3. இம்மூன்று எண்களுக்குள் ஒற்றுமையை அறிகிறோம்.

3. முப்பாலைக் குறிப்பிடுகிறது. நூலாசிரியர் திருக்குறளில் ஈடுபாடுடையர். இந்நூல் முப்பாலுக்குத் தொடர்புடையது.

6. ஆறு. நீரோட்டம் முன்னோக்கிப் பாயும். பேராசிரியர் முற்போக்கு எண்ண முடையவர் ஆறு - நெறி. அன்னார் திருக்குறள் நெறியை இயன்றவரையில் வழி படுவர். கூட்டு எண் 9 'ஒன்பான் மணிகள்' தங்கத்தாலான ஏடுகளில் கலைமாமணியின் வாழ்க்கை வரலாறு ஒன்பான் மணிகளால் பொறிக்கப்படத்தக்கது. மேன்மையான வாழ்க்கை யைத் தொடருகிறார். வளரும் தலைமுறைக்கு எடுத்துக் காட்டாக இலங்குகிறார்.

சுழியம் மூன்றுக்கு ஆறுக்கும் இடையே அமைந்த இலக்கம். பேராசிரியரின் முழுமையான, செழுமையான, வரன்முறைக்குட்பட்ட வாழ்வுக்கு ஒரு எளிய குறியீடு. வட்டவடிவமான சுழியத்துக்கு எல்லை உண்டு. ரெட்டியார்

தனக்கென நெறியை வகுத்து அவ்வரன்முறையிலிருந்து விலகாமல் வாழ்வாங்கு வாழ்கிறார். திண்ணமான எண்ணமுடைய கொள்கைப் பற்றாளர்.

பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சா தவர் (723)

போர்க்களத்தில் அஞ்சாமல் எளிமையாக இறப்பவர் பலர். கற்றோர் அவையில் அச்சமின்றி தயக்கமின்றி கருத்துகளை வெளியிட வல்லவர் சிறப்பாக சிலரே. விழுமிய சிலருள் முதன்மையானர் ஈரோடு ஈன்ற இருபதாம் நூற்றாண்டு புரட்சியாளர் பெரியார் ஈ.வே.ரா என்றால் மிகையாகாது. திருக்குறளை ஊன்றிக்கற்றவர்கள் அனைவரும் தன்மானத்துடன் வாழ இயலும் என உரைத்தவரும் சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட வருக்காகவும் பிற்படுத்தப் பட்டவருக்காகவும் குறிப்பாக பார்ப்பாரல்லாத மக்களுக்காவும் போராடியவரும், பகுத்தறிவுப் பகலவன் எனப் பாரெங்கும் பாராட்டப்பட்டவரும் நம் சிந்தையை ஈர்த்த திராவிடத் தந்தை பெரியார் ஈ.வேரா. அவர்களை மேற்காணும் திருக்குறளுக்கு எடுத்துக்காட்டாக, உவமையாக நூலாசிரியர் குறிப்பிடுகிறார். அச்சமின்றி, தடையின்றி, தயக்கமின்றி துணிவுடன் பொதுமேடைகளில் தம் சிந்தனையில் விளைந்த கருத்துகளை தெரிவிக்கும் தனித்தன்மைக்கு உரியவர் பெரியார் ஒருவரே. இறையருளில் ஈடுபட்டு, ஆன்மிக நெறியில் வாழும் பொதுமறைச் செம்மல் சுப்புரெட்டியார் கடவுள் எனக் கருதப்படுவது உயர் பண்பே உருவம் அன்று என உரைத்த, புதுமையான புரட்சிக் கருத்துகளை புகன்ற பெரியாரின்மீது மதிப்பும் மரியாதையுமுடையவராக நூலாசிரியர் விளங்குவதால் பேராசிரியரின் பெருந்தகை

மையும் பெருந்தன்மையும், பாராட்டத்தக்கன. மூதறிஞர் ஆயிரத்தில் ஒருவர் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர்.

'திருவள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்' தமிழ் கூறும் நல்லுலகத்துக்குப் புதுவரவு. எம் போன்ற எளி யோருக்கு உரிய நூல். பேராசிரியரின் எழுத்தாற்றல் ஆய்வாளர் களுக்கும், திருக்குறள் ஆர்வலர்களுக்கும் பயனை நல்குவ தாகுக. 'புத்தன்' என்றால் அமைதி, 'இயேசு' என்றால் அன்பு, 'காந்தி' என்றால் எளிமை மற்றும் உண்மை பேரறிஞர் அண்ணா என்றால் கடமை, கண்ணியம் மற்றும் கட்டுப்பாடு முதலிய நிரலுக்கேற்ப, பேராசிரியர் முனைவர் சுப்புரெட்டியார் என்றால் சிந்தனை ஊற்று என இந்நூல் மெய்ப்பிக்கிறது. தமிழ் மக்கள் இந்நூலை வரவேற்பர்.

என்கெழுதகை நண்பர் பெரியவர், முனைவர் மூதறிஞர் சுப்பு ரெட்டியார் நோயின்றி நூறாண்டுகள், உடல் நலத்துடனும் மனவளத்துடனும் வாழ்ந்து தமிழ்ப்பணியை தொடர வாழ்த்துக்கள்.

அன்னாருடைய அரிய நூலுக்கு அணிந்துரை வரைய வாய்ப்பை வழங்கிய மூதறிஞருக்கு என் நன்றி கலந்த பாராட்டுக்களை நவின்று மகிழ்கிறேன்.

குறளகம்
அறிஞர் அண்ணாநகர்
சென்னை - 40
25.3.2004

இவண்
அன்புடன்
பாஸ்கரன்.

என் அமெரிக்கப் பயணம்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

புதுமை பூத்துக் குலுங்கும் அமெரிக்க நாடு சென்று திரும்பிய நிலையில், தன் கருத்தையும், கண்ணையும் கவர்ந்த அமெரிக்கக் காட்சிகளை அருவி நடையில் அழகு ததும்ப பேராசிரியர் இந்நூலில் படம் படித்துக் காட்டியுள்ளார். திருக்கோயிலுக்குள் நுழைந்ததுமே பாசுரங்களும், தத்துவக்கோட்பாடுகளும் பேராசிரியர் மனதில் பொங்கி வழிந்ததை கட்டுரைகள் படம் பிடிக்கின்றன.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939685-9-8

eBOOK ~ *மின் நூல்*




அணிந்துரை

என் அமெரிக்கப்பயணம்
2004

வழங்கியோர்:

நா மகாலிங்கம்







நா. மகாலிங்கம்,
பி.எஸ்.சி, எப்.ஐ.இ.
தலைவர்
சக்தி நிறுவனங்கள்

74, மவுண்ட் ரோடு,
கிண்டி,
சென்னை - 600 032.



பணியே வழிபாடு

முதுபெரும் புலவராகிய பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்களை நான் பல்லாண்டுகளாக அறிவேன். தமது முதிர்ந்த தளர்ந்த அகவையிலும் அறிவுக்கருவூலங்களைத் தொடர்ந்து எழுதித் தமிழகத்துக்கு வழங்கி வருவதை நான் பெரிதும் பாராட்டுகிறேன். “பூசித்தும் வாசித்தும் போக்கினேன்போது” - என்னும் ஆழ்வார் திருமொழிக்கு அணிகலனாக திரு. ரெட்டியாரின் அறிவு வாழ்க்கை அமைந்துள்ளது. பேராசிரியர்களுக்குப் பேராசிரியராகிய திரு. சுப்பு ரெட்டியார் அருந்தமிழ்ப் புலமை, அறிவியல் நுணுக்கம், ஆராய்ச்சி வன்மை எனப் பல்வேறு தகுதிகளைக் கொண்டிருப்பதால், அரிய பெரிய கலைச் செல்வங்களைத் தமிழுக்கு வழங்க முடிகிறது.

திருப்பதியில் திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை தொடங்கி இன்றுவரை அத்துறை இனிது நடைபெற்று வருவதற்கு அடிப்படை கோலியவர் திரு. ரெட்டியார் அவர்களேயாவார். ‘எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே எந்தைநினது அருட்புகழை இயம்பியிடல் வேண்டும்’ என்று வள்ளலார் கருதியபடி புதுமை பூத்துக் குலுங்கும் அமெரிக்க நாடு சென்று திரும்பிய நிலையில், தன் கண்ணையும், கருத்தையும் கவர்ந்த அமெரிக்கக் காட்சிகளை அருவி நடையில் அழகு ததும்ப ஆசிரியர் இந்நூலில் எழுதியுள்ளார்.. அமெரிக்க நாட்டு வரலாற்றுக் குறிப்பும், மாநிலங்களின் பட்டியலும் காட்டியதோடு அமெரிக்க நாட்டில் உள்ள, தமிழ் மக்கள் கட்டிய அமெரிக்கத் திருக்கோயில்கள், காட்சிச் சாலைகள், பூங்காக்கள், நயாகரா அருவி முதலியவற்றையும் இந்நூலில் விவரித்துள்ளார். திருக்கோயிலுக்குள் நுழைந்ததுமே பாசுரங்களும், தத்துவக் கோட்பாடுகளும் ஆசிரியர் மனத்தில் பொங்கி வழிந்ததையும் கட்டுரையில் காணலாம்.

நாளுக்குநாள் மாற்றமும் முன்னேற்றமும் கொண்டு, உலகப் பொருளாதாரத்தின் ஊற்றுக்கண்ணாக அமெரிக்க நாடு விளங்குகிறது.

பலமுறை சென்று வந்தாலும், செல்லும் ஒவ்வொரு முறையும் அந்த நாட்டில் நவ நவமாய் மலரும் மாறுதல்களைக் கண்டு எவரும் வியப்படைவார்கள்.

நிறைவாகத் திரு. சுப்பு ரெட்டியார், "என் மகன் நிரந்தரமாகவே வந்து என்னைத் தங்குமாறு வற்புறுத்தினான். மிகவும் குளிர்ப்பகுதியாக இருக்கும் நியுயார்க் மாநிலத்தை விட்டு அரிசோனா மாநிலத்துக்குக் குடியேறிவிட்டான். அங்குத் தமிழகச் சூழ்நிலை (வெப்பம்) இருக்கும் என்றும், மருத்துவ வசதி அமெரிக்காவில் இருப்பதுபோலத் தமிழகத்தில் இல்லையென்றும், 19 எண்ணுள்ள தொலைபேசியை இயக்கினால் நோயாளர்க்குரிய பேருந்து உடனே வந்து அனைத்தையும் கவனிக்கும் என்றும் கூறினான். 'முறைவழிப்படும் ஆருயிரை - உயிரீரும் வாளை' - மருத்துவத்தால் காப்பாற்ற முடியுமா ? என்ற வினா எனக்கு எழுகின்றது. ஏதோ அவசரத்துக்குத் தமிழகத்தில் நான் வாழும் சென்னை அண்ணா நகரில் கிடைக்கும் மருத்துவ வசதி போதும் என்று எனக்குத் தோன்றுகின்றது."

இளமை முதல் இன்று வரை (அகவை 88-க்குப் புகும் நிலை) சுறுசுறுப்பாகப் படிப்பதும், எழுதுவதும், ஆர்வத்துடன் இருப்பவர்களுக்குக் கல்வி புகட்டுவதும், ஆய்வுக்கு வழிகாட்டுவதும் - இத்தனைக்கும் மேலாக "பணியே பரமன் வழிபாடு" என்றும், அது எனக்குப் "பண்டே பரமன் பணித்த பணிவகையே" (திருவாய் 10.4:9) என்று இடைவிடாது எண்ணியிருக்கும் எனக்கு அமெரிக்க வாழ்வு எப்படிப் பொருந்தும் ? "புத்தம் புதிய நூல்கள்தாம் தமிழ்மொழிப் பன்முக வளர்ச்சிக்கு இன்றியமையாதவை என்பதும், அதுவே என் பேச்சாகவும் மூச்சாகவும் இருக்க வேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடித்துக்கொண்டு வாழும் எனக்குத் தமிழக வாழ்வுதான் மிகவும் பொருத்தம் என்பதும் வெள்ளிடைமலை" என்று நூலை முடித்துள்ளார். அவருடைய முடிவு நல்ல முடிவாகும்.

பயனுடைய ஒரு பயண நூலைப் பேராசிரியர் எழுதியதைப் பாராட்டிப் போற்றுகிறேன். அல்லும் பகலும் தமிழ்த் தொண்டாற்றும் பெரும் பேராசிரியர் இன்னம் பல்லாண்டு வாழ்ந்து பணிகளைத் தொடரவேண்டும் என்று அருட்பெருஞ்சோதி ஆண்டவனை வேண்டுகிறேன்.

அன்புள்ள

நா. மகாலிங்கம்

காஞ்சி பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரிய சுவாமிகள்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

இந்நூல் அனைத்து வைணவர்களாலும்,
மற்றும் தமிழர்களாலும் படித்துப் படித்து,
சுவைத்து சுவைத்து இன்புறத்தக்க
வண்ணம் இயற்றப்பெற்றுள்ளது.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939430-2-1

eBOOK ~ *மின் நூல்*





அணிந்துரை

காஞ்சி பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரிய சுவாமிகள்


2004

வழங்கியோர்:

Dr வி.கே.என்.எஸ். இராகவன்

தலைவர் ~ வைணவத்துறை
சென்னைப் பல்கலைக் கழகம்







Dr. V.K.N.S. Raghavan
Professor and Head
Dept. of Vaishanavism

University of Madras
Chepauk, Triplicane,
Chennai - 600 005.

அணிந்துரை

"தங்கக்காப்பு அண்ணா" என்று புகழ்மிக்க ஸ்ரீ உ.வே. காஞ்சி பி.ப அண்ணங்கராசாரிய சுவாமிகள் எனும் இனிய நூல் பேராசிரியர், டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்களால் மிகநேர்த்தியாகவும், திறம்படவும் இயற்றப்பட்டுள்ளது. ஆதலின் இதற்கு அணிந்துரை என்பதே இன்றியமையாததல்ல. இருப்பினும் மேன்மைமிகு பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, அடியேன் சிறிய ஞானத்தன் சில மேற்கோள்களைத் தெரிவித்து அமைய விழைகிறேன்.

தென்னாசார்ய ஸம்ப்ரதாய ஜோதி காஞ்சி பி.ப. அண்ணா ஸ்வாமி... ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தத்திற்கு அரும்பாடுபட்டவர், உபந்யாஸம் செய்கையில்... ச்ருதி, ஸ்ம்ருதி, இதிகாசம், புராணங்கள், ஆழ்வார் - ஆசார்யர் ஸ்ரீ ஸூக்திகள் எல்லாவற்றையும் கடல்மடை திறந்தாற்போல் தட்டுத்தடங்கலின்றி மேற்கோள் காட்டுவார்.

"ஆணல்லன், பெண்ணல்லன்", (திருவாய் 2.5:10) விளக்கத்தில் - "...பரப்பிரமமம் சூனியப்பொருள் என்று சொல்வது அழ்வாருக்கு உடன்பாடாகில் சொல்லிலக்கணத்திற்குப் பொருத்தமாக அவர் அருளிச் செய்திருப்பார். அங்ஙனமின்றி ஆண்பாலுக்குரிய 'அன்'

விகுதியையிட்டு அருளிச் செய்திருக்கையாலே எம்பெருமான் சாதாரணபுருஷன் அல்லன, புருஷோத்தமன் என்று தெரிவிக்கப்பட்ட தாகாதோ?' என்று அருளிச்செய்தார் ஒரே சாதியிலுள்ள மற்றைய பொருள்கள் இவற்றினின்றும் விலக்கிக் காட்டியது உளங்கொள்ளத் தக்கதாகும்.

ஸ்ரீ உபவே. காஞ்சி மஹாவித்துவான் பி.ப. அண்ணா ஸ்வாமிகள்.

''அத்யாத்மக்ரந்தநிர்மாணம், அந்யேஷாம் ச அவபோதநம் அர்ச்சாவதார - ஸேவாச...''

என்ற சுலோகத்திற்கிணங்க ஸ்ரீவைஷ்ணவ ஆன்மிக நெறிப் பாதுகாவலராக விளங்கியவர் என்பதை, பேராசிரியர் மிக உன்னதமான சான்றுகளுடன் விளக்கிக்காட்டியுள்ள பாங்கு அனைத்துத் தமிழ் வல்லுநர்களாலும் பாராட்டத் தக்கதேயாம்.

ஆகவே இந்நூல் அனைத்து வைணவர்களாலும், மற்றும் தமிழர்களாலும் படித்துப்படித்து, சுவைத்துச் சுவைத்து இன்புறத்தக்கது என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை. மற்றும் அனைத்து நூலகங்களையும் அலங்கரிக்கத்தக்கது இந்நூல் என்பது மிகையாகாது.

சென்னை - 5
31.10.2004.

- ஸ்ரீவைஷ்ணவதாஸன்
வ.கி.ஸ.ந. இராகவன்
(VKNS. Raghavan)

பேராசிரியரின்

தலைசிறந்த படைப்புகள்

தொகுப்பாளர்
பேராசிரியர் **இராசு மைனர்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

பேராசிரியர் 90 ஆண்டுகள் வாழ்ந்து 135 நூல்களை எழுதி தமிழுக்காகத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்து ஆய்வுப் பார்வையில் ஆழங்கால்பட்டவர்.

இவரது படைப்புகளில் மிகச்சிறந்த நான்கு நூல்களின் (நாலாயிரதிவ்யப் பிரபந்தத்தில் நம்மாழ்வார் தத்துவம், தமிழ் பயிற்றும் முறை, கல்வி உளவியல் கோட்பாடுகள், வைணவச்செல்வம்) தொகுப்பு ‘தலை சிறந்த படைப்புகள்’ எனும் இந்நூல்.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939502-9-6

eBOOK ~ *மின் நூல்*



அணிந்துரை

பேராசிரியரின்


தலைசிறந்த படைப்புகள்

நூற்றாண்டு விழா வெளியீடு [2015 – 2016]

வழங்கியோர்:

பேரா. கா. மீர்முஸ்தாபா உசேன்
துணை வேந்தர்
டாக்டர் எம்.ஜி.ஆர்
கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
பல்கலைக்கழகம்
சென்னை - 600 095







அணிந்துரை

இரவெல்லாம் பனித்தென்றல் அரவணைப்பில் திளைத்த இலைகளும், மலர்களும் அதிகாலையில் உதிர்க்கும் ஆனந்த கண்ணீரே பனித்துளிகளாகும். இதனையொத்த கவித்திறனையும், கருத்தியலையும் வெளிக்கொணர்ந்து போற்றிட்ட தலை சிறந்த பல்முனைத் தமிழ் ஆர்வலர் பேரா. ந. சுப்புரெட்டியார் அவர்களின் படைப்புகள் அரிதிலும் அரியவையாகும்.

தமிழன்னையை அலங்கரிக்கும் அகநானூறு, புறத்திற்கு புறநானூறு, எட்டுத்தொகை அவள் ஒட்டியாணம், இத்துனை நகைதனை அணிந்திருந்தும் சிரம் தாழ்ந்தே வீற்றிருந்த அவளது வதனத்தில் புன்னகை இல்லை, பேரா. சுப்புரெட்டியாரின் தமிழ்க்கடல் அலை அவளது மேனியைத் தொடும் வரை.

பேராசிரியர் ந. சுப்புரெட்டியர் அவர்கள் 90 ஆண்டு வாழ்ந்து, 135 நூல்களைத் தமிழுலகத்திற்கு வழங்கியிருப்பதுவே ஒரு சாதனையாகும். 60 வயதில், பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் 100 நூல்களை அவர் எழுதியிருக்கிறார் என்பது, கின்னஸ் சாதனை எனப் போற்றுதலுக்குரியதாக அமைகிறது.

சமயம், தத்துவம், கல்வியியல், உளவியல், அறிவியல், இலக்கியத்திறன், பயண இலக்கியம் எனப் பல்வேறு துறைகளில் நூல்களைப் படைத்திருப்பதால், பேராசிரியர் தொடாத துறையெதுவும் இல்லை என்பது தெளிவாகிறது.

1949ல் தமது 33வது வயதில், "கவிஞன் உள்ளம்" எனும் முதலாவது நூலை வெளியிட்ட பேராசிரியர் ரெட்டியார், 88 வயது வரை எழுத்துப் பணியில் ஆழங்கால்பட்டு நூல்களை வடித்திருப்பது இமாலய சாதனை என்பதில் ஐயமில்லை.

அன்னாரின் நூல்களில், தலைசிறந்த நான்கு படைப்புகளைத் தனித்தொகுதியாக வெளியிடுவது பாராட்டுக்குரியது. இதற்காக, பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் நூற்றாண்டு விழாக் குழுவினரை வெகுவாகப் பாராட்டுகிறேன்.

"நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வார் தத்துவம்" [*Religion and Philosophy of Nalayira Divya Prabhandham with special reference to Nammalvar*] - ஆழ்வார்களின் காலம் பற்றியும், அவர்கள் அருளிய பாசுரங்கள் புலப்படுத்தி நிற்கும் சமய, தத்துவக் கருத்துகள் பற்றியும் இந்நூல் தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கிறது. நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தின் பல்வேறு கூறுகளை, 14 அத்தியாங்களில், ஆசிரியர் விரிவாக ஆராய்ந்திருப்பது பாராட்டத்தக்கது. நூலுக்குப் பெருமை சேர்த்து, மணிமகுடமாகவும் இந்தப் பகுதி அமைகிறது.

ஆழ்வார்கள் காலத்திற்கு முன்பு பேசப்படாத ஒன்று சரணாகதி தத்துவம். இது, நாலாயிரத்தில் சிறப்பிடம் பெற்றிருக்கும் பாங்கினை ரெட்டியார் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

இந்த ஆய்வுக்காக அவர் பயன்படுத்திய ஆங்கில, தமிழ், வடமொழி சுவடிகள் ஆகியவற்றின் பட்டியலைப் பார்க்கும்போது பிரமிப்பு ஏற்படுகிறது. அடிக்குறிப்புகளைக் காணும்போது, மேலும் பிரமிப்பு உண்டாகின்றது.

சுருங்கக்கூறின், பேராசிரியரின் கடும் உழைப்புக்கு இந்த நூல் சான்றாக அமைகிறது என்று தயக்கமின்றி முடிவுசெய்யலாம்.

"தமிழ் பயிற்றும் முறை" எனும் நூல், இன்றுவரை கல்வியியல் துறையில் ஒளிரும் நூலாகும். பேராசிரியரின் புகழ்பாடும் நூல் இது.

"உளவியல் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு, மேற்புல அறிஞர்கள் கண்டறிந்த பயிற்றுரைகளை மொழியின் மரபு கெடாது அ(எ)ந்தந்த அளவில் நந்தமிழ் மொழியைக் கற்பிப்பதில் மேற்கொள்ளலாம் என்பதை ஓரளவு ஆராய்ந்துள்ளேன்" என்று இந்நூலின் நோக்கத்தை அவர் தெளிவாகக் கோடிட்டுக் காட்டுகிறார்.

தமிழ் மொழியைப் பயிற்றும் நோக்கங்கள் எனும் அத்தியாயத்தில், இலக்கிய நயங்கண்டு இன்புறல், கற்பனையாற்றலையும், முருகுணர்ச்சியையும் வளர்த்தல், வாழ்க்கையை வளப்படுத்தி நீதிகளைப் புகட்டுதல் ஆகியவற்றை ஆசிரியர் விரிவாக, உள்ளத்தில் பதியுமாறு கூறிச் செல்கிறார்.

பயிற்று முறைகள், பயிற்றலின் உத்திகள் ஆகியவற்றை அனுபவத்தின் வழி நின்று பேராசிரியர் எடுத்துரைக்கிறார். இலக்கியம், இலக்கணம் பற்றியும், அவற்றை மாணவர்க்குப் பயிற்றுவிக்கும் முறை பற்றியும் விரித்தோதுகிறார்.

முத்தாய்ப்பாக, தாய்மொழி, ஆசிரியனின் இலக்கணம், அவனது கல்வியறிவு - மொழியறிவு - மொழிப்பற்று பற்றிய தமது கருத்துகளை நடுநிலை நின்று பேராசிரியர் ரெட்டியார் அலசி ஆராய்ந்திருக்கிறார். பேராசிரியரின் தலைசிறந்த படைப்புகளில் தமிழ் பயிற்றும் முறை தனியிடம் பெறுகிறது என்று கூறலாம்.

"கற்பிக்கும் ஆசிரியர்கட்கும், குழந்தைக் கல்வியில் அக்கறை கொள்ளும் பெற்றோர்கட்கும் பொதுமக்கட்கும் ஒரு வழிகாட்டியாக அமையட்டும் என்றே கல்வி உளவியல் கோட்பாடுகள் எனும் நூலை எழுதியிருப்பதாக முன்னுரையில் பேராசிரியர் ரெட்டியார் கூறுகிறார். இந்நூலானது, இந்தக் குறிக்கோளைச் சீரிய முறையில் நிறைவேற்றியிருப்பதாக அறுதியிட்டுக் கூறலாம்.

பதின்மூன்று தலைப்புகளை உள்ளடக்கிய இந்நூலில், கல்வி உளவியல் குறித்து ஆசிரியர் விரிவாகப் பேசுகிறார். கற்றல், கற்றலில் அடங்கிய மூலக்கூறுகள் எனும் இரு அத்தியாயங்களும், கற்றலின் அடிப்படை இயல்புகளைத் தெள்ளத் தெளிவாக விளக்குகின்றன. மதிப்பீடும் சோதனையும் எனும் தலைப்பில், கட்டுரைச் சோதனைகள், புதிய முறைச் சோதனைகள், சரி-தவறு சோதனைகள், பல்விடையிற் பொருத்துச் சோதனைகள், நிரப்பும் சோதனைகள், இணைக்கும் சோதனைகள், இனச் சோதனைகள், ஒப்பிட்டுக் காட்டும் சோதனைகள் எனப் பல்வேறு சோதனைகள் குறித்து, படிப்போர் உள்ளத்தில் நன்கு பதியுமாறு விவரித்திருப்பது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

வைணவச் செல்வம் (இரு தொகுதிகள்) நூலானது, தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்திய திட்டப்பணியின் நூல் வடிவமாகும். வைணவத்தில் ஆழங்கால்பட்டவர் எனும் நிலையில் அவர்தம் உழைப்பின் மிகுதியை அறிந்துகொள்ள இந்நூல் பெரிதும் பயன்படுகிறது.

இந்நூலில், வரலாற்று முறையில் வைணவம் எனும் தலைப்பில், மானிட வாழ்வில் சமயம் பின்னிக் கிடக்கும் பாங்கினை, தமக்கே உரிய வகையில் பேராசிரியர் எடுத்தியம்புகிறார். வைணவத்தின் சிறப்பியல்புகள், தத்துவங்கள் ஆகியவற்றை எளிய முறையில் விளக்கியிருக்கிறார். கோயில்களில் தமிழை வளர்த்து வருவது வைணவத்தின் தனிச்சிறப்பு என்கிறார் ரெட்டியார்.

தமிழ் மண்ணில் வைணவத்தை வளர்த்துப் பெருமை கொண்ட ஆழ்வார்கள் - ஆசிரியர்கள் குறித்தும் இந்நூலில் பேராசிரியர் ஆராய்ந்திருக்கிறார். சுருங்கக்கூறின், வைணவம் பற்றிய ஒரு நூலாக, வைணவச் செல்வம் அமைகிறது எனலாம். இந்நூல், அனைவராலும் போற்றப்படுவது உறுதி.

நூற்றாண்டு விழா காணும் பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியாரின் தலைசிறந்த நூல்களின் தொகுதிக்கு அணிந்துரை அளிக்கும் வாய்ப்பு வழங்கியமைக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

செம்மொழியாம் தமிழ்மொழியெனும் கட்டிலில் தாலாற்று பெற்ற பேறிஞர் பேரா.சுப்புரெட்டியார் - விண்ணளவு பரந்திட்ட அறிவுக்கூர்மை பண்பாட்டு பல்துறையில் புகழீட்டி இப்பார்தனில் தன் சொல்தனை நிலைத்திட பாடுபட்ட பண்பாளர், தமிழன்னையின் தவப் புதல்வர் முக்காலமும் நிலைத்திட வாழ்த்துகிறேன் வளமார! போற்றுகிறேன் புகழ்மாலை!!

பேரா. கா. மீர்முஸ்தாபா உசேன்
துணை வேந்தர்
டாக்டர் எம்.ஜி.ஆர்
கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
பல்கலைக்கழகம்
சென்னை - 600 095

சிறப்புப்பாயிர

பாமாலைகள்

தொகுப்பாளர்
நா பாஸ்கரன்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

பேராசிரியரின் நூலுக்கு வழங்கப்பெற்ற 14 பாயிரங்களையும் தெரிவு செய்து, அவற்றை தொகுத்து " சிறப்புப் பாயிரப் பாமாலைகள் " என்ற இந்நூல் ஓர் அரிய பயனுள்ள தொகுப்பு. ஒவ்வொரு பாமாலையும், பேராசிரியரின் குணநலன் குறித்தும், குறிப்பிட்ட நூல் குறித்தும் நடுநிலைமையுடன் நின்று, கருத்துக்களைத் தெரிவிக்கும் மதிப்பீடாகவே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939561-0-6

eBOOK ~ *மின் நூல்*





அணிந்துரை


சிறப்புப்பாயிர பாமாலைகள்

நூற்றாண்டு விழா வெளியீடு [2015 – 2016]

வழங்கியோர்:

முனைவர் ந கடிகாசலம்
தமிழ்ப் பேராசிரியர் (ப.நி.)
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை







அணிந்துரை

முனைவர் ந கடிகாசலம்
தமிழ்ப் பேராசிரியர்(ப.நி.)
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை

நூற்றாண்டு விழா காணும் பேராசிரியர் ந சுப்பு ரெட்டியார் அவர்களின் தலைமாணாக்கன் என்பது நான் பெற்ற பேறு.

அவரிடம் தமிழ் இலக்கியம் பயின்று, எம்.ஏ., பிஎச்.டி. பட்டங்களைப் பெற்றது என் வாழ்வில் மறக்க முடியாதது.

“பிள்ளைப்பெருமாள் அய்யங்காரின் அஷ்ட பிரபந்தம் நூலை ஆய்வு செய்.” என்று அவர் எனக்கிட்ட ஆணையை மறுப்பு ஏதும் கூறாமல், நிறைவேற்றியதில், என்னை விட, பேராசிரியருக்குத்தான் எல்லையற்ற மகிழ்ச்சி.

1983 ஜுன் திங்களில், சீன வானொலியில் பணி புரிய வாய்ப்பு உருவானபோது, “வெளிநாட்டவர் உன் புலமைக்கு வரவேற்பளிப்பது எனக்கும் பெருமையாக இருக்கிறது” என்று வாயார வாழ்த்தியவர் என் பேராசிரியப் பெருந்தகை.

தமிழ் இலக்கியம் மட்டும் போதாது, மொழியியல், வடமொழி, இந்தி ஆகியவற்றையும் கற்றுத் தேர்ந்திட வேண்டும் என்று அறிவுரை வழங்கி, என்னை ஆற்றுப்படுத்தியவர் பேராசிரியர் ந சுப்பு ரெட்டியார்.

1971 முதல், பேராசிரியரின் குடும்பத்தில் ஒருவனாக இருந்து வரும் எனக்கு, அன்னாரின் நூற்றாண்டு விழா வெளியீடான ***“சிறப்புப் பாயிரப் பாமாலைகள்”*** எனும் நூலுக்கு அணிந்துரை வழங்கும் வாய்ப்பு கிட்டியிருப்பது தமிழ்க் கடவுளின் அருள் என்றே கருதுகிறேன்.

பேராசிரியர் அவர்கள், தமிழ், இலக்கியம், அறிவியல், உளவியல், கல்வியியல், சமயம், தத்துவம் என பல்வேறு துறைகளிலும் புலமை மிக்கவர்: செய்வன திருந்தச் செய்திடல் வேணடும் என்பதில் உறுதி கொண்டவர்.

அன்னாரது நூலுக்கு வழங்கப்பெற்ற 14 பாயிரங்களையும் தெரிவு செய்து, ***“சிறப்புப் பாயிரப் பாமாலைகள்”*** என்று நூலாக்கம் செய்திருப்பது, பாராட்டுக்குரியது.

ஓவ்வொரு பாமாலையும், பேராசிரியரின் குணநலன் குறித்தும், குறிப்பிட்ட நூல் குறித்தும் நடுநிலைமையுடன் நின்று, கருத்துக்களைத் தெரிவிக்கும் மதிப்பீடாகவே கருத இடமுண்டு.

நூலின் மதிப்புரையாக, விமரிசனமாக, இந்தப் பாமாலைகள் விளங்குவதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பாயிரம் படைத்தருளிய அறிஞர் பெருமக்கள் போற்றுதலுக்குரியவர்கள்.

பேராசிரியருடன் பழகியோர் அனைவருக்கும், பின்வரும் பாயிர வரிகளைப் படித்தவுடன், அன்னாரின் திருவுருவம் மனக்கண்ணில் நிழலாடுவது உறுதி.

திருநீறு ஒளிரும் நெற்றி
தீந்தமிழ் மணக்கும் செவ்வாய்
திருமால் பரவும் நெஞ்சம்
சேர்ந்தாரைத் தாங்கும் அன்பு
உருவாகத் தோன்றும் செம்மல்
உயர் சுப்புரெட்டி யாராம் (58)

த. பெரியாண்டவன் அவர்களின் பதிவு இது.

பேராசிரியர்க்கு எளிமையும், உழைப்பும் இரு கண்கள். எளிமை என்பது அவருடன் ஒட்டிப் பிறந்த ஒன்று. உழைப்பு என்பது, அவரால் பெருமை பெற்ற ஒன்று.

சுப்புரெட்டி யாரென்று பெயர் சொன்னாலே
சுறுசுறுப்பும் பேருழைப்பும் துள்ளு மாமே ! (71)

என்கிறார் அர. சிங்காரவடிவேலன்.

பேராசிரியரின் பெயரை உச்சரித்தாலே தமிழ் மணக்கும் என்கிறார் சௌந்தரா கைலாசம். ஆணவம் என்பதே இல்லாமல் அமைதி காத்த தமிழறிஞர் என்று மேலும் புகழாரம் சூட்டுகிறார்.

சுப்புரெட்டி யாரென்று சொல்லும் போதே
சுகமான சுவைமிக்க தமிழ் மணக்கும் (26)

ஆணவமே இல்லாமல் அமைதி சார்ந்த
அன்பொளிரும் நல்லகத்தை உடைமை பெற்றார் (29)

என்பது உண்மை: வெறும் புகழ்ச்சியில்லை.

பேராசிரியரின் படைப்புத் திறன் பலராலும் போற்றப்பெற்றது. எளிய நடை இவருக்குச் சொந்தம். வாசகனுக்குப் போய்ச் சேர்வது என்பது படைத்தவனுக்கு இன்பம் தருவதாகும் என்பது அவர்தம் எண்ணம். எனவேதான்,

புலமையை எளிமை யாக்கிச்
சுகமுற வரையும் சுப்பு
ரெட்டியார் (76)

என்று பாராட்டுகிறார் ம.வே.பசுபதி.

நூலைப் படிப்போர்க்கு விருந்து ஊட்டுவது பேராசிரியரின் தனிச்சிறப்பாக அமைகின்றது. இதை,

சொல்லுக்கு நல்லமுதச் சுவையை ஏற்றுச்
சுவைப்பார்க்கு விருந்தூட்டும் வேளாண் செல்வர் (84)

என, அரங்க. சீனிவாசன் வெளிப்படுத்தியிருக்கிறார்.

பேராசிரியரின் தமிழ்த் தொண்டு பாராட்டுக்குரியது என்பது, ஏற்புடையதே ! இதை,

அருந்தமிழ்ப் புலமை மிக்கார்
ஆங்கில மொழியில் வல்லார்
இருமொழிக் கண்ணும் நூல்கள்
இயற்றிடும் ஏற்றம் உள்ளார் (5)

என்று பதிவு செய்கிறார் க. பெருமாள்.

நற்றமிழ்த் துறைகள் என்னும்
கடல்களைக் கடந்த நல்லார் (46)

என்றும்,

தமிழ்ப்பயிர்க் கருளும் கங்கைப்
பாய்ச்சலாம் இவரின் தொண்டு ! (50)

என்றும், மதிப்பீடு செய்கிறார் மு. இராதாக்கிருஷ்ணன்.

ஆயிரத்தில் ஒருவராய்த் தோன்றினார் (88)

என வீர. அரங்கனாரும்,

இப்படியோர் தமிழாசான் கிடைத்தது செந்
தமிழ்த்தாயின் இன்பப் பேறே (40)

என நாரா. நாச்சியப்பனும் பேராசிரியர்க்கு புகழ்மாலை சூட்டியிருப்பது அறியத்தக்கது.

தமிழ் பயிற்றும் முறை எனும் நூல் பேராசிரியரின் தலை சிறந்த நூல்களில் தனியிடம் பெறுகிறது.

ஆசிரியப் பணியிருக்கும் வரையிருக்கும்
அவர்படைத்த தமிழ்பயிற்று முறையின் கீர்த்தி (56)

என்று குறள்வடிவில் புகழ்கிறார் இரா. திருமுருகன்

தமிழின் ஆசிரியர் சுப்பு ரெட்டியார் என்பது கா. வெள்ளைவாரணாரின் தீர்ப்பு.

தமிழ்பயிற்றும் முறை தந்த
தண்டமிழின் ஆசிரியன் (13)

என்பது அவர்தம் வேதவாக்கு.

ஆக, போரசிரியரின் சாதனைப் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது.

அன்பிற் புரந்திட்ட நம்சுப்பு ரெட்டியாரின்
சாதனைக்கு வரம்பில்லை (97)

என்று, பாராட்டுப் பத்திரம் வாசிக்கிறார் எஸ்.கே.இராமராஜன்

‘‘***சிறப்புப் பாயிரப் பாமாலைகள்*** எனும் இந்நூலை ஒருமுறை வாசிப்பவர், ரெட்டியாரின் அனைத்து நூல்களையும் படிக்க வேண்டும் என்னும் ஆர்வத்தைப் பெறுவர் என்பதில் ஐயமில்லை’’ என்று, இந்நூலின் தொகுப்புரையில் ந. பாஸ்கரன் கோடிட்டுக் காட்டியிருப்பது உணரத்தக்கது.

நூற்றாண்டு விழாவினையொட்டி வெளிவரும் ‘‘***சிறப்புப் பாயிரப் பாமாலைகள்***’’ எனும் இந்நூல், பேராசிரியரின் மணிமகுடத்தில் மற்றுமோர் வைர மணியாகும்.

இந்நூலைச் சிறப்பான முறையில் வெளிக் கொணரும் நூற்றாண்டுவிழாக் குழுவினர்க்கும், அருமையான தொகுப்புரை வழங்கிச் சிறப்பித்த ந. பாஸ்கரன் அவர்களுக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை – 600 063 **ந. கடிகாசலம்**
8 பிப்ரவரி 2016

அன்புப்படையல்கள்

தொகுப்பாளர்
முனைவர் இரா மணிவண்ணன்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

பேராசிரியர் தம் நூல்களில் பெரும்பாலானவற்றை பலதுறை
சார்ந்த சான்றோர்களுக்கு அன்புப் படையலாக்கி
இருக்கிறார். சான்றோர்தம் பெருமையினை முதலில்
உரைநடையில் கூறி பின்னர் செய்யுளில் இனிதே இயம்புகிறார் .
இவ்வாறு படைத்த அன்புப்படையல்கள் அடங்கிய
தொகுப்பு இந்நூல்.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939502-7-2

eBOOK ~ *மின் நூல்*

ந சுப்பு ரெட்டியார் 1916 2016 100 நூற்றாண்டு விழா நிகழ்வுகள்



அணிந்துரை

அன்புப்படையல்கள்


நூற்றாண்டு விழா வெளியீடு [2015 – 2016]

வழங்கியோர்:

Dr AS Elangovan MA (Tamil), MA(Eng), MEd, MPhil, PhD
South Zone Secretary [Retd.]
Sahitya Akademi, Chennai







அணிந்துரை

<u>*செயற்கரிய செய்த செம்மல்*</u>

ஆன்ற அறிவின் கலங்கரை விளக்கம், திருநிறைந்த பேரறிவாளர், பேராசிரியர் சுப்பு ரெட்டியார் அவர்கள் ஊருணி போலவும், மருந்து மரம் போலவும், பயன்மிகு கனிமரம் போலவும் 90 ஆண்டுகள் தமிழுக்கும், தமிழர்க்கும் தக்கதோர் துணையெனத் திகழ்ந்தார்.

அவர் படைத்தளித்த நூல்கள் 135. அவரது நூல்கள் ஒவ்வொன்றும் தக்க சான்றோர் ஒருவருக்கு அல்லது ஓர் திறமிகு பெருங்குழுவிற்குப் படையல் செய்யப்பெற்றுள்ளது. இந்த நூல்கள் அவரது வெற்றியையும், வீச்சையும், நோக்கரிய நோக்கையும், நுணுக்கரிய நுண்ணுணர்வையும் பறைசாற்றுகின்றன.

அந்த படையல்கள் காட்டும் பல்திறப் பாங்கு நம் உள்ளங்களைக் கொள்ளை கொள்கின்றது.

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து.

என வள்ளுவர் கூறுவதற்கேற்பத் தன் முயற்சியின் விளைவாகிய அறிவின் அறுவடையைத் தன் அன்பிற்கும், மதிப்பிற்கும் உரியோர்க்குப் படையல் செய்துள்ளார். இவரது அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐந்து தூண்களால் நிறுவிய சால்பு என்னும் பேரரங்கம் நூற்றுக்கால் மண்டபமாக, ஆயிரங்கால் மண்டபமாக மந்திரம் போல விரிவு கொள்கிறது.

"கடவுள் உறவினர்களைத் தருகிறார். கடவுளே, என் நண்பர்களைத்தேர்ந்து கொள்ள வாய்ப்பளித்தீர். நன்றி."

"God gives us relatives; Thank God, we can choose our friends!"

என்பதற்கேற்ப, அவருடைய அன்னை, துணைவியார் தவிர, மற்றவர் அனைவரும் அன்பும், நட்பும், மதிப்பும், போற்றுதலும், நன்றியும் மிளிரப் பேராசிரியர் தேர்ந்து தெளிந்த தக்காரும், மிக்காரும் தாழ்விலா அன்புச் செல்வரும்தாம்.

அவர் போற்றிய குழுவினர், திருக்கூட்டத்தார் யாவர்?

(01) '<u>All Speakers and Lovers of Tamil whose list is cast in lands other than Tamilnadu</u>'.

"வண்ணமார் கடலை மலைகளைக்கடந்து(ம்) பண்ணிசை தெய்வத் தமிழினை மறவாப் பாங்குறு சகோதரர்."

(02) "*பாரதிப் பித்தர்கள்*"

(03) <u>தமிழாசிரியர்கள் அனைவருக்கும்</u>

"நாப்பயில தமிழால் மாணவப் பயிரை
நாடொறும் மாண்புற வளர்ப்போர்."

(04) <u>முன்னைய/இன்றைய/பின்னைய தமிழ்ச் சான்றோர்கட்கு</u>

"புலமை வயங்கிய சீரிய சான்றோர்"

(05) பெரியார் வழி நடப்பவர்க்கு

"அறத்தினிற் பிறழா துணர்ந்த நம் பெரியார் அன்பர்கட்கு"

(06) அமெரிக்க வாழ் தமிழன்பர்கள்

"கடலினைக் கடந்தும் நாட்டினை மறவாக் கண்ணியப் புண்ணியம் மிக்கார்."

(07) வள்ளலார் தொண்டர்

"வின்னரும் புகழ் கொள் திருவருட்பாவில் விளக்கம் கொள் நல் வடலூரின் வள்ளலார் தொண்டர் அனைவருக்கும்."

"தமிழெனினும் மணிவிளக்கேற்றடா நாட்டில்
தமிழரின் நெஞ்சமாம் அழகான விட்டில்
அமிழ்தென்று கொள்ளடா செந்தமிழ்ப் பணியை
அறமென்று கொள்ளடா செந்தமிழ்ப் பணியை"

என்னும் பாவேந்தர் பாரதிதாசனின் மணிமொழியை உளமேற்றுச் சிறந்த தமிழ்மாமணி பேராசிரியர் அவர்கள் என்று நாம் வணங்கிப் போற்றலாம்.

பேராசிரியர் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட எழுதிய இறையன்பர். எனவே துறவிவேந்தர் பலரும் அருளாளர்கள் பலரும் போற்றிப் பாராட்டப் பெற்றுள்ளனர். உடன் பணிபுரிந்தோர், வழிநடத்திய மேலோர், துணைவேந்தர்கள் பலரும் புகழப்பெற்றுள்ளனர்.

நாடறிந்த தலைவர்களான, தந்தை பெரியார், கல்விச்செம்மல் காமராசர், பேரறிஞர் அண்ணா, குடியரசுத்தலைவர் இராதாகிருட்டிணன், புரட்சித்தலைவர் எம். ஜி.ஆர்., மேதகு கலைஞர், பேராசிரியர் அன்பழகன், மூதறிஞர் இராஜாஜி ஆகியோரும் போற்றப் பெற்றுள்ளனர்.

அவற்றுள்,

பெரியார்

"மடமை கொள் சாதிமதமெனும் பேய்கள்
மடிந்திட எழுபடைக்கலமே
திடமொடு தமிழர் தந்தையாய் மதிக்கத்
திகழ்ந்திடும் ஒருபெரு வாழ்வே."

அண்ணா

"மன்னிய புகழ்சால் தமிழர்தம் நெஞ்ச
மலரினும் .... சீரிய நற்றுயில் புரியும்
தன்னிகர் இல்லாச்சீரிய அண்ணா."

திரு.வி.க.

"சாந்தியின் வடிவம்: செந்தமிழ்த்தென்றல்".

குன்றக்குடி அடிகளார்

"செந்தமிழ்த்தாய் மலரடியை மறவாச்செம்மல்
சீர்திருத்தக் கொடிவளர்க்கும் சீரிமை மிக்கார்"

நீதியரசர் இஸ்மாயில்

"கம்பனை உணர்ந்து திறமுறப்பகரும்
கண்ணியர் புண்ணியர் சீலர்"

போன்ற பல்வேறு மாணிக்க வாசகங்கள் பேராசிரியரின் தமிழ்த்திறத்தையும், அறிவுநுட்பத்தையும் தெள்ளதின் காட்டி நம்மை மகிழ்விக்கின்றன.

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

என்றார் வள்ளுவப் பெருந்தகை. ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான் என்றும் கூறினார். உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே எனினும், செந்நெறியிலும், செந்தமிழ் மாண்பிலும் வாழ்ந்து சிறந்த பேராசிரியர் அறிஞர்கட்கு முன்மாதிரியான மாட்சி படைத்தவர்.

"பொங்கிய கலக்கம் சார்தரு போதில்
பூரணத் தெளிவருள் அமைச்சு"

என்று தம் துணைவியாராகிய குடும்ப விளக்கைப் போற்றுகிறபோது அவரது இல்லற நல்லறம் பளிச்சென மின்னுகிறது.

இந்நூலை உருவாக்கிய தொகுப்பாசிரியர், விழாக்குழுவினர், பிற பல, பிரபல ஏனைய நல்லன்பர்களை வியந்து பாராட்டுகின்றேன்.

*பேராசிரியர் சென்ற வழிமுறையை அடியெற்றி "**அன்புப்படையல்கள்**" தொகுப்பை தமிழ் மொழியின் உயர்பெருஞ்சான்றோர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கட்கு படையல் செய்திருப்பது காலந்தோறும் சுப்பு ரெட்டியார் அவர்கள் முத்திரை தொடரும் எனச் சான்றளித்து வியக்க வைக்கிறது.*

"நூறு மேல் படைத்துத் தமிழ் மொழிக்
களித்த நுட்பமார் செந்தமிழ் அறிஞர்
கூறுவ தெல்லாம் பிறர் நலம் வேண்டிக்
கொடையென வழங்கிய செம்மல்
நூறு மேல் அறிஞர் செந்தமிழ் அன்பர்
மகிழவே படையல்செய் தளித்தார்
பேரறி வாளர் சுப்புரெட் டியாரின்
பெருமைகள் போற்றுவோம் நாமே.

பணிந்து வணங்கும்,

03 June 2015 ***அசு இளங்கோவன்***

Dr AS Elangovan MA (Tamil), MA(Eng), MEd, MPhil, PhD
South Zone Secretary [Retd.]
Sahitya Akademi, Chennai

அணிந்துரைகள்

தொகுப்பாளர்
நீ இரவிச்சந்திரன்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

பேராசிரியர் ந சுப்பு ரெட்டியார் அவர்களின் அனைத்து நூல்களும் பலஅறிஞர் பெருமக்களின் அணிந்துரைகளைப் பெற்றுள்ளன. அனைத்து அணிந்துரைகளும், அன்னாரது நூல்களின் திறம், உரம், ஆழம், வீச்சு, ஆராய்ச்சித் திறன், நுண்ணிய இலக்கியத் திறனாய்வு மற்றும் பல சிறப்பியல்புகளை கோடிட்டு குறியிட்டு பாராட்டுகின்றன; பறைசாற்றுகின்றன.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939502-8-9

eBOOK ~ மின் நூல்

அணிந்துரை



அணிந்துரைகள்

நூற்றாண்டு விழா வெளியீடு [2015 – 2016]


வழங்கியோர்:

இரா காமராசு

எழுத்தாளர்

பொதுக்குழு உறுப்பினர், சாகித்திய அகாதெமி, புதுதில்லி
பொதுச்செயலாளர், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம், சென்னை
உதவிப்பேராசிரியர், இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்







அணிந்துரை

இரா காமராசு
எழுத்தாளர்
பொதுக்குழு உறுப்பினர், சாகித்திய அகாதெமி, புதுதில்லி
பொதுச்செயலாளர், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம், சென்னை
உதவிப்பேராசிரியர், இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

அப்பாகுடில்
4/664, பாரதிதாசன் நகர்
குமரபுரம், மேலவாசல்
மன்னார்குடி – 614 014

பேசி: 04367 224724
அலைபேசி: 94435 89189
Kamarasu_era@yahoo.com

~~~~~~

பேராசிரியரின் அறிவுக்கொடை

தமிழ் மொழி, இலக்கிய வளர்ச்சிக்குத் தங்களை அர்ப்பணித்தவர்கள பலர். மரபையும், நவீனத்தையும் இணைத்து முன்சொல்லவேண்டியச் சூழலை சிலர் உருவாக்கினர். ஏடுகளை அச்சு ஏற்றுதல், உரை எழுதுதல், இரசனை முறையில் விவரணை செய்தல் என்பவை தொடக்கநிலை முயற்சிகள்.

தமிழ்க் கல்விப் புல உருவாக்கம் அடுத்து நிகழ்ந்தது. மரபிலக்கண, இலக்கியங்கள் புதுநெறியில் கற்கவும், கற்பிக்கவுமாக பல எடுகோள்கள் நடந்தன. அதுவரை அறியப்படாத இலக்கியங்களின் அறிமுகம் பரவலாக்கம் பெற்றது. இரசனை என்பதைத் தாண்டி பல்துறைப் பலகனியாக பண்டைய இலக்கியங்கள் திறப்பு செய்யப்பட்டன. பாடசாலைகளில் பட்டங்கள் நோக்கி நகர்ந்த ஆரம்பகாலத் தமிழ்க் கல்விக்கு ஏராளமான இலக்கிய விளக்குநர்கள் தேவைப்பட்டார்கள். இதன் தொடர்ச்சியில் ஆய்வுகள் பலவும் முகிழ்த்தன. நூல்கள் பல்கிப் பெருகின. தமிழ் அறிவு மரபின் நீட்சி நவீன மயமானது இந்நிலையில்தான்.

இத்தகு தமிழ் இலக்கண-இலக்கியப் பாய்ச்சலின் விளைவுகளில் ஒன்றாக பேராசிரியர் ந சுப்பு ரெட்டியாரின் பங்களிப்பு அமைகின்றது.

பேராசிரியர் ந சுப்புரெட்டியார் பல்கலைவித்தகர். வாழ்நாள் முழுக்க எழுதிக்குவித்தவர். அவருடைய ஆய்வுக்களம் விரிவானது. தொல்காப்பியம், நன்னூல் என இலக்கணங்கள் தொடங்கி சங்க இலக்கியம், நீதி இலக்கியம், காப்பியங்கள், பக்தி இலக்கியம், சித்தர்கள் வரை நீண்ட ஆய்வுப் பயணம் செய்தவர். சமய உலகை மெய்யியல் நோக்கில் அலசியவர். சைவம்,
~~~~~~

வைணவம் இரண்டின் ஆழத்தையும் கண்டு உணர்த்தியவர். கம்பர், வள்ளுவர், பாரதி, பாரதிதாசன், பெரியார்......... எனத் தமிழின் ஆக்கச்சக்திகளை ஆய்வு செய்தவர். எல்லாவற்றுக்கும் மேலாக கல்வியியல் நுட்பங்களை, புதுமைகளை, கோட்பாடுகளைத் தமிழ் மாணவர்களுக்கு அறிமுகம் செய்தவர்.

இவரின் நூற்றுக்கணக்கானப் படைப்புகள் யாவும் தமிழ் இலக்கியக் கல்விக்கும், கல்வியியல் கல்விக்கும் அடிப்படைத் தரவுகளாக விளங்குகின்றன. பரந்து பட்ட நூலறிவும், பன்மொழி ஆற்றலும், ஆய்வு நேர்மையும், ஒப்பீட்டுரைக்கும் பாங்கும், தருக்கமுறை விளக்கங்களும், அழகிய, எளிய உரைநடைக்கூறுகளும் பேராசிரியரின் ஆய்வுகளைப் படைப்புகளாக உயர்த்தும் வல்லமை வாய்ந்தவை.

பேராசிரியரின் படைப்புகளுக்கு புகழ்பெற்ற அறிஞர்கள், கல்வியாளர்கள், சான்றோர்கள் அருளிய அணிந்துரைகள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன. இதன் வழி பேராசிரியரின் நட்பும், தொடர்பும், அறிவுலக ஏற்பும் இளைய தலைமுறைக்குத் தெரியவரும். இந்த அணிந்துரைகள் தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம் பெறத்தக்கவை. நவீனத்தமிழ் உரைநடைக்கும், தமிழ்க்கல்விக்கும் பேராசிரியரின் அறிவுக்கொடையினை இச்சிறுநூல் வெளிச்சப்படுத்தும்.

பேராசிரியரின் படைப்புகள் நூலடைவாகவும் ஆய்வாளர்களுக்கு இந்நூல் துணைநிற்கும். இணையம், கணினி ..... என எவ்வித வசதியும் அற்றச்சூழலில் தாமே முயன்று முதல் நிலை ஆய்வுகளை உருவாக்கியப் பேராசிரியர் ந சுப்புரெட்டியார் உழைப்பும், நேர்மையும் குன்றி வரும் இன்றைய தமிழ் ஆய்வுலகுக்கு முன்மாதிரியாகக் கொண்டாடத்தக்கவர் என்பதை இந்நூல் சுட்டும்.

இதனை அரிதின் முயன்று தொகுத்துள்ள தொகுப்பாசிரியர் நீ இரவிச்சந்திரன் பாராட்டுக்குரியவர். பேராசிரியரின் நூற்றாண்டை பல்முனைகளில் முன்னெடுக்கும் நூற்றாண்டு விழாக்குழுவினர்க்கும் இவ்வேளையில் நன்றி கூறவேண்டும். ஆய்வாளர்களுக்கும், வாசகர்களுக்கும் இந்நூல் பயன்நல்கும்.

~~~~~~~~~~

சிற்றிலக்கியங்களில் வாழ்வியல் பதிவுகள்

பதிப்பாசிரியர் குழு



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

ந சுப்புரெட்டியாரின் நூற்றாண்டு விழா நினைவு
தேசியக் கருத்தரங்கில் வாசித்தளிக்கப்
பெற்ற கட்டுரைகளின் தொகுப்பு

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939270-0-7

eBOOK ~ மின் நூல்




அணிந்துரை

சிற்றிலக்கியங்களில்
வாழ்வியல் பதிவுகள்
நூற்றாண்டு விழா வெளியீடு [2015 – 2016]

வழங்கியோர்:

அ அறிவுநம்பி
முதுபேராசிரியர் (Senior Professor)
சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம்
புதுவைப் பல்கலைக்கழகம்
புதுச்சேரி – 605 014. இந்தியா.







TRUST ESTD.1972

SHRI KRISHNASWAMY COLLEGE FOR WOMEN

Managed by KRISHNASWAMY EDUCATIONAL TRUST (Regd.), Chennai.
AC-48, 6th Main Road, Anna Nagar, Chennai - 600 040.
Phone : 2626 2977, 2628 2977

M.A.K. பாலகிருஷ்ணன்
தலைவர்
செயலர் & தாளாளர்
ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி
அண்ணாநகர், சென்னை-40.



வாழ்த்துரை

***இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்***

எனும் பாரதியாரின் கூற்றுக்கிணங்க எண்ணிலடங்கா எளியோர்க்கு அறிவுக்கண் திறந்த ஆன்றோர், அமரர் எம்.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள். அவரது அரவணைப்பில் அன்பு குழந்தைகளாய் உருவெடுத்தன ஐந்து பள்ளிகள். அறிவுத் தேனீயாய் வாழ்ந்து மறைந்த அவர் தம் ஆன்மாவின் வழிகாட்டுதலில், அப்பள்ளிகளுக்கு அன்னையாய் அரும்பியது ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி. ஏற்றமிகு ஏழாம் ஆண்டில் எம் கல்லூரி எழுச்சியுடன் வளர்ச்சியடைய அல்லும் பகலும் அயராது உழைத்த நல்உள்ளங்களுக்கும் என்றென்றும் எம்முடன் கரம் கோர்த்துப் பணியாற்றிக் கொண்டிருப்பவர்க்கும் என் நெஞ்சம் நெகிழ்ந்த வாழ்த்துக்களையும் ஆசிகளையும் உரித்தாக்கி மகிழ்கின்றேன்.

அண்ணாநகரில் ஆல் போல் தழைத்து அருகுபோல் வேரோடி அண்ணாந்து பார்க்கும் உச்சத்தில் கல்விக்கோயிலாய்த் திகழ்கிறது எம் கல்லூரி. இக்கல்விக்கோயிலின் ஒளி விளக்காய் மிளிரும் தமிழ்த்துறை, தமக்கேயுரிய தனிப்பெருஞ்சிறப்புகளால் கல்லூரிக்குப் புகழெனும் ஒளியைப் பரப்பி வருகின்றது. இப்புகழுக்கு ஒரு மைல்கல்லாக முதல் தேசியக் கருத்தரங்கினை நடத்தவிருக்கின்றது. இக்கருத்தரங்கிற்குச் சிற்றிலக்கியத்தை ஆய்வுக்களமாகத் தெரிவு செய்துள்ளது. இலக்கண வித்திலிருந்து முளைத்தெழுந்து, காலந்தோறும் பல்வேறு வகைகளாய்க் கிளைத்துப் பரந்து விரிந்து கிடக்கும் பேரிலக்கியமே சிற்றிலக்கியம். காலத்தின் கண்ணாடியாய் விளங்கும் இவ்விலக்கியத்துள் பொதிந்து கிடக்கும் வாழ்வியல் பதிவுகளை ஆய்வு எனும் முகத்தில் கண்டுகளிக்க விளைந்ததே இத்தேசியக் கருத்தரங்கம்.

தமிழுலகில் முன்னேறத் துடிப்பவர்களுக்கு எல்லாம் முன்மாதிரியாய் விளங்கிய மூதறிஞர், தமிழ்ப் பயிற்றும் முறையை ஆசிரியர்க்குப் புகட்டிய பேரறிஞர் அமரர் ந. சுப்புரெட்டியார். அவரது நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு இக்கருத்தரங்கினை நடத்தவேண்டும் எனும் உந்துதலை வழங்கியவர் அன்னாரின் திருமகனார் சு. இராமலிங்கம் அவர்கள். அவருக்கும் எனது அன்பார்ந்த வாழ்த்துக்கள்.

இத்தேசியக் கருத்தரங்கின் தலைவராகப் பொறுப்பேற்று, அதனைச் செவ்வனே நடத்துவதற்கு உறுதுணை புரிந்து வரும் கல்லூரி முதல்வர்க்கும் என் மனம் கனிந்த வாழ்த்துக்கள்.

***இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்***

எனும் குறளுக்கு ஏற்ப எச்செயலாயினும் உரிய நேரத்திற்குள் செம்மையாக முடித்துக் கொடுக்கும் வல்லமை படைத்த தமிழ்த்துறைத் தலைவர்க்கும் அவருடன் இணைந்து பணியாற்றும் தமிழ்த்துறைப் பேராசிரியர்களுக்கும் எனது நல்வாழ்த்துக்கள். அவர்களது ஒருங்கிணைந்த செயல்பாட்டின் பயனாக விளைந்த இக்கன்னி முயற்சி, வெற்றிக்கனியை எட்டவேண்டுமென்று உளமார வாழ்த்துகின்றேன்.

தமிழன்னைக்கு அணிசேர்க்கும் நூல்களுள் **‘சிற்றிலக்கியங்களில் வாழ்வியல் பதிவுகள்’** எனும் இந்நூலும் ஒன்றாக இருப்பதை எண்ணி மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

(M.A.K. பாலகிருஷ்ணன்)

TRUST ESTD.1972

SHRI KRISHNASWAMY COLLEGE FOR WOMEN

Managed by KRISHNASWAMY EDUCATIONAL TRUST (Regd.), Chennai.
AC-48, 6th Main Road, Anna Nagar, Chennai - 600 040.
Phone : 2626 2977, 2628 2977

முனைவர் R. ரேவதி
முதல்வர்
ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி
அண்ணாநகர், சென்னை-40.



வாழ்த்துரை

பெண்க ளறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடுங் காணீர்

என்ற மகாகவி பாரதியின் கவிதைக்கு உயிர் கொடுக்கும் விதமாக மகளிருக்கு வளமான கல்வியைத் தரமாக வழங்கி "தற்காத்துத்தற்கொண்டான் பேணி" என்னும் வள்ளுவனின் வாக்குக்கு ஏற்பதானும் வளர்ந்து தன்னைச் சார்ந்தவர்களையும் வளர்த்து வருகிறது எமது ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி. முனித வளர்ச்சிக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் வித்தாக அமைவது மொழி. இன்றைய அறிவியல் உலகில் மொழியே தனது இலக்கியங்களின் வாயிலாக அனைவருக்கும் ஆனந்தத்தையும் அமைதியையும் தருகிறது. 'இன்றைய இலக்கியங்கள் நாளைய வரலாறு' எனலாம். ஏனெனில் இலக்கியங்கள் தாம் தோன்றிய காலத்து மக்களின் வாழ்க்கை முறைகளையும் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் தாங்கி நிற்கின்றன. அவ்வகையில் தமிழ் இலக்கியவகைகளுள் ஒன்றான சிற்றிலக்கியங்களில் இடம் பெற்றுள்ள அக்கால மக்களின் வாழ்க்கை முறை, பழக்கவழக்கம், நம்பிக்கை, விழாக்கள் முதலிய பதிவுகளைத் தமிழ்ச்சமூகத்திற்கு அளிக்கும் முகமாக **"சிற்றிலக்கியங்களில் வாழ்வியல் பதிவுகள்"** எனும் பொருளில் எங்களுடைய தமிழ்த்துறை முதன் முதலாகத் தேசியக் கருத்தரங்கை நடத்துகிறது. தமிழுக்கு என்று தனித்துறை எமது கல்லூரியில் இல்லாவிட்டாலும் தங்களது பங்களிப்பை இலக்கிய உலகிற்கு வழங்க வேண்டும் என்ற தணியாத வேட்கையால் முயற்சி செய்து இக்கருத்தரங்கை ஏற்பாடு செய்த தமிழ்த்துறைத் தலைவருக்கும் ஒருங்கிணைப்பாளர்களான அத்துறைப் பேராசிரியப் பெருமக்களுக்கும் எனது வாழ்த்துக்கள். இக்கருத்தரங்கு சிறப்பாக நடைபெறவும் இனிவரும் ஆண்டுகளில் தொடரவும் தமிழ்த்துறைக்கு என் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

(முனைவர் R. ரேவதி)



தமிழ்ப்பணியில்
பேராசிரியர் டாக்டர் உலகநாயகி பழனி
தமிழ்த்துறை, ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரி, சென்னை–600 086

தமிழ்ப் பணியில்

உலக மகளிர் இலக்கிய இயக்கம்
தலைவர்

உறவுச்சுரங்கம்
தலைவர்

தமிழ்நாடு பெண்கள் எழுத்தாளர் பேரவை
தலைவர்

அனைத்திந்திய எழுத்தாளர் சங்கம்
(தியாகராய நகர் கிளை)
துணைத்தலைவர்

பாராதியார் சங்கம் சென்னை
செயலாளர்

கம்பன் கழகம் சென்னை
விழாக் குழு இணைச்செயலாளர்

பன்னாட்டுத் தமிழ் நடுவம்
இணைச்செயலாளர்

தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை
செயலாளர்

அகில உலகக் கவிஞர்கள் பேரவை
செயலாளர்

வி.ஜி.பி. உலகத் தமிழ்ச்சங்கத்தின்
விழாக் குழு ஒருங்கிணைப்பாளர்

அகில உலகப் பெண்ணியச்சிந்தனைப் பேரவை
பொதுச்செயலாளர்

இந்தோ ரஷ்ய தமிழ் மன்றம்
செயலாளர்

தமிழ் மொழி அக்காதமி
செயற்குழு உறுப்பினர்

வாழ்த்துரை

ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரியின் தமிழ்த்துறை சார்பாக **ந. சுப்புரெட்டியார் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு** 11–03–2016 அன்று "***சிற்றிலக்கியங்களில் வாழ்வியல் பதிவுகள்***" என்னும் பொருண்மையில் தேசியக் கருத்தரங்கம் கல்லூரி வளாகத்தில் உள்ள கிருஷ் கலையரங்கத்தில் நடைபெறுவது குறித்து மிகுந்த மகிழ்ச்சியும் மனநிறைவும் கொள்கிறேன். கருத்தரங்கம் வெற்றி பெற என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரா. முனைவர் உலகநாயகி பழனி
ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரி
சென்னை–600 086



அ.அறிவுநம்பி
முதுபேராசிரியர் (Senior Professor)
சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம்
புதுவைப் பல்கலைக்கழகம்
புதுச்சேரி – 605 014. இந்தியா.

பாராட்டத் தகுந்த முயற்சிக்கு வாழ்த்துக்கள்

தமிழில் காலந்தோறும் பொலிவான இலக்கியங்கள் மலர்வதைப் போலவே சிந்தனையைத் தூண்டக்கூடிய ஆய்வுகளும் உருவாகிக் கொண்டிருக்கின்றன. எனினும் பெரும்பான்மையான கல்விநிறுவனங்களைப் போல அல்லாமல் தமிழிலக்கியப் பரப்பில் போதிய கவனத்திற்கு உள்ளாகாத சிற்றிலக்கியங்களைக் கருத்தரங்கிற்கான மூலப்பொருளாகக் கருதியமைக்காகச் சென்னை, அண்ணாநகரில் உள்ள ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரித் தமிழ்த்துறையினரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். தமிழ் இலக்கிய வரலாற்றில் தனித்துவமான முத்திரைகளைப் பதித்தவை சிற்றிலக்கியங்கள். அவற்றின் அகல நீளங்களை அலச வேண்டிய இன்றியமையாமையை உணர்ந்த தமிழ்த்துறை, தமிழ் ஆர்வலர்கட்கான களத்தை ஏற்பாடு செய்திருப்பது குறிக்கத்தக்கது.

நூற்றுக்கும் மேற்பட்ட அருமையான கட்டுரைகளின் தொகுப்பு வடிவமைக்கப்பட்டிருப்பதும் அந்தத் தொகுப்பினைக் கருத்தரங்க நாளன்றே வெளிக்கொணருவதும் வெகுவாகப் பாராட்டிற்குரிய செயல்பாடுகள் ஆகும். தமிழ்த் துறையினரின் அயராத உழைப்பை இவை வெளிப்படுத்துகின்றன.

பள்ளு, அம்மானை, பரணி, சதகம், ஊசல், மடல், கலம்பகம், குறவஞ்சி, கும்மி, பிள்ளைத்தமிழ், தூது போன்ற அனைத்துவகைச் சிற்றிலக்கியங்களும் ஆய்வுக்கு ஆளாகியிருப்பது சிந்தனைக்குரியது. தோண்டத் தோண்டப் புதுப்புதுப் புதையல்கள் கிடைக்கும் என்பதற்கு இந்தக் கட்டுரைத் தொகுதி சான்றாகின்றது.

கட்டுரைகள் யாவும் ஏனோதானோ என எழுதப் பெறவில்லை என்பதை அவற்றின் பக்கங்கள் உணர்த்துகின்றன. நலம் பாராட்டல் என்பதை விடவும் ஆய்வு அமிலத்தில் இக்கட்டுரைகள் சோதனைக்கு இடப்பெற்றுள்ளன என்பதே உண்மை. இலக்கியமரபு, இலக்கியப் பெற்றிமை, கூறும் முறைமை, உத்திகள், பயன்பாடு போன்ற பல்வகைக் கண்ணோட்டங்களில் கட்டுரையாளர்கள் சிற்றிலக்கியங்களை அணுகியிருப்பது போற்றுதலுக்குரியது.

சில கட்டுரைகளில் ஆழமான ஆய்வுப்போக்கு இழைந்துள்ளது. புதிய செய்திகள் பரிமாறப் பெற்றுள்ளன. சில கட்டுரைகளில் தருக்கநெறி பின்பற்றப்பெற்றிருப்பது கூடுதற் சிறப்பாகும். மக்களை முன் நிறுத்தி, மகேசனை முன் நிறுத்தி, மன்னனை முன் நிறுத்தி இவ்வகை இலக்கியங்கள் பூத்துள்ளன என்ற பேருண்மையை இத்தொகுப்பு எடுத்தோதுகின்றது.

கட்டுரைச் செய்திகளில் பதிவாகியுள்ள கருத்துகளில் ஒரு சில வருமாறு :

- தலவரலாற்றை ஆயும்போது பழனம் என்ற ஊர் இடம்பெறும். அதுவே‘பழனி’எனப் பெயர் மாற்றங் கண்டது.
- மடல் வகையில் வளமடல், உலாமடல் என இருவகை தென்படுவது மரபாகும்.
- உலா என்ற சிற்றிலக்கியவகை மன்னனில் தொடங்கி இறைக்கு விரிவாகியிருக்கலாம்.
- கலம்பகம் 18 உறுப்புகளை உடையதென்ற கருத்தை மாற்றிக் கொள்ளும் விதமாக 32 உறுப்புகளை இனங்காண முடிகின்றது.

- பிள்ளைத்தமிழ் ஆண்டவனை முன்வைத்தது ஒருகாலம்; வள்ளல்களை கருப்பொருளாக்கியது மறுகாலம். மறைமலையடிகள் போன்றோரைப் பாட்டுடைத் தலைவர்களாக வரித்துக்கொண்டது புதுக்காலம்.
- உழத்திப்பாட்டு, குறவஞ்சி, பள்ளு போன்றவை வாழும் மக்களின் மரபுகளைச் சித்திரிக்கும் புதுப்பாங்கிலானவை.
- புதுவைப் பெரியசாமி உருவாக்கிய புதுவைக் கலம்பக நூலுக்கு நூலாசானின் மாணவர்கள் 24 பேர் சிறப்புப் பாயிரம் தீட்டியுள்ளனர்.
- பக்தி மொழியான தமிழில் அம்மனைப் பாராட்டக் கண்ணி, கும்மி, தாலாட்டு, அலங்கல் போன்ற வகைகள் வார்க்கப் பெற்றன.
- ஆந்தை பறப்பதைச் சகுனமாகக் கொண்ட தமிழர்களையும் ‘நாளோர் பார்த்தல்’ என்ற கலைச் சொல்லால் பள்ளு நூல் புகலும் சடங்குகளையும் கட்டுரைகளில் பரக்கக் காணலாம்.
- வீழ்ந்த மறவர்களின் சாட்சிகளே பேய்கள்; சிவனை ஏத்தும் பெண்களை ‘யோகினியர்’எனக்கூற வேண்டும்; ஒரு சதகத்தில் 101 பாக்கள் உள்ளன;

கவனத்துக்குரிய இவை போன்றவை கட்டுரைகளில் நிரல் படுத்தப்பட்டிருக்கும் எழில் குறிக்கத்தக்கது. தமிழ் உலகம் போற்றும் பெருமகனார் ந. சுப்புரெட்டியார் அவர்களின் நூற்றாண்டையொட்டி இத்தகு சிறப்பான தேசியக் கருத்தரங்கத்தை நடத்தி நேர்த்தமிகு கட்டுரைத் தொகுப்பை வெளியிடும் தமிழ்த்துறைக்கும், கல்லூரிக்கும் அகமார்ந்த வாழ்த்துக்கள். மேன்மேலும் தமிழ் பரப்பும் பணியில் கல்லூரியும், தமிழ்த்துறையும் ஈடுபட்டால் தமிழ்கூறு நல்லுலகம் வளம் பெறும்; நலம்பெறும். தொடர்புடைய அனைவருக்கும் பாராட்டுகளும் வாழ்த்துகளும் உரிய.

வாழ்கவளமுடன்

பணிவுடன்

அ.அறிவுநம்பி

முனைவர் செ. கிரிஜா
தமிழ்த்துறைத் தலைவர்
ஸ்ரீ கிருஷ்ணசாமிமகளிர் கல்லூரி

என்னுரை

செய்யபதி னூற்புலவர் செந்தமிழும் செய்திகளும்
உய்வுதரும் வைப்பாம் உணர்

என்பதுணர்ந்து செவ்வனே தன் பணியாற்றி தங்களின் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கிறது இந்நூல். செந்தமிழ் நூற் கருத்துக்கள் செப்பனிடப்பட்டு தமிழ் உலகிலே பவனி வரச் செய்யவேண்டும் என்ற மிகுந்த அவாவினால் அமையப்பெற்றது இவ்வினிய நூல்.

சென்னை அண்ணாநகரில் அமைந்த, அகவை ஆறினைக் கொண்டிருக்கும் ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி, கல்வித்துறையில் மட்டுமல்லாது சமுதாய நலனிலும் ஆழ்ந்த அக்கறை கொண்டது. தமிழின் மீது தனிப்பற்றும் தணியாக் காதலும் கொண்டது. இக்கல்லூரியின் வலுவான துறையான தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் பாங்கான பணிகள் பல ஆற்றினாலும் கருத்தரங்கம் நிகழ்த்த காலம் நோக்கிக் காத்திருந்தோம். தமிழ் இலக்கியவானின் ஒண்சுடராம் பேரா. முனைவர் ந. சுப்புரெட்டியார் அவர்களின் நூற்றாண்டு நிறைவினை அன்னாரது தனயனார் முனைவர் சு. இராமலிங்கம் அவர்களும் கொண்டாட எத்தனித்திருந்தார். காலம் கனிய இத்தேசியக் கருத்தரங்கம் நிகழ்த்தும் எண்ணம் கருக்கொண்டது. கல்லூரியின் முதல்வர் **முனைவர் R. ரேவதி** அவர்களிடம் இக்கருத்து உரைக்கப்பட்டதும் உருக்கொண்டது. இக்கருத்துருவானது, ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரியின் தலைவர், செயலர் & தாளாளர் **திரு. M.A.K. பாலகிருஷ்ணன்** அவர்களுடன், இயக்குனர்கள் **திரு. K.B. அருண்** அவர்கள் மற்றும் **திரு. K.B. கிருஷ்ணானந்** அவர்களிடமும் தெரிவிக்கப்பட்டதும் உடன் மகிழ்வெய்தி வளர்ச்சிப்படிகளாய் உயிர்பெற்றுத் துளிர்த்தது இத்தேசியக் கருத்தரங்கம்.

புனல்சூழ்ந்துவடிந்துபோன
நிலத்திலே'புதியநாளை'
மனிதப் பைங்கூழ் முளைத்தே
வகுத்தது! மனிதவாழ்வை
இனியநற் றமிழேநீதான்
எழுப்பினை

என்றார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார். மண்ணின் வாழ்வெல்லாம் தழைக்கச் செய்த தமிழின் பெருமையைச் சிற்றிலக்கியங்கள் கொண்டே போற்ற கலந்தாய்வு செய்தோம். நிறைவாகச் "சிற்றிலக்கியங்களில் வாழ்வியல் பதிவுகள்" என்ற தலைப்பு சூட்டப்பட்டு மேற்கண்ட பணிகளும் துரிதமாகச் செயல்படுத்தப்பட்டன. கல்லூரியின் நிர்வாகம் மற்றும் முதல்வர் அவர்கள் இவ்வாய்வுக் கட்டுரைகளில் ஆய்வு மாணவர்களை ஊக்குவிக்கும் விதமாக முன்னுரிமையும் வாய்ப்பும் நல்கினர்.

ஆய்வுக்கட்டுரை வழங்கிய ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வுமாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள் மற்றும் பேராசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்ப்பணியில் மிகுந்த முனைப்பு காட்டி வரும் **முனைவர் சு. இராமலிங்கம்** அவர்களின் தமிழ்ப்பணி வருங்காலத்திலும் சிறப்புறத் தொடர்ந்து பல அரிய செயலாற்ற வணங்கி வாழ்த்துகின்றேன். இக்கருத்தரங்கக் கட்டுரைகள் நூலாக்கம் பெற கண்ணும் கருத்துமாய்ச் செயலாற்றியதுடன் குறித்த நேரத்தில் புத்தகம் கரங்களில் தவழ காரணகர்த்தாவாகத் திகழ்ந்தவர். கட்டுரையாளர்களுக்குச் சான்றிதழ்கள் அளிக்கும் மகத்தானப் பணியையும் மனமுவந்து ஏற்று அருளிய பெருந்தகையாளர் முனைவர் சு. இராமலிங்கம் அவர்கள். இவ்வாறு இத்தேசியக் கருத்தரங்கின் கருவாக்கம் முதல் நிறைவாக்கம் வரையிலான தொடர் ஒத்துழைப்பை நல்கிய அப்பெருமகனாருக்கு எமது கல்லூரியும் தமிழ்த்துறையும் என்றென்றும் நன்றிக்கடன் பட்டுள்ளது.

தேசியக் கருத்தரங்கின் பணிகள் அனைத்திற்கும் அடிப்படைவேராய் அமைந்து எங்களை ஊக்குவித்த கல்லூரியின் தலைவா், செயலா் & தாளாளா் **திரு. M.A.K. பாலகிருஷ்ணன்** அவா்களுக்கு இத்தருணம் நன்றிகூற கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழ்த்துறையின் செயல்பாடுகள் அனைத்திற்கும் இசைவினை அளித்ததுடன் தனிக்கணினி & அறிவியல் தொழில் நுட்பவசதிகள் செய்தளித்து முன்னின்று பொருளாதாரத்திலும் புரவலராய் விளங்கிய இயக்குனா்கள் **திரு. K.B. அருண்** அவா்கள் மற்றும் **திரு. K.B. கிருஷ்ணானந்** அவா்களுக்கு நன்றி கூறி மகிழ்கின்றேன். தேசியக் கருத்தரங்கிற்கு ஆலோசனை வழங்கியும் இன்முகம் காட்டியும் தோழமை உணா்வுடன் உடனுக்குடன் ஆக்கப் பணிகளில் உதவி புரிந்த கல்லூரிமுதல்வா் **முனைவா் R. ரேவதி** அவா்களுக்கு எமது துறையின் சாா்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தோழியாய், சகோதரியாய் இணக்கம் காட்டிப் பணியில் உடன் இணைந்திருக்கும் எமது துறைப் பேராசிரியப் பெருமக்களுக்கும் இந்தித் துறையாயினும் கருத்தரங்கச் செயல்பாடுகளில் கால் பதித்துச் செயலாற்றிய பேரா. கா. ஆனந்தி அவா்களுக்கும் துணை நின்ற பிற துறை பேராசிரியா்களுக்கும் எமது மனமாா்ந்த நன்றிகள். கல்லூரி அலுவலா் மற்றும் செயற்பணியாளா்களுக்கும் ஸ்ரீ கிருஷ்ணசாமி அறக்கட்டளை அலுவலக அன்பா்களுக்கும் இத்தேசியக் கருத்தரங்கின் ஆக்கம் முதல் ஊக்கம் தந்தளித்த அத்துணை நல் இதயங்களுக்கும் நன்றியினைக் கூறி மகிழ்கின்றேன்.

இவண்
முனைவா் செ.கிரிஜா

ந சுப்புரெட்டியாரின் படைப்புகள்

கலையும் கருத்தியலும்

பதிப்பாசிரியர்கள்:

முனைவர் க முருகேசன்
முனைவர் சு இராமலிங்கம்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

ந சுப்புரெட்டியாரின் நூற்றாண்டு விழா நினைவு
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கில்
வாசித்தளிக்கப் பெற்ற கட்டுரைகளின் தொகுப்பு

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-938927-8-7

eBOOK ~ மின் நூல்




அணிந்துரை

ந சுப்புரெட்டியாரின் படைப்புகள்
கலையும் கருத்தியலும்
நூற்றாண்டு விழா வெளியீடு [2015 – 2016]

வழங்கியோர்:

டாக்டர் சி. ஏ. வாசுகி
செயலர் மற்றும் இயக்குநர்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
கோயம்புத்தூர் – 641 029









1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

[A MULTI-FACETED TAMIL SAVANT]

Centenary Celebrations

~~~~******~~~~

நன்றியுரை

கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை, பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு

ந. சுப்பு ரெட்டியாரின் படைப்புகள்
கலையும் கருத்தியலும்

எனும் பொருண்மையில் பன்னாட்டு ஆய்வுக்கருந்ததரங்கம் ஒன்றினை 1 சூலை 2016 அன்று நடாத்துவது குறித்து நூற்றாண்டு விழாக் குழு பேருவகை கொள்கிறது.

கருத்தரங்கில் வரப்பெறும் ஆய்வுக்கட்டுரைகள் தமிழ்கூறும் நல்லுலகிற்கு பற்பல பலனுறு செய்திகளை வழங்கும் என எதிர்நோக்குகின்றோம்.

பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம் மிகச்சிறப்பாக நடைபெற நூற்றாண்டு விழாக் குழுவினரின் சிறுபங்கு இருப்பது குறித்து மகிழ்கின்றோம்.

பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கத்தின் அனைத்து அமைப்பாளர்களுக்கும், ஆய்வுக்கட்டுரைகள் நல்கிய பேராளர்களுக்கும், பிற பல, பிரபல ஏனைய நல்லன்பர்களுக்கும் நூற்றாண்டு விழாக் குழு மனமுவந்த வாழ்த்துகளை வழங்கி, நன்றி பாராட்டுகின்றது.

நூற்றாண்டு விழாக் குழு
~~~~

டாக்டர் சி.ஏ. வாசுகி
செயலர் மற்றும் இயக்குநர்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
கோயம்புத்தூர் - 641 029



அணிந்துரை

தமிழன்னை செய்த தவப்பயனின் காரணமாகக் காலந்தோறும் நற்றமிழ் நாவலர்கள் பலர் தோன்றி இறவாப் புகழுடைய புது நூல்களை இயற்றி வருகின்றனர். இத்தகைய தமிழ்ச் சான்றோர் வரிசையில் ஈடும் இணையும் இல்லாதவராகத் திகழ்பவர் பேராசிரியர் முனைவர் ந. சுப்புரெட்டியார். நுணங்கிய கேள்வியராகவும் கூர்த்த மெய்ஞ்ஞானக் குரிசிலாகவும் விளங்கிய அப்பெருமகனாரின் சமயச் சார்பின்மைக்குச் சான்றாக அவர் படைத்த சைவ, வைணவ நூல்கள் திகழ்கின்றன. சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம், சைவசமய விளக்கு, சைவமும் தமிழும், வைணவமும் தமிழும், வைணவ உரைவளம் ஆகிய நூல்கள் காலம் கடந்தும் அவர் புகழொளியை மண்மேல் மங்காது வீசச்செய்வன. காய்தல் உவத்தலின்றிச் செல்லும் பேராசிரியரின் நூற்கருத்துக்கள் கற்போர் மனதில் களிபேருவகையை ஏற்படுத்தும் தகையன.

ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியத்தை ஆராய்ந்து அகத்திணைக் கொள்கைகளையும் அவர் காட்டிய வாழ்வியலையும் சுவைபட எடுத்துரைத்த சொல்லின் செல்வர் பேராசிரியர் முனைவர் ந. சுப்புரெட்டியார், அமிழ்தினும் இனிய தமிழ்மொழியில் அறிவியல் துறைச் செய்திகளை ஆய்ந்துரைத்த அளப்பரும் செயலையும் ஆற்றியுள்ளார். அணுக்கரு பௌதிகம், அணுவின் ஆக்கம், அதிசய மின்னனு, அம்புலிப் பயணம், அறிவியல் தமிழ் ஆகிய நூல்கள் அவர்தம் அறிவியல் புலமைக்குக் கட்டியம் கூறுகின்றன.

உளவியல் செய்திகளை உணர்த்தும் வகையில் கல்வி உளவியல், கல்வி உளவியல் கோட்பாடுகள் ஆகிய நூல்கள் அமைந்துள்ளன. கல்வி நிலையங்களில் மாணாக்கர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சனைகளுக்குரிய தீர்வுகளையும், கற்பித்தலில் மேற்கொள்ள வேண்டிய உத்திகளையும் இனிதாக எடுத்துரைப்பன மேற்கூறிய நூல்கள். பிற்காலப் புலவர்களான தாயுமானவர், பட்டினத்தார், இராமலிங்க அடிகள் ஆகியோரின் வாழ்வியலையும் அருளியலையும் சுவைபட எடுத்துரைத்துள்ள பெருமகனார்.

பேராசிரியர் அவர்கள் திறனாய்வுக் கலையில் வல்லவர் என்பதைக் காட்டும் வகையில் அமைந்தன இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும், கண்ணன் பாட்டுத்திறன்,

கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி, மூவர் தேவாரம் புதிய பார்வை உள்ளிட்ட நூல்கள். இவர் மொழிபெயர்ப்புத் துறையிலும் வித்தகர் என்பதற்குச் சான்றாக வேமனர் என்ற நூல் திகழ்கின்றது.

தமிழில் அவர் தொடாத துறைகளே இல்லை என்னும் அளவிற்குத் துறைதோறும் தன் ஆய்வுப் பார்வையை ஆழச் செலுத்தி ஆழ்ந்தகன்றடங்கிய கொள்கைச் சான்றோராக விளங்கிய பேராசிரியர் முனைவர் ந. சுப்புரெட்டியாரின் படைப்புக்களை ஆராய்ந்து, அவற்றின் வழி வெளியாகும் கருத்துக்களை வருங்காலத் தலைமுறைக்கு எடுத்துரைக்க வேண்டும் என்ற வேட்கையின் விழைவாக **'ந. சுப்புரெட்டியாரின் படைப்புகள்: கலையும் கருத்தியலும்'** என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடைபெறுகின்றது.

ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தமிழ் அறிஞர்களுள் ஒருவராகத் திகழ்பவரான பேராசிரியர் முனைவர் ந. சுப்புரெட்டியாரின் பெயரும் சிறப்பும் தமிழ் உள்ளளவும் தரணியுள்ளளவும் கல்லில் எழுத்தாய்க் கங்குல் நீக்கும் கதிரவனாய் நிற்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

"மகன் தந்தைக் காற்றும்உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனுஞ் சொல்"

என்ற வான்புகழ் கொண்ட வள்ளுவப் பெருந்தகையின் நான்மறைக்கு ஏற்பப் பேராசிரியரின் திருமகனார் திரு சு. இராமலிங்கம் அவர்களின் பெரும்பணி அமைவதைக் கண்டு வியப்படைகின்றேன். நூற்றாண்டு காணும் தந்தையின் தமிழ்ப்பணியையும் பெருமையையும் உலகறியச் செய்யும் வகையில் நூறு நிகழ்ச்சிகளை நடத்தத் திட்டமிட்டு, அவற்றுள் ஒன்றை எம் கல்லூரித் தமிழ்த்துறையுடன் இணைந்து பன்னாட்டுக் கருத்தரங்கமாக நடத்த முன்வந்தமையை எண்ணி மகிழ்கின்றேன்.


தமிழகத்தில் உள்ள தலைசிறந்த கலை அறிவியல் கல்லூரிகளில் தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்ற கல்லூரியாக எம் கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி விளங்குகின்றது. கொங்கு மண்டலத்தில் வாழும் மாணாக்கரின் அறிவை வளர்க்கும் அமுதசுரபியாகத் திகழும் எம் கல்லூரியின் தமிழ்த்துறை பன்னாட்டுக் கருத்தரங்குகளையும் தேசியக் கருத்தரங்குகளையும் பயிலரங்குகளையும் நடத்துவதில் முனைந்து செயல்பட்டு வருகின்றது எனில் அது மிகையாகாது. அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்கள், பல்கலைக்கழக நிதிநல்கைக்குழு, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் ஆகிய நிதி நல்கை நிறுவனங்களுடன் இணைந்து சான்றோர்கள் போற்றும் வகையில் ஆண்டுதோறும் முன்னைத் தோன்றிய அன்னைத் தமிழின் அறிவுச் சுரங்கத்திலிருந்து சிந்தனைச் செம்பொன்னை அள்ளியெடுத்து ஆய்வு உரைகல்லில் தீட்டித் திக்கெட்டும் கொண்டு செல்கின்ற பணியைத் தலைமேற் கொண்டு செவ்வனே செய்து வருகின்றது. அந்த வரிசையில் ந. சுப்புரெட்டியார் 100 அறக்கட்டளையுடன் இணைந்து இப்பன்னாட்டுக் கருத்தரங்கம் நடைபெறுவது மகிழ்ச்சியளிக்கின்றது.

இக்கருத்தரங்கை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்க ஒருங்கிணைப்பாளரும் தமிழ்த்துறைத் தலைவருமான முனைவர் க. முருகேசன் அவர்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள். ஏற்கனவே பல கருத்தரங்குகளை நடத்திய அனுபவமும் திறமையுமுடைய அவர் இக்கருத்தரங்கையும் திட்டமிட்டு நடத்தியுள்ளார். கருத்தரங்கப் பணிகளைத் திறம்பட ஆற்றிய தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் அனைவருக்கும் என் பாராட்டுக்கள். பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் படைப்புகளை ஆராய்ந்து கட்டுரை வழங்கியுள்ள தமிழறிஞர்கள், பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள் ஆகியோருக்கு என் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள். இக்கருத்தரங்க ஆய்வுக் கோவை பெரும்பேராசிரியர் அருங்கலைக்கோன் கலைமாமணி முனைவர் ந. சுப்பு ரெட்டியார் அவர்களின் படைப்புகளைப் பயிலத் தலைப்படுவோர்க்கு ஒரு கைவிளக்காய் அமையும் என்பது திண்ணம்.

அன்புடன்,

இடம் : கோயம்புத்தூா

நாள் : *20.06.2016*



(சி.ஏ. வாசுகி)



முனைவர் த. முரளீஸ்வரி

முதல்வர்

கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)

கோயம்புத்தூர் - 641 029

வாழ்த்துரை

சீரிளமைத் திறம் குன்றாத தீந்தமிழ் மொழியில் தம் எண்ணங்களை எழுத்தோவியங்களாகத் தந்த எழுத்தாளர்களின் எண்ணிக்கைக்கு அளவில்லை. தம் உள்ளத் தடாகத்தில் மலர்ந்த செந்தாமரை அனைய செய்யுட்களைச் செந்தமிழ்த் தாயின் சீதளத் திருவடிகளுக்குக் காணிக்கையாக்கிய கவிஞர்கள் பலர். உணராத நுட்பத்தை உணரவைத்து, புரியாத மறைபொருளை மயக்கமின்றித் தெளிவித்த மதிமிக்க உரையாசிரியர்கள் பலர். தெவிட்டாத தமிழென்னும் தீங்கரும்பின் சாறெடுத்து அதனுடன் உவட்டாத ஆய்வென்னும் தேன்பிழிந்து கொடுத்த திறனாய்வாளர்கள் ஏராளம். இத்தகைய தமிழ் மரபில் தண்ணொளி வீசும் திங்கள் உள்ளளவும் தனக்கென ஓர் அடையாளத்தை அழுத்தமாகப் பதித்துச் சென்றுள்ளவர் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார்.

சமயம், தத்துவம், திறனாய்வு, உரை, மொழிபெயர்ப்பு, உளவியல், கல்வி, அறிவியல் என்று பல்வேறு துறைகளிலும் மிகச் சிறந்த நூல்களை இயற்றிய பெருமைக்கு உரியவர் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார். இவர் எழுதிய ஒவ்வொரு நூலும் இவரது ஆழ்ந்த புலமைக்குச் சான்றாதாரங்களாகத் திகழ்கின்றன. இத்தகைய சான்றோரின் நூற்றாண்டு விழா நினைவாகப் பன்னாட்டுக் கருத்தரங்கம் எம் கல்லூரித் தமிழ்த்துறையின் சார்பில் நடைபெறுவது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கின்றது. தம் தந்தையாரின் நினைவைப் போற்றும் வகையில் பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் மகன் திரு சு. இராமலிங்கம் அவர்கள் இப்பன்னாட்டுக் கருத்தரங்கை எம் கல்லூரித் தமிழ்த்துறையோடு இணைந்து நடத்துவது சிறப்பானது. அவருக்கு என் வாழ்த்துக்கள்.

பன்னாட்டுக் கருத்தரங்கம் நன்முறையில் நடைபெற திட்டமிட்டுச் செயல்களை மேற்கொண்ட தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் க. முருகேசன் அவர்களையும் தமிழ்த்துறைப் பேராசிரியர்களையும் வாழ்த்துகின்றேன். தொடர்ந்து இதுபோன்ற பயனுள்ள கருத்தரங்குகளை நடத்தித் தமிழன்னைக்கு அணிசூட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு ஆய்வுக் கட்டுரைகளை வழங்கிய பேராளர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

வாழ்த்துக்களுடன்,

இடம் : கோயம்புத்தூர்

நாள் : 22.06.2016

(த. முரளீஸ்வரி)

முனைவர் க. முருகேசன்
தமிழ்த்துறைத் தலைவர் மற்றும்
கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
கோவை - 641 029.



பதிப்புரை

தமிழ் இலக்கியப் பரப்பில் தனக்கெனத் தனியிடத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ள பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்களின் படைப்புக்களை மையமிட்டு **'ந.சுப்புரெட்டியாரின் படைப்புக்கள் : கலையும் கருத்தியலும்'** (International Conference on Art and Ideology of Dr.N.Subbu Reddiar) என்னும் பொருண்மையில் இப்பன்னாட்டுக் கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த்துறையின் செயல்பாடுகளுக்குக் கரங்கொடுக்கும் மலாயாப் பல்கலைக் கழக இந்திய ஆய்வியல் துறையுடன் இணைந்து 2013-ஆம் ஆண்டு '**தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகளும் மாற்றங்களும்**' என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கை நடத்திய வகையில் 445 ஆய்வுக்கட்டுரைகள் தொகுக்கப்பட்டு 4 தொகுதிகளாக வெளியிடப்பட்டன. மேலும் 2014-ஆம் ஆண்டு '**தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் பாடுபொருள் மாற்றங்கள்**' என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கை நடத்தி 376 ஆய்வுக் கட்டுரைகள் பெறப்பட்டு 3 தொகுதிகளாக வெளியிடப்பட்டன. 2015ஆம் ஆண்டு தமிழ்த்துறையும் மலாயாப் பல்கலைக்கழகமும், சென்னை உலகத்தமிழ் மற்றும் சோதிடவியல் ஆய்வுமையமும், முனைவர் மா.ஆறுச்சாமி ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து '**தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் மானுட விழுமியங்களும் கலைக்கூறுகளும்**' என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கை நடத்திய வகையில் 435 கட்டுரைகள் தொகுக்கப்பட்டு 4 தொகுதிகளாக வெளியிடப்பட்டன.

மேற்கண்ட பொருண்மையில் பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் ஆகியோரிடமிருந்து பெறப்பட்டுள்ள ஆய்வுக்கட்டுரைகள் நூலாக்கம் பெற்றுள்ளது. எழுதுகோலைத் திறக்க எண்ணம் இல்லாதவர்களுக்கு மத்தியில் எழுதவேண்டும் என்ற குறிக்கோளில் பங்களிப்புச் செய்துள்ள கட்டுரையாளர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

இந்தப் பன்னாட்டுக் கருத்தரங்கை நடத்துவதற்கான அனுமதி வழங்கியும் ஊக்கசக்தியாக என்னை இயக்கியும் வருகின்ற எம் கல்லூரித் தலைவர் **முனைவர் மா.ஆறுச்சாமி** ஐயா அவர்களின் பொன்னார் திருவடிகளுக்கு என் பணிவான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தலைவர் பெருமானின் திருவுள்ளத்தில் எழுகின்ற எண்ணங்களை அப்படியே செயல்படுத்தும் எங்கள் செயலர் மற்றும் இயக்குநர் **டாக்டர் சி.ஏ. வாசுகி** அவர்கள் தமிழ்த்துறையின்மேல் தனிப்பட்ட பற்றும் நம்பிக்கையும் கொண்டு நெறிப்படுத்தி வருகிறார்கள். அணிந்துரை வழங்கியுள்ள அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் திருமகனார் **முனைவர் சு.இராமலிங்கம்** அவர்களிடம் இப்பன்னாட்டுக் கருத்தரங்கை நடத்தலாம் என்று கருத்துத் தெரிவித்தபோது உடனே ஏற்றுக்கொண்டு தந்தையின் நூற்றாண்டு விழாவில் ஒரு நிகழ்வாக இக்கருத்தரங்கைப் பதிவுசெய்வதற்கு ஒப்புதல் அளித்து நூலாக்கத்திற்குப் பொருளுதவியும் வழங்கியுள்ளார்கள். அவர்களுக்கும் நூற்றாண்டு விழாக் குழுவுக்கும் என்னுடைய நன்றியை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பன்னாட்டுக் கருத்தரங்கின் ஆய்வுக்கோவைக்கு வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்துள்ள இலண்டன் எழுத்தாளர் **திருமதி.ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்** அவர்களுக்கும், தொடக்க விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்துள்ள சென்னை எழுத்தாளர் **திரு.வி.மாலன்** அவர்களுக்கும் என் மனங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பல்வேறு வழிகளிலும் பெருந்துணை புரிந்து இக்கருத்தரங்கம் வெற்றி பெறுவதற்குக் காரணமாக இருந்துள்ள எம் கல்லூரியின் முதல்வர் **முனைவர் த. முரளீஸ்வரி** அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எனக்கு ஒரு பெருமை கிடைக்கிறது என்றால் அதற்கு விதையூன்றிய சிறப்புக்கு உரியவர் என்னுடைய நெறியாளர் **முனைவர் சு. ஞானப்பூங்கோதை** அக்கா அவர்கள். என் செயல்பாடுகளுக்கு உரமாகவும் நீராகவும் இருந்து உயிர்வளர்த்துக் கொண்டிருக்கும் அவர்களுக்குக் காலமெல்லாம் நான் நன்றி கூறக் கடமைப்பட்டவன்.


இப்பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ள தமிழ்த்துறை ஆசிரியர் பெருமக்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நூலாக்கப் பணிகளைச் சிரத்தையுடன் செய்தளித்த நண்பர் பிரடாக் பிரிண்டர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் **திரு.யுவராஜ்** அவர்களுக்கு என் நன்றி உரியது. இப்பன்னாட்டுக் கருத்தரங்கத்திற்குக் கட்டுரைகளை வழங்கியுள்ள பேராளர்களுக்கும், என்னுடன் இருந்து உதவும் என்னுடைய உதவியாளருக்கும், மாணவர்களுக்கும், பல்வேறு நிலைகளில் தினைத்துணையளவு உதவி செய்திருப்பினும் அதைப் பனைத்துணை அளவு ஏற்றுக்கொண்டு நன்றி பாராட்டுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். நன்றி.

அன்புடன்,

இடம் : கோயம்புத்தூர்

நாள் : 25.06.2016



(க. முருகேசன்)

கவிஞர் **வாலி**யின்

இராமாநுஜ காவியம்
ஒரு மதிப்பீடு

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

இரசனைமுறைத் திறனாய்வினினை விளங்கிக்
கொள்ள தமிழ் ஆய்வாளர்கட்கு
துணை நிற்கும் நூல்

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-936450-5-5

eBOOK ~ மின் நூல்




அணிந்துரை

கவிஞர் வாலியின் இராமாநுஜ காவியம் ஒரு மதிப்பீடு

வழங்கியோர்:

முனைவர் இரா காமராசு
பேராசிரியர் (ம) தலைவர்
நாட்டுப்புறவியல்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்







"புதுக்கவிதைக்கு ஓர் உரைநூல்"

முனைவர் இரா.காமராசு,
பேராசிரியர் (ம) தலைவர்,
நாட்டுப்புறவியல்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் – 10.
kamarasuera70@gmail.com
94435 89189.

இராமானுஜர் சமயத்தைச் சனநாயகப்படுத்தியவர். ஆச்சாரங்களைக் கடந்து மனித ஆன்மாவைத் தரிசித்தவர். வெகுமக்கள் உள்ளத்துணர்வுகளை உணர்ந்து தொழிற்பட்டவர். இது அவரின் ஆயிரமாவது ஆண்டு. இன்றும் அவரின் தேவை இந்திய மண்ணுக்கு அவசியம். கவிஞர் வாலி இராமானுஜர் வாழ்க்கையைப் புதுக்கவிதையில் எழுதினார். வாலியின் தமிழ் வசீகரமானது. துள்ளலும் எள்ளலும் அவருக்குக் கைவந்த கவிதை. மரபில் மூழ்கி புதுமையை முத்தாகத் தரும் முருகியல் பலம் அவருக்கு வாய்த்திருந்தது. எளிமை, இனிமை, அழகு இவையனைத்தும் அவரின் வார்த்தைகளை வசீகரித்து வாசகனைச் சொக்க வைப்பவை.

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் நூற்றாண்டு காணும் பன்முக ஆளுமையாளர். நூற்றுக்கும் அதிகமான நூல்களைத் தமிழன்னைக்கு அணிவித்து அழகு பார்த்தவர். தமிழை அயல்மொழிப் பரப்பில் அமர்த்திக்கொண்டாடிக் குது கலித்தவர். எளிமை, நேர்மையின் உறைவிடம். பல நல் மாணக்கர்களின் ஆரண் தாய், உயர் ஆசான்.

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் தமிழ் இலக்கண, இலக்கிய நெடும் பரப்பு முழுதும் தன் கவனத்தை நிலை நிறுத்தியவர். இலக்கியத் திறனாய்வுத் துறைக்கும் புதுக்குருதிப் பாய்ச்சியவர். பாரதி, பாரதிதாசன், கவிமணி, போன்ற தமிழின் ஆசுகவிகளின் அகம் தொட்டு அவர்களின் கவியாற்றலை மக்களுக்கு உணர்த்தியவர். அந்த வரிசையில் அவரின் இறுதிக்காலப் படையல் பெருங்கவிஞர் வாலியின் "இராடனுஜ காவியம்" குறித்த மதிப்பீடு.

இராமானுஜரை ஏன் கொண்டாட வேண்டும்? வாலியின் வார்த்தைகள்:

> ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே...
> மதப்புரட்சி செய்த
> மகான்;

இவர் கைக்குள்
இருந்தது –
சண்டித்தனம் செய்த
சனாதனக் குதிரையின் லகான்!

இருபதாம் நூற்றாண்டின் – இரு
இணையற்ற சிந்தனையாளரோடு
உவமித்து ராமானுஜனை
உரைக்கப் போயின்...

பூணூல்
போட்டிருந்த –
பெரியார் எனலாம்; திருமண் –
ஆறிரண்டு –
அணிந்திருந்த –
அம்பேத்தகர் எனலாம்!

இத்தகு சிறப்பு வாய்ந்த இராமானுஜரின் வாழ்வின் அற்புத நிகழ்வுகளை கவியரசர் வாலி தன் காந்தச் சொற்களால் கவிதையாக்கியுள்ளார். அநேகமாக புதுக்கவிதைக்கு எழுதப்பட்ட முதல் உரை நூல் என பேராசிரியரின் இந்நூலைச் சுட்டலாம்.

நூலினை நுட்பமாக அணுகி நுல்பற்றிய அறிமுகத்தை தோரணவாயில் பகுதியில் தருகின்றார். காவிய மரபுப் படி இக்காவியத்தின் பாட்டுடைத் தலைவனாக – அவதார புருசனாக இராமானுஜர் காட்டப்படுகின்றார்.

அடுத்து, தலைமைக் காவிய மாந்தர்களாக இராமணுஜரும் அவருடைய மனைவி தஞ்சமாம்பாளும் சுட்டப்படுகின்றனர். காப்பியத்தின் வழி இவ்விருவரின் தனியில்புகளை கவிதை வரிகளின் மூலம் பேராசிரியர் மெய்ப்பிக்கின்றார்.

துணைக் காவிய மாந்தர் எனும் பகுப்பில் நாதமுனிகள், திருக்கச்சி நம்பிகள், யாதவப்பிரகாசர், மனக்கால் நம்பிகள் ஆகியோர் பற்றிய காப்பியப் பகுதிகளை ஆராய்கின்றார்.

உடையவரின் ஆசாரிகள் எனும் நான்காம் குப்பில் இராமானுஜருக்கு துணை செய்த திருச்சி நம்பிகள், பெரிய நம்பி, திருக்கோட்டியூர் நம்பி, யமுனைத்துறைவர்,

திருமலையாண்டான், திருமலை நம்பி ஆகிய அறுவர் குறித்தப் பாடல் வரிகள் தரப்படுகின்றன. அடுத்து எதிராஜன் சீடர்கள் குறித்து விளக்கப்படுகின்றது.

கவிஞர் வாலியின் பன்முக அறிவாற்றல் தத்துவக் குறிப்புகள், பல்வேறுவகை, இறை ஈடுபாட்டின்பம் ஆகிய பகுப்புகளில் உரிய சான்றுகளுடன் பேராசிரியரால் மதிப்பிடப் பெறுகின்றன. வாலியின் படைப்பாற்றல், படைப்பின் கலை அழகியல் கூறுகள், திருக்குறள் போன்ற இலக்கியங்களைக் கையாளும் பாங்கு, இராமாயணம் பாரதம் போன்ற புராணங்களின் தாக்கம், தமிழ் வாழ்வியல், நாட்டார் சூழலியல் ஆகியவை வாலியின் படைப்பில் இடம் பெறுவது ஆகியன மிக அழகாகப் பேராசிரியரால் படம் பிடித்துக் காட்டப்படுகின்றன.

ஒவ்வொரு இயலிலும் தேவையான இடங்களில் விளக்கக் குறிப்பு எண் தந்து இறுதியில் விளக்கம் வருவதன் மூலம் பொருத்தமான மதிப்பீட்டு முடிவுகளை நோக்கில் நூலை நகர்த்துகிறர்.

“கவிஞர் வாலி பரந்து விரிந்த வைணவ குலத்தில் வந்தவர். சிந்தனை ஆற்றல் மிக்கவர். இராமனுஜரின் விரிந்த, சாதி சயம வேற்றுமையின்றி மனித குல மேம்பாட்டினை நோக்கும் போக்கினையெல்லாம் சிந்தித்து அவரைப் பகுத்தறிவுப் பகலகனாக் காண்கிறார். உண்மையும் அது தானே”

என்ற வாலி குறித்த வரையறையின் தொடர்ச்சியாகவே பேராசிரியரின் மதிப்பீடு அமைகின்றது.

“தன்
திரு-
முடியை - எம்பார்
மடியிலும்; தன் திரு
அடியை – வடுக நம்பி [21]
மடியிலும்”

இப்படி 21 சான்று எண் கொடுத்துவிட்டு, பின்னர் வடுக நம்பி குறித்து “உடையவருக்குப் பால் காய்ச்சித் தருதல் போன்ற பல பணிகளைச் செய்தவர். ஆந்திரத்திலிருந்து வந்து அரங்கத்தில் வாழ்ந்தவர். ஒரு சமயம் பால் அடுப்பிலிருந்த போழ்து பெருமாள் திரு உலாப் போந்தார். உடையவர் பொருமாளுக்குப் படைக்க பழம் முதலியவற்றைத் தட்டில் கொணருமாறு பணிக்க, அந்தப் பெருமாள் வீடு வீடாய்

பிச்சை வாங்கிக் கொள்கிறது. பால் அடுப்பில் இருந்ததால் வர இயலவில்லை, அவர் போகட்டும் என்று குருபக்தியைக் காட்டும் நிகழ்ச்சி ஒன்றை நினைவு கூறுச்செய்கின்றது. இது போன்ற விளக்கக் குறிப்புகள் படைப்பை உள்வாங்க மேலதிக உதவியாய் அமைவது குறிப்பிடத்தக்கது.

எதிராஜரின் சீடர்கள் வரிசையில் உறங்காவில்லி – பொன்னாச்சி பற்றிய குறிப்பு:

உறையூரை ஆண்ட சிற்றரசுக்கு உடம்பு பிடிக்கும் பணியிலிருந்த உறங்காவில்லி என்பான் அழகெல்லாம் திரண்ட தன் மனைவி பொன்னாச்சியுடன் சித்திரைத் திருவிழா கண்டுகளிக்கத் திருவரங்கம் வருகின்றான். தெருவில் அவள் நடக்க தன் உத்தரீயத்தை நடைபாவாடையாக விரித்துக் கொண்டு வந்ததும் அவளுக்குக் குடை பிடித்துக் கொண்டும் வந்த செயல்கள் பரிகாசத்துக்குரியவையாயின. இருவரையும் திருமடத்திற்கு வரவழைத்தார் உடையவர் பிறர் ஏளனத்திற்குரிய செயல்கள் தவிர்கத்தக்கவை எனக்கூறி அவர்களை அரங்கன் சந்நிதிக்கு இட்டுச் சென்றார்."

கவிஞர் வாலியின் வருணனைத் திறம் குறித்துப் பேராசிரியர் பல சான்றுகளைத் தருகின்றார்:

"பறவை மீது
பறப்பவன்; வெள்ளைப்
பரவை மீது
படுப்பவன்....."

"ராம காதை போல்
ராமானுஜன் காதையும் –
ஈர்க்க வல்லது
எவரது காதையும்!"

"முக்காடிடுகின்ற
முகமதியப் பெண்ணுக்கு –
நிக்கா முடித்தான் –
நாராயண னோடு

அரங்கன்பால் –
அவளுக்கிருந்த
அலுக்க வொண்ணாத

அன்பைக் கண்டு – அவளைத்
துலுக்க நாச்சியாய்த்
துதிக்கிறது நாடு!"

"படிமிசை
பிறப்பெய்தும் எவ்வுயிரும் –
பிறகு 'சவம்' ஆகத்தான்
பிரசவம் ஆகிறது"
"எண்ணெய் உள்ளவரை
எரிகிறது பந்தம்; அதே போல்
இட்டவிதி உள்ளவரை
இருக்கிறது பந்தம்!"

கவிஞர் வாலியின் தடம் பற்றி அவர் உணர்ந்து, அனுபவித்து எழுதிய பகுதிகளைப் பேராசிரியர் எடுத்துக் காட்டி விளக்கும் விதம் பாராட்டுக்குரியது. அதே போல வாலி பயன்படுத்தும் வழக்குச் சொற்கள், இலக்கியச் சொற்கள், புதிய சொல் உருவாக்கங்கள் குறித்தும் பேராசிரியர் பதிவு செய்வது அவரின் கல்விப் புலத் தொடர்பை மெப்பிக்கிறது.

இந்நூல் இராமானுஜருக்கு, வாலிக்கு பேராசிரியர் செய்த நன்றியறிதலாக அமைகின்றது. இரசனைமுறைத் திறனாய்வினினை விளங்கிக் கொள்ள தமிழ் ஆய்வாளருக்கு இந்நூல் துணைநிற்கும்.



1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

[A MULTI-FACETED TAMIL SAVANT]

Centenary Celebrations

~~~~******~~~~



நூற்றாண்டில் 108

பேராசிரியரின் நூற்றாண்டில்
[2015 – 2016] தமிழகமெங்கும்
நடைபெற்ற
நிகழ்வுகளின்

தொகுப்பு



அனைவருக்கும் நன்றி !
~~~~

நூற்றாண்டில் 108

வ.எண்	நாள்	நிகழ்வுகளின் தொகுப்பு
	27 Aug 2015	**Centenary Inaugural Function** @ Perahambi, Lalgudi Taluq, Trichy Dt. [Professor"s Birthplace] Chief Guest: Shri A Srinivasan, Founder of Dhanalakshmi Group of Institutions, Perambalur
001	27 Aug 2015	**Students" Events:** Five competitions [Essay, Drawing, Kolam, Poetry & Oral] were held for the students of Govt High School, Perahambi and Prizes & 125 Certificates were awarded to the students.
002	28 Aug 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ ACS Mat Hr Sec School, Arni
003	03 Sep 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ Diamond Jubilee Hr Sec School, Gobichettipalayam
004	11 Sep 2015	**Teachers" Day** @ Nehru Hr Sec School, Puthanampatti, Trichy Dist., Chief Guest: Dr A Thirunavukkarasu, Dean-Research, Dr MGR University
005	05 Oct 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ PLWA Hr Sec School, Vickramasingapuram
006	06 Oct 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ PSGR Krishnammal Hr Sec School, Coimbatore
007	07 Oct 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ Nadar Hr Sec School, Madurai
008	08 Oct 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ Thiru VI Ka Hr Sec School, Shenoy Nagar, Chennai
009	09 Oct 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ Govt Hr Sec School, Moovanur, Trichy Dist.
010	12 Oct 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ Govt Hr Sec School, Maduravoyal, Chennai
011	15 Oct 2015	**Birthday Celebrations of Bharat Ratna Dr APJ Abdul Kalam** @ Government High School, Kottathur, Trichy Dist.
012	15 Oct 2015	**Birthday Celebrations of Bharat Ratna Dr APJ Abdul Kalam** @ Government Boys Hr Sec School, Musiri, Trichy Dist
013	15 Oct 2015	**Birthday Celebrations of Bharat Ratna Dr APJ Abdul Kalam** @ Zamindar High School, Thuraiyur, Trichy Dist.
014	26 Oct 2015	**Tamil Essay Competition** for XII Std Students Govt Syed Murthuza Hr Sec School, Trichy
015	27 Oct 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ Sri Meenakshi Hr Sec School, Karaikudi
016	27 Oct 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ Govt Boys Hr Sec School, Musiri
017	28 Oct 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ Government Higher Secondary School, Lalgudi
018	29 Oct 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ Cauvery Mat Hr Sec School, Trichy
019	30 Oct 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ Govt Girls Hr Sec School, Musiri
020	05 Nov 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ Govt Boys Hr Sec School, Udumalpet
021	05 Nov 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ Bharathiyar Centenary Memorial Govt Girls Hr Sec School, Udumalpet
022	06 Nov 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ SMSV Higher Secondary School, Karaikudi
023	14 Nov 2015	**Children"s Day Celebrations** @ Govt High School, Thalakkudi, Trichy Dist.
024	12 Dec 2015	**On the eve of Tamizh Thatha"s Birthday**, Special Presentation by

		Prof Dr S Ramalingam to the participants of AICTE-sponsored FDP conducted by GRG School of Management Studies, Coimbatore
025	17 Dec 2015	**Tamil Essay Competition** for XII Std Students @ SVV Hr Sec School, Vairichettipalayam
026	19 Dec 2015	**On the eve of Tamizh Thatha"s Birthday:** 36 CDs [Research Companion] were distributed to the participants of AICTE-sponsored FDP conducted by GRG School of Management Studies, Coimbatore
027	20 Dec 2015	„நூற்றாண்டு வெளியீடு": நூற்றாண்டு நிகழ்வாக, முனைவர் ந. வேலாயுதம் அவர்கள் எழுதிய கிருதயுகம் எனும் புதினம், சேகர் பதிப்பகத்தினரால் (சென்னை – 600 078) வெளியிடப்பெற்றது. **ISBN: 978-81-932327-0-5.**
028	27 Dec 2015	„சிறப்புத் தமிழரங்கம்" @ Ulaga Thamizh Kalvi Iyakkam, Thamizhoor – 627 808, Alangulam, Tirunelveli Dist. Principal Convenor: Prof Dr SV Subramanian
029	01 Jan 2016	**Release of Daily Calendar**: Trichy KK Nagar Reddy Welfare Sangam had released the Calendar with Professor"s Photo
030	06 Jan 2016	„ஆண்டாள் சிறப்பு" – Tiruppaavai Competition @ MNRD Girls Hr Sec School, Srivilliputhur
031	08 Jan 2016	„ஆண்டாள் மார்கழி" – Tiruppaavai Competition @ SVV Hr Sec School, Vairichettipalayam, Trichy Dist.
032	09 Jan 2016	„ஆண்டாள் மார்கழி" – Tiruppaavai Competition @ Gandhi Nagar Mat Hr Sec School, Tiruvannamalai
033	09 Jan 2016	„மார்கழி சிவமயம்" – Tiruvembaavai & Tiruppalliyezhuchi Competition @ Gandhi Nagar Mat Hr Sec School, Tiruvannamalai
034	18 Jan 2016	„ஆண்டாள் மார்கழி" – Tiruppaavai Competition @ Govt Hr Sec School, Eloorpatti, Trichy Dist.
035	18 Jan 2016	„மார்கழி சிவமயம்" – Tiruvembaavai & Tiruppalliyezhuchi Competition @ Govt Hr Sec School, Eloorpatti, Trichy Dist.
036	28 Jan 2016	„ஆண்டாள் மார்கழி" – Tiruppaavai Competition @ Govt Girls Hr Sec School, Musiri, Trichy Dist.
037	28 Jan 2016	**Special Seminar on** „பக்தி இலக்கியம்" by Dept of Tamil, PKR Arts College for Women, Gobichettipalayam.
038	29 Jan 2016	„மார்கழி சிவமயம்" – Tiruvembaavai & Tiruppalliyezhuchi Competition @ SVV Hr Sec School, Vairichettipalayam, Trichy Dist.
039	29 Jan 2016	**Special Broadcast @ AIR, Tirunelveli Station** – **"**பேராசிரியர் சுப்புரெட்டியாரின் வாழ்வும் தமிழ்த்தொண்டும்**".** Speaker: Sri S Mahadevan, Head-Dept of Tamil, Sadakathullah Appa College ,Tirunelveli – 627 011.
040	03 Feb 2016	**100 Years of General Theory of Relativity :** Special Lecture @ Dept of Physics, Lakshmipuram College of Arts and Science, Neyyoor – 629802 Speaker: Dr. K. Iyakutti, Professor – Emeritus, Dept. of Physics & Nanotechnology, SRM University, SRM Nagar, Kattankulathur – 603 203.
041	18 Feb 2016	„நூற்றாண்டு வெளியீடு": நூற்றாண்டு நிகழ்வாக, முனைவர் ந. வேலாயுதம் அவர்கள் எழுதிய ஊமையின் பேச்சு எனும் சிறுகதைத் தொகுப்பு, அருளகம் பதிப்பகத்தினரால் (சென்னை – 600 077) வெளியிடப்பெற்றது. **ISBN: 978-81-932327-1-2.**
042	19 Feb 2016	**Tamizh Thatha"s 162nd Birthday:** 26 CDs [Research Companion] were distributed to the Research Scholars of Dr MGR Educational and Research Institute University, Chennai – 600 095.
043	19 Feb 2016	**In Commemoration of Tamizh Thatha"s 162nd Birthday**, Special Presentation (covering the intricacies of Academic Research) by Prof Dr S Ramalingam to the Research Scholars of Dr MGR Educational and Research Institute University, Chennai – 600 095.
044	23 Feb 2016	**In Commemoration of Tamizh Thatha"s 162nd Birthday**, Prof K Bhaskaran, Vice-Chancellor of Tamil University, Tanjore had distributed 100 CDs [Research Companion] to Research Scholars of Tamil


		University, the first copy being received by Prof S Subbaiah, Vice-Chancellor of Alagappa University. The entire program was coordinated by Prof Era Kamarasu, Member, General Body, Sahitya Akademi, New Delhi.
045	29 Feb 2016	**National Science Day** : Special Address by Prof Dr S Ramalingam @ PKR Arts College for Women, Gobichettipalayam
046	29 Feb 2016	**"Motivation" - Special Lecture** by Prof Dr S Ramalingam to the MBA students of Dept of Management, @ PKR Arts College for Women, Gobichettipalayam.
047	01 Mar 2016	**Centenary Publication: ISBN: 978-81-932327-2-9.** **Thirukural Thelivu**, written by Prof Dr N Subbu Reddiar.
048	07 Mar 2016	**Special Lecture on „Total Quality Management"** to the IV year BTech Students of Dept of Bio-technology, Dr MGR Educational and Research Institute University, Chennai – 600 095. Speaker: Prof Dr S Ramalingam, Head-Management Studies.
049	7 Mar 2016	மஹா சிவராத்திரி : நூற்றாண்டில் நிகழும் மஹா சிவராத்திரி திருவிழா மிகச் சிறப்பாக எதுமலையில் இருக்கும் பேராசிரியரின் குலக் கோயிலில் கொண்டாடப் பெற்றது.
050	08 Mar 2016	**International Women"s Day** : Award of „Best Outgoing Student" @ PKR Arts College for Women, Gobichettipalayam.
051	08 Mar 2016	**International Women"s Day** : Award of „Best Student" of various Departments @ PKR Arts College for Women, Gobichettipalayam.
052	08 Mar 2016	**International Women"s Day:** In order to encourage the participants, Certificates of Participation were issued to all Participants for their enthusiastic participation in the Event, "Cooking without Fire" [நெருப்பில்லா சமையல] conducted by Dr MGR Educational and Research Institute University, Chennai – 600 095.
053	11 Mar 2016	**ISO Certification Award** : ISO 2008 : 9001 to Zamindar High School, Thuraiyur, Trichy Dist. [where Professor did his III Form in 1930-31]
054	11 Mar 2016	**Special One-day National Conference:** சிற்றிலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள். @ Shri Krishnasamy College for Women, Anna Nagar West, Chennai – 600 040. Chief Guest: Prof Arivu Nambi, Pondicherry University.
055	11 Mar 2016	**Centenary Publication**: **ISBN: 978-81-932327-3-6.** A Special Volume „சிற்றிலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள்.' was released containing 103 research papers of National Conference conducted by Department of Tamil, Shri Krishnasamy College for Women, Anna Nagar West, Chennai with
056	21 Mar 2016	மாணாக்கர்கட்கு பரிசு: கம்பன் அடிப்பொடி சா.கணேசன் அவர்கள் 1939ல் நிறுவிய காரைக்குடி கம்பன் கழகத்தின் 78வது ஆண்டு விழாவில் (21 மார்ச்சு 2016) மூதறிஞர் ந சுப்பு ரெட்டியார் பரிசு.
057	21 Mar 2016	**"Cultural Extravaganza - RAIN16"** : A Special CHAMPIONSHIP Prize is awarded to the Department of Architecture for their wonderful Performance at the Annual Cultural Event conducted by Dr MGR Educational and Research Institute University, Chennai – 600 095; [A Shield & Rs.10000 to the Department and Certificate of Appreciation to all the participants].
058	27 Mar 2016	**Special Camp:** Participated in the Event organized by NSS Units I & II of Dr MGR Educational and Research Institute University during 23 to 29 of March 2016.
059	29 Mar 2016	அறக்கட்டளை சொற்பொழிவு : பேராசிரியர் நிறுவிய அறக்கட்டளை சார்பாக, சைவ சித்தாந்தத் துறை, சென்னைப் பல்கலைக்கழகம் "சைவ மரபு: தமிழ் இலக்கியம் - திராவிடக் கருத்தியல்" எனும் தலைப்பில் சொற்பொழிவு நடத்தியது. சொற்பொழிவாளர்: முனைவர் வீ அரசு.
060	4 Apl 2016	**MS 100** : Commemorating the Centenary year of Bharat Ratna MS Subbulakshmi, Mr Kumaresh, Violinist was honoured in „**Glittecrazzy – 2016**" , Festival of Music organized by the Literary Seminary, Dept of English of Dr MGR Educational and Research Institute University, Chennai – 600 095.

061	4 Apl 2016	**MS 100 :** Commemorating the Centenary year of Bharat Ratna MS Subbulakshmi, Dr Jyoti Nair Belliappa, Ghazal Singer was honoured in „**Glittecrazzy – 2016",** Festival of Music organized by the Literary Seminary, Dept of English of Dr MGR Educational and Research Institute University, Chennai – 600 095.
062	5 Apl 2016	**„Glittecrazzy – 2016" :** Certificates and Medals were given to student-participants who won first positions in 4 Events conducted by the Literary Seminary, Dept of English of Dr MGR Educational and Research Institute University, Chennai – 600 095.
063	5 Apl 2016	**MS 100 :** Commemorating the Centenary year of Bharat Ratna MS Subbulakshmi, Dr Rita Bhattacharya, Rabindra Sangeet Musician was honoured in „**Glittecrazzy – 2016",** Festival of Music organized by the Literary Seminary, Dept of English of Dr MGR Educational and Research Institute University, Chennai – 600 095.
064	5 Apl 2016	**MS 100 :** Commemorating the Centenary year of Bharat Ratna MS Subbulakshmi, Mr Srikanth Gnanasekaran, Freelance Pianist was honoured in „**Glittecrazzy – 2016",** Festival of Music organized by the Literary Seminary, Dept of English of Dr MGR Educational and Research Institute University, Chennai – 600 095.
065	5 Apl 2016	**Event Management :** Certificate of Appreciation are awarded to all student-volunteers who had excellently managed the show „**Glittecrazzy – 2016",** Festival of Music organized by the Literary Seminary, Dept of English of Dr MGR Educational and Research Institute University, Chennai – 600 095.
066	7 Apl 2016	**100 Medals:** Winning Athletics in Sports Meet of Dr MGR Educational and Research Institute University, Chennai – 600 095, [32 Gold (17 men & 15 women), 32 Silver (17 men & 15 women), 32 Bronze (17 men & 15 women) and 4 Gold for Overall Champions] were awarded medals.
067	9 Apl 2016	**Annadhanam:** On the eve of 10th Memorial Day of the Professor [1 May 2016], food was served to 100 persons in the Temple @ Thirueengoimalai, Musiri Taluk, Trichy Dist.,TN.
068	14 Apl 2016	சித்திரைத் திருவிழா : ஸ்ரீ கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், சுதர்சன ஹோமம், ஸ்ரீ குபேர பூஜை, ஸ்ரீ வருண ஜெபம் ஆகியவை ஸ்ரீ துர்முகி ஆண்டு சித்திரை முதல் நாள் அன்று மிகச் சிறப்பாக எதுமலையில் அமைந்திருக்கும் பேராசிரியரின் குலக் கோயிலில் கொண்டாடப் பெற்றன.
069	20 Apl 2016	**Project Expo:** Awarded Cash Prizes and Medals to winners of „Project Expo" and „Poster Competition" at NCICT – 2016 organized by the Department of CSE/IT, Dr MGR Educational and Research Institute University, Chennai – 600 095.
070	20 Apl 2016	**Career Planning:** A special Session on "A Window for the Corporate World" for the MBA Students of Dept of Management Studies, Dr MGR Eduational and Research Institute University, Chennai – 600 095. Speaker: Ms Sweetlyn Baker, Soft-skills trainer.
071	24 Apl 2016	**Annadhanam:** On the eve of 10th Memorial Day of the Professor [1 May 2016], food was served to 100 persons at his ancestral temple located at Edumalai, Mannachanallur Taluq, Trichy Dist.
072	28 Apl 2016	**Special Lecture: „Problem Identification and Solutions in a Project"** to MTech and BTech students of Dept of Electronics and Communication Engineering, Dr MGR Educational and Research Institute University, Chennai – 600 095. Speaker: Prof Dr S Ramalingam, Head-Management Studies.
073	1 May 2016	**Annadhanam:** On the eve of 10th Memorial Day of the Professor [1 May 2016], food was served to 120 persons @ Sengunthapuram Mariamman Temple, Sengunthapuram.
074	17 May 2016	**Best Student:** Selvan M Rajavel [Reg. No.469763] of Boys Govt Hr Sec School, Musiri who got First Mark [1070/1200] in XII March 2016 Exams is awarded Rs.1000.oo, Gold Medal and a Certification of Appreciation.
075	23 May 2016	**Best Project:** After evaluating the Projects of Final-year MCA and MPhil students of Department of **Computer Applications,** Dr MGR Educational and Research Institute, Chennai- 600 095, two sets of TOP three projects

		are selected and Medals and Certificates are given to the winning-students.
076	23 May 2016	**Best Project:** After evaluating the Projects of Final-year BSc and BCA students of Department of **Computer Applications,** Dr MGR Educational and Research Institute, Chennai- 600 095, two sets of TOP three projects in each, are selected and Medals and Certificates are given to the winning-students.
077	23 May 2016	**Best Project:** After evaluating the Projects of Final-year MTech students of Department of **Computer Science and Engineering & IT,** Dr MGR Educational and Research Institute, Chennai- 600 095, TOP three projects are selected and Medals and Certificates are given to the winning-students.
078	25 May 2016	**Best Student:** Selvi M Sandhiya [Reg. No.**469763**] of Govt High School, Kottathur who got First Mark [475/500] in X March 2016 Exams is awarded Rs.500.oo, Gold Medal and a Certification of Appreciation.
079	25 May 2016	**Best Student:** Selvan S Prasanth [Reg. No.**152194**] of Zamindar High School, Thuraiyur who got First Mark [467/500] in X March 2016 Exams is awarded Rs.500.oo, Gold Medal and a Certification of Appreciation.
080	25 May 2016	**Best Student:** Selvan D Kathikeyan [Reg. No.**1556017**] of Boys Govt Hr Sec School, Musiri who got First Mark [466/500] in X March 2016 Exams is awarded Rs.500.oo, Gold Medal and a Certification of Appreciation.
081	25 May 2016	**Best Project:** Among the Projects of Final-year MTech students of Department of **Bio-Technology**, Dr MGR Educational and Research Institute, Chennai- 600 095, TOP three projects are selected and Medals and Certificates are given to the winning-students.
082	26 May 2016	**Best Project:** After considering the Projects of Final-year MTech students of Department of **Electronics and Communication Engineering**, Dr MGR Educational and Research Institute, Chennai- 600 095, TOP three projects are selected and Medals and Certificates are given to the winning-students.
083	27 May 2016	**Best Project:** After adjudging the Projects of Final-year BTech students of Department of **Civil Engineering**, Dr MGR Educational and Research Institute, Chennai- 600 095, TOP three projects are selected and Medals and Certificates are given to the winning-students.
084	27 May 2016	**Best Project:** After considering the Projects of Final-year MTech students of Department of **Electrical and Electronics Engineering**, Dr MGR Educational and Research Institute, Chennai- 600 095, TOP three projects are selected and Medals and Certificates are given to the winning-students.
085	28 May 2016	**Best Project:** Of all the Projects of Final-year MTech students of Department of **Mechanical Engineering**, Dr MGR Educational and Research Institute, Chennai- 600 095, TOP three projects are selected and Medals and Certificates are given to the winning-students.
086	2 June 2016	**Best Project:** Out of 163 Projects of II **MBA** students of Department of **Management Studies**, Dr MGR Educational and Research Institute, Chennai- 600 095, TOP three projects are selected and Cash Prizes, Medals and Certificates are given to the winning-students.
087	7 June 2016	**Workshop on Personality Development:** Conducted for X std students @ Govt Boys" Hr Sec School, Musiri, Trichy Dist.; 204 boys participated. **Principal Trainer: Prof A Ratnasamy**
088	8 June 2016	**Workshop on Personality Development:** Conducted for X std students @ Govt Hr Sec School Moovanur, Trichy Dist.; 71 boys and girls participated. **Principal Trainer: Prof A Ratnasamy**
089	22 June 2016	**Centenary Publication**: **ISBN: 978-81-932327-5-0** A special volume „அன்புப்படையல்கள்" (Collection of selected Dedications in the Books of Prof Dr N Subbu Reddiar)

		Editor: Dr R Manivannan
090	23 June 2016	**Centenary Publication**: **ISBN: 978-81-932327-6-7** A special volume „அணிந்துரைகள்" (Collection of selected Forewords in the Books of Prof Dr N Subbu Reddiar) Editor: N Ravichandran
091	24 June 2016	**Centenary Publication**: **ISBN: 978-81-932327-7-4** A special volume „சிறப்புப் பாயிர பாமாலைகள்" (Collection of Sirappu Paayira Paamaalaikal in the 14 Books of Prof Dr N Subbu Reddiar) Editor: N Bhaskaran
092	30 June 2016	**Special Workshop on „Intricacies of SPSS": **On the eve of Birthday of the President of Dr MGR Educational and Research Institute, Chennai – 600 095, conducted for the Faculty Members of Department of Management Studies, Dr MGR Educational and Research Institute, Chennai- 600 095. **Resource Person**: Prof Dr R Srivats, School of Management, CMR University, Bangalore
093	30 June 2016	**Quiz – Nobel Women:** A Quiz Program was conducted for the Faculty Members of Department of Management Studies & Department of Commerce, Dr MGR Educational and Research Institute, Chennai- 600 095 and Teachers of Govt Boys Hr Sec School, Musiri & Govt Girls Hr Sec School, Musiri and Prizes & Certificates are given to the winners.
094	1 July 2016	பன்னாட்டுக் கருத்தரங்கம்: தமிழ்த்துறை, கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் '**ந சுப்பு ரெட்டியாரின் படைப்புகள்: கலையும் கருத்தியலும்**' என்னும் பொருண்மையில் மிகச் சிறப்பாக ஒரு நாள் கருத்தரங்கினை நடத்தியது.
095	1 July 2016	**Centenary Publication**: **ISBN: 978-81-932327-8-1.** A Special Volume '**ந சுப்பு ரெட்டியாரின் படைப்புகள்: கலையும் கருத்தியலும்**' was released containing 80 research papers of International Conference conducted by Department of Tamil, Kongunadu Arts & Science College, Coimbatore – 641 029.
096	10 July 2016	**Digital 100:** Digital version of 100 out of 135 books of the Professor is being prepared and to be distributed to the Departments of Tamil in selected Colleges/Universities across Tamil Nadu.
097	13 July 2016	**Centenary Publication: ISBN 978-81-932327-9-8** A Special Volume ***தலை சிறந்த படைப்புகள்,*** covering the Four Masterpieces of the Professor. [**The Religion & Philosophy of Naalaayiram with special reference to Nammaalwar,** வைணவச் செல்வம், தமிழ் பயிற்றும் முறை மற்றும் கல்வியியல் கோட்பாடுகள்] Editor: Professor R Minor
098	14 July 2016	**Combo Volume: பேராசிரியரின் இலக்கியத்திறன்** ; Single Volume containing 4 Centenary Publications [அன்புப்படையல்கள், அணிந்துரைகள், சிறப்புப் பாயிர பாமாலைகள் மற்றும் தலை சிறந்த படைப்புகள்]
099	15 July 2016	**A Research Study:** „Adolescent Smoking Behaviour" – Focusing on Smoking Habits among 200 Adolescent School Children. The Study is being carried out by Senior Nursing Students of Dr MGR Educational and Research Institute, Chennai- 600 095.
100	20 July 2016	**Philately Album:** The **man** [Man of the Millennium = Mahatma Gandhi] was captured most on Stamps, First Day Covers, Postal Stationery, Posters, Cartoons, Photos, Paintings, Currencies, Statues.
101	22 July 2016	**Centenary Symposium:** National-level One-day Event conducted by Sahitya Akademi @ Seethalakshmi Ramasamy College, Tiruchirappalli, Tamil Nadu.
102	26 July 2016	கல்வியியல் களம்**:** ஆசிரியப் பயிற்சி மாணாக்கர்கட்கு, திருக்குறள் கற்பிக்கும் போட்டி நடத்தப்பெற்றது. Students of Faculty of Education,

		Dr MGR Educational and Research Institute, Chennai – 600 095 participated. Winners as well as Participants were awarded Prizes and Certificates.
103	1 Aug 2016	ஆராய்ச்சி கட்டுரைப் போட்டி: சிறந்த இலக்கிய இதழ் **அமுதசுரபி** நடத்திய போட்டியில் பரிசு பெற்றவர்கள் : (1) அய்க்கண், காரைக்குடி - 630 002 (2) முனைவர் நயம்பு அறிவுடைநம்பி, சென்னை - 600 125 (3) தி வெ விஜயலட்சுமி, சென்னை - 600 017.
		சிறுகதைப் போட்டி: சிறந்த இலக்கிய இதழ் **அமுதசுரபி** நடத்திய போட்டியில் பரிசு பெற்றவர்கள்: (1) எம்.ஜி.கன்னியப்பன், சென்னை – 600 092 (2) அவினாசி முருகேசன், காரமடை – 641 104 (3) இராம இளங்கோவன், பெங்களூர் – 560 016
104	8 Aug 2016	**Release of Centenary Publication:** Dr V Balachandran, Registrar, Alagappa University had released the Book, „Aninthuraigal" edited by Mr N Ravichandran, @ SMSV Hr Sec School, Karaikudi. **ISBN: 978-81-932327-6-7**
105	14 Aug 2016	**Special Gold-Prize:** Special Prize (Gold Medal, Certificate & Rs.5000.oo) was given to Selvan A Rahul, Sowdambikaa Boys Matric Hr Sec School, Thuraiyur, Trichy Dist. for having secured top Mark, 1178/1200, in XII standard exams held by Govt of Tamil Nadu in March 2016.
		Special Gold-Prize: Special Prize (Gold Medal, Certificate & Rs.5000.oo) was given to Selvi T Roshini, SVV Hr Sec School, Vairichettipalayam, Trichy Dist. for having secured top Mark, 497/500, in X standard exams held by Govt of Tamil Nadu in March 2016.
106	15 Aug 2016	**Release of Centenary Publication:** Smt Sukanya, Panchayat President & Chairman, Village Education Committee, Kottathur had released the Book, „Sirappu Paayira Paamaalaigal" edited by Mr N Bhaskaran, Head Master, @ Government High School, Kottathur, Trichy Dist. **ISBN: 978-81-932327-7-4**
107	15 Aug 2016	**70th Independence Day Celebrations:** Centenary Committee had celebrated the 70th Independence Day @ Panchayat Union Primary School, Govindapuram – 621 008, Thuraiyur Taluk, Trichy Dist.
108	15 Aug 2016	**Centenary Publication: ISBN 978-81-932327-4-3** **இராமானுஜர் 1000** - CD containing 20 Books on Vaishnavism written by Professor, dedicated to St Ramanujar by conducting the Special Pooja at his Sannadhi, Sriperumpudhur Temple.





பேராசிரியரின் தாயார்

India Book of Records

CERTIFICATE

CENTENARY CELEBRATIONS OF PROF DR. N SUBBU REDDIAR

Prof Dr S Ramalingam (born on 13 Oct 1949) Organizing Secretary, Na Subbu Reddiar 100 Educational Trust, Chennai, Tamil Nadu, has conceived, designed and meticulously executed 108 Centenary Events throughout Tamil Nadu during the Centenary Year (2015-2016) of Prof. Dr. N Subbu Reddiar who served the cause of education for 65 years andwritten 135 books in various fields (100 books after retirement).

Biswaroop Roy Chowdhury
Chief Editor
India Book of Records

Date: March 19, 2018

India Book of Records is registered with the Government of India with RNI no. HARENG/2010/32259.

India Book of Records is affiliated to Asia Book of Records and follows Asian Protocol of Records (APRs) as per the consensus arrived at the meeting of the Chief Editors of National Record Books, Ho Chi Minh City, Vietnam.

ISBN 978-81-939835-1-5

"People who say it cannot be done should not interrupt those who are doing it."
–GEORGE BERNARD SHAW

